கலைமகள்

Regd. No. M. 2748
Supplement to Kalaimagal Dated 1-10-8

தீபாவளி மல

198

தீபாவளி வாழ்த்துக்கள்

- தரம் நிறைந்த கட்டுமானம்
- நியாயமான விலை
- வாகனங்களை நிறுத்த வசதி
- குறித்த நேரத்தில் டெலிவரி
- Lift வசதி
- எல்லாத் தரப்பினரின் வசதிற்கு ஏற்ப உள்ளது

VASANTH BUILDERS

சென்னையின் மையப் பகுதிகளில்
இடங்கள் அமைந்துள்ளன.

வசந்த் பில்டர்ஸ்
75, சி.பி. ராமசாமி சாலை ஆழ்வார்பேட்டை, சென்னை - 18
போன் : 455948/458527

SHRIRAM GROUP COMPANIES
MADRAS
ஸ்ரீராம்
குரூப் கம்பெனிகள்
தலைமை அலுவலகம் :
10, கஸ்தூரி எஸ்டேட்,
சென்னை-600 086
போன் : 454805/452113.
• ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்
• ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
• ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
• ஸ்ரீராம் டிரேடிங் & டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
• ஸ்ரீராம் ஹையர் பர்சேஸ் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
• ஸ்ரீராம் டிரஸ்ட் (அமுதசுரபி)
• ஸ்ரீராம் கேபிடல் டிரஸ்ட் பிரைவேட் லிமிடெட்
• ஸ்ரீராம் கன்ஸ்டிரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
• ஸ்ரீராம் இண்டஸ்டிரியல் ஹோல்டிங் பிரைவேட் லிமிடெட்
• ஸ்ரீராம் காபி & டீ பிளாண்டேஷன் பிரைவேட் லிமிடெட்
• மெடிஸ்பேன் லிமிடெட்
• ராம்பால் லிமிடெட்
• ஸ்ரீபெட் இண்டஸ்ட்ரீஸ் (பி) லிமிடெட்
தூண்டா மணி
விளக்காய்
என்றும் நலம் வளர
எங்கள் தீபாவளி
நல் வாழ்த்துக்கள்.
ADWAVE-SGC 3809 A


AMCO
AMCO
AMCO
AMCO
Heartiest
Deepavali Greetings
AMCO
AMCO Batteries Limited
Regd. Office: 6th Floor, Centenary Building, M. G. Road, Bangalore-560 001.

In Our Packaging, Services are personalized and comprehensive.



Our creative concepts do not begin and end with graphics; our philosophy is commitment and 'total product responsibility.' Through innovative ideas and new ways, we try to make products more appealing to the buyer.

From design, manufacturing and supply distribution, packaging is a personal thing with us; We make sure surface design and graphics do the kind of selling job they are supposed to do.

Coupling all this we have complete capacity in the manufacturing. Experienced supervision, and skill in execution are our forte.

WE PRODUCE

* *PRINTED, FOLDING-BOX CARTONS.*
* *MICRO-FLUTED CARTONS.*
* *PRINTED LABELS.*
* *DISPLAY-OUTERS.*
* *COLOUR CUT-OUTS.*
* *POINT OF SALE LITERATURE.*



Besides producing most of these FOLDING-BOX CARTONS to requirements, we specialize in surface designing to these matrices, Print, Varnish/Wax, Film-laminate, emboss etc.



CARTONS & CONTAINERS

PRINTING | PACKAGING



Office: No.1, Sanskrit College Street (R.H. Road I Lane) Mylapore, Madras - 600 004, Ph: 75799, 76011

Works : F.A/1, Ambattur Industrial Estate, Madras-600 058, Ph: 651799

GURUS GRAPHICS

தீபாவளி வாழ்த்துக்கள் !

இனிமைக்கு தீபாவளி!
வளமைக்கு
இந்தியன் வங்கி

தீபத் திருநாள் தீபாவளி. எங்கும் மகிழ்ச்சி,
எங்கும் ஒளிமயம். இந்த இன்பத் திருநாளில்
வாடிக்கையாளர் அனைவருக்கும்
இந்தியன் வங்கியின் தீபாவளி நல் வாழ்த்துக்கள் !

இந்தியன் வங்கி

உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி
31, இராஜாஜி சாலை, சென்னை-600 001.

இத்தீபாவளித் திருநாளில் ஆனந்தாவின் ஜவுளிகளை வாங்கி அணிந்து மகிழும் அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறது உங்கள் ஆனந்தா

WITH BEST
COMPLIMENTS
FROM

Kalvivallal
T. Kalasalingam B.Com.,

K. Sridharan B.Com.,

AB

ANANDS



RENOWNED FOR QUALITY FLATS -

* ANAND BUILDERS, MADRAS-18.
* KALASALINGAM AND ANANDAM AMMAL CHARITIES
* ARULMIGU KALASALINGAM COLLEGE OF ENGINEERING
* ARULMIGU KALASALINGAM POLYTECHNIC
* ARULMIGU KALASALINGAM INDUSTRIAL TRAINING INSTITUTE
* ARULMIGU KALASALINGAM COLLEGE OF PHARMACY

Krishnankoil - 626 138,
Kamaraj District.

ANAND BUILDERS
14 SRIMAN SRINIVASAN ROAD
ALWARPET, MADRAS 18

Phone :
453370
453053

உல்லாசப் பயணிகள், யாத்ரீகர்கள்,
வியாபாரப் பெருமக்களுக்காகத் திருச்சி
மாநகரில் நவநாகரீக வசதிகளை அனுபவிக்க
மிகச் சிறந்த இனிய நட்சத்திர வசதி
சொகுசு ஹோட்டல்

ஹோட்டல் கஜப்பிரியா



லாட்ஜின் சிறப்பு அம்சங்கள்

66 A/C, Non A/C ரூம்கள், மற்றும் காட்டேஜ்கள்; ஒவ்வொரு அறையிலும் மல்டி மியூசிக் சானல், வண்ண வீடியோ, டி. வி. நிகழ்ச்சிகள், லிப்ட் சர்விஸ், டெலிபோன் வசதி, டிராவல் ஏஜன்ஸி, செக்ரெடேரியல் சர்விஸ், மருத்துவ வசதி, விசாலமான கார் பார்க்கிங், டூரிஸ்ட் கார் சர்விஸ், உயர்தரமான சைவ- அசைவ ரெஸ்டாரெண்ட், ரூப் கார்டன் சர்விஸ், மதுபர்மிட் ரூம் (பார்) சிறந்த சேவை, கனிவான உபசரிப்பு.

Hotel Gajapriya

கஜப்பிரியா ஹோட்டல்ஸ் (பி) லிட்.,

2, ராயல் ரோடு, கண்டோன்மெண்ட்,

திருச்சி-620 001

தந்தி : கஜப்ரியா

போன் : 41144 (16 லயன்கள்)

இனிமை சொல்லிலே
இனிப்பு கையிலே
அன்புடன் உங்களை வரவேற்கிறது.
அர்ச்சனா

இனிக்க... மணக்க... சுவைக்க...
அர்ச்சனா
(முழுவதும் குளிர்சாதன வசதி)
70, உஸ்மான் ரோடு, சென்னை-17.
போன் : 444984, 444440

கிளைகள் :
★ A 12-A, ஜெமினி பார்சன் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ்,
கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-6. போன் : 470698
★ 12-K, ஸ்ரீ குமரன் பில்டிங், குமரன் சில்க்ஸ் பக்கத்தில்
தி. நகர், சென்னை-17. (பனகல் பார்க் எதிரில்) போன் : 444652
தீபாவளி ஆர்டர்கள் வரவேற்கப்படுகின்றன.

Tough Times. Tougher Diesels...

SIMPSONS S 433

SIMPSONS S433 diesels offer all that one looks for in an engine – reliability, durability, and economy. They are backed by SIMPSONS' wide after-sales service network.

Spare parts are readily available, thereby reducing downtime.

Leading automobile manufacturers such as Mahindra & Mahindra have chosen SIMPSONS S 433 diesels as original equipment.

Features of S 433 diesels

★ Direct injection engine, for improved fuel efficiency.

★ Mechanical governor, for efficient control of engine speed, at different load-levels.

★ Power-take-off for driving hydraulic pump and compressor.

★ Prefinished main bearings.

★ Lip seal on crankshaft rear end.

★ Water pump of improved design.

★ Lower fuel consumption.



Simpson & Co. Ltd

861/862 Anna Salai
Madras 600 002

SIMPSONS - the engine you can trust

Time to save again!

Kelvinator® Refrigerators

SPECIAL BARGAIN PRICES!*

Buy Now!

Avail of the lowest price of the year.

Rush!

Prices will go up every month.

Contact nearest authorised dealer for details.

286 litre and 165 litre refrigerators on DGS&D Rate Contract for Government Departments and Public Sector Undertakings.

Kelvinator
Refrigerator
"It's the coolest one."

Sold & Serviced by:

Expo Machinery Limited

(A WHOLLY OWNED SUBSIDIARY OF KELVINATOR OF INDIA LTD.)
East Coast Centre, Anna Salai, Madras – 600 018.
Grams: Kelfridge Telex: 41-6529 Ph: 450549, 454357

*Only for 165 litre single door and 90 litre models.

Your car dream come true!



Get Premier Padmini, Maruti or Ambassador on Hire Purchase.

On easy instalments — in 12/18/24/36/42 months. At 14% flat p.a. or even lower finance charge. Also 2% rebate for prompt payments. Plus extra-special service...

NO, NO, NO...

No Security Deposit. No Service Charge. No Loan Origination Cost... you pay only margin money.

YES, YES, YES...

Super Service: Deal finalised in 48 hours. We take care of all documentation and insurance procedures.

sf SUNDARAM FINANCE LIMITED

India's largest composite finance company, with FAAA rating by CRISIL.

For your requirements, please contact:

MADRAS : 21, Patullos Road,
Madras 600 002.
Phone: 860081, 860382, 860357

Imageads 2920

TAFE
வாடிக்கையாளர் சேவை ஆண்டு 1989

ஒவ்வொரு மாஸே ஃபெர்குஸன் அல்லது டாஃபே டிராக்டர் விற்பனைக்குப் பின்பும் டாஃபேவிற்கு புதிய உறவு தொடங்கி விடுகிறது. அதன் இணையற்ற சேவையின் மூலம் விவசாயிகளுடனான அவ்வுறவு பலபடுத்தப்படுகின்றது.

- டாஃபேயில் பயிற்சி பெற்ற மெக்கானிக்குகளின் மூலம் திறமை மிகுந்த விற்பனைக்குப் பிந்தய சேவை
- ஃபாக்டரி விலைக்கு எளிதில் திறமிகுந்த உதிரி பாகங்கள் கிடைப்பதற்கான வசதி.
- விவசாயத்துறைக்கு சிறந்த மாதிரிப் பண்ணையாக விளங்கும் 'ஜே'. பண்ணை மூலம் இலவச பண்ணை ஆலோசனைகள்.
- 'ஜே'. பண்ணையில் அமைந்துள்ள தயாரிப்பு பயிற்சி மையத்தில் டிராக்டர் இயக்குவதற்கான இலவச வசதி.
- 100 சதவிகித அளவிற்கு பொருத்தமான சிறந்த இணைக்கருவிகள் கிடைப்பதற்கான வசதி.

எனவே நீங்கள் ஒரு டிராக்டர் வாங்குவதற்கு முடிவெடுத்தப்பின் டாஃபேவிற்கு வருகை தாருங்கள். அதனால் நீங்கள் மிகச் சிறந்த டிராக்டரை வாங்குவதோடு மட்டுமல்லாது திறமைமிகு பல்வேறு வகையான சேவைகளையும் பெற்றிடுவீர்.

MASSEY FERGUSON

TAFE

டிராக்டர்ஸ் அண்டு ஃபார்ம் எக்விப்மென்ட் லிமிடெட் சென்னை
டாஃபே-மற்றவைகளை முந்தி நிற்கும் நிறுவனம்

MAC/T/83 TM/A

PHILIPS

PHILIPS

Live it up with the Leader



You've got company. Millions of Indian households. From city to city. State to state. Life-long loyalists to the state-of-the-art: Philips.
With the richest experience to rely on. And the widest range to choose from. Designed, manufactured, tested and backed... by the leader.



DR 668-32W PMPO Rs. 2695/-* with FM



DR 768-64W PMPO Rs. 3895/-* with FM



DR 878-64W PMPO Rs. 3995/-* with FM

DR 579-40W PMPO Rs. 2395/-* with FM

DR 578-40W PMPO Rs. 2195/-*



DR 183 Rs. 1110/-*



AM 174 Rs. 935/-*

* Local taxes and levies extra.

CLARION/B P 367 254

Contact Your Nearest Authorised Philips Dealer

இந்தியாவின் முதல் பாக்கெட் ஷாம்பூ
ஒரே ஒரு ரூபாயில்
உங்கள் தலைமுடிக்கு
அளித்திடுங்கள் வெல்வெட் ஸ்பரிசம்.
Velvette
புதிய வெல்வெட் கண்டிஷனர் ஷாம்பூ, இப்பொழுது சிக்கனமான மற்றும் எளிதாக உபயோகிக்க வல்ல பாக்கெட்டில் – உங்களுக்கென்றே. உங்கள் தலைமுடி மென்மையாக, மிருதுவாக பட்டுப் போன்று இருப்பதற்கென்றே தலைசிறந்த முறையில் உருவாக்கப்பட்டது. பிரியுங்கள் ஒரு பாக்கெட்டை, இன்றே. பெறுங்கள் இனிமையான புது அனுபவத்தை - தலைமுடி பராமரிப்பில்.
புதிய
வெல்வெட்®
கண்டிஷனர் ஷாம்பூ
தரமான ஷாம்பூ, நயமான விலையில்.
89/PC/184 tm
விநியோகஸ்தர்கள் : கோத்ரெஜ் சோப்ஸ் லிமிடெட்

ஸ்டேட் பாங்கின் 'விலை மதிப்புள்ள பொருள் வாங்குதல்' திட்டத்தின் உதவியால் இன்றே உங்கள் கனவை நனவாக்க முடியும். இதன் மூலம் எத்தனை பொருட்கள் வாங்கலாம் எனப் பாருங்கள்:

'விலைமதிப்புள்ள பொருள் வாங்குதல்' திட்டம், ''இப்பொழுது வாங்குங்கள், பணத்தைப் பிற்பாடு கொடுங்கள்'' திட்டம் போன்றதாகும்.
இத்திட்டத்தின் கீழ், டிவி, ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின் தையல் மெஷின், குக்கிங் ரேஞ்ச், ஏர்கண்டிஷனர், ஸ்கூட்டர்.. ஏன் கார்களும் கூட நீங்கள் வாங்க முடியும்!

எவ்வாறு இந்த தீபாவளியை குறைந்த செலவில்

'விலை மதிப்புள்ள பொருள் வாங்குதல்' திட்டம் உங்களுக்கு மேலும் சிறப்பானதை வழங்குகிறது.

இப்போது, விலை மதிப்புள்ள பொருள் வாங்குதல் திட்டம் உங்களுக்கு மேலும் சில சலுகைகளை அளிக்கிறது.
இத்திட்டத்திற்கான மாதச் சம்பளத் தகுதி ரூ. 1500 ஆகக் குறைக்கப் பட்டுள்ளது. இதன்கீழ் உங்கள் நிகர மாதச் சம்பளத்தின் 12 மடங்குத் தொகை வரை (அதிகபட்சம் ரூ. 1 இலட்சம்) கடனாகக் கிடைக்கும்
ரூ. 10,000 வரையிலான தொகைக்கு 16.5% வட்டியும், ரூ. 10,000 க்கு அதிகமான தொகைக்கு 15% வட்டியும் வசூலிக்கப்படும்.
கடன் தொகையை நீங்கள் சீக்கிரமே அடைக்க நினைத்தால், சர்வீஸ் சார்ஜுகள் வசூலிக்கப்படாது. நினைவிருக்கட்டும்! 'விலை மதிப்புள்ள பொருள் வாங்குதல்' திட்டம் இப்போது மாவட்டத் தலைமையகங்களில் உள்ள ஸ்டேட் பாங்க் கிளைகளிலும் கூட நீடிக்கப்பட்டுள்ளது.

அதிக மகிழ்ச்சியுடன் கொண்டாடலாம்.



இதற்குத் தகுதி பெறுவது எளிது.

அரசாங்க வேலையில் அல்லது பொதுத்துறையிலோ, தனியார் துறையிலோ உள்ள நிறுவனங்களில் குறைந்தபட்சம் 5 வருடமாக வேலை பார்ப்பவர் களுக்காகும் இத்திட்டம். அல்லது குறைந்தபட்சம் 5 வருடகாலமாக செயலாற்றும் ப்ரொஃபஷனல் அல்லது சொந்தத் தொழில் நடத்துபவராக இருந்தாலும் கூட 'விலை மதிப்புள்ள பொருள் வாங்குதல்' திட்டம் உங்களுக்கு உதவும்.

CHAITRA-B SBI-1712 TAM

ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா

எஸ்பிஐ வழங்கும் 'விலை மதிப்புள்ள பொருள் வாங்குதல்' திட்டம்: விழாக் காலங்களை மேலும் கோலாகலமாக்குகிறது.

மேலும் விவரங்களுக்கு எமது உள்ளூர் தலைமை அலுவலகத்திலுள்ள டெவலப்மெண்ட் மேனேஜர் (P & SB) அல்லது அருகாமையிலுள்ள ஸ்டேட் பாங்க் கிளைகளில் தொடர்பு கொள்ளவும்

பண்டிகை மற்றும் திருமணத்திற்குத் தேவையான

அசல் பட்டு, கைத்தறி சேலைகளுக்கும், வேஷ்டி

களுக்கும் மற்றும், ஸூட்டிங், ஷர்ட்டிங்,

அனைத்து ஜவுளிகளுக்கும் நாடுவீர்-

அணுகுவீர்

* உங்கள் குடும்பத்து அனைத்துத் துணி தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. ஜவுளி மாளிகை "ஸ்ரீ பார்த்தாஸ்"
* அனைவரின் இதயத்திலும் இடம் பிடித்திருக்கும் "ஸ்ரீ பார்த்தாஸ்"
* அனைவரின் இதயத்திலும் நிலைத்திருக்கும் ஜவுளி மாளிகை

ஸ்ரீ பார்த்தாஸ்

172, லஸ் சர்ச் சாலை
A/C. Show Room
மயிலாப்பூர், சென்னை-600 004
போன் 76282 தந்தி PARTEX

ஒரு முறை வாருங்கள்
எப்போதும் வருவீர்கள்

"தீபாவளி நல்வாழ்த்துக்கள்"

சிந்தனையின் ஒளிவிளக்கு
சிட்டிகையின் தனிச்சிறப்பு

என்.ஸி
பட்டணம் பொடி



தயாரிப்பாளர்கள் :
என்.ஸி. ஆரியா பொடி
& சுருட்டு கம்பெனி

அஞ்சல் பெட்டி எண் : 145
19, டேவிட்சன் தெரு, சென்னை-600 001.

3127 ad

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள் !

சுடர்மணி பனியன்கள்

மிடுக்கான தோற்றம் தரும் எடுப்பான உள்ளாடைகளே

No: 4964

தர நிர்ணயம் பெற்ற
நீடித்து உழைக்கும் பாதுகாப்பான
பனியன். ஜட்டிகள். காலர்சர்ட் &
பேன்ஸி கலர் பனியன்கள்

எங்களது விசேஷ தயாரிப்புகள் :
ராஜா ஸ்பெஷல், சுடர்டெக்ஸ் &
சிமி கலர் பனியன்கள். S.TEX ஜட்டி

சுடர்மணி நிட்டிங்ஸ்
திருப்பூர்-638 604.

குறிப்பு : எங்களது நிறுவனம் T.N.C.C.
பெடரேஷன் லிமிடெட் ஆல் அங்கீகாரம்
பெற்று உள்ளது என்பதையும் கூடிய விரைவில் எல்லா கூட்டுறவு பண்டகசாலைகளிலும் சுடர்மணி பனியன் &
ஜெட்டிகள் கிடைக்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

எல்லோருக்கும் எங்கள் தீபாவளி நல் வாழ்த்துக்கள்

ஸ்தாபிதம்:- 1944

போன் : 222
தந்தி: ஸ்வஸ்திக்

யாவரும் விரும்புவது

"ஸ்வஸ்திக் வேதாரண்யம் புகையிலை - வாசனை பன்னீர்புகையிலை"

தயாரிப்பாளர்கள்

ஸ்வ ஸ்திக் புகையிலை தொழிற்சாலை

வேதாரண்யம்

தஞ்சை மாவட்டம்

வினியோகஸ்தர்கள் :

Office : 34913
Res: 4422403

ஸ்வஸ்திக் புகையிலை ஏஜன்சீஸ்
1115; பூந்தமல்லி ஹைரோடு
சென்னை - 600 003

ஸ்வஸ்திக் ட்ரேடர்ஸ்
சேதுரஸ்தா,
வேதாரண்யம்.

இல்லத்தரசிகளுக்கோர் நற்செய்தி
பாத்திரங்கள் மற்றும் கண்ணாடி பீங்கான்கள் பளபளக்க எமது புதிய தயாரிப்பான

ஸ்வஸ்திக் கிளீனிங் பவுடர்

இன்றே கேட்டுவாங்கிடுவீர்.

Await the launch of the 'Imperial Collection'

Introducing soon ! The most modern sanitaryware systems, handcrafted for beauty and strength. These highly durable systems will be available in white and a wide range of colours. Await the launch of...

The Imperial Collection

GODAVARI CERAMICS LIMITED

Registered Office:
Pidimgoyya, Rajamundry - 533 103 Phone:73731 Telex: 0474-206 GCL IN Grams: MADDIPOTI

Marketing Office:
608-609, Tara Mandal, 5-9-13, Saifabad, Hyderabad - 500 004. Phone: 233417

UNITEA
CHAMRAJ GROUP

THE UNITED NILGIRI TEA ESTATES
COMPANY LIMITED

Registered Office :
8/23-24, RACE COURSE ROAD,
COIMBATORE-641 018.

Manufacturers of High Grown Quality Tea

Estates in Nilgiris

CHAMRAJ KORAKUNDAH
ALLADA VALLEY

கலைமகள் வாசகர்களுக்கு
எங்கள்
தீபாவளி வாழ்த்துக்கள்

தந்தை ரோவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தந்தை ரோவர் தொழில் நுட்பக் கல்லூரி
தந்தை ரோவர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும்
ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்,
ஆரம்பப் பள்ளி,
நடுநிலைப் பள்ளிகள் மற்றும்
மாணவர், மாணவியர் விடுதிகள்
"ரோவர் வளாகம்"
பெரம்பலூர் 621 212

வலியும் நோவும் வாட்டும் போது
ஆறுதல் பெற நீங்கள் நாடுவது...?

அமிர்தாஞ்சன், ஏறக்குறைய நூறாண்டு காலமாக தலைவலி, முதுகு வலி, உடல்வலி மற்றும் சுளுக்கு ஆகியவற்றிலிருந்து உங்களுக்குத் துரித நிவாரணம் அளித்து வருவது அமிர்தாஞ்சன். அது நம்பகமானது. இதமானது. வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு ஆறுதல் அளித்திடும் உற்ற துணை அதுவே.

அமிர்தாஞ்சன்

பெயின் பாம்

அமிர்தாஞ்சன் லிமிடெட்

O&M 1782 TM

பாலாஜியின் தேசீய மொழிவழி ஒற்றுமை மற்றும் தொழில் நுட்ப நூல்கள்

தமிழ் மட்டும் படிக்கத் தெரிந்தவர்கள் பல வேறு மொழி நூல்கள் மற்றும் தொழில் நுட்ப நூல்கள் ஆகியவைகளைத் தமிழ் மூலமாக, சுலபமாகப் படித்துத் தெரிந்து கொள்ள உதவுகின்ற சிறந்த நூல்கள்.

மொழி நூல்கள்

	ரூ.பை
பாலஜிஸ் ஈஸிவே டு ஸ்பீக் இங்கிலீஷ்	28-00
30 நாட்களில் ஹிந்தி பாஷை I	8-00
30 நாட்களில் ஹிந்தி பாஷை II	12-00
30 நாட்களில் தெலுங்கு பாஷை	8-00
30 நாட்களில் கன்னட பாஷை	10-50
30 நாட்களில் மலையாள பாஷை	9-00
30 நாட்களில் சம்ஸ்கிருத பாஷை	9-50
30 நாட்களில் ஆங்கில பாஷை	15-00
30 நாட்களில் வங்காள பாஷை	7-50
30 நாட்களில் மராத்தி பாஷை	5-25
30 நாட்களில் குஜராத்தி பாஷை	6-50
30 நாட்களில் ஒரியா பாஷை	4-50
30 நாட்களில் உருது பாஷை	7-50
30 நாட்களில் பஞ்சாபி பாஷை	4-50
30 நாட்களில் பிரெஞ்சு பாஷை	10-75
சுலபமாக நீங்களும் ஹிந்தியில் பேசலாம்	20-00

தொழில் நுட்ப நூல்கள்

	ரூ.பை
1 முதல் 9 வரை டிரான்ஸிஸ்டர் செய்யும் முறை	5-75
டிரான்ஸிஸ்டர் ரிப்பேரிங்	6-50
அவுஸ் ஒயரிங்	8-75
மோட்டார் ரீவைண்டிங் I	10-50
மோட்டார் ரீவைண்டிங் II	15-00
டி.வி. மெக்கானிஸம்	15-50
டேப் ரிக்கார்டர் & ஸ்டீரியோ	14-50
மோட்டார் மெக்கானிஸம்	10-50
மெட்டல் & ஷீட் மெட்டல்	8-50
காஸ் & ஆர்க் வெல்டிங்	10-50
லேத் ஒர்க்ஸ்	7-00
ஸ்கூட்டர் மெக்கானிஸம்	9-00
மொப்பெட் & மோட்டார் சைக்கிள் மெக்கானிஸம்	12-00
வீடியோ கேஸட் ரிக்கார்டர் மெக்கானிஸம்	6-50
ரெப்ரிஜிரேஷன் & ஏர்கண்டிஷன்	10-50
சினிமா புரொஜக்டர் மெக்கானிஸம்	18-75
பிரிண்டிங் மெஷின்ஸ் அசெம்பிளிங் & ரிப்பேரிங்	11-50
நவீன புகைப்படக்கலை	17-50
நவீன தையற்கலை ஆண்கள்	9-75
நவீன தையற்கலை பெண்கள்	9-50
நவீன தையற்கலை சிறுவர்கள்	8-75
நவீன தையற்கலை அளவும் வெட்டும் முறையும்	9-50

பாலாஜி பப்ளிகேஷன்ஸ்

103, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை 600 014, தொலைபேசி: 832831, 832653

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

இருக்கன்குடி

சாத்தூர் வட்டம் காமராஜர் மாவட்டம்

திருப்பணி வேண்டுகோள்

இருக்கன்குடி கிராமத்தில், அர்ச்சுனா நதிக்கும், வைப்பாற்றுக்கும் இடையில் எழுந்தருளி, அருள்பாலிக்கும், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில், பிராகார மண்டபம் கட்டுதல், புதிய தளவரிசை போடுதல் ஆகிய திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும் பல திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன. திருப்பணிக்கு நன்கொடை வழங்கி, திருப்பணியில் பங்கு பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திருப்பணி நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாக அறங்காவலர்,
அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்,
இருக்கன்குடி,
Pin.: 626206.

சாத்தூர் வட்டம் காமராஜர் மாவட்டம்

ஆ. பட்டாபி சுப்பிரமணியன், B.Sc.,
நிர்வாக அதிகாரி

ச. சங்கையா பூசாரி
நிர்வாக அறங்காவலர்

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்தை
பாதுகாக்க சுத்தமான குடிநீருக்கு



சீதா

ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் வாட்டர்
ஃபில்டர்

Shree

* இந்தியாவில் முதல் முறையாக உடையாத நீர்மட்ட அளவுக்கோல் பொறுத்தப்பட்டது.
* AISI 304. சேலம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலினால் வடிவமைக்கப்பட்டது.
* கறைபடியாது, துருபிடிக்காது.
* மிகவும் சுகாதாரமானது
* சுத்தமான குடிநீருக்கு சோதனை செய்யப்பட்ட கேன்டில்ஸ் பொருத்தப்பட்டது.
* உயர் தொழில் நுணுக்க முறைபடி ஒட்டுகள் தெரியாமல் வார்படம் செய்யப்படுகிறது.
* 12, 17, 24, & 34 லிட்டர் அளவுகளில் கிடைக்கின்றது.

கிடைக்குமிடம் :
சீதா ஹோம் அப்ளையன்ஸஸ்
"K.R. பில்டிங்ஸ்"
124-A.L.B. ரோடு,
அடையார்,
சென்னை-600 020.
போன் : 418876

தயாரிப்பாளர்கள் :
மீரா இண்டஸ்ட்ரீஸ்
146, கிழக்கு கடலோர
சாலை,
ஈஞ்சம்பாக்கம்,
சென்னை-600 041.
போன் : 416669/416665

Seetha *The Choice of a wise housewife*

தந்தி: "சென்டெக்ஸ்" போன்: 232 & 426

ஒவ்வொருவரும் தேர்ந்தெடுப்பது! ஒவ்வொருவரும் விரும்புவது!!

ஒவ்வொருவரும் உபயோகிப்பது!!!

சென்டெக்ஸ்

கைத்தறித் துணிகள்

• படுக்கை விரிப்புகள்! • மேஜை விரிப்புகள்! • சீர்சக்கர் ரகங்கள்! • பாலியஸ்டர் சூட்டிங்குகள்! • சர்ட்டிங்குகள்! • தலையணை உறைகள்! • அலங்காரத் திரைத்துணிகள்! • துண்டுகள்! • டர்க்கி துண்டுகள்! • வேஷ்டிகள்!

தயாரிப்பாளர்கள் & ஏற்றுமதியாளர்கள்

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,
நெ.கே. 885, தபால் பெட்டி எண்: 32, எம்.பி. நாச்சிமுத்து மாளிகை, சென்னிமலை-638 051.

K.V. பாலகிருஷ்ணன், B.A., H.D.C.
தனி அலுவலர்.

சென்டெக்ஸ் ஷோரூம்கள்

★ 811, அண்ணா சாலை, சென்னை-600 002. ★ 147, ஈஸ்வரன் கோவில் வீதி, ஈரோடு-638 001.
★ 13, மேலச் சித்திரை வீதி, மதுரை-625 001. ★ 489, பெரிய கடை வீதி, திருச்சி-620 008.
★ எம்.ஜி.ஸி. மார்க்கட், சீராளா-523 155. ★ 7-7-44, ஸ்ரீ வாசவி தர்மசாலா ரோடு, இந்துப்பூர்-515 201.
★ 27/21/53, காளீஸ்வரராவ் ரோடு, கவர்னர்பேட், விஜயவாடா-520 002.
★ 125, அருணாசல ஆசாரி தெரு, சேலம்-636 001. ★ 445, எஸ்.ஜி.ஆர். காம்ப்ளெக்ஸ், ஒப்பணக்காரத் தெரு, கோவை-641 001.

ELEGANT

Sole Selling Agent: **Fargo Sales Limited**
255/256, A to Z Industrial Estate, Ganpatrao Kadam Marg, Lower Parel, Bombay-400 013. (India)
Grams: "FARGOMAN". Telex: 011-75991. FAGO IN, Phones: 4926300, 4926429, 4922913

ஸ்ரீ சாயிராம் துணை!

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

வீட்டு மனை வாங்க -
மக்கள் மனத்தில் என்றும்
நிலைத்து நிற்பது -

லியோ

சென்னை மாநகரின் புறநகர்ப் பகுதியில் இதுவரை

53 குடியிருப்புப் பகுதிகளை

அறிமுகப்படுத்தி மக்களின் நன்மதிப்பைப்
பெற்றுவரும் நிறுவனம் 'லியோ'

தரமிகு வீட்டு மனைகளின்
சிறப்புமிகு விற்பனையாளர்கள்

LEO REAL ESTATES

லியோ
ரியல் எஸ்டேட்ஸ்

8-1, மேட்லி ரோடு, தி. நகர்,
சென்னை-600017. போன்: 442881, 443979

நம்பிக்கையின் சின்னம்

அனைவருக்கும் எங்களது

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஆபர்ணங்களின் அழகு பொக்கிஷம்
சோட்டாபாய் நகைகள்.
அனைவரும் விரும்பும் டிசைன்களுக்கு
சோட்டாபாய் நகைகள்.



சோட்டாபாய் & கோ.

(தங்க வைர நகை வியாபாரிகள்)
அரசாங்க அங்கீகாரம் பெற்ற மதிப்பீட்டாளர்கள்
SINCE - 1930
61, N.S.C. போஸ் ரோடு, சென்னை - 600 079
போன் : 32024/35357.

OFFICIAL AGENTS.
RW RAYMOND WEIL JEWELLERY WATCHES

CHARI

Deepavali Greetings

ALWAYS INSIST ON GODWELL Range of Coir Machines

USE GODWELL CONVEYOR SYSTEM

To Reduce labour and increase production in Double

- De Fibring
- Curled Coir Machinery
- Coir Spinning Machinery (2 Ply Yarns)
- Conveyors for Coir Industry
- Cranes & Well Motor Hangers

MANUFACTURERS.

GODWELL ENGG. PRODUCTS,

CIVIL AERODROME POST, COIMBATORE 641 014.
Grams : GODWELL
Phone : 74419

SPAC/669/009









SUBRAMANIYAM & CO

16, MOSQUE STREET, MADRAS-600 005.

Distributors :

BALKRISHNA PAPER MILLS LIMITED
G. T. C. INDUSTRIES LIMITED
PREMIER PAPER MILLS LIMITED
RAIGADH PAPERS LIMITED
JAYANTH PAPER MILLS

Dealers

Rainbow, Hooghly, Coates and United Printing Inks

Associates :

Pioneer PRINTING INK CO

Manufacturers of :

Letter Press, Offset and Silkscreen Inks

Phone: 842057, 848095, 842115

kartik bros

Distributors :

RAMA PULP AND PAPERS LTD., VAPI
RAMA PAPER MILLS LTD., DELHI
BAZARGAON PULPS AND PAPERS PVT. LTD.

டிட்கோ அளிப்பது பாதுகாப்பான முதலீடு மற்றும் உடனடி சேவை !

டிட்கோ

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்

(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
பதிவு அலுவலகம் : 19-A, மார்ஷல்ஸ் ரோடு,
எழும்பூர், சென்னை-600 008.

மாதந்தோறும் வட்டி வழங்கும் அடிப்படையில் வைப்பீடுகளை ஏற்றுக்கொள்ளவும், புதுப்பிக்கவும்

ஆண்டுகள் :	1	2	3
ஆண்டு வட்டி விகிதம் :	12%	13%	14%

அறக்கட்டளைகள், கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சி நலப்பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் செலுத்தும் வைப்பீடுகளுக்கு, மனநிறைவளிக்கக்கூடிய ஆவணங்களைக் கொடுப்பதன் பேரில், 1/2 சதவீதம் கூடுதல் வட்டி (அதிகபட்சமாக 14 சதவீதம் வரை) வழங்கப்படும்.

அறக்கட்டளைகளுக்கு வழங்கப்படும் வட்டிக்கு, வருமானவரியிலிருந்து முழு விலக்களிக்கப்பட்டுள்ளது. (1961ம் ஆண்டு இந்திய வருமானவரிச் சட்டம் 13(1) ஆம் பிரிவு.

இதர வைப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வட்டிக்கு 1961ஆம் ஆண்டு வருமானவரிச் சட்டம் 80 எல் பிரிவின் கீழ் ரூ. 7,000/-வரை சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

சொத்து வரிச்சட்டம், 1957 பகுதி 27, 5ஆவது பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், ரூபாய் 5 லட்சம் வரை உள்ள வைப்பீடுகளுக்கு சலுகைகள் அளிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களை பதிவு அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1975ம் ஆண்டு நிறுவனங்கள் (வைப்பீடுகளை ஏற்றுக் கொள்ளுதல்) விதிகள் படி, அவ்வப்போது திருத்தப்பட்ட விதியின்படி அளிக்கப்பட வேண்டிய விவரங்கள் :

(அ) நிறுவனத்தின் பெயர் : தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்

(ஆ) நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் : 21-5-1965

(இ) நிறுவனமும் அதன் துணை நிறுவனங்களும் மேற்கொண்டுள்ள வணிகம் மற்றும் அதன் கிளைகள் அல்லது பிரிவுகள் குறித்து விவரங்கள் : தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாட்டில் பொதுத்துறை மற்றும் கூட்டுத் துறையின்மூலம், நடுத்தர மற்றும் மிகப்பெரிய அளவிலான தொழிற்சாலைகளை நிறுவியும் செயல்படுத்தியும் வருகிறது. இது வரையில் 40 நிறுவனங்களை நிறுவியுள்ளது. 12 நிறுவனங்களை நிறுவிக்கொண்டுள்ளது.

துணை நிறுவனங்கள்

1. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் இரண்டு பெரிய அளவிலான சிமெண்ட் ஆலைகளை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒன்று திருச்சி மாவட்டத்திலுள்ள அரியலூரிலும் மற்றொன்று காமராஜர் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்திலும் உள்ளன. அதோடு, சிமெண்ட் தகடு தயாரிக்கும் தொழிற்சாலையையும் காமராஜர் மாவட்டத்தில் ஆலங்குளத்தில் செயல்படுத்தி வருகிறது. சிமெண்ட் தகட்டினால் ஆன விசைக் குழாய்கள் உருவாக்கும் நிறுவனம் திருச்சி மாவட்டத்தில் மாயனூரில் உள்ளது.

2. தமிழ்நாடு எஃகு நிறுவனம் ஒரு சிறிய அளவிலான இரும்பு நிறுவனத்தை அரக்கோணத்தில் (வட ஆற்காடு மாவட்டம்) நிறுவியுள்ளது. இதனுடன் மின் உருளை ஆலை (ரோலிங் மில்லும்) நிறுவப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் வட ஆற்காட்டிலுள்ள காட்பாடியில் ஒரு வெடிமருந்து தொழிற்சாலையை சமீபத்தில் நிறுவியுள்ளது. இப்போது டிடோனேட்டர்ஸ் மற்றும் டிடோனேட்டிங் ப்யூஸ் தொழிற்சாலையையும், அம்மோனியம் நைட்ரேட் மற்றும் நைட்ரிக் அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலையினையும் வடஆற்காட்டிலுள்ள காட்பாடியில் நிறைவேற்றி வருகிறது.

4. தமிழ்நாடு மக்னீசியம் மற்றும் மெரைன் கெமிகல்ஸ் நிறுவனம், இந்தியாவில் முதன் முறையாக, மக்னீசியம் மெட்டல் நிறுவனத்தை, தமிழ்நாட்டிலேயே மிகவும் பின்தங்கியுள்ள ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வாலிநோக்கத்தில் நிறைவேற்றி வருகிறது.

(ஈ) நிறுவனத்தின் நிர்வாகம் குறித்த சுருக்கமான தகவல்கள் : இந்நிறுவனம் முழுவதும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதாகும். இது இயக்குநர்கள் குழுவால் நிர்வகிக்கப்பட்டு, தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரையும், செயல் இயக்குநரையும் கொண்டு இதன் அன்றாட பணிகளை நிர்வகித்து வருகிறது.

(உ) இயக்குநர்களின் பெயர், முகவரி, தொழில் :

இயக்குநர்களின் பெயர்கள் :	தொழில்-முகவரி
1. திரு. கே. வெங்கடேசன், இ.ஆ.ப.	தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், 19-A, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008.
2. திரு. டி.வி. அந்தோணி, இ.ஆ.ப.	தலைவர், தமிழ்நாடு மின்வாரியம், சென்னை-600 002.
3. திரு. கே.ஏ. நம்பியார், இ.ஆ.ப.	சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் தொழிற்துறை, செயின்ட் ஜார்ஜ்கோட்டை, சென்னை-600 009.
4. திரு. என். நாராயணன், இ.ஆ.ப.	ஆணையர் மற்றும் செயலர், நிதித்துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.
5. திரு. பி.எஸ். பாண்டியன், இ.ஆ.ப.	இயக்குநர், தொழில் மற்றும் வணிகத்துறை, சேப்பாக்கம், சென்னை-600 005.
6. திரு. வி. சங்கரசுப்பையன், இ.ஆ.ப.	ஆணையர் மற்றும் செயலர், பொதுப்பணித்துறை, சென்னை-600 009.
7. திரு. ஜெ.ஆர். ராமனுஜன், இ.ஆ.ப.	தலைவர், மற்றும் நிர்வாக இயக்குநர், சிப்காட், சென்னை-600 008.
8. திரு. அஜய்பட்டாசார்யா, இ.ஆ.ப.	செயல் இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட், 19-A, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008.

(ஊ) 4(எ) கடந்த மூன்று நிதியாண்டுகளில் இந்நிறுவனம், வரிக்கான தொகை ஒதுக்கிய பின்னர் பெற்ற ஆதாயமும், ஆதாயப் பங்குத் தொகையாக அறிவித்த தொகையும் (ரூ. லட்சத்தில்)

மார்ச் 31 ம் நாளுடன் முடிவடையும் ஆண்டு	வரிக்குத் தொகை ஒதுக்குவதற்கு முன் ஆதாயம்	வரிக்குத் தொகை ஒதுக்கிய பின்னர் ஆதாயம்	அறிவிக்கப்பட்ட ஆதாயப் பங்குத் தொகை
1987	(+) 32.85	(+) 29.90	இல்லை.
1988	(–) 66.51	(–) 66.51	இல்லை.
1989	(–) 18.21	(–) 18.21	இல்லை

(எ) 4 (ஐ) (i) நிறுவனத்தில் தணிக்கை செய்யப்பட்ட கடைசி இரண்டு ஐந்தொகைக் கணக்குகளில் உள்ளவாறு நிதிநிலை குறித்த சுருக்கம். (மார்ச் 31ஆம் நாள் நிலவரப்படி ரூபாய் லட்சத்தில்)

பொறுப்புகள்	1989-ம் ஆண்டு கணக்குகள் (ரூபாய் லட்சங்களில்)	1988-ம் ஆண்டு கணக்குகள்	சொத்துக்கள்	1989-ம் ஆண்டு கணக்குகள் (ரூபாய் லட்சங்களில்)	1988-ம் ஆண்டு கணக்குகள்
பங்கு மூலதனம்	8102.77	7122.77	நிலையான சொத்துக்கள் (தேய்மானம் போக அடக்க மதிப்பில்)	10.02	8.72
ஒதுக்கீடுகளும் உபரிகளும்	81.65	99.86	முதலீடுகள் (அடக்க மதிப்பில்)	9290.19	8473.50
பிணையக் கடன்கள்	–	–	நடப்பு சொத்துக்கள்	499.17	73.97
பிணையமற்ற கடன்கள்	5845.24	4552.40	கடன்களும் முன் பணங்களும்	5432.92	4352.22
தவணை ஒத்திவைக்கப்பட்ட பொறுப்புகள்	1040.53	248.12	பலவகைச் செலவுகள் (தள்ளுபடி செய்யப் படாத அல்லது சரிகட்டப்படாத அளவிற்கு)	28.15	29.21
நடப்புப் பொறுப்புகள் & ஒதுக்கீடுகள்	190.26	914.47			
மொத்தம்	15260.45	12937.62	மொத்தம்	15260.45	12937.62

ii. நிலையில்லா பொறுப்புகள் குறித்த சுருக்கமான விவரங்கள் :

		31.3.1988 முடிய (லட்சங்களில்)	31.3.1989 முடிய
1. கடனாக ஏற்கப்படாத கோரிக்கைகள்	ரூ.	7.81	285.85
2. ஒரு பகுதி செலுத்தப்பட்ட பங்குகள் தொடர்பாக கோரப்பெறாத பொறுப்பு	ரூ.	0.01	0.01
3. மூலதனக் கணக்கில் நிறைவேற்ற வேண்டியுள்ள ஒப்பந்த பணிகள் குறித்த மதிப்பீட்டுத் தொகை.	ரூ.	0.85	11.86
	டி.எம்.	21.42	8.05
	என்.ஓ.கே.	10.47	11.07
	எப்.ஐ.எம்.	13.42	–
4. மத்திய ஆயத்தீர்வை விதிகளின் விதித்துறைகளுக்கிணங்க அடக்கவேண்டிய ஈட்டுறுதிப் பிணையப் பத்திரம்	ரூ.	1.00	–
5. தாமாகவோ அல்லது கூட்டுத்துறை முனைவர்களுடன் சேர்ந்தோ நிறுவிய நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உத்திரவாதங்கள்	ரூ.	3839.61	3689.24
	எஸ்.ஈ.கே.	330.50	330.50
	டி.எம்.	110.00	110.00
6. தவணை ஒத்திவைக்கப்பட்ட தொகைக்காக வங்கிகளுக்கு எதிர் உத்திரவாதம்	ரூ.	1361.49	1344.44
7. பணிக்கொடை தொகை கொடுப்பது குறித்து சேர்த்து வருவதின் மதிப்பிடப்பட்ட பொறுப்பு	ரூ.	11.40	13.61
8. அபராத வட்டி குறித்து மதிப்பிடப்பட்ட பொறுப்பு	ரூ.	20.78	28.19
(ஒ) (i) 31.3.1989 ம் நாள் நிலவரப்படி வைப்பீடுகள் என்ற முறையில் இந்நிறுவனத்தால் திரட்ட இயலக்கூடிய தொகை		ரூ.	2854.70
(ii) 31.3.1989 ஆம் நிலவரப்படி பெற்றுள்ள வைப்பீடுகள்		ரூ.	10.84.91
ஓ. விளம்பர நாளன்று இருந்த நீண்டகாலமாக நிலுவையிலுள்ள வைப்பீடுகள்		ரூ.	1.62

(ஃ) இதனால் நாங்கள் அறிவிப்பது :

(i) இந்நிறுவனம் 1975ம் ஆண்டு நிறுவனங்கள் (வைப்பீடுகளை ஏற்றுக்கொள்ளல்) விதிகளின் (திருத்தப்பட்டது) விதித்துறைகளுக்கு இணங்க உள்ளது.

(ii) மேற்கூறிய இணக்கம், வைப்பீடுகளைத் திருப்பிச் செலுத்துவதற்கு மத்திய அரசு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளதாக கருதப்படக் கூடாது.

(iii) இந்நிறுவனம் ஏற்றுக் கொள்ளும் வைப்பீடுகள் பிணையமற்றவைகளாகும். இது ஏனைய பிணையமற்ற பொறுப்புகள் போன்றதாக இருக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது

* 1500 இலட்சங்கள் வரை வைப்பீட்டுத் தொகையாகப் பெற தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது.

குறிப்பு : இவ்விளம்பரம், நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவின் பெயரில், அதன் அதிகார பூர்வமான ஒப்புதலின் பேரில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விளம்பரத்தில் கூறப்பட்டுள்ளவற்றிற்கு நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு 22.9.89 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

குழுவின் ஆணைப்படி
வி. கோவிந்தன்
செயலாளர்.

இடம் : சென்னை
தேதி : 22.9.89

குறிப்பு : 1975ம் ஆண்டு, நிறுவனங்கள் (வைப்பீடுகளை ஏற்றுக்கொள்ளல்) விதிகளின் (திருத்தப்பட்டது) 4 (4)ம் விதிக்கேற்ப இந்நிறுவனத்தின் பெரும்பாலான இயக்குநர்கள், உரியவாறு கையொப்பமிட்ட விளம்பரத்தின் நகல் ஒன்று சென்னை 600 006 இல் உள்ள கம்பெனிகள் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

DIPR / MS/89/ADWAVE/TIDCO/3689 TAM

Vijay®- a friend of your family
Associated Marketing Agencies
Madras ● Bangalore ● Hyderabad ● Ernakulam

In the last two decades CLEVITE has established many milestones in its progress to the top.

There are few parallels in the auto-ancillary components which have been able to sustain a consistent and strong brand image amidst all classes of users over a period of two decades. CLEVITE enjoys such a confidence in the field of Engine Bearings, Bushings and Thrust Washers.

CLEVITE TECHNOLOGY — WAY AHEAD

CLEVITE, internationally, has been in the forefront of bearing technology — be it materials, construction or overlays and its spread is world-wide. Bimetal Bearings has been responsible for bringing in CLEVITE Technology in the country in the early sixties and over two decades, has been able to adapt this foreign know-how to our operating conditions.

CLEVITE — OEM's PREFERRED CHOICE

CLEVITE has been the preferred choice of all the Car, Truck, Bus, LCV and Tractor manufacturers for OE fitment and for Spares. CLEVITE's leadership for two decades is a direct result of superior technology, pricing, product integrity and keeping pace with the growth.

CLEVITE has been among the very few in the ancillary field who have gained from Telco, implicit confidence and are now in the Self-Certification Scheme, for products from Coimbatore and Hosur.

CLEVITE — A TRUSTED NAME AMIDST WORKSHOPS

Amidst State Transport Undertakings and Engine Overhaul Workshops, CLEVITE has the highest rate of acceptability amidst competing brands, an enviable record built on superior quality and designs which can withstand even adverse operating conditions and offer trouble-free performance throughout the working life.

CLEVITE — FULFILS ALL THE IDEAL BRAND ATTRIBUTES

For the trading community, which provides an important link, CLEVITE meets all the criteria for sustained interest.

The range is complete — all models of cars, heavy and light commercial vehicles, tractors and stationary diesel and petrol engines are fully covered.

Competitively-priced and as a fast mover, CLEVITE provides sound scope for fair returns on investment.

CLEVITE's perceived and intrinsic quality image is very high amidst actual users and consequently, for a trader is a trouble-free product, with no hassles on replacement or warranty.

CLEVITE IS NOW AVAILABLE FROM TWO MANUFACTURING PLANTS

With one more modern plant to double its capacity commissioned at Hosur and now, in regular production, CLEVITE enters yet another phase — the phase to support the growth plans of the existing Commercial Vehicle, Car and Tractor manufacturers plus the new demands emerging from recent entrants to the field. This measure apart from enhancing CLEVITE's presence in the OEM scene, will make the availability factor in the replacement trade more assuring.

BIMETAL BEARINGS LTD.
Factories at: Madras. Coimbatore. Hosur.

VARNAM PRINTING INKS PVT. LTD.

(Formerly National Printing Ink Co.)

G-3. Industrial Estate.

Ambattur, Madras — 600 058.

Mfrs. of Quality Offset, Web Offset, Letterpress and Silkscreen Inks Since 1968

Grams: VARNAMINKS (MADRAS-58) Phone: 651686

காடுகளின் இனியகீதம் கேளுங்கள்... அதுவே பிச்சாவரம்!

...பிச்சாவரத்தில் நுழைந்ததுமே நீங்கள் மயங்கிடுவீர். கடல் அலை மீது பள பள சூரிய ஒளி காண்பது நெஞ்சில் நிழலாடும் அதிசய அனுபவம்.

கடல் தென்றல் இசையாய் பாய்ந்து வர நடனம் ஆடும் மரங்கள் உங்களை வியக்க வைக்கும். பிச்சாவரம் சுற்றுலா மையம் மட்டும் அல்ல. இது ஒரு சொர்க்கபுரி.

சிதம்பரத்திலிருந்து 16 கி.மீ. அருகிலுள்ள பிச்சாவரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அளிக்கும் எல்லா வசதிகளுமுண்டு.

- சொகுசான படகு வீடுகள். அமைதியான ஓய்விற்கு:
- வருட முழுவதும் சேவை - இன்பமான தட்ப-வெப்ப நிலையில்.
- ஓட்டல்/இளைஞர் விடுதிகள் - சிக்கனமான உணவு, உறைவிடம்.

பிச்சாவரம்: முன்னூற்று அறுபத்தி ஐந்து நாளுமே சுற்றுலா நாள்தான்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
143. அண்ணா சாலை, சென்னை - 600002.
தொலைபேசி: 849803, 849115

தலைமை செயலகம்:
25. டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை,
மயிலாப்பூர், சென்னை - 600004.
தொலைபேசி: 846843, 846825.

DIPR/2234/MS/89/SOBHAGYA

தீபாவளி நல்வாழ்த்துக்கள்



சுந்தரம் ஃபாசனர்ஸ் லிமிடெட்

சென்னை - மதுரை - ஓசூர்

தீபாவளித் திருநாளில் எங்கள் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

டிரேடு ஃபேர் அவார்டு பெற்ற சிலந்தி பின்னும்
சிறந்த பனியன்கள்

ஸ்பைடர்
பனியன்கள், ஜட்டிகள்.

எமது சார்பு நிறுவனங்கள்

ஜெனித் மில்ஸ் : : சோலார் மில்ஸ்

TEL : SPIDER

Phone : 20160
21918

ஸ்பைடர் நிட்டிங் கம்பெனி

ஸ்பைடர் ஷோ ரூம்

109, காமராஜ் சாலை, திருப்பூர் - 638603

BUMA

தீப ஒளித் திருநாளில்
துன்பங்கள் யாவும் நீங்கி
இன்பம் எங்கும் பெருகிட
வாழ்த்துக்கள்!
CUB
சிட்டி யூனியன் பாங்க் லிட்.,
பதிவு அலுவலகம்: கும்பகோணம்–612 001.
CUB—உங்கள் வளர்ச்சிக்கேற்ற வங்கி.

MCS/CUB/365

அருள்மிகு தண்டாயுதபாணி
சுவாமி திருக்கோயில், பழநி.
தமிழ்நாடு

இத்திருக்கோயில் மிக பழமை வாய்ந்ததும், புராதனமானதுமாகும். 160 மீட்டர் உயரமுள்ள மலையில் மூலவர் உருவச்சிலை சித்த முனிவர் போகரால் தவபாஷானங்களின் கலவையால் உருவாக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. திருக்கோயிலில் ஆறு கால அபிஷேகம், ஆராதனை நடக்கிறது. வழிபடும் பக்தர்களுக்கு மென்மேலும் நலம்பெற அருள்புரிந்து கொண்டு இருக்கிறார். இது ஒரு முக்கியப் பிரார்த்தனை ஸ்தலமாகும். ஆறுபடை வீடுகளில் இது பிரதான ஸ்தலமாகும்.

பக்தர்கள் சென்று வழிபட படிப்பாதை மற்றும் யானைப்பாதை உள்ளது. தவிர மின் இழுவை இரயில்கள் மூன்று ஓடிக் கொண்டு இருக்கின்றன. திருமலையில், தர்ம தரிசனத்திற்கு, ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி ஒருவழிப்பாதை அமைக்கப் பட்டுள்ளது. அபிஷேகம் செய்பவர்களுக்கும், சிறப்பு அனுமதிக் கட்டணம் சீட்டு வாங்குபவர்களுக்கும், தனித்தனி பாதைகள் அமைக்கப் பட்டு உள்ளன. மலையில் வழிபாடு செய்யவும், தங்கி ஓய்வு எடுக்கவும் பல ஓய்வு மண்டபங்களும், இதர வசதிகளும் பக்தர்கட்கு செய்யப்பட்டு உள்ளது.

திருமலையில், திருக்கோயிலில், அபிஷேகப் பஞ்சாமிர்தம், பன்னீர் மற்றும் ஆண்டவர் பிரசாதங்கள், லட்டு, முறுக்கு, மற்றும் அதிரசம் விற்கப்படுகிறது. கூட்டுறவு பண்டகசாலை மூலம் தேங்காய், பழம், விபூதி முதலியன விற்க்கப்படுகிறது.

மலைக்கோயில், அடிவாரம், வின்ஞ்ச், மத்திய பேருந்து நிலையம் மற்றும் இரயில்வே நிலையம் ஆகிய இடங்களில் தகவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு அவைகளில் திருக்கோயில் பஞ்சாமிர்தம், ஆஸ்தீக புத்தகங்கள், மூலவர் தங்கரதப்படங்கள், கேசட்டுகள் முதலியன விற்பனை செய்யப்படுகிறது.

மலைக்கோயில் சன்னதி காலை 6.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை பொதுமக்கள் தரிசனத்திற்காக நடை திறந்து இருக்கும். திருவிழாக்காலங்களில் காலை 4.00 மணி முதல் இரவு இராக்கால பூஜை முடிய சந்நதி திறந்து இருக்கும்.

தினசரி விஸ்வரூப தரிசனம் காலை 6.00 மணி

விசேஷ நாட்களில் விஸ்வரூப தரிசனம் காலை 4.00 மணி.

கால பூஜை நேரங்கள் :

1. விளா பூஜை காலை	6.45 மணி	4. உச்சக்காலம் பிற்பகல்	12.00 மணி
2. சிறுகால சந்தி காலை	8.00 மணி	5. சாயரட்சை மாலை	5.30 மணி
3. கால சந்தி காலை	9.00 மணி	6. இராக்காலம் இரவு	8.00 மணி

முக்கியத் திருவிழாக்கள் : 1. தைப்பூசம் 2. வைகாசி விசாகம் 3. ஸ்கந்த சஷ்டி 4. பெரிய கார்த்திகை 5. பங்குனி உத்திரம்.

புறப்பாடு கட்டணம் :		கட்டளைகள் :	
1. தங்கமயில் வாகனம் -	ரூ.200.00	1. கால பூஜை -	ரூ. 3,000.00
2. தங்கரதம் -	ரூ.900.00	2. தங்கரதம் -	ரூ.10,000.00
		3. உச்சிக்கால பிரசாதம் -	ரூ.10,000.00

மேற்கண்ட தொகைகளை ஆலயத்தில் செலுத்தினால், குறிப்பிட்ட ஒரு நாளில் காலபூஜை, தங்கரத புறப்பாடு நடத்தி பிரசாதங்கள் வழங்கப்படுகிறது. தினசரி மாலை சுமார் 6.00 மணிக்கு புறப்பாடு செய்யப்படுகிறது.

பக்தர்கள் தங்குவதற்கு, இரயில்வே பீடர் ரோட்டில் ஒரு தங்கும் விடுதியும், அடிவாரத்தில தண்டபாணி நிலையம், கார்த்திகேயன் விடுதி, சிறுகுடில்கள் ஆக நான்கு தங்கும் விடுதிகள், நவீன வசதிகளுடன் கட்டப்பட்டு, பக்தர்கட்கு வாடகைக்கு விடப்படுகிறது. இந்த தங்கும் விடுதிகளில் சகல வசதிகளுடன் கூடிய குளிர்சாதன அறைகள், உள்ளன. மிகக்குறைந்த வாடகைக்கு இந்த அறைகள் பக் தர்கட்கு தங்க விடப்படுகின்றன. பிறர் ஏமாற்ற வகையில்லாமலும் செய்து, பக்தர்கள் முழு திருப்தி அடைய வசதி செய்யப் படுகிறது.

பழனி வந்து அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியை வணங்கி, வழிபட்டு, அவர் அருள் பெற வேண்டுகிறோம்.

து. இராமச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையர்/நிர்வாக அதிகாரி
மற்றும்
தக்கார்.

கலைமகள்

தீபாவளி மலர் 1989

பூஜைக்குரியவை: வண்ணத்தில்
பொற்கொடி சமேத காரணீசுவரர்
ஸ்ரீகாஞ்சி ஜகத்குரு:
மூன்று தவச்சீலர்கள்

வண்ண இணைப்புகள்

கோலங்களும் கோல விழித் தேவியர்களும்
காஞ்சித் திருவுடல் - சிவ அஷ்டபதி
சங்க காலப் பெண் கவிஞர்கள்
கனம் பாடிய கிருஷ்ணையர்
கண்ணன் கருணை

வண்ணப் போட்டோ இணைப்புகள்

அன்னையின் எழில் உதயம் (சிற்பத்தில்)
சுதந்தர மன்னர்கள் (தொழிலில்)
சிவப்புக் கம்பள வரவேற்பு (கலையில்)

வாழ்வும் வாக்கும்

அருணகிரியின் அவதாரம்

22 கதைகள் + 25 கட்டுரைகள்
+ 11 கவிதைகள் + 4 நாடகங்கள்
+ சிறுவர், பகுதி + நகைச்சுவை

அட்டையில்:
உத்தங்கர் கண்ட கண்ணன் பேருருக் காட்சி

வண்ணப் போட்டோ:
மூன்று தவச்சீலர்கள் - யோகா
முகப்பு சித்திரம்: ரத்னா ஆஃப்செ

வரம் அருள்வாய் தாயே!

ரமணதாசன் _

செம்பொன்னை யேயுருக்கிச் செய்தவுட லும்கருணை
    சிந்தும் எழில் கொஞ்சும் முகமும்
அம்புவியி லேயழகுக் கோலமிட வேயருளும்
    அன்னையு மைநீய ல்லவோ?

பொன்னவிரும் நின்னுருவப் பொலிவிங்கு சொற்கடந்த
    புத்தமுத ஒளி அன்னையே!
சென்னையினில் மயிலைவாழ் செல்வியே சொர்ணநகை
    திகழ்இன்ப மலர் வல்லியே!

அன்புடனே அர்ச்சித்த அந்தணன் தனஞ்சயனை
    ஆதரித் தருள் செய்தனை!
என்பினுக் குருதந்த இறைகபா லீச்சுரத்
    தீசானம் கோயில் கொண்டாய்!

சித்த ஆகாசத்தில் திருநடனம் செய்பிரான்
    காரணீசன் மகிழ் தருவே!
வித்தகர்கள் வாழ்மயிலை விளங்குமொளி மதியென்ன
    வீற்ற வோர் எழிலுருவே!

பவம், அச்சம், மாயை இவை தமையோட்டி அஞ்சலெனப்
    பாலிக் கும்சஞ் சீவியே!
தவறற்ற பருவத்துப் பாலர்க்கிங் கமுதூட்டும்
    தாயன்புச் சுடர்த் தெய்வமே!

பக்தியுட னேயிங்கு பஞ்சாட்சரம் கூறும்
    பக்தர்பவப் பிணி நீக்குவான்
சத்தியன் நின் நாதனுடன் நாளுமிங்கு நலமோங்கிச்
    சகமுய்ய வரம் நல்குவாய்!

அருள்மிகு பொற்கொடி உடனுறை காரணீசுவரர்

தீபாவளி நல்வாழ்த்துக்கள்



உங்கள் வாழ்வின் நம்பிக்கை ஒளி

எதிர்காலத்தைச் சிந்திப்பவர்கள், எங்களிடம் சேமிப்பவர்கள்

அண்ணாமலை பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 252, மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர்-641 043
போன் : 42224 தந்தி : ''ராஜ்தூத்'' டெலக்ஸ் : 0855-399 போர்டு இன்

உங்கள் முன்னேற்றமே எங்கள் நோக்கம்

SASI

நாடெங்கிலும் உள்ள அனைவருக்கும் இந்த படம் கூறுவது மோபெட்களில் அற்புதமானது

“



”



டிவிஎஸ் மோபெட்கள்

நம்பிக்கையான சேவை

எங்கள் உளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

ஒளிபெருக்கும் தீபங்கள்

மங்கல ஒளித் தீபவரிசை மக்கள் மனத்தை மலரச் செய்கிறது. ஒளி வண்ணங்கள் எண்ணங்களைப் பிரகாசமடையச் செய்கின்றன. 'சச்சிதானந்த ஜோதி அகண்ட வடிவாய் ஓங்கி நிறைந்தது கண்டால்' அதன் உயர்வை உரைத்திடல் ஆமோ' என்கிறார் தாயுமானவர். கதிரவன் ஒளி உலகை வாழவைக்கிறது. 'ஞாயிறு போற்றுதும்' என்றார் இளங்கோவடிகள். ஒளி வெள்ளம் நம் உடலை, உள்ளத்தைப் புடமிட்ட தங்கமாக்குகின்றது. ஒளித் திருநாளான தீபாவளியை இக் கருத்தில் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறோம். விருந்தும் மருந்தும் மகிழ்ச்சியும் இழையோடுகின்றன.

பண்டிகைக் குதூகலத்தின் உற்சாகத்தைப் பெருக்கிட இலக்கிய விருந்தாய்க்கலைமகள் தீபாவளி மலர் மலர்ந்து மணம் வீசுகிறது. தீபாவளி விருந்தோ ஒருநாள் தான்; கலைமகள் மலர் ஆண்டு முழுவதும் மணம் வீசி மனம் கவரும்.

மலரைப் பிரித்ததும் மங்கலத் திருமுகத்தினளாய் அருள் புரியும் பொன்னளந்திடும் பொற்பாவை தரிசனம்; அடுத்து மும்மூர்த்திகள் போன்ற தவச் செம்மல்களின் கருணை வெள்ளத்தில் நம் மனக் கறைகள் கரைகின்றன; ஞான ஒளி பொங்கிப் பரவி நிறைகிறது.

அவலத்தை அகற்றி அருள் புரியும் அன்னை துர்க்கா தேவியின் திருவவதாரக் காட்சி நம்மைப் புல்லரிக்கச் செய்கிறது. அன்னையை உருவாக்கும் ஸ்தபதியின் கை வண்ணம் பக்தியுடன் பரிணமிக்கிறது. நவராத்திரியில் எம்பெருமாட்டியை அன்றாடம் ஒவ்வொரு கோலத்தில் அலங்கரித்துப் பூஜிப்பதில் நம் சகோதரிகள் பெரும் பங்கு வகிப்பர். 'கோலங்களும் கோல விழித் தேவியர்களும்' சகோதரிகள் விரும்பி ஏற்கும் வண்ணச் சித்திரம்.

ஜயதேவரின் அஷ்டபதியைப்போல், காஞ்சித் திருவூடல் இலக்கிய நயம் மிகுந்த இன்பக் கருவூலம். அதிலிருந்து சில காட்சிகளை வண்ணத்தில் அளித்திருக்கிறோம்.

'நாங்கள் சுதந்தர மன்னர்கள், காஞ்சித் திருவூடல், சங்க காலப் பெண்கவிஞர்கள், கண்ணன் பேருருக்காட்சி எல்லாமே வண்ணத்தில் ஒளிர்ந்து, கருத்தைக் கவர்பவை.

ஆய்ந்தெடுத்த அர்ச்சனை மலர்களைப் போல், கதைகளும் கட்டுரைகளும் கவிதைகளும் மணமிக்க இந்த இலக்கிய மலரை அலங்கரிக்கின்றன. வாழ்வில் ஒளி கூடி, இல்லங்களில் இன்பம் பெருகிப் பொங்கிட தீபாவளித் திருநாளில் இறைவனை வேண்டுகிறோம். வாசக அன்பர்களுக்கெல்லாம் தீபாவளி வாழ்த்துக்கள்.

\- ஆசிரியர்.

கலியிலே கண்முன் கடவுள் —

ராகம் : ஸிந்து பைரவி தாளம் : ஆதி எடுப்பு : ஸமம்

பல்லவி

கலியிலே கடவுள் மனிதன் ப்பாபக்
கண்முன் வருவாரா?
கண்முன் வந்தாலுந்தானந்தக்
கடவுள் நான்தான், என்பாரா? ஐயா!

அனுபல்லவி

வலியவே வந்து உதவிகள் செய்யும்
வடிவமெல்லாம் உலகில் கடவுளதே (நான் -
வாழ்க்கையிலே கண்டு நானுணர்ந்தேன் நன்கு
வகை வகையாய்ச் சொல்லும் அளவிலதே (கலி)

சரணம்

முன், மூன்று யுகத்தில் முனிவர்க்கும் நரர்க்கும் கண்
முன் வந்து அருள் செய்தார் கடவுள்
பின் தோன்றியே ஏங்கி - பூத உடலும் தாங்கி
பெரிதும் மனம் நோகுரார், இப்போ.
கண், காதுகள் இருப்போர் கையில் - பொருள் இருப்போர்
கடவுளருள் என்பதையே கனவிலும் - கருதாமை கண்டு
(சவுக்க காலம்)
புண்பட்டுப் பட்டு நாமும் புத்தி கெடாதிருக்கப் (சவுகர் காலம்)
பெரியோர் உருவில் வருவார் உண்மைப்
பேரன்பர்க்கருள் புரிவார் எதிலும்
சிறியோர் செயல் கண்டஞ்சார் நல்லோர்
செழிக்கும் வரை கண் துஞ்சார் புவியில்
அரிதாய்ப் பலசெயல் புரிவார் எவர்க்கும்
அதனால் தாமின்புறுவார் உலகில்
பரிதியைக் கண்ட பனிபோலே, துயர்
பறந்திடவே சுகம் நிறைந்திடவே - செய்வார் (கலி)

- டாக்டர் ஸ்வர்ண வேங்கடேச தீட்சிதர்



COLOUR SEPARATION FOR

THIS ISSUE

BY

Color Grafiks

8, Leith Castle Street,
Santhome, Madras - 600 028
Grams : GRAFIKOLOR
Phone : 77534

தீபாவளி வாழ்த்துக்கள்

உங்கள் வாழ்வில் ஒளி வீசிட!

இத்தீபாவளித் திருநாளில் உங்கள் இல்லத்தைப் போலவே, உங்கள் 'எதிர்கால'வாழ்வும் பிரகாசமாய்த் திகழ, உறுதுணையாக நிற்கும் அரசின் சிறுசேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து பயனடைவீர்.

நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்தரத்தக்க சிறுசேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து பயனடையுங்கள்.

- தேசிய சேமிப்பு பத்திரம் 8வது வெளியீடு.
- தேசிய சேமிப்புத் திட்டம்.
- விவசாயிகள் சேமிப்பு பத்திரம்
- இந்திரா சேமிப்பு பத்திரம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத் திட்டம்.
- 5 ஆண்டு அஞ்சலக ரெக்கரிங் டெபாசிட்.
- 15 ஆண்டு பப்ளிக் பிராவிடண்ட் பண்ட்.
- 10 ஆண்டு சமூகப் பாதுகாப்பு பத்திரங்கள்.
- அஞ்சலக குறித்தகால முதலீடு.
- அஞ்சலக சேமிப்பு வங்கி கணக்கு.
- ஓய்வு பெறும் அரசு பணியாளர்க்-கான முதலீடு திட்டம் 1989.

இயக்குநர்
சிறு சேமிப்புத்துறை,
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 840223/840003/846209.

DIPR MS 89 ARIES

சிறுசேமிப்பு உங்கள் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

நல்வாழ்விற்கு V. V.S நல்லெண்ணெ

50 ஆண்டுகளாக
நல்லெண்ணெக்கே உரிய
மணம், நிறம், ருசி நிறைந்தது
V.V.S. நல்லெண்ணெ



V.V.S. நல்லெண்ணெ
வாங்கிடும் அனைவரும்
தீபாவளி பரிசினை
கேட்டு வாங்குங்கள்.

V.V.S
நல்லெண்ணெ

V.V.S. அன் சன்ஸ், விருதுநகர்.

சுவையும் மணமும் மிகுந்த உணவுக்கு

உபயோகியுங்கள் :

L.G

கூட்டுப் பெருங்காயம்

லால்ஜீ கோதூ அண்ட் கம்.

213, சாமுவேல் தெரு
பம்பாய் - 400 003.

போன் : 321379 355812

Be a "NEHRU YATRI"
"DISCOVER INDIA" by RAIL

On the occasion of the birth centenary celebrations of the first Prime Minister of India, Pandit Jawaharlal Nehru, Southern Railway has launched "Nehru Yatri" tourist ticket, a special concessional offer for round tour journeys linking historical cities and destinations all over the country.

Unique Features:

- ★ *Eight exciting Package Plans to choose from.*
- ★ *Valid for 30 days.*
- ★ *Break Journey - as you like.*
- ★ *Includes sleeper surcharges, reservation fees and Superfast charges.*
- ★ *Available in First Class & Second Class.*

Commenced on November 14, 1988, this special scheme will be in vogue for one year.

"Nehru Yatri" tourist tickets are available at:

MADRAS CENTRAL, BANGALORE CITY, MADURAI, TIRUCHIRAPPALLI, PONDICHERRY, PALGHAT, COIMBATORE, MANGALORE, TRIVANDRUM CENTRAL AND ERNAKULAM STATIONS and also from the CHIEF COMMERCIAL SUPDT.'s OFFICE (RATES), SOUTHERN RAILWAY, MADRAS-600 003.

Hurry, Don't miss this never before Package offer to know India more intimately.

Get a "Nehru Yatri" ticket today and Go over a magical tour of the wonder land.

Issued by:
CHIEF PUBLIC RELATIONS OFFICER,
SOUTHERN RAILWAY, MADRAS-600 003.

R K SWAMY/MRL/7476

DIWALI GREETINGS



MANUFACTURERS OF CARTONS WITH
MULTI-COLOR PRINTING
QUALITY PHOTO OFFSET PRINTERS FOR CALENDARS
POSTERS, LABELS ETC.

RATHNA OFFSET PRINTERS

40, PETERS ROAD, MADRAS - 600 014.

Phone : 867551

Res : 457754

"என்ன, என் கடைக்கு ஏதேனும் நஷ்டம் வந்தால் அதற்கு ஈடு நீங்கள் செய்வீர்கள் என்று கூறுகிறீர்கள்?"



"ஆமாம்! பெரிதோ சிறிதோ உங்கள் விலைமதிப்புள்ள பொருட்களுக்கு தீங்கு நேரும் போது அதற்கு ஈடாக ரொக்க பணமளிக்க நாங்கள் இருக்கிறோம் நாங்கள்தான்-ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்."

கேடு காலம் கதவைத் தட்டிக் கொண்டா வரும். கடையில் திருட்டு சம்பவித்தால் அல்லது தீயினால் எல்லாம் கருகினால் அல்லது உங்கள் கால்நடைகள் கொள்ளை நோயிற்கு இரையாகி விட்டால் உங்களிடம் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி இருக்குமேயானால் ஈடாக ரொக்கப் பணத்தைப் பெற்று இத்தீங்கிலிருந்து ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கலாம்.

ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்பொரேஷன், ஆஃப் இந்தியா (ஜி ஐ ஸி)

கிராமப்புற நன்மைக்கென் இவர்களின் 20க்கும் மேற்பட்ட பாலிஸிகள் இவற்றை மிகக் குறைந்த பிரிமியத்தில் பெறலாம். உங்கள் விலைமதிப்புள்ள எல்லா பொருட்களையும் சிறிதோ, பெரிதோ முழுக்க இழந்து விடாமல் பாதுகாக்கலாம். அவை உங்கள் வாழ்க்கைத் தொழில்களான பண்ணைக் கால்நடைகள், கடைகண்ணி அல்லது கோழிப்பண்ணை ஆகட்டும் அல்லது உங்கள் சொத்து, வீடு, பம்ப்செட், சைக்கிளாகட்டும், உங்களுக்கு எதிர்பாராது நஷ்டம் வரும்பொழுது அந்நஷ்டத்திற்கு பரிகாரம் பெற்று புது ஜீவனத்தைத் தொடங்குங்கள்.

ஜெனரல் இன்ஷ்யூரன்ஸை உங்கள் நலன் நாடுபவராக கருதுவீர்.

முழு விவரங்கள் மற்றும் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி எடுப்பதற்கு எங்கள் நான்கு துணை கம்பெனியின் ஏதாவதொரு உள்ளூர் கிளையை நாடி ரொக்க பாதுகாப்பைப் பெறுவீர்! வளமான வருங்காலத்தை உருவாக்குவீர்!

ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்பொரேஷன் ஆஃப் இந்தியா

ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்

கேடு வந்த போதே எங்கள் நினைவு வரும் அங்கே

JAWAHARLAL NEHRU CENTENARY 1889–1989

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
தி ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

மஞ்சரி

சிறந்த தமிழ் டைஜெஸ்ட்

42 ஆண்டு சேவை

பல் மொழிகளிலிருந்து சிறந்த கதை, கட்டுரைகள்

விலை ரூ. 2 ஆண்டு சந்தா ரூ. 24

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை–600004.

The Vijayakumar Mills Limited

Kalayamputhur-624 615

Palani.

TELEPHONE : 591 (5 lines)
Palani.

COTTON YARN: Combed -- 100s & 120s

HOSIERY YARN. Combed -- 34s ISI - SILVER
40s ISI - COLTS
40s - COLTS - GOLD

MERCERISED YARN: Combed -- 2/65s; 2/80s & 2/120s
Gassed Mercerised
Combed -- 2/64s; 2/100s; 2/120s
Both Grey & Bleached

SEWING THREAD YARN: 2/34s; 2/36s; 2/40s; 3/50s; 3/60s; & 2/80s.



COLTS
COTTON SEWING
THREAD
IN ALL RANGES

COLTS
A VIBRANT RANGE
OF
VESTS AND BRIEFS

Colts

ஸர்வ மங்களா

ஸ்ரீராஜராஜேசுவரி

- சௌந்தரா கைலாசம் -

ஸர்வ மங்களா ஸ்ரீராஜ
ராஜேஸ் வரியே! என்தாயே!
நிர்மல மான நெஞ்சுடனே
நின்னைத் தொழவே அருள்வாயே!

புனித வேள்வித் தீயினிலே
பொலிவோ டுதித்து வந்தவளே!
இனிய வித்யா ரூபிணியே!
இலங்கும் திரிபுரா என்பவளே!

மன்னுயிர் யாவும் ஈர்த்திடவே,
மந்திர நாயகி! கருணையினால்
நின் இடக் கையில் செம்பாச
நீள்வட நுனிகளைப் பற்றியுளாய்!

முன்னம் துய்த்த இன்பமெலாம்
மூளும் அடுத்த பிறவியிலும்
இன்னும் விழையும் உள்ளத்தை
இழுப்பாய் பாசக் கயிற்றாலே!

அன்னையுன் இச்சா சக்திக்கே
அடையா ளம்தான் இதுவன்றோ?
என்னே கருணை உனக்கம்மா!
இதயம் குளிர வணங்குவனே!

மண்ணில் விதைத்த மணியொன்று
வளர்வுற் றிங்கே மறுபடியும்
எண்ணில வாகப் பெருகிஉயர்
எழிலை எங்கும் விரிக்கிறது!

மணியை வறுத்தால் வளராது!
மண்ணுயிர்க் குணவாய் அதுமாறும்!
கணக்கில் லாமல் பெருகுமொரு
கவினை முழுதும் இழந்துவிடும்!

உன்றன் அருளால் நிறைவேறும்
ஒவ்வொரு கர்மமும் மறுபடியும்
நின்று கிளைகள் பலவாக
நெடிது வளர்ந்து தழைக்காது!

உன்ற னிடத்தே வைத்துள்ள
உள்ளப் பற்று மறுபடியும்
என்றும் வேறொன் றினைநாடி
இங்கும் அங்கும் தாவாது!

பாசக் கயிறு பேரின்பம்
படைக்கும்! இந்தப் புவிமேலே
வாசம் செய்யும் உயிரையெலாம்
வாகாய் இழுத்து நலம் புரியும்!
எண்ணும் பொருளை எய்தாமல்
ஏமாற் றத்தை எய்துவதால்
புண்ணாய்ப் போகும் உள்ளத்தில்
பொங்கும் வேண்டா வெறுப்புணர்வு!

அதுவே குரோதம் எனவாகும்!
அதன்பின் கோபம் எனமாறும்!
அதுவே மதியை அழித்துவிடும்
ஆணவம் தனையும் உருவாக்கும்!

உன்றன் வலது கரத்தினிலே
ஒளிரும் வெண்மை அங்குசத்தால்
நின்ற ஆணவம் அதனைநீ
நீக்கி அறிவைத் தெளிவிப்பாய்!

கோபம், குரோதம் இல்லாமல்
குவலயம் தன்னில் வாழ்விப்பாய்!
பாபம் தவிர்ப்பாய்! இவையுன்றன்
பாங்குயர் ஞான சக்தியம்மா!

இனிமை, ஈரம், இவைகளுடன்
இயங்கி வெளியே அலைகின்ற
மனித மனத்தை விருப்பம்போல்
மாற்றி விளைத்தே அமைத்திடலாம்!

வெட்டி நடுகிற செங்கரும்பு
மீண்டும் துளிர்த்து முளைப்பதுபோல்
சிற்றின் பத்தில் சேர்ந்தமனம்
தினமும் வளர்ந்தே அதிலுழலும்!

பாழ்பட் டுள்ளம் அலையாமல்
பக்தி எறும்தான் இனிமையினை,
வாழ்வித் திடவே நற்கிரியா
சக்தி யினால்நீ வழங்கிடுவாய்!

உலகம் இதனைத் தெளிவாக
உணரச் செய்யும் விதமாகப்
பொலியும் கரும்பு வில்லைநீ
பொற்கர மதனில் ஏந்துகிறாய்!

பொன்னை ஒத்த பொலிவுடைய
பூந்தாள் போற்றிப் புகழ்பாடி
நின்னைத் துதிப்போர் நெஞ்சத்தை
நீபல வகையில் ஈர்த்திடுவாய்!

புவியில் ஒவ்வோ ருயிருக்கும்
பொருந்த, அனங்கன் அவன்மூலம்
குவியும் அழகு மலர்க்கணையைக்
குறிபார்த் தெய்யச் செய்வாய் நீ!

சிந்தை பணிந்து ஸ்ரீவித்யா
நின்னை வணங்கும் காமனவன்

உந்தும் மகிழ்வை ஊட்டிவிட
ஒளித்தா மரைக்கணை எய்திடுவான்!

நாவில் சுவையை உண்டாக்க
நன்னய மிக்க செங்கழுநீர்ப்
பூவின் கணையை வில்லதனில்
பொருத்தி அழகாய்த் தொடுத்திடுவான்!

அனங்கன் உன்றன் ஆணையினால்
அகிலத் துறையும் மாறுடரின்
மனத்தை மயக்கச் செவ்வல்லி
மலரின் கணையை எய்திடுவான்!

ஆம்பல் மலர்ச்செங் கணையாலே
அனைத்தும் வற்றப் பண்ணிடுவான்!
மாம்பூ அம்பால் நல்லுயிர்கள்
மரணம் அடையச் செய்திடுவான்!

எய்யும் மலரின் கணைகளினால்
இருக்கும் உயிர்கள் அத்தனையும்
உய்யும் படிநீ பண்ணுகிறாய்!
உன்வச மாக்கிக் கொள்ளுகிறாய்!

இந்தச் செயலைக் குறிப்பிடவே
[illegible]ழிலார் உன்றன் வலக்கரத்தில்
ஐந்து ந[illegible]லர்ப் பாணத்தை
அற்புத [illegible]கக் கொண்டுள்ளாய்!

தாயே ஸ்ரீலலி தாம்பிகையே!
தாழ்ந்து பணிந்து வணங்கிடுவேன்!
நீயே எனக்குத் துணையம்மா!
நின்தாள் எனக்குச் சரணம்மா!

சென்னி, சிகை, என் இருவிழிகள்
திகழும் தோள்கள் நல்லுடலம்
என்றும் இடங்கள் ஆறினிலே
மந்திர எழுத்தாய் இருக்கின்றாய்!

நலமாய் அமைந்த ஸ்ரீசக்ர
நகர சாம்ராஜ் யத்தினிலே
ஒளிரும் நவாவ ரணங்களிலே
உளதே வதைகள் உடனுள்ளாய்!

இடையில் உளமுக் கோணத்தில்
இருக்கும் மூன்று கோடுகளில்
அடைந்து நித்யா தேவதைகள்
ஐந்தொடு பத்தாய் உள்ளார்கள்!

நடுவில் உள்ள பிந்துவிலே
பதினா றாவது நித்யையென
வடிவாய் அமர்ந்து நீ உள்ளாய்!
வாழ்த்தி உன்னைத் தொழுதிடுவேன்!

இடைமுக் கோணத் துடனிணைந்த
எட்டு முக்கோ ணங்களிலே
இடம் கொண் டிருந்து தேவியினைக்
காட்டும் குருவை வணங்கிடுவேன்!

சித்தர், திவ்யர், மானவராய்த்
திகழ்பவர் அவர்கள் ஈரெண்மர்!
அத்தகு குருவடி வினளாக
அமர்ந்தவள் நீஎனப் போற்றுகிறேன்!

முதலா வரண பூபுரத்தின்
முக்கிய் நல்வெளிக் கோட்டையிலே
இதமருள் சித்தி தேவதைகள்
என உள பதின்மரை வணங்கிடுவேன்!

எழிற்பூ புரநடுக் கோட்டையிலே
இருக்கும் எட்டு மாதாக்கள்
கழல்கள் போற்றிப் பணிந்தென்றன்
கைகள் குவித்து வணங்கிடுவேன்!

பூபுர உட்புறக் கோட்டையிலே
பொலியும் பத்து முத்திரைநல்
தேவதை களையும் என்னுடைய
சிந்தை குளிர வணங்கிடுவேன்!

இரண்டா வது நல் ஆவரணம்
இலங்கும் தளங்கள் பதினாறை
ஒருங்கே கொண்டு நித்யகலா
தேவதை யராக ஒளிர்கிறது!

இலங்கும் மூன்றும் ஆவரணம்
எட்டுத் தளங்கள் உடையதுவாய்,
நலம் சேர் மன்மத சக்திகளாய்
நான்கொடு நான்கைக் கொண்டுளது!

நான்கா வதுநல் ஆவரணம்
நான்கொடு பத்துமுக் கோணங்கள்
பாங்குடன் அமையநற் சக்திகளாய்ப்
பதினான் கொளிரத் திகழ்கிறது!

ஐந்தா வதுநல் ஆவரணம்
ஐயிரு முக்கோ ணங்களெனச்
சுந்தரத் தேவியர் பதின்மரினைச்
சுமந்த படிநன் கொளிர்கிறது!

ஆறா வதுநல் ஆவரணம்
ஆறுடன் நான்குமுக் கோணமெனச்
சீருயர் பத்து யோகினியர்
சிறப்புடன் இலங்க மிளிர்கிறது!

ஏழா வதுநல் ஆவரணம்
எண்முக் கோணங் களினாலே

வாழ அருளும் இருநான்கு
வாக்தே விகரணைக் கொண்டுள்ளது!

இலங்கும் ஒருமுக் கோணமென
எட்டாவதுநல் ஆவரணம்
துலங்கும் மூன்று யோகினிகள்
சுடர அமைந்து விளங்குவது!

இந்த ஆவ ரணங்களிலே
இருக்கும் தேவியர் அனைவரையும்
வந்துநல் லருளைப் புரிகவென
வாழ்த்தி வணங்கித் தொழுதிடுவேன்!

பாங்குடன் உலகை வாழ்விக்கும்
பராபரை யாக விளங்குகிற
ஓங்கிய தாய்நீ உள்ள இடம்
ஒன்பதா வதுநல் ஆவரணம்!

சித்தம், நாதம், பிந்து, கலா
ஜீவன், காலம், திருநாமம்
மெத்த ஞானம், மேவு குலம்
மிளிரும் உன்றன் ஆஸனமாம்!

ஒன்பது அட்ச ரங்களுள
உயர்ந்த பாலா மந்திர மாம்
நன்னய வடிவின யாள்நின்று
நாளும் உலகைக் காக்கின்றாய்!

ஒன்பது சக்க ரங்களிலும்
உயர்சிவ சக்தி தம்பதியாய்
மன்பதை முற்றும் காப்பாற்ற
மாண்புடன் தாய்நீ வீற்றிருப்பாய்!

நந்தி, மன்மதன், மனு, குமரன்
நான்முகன், நாரணன், பரமசிவன்,
இந்திரன், சந்திரன், அளகேசன்
எழிற்றமிழ் அகத்தியர், துர்வாசர்,

என்றும் உன்றன் பதமலரை
ஏத்தித் துதித்துப் புகழ் பாடி
நன்றெனும் நிலையை அடைந்தனராம்!
நானும் உன்னை வணங்குவனே!

ஆத்மா, மாயா, சிவம் என்றே
ஆகிய மூன்று தத்துவத்தின்
நேர்த்தி வடிவம் என இங்கே
நின்று நல்லருள் புரிகின்றாய்!

எங்கும் நிறைந்த பிரம்மத்தின்
இயங்கும் இயக்கும் சக்தியெனத்
தங்கி யிருந்து குறையின்றித்
தாரணி யாவும் காக்கின்றாய்!

தாயே ஸ்ரீலலி தாம்பிகையே!
தாழ்ந்து பணிந்து வணங்கிடுவேன்!
நீயே எனக்குத் துணையம்மா!
நின்தாள் எனக்குச் சரண் அம்மா!

நங்கை நல்லூர் உறைபவளே!
நல்லன எல்லாம் தருபவளே!
எங்கும் பரவி இருப்பவளே!
என்றும் உன்னை வணங்கிடுவேன்!

வலது காலைத் தொங்கவிட்டு
வாகாய் இடக்கால் மடித்துள்ளாய்!
நிலவை உன்றன் க்ரீடத்தில்
நேர்த்தி மிகவே சூடியுளாய்!

நற்கா துகளில் குண்டலமும்
நடுநெற் றியிலே திலகமதும்
பொற்கா சொளிரும், மாலையதும்
பொலியும் மங்கல நாணதுவும்

மின்னும் இரத்தின அட்டிகையும்
மேவும் வயிரப் புல்லகமும்
கண்ணைப் பறிக்கும் மூக்கணியும்
காலில் தங்கச் சதங்கைகளும்

வளையல்கள் நான்கு கரங்களிலும்
வண்ண நல் இடையில் மேகலையும்
விளங்க அமர்ந்த என் தாயே!
வேண்டி உன்னைத் தொழுகின்றேன்!

கண்ணின் வழியுனைப் பார்க்கின்றேன்!
காதால் உன்குரல் கேட்கின்றேன்!
பண்ணின் வாயால் பாடுகிறேன்!
பணிவோ டுன்னைப் பரவுகிறேன்!

சிந்தையி னாலுனைச் சேவித்தேன்
செய்யும் ஒலியால் நேசித்தேன்
மந்திரத் தாலுனை விந்தித்தேன்!
யந்திரத் தாலுனைச் சந்தித்தேன்!

சிந்தும் ஒளியின் பொற் குன்றாய்ச்
சிரிக்கும் சிலையாய் நிற்கின்றாய்!
எந்தை தாயாய் இருக்கின்றாய்
இன்றும் என்றும் அருள் வாயே!

ஸர்வ மங்களா ஸ்ரீராஜ
ராஜேஸ் வரியே என் தாயே!
நிர்மல மான நெஞ்சுடனே
நின்னைத் தொழவே அருள்வாயே!

அவதார நோக்கம்

உலகிலுள்ள நாடுகளுள் பாரதநாடு மிகப் பழமையான நாடு. அநேகவிதமான கலாசாரங்களையும், பண்பாட்டுக்களையும் ஆன்மிகத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ள நாடு. இன்றையதினம் மதச் சார்பின்மை என்று சொல்லும் சொல்லுக்குப் பலவிதமான பொருள்களை அரசியல்வாதிகள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். மதத்தொடர்பற்றது என்றும், அனைத்து மதங்களையும் சமமாக நோக்குவது என்றும் சொல்கிறார்கள்.

நம்முடைய பாரதநாட்டில் பழங்காலம் முதல் இந்தக் கொள்கை இருந்து வருகிறது. அனைத்து மதத்தினரையும் அரவணைத்துக் கொண்டு, அவரவர்கள் தங்கள் சிந்தனையில் தோன்றும் எண்ணங்களுக்கு ஸ்வாதந்திரியம் அளித்து அவர்கள் அநுபவத்தைப் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வது என்பது பாரதநாட்டின் ஒரு விசேஷமான அம்சம்.

நியாய மதம், வைசேஹிக மதம், மீமாம்சிக மதம், சாங்க்ய மதம், சாருவாக மதம், பௌத்த மதம், ஜைன மதம் போன்றவை பழங்காலத்தில் பரஸ்பரம் விரோதக் கொள்கையோடுக்கூட இருந்தாலும் இந்தப் பாரத நாட்டில் ஒரே காலத்தில், ஒரே தேசத்தில் இருந்திருக்கின்றன. பிற்காலத்தில், முகம்மதியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், போர்த்துகீசியர்கள், பிரிட்டிஷ்காரர்கள் போன்றவர்களும் இந்தியாவில் இருந்து ராஜ்ஜியபாரம் செய்திருக்கிறார்கள்.

இப்பொழுது பலவிதக் கொள்கைகளைக் கொண்ட அரசியல் கட்சிகளும் நாட்டில் இருக்கின்றன. ஆகவே எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இந்தியாவில் இப்பொழுதும் இந்திய கிறிஸ்துவர்கள், இந்திய முஸ்லீம்கள், இந்திய பார்ஸிக்காரர், இந்திய ஹிந்துக்கள் என்ற பெயருடன் இந்தியத் தேசியத் தொடர்புடன் பல மதத்தைச் சார்ந்தவர்கள் இருந்து வருகிறார்கள்.

ஆகவே பாரதம் எல்லாச் சமய மக்களையும் ஏற்றுக்கொள்கிறது. இதுதான் அனைத்து மக்களையும் இணைக்கும் நாடு. புராண காலங்களிலே பாரத நாட்டில் பூலோகத்திலுள்ள மனிதர்கள், தேவலோகத்திலுள்ள தேவர்கள், அசுரலோகத்திலுள்ள அசுரர்கள் போன்ற அனைவருமே இந்தப் பாரதநாட்டில் இருந்திருப்பதாகத் தெரிகிறது. எப்பொழுது பாரத நாட்டுக் கலாசாரத்திற்கு, தத்துவத்திற்கு, ஆன்மிகத்திற்கு, உண்மைக்குக் குறைவு ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் இறைவனுடைய அவதாரமோ, மகான்களுடைய சங்கல்பமோ, அதீதமான ஒரு சக்தியோ தோன்றிக் கலாசாரத்தை, ஆன்மிகத்தை, சாசுவத உண்மைகளை நிலைநாட்ட முயற்சி எடுத்திருக்கிறது. இப்படித்தான் பாரதநாட்டிலே பல அரசர்களுடைய ஆட்சிகளெல்லாம் நடைபெற்று முடிவடைந்தன. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளுக்கு எப்பொழுது மனிதன், அரசன், அரசாங்கத்தை நடத்துபவர்கள் அடிமை ஆகிறார்களோ அப்பொழுதெல்லாம் வரலாறு மாறுகிறது. இப்படி இருந்தவர்களுடைய சகாப்தம் முடிவடைகிறது. தசரத சக்கரவர்த்தி பத்துத் திக்கிலும் ரதம் செலுத்தி வெல்லக்கூடிய சக்கரவர்த்தி. கைகேயியென்னும் பெண் மோகத்தினால், அளித்த வரத்தினால் அவன் வரலாறு முடிந்தது. இராவணன் கயிலயங்கிரியையே ஆட்டி வைத்தவன். அத்தனை தேவர்களும், அசுரர்களும் அவனுடைய கட்டளைக்காகக் காத்திருந்தார்கள். அவ்வளவு வலிமை பொருந்திய இராவணன் சீதாபிராட்டியின் நிமித்தமாக அழிந்துவிடுகிறான். இது பெண்ணாசைக்கு எடுத்துக்காட்டு.

அடுத்தபடியாகப் பஞ்சபாண்டவர்கள், துரியோதனாதியர் இருவரும் சித்தப்பா, பெரியப்பாவினுடைய குழந்தைகள். மண்ணாசையின் நிமித்தத்தினால் மகாபாரதப்போர் மூண்டு, கோடிக்கணக்கான மக்கள் மடிந்தார்கள். இப்படித்தான் வெளிநாட்டவர்கள் நம்முடைய நாட்டிலிருந்து ராஜ்யபாரம் செய்து பொன்னையும், நவரத்தினங்களையும், கோடிக்கணக்கில் எடுத்துச் சென்றதின் பயனாகத் தான் சுதந்திரதாகம் ஏற்பட்டு, அந்நிய ராஜ்யங்களையெல்லாம் அகற்றி ஸ்வராஜ்யத்தைப் பெற்று இன்று வாழ்கிறோம்.

இதேபோல் நரகாசுரன் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை மூன்றிலும் பேராசைப்பட்டு, நாட்டுமக்கள் அனைவருக்கும் துன்பத்தைக் கொடுத்தான். அப்பொழுது கண்ணபிரான், சத்தியபாமை என்ற சக்தியுடன் ப்ராக்ஜோதிஷம் என்று சொல்லும் நகரத்துக்குச் சென்று, நரகாசுரனைக் கொன்று பல நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட பெண்களையெல்லாம் விடுவித்தார். அதுபோலத்தான் இப்போதும் எல்லாவித ஆசைகளுடன் பாரதநாட்டு அரசியல் நடைபெற்று வருகிறது. இந்தத் தீயசக்திகளிலிருந்து மக்களையும், நாட்டையும், கலாசாரத்தையும், பண்பாட்டையும் மீட்டு நாட்டில் நல்லாட்சி நிலவவும், மக்களுடைய வாழ்க்கையில் நல்ல ஒளிவளங்கள் பெருகவும் தீபாவளிப் பொன்னாளான இந்நன்னாளில் உலகுக்கெல்லாம் குருவாக, பகவானாக இருக்கும் கண்ணபிரானுடைய அருள் பரிபூரணமாக இருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம், ஆசிர்வதிக்கிறோம்: ஜய ஜய சங்கர.

ஜகத்குரு
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் —



வினையிலே விளைந்தது

கிருபானந்தவாரி



கற்புக்கு அரசியாகிய சீதா தேவியை இராவணன் பத்து மாதங்கள் சிறையில் வைத்து வேதனைப்படுத்தினான். இரக்கமில்லாத அரக்கியர் பலர் கத்தி, கடாரி, கதை இருப் புலக்கை முதலிய பல ஆயுதங்களை ஏந்தி, பிராட்டியாரைச் சுற்றி நின்று துன்புறுத்தினார்கள். அந்த அரக்கியர் பேய் முகம், நாய் முகம், கழுதை முகம், பன்றி முகம் உடையவர் களாய்த் தேவியைத் துன்புறுத்தினார்கள்.

''சீதை! ஏன் அழுகின்றாய்? உனக்கு என்ன குறை? எங்கள் மகாராஜா உன்னை ஆசைப்படுகின்றார். நாங்கள் எவ்வளவு பெரிய உடம்புடன் இருக்கின்றோம். 30 முழம் புடைவை ஒரு சுற்றுக்கு வரும்.

''எங்களைக் கண்டு ஆசைப்படாமல் கொடி போல் இருக் கும் உன்னைக் கண்டு ஆசைப்பட்டு உயிரையே விடுகின் றார். எங்கள் மகாராஜா வந்தால் வாருங்கள்; வணக்கம் என்று சொல். உன் கண்களைப் பிடுங்கிக் கழுகுகளுக்குப் போடுவோம். உன்னைத் துவையலாகச் செய்து தின்போம்'' என்று இடையறாது அந்தப் பெண் தெய்வத்தை வாட்டி வதைத்தார்கள்.

தன் விதியை நொந்து நைந்து உண்ணாமலும், உறங்கா மலும் கிடந்து அழுது துன்பத்தில் துடித்தாள்.

அரிது போகவோ விதி வலி கடத்தல் என்றஞ்சி
பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாரா
சுருதி நாயகன் வரும் வரும் என்ப தோர் துணி வால்
கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணால்

தேவி தனக்குள் பலப்பல நினைந்து கண்ணீர் வடித்து, உள்ளம் துடித்து உலைகின்றாள்.

இராமமூர்த்தி மழை மேகம் போன்ற நீலவண்ணம் பொருந்தியவர். அவருடைய கரங்கள், திருவடிகள் செக்கச் செவேல் என்று பவள நிறத்துடன் அழகுடன் விளங்கும். அப்பெருமானைச் சீதா தேவி எண்ணுந்தோறும் எண்ணுந் தோறும் கண்ணீர் ஆறாய்ப் பெருகி உடுத்திய புடைவையை நனைக்கும். உடம்பிலுள்ள வெப்பத்தால் உலரும். இவ்வாறு நனைவதும், உலர்வதுமாக மாறி மாறிச் செயல்படும்.

துப்பினால் செய்த கைகொடு கால்கொடு துளி மஞ்சு
ஒப்பினான் தனை நினைதொறும் நினைதொறும் நெடுங் கண்கள் உமிழ்ந்த
அப்பினால் நனைந்து ஆருயிர் யாக்கை
வெப்பினால் புலர்ந்து ஒரு நிலை உறாத மென் துகிலான்

இவ்வாறு வேதனை வெள்ளத்தில் மூழ்கித் தத்தளித் தாள். கணவனை மான் பிடித்துத் தருமாறு வற்புறுத்த வில்லையானால் இத்துன்பம் வந்திருக்காது. பெண்ணாகப் பிறந்தவர்கள் கணவனிடம் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்கக் கூடாது.

கண்ணை இமை காப்பது போல் என்னைக் காத்த இலட்சுமணனை மனம் நோக வைது அனுப்பினேனே! அந்த வினை இப்போது என்னைச் சூழ்ந்து இடிக்கின்றது. அண் ணாவைத் தேடிச் சென்ற இலட்சுமணர் அண்ணனைச் சந் தித்தாரோ இல்லையோ?

சிறகு அறுபட்டு வீழ்ந்த ஜடாயு பகவான் என்னை இரா வணன் கவர்ந்து கொண்டு வந்த செய்தியைத் தன் மக் களிடம் சொல்லவில்லையோ! முற்பிறப்பில் செய்த வினை மூண்டு விளையாடுகின்றது என்று பலப்பல சிந்தித்து, நொந்து, வெந்து உணவும், உறக்கமும் இன்றித் துன்பக் கடலில் ஆழ்ந்திருந்தாள்.

இவ்வாறு பத்து மாதங்கள் கழிந்தன. போர் மூண்டது. இராவணன் மாண்டனன். இராமருடைய கோதண்டம் வெற்றி பெற்றது. அப்போது தொலைபேசி இல்லாமையால் யார் வென்றது என்று அறியாமல் திகைத்திருந்தாள்.

அநுமார் பிராட்டியாரை அணுகி, வணங்கி, ''ஸ்ரீ ராம ஜெயம்'' என்ற அஞ்செழுத்தைக் கூறினார். கணவனார் வெற்றி பெற்றார் என்று அறிந்த சீதை அடைந்த மகிழ்ச் சிக்கு அளவேயில்லை.

''அநுமனே! எம்பெருமானுக்கு வெற்றி தேடித் தந்த உன் னைத் தலையினால் வணங்கத் தகும். உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள், தருவேன்'' என்று உலகமாதா உரைத் தாள்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த அநுமார், ''அம்மா! நான் திரு மணமாகாத பிரம்மச்சாரி. எனக்கு இந்த உலகத்தில் வேண் டியது ஒன்றும் இல்லை. இந்தப் பத்து மாதங்களாகக் கருணை நிறைந்த தேவரீரை அப்பளம் போல் பொரித்த இந்த இரக்கமில்லாத அரக்கியர்களை மண்ணெண்ணெய் விட்டுக் கொளுத்த உத்தரவுதர வேண்டும்'' என்று வரம் கேட்டார்.

மற்றவர்களாயின் பெட்ரோலையும் சேர்த்து விட்டுக் கொளுத்து என்று கூறியிருப்பார்கள். அந்த அரக்கியர்கள் நடுங்கி, ஒடுங்கி ஜானகியைச் சரண் புகுந்தார்கள்.

அருள் உள்ளம் படைத்த அன்னை வைதேகி, ''அநு மானே! இந்தப் பெண்கள் எனக்கு இடர் செய்யவில்லை. நான் நுகர்ந்த துன்பத்திற்குக் காரணம் நான் செய்த வினையேயாகும். இவர்கள் ராவணனுடைய ஏவலுக்கு அடங்கி இடர் செய்தார்கள். இவர்களை நொந்து என்ன பயன்? வினையைத்தான் நோவ வேண்டும். இவர்கள் கூனியைவிடக் கொடியவர்கள் அல்லர். என்னுடைய உணவை உண்டு, என்னுடைய உடையை உடுத்து, என் னுடைய வீட்டில் வாழ்ந்த கூனி மகாமேருகிரி போன்ற கொடுமையைச் செய்தாள். நான் நினைத்தால் அந்தக் கூனி சாம்பல் ஆகியிருப்பாள். அவள் செய்த பெருங்குற்றத் தையே மன்னித்துக் கானகம் எய்தினேன். மகனே! இவர் களை மன்னித்து அருள் செய். மன்னிக்கின்றவன்தான் மனிதரில் தெய்வமாகும்.'' அம்மையின் அருளுரையைக் கேட்ட அரக்கியர்கள் அழுது தொழுதார்கள்.

''யானிழைத்த வினையினா லிவ்விடர்
தானடுத்தது தாயினும் அன்பினோய்
கூனியில் கொடியார் அலரே இவர்
போன காரியம் எண்ணலை புந்தியோய்''

பக்தி மார்க்கம்

ஜகத்குரு ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் இடையே மாபெரும் மகாபாரதப் போர் தொடங்கும் சமயம். அப்போது போர்க்களத்தில் யுத்தம் புரிய அணிவகுத்து நிறுத்தியுள்ள இரு சாராரின் படைகளையும் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அர்ஜுனனுக்கு ஏற்பட்டது. தன் தேரோட்டியாக அமர்ந்திருந்த பகவான் கிருஷ்ணனை, இரு படைகளின் இடைவெளியில் தேரினைக் கொண்டு போய் நிறுத்தும்படி வேண்டினான். அப்படியே செய்தார் பகவான்.

படைகளை உற்று நோக்கிய பார்த்தன் கண் கலங்கினான். நெருங்கிய உறவினரும், ஆசாரியர்களும், நண்பர்களும், எண்ணற்ற வீரர்களும் போர் செய்ய ஆயத்தமாக அணிவகுத்து நிற்பதைக் கண்டு, அர்ஜுனனின் மனத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

தேரோட்டியான கண்ணபிரானை நோக்கி, கண்ணீர் மல்க, ''நெருங்கிய சுற்றத்தாரையும், குருமார்களையும், நண்பர்களையும் கொன்று ராஜ்யத்தை அடைந்து, சுகங்களை அநுபவிக்க நான் விரும்பவில்லை; நான் போர் செய்யப் போவதில்லை'' எனக் கூறினான்.

கண்ணன் பார்த்தனைத் தேற்றிப் பல தத்துவங்களை உபதேசித்தார். அர்ஜுனனை நிமித்தமாகக் கொண்டு உலக மக்கள் அனைவருக்கும் பகவான் உபதேசித்ததே 'பகவத் கீதை' எனப் புகழெய்தியது. பகவத் கீதையின் மேன்மை வியாஸ முனிவர் இயற்றியுள்ள மஹாபாரதம் என்ற மாபெரும் இதிஹாஸத்தில், ''எந்த பகவத் கீதை பத்மநாபனின் (பகவான் கிருஷ்ணனின்) வாயிலிருந்து வெளிப்பட்டதோ அதைப் பாட வேண்டும்; பிற சாத்திரங்களை ஆராய்வதினால் கிடைக்கக்கூடியதைக் காட்டிலும் அதிகப் பயன் கீதையைப் படிப்பதினால் கிட்டும்'' என்று ஒரு செய்யுளில் கூறப்படுகிறது. ஆதிசங்கர பகவத் பாதர், ''கங்கை நதியின் நீரின் சில திவலைகளையேனும் பருக வேண்டும். பகவத் கீதையின் சிறு பகுதியேனும் படிக்க வேண்டும்'' என்று தம் பஜகோவிந்தம் என்ற பாமாலையில் கூறியுள்ளார்கள்.

வேத சிரங்களான உபநிடதங்களின் ஸாரமே பகவத் கீதையாம். பதினெண் அத்தியாயங்களைக் கொண்ட கீதை என்ற யோக சாத்திரத்தில் கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் என்ற மூன்று வகை மார்க்கங்கள் உபதேசிக்கப்பட்டுள்ளன. அதாவது கர்மானுஷ்டானங்களை முறைப்படி செய்து, அதன் பயனை ஈச்வரனுக்கு அர்ப்பித்து, சித்த சுத்தியடைந்து முக்தி நிலை பெறுவது ஒரு வழி. பகவானிடம் பக்தி கொண்டு, அவரைச் சேவித்து, அவன் புகழ் பாடி, அவன் திருவடியில் லயித்து மோட்சம் அடைவது ஒரு வழி. பிரம்மஞானம் அடைந்து பரமனும், தானும் ஒன்றென அறிந்து மோட்சம் அடைவது மூன்றாம் வழி.

பகவான் பார்த்தனுக்குப் பக்தி யோகத்தை உபதேசிக்கும் போது -

''யோ யோ யாம் யாம் தனும் பக்த: ச்ரத்(3)த(4)
யார்சிது மிச்சதி;
தஸ்ய தஸ்ய அசலாம் ச்ரத்(3)தா(4)ம் தாமேவ
வித(3)தா(4)ம் யஹம்.''

எனக் குறிப்பிட்டுள்ளார். (இதன் பொருள் : ''எவன் எவன் எந்த எந்த உருவத்தை மனத்தில் தியானித்து, பக்தி சிரத்தையுடன் பூஜிக்கின்றானோ அவ்வழியில் அவரவருடைய நம்பிக்கையை நான் உறுதி செய்கின்றேன்.'')

சிற்றறிவுள்ள சாதாரண மானிடர் உய்வதற்கான சுலபமான வழி பக்தி மார்க்கமேயாகும். இதனையே ஸ்ரீ பகவந்நாம போதேந்திரர் தமது 'நாம ஸித்தாந்த கௌமுதி', 'நாம ரசாயனம்' என்ற நூல்களில் புகழ்ந்துள்ளார். நாதோபாசனையான சங்கீதத்தின் மூலம் பகவானைப் பூஜித்துப் பேரானந்தம் அடைந்த மகான்கள் பலருள் ஸ்ரீ தியாக ப்ரும்மம், புரந்தரதாஸர், துகாராம் போன்றவர்களின் பெயர்கள் நம் மனத்தில் ஆனந்த பரவசத்தை எழுப்புகின்றனவன்றோ!

இத்தகைய எளிதான பக்தி மார்க்கத்தில் சலனமற்ற மன அமைதி, நல்லொழுக்கம், விருப்பு வெறுப்பின்மை, சமபுத்தி முதலிய நற்பண்புகளுடன் ஈடுபடுதல் அவசியமாகும். பகவானை விநாயகனாகவோ, முருகனாகவோ, பரமசிவனாகவோ, அம்பிகையாகவோ, நாராயணனாகவோ, ஆஞ்சநேயனாகவோ, குருமூர்த்தியாகவோ உபாசிக்கலாம். பக்தியில் ஈடுபடும் மனிதன் ஒரு விளக்குக்கு ஒப்பானவன். அவ்விளக்கில் உள்ள திரி மனிதனின் மனம். அத்திரி நனைந்து எரிவதற்கான எண்ணெயே உள்ளமுருகிய பக்தி. அந்த விளக்கினில் பிரகாசிக்கும் ஒளிச்சுடர் பகவான். எண்ணெய் முழுவதையும் ஈர்த்து, எரிந்து முடியும்போது அதிக ஒளியுடன் திரி ஒளிச்சுடரில் ஒன்றி விடுவதே பக்தன் முக்தியடையும் நிலை. இதற்கு ஓர் உதாரணம் தரலாம்.

தாயிடம் பக்தி, தந்தையிடம் பக்தி, கணவனிடம பக்தி, குருவிடம் பக்தி முதலியன பூண்டு உய்ந்தவர்களும் உண்டு. பகவத் பக்தியால் மேன்மையடைந்த பக்தர்கள் பலரின் சரித்திரங்கள் நம் நாட்டின் இதிஹாசங்களிலும், புராணங்களிலும் காணக் கிடைக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்குக் காண்போம்.

பண்டைக் காலத்தில் நம் பாரத நாட்டின் வட பகுதியினை உத்தானபாதன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு இரு மனைவியர். மூத்த மனைவியின் மகன் துருவன். காலப்போக்கில், அரசன் மூத்த மனைவியையும், அவளது மகனையும் வெறுக்கலானான். ஒரு நாள், இளைய மனைவியின் மகன் மன்னனின் ஒரு தொடையின் மீது உட்கார்ந்திருந்தான். அப்போது துருவன் அங்கு வந்தான். அவன் தன் தந்தையின் மற்றொரு தொடையின் மீது உட்கார முயற்சித்தான். அருகிலிருந்த இளைய அரசி துருவனைத் தடுத்து ஏசினாள். கண்ணீர் மல்க, துருவன் தன் தாயிருக்குமிடம் சென்று, நடந்ததைக் கூறி அழுதான். தாய் மகனைத் தேற்றி, தாம் அரசனின் அன்பு பெறத்தக்க புண்ணியம் செய்யவில்லை என நினைத்து வருந்தினாள்.

சிறிது காலம் கழிந்தது. ஒரு நாள் நாரத முனிவர் துருவனைக் கண்டு, அவனுக்குப் பகவான் நாராயணன் மீது பக்தியை ஊட்டி, மந்திரோபதேசம் செய்து விட்டுச் சென்றார். துருவனுக்கு நாராயணனை எப்படியாவது நேரில் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாகியது. துருவன் கானகம் அடைந்து, நாராயணனைத் தியானித்துக் கடும் தவம் மேற்கொண்டான். பல ஆண்டுகள் தவம் செய்தான். ஒரு நாள் ஸ்ரீ நாராயணன் துருவனின் முன் தோன்றி அவனுக்கு அனுக்ரகம் செய்து மறைந்தார். துருவன் நகரத்துக்குத் திரும்பினான். வழி முழுதும் மக்கள் அவனை வரவேற்றனர். தாயிருக்குமிடம் சென்று அன்னையை வணங்கினான். துருவன் தந்தையைக் காணச் சென்றான். உத்தானபாத மன்னன் தம் பிழையை உணர்ந்து, துருவனை வரவேற்று, சிங்காதனத்தில் அமர்த்தினான். விண்வெளியில் இப்போதும் நிலையான இடம் பெற்று துருவ நட்சத்திரமாக ஒளி விடுகிறான்.

பகவத் பக்தியால் மேன்மையடைந்த மற்றோர் இளைஞன் பிரகலாதன். ஹிரண்யகசிபு என்ற அசுர அரசனின் மகன். இந்த அரசன் தேவர்களைத் துன்புறுத்தியதுடன் பகவானையும் வெறுத்தான். குழந்தைப் பருவத்திலேயே பிரகலாதனின் மனத்தில் பகவானிடம் பக்தி பெருகி வந்தது. பிரகலாதன் கல்வி கற்கும் போது அவனது பகவத் பக்தியை மாற்றுவதில் ஹிரண்யகசிபு பலவாக முயற்சித்தான். ஆனால் மகனின் மனத்தை மாற்ற முடியவில்லை. பாலகனைக் கொல்ல எத்தனித்தும் முடியவில்லை. ஒரு நாள ஹிரண்யகசிபு மகனை அவைக்கு அழைத்து, ''உன் ஸ்ரீஹரி எங்கடா இருக்கின்றான்?'' என்று கேட்டான். பிரகலாதன் ''பகவான் ஹரி எங்கும் இருப்பான். தூணிலுமிருப்பான், துரும்பிலுமிருப்பான்'' என்று சாந்தமாகப் பதில் அளித்தான். ஹிரண்யகசிபு சீற்றத்துடன் சபா மண்டபத்தில் உள்ள ஒரு தூணைக் காட்டி, ''இத்தூணில் இருப்பானா உன் பகவான்?'' என்று கூறியபடி அத்தூணைக் காலால் உதைத்தான். இடி முழக்கம் போன்ற கர்ஜனையுடன், தூணிலிருந்து சிங்கமும், மனிதனும் கலந்த உருவில் பகவான் நரசிம்மமாக வெளிப்பட்டு, ஹிரண்யகசிபுவைச் சம்ஹரித்தார். பகவான், இளைஞனின் பக்தியை மெச்சி அழகிய மணவாளனாகக் காட்சியளித்து, ஆசீர்வதித்து மறைந்தார்.

மிருகண்டு முனிவரின் புதல்வனான மார்க்கண்டேயன் சிவபக்தன். அவனுக்கு விதிக்கப்பட்ட ஆயுட்காலம் 16 ஆண்டுகளே. 16-ஆம் ஆண்டு முடிவடையும் தருவாயில், ஒரு நாள் மார்க்கண்டேயன் சிவன் கோயிலுக்குச் சென்று ஈசனைத் துதிக்கலானான். அவனது மரண காலம் நெருங்கியது. காலனின் தூதுவர் மார்க்கண்டேயனின் உயிரைக் கொண்டு போக வந்தனர். சிவலிங்கத்தினருகே நின்றிருந்த மார்க்கண்டேயனை அணுக முடியாது திரும்பிய தூதர்கள் யமதர்மனிடம் சென்று தகவலைத் தெரிவித்தனர். உடன் யமதர்மனே விரைவில் வந்து தமது பாசக் கயிற்றினால் மார்க்கண்டேயனைக் கட்ட முயற்சிக்கும் போது, பயந்த சிறுவன், சிவலிங்கத்தை இறுகத் தழுவிக் கொண்டான். காலன் பாசக் கயிற்றால் சிறுவனையும், சிவலிங்கத்தையும் சேர்த்துப் பிணைக்கலானான். சிவலிங்கத்திலிருந்து காலகாலனான பரமேச்வரன் வெளிப்பட்டு, காலனான யமனைக் காலால் உதைத்துத் தள்ளினார். நடுங்கி நின்ற மார்க்கண்டேயனை என்றுமே 16 ஆண்டு இளைஞனாக இருக்க அருள் பாலித்தார். இலிங்கத்தினுள் மறைந்தார். இந்த நிகழ்ச்சியை விளக்குவதாக அமைந்துள்ள தலமே திருக்கடையூர்.

இவ்வுலகில் கொடியதான காலத்தையும் பகவத் பக்தியால் வெல்லலாம். மேலும் மேன்மையான நிலையையும் பக்தியால் அடைதல் எளிது என்பதைத் துருவன், பிரகலாதன், மார்க்கண்டேயன் ஆகியோரின் சரித்திரங்களிலிருந்து தெளிவுபடுகிறது. எந்த பகவான் கிருஷ்ணன் எந்த



எந்த உருவத்தில் யார் யார் எப்படி எப்படிக் கடவுளைத தியானித்து வழிபடினும் அவர்களை அவர்களது வழியில் அவர்களின் நம்பிக்கையைத் தீவிரமாக்குவதாக அர்ஜுனனிடம் கூறினனோ, அதே பகவான், பகவத் கீதையின் ஒன்பதாம் அத்தியாயத்தின் 26-ஆம் செய்யுளில், ''யாரேனும் ஒரு இலையையோ, பூவையோ, பழத்தையோ, சிறிது தண்ணீரையோ பக்தியுடன் எனக்கு அளித்தால், அவற்றை நான் ஏற்கின்றேன்'' என்று சொல்கின்றார்.

கஜாரண்யம் என்று புகழுற்ற சிவத்தலம், காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையே அமைந்து திருவானைக்கா எனப் புகழ் பெற்றது. இங்கு வேத உருவாக நிற்கும் வெண்ணாவல் மரத்தின் கீழ் வையகத்தின் அடிப்படையான பரமேச்வரன் இலிங்கத்தின் வடிவில் பிரகாசிக்கிறான். வெகு காலத்துக்கு முன், திருவானைக்கா ஜம்புலிங்கத்திற்கு சிவ பக்தியுள்ள ஒரு யானை, தினமும் காவிரியிலிருந்து தண்ணீரைத் தன் துதிக்கையில் நிரப்பி வந்து, பல காலம் அபிஷேகம் செய்து வந்து முக்தியடைந்தது. அதே சிவலிங்கத்தின் மீது வெயில் படாதிருக்கச் சிலந்தியொன்று தினமும் கூடு கட்டி வந்து, இறுதியில் மரித்த பின், மறுபிறவியில் அரச குமாரனாகப் பிறந்து, சிவன் கோயில் திருப்பணிகளைச் செய்த விவரம் ஆனைக்கா புராணத்தில் சொல்லப் பட்டுள்ளது. சபரீ என்ற காட்டில் வாழ்ந்த பெண்மணி பழங்களை அளித்து இராமனின் அருளைப் பெற்றாள்.

இந்த யானை, சிலந்தி ஆகியவற்றைக் காட்டிலும், பகவானை, நாராயணனையோ, பரமேச்வரனையோ மனதில் தியானித்து, அதனாலேயே உய்ந்தவரின் கதைகள பல உள. கஜேந்திரன் என்ற மாபெரும் யானை கானகத்தின் நடுவேயுள்ள ஓர் ஏரியில் இறங்கி மூழ்கியெழும் போது அதன் காலை ஒரு மாபெரும் முதலை கவ்வியிழுக்க, கஜேந்திரன், ''ஆபத் பாந்தவ! அநாத ரட்சக! நாராயணா!' என்று அலற, பகவான் வேகமாக வந்து முதலையைச் சக்ராயுதத்தால் அறுத்து, யானையைக் காத்த கதையை யாவரும் அறிவர்.

இராஜசிம்மன் என்ற பல்லவ மன்னன், காஞ்சீபுரத்தில் சரித்திரப் புகழ் பெற்றுள்ள கைலாசநாதர் ஆலயத்தைக் சட்டி முடித்துக் குடமுழுக்குச் செய்ய நாள் தீர்மானம் செய்தான். குறிப்பிடப்பட்ட நாளுக்கு முன்னிரவில், மன்னனுக்குக் கனவில் ஈசனார் தோன்றி, ''நமக்கு ஒருவன் உள்ளத்தால் கோயிலெழுப்பி, முடித்து, உள்ளத்தாலேயே மறு தினம் குடமுழுக்குச் செய்ய இருப்பதால், கைலாசநாதரின் ஆலயக் கும்பாபிஷேகத்தை வேறு ஒரு தினத்தில் வைத்துக் கொள்க'' எனக் கூறி மறைந்தது பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள பூசலார் நாயனார் வரலாற்றில் காணலாம்.

இப்படியாக நீண்ட காலம் பகவானைத் தியானம் செய்தோ, வாக்கால் துதித்தோ, ஆபத்காலத்தில் நினைத்தோ, கிரியைகளால் பகவானைச் சேவித்தோ பலன் பெற்ற முனிவர், மனிதர், விலங்கு, பூச்சி போன்ற இனங்களைச் சேர்ந்தோர் பலர். ஆனால் தன் ஆயுட்காலம் முழுதும் பிறருக்குக் கெடுதியே செய்து வந்து, பகவத் பக்தியில் ஈடுபடாத ஒரு கொடியவன் தன் கடைசிக் காலத்தில், சில நிமிடத் துளிகளில் இறைவனை நினைத்தான். அந்தக் கொடியவனான நரகாசுரனின் இந்த விருப்பத்தை, அவன் தாய் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனிடம் கூறினாள். பகவான் அப்படியே அருள் புரிந்தார். அன்று தோன்றி, இன்றுவரை, பாரத நாடு முழுதும், மேலும் பாரத மக்கள் பிற நாடுகளில் வசிக்கும் பகுதிகளிலும் ஹிந்து மக்களால் கொண்டாடப் படும் மாபெரும் விழா தீபாவளி.

பிரதி வருடமும், ஐப்பசி மாதத்தில், அமாவாசைக்கு முன் நாள் விடியற்காலையில் இருள் நீங்கு முன் எண்ணெய் தேய்த்துக் கொண்டு நீராடிப், புத்தாடை உடுத்தி இப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். தீபாவளிப் பண்டிகையின் முக்கிய அம்சங்கள் எண்ணெய் தேய்த்துக் கொண்டு, பின்னர் தண்ணீரில் நீராடல், வரிசையாகத் தீபங்களை ஏற்றி வைத்தலாம். தீபாவளி விடியற்காலையில் பகவானின் அருளால் எண்ணெயில் லட்சுமீ தேவியும், தண்ணீரில் கங்கையும் இருப்பதாக நம்பிக்கை. எண்ணெய் தேய்த்துக் கொள்வதால் வறுமை நீங்கும், நீரில் நீராடுவதால் பாவம் விலகும், விளக்குகளை வைப்பதால் அறியாமை நீங்கும். வறுமை நீங்கி, அறியாமை நீங்கிப் பாரத மக்கள் நன்கு வாழப் பகவான் பரந்தாமனை வழிபடுவோமாக!

''ஜகத் ஹிதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம:''

Nature is colourful.

We keep it that way.

The vibrant blue of her skies. The lush green of her trees. The rich brown of her soil... Colour-Chem helps keep Nature that way.

Because Colour-Chem ensures that its operations are in no way harmful to the environment. Well equipped effluent treatment plants render the liquid wastes harmless prior to discharge. Pollution abatement equipment control atmospheric emissions.

So that Nature can continue to show off her original colours. Now and for all time.

Colour-Chem

Where chemistry takes many hues.

Colour-Chem Limited, 194 Churchgate Reclamation, Bombay 400 020

HTA 1790

தீரர்களின் ஆயுதம் அகிம்சை —





டாக்டர் நா. மகாலிங்கம்

ஒரு துறவி ஆற்றில் இடுப்பளவு நீரில் நின்று குளித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு தேள் நீரில் மிதந்து வந்தது. அது குற்றுயிராயிருந்தது. துறவி அதைப் பார்த்தார். அவருக்கு இரக்கம் உண்டாயிற்று.

அதைக் காப்பாற்ற விரும்பி, விரைந்து கையால் அதைத் தூக்கினார். தேளோ அவரைக் கொட்டி விட்டது. துறவியின் கை நடுங்கிற்று. தேள் ஆற்றில் விழுந்தது. தேள் மீண்டும் நீரில் மூழ்கி விடும் போல் இருந்தது.

அவர் மறுபடியும் அதைத் தூக்கினார். அது மீண்டும் கொட்டிற்று. அவர் அதை மறுபடியும் கீழே போட்டார். இவ்விதம் மும்முறை நிகழ்ந்தது.

இறுதியில் அந்தப் பொல்லாத தேள், சென்ற இடம் தெரியாமல் மறைந்து ஒழிந்தது.

பாவம், துறவி வலி தாங்க முடியாமல் பலமுறை கையை உதறினார். அருகில் இருந்தவர்கள் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவர் கேட்டார் : ''சாமீ! தேளைக் கையால் தொடலாமா? கொட்டுவது அதன் இயற்கைக் குணமாயிற்றே; எல்லாம் தெரிந்த தங்களுக்கு இது தெரியாதா?''

துறவி அமைதியாக, ''தெரியும்'' என்றார்.

''பின் ஏன் இப்படி ஒரு முறைக்குப் பலமுறை அதை எடுக்க வேண்டும்?'' என்று கேட்டார் அவர்.

துறவி சற்று நேரம் வாய் பேசாதிருந்தார். பின்பு கூறினார் : ''தேளின் இயற்கைக் குணம் கொட்டுவதுதான்; தாங்கள் கூறியது உண்மை. சாகும் வரை அது தன் இயற்கைக் குணத்தை விடாமல் இருந்தது. ஆறறிவு படைத்த மனிதனாகிய நான் மட்டும் என் இயற்கைக் குணத்தை ஏன் விட வேண்டும்?''

இந்தப் பதில் கேட்ட அன்பருக்குத் திருப்தியளிக்கவில்லை. ''மனிதனுடைய இயற்கைக் குணம் என்ன சாமீ? தேள் கொட்டக் கொட்டச் சகித்துக் கொண்டே இருப்பதா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

''ஆம். தேள் மட்டுமல்ல. யார் என்ன இம்சை செய்தபோதிலும் அவர்களை வெறுக்காமல் அன்புடனும், மகிழ்ச்சியுடனும் கஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்'' என்றார் துறவி.

காந்தி மகான் உலகத்திற்கு உபதேசித்த அகிம்சை, சத்தியாக்கிரகம் ஆகியவற்றில் அடங்கியுள்ள அடிப்படைக் கருத்தும் இதுதான். காந்திஜி சொல்லுகிறார் : ''மிருக இனத்திற்கு இம்சை எப்படி ஒரு நியதியோ அப்படியே நம் இனத்திற்கு அகிம்சை ஒரு நியதி.

"விலங்குகளிடம் ஆன்ம உணர்ச்சி உறங்கிக் கிடக்கிறது. ஆகவே, உடல் பலத்தைத் தவிர வேறு எதுவும் அவற்றிற்குத் தெரியாது.

"உயர்ந்த தருமத்திற்கு, அதாவது ஆன்ம உணர்ச்சியின் பலத்துக்குப் பணிய வேண்டியது மனிதனின் சிறந்த பண்புக்கு இன்றியமையாததாகிறது.

"இதை இன்னும் சுருக்கமாகக் கூறுவோம். மனிதனுக்குப் பகுத்தறியும் சக்தி இருப்பதால் பிறர் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.'' இவ்விதம் அன்பையும், அறத்தையும் புகட்டும் அவர், அதே மூச்சில் ''உஷார்!'' என்று நம்மை எச்சரிக்கிறார். என்ன?

''கோழைத்தனத்தை மூடி மறைக்கும் போர்வையல்ல அகிம்சை; அது, வீரர்களின் அதிஉயர்ந்த நற்பண்பாகும்'' என்கிறார் காந்தி.

நாம் பின்பற்ற வேண்டிய அகிம்சைக்குத் 'தீரர்களின் அகிம்சை' என்று மகாத்மா காந்தி கூறினார்.

காந்தி நம் ஆன்ம பலத்தைப் பெருக்கி, நம் எல்லோரையும் சிங்கங்களாக்க விரும்பினார்!

அவ்விதமே நாம் சிங்கங்களாகவும் இருந்தோம். சுதந்தரப் போராட்டக் காலத்தில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் முகமலர்ச்சியுடன் தடியடியை ஏற்றுக் கொள்ளவில்லையா? துப்பாக்கிக் குண்டுகளுக்கு முன் சிரித்துக் கொண்டே நிற்கவில்லையா? உலகம் காணாத அதிசயத்தை நாம் செய்து காட்டவில்லையா?

''தீரத்தின் உச்சமே அகிம்சையாகும். அதிஉயர்ந்த தீரம் எதில் இருக்கிறது? பீரங்கிக்குப் பின் இருந்து கொண்டு துண்டு துண்டாய்ப் பிறரைச் சிதைப்பதிலா? சிரித்துக் கொண்டே அந்தப் பீரங்கியை நெருங்கித் துண்டு துண்டாய்ச் சிதைக்கப்படுவதிலா? சொல்லுங்கள்'' என்று கேட்கிறார் காந்தி.

இதைக் கேட்டு நாம் திகைக்கிறோம்; வியக்கிறோம். அதே சமயம் நமக்கு ஓர் ஐயமும் உண்டாகிறது.

இவ்விதம் எதிரியை மன்னிப்பதற்கு வேண்டிய ஆண்மை ஒருவனுக்கு இல்லையென்று வைத்துக் கொள்வோம். அப்போது அவன் என்ன செய்வது?

பகைவனுக்குப் பணிந்து விடலாமா?

காந்தி இதற்குக் கூறும் பதில் அற்புதமானதாக இருக்கிறது.

''பலாத்காரமா, கோழைத்தனமா? இவற்றுள் எதைப் பின்பற்றுவது என்றால் பலாத்காரத்தைப் பின்பற்றும்படியே நான் யோசனை கூறுவேன்.

இந்தியா, தான் அவமதிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டு கோழைத்தனமாகக் கதியற்று வாளாவிருப்பதைக் காட்டிலும், மானத்தைக் காத்துக் கொள்வதற்காக ஆயுதமேந்தத் தயாராயிருக்க வேண்டுமென்றே நான் சொல்லுவேன். ஆனால், இம்சையை விட அகிம்சையே அளவிறந்த சிறப்பு வாய்ந்ததென்று நான் கருதுகிறேன்'' என்கிறார்.

இதே கருத்தை இன்னும் தெளிவாகவும், அழுத்தமாகவும் மற்றோரிடத்தில் அவர் கூறியுள்ளார்.

ஒரு சமயம் ஒரு மகாராஷ்டிரப் பெண் காந்தியிடம் சென்று,

''அகிம்சா முறையில் என் மானத்தைக் காக்க முடியவில்லையென்றால், பலாத்காரத்தைக் கையாளலாமா? என் ஐயத்தைத் தாங்கள் தீர்க்க வேண்டும்'' என்றார்.

''வேறு வழி எதுவும் உனக்குத் தோன்றவில்லையானால் போ. வர்தா கடைத்தெருவில் ஒரு வாளை வாங்கு. காந்தியின் பெயர் சொல்லி, அந்த வாளால் உன் எதிரியைக் குத்தி. உன் கற்பைக் காத்துக் கொள்வாயாக!''

சக்தியும், வேகமும் நிறைந்த மகாத்மா காந்தியின் இந்தச் சொற்களைக் கேட்டு நம் மெய் சிலிர்க்கிறது அல்லவா?

அகிம்சை என்றால் கையாலாகாத்தனமோ, பலவீனமோ, கோழைத்தனமோ அல்ல என்பது நன்கு விளங்கும். சிறந்த அகிம்சாவாதி காட்டும் வீரத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட நெப்போலியனோ, ஹனிபாலோ, சீசரோ காட்டவில்லை!

''இம்சைக்கிடையே அகிம்சை நியதியைக் கண்டுபிடித்த நம் முனிவர்கள் நியூட்டனைக் காட்டிலும் மாபெரும் மேதைகள், வெல்லிங்டனைக் காட்டிலும் அதியுயர்ந்த போர் வீரர்கள்.

ஆயுதங்களைத் தாங்களே கையாண்டு, அதனால் பயன் எதுவும் இல்லை என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு, உலகம் உய்வதற்கு அகிம்சையே வழி. இம்சையல்ல என்று அவர்கள் மக்களுக்குப் போதித்தார்கள்'' என்றார் காந்தி.

மகாவீரனாகிய அலெக்சாந்தர் இந்தியாவில் ஒரு பகுதியை வெற்றி கண்ட பின், திரும்பிச் செல்லும் வழியில் சிந்து நதியருகே ஒரு முனிவரைக் கண்டான். அவருடன் சற்று நேரம் பேசினான். முனிவருடைய அறிவாற்றலைக் கண்டு வியந்தான்.

''வாருங்கள் எங்கள் நாட்டுக்கு'' என்று வேண்டினான். ஏதேதோ ஆசையும் காட்டினான்

முனிவர் இணங்கவில்லை.

யவன மகாவீரனுக்குக் கோபம் உண்டாயிற்று.

''என்னுடன் நீர் வராவிட்டால் உம்மைக் கொல்வேன்'' என்றான்.

முனிவர் சிரித்தார். ''என்னையா? நீரா? கொல்வீரா? இதைப் போன்ற பொய்யை நான் இதுவரை கேட்டதேயில்லை'' என்றார். சற்றும் கலங்கவில்லை அவர்.

அலெக்சாந்தர் திகைத்தான்; என்ன, கோவணம் தரித்த ஓர் ஏழை ஒரு பேரரசன் முன் சற்றும் அச்சம் அன்று இப்படிப் பேசுவதா?

எத்தனை மன்னர்களை, நாடுகளை வெற்றி கண்டவன் அவன்? மகாவீரனாகிய அவனுக்கு இப்போது ஒரு தோல்வியா?

''நீர் என்ன சொல்லுகிறீர்? எனக்கு விளங்கவில்லையே!'' என்றான் அவன்.

முனிவருடைய முகத்திலே சாந்தியும், தெய்வப் பேரருளும் துலங்கின.

''அன்ப, நானும் ஒரு காலத்தில் அரசனாய் இருந்தேன். இப்போது உண்மையைக் கண்டு கொண்டேன். எனக்குச் சாவு இல்லை; வாழ்வு இல்லை; நான் என்றுமுள்ளவன். யாரும் என்னைக் கொல்ல முடியாது. நான் சிரஞ்சீவி'' என்றார்.

அலெக்சாந்தர் அவருடைய அடியிணைகளிலே வீழ்ந்தான். ''நீரே வீரர்!'' என்று முனிவரைப் போற்றினான்.

காந்திஜி உலகத்துக்கு உபதேசித்த அகிம்சை சக்தியும், வலிமையும் நிறைந்தது. தீரர்கள் மேற்கொள்ள வேண்டியது. ○

பூஜை

எஸ்.வி.ரமணி

(கார்க்கோடக வம்சத்துக் காச்மீர் மன்னன் லலிதாதித்யன் அரண்மனை. அந்தப்புரத்தில் அரசி சக்கரமர்த்திகா பஞ்சணையில் சாய்ந்திருக்கிறாள். அவள் முகத்தில் பதற்றமும், வேகமும் காணப்படுகின்றன. அடிக்கடி எழுந்து சாளரத்தருகில் போய்ப் பார்க்கிறாள்.)

மித்திரசர்மர் : அரசியாரே, வணக்கம்.

சக்கரமர்த்திகா : யாரது? மித்திரசர்மரா! உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். மன்னரைப் பார்த்தீரா? என்ன சொன்னார்? வருகிறேன் என்றாரா?

மித்திர : வந்து... வந்து... மன்னிக்க வேண்டும், தேவி. தங்களுக்கே பூரண அதிகாரம் கொடுத்து விட்டாராம். தங்களையே...

சக்கர : என்ன? கண்ணனுக்குக் குடமுழுக்குச் செய்யச் சொல்லி விட்டாரா! உண்மையாகவா?

மித்திர : ஆமாம், தேவி. நீங்கள்தான் ஆசைப்பட்டீர்களாம், கேசவன் விக்கிரகம் தங்கத்தில் செய்ய வேண்டுமென்று... அதனால்...

சக்கர : நானே குடமுழுக்கும் செய்ய வேண்டுமா? என்ன அநியாயம்! வீரம் விளையாடும் இடத்தில் பக்தியைக் காணோமே! இறையருள் இல்லாவிட்டால் வெறும் வீரம் மட்டும் வெற்றியைக் கொடுக்குமா சர்மரே?

மித்திர : தாயே, கோபிக்காதீர்கள். கன்னோஜ் அரசர் யசோவர்மனை வென்றார்... கர்நாடகம் வரை வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறார்...

சக்கர : அந்த வெற்றியைக் கொண்டாடத்தானே கேசவரைத் தங்கத்தில் தயாரிக்கச் சொன்னேன்... நாலாயிரம் தோலா சொக்கத் தங்கத்தில்... எத்தனை அக்கறையுடன், பக்தியுடன், எத்தனை மாதங்கள்... எத்தனை ஸ்தபதிகள்... இதற்காகத்தானே தேர்ந்த தென்னகத்து ஸ்தபதிகளை வரவழைத்தேன்...

('தோலகாணாம் ஸஹஸ்ராணி சதுர்ப்பிரதிகானி ஸ:' என்று கல்ஹணர் எழுதிய 'ராஜ தரங்கிணி' யில் குறிப்பிட்டிருக்கிறார். லலிதாதித்யனுக்கு முக்தா பீடன், பிரதாபாதித்யன் என்ற பெயர்களும் உண்டு.)

மித்திர : உண்மை தேவி. நானும் பலமுறை சொல்லி விட்டேன்... மன்னர் செவி சாய்த்தால்தானே! மேலும் அந்தப் பெண்... கோயில், சிலை, குடமுழுக்கு, பக்தி இதெல்லாம் பெண்கள் சமாசாரம்... ராணியாரையே பார்த்துக் கொள்ளச் சொல்... மன்னரைத் தொந்தரவு செய்யாதீர்கள்... என்று...

சக்கர : அப்படியா சொன்னாள்?

மித்திர : ஆமாம். மன்னர் என் பேச்சைத் தட்டியிருப்பது இதுதான் முதல் தடவை. அதான் காம மயக்கத்தில்... மன்னித்துக் கொள்ள வேண்டும் தேவி...

சக்கர : சரி, போய் அமைச்சரை அனுப்புங்கள்.

மித்திர : அப்படியே அரசியாரே!

(மித்திரசர்மர் வெளியேறுகிறார். அமைச்சர் சங்குகர் வருகிறார்.)

சக்கர : அமைச்சர் சங்குகரே! நீர் இந்தச் சபையில் எத்தனை ஆண்டுகளாக அமைச்சாக இருக்கிறீர்?

சங்குகர் : தங்கள் திருமணத்துக்கு முன்பிருந்து... பெரிய மன்னர் தாராபீடன் ஆட்சியிலிருந்து...

சக்கர : இப்போது தங்கள் மன்னர்...

சங்கு : எல்லாம் அறிவேன் தேவி. வெற்றி மயக்கத்திலும், காம மயக்கத்திலும் மன்னர் தடுமாறிக் கொண்டிருக்கிறார்... நாம்தான் கொஞ்சம்...

சக்கர : விட்டுப் பிடிக்க வேண்டும் என்கிறீர்களா அமைச்சரே?

சங்கு : ஆமாம்... தம் தந்தையைவிட ஆட்சியை எத்தனையோ விரிவுபடுத்தியிருக்கிறார். வீரத்திலும், அரசியல் சாணக்கியத்திலும் தன்னிகரில்லாதவர்...

சக்கர : அதனால் விவேகம் வேண்டாம் என்கிறீர்களா? நீர் என் தந்தை போன்றவர். அதனால் மனம் விட்டுப் பேசுகிறேன். காதல் விளையாட்டு விளையாடும் வயதா இவருக்கு! அதுவும் ஆண் வாரிசு இல்லாமல் அரசு போய் விடுமோ என்று... தூக்கம் இல்லாமல் தவிக்கிறேன்... கண்ணன் சிலையைச் செய்து வைத்துக் குடமுழுக்குச் செய்தாலாவது ஆண் குழந்தை உண்டாகுமோ என்று...

சங்கு : வருத்தப்படாதீர்கள். தங்கள் ஆசையை பகவான் கிருஷ்ணன் நிறைவேற்றுவான் தாயே!

சக்கர : எப்படி? குடமுழுக்குக்குக்கூட வரமுடியாது என்று சொல்லி விட்டாராமே!

சங்கு : குடமுழுக்கைத் தள்ளிப் போடுவோம். நமது அரசவைக் கவிஞர் பவபூதி மகாவீர சரிதம் எழுதிப் பூர்த்தி செய்து விட்டார். அவரும், கவி வாக்பதிராஜரும் அரசர் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். அவர்கள் போய்ப் பேசுவார்கள்... உங்களுக்குத் தெரியாதது இல்லை... இந்தக் காதலும், காமமும் எத்தனை நாள்! காதல் பூவிதழ் போன்றது... மலர்ந்து மணம் வீசும் கவர்ச்சி மாலை வரையில்தானே!

சக்கர : அது புரியவில்லையே! உலகமே, வாழ்வே அதுதான் என்ற அந்த காரம் அல்லவா கவிந்திருக்கிறது அமைச்சரே!

சங்கு : அரசவைக் கவிஞர்கள் புரிய வைப்பார்கள்; மோக மூட்டத்தைக் கலைப்பார்கள்...

சக்கர : பார்க்கலாம்... சொர்ணக் கேசவர்தான் காப்பாற்ற வேண்டும்.

காட்சி 2

(விதஸ்தா நதிக்கரை. செடி கொடிகளால் அமைத்த லதா கிருகம். அதன் அருகில் மரத்திலிருந்து தொங்கும் கொடி ஊஞ்சலில் அழகி கமலா வீசி ஆடிக் கொண்டிருக்கிறாள். மன்னன் முக்தா பீடன் ஆட்டத்தைப் பார்த்து ரசிக்கிறான்.)

முக்தா : கண்ணே, கமலா! இப்படியே ஆடிக் கொண்டிருந்தால்...

கமலா : பார்த்துக் கொண்டே இருங்களேன்!

முக்தா : பார்த்தால் போதுமா? என் மனம் உன்னைவிட அதிகமாய் ஊசலாடுகிறதே... உன்னை அப்படியே கட்டித் தூக்கிப் போய்...

கமலா : தூக்கிப் போய்...

முக்தா : மஞ்சத்தில் இருத்தி...

கமலா : இருத்தி...

முக்தா : மாதுளங் கனியைப் பிளந்து... ஒவ்வொரு முத்தாய்... சுவைத்து...

கமலா : அப்புறம்...

முக்தா : அப்புறம்... அப்புறம்... ஒரே உடலாய்... அதோ பார், அந்தக் கொடியைப் போல் பின்னிப் பிணைந்து...

கமலா : இம்ம்...

முக்தா : வண்டென மருளும் கண்களைப் பொத்தி... காச்மீர் ஆப்பிள் போன்ற உன் அதரங்களை... சிவந்த கன்னங்களை... கடித்து... அப்புறம்... அப்புறம்...

கமலா : கடித்துக் குதறி... சொர்க்க லோகத்தைப் பார்ப்பீர்கள் போல இருக்கிறது... அப்படித்தானே!

முக்தா : ஆமாம், ஆமாம். கண்ணே!

கமலா : ஐயோ, அப்பா! என்னால் பொறுக்க முடியாது... அதோ பாருங்கள்... அந்தப் புறாக்களை... எப்படிக் கொஞ்சிக் குலாவுகின்றன...

முக்தா : பேடையைத் தயார் செய்கிறது மஞ்சத்துக்கு...

கமலா : உங்களைப் போல...

முக்தா : அட போக்கிரி!

கமலா : நானா! உண்மையைச் சொல்லுங்கள். எங்கேயோ பிறந்த... ஒன்றும் அறியாதவள்... நீங்கள் தான்... எனக்குக் குரு...

முக்தா : நீயா! ஒன்றும் அறியாதவளா! கள்ளி. இந்த லலிதாதித்யனை எப்படி மயக்கி விட்டாய்!

கமலா : ஐயோ! எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்... அந்தப் பெயரைச் சொல்லாதீர்கள் என்று... என் கண்ணாளன் இந்த முக்தா பீடன் தான்... அந்தப் பெயரைக் கேட்டாலே அரசன், அரசாட்சி, யுத்தம், கொலை என்ற நினைவுகள் வந்து மருட்டுகின்றன. பயந்தே விடுகிறேன்...

முக்தா : பயப்படாதே கண்ணே! அப்படியே உன்னைத் தூக்கி...

கமலா : போதும், போதும். தெரியும் நீங்கள் பலசாலி என்று...

முக்தா : போதும் போதும் என்கிறாய்... ஆனால் உன் தழுவல் தளரவில்லையே கண்ணே...

கமலா : பழக்க தோஷம் கண்ணா!

முக்தா : சரி, வா! சேடிகள் உணவு தயாரித்து வைத்து ஒரு நாழிகை ஆகிறது. பழமும், பாலும் அழைக்கின்றன.

கமலா : காச்மீரத்துக் குங்குமப்பூவுக்கு மணமும், நிறமும் அதிகந்தான்...

முக்தா : உன்னைப் போல...

கமலா : இல்லை, உங்களைப் போல...

முக்தா : குங்குமப்பூ தினமும் சாப்பிட்டால் மேனியழகு மெருகிடும்; காதல் அரும்புகளை அள்ளி வீசும்... தினமும் புதுப்புது...

கமலா : ஓ! அதனால்தான் தினமும் குங்குமப்பூ போட்ட பாலோ படுக்கையறையில...

முக்தா : அது மட்டும் இல்லே... காச்மீர ஆப்பிளும், மாதுளையும்கூட...

கமலா : வாத்ஸ்யாயனர் உங்கள் மாணவரா?

முக்தா : இல்லே, உன் மாணவர்.

கமலா : ஐயே! மயக்கத்தில் கண்டபடி உளராதீர்கள். வெட்கமாக இருக்கு!

முக்தா : வெட்கமா? துகிலை உரித்தால் வெட்கம் பறந்து விடும்.

கமலா : ஐயோ! அதோ பாருங்கள்! அந்தப் புறாக்கள் பார்க்கின்றன; மான் பார்க்கிறது... முயல் குட்டி முறைக்கிறது... இத்தனை பேர் பார்க்கும் போது...

முக்தா : பார்க்கட்டுமே! பொறாமைப்படட்டுமே!

(அந்தச் சமயத்தில் 'ஜயவிஜயீபவ' என்ற வாழ்த்து கேட்கிறது. திடுக்கிட்டு முக்தா பீடன் பார்க்கிறான். கமலா லதா கிருகத்தில் ஓடிப் போய் விடுகிறாள்.)

முக்தா : அமைச்சரே, கவிஞர் பெருமக்களே, வாருங்கள்! எங்கே இத்தனை தூரம்?

சங்கு : தங்களைக் கண்டு போக வந்துள்ளோம்.

முக்தா : எதற்கு?

சங்கு : அரசவைக் கவிஞர் பவபூதி மகாவீர சரிதம் பூர்த்தி செய்து விட்டார். தங்கள் முன் அரங்கேற்றம் செய்ய விரும்புகிறார்.

முக்தா : அப்படியா? அதற்கு நீங்கள் எல்லாரும் ஏன் வரவேண்டும்? ஏற்பாடு செய்து ஓலை அனுப்பினால் வந்து மகிழ்ச்சியுடன் கலந்து கொள்கிறேன்...

பவபூதி : மேலும் தங்களிடம் சில முக்கிய விஷயங்கள்...

முக்தா : அப்படி என்ன முக்கிய விஷயம்? அரங்கேற்றத்தின் போது பேசிக் கொள்ளலாமே.

பவபூதி : அப்படியே!

முக்தா : போய் வாருங்கள்.

காட்சி 3

(அரண்மனை தர்பார் ஹால். நூல் அரங்கேற்றம் நடக்க இருக்கிறது. கவிஞர்கள், அமைச்சர்கள், பிரதானிகள் குழுமியிருக்கின்றனர். மன்னன் முக்தா பீடன் அரியணையில் அமர்ந்திருக்கிறான்.)

மன்னன் : தொடங்கலாம், கவிஞரே!

பவபூதி : இன்னும் சபை நிறைவு பெறவில்லையே, மன்னவா!

மன் : என்ன? ஏன்?

பவபூதி : அரசியார் வரவில்லை. அவர்கள் அரியணை காலியாக இருக்கிறதே!

மன் : அதனால்...

பவபூதி : பட்டமகிஷி இல்லாமல்...

மன் : சரி, அழைத்து வாருங்கள், உடனே!

(சபையிலிருந்து மித்திரசர்மர் எழுந்திருந்து)

மித்திர : அரசியார் வரவில்லை என்று சொல்லி விட்டார் மன்னவா!

மன் : ஏன்? உடல் நலமிலலையா? பாவம், வயதாகி விட்டது! அவர்களை ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்?

பவபூதி : அப்போ அரசியார் உடல் நலம் தேறி வரட்டுமே, மன்னா!

மன் : ஏன் அதற்காகத் தள்ளிப் போட வேண்டும்?

பவ்பூதி : அரசியாரும் அரியணையில் அமர்ந்திருக்க அரங்கேற்றம் செய்யவே விரும்புகிறேன் மன்னா! என்னை மன்னிக்க வேண்டும்...

மன் : தேவையில்லை... இன்றே செய்யலாம், கவிஞரே!

சங்கு : கவிஞர் சொல்வதும் நியாயமாகத்தான் படுகிறது... வாக்பதி ராஜரே, உங்கள் கருத்து...

வாக் : ஆமாம். பவபூதி சொல்வது தான் சரி, மன்னவா!

மன் : எல்லாரும் அப்படி விரும்பினால் சரி... சபை கலைகிறது.

(காட்சி மாற்றம்)

(மன்னன் லலிதாதித்யன் கோபத்துடன் அரசி சக்கரமர்த்திகாவைப் பார்க்க அந்தப்புரம் போகிறான்.)

சக்கர : மன்னர் பிரானா! வாருங்கள், வாருங்கள்!

லலிதா : போதும் பாசாங்கு, வரவேற்பு! இப்படி அவமானம் செய்ய எத்தனை நாளாய் திட்டம் போட்டிருந்தே?

சக்கர : அவமானமா? யார், யாருக்கு? புரியவில்லையே!

லலிதா : நாடகமாடாதே! என்னை அவமானப்படுத்த திட்டமிட்டுச் செய்திருக்கிறாய்... இன்று நடந்தது...

சக்கர : என்ன நடந்தது? ஆத்திரப் படாமல் சொல்லுங்கள்.

லலிதா : அரங்கேற்றத்துக்கு ஏன் வரவில்லை?

சக்கர : பிடிக்கவில்லை, வரவில்லை.

லலிதா : ஏன் பிடிக்கவில்லை? அரசனுடன் அரியணையில் அமர்வது தானே அரசியின் கடமை.

சக்கர : அரசர் கடமை தவறும் போது அரசியும்...

லலிதா : என்ன கடமை தவறினேன்: அப்படியே இருந்தாலும் நான் ஆண்...

சக்கர : ஓ! பெண் மட்டுந்தான் கடமை தவறக் கூடாதா? எந்தச் சாஸ்திரம், சட்டம் அப்படிக் கூறுகிறது, மன்னவா!

லலிதா : சாத்திரமும், சட்டமும் கூற வேண்டாம். நான் சொல்கிறேன் - அதுதான் சட்டம், அதுதான் விதி... யாராயிருந்தாலும் கட்டுப்பட வேண்டும்... அரச - ஆணை.

சக்கர : அரச ஆணையா? விவேகமில்லாத, அராஜக மன்னனின் அரச ஆணையை மக்களும் மதிக்க மாட்

டார்கள்... உங்களுக்குத் தெரியாதா அரசியல் நீதி?

லலிதா : எனக்கா நீதி சொல்கிறாய்?

சக்கர : ஆமாம். அவசியம் வந்து விட்டது! உங்கள் வயது என்ன? என்னை எத்தனை ஆண்டுகள் அநுப வித்து விட்டீர்கள்?

லலிதா : நான் மன்னன்... வீரமும், காதலும் கை கோத்துச் செல்வது இயற்கை நியதி.

சக்கர : குழந்தை பிறந்து, வளர்ந்து, வாலிபனாகி, இல்லறத்தானாகி, இறையன்பனாகி, ஆன்மிக வளர்ச்சி பெற்று வாழ்வதுதான் இயற்கை நியதி மன்னவா!

லலிதா : அதெல்லாம் சாதாரண மனிதனுக்கு.

சக்கர : அப்படியென்றால் மன்னன மனிதன் இல்லையா? அபூர்வப் பிற வியா?

லலிதா : மன்னன் மகேசனுக்கு நிகர்த்தவன்... எந்தக் கட்டுப்பாடு களும் அவனுக்கு இல்லை.

சக்கர : ஓ! கடவுளுக்கு நிகரா? அதான் உங்கள் மனத்தில் பக்திப் பூ மலரவில்லை. ஆணவம் உள்ள இடத் தில் ஆண்டவன் அமர மாட்டான், அருள் பாலிக்க மாட்டான்...

லலிதா : உன் உபதேசம் தேவை யில்லை.

சக்கர : உபதேசம் செய்யவில்லை, மன்னவா! காலில் விழுந்து மன் றாடிக் கேட்கிறேன். நாளைப் பொழுது இங்கே இருங்கள். இந்த கேசவர் குடமுழுக்குச் செய்து விட்டுப் போங்கள்... தயவு செய்து வேண்டுகிறேன்.

லலிதா : கேசவர் உனக்குத்தான் வேண்டும். நீயே செய்து கொள்.

சக்கர : உங்களுக்கு அவள்தான் வேண்டுமோ? இத்தனை ஆண்டுகள் என்னிடம் காணாததை - அநுபவிக் காததை - எந்தப் புதுமையை அவளிடம் பிச்சை கேட்டுப் பெறு கிறீர்கள்? வெட்கத்தை விட்டுப் பேசு கிறேன். காதல், காமம் எல்லாம் ஒரு பருவ நிலை... அந்தப் பருவம் கழிந்து உங்களுக்கு எவ்வளவோ ஆண்டுகளாகி விட்டன! இன்னும் ஒரு வாலிபனைப் போல் இளம் பெண் சுகத்தில் மயங்கிக் கிடக்கிறீர் களே! யோசித்துப் பாருங்கள். வயதுக்கேத்த விவேகம் வளர வேண் டாம்...

லலிதா : உனக்கு வயதா கிவிட்டது. கிழவியாகி விட்டாய்... உனக்கு அலுத்துவிட்டது. அதனால்தான் இப் படி உபதேசம் செய்கிறாய்... இம்... அவள் இன்ப ஊற்று... காதல் கனி ரசம், தேன் கலந்த கருப்பஞ் சாறு... அள்ள அள்ளக் குறையாத அமுதக் குவியல்... நான் இன்பமாக இருக்கி றேனே என்று உனக்குப் பொறாமை....

சக்கர : எனக்கா பொறாமை! நானா கிழவி! வெற்றி மமதையும் காமமும் உங்கள் கண்ணை மறைத்துவிட்டன. அதனால்தான் இப்படிப் பேசு கிறீர்கள்! அந்தக் காதல் கனிரசம் என் நிலையை அடையாதா? அந்தக் குங்குமப்பூத் தோல் சுருங்கிக் கரு காதா? மனைவி கட்டிலுக்கு மட்டும் இல்லே, கணவன், தவறு செய்தால் அவனைத் திருத்தும் கடமையும் உண்டு, அவள்தான் உண்மையான சகதர்மிணி. எப்போதும் கட்டிலுக்கு மட்டும் அழைக்கிறவள் வேசி, கொஞ்சிக் கொஞ்சிச் சிரிக்கிறவள், மேனியைக் குலுக்கிக் குலுக்கிக் காட் டுகிறவள் மோகினிப் பிசாசு...

லலிதா : இம்... நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டிருக்கிறாய், சபாஷ்! ஊருக்கு உபந்நியாசம் செய்யப் போகலாம்...

சக்கர : இறைவன் நாமத்தைச் சொன் னாலாவது புண்ணியம் உண்டு. சரி, நாளைக்கு இங்கிருந்து, குடமுழுக் கைத் தரிசனம் செய்துவிட்டு...

லலிதா : அந்தத் தரிசனத்தை நீயே கண்குளிரப் பார்த்துக் கொள். எனக்கு வேலை இருக்கிறது.

சக்கர : சொர்ணக் கேசவனைவிட, அவள் உயர்ந்து விட்டாள்... உங்



களுக்கு... சே! என்ன ஆண் மனம்! அரசனுக்கு ஒரு நீதி, ஆண்டிக்கு ஒரு நீதியாமே! என்ன அக்கிரமம்! கேசவா, நீதான் அவருக்குப் புத்தி கொடுக்கவேண்டும்.

காட்சி-4

(மன்னன் முக்தா பீடன் ஆவேசத் துடன் நதிக்கரை வந்து, லதாக் கிருகத் துள் நுழைகிறான். கமலா எதிர் கொண்டழைக்கிறாள்)

கமலா : என்ன இவ்வளவு ஆவேச மாக வருகிறீர்கள்!

முக்தா : ஆமாம். இந்த அழகை, கனியை ஒவ்வொரு அங்கமாக ருசிக் கப்போகிறேன்... இந்தக் குங்குமப்பூ மேனி இப்படியே இருக்காதாம்... பைத்தியம்... சொல்கிறாள்...

கமலா : யார், என்ன சொன் னார்கள்? ஏன் இப்படித் தவிக் கிறீர்கள்?

முக்தா : யாரா? பெண்களே பொறா மைப் பண்டங்கள்! உன் மேனியழகு, இளமை, இப்படியே இருக்காதாம்! சொல்கிறாள். நான் அரசன், உன்னை வாழ்நாள் முழுதும் இப் படியே அழகு குலுங்கும் மலராகக் காக்க முடியும்! எத்தனை மூலி கைகள்! காயகல்பங்கள், தங்க பஸ் பங்கள்... எல்லாம் உன் காலடியில் கொட்டுவேன், கண்மணியே! உன் தோல் சுருங்கிக் கருகிவிட முடியுமா? அமுதத்தையே கொண்டு வருவேன்...

பாரத் எலக்ட்ரானிக்ஸ்
விழாக்காலத்திற்கு குதூகலம் சேர்க்கிறது.
ஆண்டாண்டு காலமாக, நாள்தோறும்.



பாரத் எலக்ட்ரானிக்ஸ் — கோடிக்கணக்கான நம்நாட்டு மக்களின் வாழ்க்கையில் குதூகலம் சேர்க்கிறது.

தொலைக்காட்சி மற்றும் அகில இந்திய வானொலி மையங்களுக்கு அளிக்கும் சாதனங்களின் வாயிலாக, பல்வேறுபட்ட மக்கள் தத்தமது கலாசாரம், விழாக்கள் ஆகியவற்றை குதூகலமாகப் பகிர்ந்து கொள்ள உதவுகிறது. தனது தொடர்பு சாதனங்களின் வழியாக நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலுள்ள மக்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டு தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வழி செய்கிறது.

பாரத மக்களின் வாழ்க்கையுடன் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் இடையறாத்தொடர்பு கொண்டுள்ளது. தனது தயாரிப்புகளில் உன்னதத்தை எட்டும் லட்சியத்தின் மூலம் இங்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருக்கிறது. இதனால், பாரத் எலக்ட்ரானிக்ஸ் ஆண்டுக்கு ஆண்டு மேலும் வெற்றிகரமாக விளங்குகிறது.

பாரத் எலக்ட்ரானிக்ஸ் — ஆரவாரமற்ற நம்பிக்கையுள்ள செயல்பாட்டுடன் வாழ்கையை மேன்மேலும் அர்த்தமுள்ளதாக்கி வருகிறது.

भारत इलेक्ट्रॉनिक्स
BHARAT ELECTRONICS

பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிட்.

(ஒரு இந்திய அரசின் நிறுவனம்)
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 'டிரேட் சென்ட்டர்'
116/2, ரேஸ் கோர்ஸ் ரோடு
பெங்களூர்-560 001.

க்வாலிட்டி. டெக்னலஜி. இன்னேவேஷன்.

R K SWAMY/BE/4516 TAM



கமலா : என்ன இப்படிப் பேசு கிறீர்கள்?

முக்தா : ஆமாம். என் சாம்ராஜ்யமே உனக்காகத்தான்... உன்னை வாடா மல் வாழ வைப்பேன்... இளங்குருத்து முற்றாமல் மலர வைப்பேன். எத் தனை சித்தர்கள், மருத்துவர்கள் என் நாட்டில்! அவர்கள் கற்றவித்தையும் செய்கிற காயகல்பங்களும் இளமை மாறாமல், மேனி வதங்காமல் உன் னைக் காக்கும், காக்க வைப்பேன்...

கமலா : அப்போ... அவை இல்லா மல் என் இளமை நீடிக்கா தல்லவா?

முக்தா : என்ன சொன்னாய்?

கமலா : உண்மையைச் சொன்னேன், மன்னா! உள்ளம் தெளிகிறது, மன்னவா!

(அப்போது வெளியில் பொத் தென்று இலைச் சருகுகளின் மேல் விழுந்த சப்தம் கேட்கிறது)

முக்தா : என்ன அது!

கமலா : அட பாவமே! நேற்று மாலையில் நம்மைப் படுக்கையறைக் குத் துறத்திய புறாவில் ஒன்று...

முக்தா : அடிபட்டு விழுந்திருக் கிறது! பார்க்கக் கண்றாவியா இருக் கிறதே!

கமலா : வெள்ளை வெளெரென்று, வெண்பட்டுப் போல் நேற்று ஜொலித்தது... இன்று... ரத்தக் குளத்தில் மிதக்கிறது... பார்க்கவே அருவெறுப்பா இருக்கிறதே!

முக்தா : போதும், வா! ஏதோ பறவை... போகட்டும்!

(கமலா அடிபட்டுத் துடிக்கும் அந்தப் புறாவைப் பார்த்தபடி நிற் கிறாள்)

காட்சி 5

(முக்தா பீடன் ஒரு விதச்சோகத் துடன் உட்கார்ந்திருக்கிறான். அவனறி யாமல் எண்ண அலைகள் மோது கின்றன. தோழிகளுடன் உலாவச் சென்ற கமலா திரும்பவில்லை)

தோழிகள் : மன்னா! அரசியார் நதிக் கரையில் நடந்தபோது கால் தவறி வழுக்கி விழுந்து விட்டார்கள். கால் களில், முதுகில் பலத்த அடி. மூலிகைகள் வைத்துக் கட்டித் தூக்கி வந்திருக்கிறோம்...

முக்தா : என் கமலாவுக்கா! எங்கே, எங்கே!

தோழிகள் : அவர்களால் பேச முடியவில்லை, அரசே!

முக்தா : ஐயோ, கமலா! என் கண்ணே! யார் அங்கே, போய்ப் பிரதம வைத்தியரை அழைத்து வாருங்கள்...

(கமலாவை மடியில் போட்டுக் கொண்டு கண்ணீர் விடுகிறான்... தோழிகள் மலர் விசிறியால் விசிறு கின்றனர்.)

கமலா : (சற்றுப் பொறுத்துக் கண் விழித்தவள்) மன்னா,

முக்தா : கவலைப்படாதே, கமலா! இதோ வைத்தியர் வந்துவிடுவார்... கால்களைத் தூக்க முடியவில்லையா, கண்ணே!

கமலா : ஐயோ, கால்களைத் தொடாதீர்கள். எதை மரகதம் என்று அணைத்து முத்தமிட்டீர்களோ, அவை... அடிபட்டு விழுந்த புறா வாகிவிட்டன. சரி, போகட்டும், எனக்கு ஒரு ஆசை, கண்ணா! அதை...

முக்தா : ஆசையா? என்ன, சொல் உடனே!

கமலா : அந்தக் கேசவர் குட முழுக்கை உடனே செய்துவிட்டு வாருங்களேன்.

முக்தா : இந்த நிலையில் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாதே. முதலில் உன்னைக் குணமாக்க வேண்டும். தேர்ந்த ஆஸ்தான மருத் துவர்கள் இருக்கிறார்கள். பயப் படாதே.

கமலா : இம்... பயமா? எனக்கா? இல்லவே இல்லை கண்ணா! என்

இது எங்கள் வெள்ளி விழா ஆண்டு!

அம்மா : ''என்னடி, கொண்டுபோன பட்சணத் தட்டை அப்படியே எடுத்துண்டு வந்துட்டே?

பெண்: கூடவே! 'அய்யங்கார்ஸ் காபி' இருந்தாதான் தட்டையே தொடுவாராம்.

அம்மா: ''பொண்ணு சொல்றதைக் கேட்டேளா?

அப்பா: தெரிஞ்சுதான், 'அய்யங்கார்ஸ் காபி' பொடியோட ரெடியா வந்துட்டேனே!'

AIYANGAR'S COFFEE COMPANY
ACC
MADRAS-2

அய்யங்கார்ஸ் காபி கம்பெனி'

49, சுவாமி நாயக்கன் தெரு,
சென்னை - 2.
போன்: 566100

பிராஞ்சுகள்:
17, தெற்குமாட வீதி
மயிலாப்பூர், சென்னை-4
போன்: 76773

17, நடேசன் தெரு,
தி. நகர்
சென்னை-17

இது எங்களது 25-ஆம் ஆண்டு.

னையும் அழைத்துச் செல்லுங்கள. கண்குளிரச் சொர்ண கேசவனைப் பார்க்கிறேன். பார்த்தாலே என் கால்கள் குணமாகிவிடும். புறப் படுங்கள்... தயங்காதீர்கள், மன்னவா!

முக்தா : சரி. புறப்படலாம்.

காட்சி - 6

(தங்கத்தால் செய்த கேசவர் பிரதிஷ் டையாகி, கும்பாபிஷேகம் நடக்கிறது. அரசி சக்கரமர்த்திகா, அமைச்சர் எல் லோரும் தரிசிக்கிறார்கள்)

கமலா : அக்கா, கால் குணமாகி விட்டது. போய் வருகிறேன். நடுவில் குறுக்கிட்டேன், நடு விலேயே பிரி கிறேன். விடை கொடுங்கள்.

சக்கர : விடை கொடுப்பதா? உனக்கா? என்னை என்ன மன சாட்சி, இரக்கம், கருணை இல்லா தவள் என்று நினைத்தாயா? நீ என் தங்கை...

கமலா : அக்கா! உங்களுக்கு எவ் வளவோ துயரங்களைக் கொடுத் திருக்கிறேன். உங்கள் இரண்டு வரி... இன்னும் என்னிடம் இருக் கிறது, அக்கா.

சக்கர : இரண்டு வரியா? என்ன் சொல்கிறாய்!

கமலா :நீங்கள் எழுதிய இரண்டு வரிக் கடிதம்...

சக்கர : கடிதமா? நான் என்றும் எழுதவில்லையே!

கமலா : எழுதவில்லையா? இதோ பாருங்கள்!

(சக்கர மர்த்திகா வாங்கிப் படிக் கிறாள்)

'இளமையும் மேனியழகும் தோல் நிகுநிகுப்பும் சாசுவதமல்ல... ஒரு விபத்து... ஒரு நோய், மூப்பு வந்தால் அற்பாயுசாகிவிடும்... புரிந்து கொள், மகளே!'

சக்கர : இது... இது... கவிஞர் பவ்பூதி எழுதியிருக்க வேண்டும்...

கமலா : மன்னர் இங்கே வந்திருந்த போது... நீங்கள் கொடுக்கச் சொன்னதாகக் கொடுத்தார்கள்... பிறகு அரசர் திரும்பி வந்து பேசி யதும்... முதல் நாள் தன் பேடை யுடன் காதல் கீதம் பாடிய புறா அடிபட்டு இரத்த வெள்ளத்தில் துடித்ததும்... நானே....

சக்கர : நீயே இந்த விபத்தை எற்படுத் திக் கொண்டாயா, கமலா!

கமலா : ஆமாம், அக்கா.

சக்கர : ஐயோ அதிக விலை கொடுத்துவிட்டாயே, கமலா! பாவம், ஊனப்பட்டு விட்டாயே!

கமலா : உயிரையே விட்டிருப் பேன்... ஆனால் மன்னர் சொத்தை அவரிடம் உரிய நேரத் தில் உடைமையாக்காமல் போகலாமா?

சக்கர : என்ன... மன்னர் சொத்தா?

கமலா : ஆமாம்...

(இந்தச் சமயத்தில் மன்னன் முக்தா பீடன் வருகிறான்)

முக்தா : அட போக்கிரி! இத்தனை நாள் சொல்லாமல் ஏமாற்றி விட்டாயே! மருத்துவர் சொன்னார்... உடனே ஓடி வந் தேன்...

சக்கர : என்ன சொன்னார்?

முக்தா : அரச வாரிசைத் தாங்கி யிருக்காளாம்...

சக்கர : அப்படியா! அப்படியா! கேசவன் கண் திறந்து விட்டான்... அம்மா, கமலா! கார்கோடக வம் சத்தைத் தழைக்கச் செய்யப் போகிறாய்... வா, அம்மா... கோயிலுக்குப் போய்க் கேச வனைத் தரிசித்து வருவோம்... எத்தனை வேண்டுதல்கள்...

கமலா : என்ன என்ன செய்ய வேண்டும், அக்கா?

சக்கர : மகாவராகருக்குத் தங்கக் கவசம் போடவேண்டும்; கண்ணன் பிறக்க போகிறான்; வெள்ளியில் கண்ணன் செய்ய வேண்டும்...

முக்தா : நாளைக்கே செய்து விடு வோம், முதலில் கிருஷ்ணன் கோயிலுக்குப் போகலாம், வாருங்கள்...

(இரண்டு மனைவியரும் சூழ, மன்னன் லலிதாதித்யன் சொர்ணக் கேசவர் தரிசனத்துக்குப் புறப் பட்டான்.)

(திரை)

Stoppers from Brakes India



"Professionals driving on mountain roads coast down in neutral gear"

True or False?

False. It is extremely dangerous to coast downhill in neutral, using only brakes to slow down. This leads to overheated brakes and complete brake failure. Instead, drive in a low gear using brakes only when necessary.

Brakes India Limited
Padi, Madras 600 050

OBM 284 C

இந்தத் தீபத்திருநாள்
திருமகள் உங்கள்
இல்லந்தேடி வரும்போது...
புதிய கோத்ரெஜ் ஸ்டோர்வெல்
நல்வரவு கூறட்டும்.



தீபாவளி. இல்லந்தோறும் தீபங்களின் அணிவரிசை அலங்காரம். உற்சாகமும் மகிழ்ச்சியும் பொங்கிடும் ஆரவாரம். வீடெங்கும், நாடெங்கும், திருமகளை வரவேற்க ஆயத்தம். இந்த மங்கல நன்னாளில், நீங்கள் வாங்கும் பொருட்களையும் அன்பளிப்புகளையும் வைத்திட, சரியான இடவசதியும் எழிலும் கொண்ட நல்லதோர் இடம் தேவை. இந்தத் தருணத்தில் கோத்ரெஜ் ஸ்டோர்வெல் வாங்குங்கள். அது பொன்மலர் நறுமணம் பெற்றது போலாகும்.



கோத்ரெஜ்
ஸ்டோர்வெல்
வாழ்நாள் முழுவதும் உழைக்கிறது.

வளைக்கரங்களின் வளர்ச்சிக்கு வங்கிகளின் நேசக்கரம்

எம். கோபாலகிருஷ்ணன்
இந்தியன் வங்கி - தலைவர்

''பெண்களுக்குப் போதிய உரிமைகள் வழங்கப்படாவிடில் மனித குல மேம்பாடு முழுமை அடையாது'' என்றார் நமது மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி. பொதுவாக இந்தியப் பெண்களை இரண்டு வகைப் படுத்தலாம். நகர்ப்புறங்களில் வாழும் உயர்தர மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்த சமுதாயத்தில் சற்று மேம்பட்ட நிலையில் உள்ள பெண்கள் ஒருவகை. கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து தங்கள் குடும்பங்களில் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அன்றாடம் கூலிக்கு உழைத்து வரும் பெண்கள் மற்றொரு வகை. தற்போது இவர்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் இல்லை. ஆனால் முதல் வகைப் பெண்களின் நிலையில், கல்வி, அறிவு நிலையில் முன்னேற்றம் ஏற்பட்ட காரணத்தினால் அவர்கள் 'வாழ்வில் வரவேற்கத்தக்க பெறும் மாறுதல்கள் விரைவாக ஏற்பட்டு வருகின்றன. சுருக்கமாகச் சொல்லப்போனால் அவர்கள் தங்கள் நிலைகளிலிருந்து பெரிதும் மாறுபட்டுப் புதிய தொழில்களையும் சவால்களையும் கண்டு துவளாமல் எதிர் நீச்சல் போட்டு வெற்றி காண விரைகின்றனர். மருத்துவம், சட்டம், அறிவியல், பொறியியல், வங்கியியல் ஆகிய துறைகள் மட்டுமல்ல; விமான ஓட்டிகளாகவும் கூடத் துடிப்புடன் செயல்பட்டு வீரமங்கையராய்த் திகழ்ந்திருக்கின்றனர்.

தொழில் முனையும் இளைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும் என்பதில் மாறுபாடான கருத்துக்கு இடமே இல்லை. அதிலும் பெண்கள் புதிய தொழில் துவங்க முற்படும்போது அதில் தனிக்கவனமும் அக்கறையும் காட்ட வேண்டும். அதற்காகவே நமது அரசினரும் அரசின் நலத் திட்டங்களில் பயன் பெறுபவர்களில் குறைந்த பட்சம் முப்பது சதவீதத்தினர் பெண்களாக இருக்கவேண்டும் என்ற ஒரு குறியீட்டை நிர்ணயித்துள்ளனர்.

பெண்கள் சுயமாகத் தொழில் துவங்கிட வாய்ப்புகள் பெருகவேண்டும்; திறமையை ஊக்குவிக்கும் சூழ்நிலை அமையவேண்டும். இவை முழு அளவில் வழங்கப்பட்டால் அவர்தம் திறமைகள் வெளிப்பட்டுத் தொழில் பெருகி, உற்பத்திப் பெருக்கம் ஏற்படும். இல்லையேல் அவை இருட்டிலேயே மங்கிப்போகும். தொழில்கள் துவங்க தேவையான, வசதிகள், கச்சாப் பொருள்கள், விற்பனை வசதிகள், முதலியன தடையின்றிக் கிடைக்க அரசு ஆவன செய்து வருகின்றது. இந்தியத் தொழில்துறை வளர்ச்சி வங்கி (Industrial Development Bank Of India - IDBI) பெண்களுக்கெனச் சிறப்பான திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. தொழில் நுட்ப ஆலோசனை, இந்திய அரசின் சிறு தொழில் சேவை நிலையங்கள் (Small Industries Service Institute - SISI) போன்ற அமைப்புக்கள் மூலம் கிடைத்திட வழி செய்யப்பட்டுள்ளது. பல்வேறு மகளிர் நல அமைப்புகள், இத்தகைய உதவிகள் அனைத்தும் ஒருங்கிணைந்த நிலையில் எல்லா மகளிருக்கும் கிடைக்க பாடுபட்டு வருகின்றன. இதனால் பெண்கள் புதிய புதிய தொழில்களைத் துவங்கி நடத்திடும் முயற்சியில் பெரிய முன்னேற்றம் இன்று ஏற்பட்டுள்ளது.

வங்கிகளின் உதவிகள்: எந்தத் தொழில் துவங்குவதற்கும் நிதி ஒரு முக்கியமான இடுபொருள் ஆகும். மற்ற எல்லாவித வாய்ப்புகளும் வசதிகளும் இருந்தும் நிதிப் பற்றாக்குறையினால் தொழில் துவங்க முடியாத நிலையும் ஆங்காங்கே உள்ளது. அவர்களுடைய அத்தகைய நிதித் தேவைகளைப் பூர்த்தி

செய்து வருகின்றன வங்கிகள்; இன்று ஒரு வரப்பிரசாதமாக வங்கிகள் விளங்கிவருகின்றன. ஆடவருக்குச் சரிசமமாய்; தமது ஆற்றலை வெளிப்படுத்தி, பாரதி கண்ட புதுமைப் பெண்களாய் நிமிர்ந்து நன்னடையோடும் நேர் கொண்ட பார்வையோடும் நமது மகளிர் புதுயுகம் படைத்திட வங்கிகள் புதிய வேகத்துடன் பணியாற்றி வருகின்றன.

இந்தியன் வங்கியின் புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்ட (New Entrepreneur Development Agency) த்தின் கீழ் தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற பெண்கள் பயன் பெறலாம். இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சம், புதிதாகத் தொழில் துவங்க விரும்பினால், அதற்குண்டான முழு நிதித் தேவையும், அதாவது 100 சதவீதமும் கடனாக அளிக்கப்படும். தொழில் துவங்குவோர் தம்முடைய முதலீடாக எதுவும் கொண்டுவர வேண்டிய கட்டாயம் இல்லை. இந்தத் திட்டத்தின் மற்றைய முக்கிய அம்சங்களாவன:

1. தொழில் முனைவோர் பட்டத்தாரியாகவோ அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற தொழில் கல்வி (டிப்ளமோ) படித்தவராகவோ இருத்தல் வேண்டும்.

2. வயது 18 முதல் 25-க்குள் இருக்க வேண்டும்.

3. பல்கலைக் கழக வேலை வாய்ப்பு வழிகாட்டு நிறுவனம் (University Employment Guidance Bureau), சிறு தொழில் சேவை நிலையம் (Small Industries Service Institute), மாவட்டத் தொழில் மையம் (District Industries Centre), பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக், பிரபல பெரிய தொழிற்சாலைகள் போன்ற ஏதாவது ஒன்றினால் பரிந்துரை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. வங்கி மற்றும் பரிந்துரை செய்யும் தகுதிபெற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு நேர்முகத் தேர்வு மூலம் தகுதி வாய்ந்த தொழில் முனைவோரைத் தேர்ந்தெடுக்கும்.

5. சிறுதொழில் வட்டத்திற்குட்பட்ட எல்லாத் தொழில்களும் நிதி உதவிக்குத் தகுதி உடையன. தேவையான இயந்திரங்கள் வாங்குவது உட்பட தொழில் நடத்துவதற்கான நடைமுறைத் தேவைகளுக்கும் கடனுதவி தேவையைப் பொறுத்து அதிகப்பட்சம் ரூ.10 லட்சம் வரை வழங்கப்படும்.

6. தொழில் முனைவோரின் பங்கீடு (Margin) ஆரம்பத்தில் தேவையில்லை என்றாலும் தொழில் துவங்கிய மூன்று ஆண்டுகளில் தொழிலிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து நடைமுறைத் தேவைகளுக்காக வழங்கும் கடன் தொகையில் 20% பங்கீடு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

7. வங்கிக் கடனில் வாங்கப்படும் இயந்திரங்கள் மற்றும் இதரப் பொருள்கள் கடனுக்கு ஈடாகக் கருதப்படும. தேவைப்பட்டால் தொழில் முனைவோரின் பெற்றோர் அல்லது காப்பாளரின் ஈட்டுறுதியும் (Guarantee) பெறப்படும்.

8. தொழிலிலிருந்து கிடைக்கவிருக்கும் லாபத்தைப் பொறுத்து ஆரம்ப விடுமுறைக் காலம் (Holiday Period) முடிவு செய்யப்படும். அதனையும் சேர்த்து ஏழு ஆண்டுகளுக்குள் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

9. ரிசர்வ் வங்கியால் சிறுதொழில் கடன்களுக்கென வரையறுக்கப்படும் வட்டி வீதங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு வசூலிக்கப் படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த பெண்கள் பலரும் பயனடைந்து உள்ளனர். ○

வழிகாட்டி

திருமதி லெட்சுமி குட்டி என்பவர் எட்டு ஆண்டுகள் தோல் பொருள்கள் தயாரிப்பு நிறுவனத்தில் வேலை பார்த்த அநுபவம் பெற்றவர். 32 வயதானவர். சொந்தத் தொழில் துவங்கி வெற்றிகரமாக நடத்திடும் திறமையும், அறிவும் தொழில்நுட்பமும் தெரிந்திருந்தும் வாய்ப்புகள் இல்லாததால் பணிபுரிந்துவந்தார்.

இந்தியன் வங்கி பெண்களுடைய முன்னேற்றத்துக்காக எடுத்துவரும் முயற்சிகளைக் கேள்விப்பட்டு, இந்தியன் வங்கி 1988- இல் அளித்த தொழில் முனைவோர் பயிற்றுவிப்பு முகாமில் பங்கெடுத்துக் கொண்டார். ஆறுவாரப் பயிற்சி பெற்றார். பிறகு சுயமாகத் தொழில் துவங்கும் முயற்சியில் இறங்கினார். வங்கியின் 'புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ், தம் சொந்த முதலீடு ஏதும் இல்லாமல் முழு முதலீட்டையும் கடனாகப் பெற்று, அதாவது ரூபாய் நான்கு லட்சம் வரை நிதி உதவி பெற்று, 1989-ஆம் ஆண்டு ஜனவரியில் சென்னையில் தோல் பொருள் [illegible] தயாரிக்கும் முயற்சியில் இறங்கினார்.

தொழில் துவங்கிய மிகக் குறுகிய காலத்துக்குள் உள்நாட்டுச் சந்தைகளில் இவருடைய தயாரிப்புகளுக்கு நல்ல மார்க்கெட் ஏற்பட்டது. மேலும் அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் போன்றவற்றுக்கு ஏற்றுமதியும் செய்யத் துவங்கியுள்ளார். இவர்தம் தயாரிப்புகளான தோல் கைப் பைகள், பர்ஸ்கள், பெல்ட்கள் போன்ற பொருட்களுக்கும் மக்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறது. மாதம் முழுதும் பணி புரிந்து, குறிப்பிட்ட தொகையைச் சம்பளமாய் பெற்றுவந்த இந்தச் சகோதரி இன்று இந்தியன் வங்கியின் உதவியால் 28 பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதோடு நாட்டுக்கும் அந்நியச் செலாவணி ஈட்டித்தருகிறார். புதிய தொழில் துவங்கும் மகளிர்களுக்கு இவர் சிறந்த வழிகாட்டி.

உ
ஸ்ரீராமஜெயம்

முகூர்த்த பட்டு ஜவுளிகளுக்கு

வரதராஜ் சில்க்ஸ்

சிங்காரத்தோப்பு கார்னர்,
திருச்சி-8.

உ
ஸ்ரீராமஜெயம்

மகிழ்ச்சி பொங்கும் இந் நன்னாளில்
மனமுவந்த வாழ்த்துக்கள்

DHANALAKSHMI AGENCIES

STOCKISTS : HINDUSTAN LEVER LIMITED
No. 25-A. MUTHIAH MUDALI STREET,
OLD WASHERMENPET, MADRAS-600 021

PHONE : 552577

கனவும் நனவும்

மனிதர்கள் கனவு காண்பது பற்றிச் காவியங்களில் இலக்கிய ரசனையுடன் புலவர்கள் பாடியிருக்கிறார்கள். எதிர் காலத்தை உணர்த்தும் கனவுகளும் தொடர்பற்ற நிகழ்ச்சிகளைக் கொண்ட கனவுகளும் பேசப்படுகின்றன. சிலப் பதிகாரத்தில், கனாத்திறம் உரைத்த காதை என்றே தனியாக வருகிறது. பின்னால் மதுரையில் போய் நடக்கப் போவதைக் கனவில் கண்ட கண்ணகி, தன் தோழி தேவந்தியிடம் கூறுகிறாள்...! பெறுகேன் கடுக்கும்என் நெஞ்சம் கனவினால் என்கை, பிடித் தனன் போய் ஓர் பெரும்பதியுள் பட்டேம்...! என்று கூறுகிறாள்.

அசோகவனத்தில், அசோக மரத்தின் கிளையில் ஹநுமானைப் பார்த்ததும், 'குரங்கைப் போன்ற உருவமுடையவனைப் பார்த்தால் - கெட்ட சகுனம் ஆயிற்றே? ஒருவேளை கறை காண்கிறேனோ?' என்று எண்ணுகிறாள். சீதை உடனே, 'எனக்குள்ள துயரத்தில் தூக்கம் ஏது? தூங்கினால்தானே கனவு உண்டாகும்' என்றும் தெளிகிறாள்.

'ஸ்வப்னோபி நாயம் நஹிமேஸ்தி நித்ரா, சோகேன துக்கேன சபீடிதாயா!' என்கிறார் வால்மீகி. திரிஜடையும்; சீதைக்கு நல்ல காலம் வருவதாகக் கனாக் கண்டதாகக் கூறுகிறாள்.

சாதாரண மனிதர்களும் அன்றாடம் கனவு காண்கிறார்கள். கனவுகள் எல்லாம் இறந்த காலத்தையோ வருங் காலத்தையோ உரைக்கின்றனவா? 'கனவு நனவாயிற்று' என்று கூறுவது சாத்தியமா? கனவு காணாத வாழ்க்கை கானல் நீராகிவிடுமா?

உலகிலேயே நரம்பியல் மேதைகளில் ஒருவரான பேராசிரியர். டாக்டர் பி. ராமமூர்த்தி அவர்கள் - கனவுகளைப் பற்றி, மருத்துவ அறிவியல் பூர்வமான உண்மைகளைக் கூறுகிறார்.

புது டில்லியில் நடந்த உலக நரம்பியல் மேதைகள் மகாநாட்டின் தலைவர் டாக்டர் ராமமூர்த்தி இந்த மகா நாட்டில் எழுபத்தாறு நாடுகளிலிருந்து சுமார் இரண்டாயிரம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நரம்பியல் மருத்துவ, அறுவைச் சிகிச்சைத் துறையில் உலக அளவில் நிகழ்ந்துள்ள முன்னேற்றங்கள், கருத்துப் பரிமாற்றங்கள், தொழில் நுட்பங்கள் ஆகியவை பற்றி இந்த மகாநாட்டில் மருத்துவ அறிஞர்கள் கலந்துரையாடினார்கள். இந்த மகாநாட்டில் தலைமைப் பொறுப்பு வகிக்கும் நிலையிலும் - இந்தப் பேட்டிக் கட்டுரையை தீபாவளி மலருக்கு வழங்கியிருக்கிறார்.

கே: கனவு ஏற்படுவதற்கு என்ன காரணம்? இதனால் நன்மை உண்டா?

ப: நினைவு, தூக்கம், கனவு, இந்த மூன்றுக்கும் மூளையின் செயல் பாட்டுக்கும் தொடர்பு இருக்கிறது. மிகவும் அவசியமானதுங்கூட. மூளை எப்போதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆறு மாதக் கருவில் உருவாகத் தொடங்கும் மூளை ஒண்ணரை ஆண்டுகள் வரையிலுமே வளர்ச்சியடையும். அதாவது மூளையின் அளவைச் சொல்கிறேன். அதற்குப் பிறகு அளவில்(Size) வளர்ச்சி கிடையாது. மூளையின் திறன் - நாம் அதை உபயோகப்படுத்திக் கொள்ளும் முறையில் வளர்ந்து கொண்டே இருக்கும்.

நனைவு என்பது விழித்திருக்கும் நிலை. நம்முன் நடக்கும் எல்லா விவகாரங்களும் மனத்தில் பதிகின்ற நிலை. சில செயல்கள் அநுபவங்களாகவும் பதியும். இதைத்தான் ஜாக்ரத் நிலை என்று சம்ஸ்கிருதத்தில் சொல்கிறார்கள்.

இரண்டாவது தூக்கம் என்ற நிலை. இந்த நிலையிலும் மூளை வேலை செய்துகொண்டு இருக்கும். உடல் உறுப்புக்களில் சில ஓய்வெடுத்துக் கொண்டாலும் மூளையின் பணி தொடரும். மூளை வேலை செய்வதை நிறுத்தினால் சாவு என்று பொருள். (Death occurs when the Brain stops functioning) இந்தத் தூக்கத்தினால் உடல் உறுப்புக்களுக்கு, மனத்துக்கு ஓய்வு கிடைக்கிறது. சுசுப்தி என்பார்கள் இந்த நிலையை.

மூன்றாவது கனவு நிலை. ஸ்வப்ன அவஸ்தை என்று சம்ஸ்கிருதத்தில் சொல்வார்கள். ஒரு நாள், இருபத்து நாலு மணி நேரத்தில் ஒரு மனிதன் எட்டு மணி நேரம் தூங்குகிறான் என்றால், கனவும் தூக்கமும் மாறி மாறி வரும். ஒரு மனிதனுக்குத் தூக்கம் எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்குக் கனவும் அவசியம்.

கே: அப்படியானால் எல்லா மக்களும் நிதம் கனவு கண்டு கொண்டு தான் இருக்கிறார்களா?

ப: ஆமாம். உடல் ஆரோக்கியத்துக்குக் கனவு அவசியம். இதுபற்றி விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். மனிதர்கள் தூங்கும்போது, அவர்களது மூளை அலைகளைப் பதிவு செய்திருக்கிறார்கள். மூளை அலைகளைப் பதிவு செய்யும். (Electric Encephelograph) (E.E.G) என்ற கருவியை, தூங்கும் மனிதனின் தலையில் இணைத்துவிட்டார்கள். தூங்கும் எட்டு மணி நேரத்தில் (சுமாராகத்தான்) முதல் மூன்று மணிநேரம் ஆழ்ந்து துங்குவார்கள் (Deep sleep). அப்போது மூளை அலைகள் எல்லாம் நீண்ட அலை வரிசை உள்ள பெரிய அலைகளாகக் (Long wave length) காணப்படும்; ஒரு செகண்டுக்கு மூன்று அல்லது நான்கு அலைகள் என்ற அளவில் அதற்கு அப்பால் கனவு நிலை உண்டாகும். மூளை அலைகளில் பெருத்த மாறுதல் உண்டாவது பதிவாகும். தாறுமாறான அலைகளின (Irregular waves) தோற்றத்தைக் காணலாம். அதே சமயத்தில், கண் இமை மூடியிருந்தாலும், கண்கள் ஆடத் தொடங்கும். (Eye will more). அந்தச் சமயத்தில் அந்த மனிதனை எழுப்பிக் கேட்டால், கனவு காண்பதாகச் சொல்வான். இந்த நிலைக்கு Rapid Eye

Movement என்று பேர். (Rem sleep) ரெம் தூக்கம் என்பார்கள். கனவுத் தூக்கம் (Dream sleep) என்றும் சொல்லலாம். இந்த ரெம் தூக்கம் சுமார் இரண்டு மணி நேரம் நீடிக்கும். மீண்டும் ஒண்ணரை மணி நேரம் ஆழ்ந்த தூக்கம் (Deep sleep) உண்டாகும். அதற்குப் பிறகு கனவு தூக்கம் வரும். இதற்குப் பிறகு மனிதன் விழித்துக்கொள்ளுவான். (ஒரு மனிதன் எட்டு மணி நேரம் தூங்கினால் இந்தக் கணக்கு. கூடக் குறைவு தோன்றினால் இந்தக் காலக் கணக்கிலும் மாறுதல் ஏற்படலாம். இது பொதுவான இயற்கை நியதி.

கே: இப்படி மாறி மாறி ஏற்படுவதால் தூக்கம் கெட்டுவிடாதா?

ப: தூக்கம் கெடுமோ கெடாதோ! இந்த நியதி மாறினால் அந்த மனிதனுக்கு ஏதோ வியாதி என்று அர்த்தம். மூளை ஜுரம், மனநிலைப் பாதிப்பு, தூக்கமின்மை போன்ற பாதிப்பு என்று பொருள். இந்த நிலையையும் ஆராய்ச்சி மூலம் நிரூபித்திருக்கிறார்கள். மூளையலைப் பதிவு யந்திரத்தின் உதவியால், ஒரு மனிதனுக்கு ரெம் (REM) தூக்கம் உண்டாகும் நிலை தெரிந்ததும் எழுப்பி விட்டுவிட்டார்கள். அந்த நேரம் முடிந்து, ஆழ்ந்த தூக்கம் உண்டாகும் போது உறங்கவிட்டு, மீண்டும் ரெம் தூக்கம் வந்ததும் எழுப்பிவிட்டு விட்டார்கள். இப்படிப் பத்து நாட்கள் செய்தவுடன் அந்த ஆளின் குணமே மாறி விட்டது. எதற்கெடுத்தாலும் எரிந்து விழுவது, கோபம், பதற்றம், சிடுசிடுப்பு, - இந்த மனநிலைப் பாதிப்புகள் நடத்தையிலும் காணப்பட்டது. இதற்குப்பிறகு அந்த மனிதனின் ரெம் தூக்கத்தைக் கலைக்காமல் விட்டு விட்டார்கள். மீண்டும் ஒரு வாரம் சென்றதும், அவன் மனநிலையும் நடத்தையும் பழைய இயற்கை நிலைக்குத் திரும்பியது. இந்தச் சோதனையிலிருந்து கனவு - சகஜனமான மனித வாழ்க்கைக்கு அவசியம் என்பது தெளிவாகிறது. தேக ஆரோக்கியத்துக்கும் மூளை சரியாக இயங்குவதற்கும் கனவுகள் அவசியமானவை. கனவு காண்பது இயற்கை நியதி.

ஒரு ரூபாய் லாட்டரிச் சீட்டு வாங்கிவிட்டு லட்சக்கணக்கில் பணத்தை எதிர்பார்த்து கனவு காண்பது இந்த வகையில் சேராது. அது பகற் கனவாகும்.

கே: கனவில் காண்பது எல்லாம் நினைவில் வருமா?

ப: எல்லா நிகழ்ச்சிகளும் நினைவில் வரும் என்று சொல்ல முடியாது. முதல் கட்ட ரெம் தூக்கத்தில் ஏற்படும் கனவுகளில் பெரும்பாலும் நினைவில் வரவே வராது. அதுவும் இரண்டாவது கட்ட ரெம் தூக்கத்தில் காணும் கனவுகளில் சில நினைவில் தங்கலாம். 'அதனால் தான் விடியற்காலை கனவு கண்டேன், பலிக்கும்' என்று சிலர் சொல்கிறார்கள். மொத்தத்தில் எண்பது சதவீதக் கனவுகள் நினைவில் வருவதே இல்லை.



தூக்க நிலை கெட ஆரம்பிக்கும் போது - மனக் கவலை, உணவு சரியாகச் செரிக்காத நிலை, கொசுக்கடி, புதிய இடத்தில் படுத்தல் போன்ற காரணங்களினால் இந்த இயற்கை நியதி - ஆழ்ந்த தூக்கம். ரெம் தூக்கம் - ஆழ்ந்த தூக்கம் - ரெம் தூக்கம் - என்ற நியதி மாறுபடத் தொடங்குகிறது. ஆழ்ந்த தூக்கம் குறைந்து, கனவுத் தூக்க நேரம் அத்வமானாலும், 'தூக்கம் கெட்டுப் போச்சு - ஒரே கனவு' - என்று சொல்வார்கள்.

கே: சுற்றுச் சுழலும் தூக்கத்தைப் பாதிக்கலாம், அல்லவா?

ப: 'என்ன இன்னைக்குப் பாஸ் மூஞ்சில கடுகு வெடிக்குது? வீட்ல அம்மாவோட லடாயா இருக்குமோ?' என்று ஊழியர்கள் பேசிக் கொள்வார்கள், அல்லவா! அம்மாவோட லடாய் மட்டும் காரணமாக இருக்க வேண்டியதில்லை. ரெம் தூக்கம் அதிகமாகி ஆழ்ந்த தூக்க நேரம் குறைந்தாலும், பாஸ் மூஞ்சியில கடுகு மட்டும் இல்லே, வெந்தயமும் வெடித்துச் சிதறும். அதாவது மனநிலை பாதிக்கப்படும்போது தூக்க முறைமை பாதிக்கப்படுகிறது. உடனே டாக்டர்களிடம் போகிறார்கள்.

'தூக்கமே வரமாட்டேங்குது' என்று சொல்கிறார்கள். உடனே டாக்டர்களும் காரணத்தை அறிய விரும்பாமல், தூக்கத்தை வலிய வரவழைக்கும் மாத்திரைகளைக் கொடுக்கிறார்கள். மனநிலை சாந்தமாகி, தானாகத் தூக்கம் வரும்படி செய்வதுதான் நல்லது. தூக்கமின்மையின் காரணத்தைத் தீவிரமா ஆராய்ந்து மருந்து கொடுக்க வேண்டும். எப்போதும், தூக்க மாத்திரைகளைச் சிபாரிசு செய்வது நல்லதல்ல. அப்படி வலிய வரவழைக்கும் தூக்கத்தினால், இந்த இயற்கை நியதி (Rhythem) கெட்டுப் போகிறது. நாளடைவில் மூளை செயல்திறன் குறைகிறது. சோம்பேறித்தனம், சிடுசிடுப்பு, உழைப்பில் ஆர்வமின்மை உண்டாகின்றன. பாஸின் சிடுசிடுப்புக்கு, இந்தத் தூக்க மாத்திரைகளும் காரணமாக இருக்கலாம். நோயாளிகளுக்குத் தூக்கமாத்திரைகளைச் சிபாரிசு, செய்யும் போது டாக்டர்கள் மிகமிகக் கவனமாக அக்கறையுடன் செயற்படவேண்டும்.

கே: கனவு கண்டு கொண்டே இருக்க வேண்டுமா? டாக்டர் - அன்றாடம்

ப: நீங்கள் கனவு காணவேண்டாம். உடலியல் போக்கில் அப்படி அமைந்திருக்கிறது. இதைத் தவிர இன்னொரு ஊகம். இது விஞ்ஞான ரீதியாக இன்றும் நிரூபிக்கப்படவில்லை. ஆராய்ச்சிகள் நடக்கின்றன. ரெம் தூக்கத்தில் - கனவு நிலைத் தூக்கத்தில் மூளையிலிருந்து சில கழிவுப் பொருள்கள் (Chemical Waste) நீக்கப்படுகின்றன. அதனால் மூளை தடையில்லாமல் இயங்குவது சாத்தியமாகிறது. இந்தக் கனவு நிலைத் தூக்கத்தில் மூளை தன்னைத் தானே சுத்தம் செய்து கொள்கிறது எனலாம்.

இன்னொரு உபயோகம்: மனிதன் அன்றாட வாழ்வில் பல அநுபவங்களைப் பெறுகிறான். அவை மூளையில் பதிவாகின்றன. கோபம், பொறாமை, பேராசை, போன்ற தீக்குணங்கள் அந்த அநுபவங்களின் மூலம் விளையலாம். ஆனால் சூழ்நிலை காரணமாக, இந்த உணர்வுகள் மனத்தில் அமுக்கப்படுகின்றன. இந்த இரண்டு நிலை ரெம் தூக்கத்திலும் விரும்பத்தகாத இந்த உணர்வு

கள், மாறுபட்ட உருவத்தில் கனவாக வெளியேறும் சாத்தியக் கூறுகள் உள்ளன. அதனால்தான் மனிதன், மனம் கலங்காமல் (Sane) இருக்கிறான். உணர்வுகளுக்கு வடிகாலாக கனவுகள் விளங்குகின்றன.

கே: கனவுகள் பலிக்கும் என்பது உண்மையா?

ப: இதற்கு விஞ்ஞான ரீதியான சான்று இல்லை. சில மனிதர்களுக்கு உள்ளுணர்வு (intution) சக்தி அதிகம் இருக்கலாம். கனவு நிலையிலும் இந்த உள்ளுணர்வு சக்தி செயல்படும் நிலையில், அவர்கள் சொல்வது நடக்கலாம்; நடக்கும், நடக்கிறது என்று சொல்ல முடியாது. பெரும்பாலும் யூகந்தான். ஊகத்தின் அடிப்படையில் சொல்வது தவறு.

கே: வெளியில் சொல்ல முடியாத - விரும்பாத பாலின உணர்வுகள் கனவில் செயல்படுகின்றனவே...?

ப: (Rem sleep) கனவு தூக்க நிலையில் உடலியல் இயக்க மாறுபாடு அதிகம் உண்டாகிறது. இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு அழுத்தம் அதிகமாகும்; இதயத் துடிப்பு அதிகமாகும். 'அடடா, அந்த மனிதன் பேசிச் சிரிச்சிண்டே போய் இரவு படுக்கையில் படுத்தான் - ஆனால் விடியற்காலையிலே பார்த்தால் செத்துக் கிடக்கான்?... புண்ணியாத்மா என்கிறார்களே! இந்தச் சாவுக்கு, (Rem)தூக்க நிலையில் உண்டாகும் உடலியல் இயக்க மாறுபாடும் ஒரு காரணம். இதேபோல் ஆண் - பெண் பாலின உணர்வும் அதிகமாவது இயற்கைதான். உடல், உணர்ச்சி அளவில் ஆண் - பெண் இருவரும் பொதுவானதால், கனவில் காம உணர்ச்சியின் வெளிப்பாடும் இருவருக்கும் பொதுதான். ஏற்றத் தாழ்வு கிடையாது.

கே: பகல் தூக்கத்தில் கனவு நிலை உண்டா?

ப: சிலர் சாப்பிட்டதும், அரை மணி, ஒரு மணி என்று தூங்குவார்கள். ஒரு மணி என்றால் ஒரு மணி நேரம் தான். உடன் எழுந்துவிடுவார்கள். இத்தகையவர்களுக்குக் கனவு உண்டாகாது. அதிக நேரம் தூங்கினால் கனவுகள் வரலாம். ஆகாயக் கோட்டை கட்டிப் பகல் கனவாவது வேறு விஷயம். இலக்கியத்திலும் இப்படித்தான் கற்பனையில் கனவுகளைச் சித்திரித்திருப்பார்கள்.

கே: உணவுக்கும் கனவுக்கும் தொடர்பு உண்டா?

ப: ஓரளவு நிச்சயம் உண்டு. நம் சாஸ்திரங்கள், இரவு உணவை மிதமாக, எளிதில் செரிமானம் ஆகும் உணவாக உண்ணவேண்டும் என்று சொல்கின்றன. உண்ட உணவு எளிதில் செரிமானம் ஆகாவிட்டால், ரெம் தூக்கத்தைக் கெடுத்துவிடும். இரவில் ஆட்டை விழுங்கினால், கனவுத் தூக்கத்தில் ஆடு வயிற்றிலிருந்து 'ம்மே' என்று கத்திக்கொண்டு ஓடிவரும்; கொம்பால் முட்டி உணவுக் குழலை இரத்தக் களரியாக்கும் - பயப்படாதீர்கள் கனவில்தான்!

கே: தியானம் மேற்கொள்வதால் - மனம் அமைதியுற்று, கனவு தோன்றுவது குறையுமா?

ப: தியானம் செய்வது மன அமைதியைக் கொடுக்கும்; மூளையின் செயல் திறனை அதிகரிக்கும்; சுறுசுறுப்பும் விவேகமும் செயல்களில் செயற்படும். ஜாக்ரத், ஸ்வப்ன, சுஷுப்தி நிலைக்கு அடுத்த நாலாவது நிலை தூரீயம் எனப்படுவது. இந்த நிலையில் மனம் அடங்கும், அபரிமித சக்தி பிரவகிக்கும் என்கின்றன நமது யோக சாத்திரங்கள். விஞ்ஞான ரீதியா முழுதும் நிரூபிக்கப்படவில்லையானாலும், 'யோகாஸ் சித்தவ்ருத்தி நிரோத:' என்று பதஞ்சலி யோகச் சூத்திரம் கூறுகிறது. 'யோக சாதனை, அலைபாயும் மனத்தை ஒரு பொருளின்மேல் நிலைநிறுத்தும்' சக்தி கொண்டது, என்கிறார். இவையெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய் இல்லை; அநுபவ முதிர்ச்சியில் தோன்றிய அரிய உபதேசங்கள். இவற்றின் பயன்களைப் பயிற்சிகளின் மூலமே பெறமுடியும்.

பேட்டி: ராதேயன்.

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

எண்ணூர் பௌண்டரீஸ்-
எங்கும், எதிலும்
முத்திரை பதிக்கும்
தொழிற்திறன்.

மோட்டார் வாகன மற்றும்
தொழிற்துறைகளில்
வார்த்தெடுக்கப்பட்ட ஒரு திறமை.

எண்ணூர் பௌண்டரீஸ் லிமிடெட்,
சென்னை 600 057.

ஒரு சிறந்த எதிர்காலத்தின் வார்ப்பு.

Imageads 2922

ஒளியும் ஒலியும் இணையும் தீபாவளி நன்னாளில் உங்கள் இல்லங்களில் பொலிவும் புன்னகையும் பூத்துக் குலுங்கிட எங்களது இனிய நல்வாழ்த்துக்கள்!

நேருஜியின் நூற்றாண்டு நினைவு விழா இனிதே கொண்டாடப்படும் இச்சமயத்தில், அவரது கனவினை நினைவாக்கி, சிறப்பாகச் செயல்பட்டு, உங்களுக்கு சேவை புரிவதில் பெருமை கொள்கிறோம்.

சுரங்கத்தை அடிப்படையாக கொண்ட நாங்கள், மின்சக்தி, உரசக்தி மற்றும் எரிசக்தி உற்பத்தியில் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறோம். மேலும் லாபகரமாகச் செயல்படும் முதன்மையான பத்து இந்திய அரசு நிறுவனங்களில் ஒன்றாகவும் விளங்குகிறோம்.

உற்பத்தித்திறன்முதலான பல துறைகளில் சாதனைகள் புரிந்து வெற்றி நடை போடும் இத்தருணத்தில், 1986-87ம் ஆண்டுக்கான மத்திய அரசு நிறுவனங்களுக்கான சிறப்பு செயல்பாட்டு விருதையும், இவ்வருடம் ஜூலை 26 அன்று பாரதப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்களிடமிருந்து பெற்றதில் பெருமை கொள்கிறோம். அடுத்த 5 ஆண்டுகளில், மூன்றாவது சுரங்கமும், 1500 MW சக்தி வாய்ந்த மூன்றும் அனல்மின் நிலையமும் உருவாக்கத் திட்டங்கள் தீட்டியுள்ளோம்.

எழுச்சிமிக்க உழைப்பாளிகளின் துணையுடன் எதிர்காலத்தை மேன்மேலும் ஒளிமயமானதாக்க எங்கள் முயற்சிகளை என்றும் தொடருவோம்.

JAWAHARLAL NEHRU CENTENARY 1889 1989

मेरा भारत महान

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட்

(ஒரு இந்திய அரசு நிறுவனம்)

நெய்வேலி 607 801 ■ தமிழ்நாடு

admas-M-NLC 343

நடமாடும் கோயில்

ச. மோகன்

ஞானிகளும் பேரறிஞர்களும் உலகத்துக்கு விட்டுச் சென்றுள்ள சிந்தனைச் செல்வங்கள் காலம் கடந்து நிற்கின்றன. ஏனென்றால் அந்த உயர்ந்த சிந்தனையாளர்களின் சீரிய உரைகள் எக்காலத்துக்கும் எத்தகைய சூழ்நிலைக்கும் பொருந்தும் சிறப்பை உடையவை. அந்த தத்துவ ஞானிகளில் ஒருவர் திருமூலர். அவர் உலகனைத்துக்கும் பொருந்தும் ஒப்பற்ற உண்மைகளை அருளியுள்ளார். தம்மைக் குறித்து அவரே கூறுகிறார்:

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.''

இறைமை ஞானத்தை இனிய தமிழில் கூறுவதையே தம் இலட்சியமாகக் கொண்டு திகழ்ந்தார்.

மனித வாழ்வு மேம்பட, மனிதப் பண்பு உயர, மனித சிந்தனை மாண்புற, இறைவனைப் பற்றி, இல்வாழ்க்கையைப் பற்றி, அறநெறி பற்றி, அன்புவழி பற்றிச் சிறப்புமிக்கக் கருத்துக்களை அருளியிருக்கிறார், அழகான தமிழில்.

இறைவன் இன்ன உருவம் உடையவன். இன்ன சுவையுடையவன். இன்ன ஒலியுடையவன் என்று இவர் கூறவில்லை. இந்தத் தலத்திலே தான் இறைவன் உறைகின்றான் என்றும் கூறவில்லை. பின் எவ்வாறு இறைவன் உள்ளான்?

''உள்ளத்தின் உள்ளே உண்ரும் ஒருவனை!'' என்கிறார். நம் உள்ளத்தின் உணர்வாக இறைவன் உள்ளான் என்பது திருமூலர் வாக்கு.

உணர்வாகத்தான் நான் இறைவனைக் காணவேண்டும். புலன்களால் நான் அந்த ஆற்றலைக் காணுவது இயலாது; ஆதலால் ''உணர்ந்தேன் உலகினில் ஒன்பொருளானை'' என்கிறார் ஞானி. ''உணர்வுடையார்கள் உணர்ந்து கண்டாரே'' என்று பாடுகின்றார்.

எனவே, உள்ளத்தில் ஒளிரும் உணர்வு என்று சுடருக்கு உருவம் ஏதும் இல்லை. உள்ளமும், உணர்வு என்ற சோதியும் ஒன்றையொன்று நீங்காது இருந்தாலும் கூட, இறைவனின் உருவத்தை உள்ளம் அறிவதில்லை என்று தெளிவாக நமக்குப் போதிக்கிறார் திருமூலர்.

''உள்ளத்து ஒருவனை, உள்ளூறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே.''

இவ்வாறு, உருவம் இல்லாத இறைவன், உள்ளத்து உணர்வாக, உள்ளூறு சோதியாக ஒளிர்கின்றான் என்ற உண்மையினை ஒலிக்கின்றது திருமூலரின் திருமந்திரம். அந்த இறைவனை எங்கும் தேடி அலைய வேண்டாம். நம்மிலேயே உறைகின்றான். அதை அறிந்து போற்ற வேண்டும் என்பதை மிக அழகாகக் கூறுகிறார்:

''தேனுக்குள் இன்பம் சிவப்போ, கருப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியினீர்
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற்போல்
ஊனுக்குள் ஈசன் மறைந்திருந்தானே''

ஆம், தேன் சுவைக்கிறது. அதன் சுவையில் பாகுபாடு தெரிவதில்லை. அந்த அரும் சுவை தேனுக்குள் உறைந்திருப்பதை உணரமுடிகிறது. அதேபோன்று ஊனில் இறைவன் மறைந்திருப்பதை உணர்தல் வேண்டும்.

பொதுவாக நாம் அனைவருமே பிறர் நம்மை மதிக்க வேண்டும் என்றே விரும்புகிறோம். மற்றவருக்கு நம் குற்றமோ குறைபாடோ தெரிந்துவிடக்கூடாது என்றுதான் நினைக்கிறோம். எனவே, நாம் ஏதாவது ஒழுக்கம் தவறி நடப்பது என்றால் எவரும் அறியாது செய்துவிடவேண்டும் என்று முயற்சி செய்கிறோம். இது மனித இயல்பாகிறது.

'நம்மை எவரும் இப்பொழுது பார்க்கவில்லை. கள்ளமான செயலை இப்போது செய்தால் யாரும் அறியமாட்டார்கள். ஆதலால், பயமின்றி இந்தக் கள்ளச் செயலைப் புரிந்து விடுவோம் என்று துணிந்து விடுகிறோம். இந்நிலையில்தான், எத்தனையோ ஈனச்செயல்களும் இழுக்குச் செயல்களும் நடைபெறுகின்றன.'

இத்தகைய உள்ளத்தவர்களைத் திருமூலர் திறம்பட செம்மைப்படுத்துகிறார்:

''அப்பா! நீ இப்பொழுது கள்ளமான செயலைச் செய்யத் துணிகின்றாய். எந்தத் தைரியத்தால்? இதைப் பார்க்கும் கண்காணி எவரும் இல்லை என்ற தைரியத்தால் - ஆனால், எங்கும் நிறைந்துள்ள இறைவன் இல்லாத இடம் ஏது? அவன் எல்லா பொருள்களிலும் கலந்துறைகிறான். அவன் இல்லாத இடமே இல்லை. இப்படிக் கண்காணியாகக் கடவுள் இருக்கின்றார் என்ற உண்மையினை நீ உணர்ந்து கொண்டால், கள்ளமான செயல்களை நீ செய்வாயா? மாட்டாய். கடவுள் இவ்வாறு, எங்குமாய் எல்லாமாய் நின்று கண்காணிக்கிறார் என்பதை உணர்ந்தவர்கள் கள்ளச் செயல்களை ஒழித்து ஒழுக்கமாக வாழ்வார்கள்'' என்று பாடுகிறார்.

இன்னும் ஓர் அடி மேலே சென்று நமக்குச் சொல்லுகின்றார்:

கண்காணி இல்லென்று கள்ளம் பல செய்வார்
கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவு ஒழிந்தாரே.''

''நீ செய்யும் செயல்களை மட்டும் இறைவன் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்று எண்ணிவிடாதே. உள் செயலுக்கு மூலமாக உள்ளது சிந்தனை. எனவே, உன் கருத்துத் தூய்மையானதாக இருத்தல் வேண்டும். உன் கருத்தோ எவருடைய கண்ணுக்கும் தெரிவதில்லை. உன் எண்ணத்தை எவரும் அறிந்துகொள்ள முடியாது. ஆதலால், நீ தீமையான எண்ணங்களைத் துணிந்து எண்ணுகிறாய். எவரும் அறியார்கள் என்ற உறுதியால் சிந்தனையில் தூய எண்ணங்களை வளர்க்கிறாய். கருத்திலே கள்ளம் நிறைகின்றது. ஆனால், உன் உள்ளத்திலே ஒளிரும் இறைவன் கருத்திலும் இருக்கிறான். கண்காணியாகக் கருத்திலே இருக்கிறான். ஆதலால், கருத்திலே கள்ளத்தை இருத்தாதே'' என்கிறார் ஞானி.

''கண்காணியாகவே கையகத்தே எழும்
கண்காணி யாகக் கருத்துள் இருந்திடும்
கண்காணி யாகக் கலந்து வழிசெய்யும்
கண்காணி யாகிய காதலன் தானே!''

குற்றவாளிகளைத் தண்டிக்கும் அரசு அவர்கள் செயல்களைத்தான் கண்காணிக்கின்றது. செயல்களுக்கு மூலமான சிந்தனையைக் கண்காணிக்க முடிவதில்லை. கள்ளமான செயல்களைக் கண்காணிக்கும் காவல்துறையால் கள்ளமான கருத்துக்களைத் தடுக்க இயலுவதில்லை. ஆனால் கருத்திலே கடவுள் கலந்து உள்ளார் என்ற உண்மையினை நான் உணரும்பொழுது, நம் கருத்தையும் தூய்மையாக்கிக் கொள்ள முனைகிறோம் அல்லவா? ஆதலால்தான் ''கண்காணியாகக் கருத்தில் இருந்திடும் கடவுள்'' என்கிறார், ஞானி.

'மனத்துக்கண்மாசு இலன்ஆதல் அனைத்துஅறன்;
ஆகுல நீர பிற' என்பது வள்ளுவர் வாக்கு.

மனத்திலே மாசு இன்றி, கருத்திலே கள்ளம் இன்றி இருப்பதுதான் அறவாழ்வின் அடிப்படை. கருத்திலே கலந்திருக்கும் கண்காணியான இறைவன் கருத்தைத் தூய்மையாக்கி அறவாழ்வுக்கு அடிகோலி வைக்கிறான் என்பது திருமந்திரம்.

இறைமை ஞானம் இனிமையான நல்வாழ்வுக்கும், இசைந்த சமுதாய வாழ்வுக்கும் ஏற்றமிக்கது என்பதை நம்மில் பலர் உணர்வதில்லை. சமயம் என்றால் ஏதோ கடவுள் பெயரைக் கூறிகொண்டு எப்பணியிலும் ஈடுபடலாம் என்றே, பலரும் கருதுகின்றனர். வாழ்வில் பலரும் இவ்வாறு நடப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இது எவ்வளவு அறிவற்ற செயல் என்பதை திருமூலர் உணர்த்துகிறார்.

இவ்வாறு உயர்ந்த மெய்ஞ்ஞானம் ஒழுக்க வாழ்வுக்கு உகந்ததாகிறது; அறவாழ்வுக்கு அடிப்படையாகிறது என்பதைக் காட்டுகிறார் திருமூலர்.

திருமூலர், மக்களை 'நடமாடும் கோயில்கள்' என்று கூறுகின்றார். நாம் சென்று வழிபடும் கோவில்களின் திருவுருவங்கள் தாமே இருக்கின்றன; அவற்றைப் 'படமாடும் கோயில்கள்' என்று குறிப்பிடுகிறார்.

நடமாடும் கோயிலான மக்களுக்கு நான் ஈவது, படமாடும் கோயிலில் உள்ள பரமனுக்கு ஈவதுபோல் அவனை அடைந்து விடுகிறது. ஆனால், படமாடும் கோவிலில் பரமனுக்கு நாம் காணிக்கை செலுத்துவது, நடமாடும் கோவிலான மக்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்கிறார் திருமூலர்:

''படமாடும் கோவில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடும் கோவில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடும் கோவில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோவில் பகவற்கு தாமே''

இவ்வாறு 'மக்களுக்கு நாம் செய்யும் சேவை மகேசனுக்குச் செய்யும் சேவை' என்கிறார் திருமூலர். நாம் பிறருக்கு உதவும் பொழுது நம் உள்ளத்தில் ஊறும் உணர்வு அன்புணர்வு தானே!

எல்லா உயிர்களிலும் இறைமைதான் உயிருக்கு உயிராக உள்ளது என்றால், எல்லா உயிர்களும் இறைமையால் நம்மோடு இணைக்கப்பட்டுள்ளன என்பது தானே உண்மை!

இத்தகைய இறையுணர்வால் எழும் அன்புணர்வால் உலகமக்கள் அனைவரும் உறவுடையோர் என்ற உண்மையினை நாம் எல்லாரும் உணர்ந்துகொண்டால், நம்மிடையே சாதி, குலம் என்ற வேற்றுமை பாராட்டுவோமா? மாட்டோம். மக்கள் அனைவரும் மகேசனின் மக்கள் என்ற நிலையில், பிறப்பால் உயர்வு ஏது? தாழ்வு ஏது? அனைவரும் சமம் தானே!

எனவே தான்,

''பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்''

என்கிறார் திருவள்ளுவர்.

பிறப்பினால் மக்களிடையே ஏற்றத்தாழ்வு காட்டுவதற்கு இடமே இல்லை.

இதனை உலகுக்கு ஓதி முழக்கும் வகையில்,

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்''

என்று ஒலிக்கின்றது திருமந்திரம்.

அனைத்து உலகத்துக்கும் இறைவன் ஒருவன்தான். மானிட சாதி அனைத்தும் ஒரே குலம்தான் என்ற ஒப்பற்ற உண்மையினை, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஞானிகள் கூறியுள்ளனர். ஆனால், அந்த அறிவுரை நம் உள்ளத்தில் புகுந்து உறையவில்லை. எத்தனையோ காலம் கடந்தபின்னும் மாணிக்கவாசகர் கூறியுள்ளபடி,

''சாதி கலும் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்''

நிலையில்தான் நம் சமுதாயம் உள்ளது.

எவ்வளவு செல்வம் இருந்தாலும் [illegible] விலைக்கு வாங்க முடியாது. நீ தேடிவைத்த பொருளை [illegible] எடுத்துச் செல்வர். எவ்வாறு என்றால், மலர்களில், தேனீக்கள்



தேனின் மணத்தையும் சுவையையும் கண்டு எடுத்து வந்து ஒரு கொம்பில் கூடுகட்டிச் சேர்க்கின்றன; அப்போது உடல் வன்மை மிக்கவர் அத்தேனீக்களை ஓட்டி, கூட்டை உடைத்து அவை சேர்த்த தேனைக் கொள்வர். அந்த தேனீக்களின் நிலையைப் பாருங்கள். தாம் சேகரித்த தேனைக் காட்டிக் கொடுத்து, பின் தாமும் மடிகின்றன. இதுபோன்றதே மக்கள் பாடுபட்டுத் தேடிய பணமும்.

''ஈட்டிய தேன் பூ மணம் கண்டு, இரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரத்திட்ட, வலியோர்கொளக்
காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே''

அரும்பாடுபட்டுத் தேடிய செல்வத்தை நல்ல வழிகளில் நற்செயல்களுக்கு உரித்தாக்க வேண்டும், செலவிட வேண்டும் என்கிறார் இந்த மூதறிஞர். அதுவும் தன்னுடைய வாழ்நாளில் செலவு செய்தல் மிகவும் நலம். ஏனென்றால் செல்வந்தர் இறக்கும் தருவாயில், அவருடன் வாழ்ந்த மனைவியும், மக்களும், சுற்றமும், தனித்தனியே 'எனக்கு எவ்வளவு பணத்தை ஒதுக்கி வைத்துள்ளீர்?' என்றுதான் கேட்பார்கள்.

இப்படித் தன் வாழ்நாளிலேயே ஒவ்வொருவரும் அறம் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டு, மேலும் சொல்கிறார் திருமூலர். ' இந்த அறம் ஒன்றுதான் இறப்பையும் வென்று நிற்கும். ஏனென்றால் இந்த உடம்பு ஒரு குடில். தின்பண்டங் களைப் பெற்று அதை வளர்க்கின்றனர். மனிதன் மனைவி, மக்கள், சுற்றம் என்ற பலரை நேசிக்கிறான். அல்லும் பகலும் அவர்களுக்காக உழைத்துச் சம்பாதிக்கிறான். அவன் ஈட்டிய செல்வத்தை அவர்கள் அனுபவிக்கிறார்கள். ஒருநாள் மண்ணுடல் உறுதியாகக் கீழே வீழ்ந்து விடுகிறது.

அதில் குடியிருந்த உயிர் எங்கோ ஓடிச் செல்கிறது! பின்னர்? செல்வம் வீட்டுடன், மனைவி தெருவுடன், மக்கள் சுடுகாட்டுடன் நிற்பர். யாரும் உயிரைப் பின்பற்றிச் செல்ல முடியாது. அவரவர் செய்த அறச் செயல்களும், நற்காரியங் களும் உறுதுணையாய் அவரவர் பின் செல்லும்:

''பண்டம் பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்ட அப் பெண்டிரும் மக்களும் பின் செல்லார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்ல
மண்டி அவருடன் வழி நடவாதே''

எனவே அறம் செய்தல் சாலவும் நன்று. நன்று என்பதை இன்றே செய்க. ஏனெனில் அறம் செய்யா மக்களைப் பற்றிய நினைவு அவர் இறப்போடு மறைந்துவிடும் என்பதைத்தான் எவ்வளவு கருத்து ஆழத்தோடு, கண்ணீர் வரும்படி உறைக் கிறது திருமந்திரம்:

ஒருவன் இறந்தால் என்ன நடக்கும் என்பதை உணர்ந்தால், அறம் செய்யத் தவறமாட்டான். இறந்தவுடன் மனைவி மக்கள் கதறுவார்கள். ஊரெல்லாம் கண்ணீர் விடும். ஆனால் கதறலும் கண்ணீரும் விரைவில் கால வெள்ளத்தில் அழிந்து விடும். இறந்தவரைப் பற்றி நினைவே நீங்கிவிடும்.

''ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீங்கி, பிணமென்று பேரிட்டு
சூரையன் காட்டிக் கொண்டு போய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே''

சமுதாயம் உய்ய வழி சொன்ன திருமூலர், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படுவதால், நாம் ஒழுக்கத்தோடு வாழ் வதற்கு நல்ல வாழ்க்கை நடத்துவதற்கு நன்னெறிகள் பல கூறு கிறார். மனித வாழ்க்கையில் செய்ய வேண்டியது இது. தவிர்க்கப்பட வேண்டியவை இவை என்று கோடிட்டுக் காட்டுகிறார். வாழ்வில் பொறாமை கொண்டு பிறரை இழித் துப் பேசுதல் தீது. நன்னெறி கெடும் முறையில் வாழாதீர்கள். கொடியவனாகிப் பிறர் பொருளைக் கவராதீர்கள். சீரிய பண்பு கொண்ட சீலராக வாழுங்கள். அவ்வாறு நல்ல குணத் தினர் ஆகி நீங்கள் சிறப்புடன் உண்ணும்போது, ஓர் அகப்பை உணவையேனும் ஏழைகள் வந்து கேட்டபோது கொடுத்து உதவுங்கள்:

'யாராலும் ஆகக் கூடியது இறைவனை ஒரு பச்சிலையிட்டு வழிபடுதல். எல்லாராலும் செய்யக்கூடியது பசுவுக்கு ஒரு

வாய் உணவு கொடுத்தல். ஒரு கைப்பிடி உணவினை ஏழை கட்கு இட்டு உண்ணுதல் எவருக்கும் இயலும் செயல். அது போன்று, பிறரிடம் இனிய மொழிகளைப் பேசுதல் யாவர்க்கும் செய்யக் கூடிய செயல்.

''யாவர்க்கும் ஆம் இறைவற் கொரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாய் உறை
யாவர்க்கும் ஆம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கின்னுரை தானே.''

அறம் செய்வதற்கு எவ்வளவு எளிய உபாயத்தைக் காட்டு கிறார் பாருங்கள்!

இதைவிட மேலான நம் வாழ்வு சிறப்புற, நல் எண்ணங் கள் மலரும் சோலையாகிற வியப்புமிக்க, ஒரு தோட்டத்திற்கு அழைத்துச் செல்கிறார். அந்தத் தோட்டத்தில் வேடிக்கை, விநோதங்கள் நடப்பதைக் காட்டுகிறார். எப்படி என்றால் சுத்தரிக்காய் வித்திட்டாராம். விதைக்கு ஏற்பச் சுத்தரிக்காய் முளைக்காமல் பாகல்காய் முளைத்ததாம். மண் புழுதியைத் தோண்டியவுடன் பூசனி பூத்திருந்ததைக் கண்டாராம். இந்த மாறுபாடான நிகழ்ச்சிகளைப் பார்த்துத் தோட்டத்தில் குடி யிருந்த மக்கள், ''இது ஏதோ மந்திரம்! இந்த இடம் நமக்குத் தகாது'' என்று பயந்து ஓடிவிட்டார்களாம். அதற்குப் பின்னர் வாழைப்பழம் கனிந்து நின்றதாம்.

நமக்கே தோன்றுகிறது உண்மையாகவே இது வேடிக்கை யான ஒன்று, இதை எப்படி நம்ப முடியும்? என்ற ஐயப்பாடு எழுகின்றதல்லவா? இதோ பாடல்:

''வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசனி பூத்தது
தொழுது கொண் டோடினார் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே''

இதிலே மறைபொருளாகக் காணப்படுவது என்னவென் றால், 'வழுதலை' என்பது யோகப் பயிற்சியைக் குறிப்பிடு கின்றது. யோகத்தை மேற்கொண்டேன், பாகல் அதாவது மனத்திடம் அடைந்தது; வைராக்கியம் வளர்ந்தது - தத்துவங் களை, சீரிய நன்னெறிகளை ஆராயத் தொடங்கினேன். உண் மையான அன்புவெளிப்பட்டது. என் உள்ளத்தில் குடி கொண்டிருந்த கீழ்த்தரமான எண்ணங்கள், அழுக்காறு, அவா, வெகுளி போன்ற சிறுமைகள் ஓடிவிட்டன. உள்ளத் தூய்மை முழுதுமாகக் கனிந்து கவினுறச் செய்தது என்கிறது திருமந்திரம். இதுதானே நம் வாழ்க்கையின் சீரிய குறிக் கோளாக அமையவேண்டும்!

திருமூலர் தலைசிறந்த தத்துவ ஞானி என்பதற்கு இறுதி யாக ஒருபாடலைப் பார்ப்போம்.

''விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கி னுக்குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்குடையான் கழல் மேவலுமாமே''

சிறந்த தத்துவங்களை ஆய்ந்து அறிவு ஒளியைப் பெற வேண்டும். பெற்று உள்ளத்திலே அந்த ஒளியை ஏற்ற வேண் டும். ஒளியை ஏற்றுவது என்பது இறைவனை ஒருபோதும் மறவாதிருக்கவேண்டும். அதற்கு நெஞ்சம் எனும் விளக்கில் ஒளியைத் தூண்டிக்கொண்டே இருத்தல் வேண்டும், அதா வது விடாது அன்பு பூண்டு, இப்படி அன்பென்னும் வழி கொண்டோருக்கு ஒளிக்கு ஒளியான பேரின்ப, பெருவாழ்வு அமையும்.

விளக்கு என்னும் ஒரே வார்த்தையில் தான் எவ்வளவு அரும் பெரும் கருத்துக்களை புதைத்திருக்கிறார். புகழ்குன் றாத் திருமூலர். அப்பேரின்ப பெருவாழ்வு பெற திருமந்திரம் மிக்க சிறந்ததோர் மந்திரம் இல்லை. ○

வயிற்றுக்குக் காப்பில்லை!

விரிசல் நிதமும் மிகுகிறது - மனம்
வெந்தவர் கூட்டம் வளர்கிறது,
கரிசல் வயல்நிலம் வெடிப்பதுபோல் - நம்
கண்முன் மானிடம் பிளக்கிறது.

2

தலைமுறை தலைமுறை நூறாக - நம்
தந்தையர், தாயர், தாதையர்கள்
கலையெனப் பண்பெனக் கண்டதெலாம் - நம்
கண்முன் கரைந்து மறைகிறது.

3

கட்டிய கோபுரம் அதிர்கிறது - அதன்
கலசம் கவிந்து சரிகிறது:
ஒட்டிய வயிற்றின் பசிநெருப்பில் - நம்
உயர்வுடன் கனவும் வேகிறது.

4

மண்ணொடு விண்ணை இணைக்கின்றோம் - நாம்
மானிட சாதியைப் பிரிக்கின்றோம்:
எண்ணவும் எழுதவும் கூசுகிறேன் - நம்
இனத்தின் சிறுமையில் நாணுகிறேன்.

5

தீயின் கொழுந்து நீள்கிறது - அது
தீய்க்கும் பரப்பும் விரிகிறது:
வாயிற் குதவுகள் காப்பதிலை - எழும்
மானிடச் சீற்றம் தோற்பதிலை!

குலோத்துங்கன்



''..காலேஜில் படித்தாலே நாணம் என்பது போய்விடும் போல் இருக்கிறது. அத்தனை பேருக்கு நடுவில் நீ என்னைப் பார்த்துச் சிரித்தாயே; அது நியாயமா? மற்றவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்? கல்யாணத்துக்கு இருக்கும் பெண்......''

மேலே கமலா படிக்கவில்லை. முன்பே இரண்டு மூன்று முறை கடிதம் முழுவதையும் படித்து விட்டாள். இன்னும் எத்தனை தடவை படிக்கப் போகிறாளோ தெரியாது. அவன் தேனில் தோய்த்து அந்தக் கடிதத்தை எழுதியிருந்தானா, என்ன!

அவள் இதழின் ஓரம் விண்டது. புன்னகை மெல்லத் தலை காட்டியது. 'அது நியாயமா?' என்ற கேள்வியிலே அவள் கண் மறுபடியும் மறுபடியும் இடறியது. கண் இடறியதும் வாய் புன்முறுவல் பூத்தது. அவள் உள்ளத்தில் பழைய காட்சி விரிந்தது.

''அவள் நன்றாகப் பிடில் வாசிப்பாள்'' என்றார் கமலாவின் அப்பா கோபாலையர்.

''காலேஜில் படிக்கிற பெண்களுக்குச் சங்கீதம் கற்றுக்கொள்ளக்கூட நேரம் கிடைக்கிறதா?'' என்று கேட்டார் வந்த பெரியவர்.

கமலாவைப் பார்ப்பதற்காக அவர்கள் வந்திருக்கிறார்கள். பதினாறு வயசு கடந்து பதினேழாம் வயசில் அவள் நடமாடிக் கொண்டிருந்தாள். இண்டர் பரீட்சை எழுதியிருக்கிறாள். நிச்சயமாக முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுவாள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. அவளுக்கு என்னவோ மேலே படிக்க வேண்டுமென்று ஆசை. அவள் தகப்பனாருக்கோ நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்து விட வேண்டுமென்ற எண்ணம்.

நல்ல இடமாக ஒன்று தட்டுப்பட்டது. பையன் உதவி இஞ்சினீயராக இருக்கிறான். இருபத்தைந்து வயசாகிறது. சொத்தும் இருக்கிறது. ஜாதகம் பொருந்தியிருக்கிறது. மனிதர்களும் நல்ல குடும்பம் என்று தோன்றுகிறது.

..அன்று அவர்கள் பெண் பார்க்க வந்திருந்தார்கள். பையன் பார்ப்பதற்கு லட்சணமாகவே இருந்தான். முகத்தில் சுறு சுறுப்பின் ஒளி தவழ்ந்தது. அவன் கண்கள் சதா துறு துறுவென்று அலைந்து கொண்டே இருந்தன. அந்தக் கூடம் முழுவதையும் சில கணங்களில் பார்த்து விட்டன.

''முதலில் காபி கொண்டு வந்து வைக்கச் சொல். பிறகு பிடில் வாசிக்கலாம்'' என்று கோபாலையர் சொன்னார்.

அவள் இரண்டு கைகளிலும் இரண்டு வெள்ளித் தட்டில் இனிப்பு சிற்றுண்டியைக் கொண்டு வந்து வைத்தாள். மூன்றாவது மனிதர் ஒருவரும் இருந்தமையால் மற்றொரு தட்டையும் வாங்கிக் கொண்டு வந்து வைத்தாள். அப்போது தான் அந்த 'நியாயம் இல்லாத காரியம்' நடந்தது.

அவள் அதிகமாக நாணிக் கோணிக் கொண்டு நடக்கவில்லை, காலேஜில் பழகினவள் ஆகையால். ஆனால் வணக்கமின்றியும் நடக்கவில்லை. அவள் நடையில் கம்பீரம் இருந்தது; விநயமும் இருந்தது. கண்ணால் அந்தப் பையனை நன்றாகப் பார்த்தாள்; ஆனால் அவள் பார்த்ததை யாரும் கவனிக்கவில்லை.

இப்போது, அதாவது அங்கே வந்திருந்த மூன்றாவது பேர்வழியிடம் சிற்றுண்டித் தட்டை வைத்த போது, அவள் நிமிர்ந்தே பார்த்துவிட்டாள். ஒரு கணம் பிரமிப்புத் தட்டியது. அடுத்த கணம் அவள் முகத்தை முறுவல் ஒளி செய்தது. அவனும் அவள் முகத்தைப் பார்த்தான்; நகை பூத்தான்.

அவள் சரசரவென்று உள்ளே போய்விட்டாள். அப்புறம் பிடிலை வைத்துக் கொண்டு ஏதோ பாடினாள். மறுபடியும் எல்லோருக்கும் நமஸ்காரம் செய்தாள். அந்த மூன்றாவது பேர்வழியைப் பார்த்துப் புன்னகை செய்தது முதல் அவள் நிலை மாறிவிட்டது. கிராமத்து வயலில் வரப்போரத்தில் பழக்கம் இல்லாதவர் நடப்பது போல ஒவ்வொன்றையும் தட்டுத் தடுமாறிக் கொண்டே செய்தாள்.

வந்தவர்கள் விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள்; போய்த் தகவல் தெரிவிப்பதாகச் சொல்லிப் போனார்கள்.

இங்கே கமலாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை, ''ஏன் அப்பா, மறுபடியும் இரண்டு வருஷம் காலேஜில் படித்தால் என்ன?'' என்று கேட்கத் தொடங்கினாள்.

''பிள்ளையாண்டானை உனக்குப் பிடிக்க வில்லையா?'' என்று அவர் நேர்முகமாகவே கேட்டுவிட்டார். அவள் என்ன சொல்வாள்?

''அதற்கு இல்லை. என் மனசு சரியாகவே இல்லை. கல்யாணம் பண்ணிக்கொண்டவுடன் உங்களையெல்லாம் பிரிந்து போக வேண்டுமே! எப்படியும் அது இருக்கவே இருக்கிறது. இன்னும் இரண்டு வருஷங்கள்...''

''போடி அசடு!'' என்று அவள் பேச்சை நிறுத்தினார் கோபாலையர்.

இரண்டு நாள் கழித்து அவர்களிடமிருந்து சமாசாரம் வந்தது. பையனுடைய தகப்பனாரே வந்தார். ''ஜாதகத்தை எங்கள் குடும்பத்து ஜோசியரிடம் காட்டினதில் ஏதோ ஒரு பொருத்தம் இல்லையென்று சொன்னார். இவ்வளவு தூரம் நம்பிக்கை கொடுத்து விட்டு மாற்றுவதா என்று எனக்கே வருத்தமாக இருந்தது. ஆனால் வேறு ஏற்பாடு ஒன்று செய்யலாமென்று நினைக்கிறேன். உங்களுக்குச் சம்மதமானால் சொல்லுங்கள்'' என்றார் அந்தப் பெரியவர்.



''என்ன?'' என்று நிதானமாகக் கேட்டார் கோபாலையர்.

''அன்றைக்கு எங்களுடன் வேறொரு பிள்ளை யாண்டான் வந்தானே, அவன் ஐ.ஏ.எஸ். பரீட்சைக்குப் போயிருக்கிறான். இப்போது ஏதோ வேலையில் இருக்கிறான். என் தங்கை பிள்ளை. நல்ல கெட்டிக்காரன். நானே அவன் ஜாதகத்தை வாங்கி உங்கள் குட்டியின் ஜாதகத்தோடு வைத்துப் பார்க்கச் சொன்னேன். மிகவும் உத்தமமாகப் பொருந்தியிருக்கிறதாம். இந்த மாதிரி இணைவது மிகவும் அருமை என்று ஜோசியர் சொன்னார்.''

கோபாலையருக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. தம் பெண் விஷயத்தில் அவருக்கு உள்ள சிரத்தையை நினைத்துதான் ஆச்சரியப் பட்டார்.

''அப்படியா! கடவுளுடைய சித்தம் அப்படி இருந்தால் அப்படியே நடக்கட்டும். அந்தப் பிள்ளையும் அவனைச் சேர்ந்தவர்களும் என் பெண்ணைப் பார்க்க வேண்டாமோ?''

''அன்றைக்கே அந்தப் பையன் பார்த்து விட்டான்; நாங்களும் பார்த்தோம். அதுவே போதும். பெண்ணைப் பற்றி எல்லோருக்கும் திருப்திதான்'' என்று அவர் சொன்னார்.

மேலே ஏற்பாடுகள் நடந்தன. கமலா இதற்கு ஆட்சேபம் சொல்லவில்லை. கல்யாணம் சுபமாக நிறைவேறியது.

இந்தக் காட்சிகளெல்லாம் கமலாவின் மனக் கண் முன்னே ஓடின.

மறுபடியும் அவள் இதழ்க் கோணத்திலே ஒரு புன்னகை அரும்பியது. கடிதத்தின் மேல் மீண்டும் கண் சென்றது.

'...**கா**த்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனான் என்ற கதையாகிவிட்டது நம்முடைய விஷயம். திடீரென்று என்னுடைய மாமா உன் தகப்பனாரிடம் வந்து எனக்கு உன்னைக் கேட்டது ஏன் என்று உங்களுக்குத் தெரியாது. அவர், ஜாதகம் பொருந்தவில்லை என்று சாக்குச் சொன்னாராம். அதெல்லாம் சுத்தப் பொய். காரணம் சொல்கிறேன்.

'நான் என் ஆபீஸ் வேலையாகச் சென்னைக்கு வந்திருந்தேன். அன்று உன்னைப் பார்ப்பதற்காக என் மாமா பிள்ளை புறப்படுவதாக ஏற்பாடு செய்திருந்தார்கள். மாமா, மாமி, ரகு மூவரும் புறப்படத் தயாரானார்கள். அம்மாமி ஒன்று சொன்னாள். ''மூன்று பேராகப் போவானேன்? சீனுவும் வரட்டுமே! நமக்குக் கொடுக்கிற காபியை அவனுக்கும் கொடுக்கச் சொன்னால் போகிறது'' என்றாள். ஆகவே நானும் புறப்பட்டு வந்தேன். நான் உன்னை அங்கே பார்ப்பேனென்று கனவிலும் நினைக்கவில்லை.

'நீ என்னைக் கண்டதும் பிரமித்தது போல நானும் பிரமித்துப் போனேன். என் மாமா பிள்ளை மகா கெட்டிக்காரன். நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதையும் நம்மை அறியாமல் சிரித்துக் கொண்டதையும் அவன் கவனித்துவிட்டான்.

'வீட்டுக்கு வந்தான். அவன் தனியே வந்து என்னைக் கண்டான்.

''இதோ பார் சீனு; நீ அவளை எங்கே எப்படிச் சந்தித்தாய் என்றெல்லாம் நான் கேட்டுக் கொண்டிருக்கப் போவதில்லை. அவள் உனக்காகவே பிறந்தவள் என்று எனக்குத் தோன்றி விட்டது. ஆகவே, அவள் கழுத்தில் நீ தாலி கட்டும்படி ஏற்பாடு செய்யப் போகிறேன்'' என்று சொல்லி என் முதுகைத் தட்டினான். தன் தகப்பனாரிடம் என்ன சொன்னானோ, ஏது சொன்னானோ; அந்தப் பெரியவரையே நேரில் அனுப்பி கதா நாயகனை மாற்றி விட ஏற்பாடு செய்தான். கல்யாணம் ஆனபிறகு என் அம்மாஞ்சியிடம் நான் சொன்ன சூத்திரத்திற்கு விளக்கம் கூறினேன். ''அவளைத் தெரியும்; ஆனால் தெரியாது'' என்று சொன்னேனே, அதை விளக்கினேன்...'

மறுபடியும் அவள் கண் மேலே படிக்காமல் நின்றது. பழைய நினைவு மறுபடியும் வந்தது.

அவள் தகப்பனார் உள்ளே வந்தார்.

''கமலா, பிடிவாதம் பிடிக்காதே. அந்தப் பெரியவர் இப்போது தான் வந்து போனார். அவருடைய பையனுக்கும் உனக்கும் ஜாதகப் பொருத்தம் இல்லையாம். ஆனால் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல ஒரு காரியம் நடந்திருக்கிறது. நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டு விட்டு விஷயத்தைச் சொன்னார்.

''ஐ.ஏ.எஸ்.ஸுக்குப் போயிருக்கிறாரா?'' என்று கமலா கேட்டாள்.

தம் பெண்ணின் மனசிலே கொஞ்சம் சபலம் தட்டுவதாக எண்ணிக் கொண்டார் அவர். கமலாவோ இந்த உலகத்திலேயே இல்லை. அவள் சொர்க்க லோகத்தில் நடைபோட்டுக் கொண்டிருந்தாள்.

''ஆமாம்; இப்போதும் ஒரு வேலையில் இருக்கிறானாம். கெட்டிக்காரப் பையனாம்''.

''அவர் கண்ணிலே இருந்த ஒளியே அவர் எத்தனை அறிவாளி என்பதைக் காட்டுகிறது'' — கமலா தான் இப்படிச் சொன்னாள்; உடனே நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''அவனையும் பார்த்தாயா? சரி; ஈசுவர சங்கற்பம் அப்படித்தான் எல்லாவற்றையும் பொருத்தமாகக் கொண்டு வந்துவிடும்'' என்று சொல்லி விட்டு அவர் கமலாவின் பதிலை எதிர்பார்க்காமல் மேற்கொண்டு பேச்சை நடத்தப் போய்விட்டார். கமலாவின் உள்ளம் அவருக்குத் தெரிந்துவிட்ட பிறகு அவர் தாமதம் செய்வாரா?

மீண்டும் புறக் கண்களுக்கு உணர்வு வந்தது. கையில் உள்ள கடிதத்தைப் பார்த்தாள்.

'...... இறைவன் திருவருளாலும் உன் அதிருஷ்டத்தாலும் எனக்குப் பரீட்சையில் ஐந்தாவது இடம் கிடைத்தது போல விரைவிலே நல்ல வேலையும் கிடைக்கும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். உன்னை அழைத்து வர ஏற்பாடு செய்ய வேண்டும். நல்ல நாள் பார்த்து அழைத்து வரலாம் என்று அம்மா சொல்கிறாள். அந்த நல்ல நாளை நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீ எனக்குத் தரவேண்டிய பழைய பாக்கியை நினைவில் வைத்துக் கொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன். நீ இங்கே வரும்போது வட்டியும் முதலுமாக அதைச் செலுத்துவாயென்று நம்புகிறேன்...'

இந்தத் தடவை 'வட்டியும் முதலும்' என்பதில் அவள் கண்கள் நிலைத்து நிற்கின்றன. அதை மீண்டும் மீண்டும் படித்தாள். அவள் உடம்பு புல்லரித்தது. அவள் வாயிதழ் மலர்ந்து முல்லை மென்னகையைப் புறப்பட விட்டது. மறுபடியும் சிந்தனை யுலகப் பிரயாணம் தொடங்கியது.

அவள் காலேஜில் இண்டர் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த வருஷம். மேரி ராணி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். கல்லூரிக்குப் போய்விட்டு வழக்கம் போல் வீட்டுக்கு வருகிறவள் அன்று ஓர் ஆசிரியையோடு நெடுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டாள். மற்றப் பெண்களெல்லாம் போய்விட்டார்கள். ஆசிரியையுடன் பேசி விட்டுப் புறப்பட்டாள். வழக்கமாக உடன் வருகிற பெண்கள் யாரும் இல்லை. தனியே காலேஜ் வாசலில் வந்து நின்றாள். 21-பி. பஸ்ஸை எதிர் நோக்கி நின்று கொண்டிருந்தாள். ஐந்து நிமிஷத்தில் பஸ் வந்தது. ஏறி நின்றாள். பஸ் போய்க் கொண்டிருந்தது. கண்டக்டர் டிக்கெட் கொடுத்துக் கொண்டு வந்தான். கமலாவிடம் 'டிக்கட்' என்று கேட்டபோது அவள் தான் போகும் இடத்தைச் சொல்லி ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினாள். கண்டக்டர், ''நான் அப்போதிலிருந்து கத்திக் கொண்டு வருகிறேன், சில்லறையில்லை என்று. நீங்கள் இதை நீட்டுகிறீங்களே'' என்று சள்ளென்று விழுந்தான். அவளுக்கு அவன் சொன்னது தெரியாது என்பதையெல்லாம் நினைக்க அவனுக்கு அவகாசம் ஏது? அவனுடைய அலுப்பு அவனுக்குத் தெரியும்.

கமலாவுக்கு உடம்பு படபடவென்று வந்தது. கண்டக்டர் வெறி பிடித்தவனைப் போலப் பேசுவதை அவள் சகிக்கவில்லை. அவள் என்ன செய்ய

முடியும்? உடம்பெல்லாம் கூசியது. கூனிக் குறுகி நின்றாள். 'இறங்குவதா, வேண்டாமா?' என்ற யோசனையில் ஈடுபட்டாள். அதற்கு நேரம் ஏது?

''என்னம்மா, சும்மா நிற்கிறாய்?'' என்று உறுமினான் கண்டக்டர்.

அவள் கண்களில் நீர் புறப்பட்டது. அதைக் கையால் மறைத்துக் கொண்டாள்.

அப்போதுதான் அந்தக் குரல் கேட்டது. ''ஏன் ஐயா, சும்மா கத்துகிறாய்? எத்தனை ஐயா, தரவேணும்?'' என்று மிடுக்கான தொனியோடு வந்தது கேள்வி.

''இரண்டணாக் காசுங்க'' என்று ஏளனத் தொனியோடு பேசினான் கண்டக்டர்.

''இதுதானே? இந்தா, வாங்கிக் கொள்'' என்று அவன் நீட்டினான். கண்டக்டர் வாய் அதோடு அடைத்து விட்டது.

கமலா மெல்லத் தலையெடுத்துப் பார்த்தாள். இருபது இருபத்திரண்டு வயதுள்ள ஆணழகன் ஒருவன் அவளைப் பார்த்தபடியே அமர்ந்திருப்பதைக் கண்டாள். தலையைச் சிறிது தாழ்த்தி, ''தாங்க்ஸ்'' என்று சொன்னபடியே அவனிடம் ஐந்து ரூபாயை நீட்டினாள்.

''பரவாயில்லை. இரண்டணா ஒரு பிரமாதம் இல்லை'' என்றான் இளைஞன்.

''இல்லை, இல்லை. எனக்குச் சில்லறை வேண்டும்'' என்றாள் அவள்.

''என்னிடமும் சில்லறை இல்லையே! இரண்டணாக் கொடுத்து நான் ஏழையாகப் போவதில்லை'' என்றான் அவன்.

என்ன செய்கிறது என்று புரியாமலே அவள் நின்று கொண்டிருந்தாள். ''உட்காருங்கள், இங்கே'' என்று அந்த இளைஞன் சொன்னான். அவள் உட்காரவில்லை. அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது. அங்கே நிற்பதே மிகவும் தர்மசங்கடமாக இருந்தது. நடுவிலே இறங்கி விடலாமா என்றுகூடத் தோன்றியது. அதற்குள் அவன் நடுவில் ஓரிடத்தில் இறங்கினான். அவனுக்குத் தன் நன்றியை நன்றாகத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு இருந்தது. எப்படித் தெரிவிப்பது? அவன் பெயர்கூட அவளுக்குத் தெரியாதே!

அவன் போய்விட்டான். அவன் போவதை அவள் பார்த்தாள். சில கணமே அப்படிப் பார்க்க முடிந்தது. அதற்குள் அவன் நடையிலே உள்ள அழகை அவள் மனக் கண்ணிலே படம் பிடித்துக் கொண்டாள். பஸ் புறப்பட்டு விட்டது. அவளும் உட்கார்ந்து கொண்டாள்.

இப்போது அவள் தவியாகத் தவித்தாள். 'அவரிடம் விலாசத்தைக் கேட்டிருக்கலாம். பிறகு அப்பாவிடம் சொல்லி ஒரு கடிதம் எழுதச் சொல்லியிருக்கலாம். அவர் யாரோ? என்ன பண்ணுகிறாரோ? இந்த ஜன சமுத்திரத்தில் மறுபடியும் நாம் அவரைச் சந்திக்க முடியுமா? என்ன?' -- அவள் சிந்தனை ஓடிக் கொண்டே இருந்தது. பஸ் நிற்கும் இடத்தில் வந்து நின்றது. அவள் சிந்தனை இன்னும் கலையவில்லை. ''ஏன் அம்மா, இறங்கவில்லையா?'' என்று கண்டக்டர் கேட்டபோதுதான் அவள் இந்த உலகத்துக்கு வந்தாள். ''அந்த மனிதர் உங்களுக்குச் சொந்தமோ?'' என்று கிண்டலாக வேறு கேட்டு வைத்தான் கண்டக்டர்.

கண்டக்டர் மேல் கண்களால் அனலைக் கக்கிவிட்டு அவள் சரசரவென்று இறங்கினாள்.

வீட்டுக்கு வந்தது முதல் அந்த இளைஞனுடைய ஞாபகந்தான். 'நம் நன்றியைச் சரியாகத் தெரிவிக்க முடியவில்லையே!' என்ற எண்ணத்துக்கு மேலாக ஏதோ ஒன்று அவள் இருதயத்தினூடே குறுகுறுத்தது.

அன்று முதல் அவள் அந்தப் பஸ்ஸிலே ஒவ்வொரு நாளும் கவனித்துப் பார்த்தாள். அவனைக் காணலாமென்ற ஆசைதான். உலக முழுவதுமே வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தது. ஆனால் அவன் மட்டும் வரவில்லை. 'அட பைத்தியமே! யாரோ ஒருவனைச் சில நிமிஷம் பார்த்துவிட்டு ஏங்குகிறாயே!'' என்று அவள் நெஞ்சு அவளைப் பரிகசித்தது. ஆனாலும் அவளுக்கு ஆறுதல் பிறக்கவில்லை.

காலேஜ் படிப்பு நின்றது. பஸ் போக்குவரத்தும் ஒழிந்தது. 'இனி அவரை எங்கே காணப் போகிறோம்! நாம் நன்றியறிவில்லாத ஜன்மம் ஆகிவிட்டோம்' என்று நிச்சயம் செய்து கொண்டாள்.

மீண்டும் கடிதத்துக்குத் தன் கருத்தையும் கண்ணையும் திருப்பினாள்.

'...... நினைக்க நினைக்க வேடிக்கையாக இருக்கிறது. நான் படிப்பை முடித்து விட்டு ஐ.ஏ.எஸ். எழுத வேண்டும்மென்ற எண்ணத்தோடு அது சம்பந்தமான விவரங்களை விசாரிக்க வந்திருந்தேன். திருச்சிராப்பள்ளியிலே இத்தனை கூட்டம் பஸ்ஸில் இல்லை. சென்னைப் பஸ் கூட்டம் மகா மோசம். கண்டக்டர்களுக்கு மட்டு மரியாதையே இல்லை. அன்று நான் ம்யிலாப்பூர் போய்விட்டு வந்து கொண்டிருந்தேன். அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. உன்னுடைய சங்கடமான நிலையைக் கண்டபோது எனக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது: அத்தனை வீரர்கள் அந்தப் பஸ்ஸில் அமர்ந்திருந்தார்களே; ஒருவராவது உனக்கு உதவி செய்ய முன் வரவில்லையே! என்ன பட்டணம்? இருதயம் அற்ற பட்டணம்!

'நான் உன்னை நன்றாகக் கவனித்தேன். டிக்கட் வாங்கின பிறகு நீ படும் அவஸ்தையையும் கண்டேன். நீ யார், உன் விலாசம் எது என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டேன். பட்டணம் போக்கிரிகள் எதாவது கதை கட்டிவிடுவார்களே. ஆதாலால் சும்மா இருந்தேன்.

'அது முதல் என் மனத்தில் நீ குடிகொண்டு விட்டாய். உன்னை நினைப்பது தர்மமல்ல, சாத்தியமல்ல, அறிவல்ல என்றெல்லாம் எனக்குத் தெரியும். ஆனாலும் ஏதோ ஒன்று என் மனசிலே அப்படி ஓர் உணர்ச்சியை உண்டாக்கி விட்டது. நான் கனவிலும் நனவிலும் உன்னை எண்ணினேன். அதைப் பற்றி ஒரு காவியமே எழுதிவிடலாம்.

'இந்த நிலையிலிருந்த நான் அன்று எதிர்பாராமல் உன்னைக் கண்டபோது மின்சார அதிர்ச்சிக்கு உட்பட்டாற் போலத்தான் இருந்தது. மீண்டும் காண முடிந்ததே என்ற சந்தோஷம் வேறு. நீ மாத்திரம் சிரிக்கவில்லை. நானுந்தான் சிரித்தேன். அதை இப்போது மறைக்க வேண்டிய அவசியம் இல்லையே!...'

அவள் முத்துப் பற்கள் நிலவொளி வீசின.

உள்ளே தனியே கமலாவும் சீனுவும் இருந்தார்கள். வெற்றிலை பாக்குப் பழத்துடன் இரண்டணாக் காசு ஒன்றை ஒரு தாம்பளத்தில் வைத்து அவள் அவன் முன் நீட்டி, ''இந்தாருங்கள், உங்கள் பழைய பாக்கி!'' என்று சொல்லிச் சிரித்தாள். அவன், தட்டை நீட்டிய அவளுடைய கையைப் பற்றிக்கொண்டு, ''அசல் இது; அதற்கு வட்டி?'' என்றான்.

''இதோ நான்தான்!'' என்றாள் கமலா.

''பேஷ்! பேஷ்! நல்ல லேவாதேவி!'' என்று சிரித்தான் அவன்.

''லேவாதேவி அல்ல; நிஜமான தேவிதான்'' எனறு அவள் சட்டென்று சொன்னாள்.

''போக்கிரி!'' என்று அவன் அவள் கன்னத்தை இடது கையால் தட்டினான். மேலே பேச முடியவில்லை. ○

R. C. No. 100391
C. S. T. 200167

Phone : 27495

With Best Compliments from

SRI KRISHNA APPALA COMPANY

50, THIPPIRAN THOTTI STREET,
TIRUCHIRAPALLI - 620 008.

Factory at:
Sri Krishna Flour & Dhall Mills,
B/2, East Dharanalloore
TRICHY - 8

Branch :
Jaihindpuram 2nd Street
MADURAI

While at TIRUCHY
Stay at

34376
Phone : 34377
34205

HOTEL LEELA

Permit Room Attached

A/C

Mg. Partner
K. P. JOHNSON

(Very near to Chintamani Bus Stand)
KARUR ROAD, TIRUCHY - 620 002.

நாடு நெடுகிலும் பல லட்சம் பேர் கொசுக்களுக்கு விடைகொடுக்க நாள்தோறும் கூறுவது குட் நைட்

நீங்கள்?

கொசுக்களை முறியடிக்க பத்திரமிக்க, நம்பகமான வழி

குட் நைட் பரிட்சித்துப் பயன் கண்டவர்கள் நாடெங்கிலும் பல லட்சத்திற்கும் அதிகம். கொசுவிரட்ட என்றுமில்லா உன்னத நம்பிக்கையுள்ள, பாதுகாப்பான வழி இதுவே.

உடல்நலக் கேடு இல்லை, கசமுசா இல்லை

திணற வைக்கும் புகை இல்லை, சாம்பல் இல்லை, கொழ கொழப்பு இல்லை. கொசுக்களை அப்புறப்படுத்தும் ஒரு மென்மணம் உண்டு — இரவுதோறும், ஆண்டு தோறும்.

உபயோகிக்க எளிது

உபயோகிக்க எளிது குட் நைட்.

ஹீட்டர் பிளேட் மீது குட் நைட் மேட் ஒன்றை வைத்து, பிளக்கை செருகி, ஸ்விட்ச் போட்டால் போதும்... கொசுக்களிடமிருந்து விடுதலை.

சிறந்த பயன்பெற, அறைக் கதவுகளை, ஜன்னல்களை சிறிது நேரம் மூடிவிடுங்கள்.

சிறப்புப் பதனமிட்டவை குட் நைட் மேட் திண்டுகள்

உன்னதமான பலனடைய, உங்கள் கணப்பு-யூனிட்டுடனேயே உபயோகியுங்கள் குட் நைட் மேட்டுகளை. ஜப்பானிலிருந்து இறக்குமதி பெற்ற பைரத்ராயிடு கொண்டு, அவற்றை எங்கள் சொந்த ஆய்வுக் கூடத்திலேயே பதனப்படுத்துகிறோம். எனவே, இரவு முழுதுமே இவற்றின் சக்தி நீடித்திருக்கும்.

சர்வதேசத் தர மேன்மை நிலைகள்

ஜப்பான் நாட்டு சுமிட்டோமோவிலிருந்து வந்த இரசாயனப் பொருள்களையும் கருவிகளையும் கொண்டு தயாரிக்கப்படுகிறது குட் நைட் — கறாரான சுமிட்டோமா சர்வதேச நிர்ணயத் தரங்களுக்கு ஏற்ப.

குட் நைட் பேக் ஒவ்வொன்றின் மீதும் அதற்கான அத்தாட்சிக் குறி சுமிட்டோமோ SP தர முத்திரையே.

அதிசயமென்ன, குட் நைட் தான் நாட்டிலேயே உச்ச விற்பனை உடைய கொசு விரட்டியாக விளங்குகிறது. இவ்வளவு நன்மைகளை இருப்பதனால் தான் எவரும் வாங்கிக்கொள்ள விரும்புகின்றனர் இதனை.

Creative Unit 7580 Tam.

குட் நைட்

SP என்பது சுமிட்டோமோ பைரத்ராயிடு

இனிய தூக்கம், இன்பக்கனு யாவருக்கும் குட் நைட்.

தயாரிப்பாளர்கள்: **டிரான்ஸ்எலக்ட்ரா டொமஸ்டிக் பிராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
126, க்ரியேட்டிவ் இண்டஸ்ட்ரியல் பில்டிங், சுந்தர்நகர், கலினா, பம்பாய் 400 098. கேபிள்: GOODKNIGHT ∴போன்: 6144661, 6140627

''மெட்ராசுக்கா?'' என்று பழனியப்பன் வாயைப் பிளந்தான். ''டிக்கெட்டுக்கே நிறைய துட்டு செலவாகுமே அண்ணே! எம்புட்டுத் தொலைவு!''

''டிக்கெட்டைப் பத்தி நீ கவலைப் படாதே. நாங்க பாத்துக்கறோம்!'' என்றான் சேது, நடிகவேள் அருண்குமார் ரசிக மன்றத் தலைவன். ''கைச் செலவுக்கு மட்டும் காசு கொண்டா போதும்.''

கைச் செலவுக்கு என்றால் எத்தனை வேண்டியிருக்கும் என்று பழனிக்குப் புரியவில்லை. ''சாப்பாட்டுக்கு, தங்க இடத்துக்கு இதுக்கெல்லாம்?'' என்று இழுத்தான்.

''இவன் ஒரு பிசிநாறிக் கும்பலைச் சேர்ந்தவன்! ஏண்டா, இத்தனை ஏற்பாடு செய்யறோம், அதுக்கெல்லாமும் ஏற்பாடு இருக்காதா?'' என்றான் சேது. ''மெட்ராசிலே இருக்கிற மன்றம் எல்லாம் செய்யும். நமக்கு மட்டும் இல்லே, தமிழ் நாட்டிலே இருக்கிற எல்லாப் பகுதி மன்றங்கள்ளேந்தும் வர்ற ரசிகர்களுக்கு எல்லா வசதியும் செய்து தரணும்னு அருண்குமார் சொல்லியிருக்காங்க.''

'அடேயப்பா, எத்தனைப் பெரிய மனசு அருண்குமாருக்கு' என்று பழனி சிலிர்த்துப் போனான்.

''இருந்தாலும் கையிலே, ஐம்பதோ, நூறோ வெச்சிக்கறது நல்லது!'' என்றான் சேது, கோபுரம்போல் சுருண்டிருந்த தன் கேசத்தைப் படத்தில் அருண்குமார் நீவி விட்டுக் கொள்வதைப் போலவே நீவி விட்டபடி. பழனி திடுக்கிட்டான். ஐம்பதுக்கும் நூறுக்கும் எங்கே போவது?

என்ன விஷயம் என்பது போல் சேது அவனைப் பார்த்தான்.

பழனி அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். ''அதுக்குக் கூட உதைக்கும் அண்ணே!''

''அப்ப வராதே!'' என்றான் சேது சாதாரணமாக. ''இதுக்கும் மேலே நாங்க என்ன வசதி கொடுக்கமுடியும் சொல்லு! நல்ல சந்தர்ப்பம் இதுன்னு கடனோ ஒடனோ வாங்கிக்கிட்டுக் கிளம்ப எல்லாரும் தயாரா இருக்காங்க. பட்டணத்தைப் பார்க்கவும் நடிகவேளோடு பேசவும் சுலபமா வாய்ச்சுடுமா?''

உண்மைதான் என்று தலையசைத்தபடி பழனி நின்றான்.

''கடன் யார் கொடுப்பாங்கன்னு பார்க்கணும்!''

''அது என்னவோ உன் பாடு. எங்கிட்ட வராதே. போக விருப்பம்னா சொல்லு உம்பேரைப் பதிவுப் புத்தகத்திலே எழுதறேன்.''

சில விநாடித் தயக்கத்துக்குப் பிறகு நிமிர்ந்து ''எழுதிக்கிங்க'' என்றான்.

திமுதிமுவென்று மன்றத்தில் சிறிய அறைக்குள் இளைஞர்கள் வர ஆரம்பித்து விட்டார்கள், தங்கள் பெயரைப் பதிவு செய்ய.

''நீ சீக்கிரம் வந்தது நல்லதாப் போச்சு, பாத்தியா?'' என்றபடி சேது சுறுசுறுப்பாக வருபவர்களைக் கவனிக்க ஆரம்பித்தான்.

அங்கு வந்திருந்தவரின் உற்சாகத்தைப் பார்க்கும் போது, தான் செய்த காரியம் புத்திசாலித்தனமானது என்று பழனி நினைத்துக் கொண்டான்.

பழனியப்பன் தனக்குள் மூழ்கிய யோசனையுடன் நடந்தான். தெருச் சுவரில் கிடைத்த இடத்திலெல்லாம் அருண்குமார் நடித்த படங்களின் போஸ்டர்கள். கடைத் தெருக்களுக்கு நடுவில் புதுப்படத்துக்கான விளம்பரமாக ஒரு பிரும்மாண்ட கட்டவுட் நின்றது. ஹீரோ என்றால் இவன்தான் ஹீரோ. அப்பழக்கில்லாத உருவம். நின்ற நிலையும் பார்க்கும் பார்வையும் யாரைத்தான் சொக்கவைக்காது? இத்தனைக்கும் பிரமாதமான டிரஸ் எதுவுமில்லை, இந்தப் போஸ்டரில். மடித்துக் கட்டிய வேட்டியும் வெற்று மார்பும் தலையில் முண்டாசும் வரிசைப் பல் தெரிய சிரிப்பும் மட்டுமே இப்படி ஒரு கம்பீரத்தை ஒரு ஆளுக்குக் கொடுக்குமா?

தெற்கில் கிட்டத்தட்ட ஒவ்வொரு சின்ன நகரத்திலும் ரசிக மன்றங்கள் பெருகிவிட்டன. எல்லா மன்றங்களும் ஒருங்கிணைந்து இப்பொழுது அருண்குமாருக்குப் பிறந்த நாள் விழா எடுக்கப் போகிறார்கள், சென்னைக்குச் சென்று, நேரடியாக வாழ்த்துச் சொல்ல, எத்தனை பெரிய விஷயம் அது! நடிகவேளைப் பார்ப்பது மட்டுமல்ல, கையைப் பிடித்துக் குலுக்கக் கூடச் சந்தர்ப்பம் கிடைக்கலாம்!

இந்த நினைப்பே பொன்னையனுக்குள் ஒரு சிலிப்பை ஏற்படுத்திற்று. யார் கண்டார்கள், சென்னைக்குச் செல்லும் வேளை நல்ல வேளையாக இருக்கலாம். நடிகவேளைப் பார்க்க எத்தனையோ பெரிய மனிதர்கள் வருவார்கள். அவர்கள் பார்வையில் அவன் உருவம் விழுந்தால் அவனுடைய வாழ்வின் திசையே திரும்பலாம். அருண் குமாருக்கு நேர்ந்த

மாதிரி. அருண் குமார் இப்படித்தான் எந்த நடிகருக்கோ விழா என்று போக, ஒரு பட இயக்குநரின் பார்வையில் பட, இன்று அவனுக்கு விழா எடுக்க ஆயிரக் கணக்கான இளைஞர்கள் அணி வகுத்து நிற்கிறார்கள்.

''என்ன பழனி, அருண்குமார் பிறந்த நாள் விழாவுக்குப் போறியா மில்லே?''

பழனி திரும்பிப் பார்த்தான். முழங் காலுக்கு மேல் வேட்டியை மடித்துக் கட்டியபடி நடேசு நின்றிருந்தான்.

''ஆம்ாம்'' என்னும் போது பழனிக் குச் சற்று மெதப்பாக இருந்தது. ''நீ?''

''தெரியல்லே!'' என்று நடேசு ஏமாற்றத்துடன் உதட்டைப் பிதுக்கி னான். ''நா போறக்குள்ள லேட்டா யிடிச்சு. நிறைய பேர் பதிவு செஞ்சுட் டாங்க. இடமிருந்தா கூட்டிட்டுப் போறேன்னு சொன்னார் சேது.''

பழனிக்கு ஆச்சரியமாக இருந்தது. அதற்குள் இடம் நிரம்பி விட்டதா? நடேசுவின் பேச்சைக் கேட்டபிறகு சென்னைக்குச் செல்லும் சந்தர்ப்பததை நழுவவிடுவது மடத்தனம் என்று உறு திப்பட்டது.

பக்கத்து வீட்டுத் திண்ணையில் அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்த வேலு, இவனைக் கண்டதும் விருக் கென்று எழுந்து உள்ளே சென்றான்.

'மெட்ராசுக்குப் போயிட்டு வந்து உன்னைக் கவனிச்சுக்கறேன்' என்று கருவியபடி பழனி தன் வீட்டுக்குள் சென்றான்.

''வாடா வா'' என்றாள் அம்மா. ''எல்லாரும் முந்திரிச்சதும் கோவி லுக்குப் போவாங்க. நீ மன்றத்துக்குப் போயிட்டு வர்றே.''

இவளோடு இன்று வாக்குவாதம் கூடாது என்று அவன் மௌனமாகக் காலைக் கழுவிக் கொண்டு வந்து பழையச் சோற்றுப் பானையிலிருந்து சோற்றை வடித்து வைத்துக் கொண்டு அமர்ந்தான்.

வேலையோடு வேலையாய் அம்மா முணு முணுத்த வண்ணம் இருந்தாள்.

''நா ஒண்டி ஆளு இரண்டு வவுத் தைக் கழுவ, வீட்டு வாடகைக் கட்ட, என்ன பாடு படறேன்னு என்னிக்காவது நினைச்சுப் பாப்பியா?''

அவன் எதுவுமே காதில் விழாமல் பணத்தைப் பற்றி இவளிடம் எப் பொழுது பேச்சை ஆரம்பிப்பது என்கிற யோசனையுடன் இருந்தான்.

''அட, அடுத்தாப்புலே இருக்கிற வேலுப்பய மாதிரி கருத்தா படிக்க புத்தி போகல்லேன்னாலும், அம்மா ஒண் டியா கஷ்டப்படறாளே, நம்மாலே முடிஞ்ச அளவுக்கு ரெண்டு காசு சம் பாதிப்போம்னாவது புத்தி தோணுதா? நீ சினிமா பாக்கற செலவுக்காவது சம்பாத்தியம் வேணாம்? வேலை வேணும்னா அந்தச் சினிமாக்காரன் வாசல்லே நிக்கப்போறியா?''

அவன் நிமிர்ந்து சிரித்தான்.

''நின்னா தப்பொண்ணுமில்லே!''

''தப்பில்லே!'' என்று அம்மா நொடித்தாள். ''கால்தான் கடுத்துப்



போவும். நேரமெல்லாம் ஓடிப்போகும். பக்கத்து வீட்டு வேலுகிட்ட சேவகம் பண்ண வேண்டி வரும்.''

''ஒரு நாளும் அப்படி நடக்காது!'' என்றான் அவன் ரோசத்துடன். அருண்குமார் சாதாரண நடிகரில்லே. அவரு ஒரு ஏழைப் பங்காளன். யார் என்ன உதவி கேட்டு வந்தாலும் உதவாம இருக்கமாட்டாரு. அதுக்காவே, ஒரு வேலையைத் தேடிக்கவே நா மெட்ரா சுக்குப் போகப் போறேன், வர்ற வியாளக்கிளமே!''

அம்மா நிமிர்ந்தாள்.

''இதென்னடா புதுக்கதை? டிக் கெட்டுக்கு காசு யாரு கொடுத்தாக?''

''அருண் குமார்!''

அம்மா விழித்தாள். அவன் அலங் காரமாக விளக்கினான்.

''எல்லாரும் அருண்குமாரைப் பார்க்கவும் பட்டணம் சுத்தவும் மட்டுமே போறாங்க. நா இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கனும்னே போறேன். பட்டணம்னா வாய்ப்பிருக்கும். அருண் குமாருக்கு ரொம்ப செல்வாக்கு அங்கே. ஒரு வார்த்தை சொன்னார்னா நல்ல வேலை கிடைக்கும்''.

அம்மா பதில் பேசவில்லை. எக் கேடும் கேட்டுப் போ என்று நினைத்த வள் போல் தன் காரியத்தில் இருந்தாள்.

''போறதுக்கு டிக்கெட் கிடைச் சாப்பட்டே திரும்பறதுக்கும் கிடைக்கு மில்லே?'' என்றாள். ''கிடைக்கும். ஆனா வேலை கிடைச்சா அங்கயே தங்கிடுவேன்!''

''இதென்னடா இது, குண்டைத் தூக்கிப் போடறே! நா ஒருத்தித் தனியா இங்கே இருக்கிறது நினைப்பில்லையா? மதுரையிலே வேலை கிடைக்காதா?''

''நல்லாயிருக்கே? அவரு இருக்கிற இடத்திலேதான் ஏதாவது சொல்ல முடியும். எங்கே வேலை பார்த்தா என்ன? அங்கே கொஞ்சம் நிலைச்சப் புறம் வீடு பாத்து உன்னைக் கூட்டிக் கிறேன். இதுவும் என்ன வாடகை வீடு தானே?''

பேசப்பேசத் தன்னுடைய எதிர் காலம் எல்லாம் தீர்மானமாகிப் போனது போல இருந்தது.

''எனக்கொண்ணும் இதெல்லாம் சரிப்பட்டு வரும்னு தோணலே.''

''உனக்கு என் மேல நம்பிக்கையே கிடையாது!'' என்று அவன் முகத்தை 'உர்'ரென்று வைத்துக் கொண்டான்.

''என்னவோ செய்'' என்றாள் அம்மா கடைசியில். ''வேலை கிடைக் கல்லேன்னா போற கூட்டத்தோட திரும்பிடு.''

''எதுக்கும் நூறு ரூபா கொடுத்து வை எங்கிட்ட'' என்றான் அவன் சாதா ரணமாக. ''ஒரு வாரம் பொறுத்து வேலை கிடைக்கும்னா செலவுக்கு வேணும்.''

அம்மா விருக்கென்று நிமிர்ந்தாள்.

''இதப் பார் இந்த வம்பெல்லாம் வேணாம். எங்கிட்டக் காசு இல்லே.''

அதற்குப் பிறகு அன்று முழுவதும் அவன் பேசவில்லை. அம்மா தன்னால் வழிக்கு வருவாள் என்று அவனுக்குத் தெரியும்.

வந்தாள். ரொம்பவும் பிசுக்காரம் பண்ணிக் கொண்டு ஆயிரம் புத்திமதி சொல்லிப் பத்துப் பத்தாக எண்ணிக் கையில் வைத்தாள். அவன் ஏதோ பர தேசம் போவதுபோல் அவனை அணைத்துக் கண்ணீர் விட்டாள். வீட்டிலிருந்த பழைய பித்தளைக் குண் டானை விற்று பணம் எடுத்ததை மூலைக் கடைச் செட்டியார் அவனுக்குத் தகவல் சொல்லியிருந்தார்.

மன்றத்துக்கு அங்கத்தினர்கள் ஐம்பது பேருடன் பயணம் செய்வது படு குஷியாக இருந்தது. அவன் இதுவரை மதுரையிலிருந்து கோவில்பட்டி கூடப் போனதில்லே. வழி நெடுக அருண் குமாரின் நடிப்பைப் பற்றி, அவனு டைய தயாளகுணத்தையும் பற்றிப் பேசிக் கொண்டு போனார்கள். இரவு முழுவதும் அவனைப் போல நடித்து, பாடி, ஆடினார்கள். ''இந்தக் கூச்சலை எப்ப நிறுத்தப் போறீங்க?'' என்று அலுத்து எதுவும் பிரயோஜனமில்லா மல் போனதால் சகபிரயாணிகள் சத் தத்திலேயே உறங்கப் பழகினார்கள்.

ரசிகர்களை அழைத்துச் செல்ல ஒரு பஸ் வந்திருந்தது. ''எல்லாம் அருண் குமாருடைய ஏற்பாடு'' என்றான் சேது. சென்னையில் தெருக்களைப் பார்த்துப் பழனி வாயைப் பிளந்தான். இத்தனைப் பெரிய ஊரில் வேலை ஏன் கிடைக்காது என்று தைரியமானான்.

அவர்களை ஒரு சத்திரத்தில் இறக் கினார்கள். மற்ற ஊர் மன்றங்களி லிருந்து ஏற்கனவே நிறைய உறுப்பினர் கள் வந்திருந்தார்கள். கொத்துக் கொத் தாக நின்றிருந்தார்கள்.

முன்பின் தெரியாத கல்யாணப் பந்தலுக்குள் நுழைந்த மாதிரி இருந்தது பழனிக்கு. எல்லாம் குளித்துக் காலை ஆகாரம் செய்துத் தயாரானதும் அருண் குமாருக்கு வாழ்த்துச் சொல்ல கிளம்ப வேண்டும். யாருக்கும் சாப்பாடு உள்ளே இறங்கியதாகத் தெரிய வில்லை. ஜுரவேகம் பற்றியிருந்தது. எல்லாரையும் காத்திருந்த பஸ்களில் ஏறி அருண் குமார் இருந்த வீட்டின் தெருக்கோடியில் இறங்கவேண்டியிருந் தது. போலீஸ் படை தடுத்து நிறுத்திற்று.

''இத்தனைச் சின்னச் சந்திலேயா இருக்கார் நம்ம அருண்குமார்?'' என் றான் பழனி, அருகில் இருந்தவனிடம்.

''ஆமாம். இதுதான் அவருக்கு ராசி யான வீடுன்னு, புதுப் பங்களா கட்டிக் கிட்ட பிறகும் போகாம இங்கேயே இருக்கார்.''

கூட்டம் நெருக்கியடித்தது. மன்றத் தலைவர்கள் எல்லாரையும் அமைதி யாக இருக்கும் படியும் ஒழுங்கைக் கடைப் பிடிக்கும் படியும் அருண்குமார் பாணியில் கை கூப்பி இறைஞ்சிக் கேட் டுக் கொண்டார்கள்.

''அமைதியா இருங்க, அமைதியா இருங்க!''

போலீஸ் வேறு கண்காணித்தது. ஊருக்குப் புதுசான அன்பர்கள் அடங்கி நின்றார்கள். ஆளுசர ரோஜாப்பூ மாலையை ஆளைப் படுக்க வைத்துத் தூக்கினாற்போல் ஆறுபேர்கள் ஒரு ரோஜா மாலையைத் தூக்கிக் கொண்டு வெயிலில் நின்றிருந்தார்கள். அருண் குமார் வெளியில் வரக்காணோம். அவனுக்கு வாழ்த்துச் சொல்ல வந்த சின்ன, பெரிய நட்சத்திரங்களையெல் லாம் அங்கு இருந்த நிர்வாகிகள் உள்ளே விட்டுக் கொண்டிருந்தார்கள். பழனிக் குப் பசி வயிற்றைக் கிண்ட ஆரம்பித்து விட்டது. காலையில் இருந்த பரபரப் பில் இட்டிலி உள்ளே இறங்கவில்லை.

ஒரு மந்திரி வந்து விட்டுப் போனார் மாலையுடன். பொய்க்கால் குதிரை ஆட்டக்காரர்கள் எங்கிருந்தோ வந் திருந்தார்கள். பொய்கால்கள் கூடச் சோர்ந்து விட்டதைப் போல நின்றார் கள்.

கடைசியில் அருண்குமார் வெளி யில் வந்தான். எல்லார் கண்ணிலும் பட வேண்டும் என்று உயரமான மேஜை மேல் நின்றான். கூட்டம் பெரிய கர கோஷம் செய்தது. வெகு சமீபத்தில் அந்த முகத்தைப் பார்த்ததும் லேசான ஏமாற்றம் பழனிக்கு ஏற்பட்டது. திரை யில் இருக்கும் கம்பீரம் எதிரில் இல்லை. ரொம்பவும் சாதாரண உருவம் போல் பட்டது. சேதுவே இன்னும் நன்றாக இருப்பதாகத் தோன்றிற்று.

''மாலை வெச்சிருக்கறவங்க மட்டும் முன்னாலே வாங்க!'' என்று யாரோ சொல்ல ஆளுயுர மாலை முன்னால் நகர்ந்தது. மாலை அணிவித்ததும் அருண்குமாரின் முகமே மறைந்து போயிற்று. அதைக் கழற்றப் பத்து பேரின் உதவி தேவைப்பட்டது.

ஒரு சின்ன மாலையாவது நாம் வாங்கி வந்திருக்கலாம் என்று பழனி நினைத்துக் கொண்டான். அந்தச் சாக் கில் அருண்குமாரின் கையைப் பிடித்துக் குலுக்கியிருக்கலாம் மறுபடியும், உங் களை எப்போ வந்து பார்க்கறது என்று கேட்க வாய்ப்பிருந்திருக்கும்.

அருண்குமார் எல்லாருக்கும் பொதுவாக நின்ற இடத்தில் இட்மிருந்து வலம் சுழன்று ஒரு பெரிய கும்பிடு போட்டான். பிறகு விருக்கென்று உள்ளே போய்விட்டான். ஏமாற்றத் துடன் நின்ற ஜனத்திரளைப் பார்த்துச் சென்னை மன்றத் தலைவன் கையமர்த் தினான்.

''நீங்க எல்லாம் ஊர் சுத்திப்பார்க்க ஏற்பாடு செஞ்சிருக்கோம். மாலையிலே



தீபாவளி வாழ்த்துக்கள்

இன்று ஒளி விழா.
உற்சாகம் பொங்கும் உன்னதமான நேரம்.
மின் ஒளியின் முதற் காரணமாய் இருக்கும் நாங்கள்
இந்த ஒளிவிழாவை உங்களோடு கொண்டாடுகிறோம்.
இனிவரும் காலமும் இப்படியே மகிழ்ச்சிகரமாய்
இருக்க மனமுவந்து வாழ்த்துகிறோம்.

BHEL
பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ்
லிமிடெட்
திருச்சிராப்பள்ளி - 620 014.
பதிவு அலுவலகம்:
BHEL ஹவுஸ், ஸிரி ஃபோர்ட், புது டெல்லி - 110 049.

JAWAHARLAL NEHRU CENTENARY 1889 1989

MAA COMMUNICATIONS BHEL 89147

நடக்கற விழாவுக்கும் வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.''

என்ன என்று புரியாத ஒரு ஏமாற்றம் பழனியை ஆட்கொண்டது. முன்னால் நின்றவர்கள் உற்சாகமாக மண்டையை ஆட்டினார்கள். பின்னாலிருந்த கூட்டம் திமுதிமுவென்று முன்னால் பாய்ந்தது.

''அருண்குமாரைப் பார்க்கணும். வாழ்த்துச் சொல்லணும்'' என்று கோஷமிட்டது.

''இப்ப அவ்வளவுதான் நேரம். ஐயாவுக்கு மந்திரியைப் பார்க்கப் போகணும். நீங்கள்ளாரும் அமைதியாப் போங்க. மாலையிலே கண்குளிரப் பார்க்கலாம்.''

அமைதி லேசில் வரவில்லை. போலீஸ் தடுப்பைத் திமிறிக் கொண்டு முன்னால் பாய்ந்ததால் போலீஸ் சிலிர்த்துக் கொண்டு திரும்பியது. பழனிக்கு இடது தோள்பட்டையில் சுளீரென்று அடி விழுந்தது. மளுக்கென்று கண்களில் நீர் பெருகிற்று. தோளைப் பிடித்துக் கொண்டே ஓரமாக ஒதுங்கி நின்றான். மெள்ள மெள்ள கூட்டம் அடங்கிப் போயிற்று. 'போங்க போங்க' என்று யாரோ பின்னாலிருந்து விரட்ட எல்லாரும் காததூரம் நடந்து காத்திருந்த பஸ்களில் ஏறிக்கொண்டார்கள். ஊரைச் சுற்றி வலம் வந்தார்கள்.

தோள் பட்டை வலித்த வலியில் பழனிக்கு ஏதும் ரசிக்கவில்லை. சேதுவிடம் சொன்னதில், ''ஊருக்குத் திரும்பினதும் உங்கம்மாவைப் பத்துப் போடச் சொல்லு, சரியாயிடும்'' என்றான். "எல்லாரும் சாயங்காலம் விழா நடக்கவேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்க போயிட்டாங்க. உன்னை டாக்டர்கிட்ட அழைச்சிட்டுப் போக நேரமிருக்காது.''

மாலையில எல்லாரையும் மறுபடி ஏற்றிக் கொண்டு விழாவுக்குப் பஸ்கள் புறப்பட்டன. விழாப் பந்தலின் ஜோடனையைக் கண்டுப் பழனிக்குப் பிரமிப்பேற்பட்டது. தோள் பட்டை வலிகூடச் சற்று மறந்து போயிற்று. விஸ்தார மைதானம் நிரம்பி வழிந்தது. ரசிக மன்ற உறுப்பினர்கள் என்பதால் பந்தலில் முன் வரிசைகளில் உட்கார முடிந்தாலும் மேடை வெகு தொலைவில் இருப்பது போல்தான் பழனிக்குப் பட்டது. அவர்களுக்கு முன் வரிசைகள் எல்லாம் நடிகர்களும் பிரமுகர்களும் அடைத்துக் கொண்டிருந்தார்கள். மேடையில் அருண்குமாருடன் யார் யாரோ உட்கார்ந்திருந்தார்கள். அரசியல் தலைவர்கள் மந்திரிகள் வாழ்த்துச் சொன்னார்கள். முகம் மறைக்க அருண் குமாருக்கு மாலைகள் அணிவித்தார்கள். மேடையில் பேசப்பட்டப் பேச்சுக்கள் பாதி புரியவில்லை. அங்கிருந்த புழுக்கத்தில் பழனிக்கு நாக்கு வறண்டு போயிற்று. வெளியே கலர் ஏதாவது வாங்கிக் குடிக்கலாம் என்று வருவதற்குள் விழி பிதுங்கி விட்டது.

''அடுத்த தேர்தல்லே நிக்க வெச்சுடு வாங்க நிச்சயம்!'' என்றார்கள் யாரோ.

''அதுக்குத்தானே இந்த ஏற்பாடெல்லாம்!''

'கூல் டிரிங்ஸ்'ஸைத் தேடிக் கொண்டு அவன் நகர்ந்தான். அங்கங்கே அருண் குமாரின் பெரிய பெரிய கட் அவுட்டுகள்.

ஒரு காகிதப்பாவை உறிஞ்சியபடி அவன் அந்த ஜனக்கும்பலைப் பார்த்தான்.

''புதுப் படம் படுத்துப் போச்சு. அதைச் சரிக்கட்ட சுய விளம்பரம் தேவைதானே?'' என்று ஒரு போலீஸ் ஆள் சொன்னார்.

''இதிலே அரசியலும் சேர்ந்திருக்கு!''

''அதில்லாமயா?''

''ஏழை பங்காளன்னு சொல்ல ஆரம்பிச்சியானா அரசியல்தான்!'' ஏதோ பெரிய ஹாஸ்யம் போல் அவர்கள் சிரித்தார்கள். இதையெல்லாம் கேட்டால் சேது என்ன சொல்வான் என்கிற யோசனையுடன் பழனி கலருக்குக் காசைக் கொடுக்க சராயின் பின் ஜேபியிலிருந்த மணிப்பர்ஸை எடுத்தான். பர்ஸ் காலியாக இருந்தது. பகீரென்றது. பர்ஸ் இருக்கிறது. காசை மட்டும் எப்படி எடுத்தார்கள்?

பேந்தப் பேந்த விழித்தபடி, ''பணம் திருட்டுப் போயிட்டது'' என்றான் கூல்டிரிங்ஸ் காரனிடம்.

''ஏண்டா, போக்கிரித்தனமா செய்யறே?' என்று கூல்டிரிங்ஸ்காரன் அவன் தோள்பட்டையை மூர்க்கமாகப் பிடித்தான்.

வலி பிராணன் போயிற்று. கண்களில் மளமளவென்று நீர் வழிந்தது. ரசிக மன்ற உறுப்பினன் அவன் என்கிற அடையாளச் சீட்டைப் பார்த்துப் போலீஸ் நுழைந்து சமாதானப் படுத்தி அவனை அனுப்பிற்று.

அவனுக்கு இன்னும் திகைப்பு நீங்கவில்லை. எப்படிப் பணம் போயிற்று என்று புரியவில்லை. பாட்டியின் பித்தளைக் குண்டான். அதை விற்ற பணம் சொளையாகப் பறிபோயிற்று என்றால் அம்மா என்ன சொல்வாள்?

அவன் அன்று யாரிடமும் எதுவும் பேசவில்லை. சத்திரத்தில் இரவு முழுவதும் அங்கத்தினர்கள் அட்டகாசம் செய்தார்கள். நடிக வேள் அடுத்த தேர்தலில் வென்றால் என்னென்ன சாதிக்கலாம் என்று திட்டம் போட்டார்கள். நாளை மறுநாள் காலை ரெயிலைப் பிடிக்க வேண்டும். காலையில் எழுந்து பலகாரம் செய்ததும், யாரிடமும் சொல்லாமல் அருண்குமார் வீட்டை நோக்கி அவன் நடந்தான். நேற்று ஜேஜே என்றிருந்த தெரு இன்று நிசப்தமாகச் சோகக் களையுடன் தெரிந்தது.

வீட்டு வாசலில் யாரையும் காணோம்; வராந்தா மூலையில் இரண்டு பித்தளைக் குண்டான்கள் இருந்தன. செடிகளுடன் அலங்காரமாக.

கம்பிக் கதவை அவன் ஓசைப்படுத்தி தட்டினான்.

வீட்டுக்கதவைத் திறந்து, "யார் அது?'' என்றார் ஒரு ஆள்.

''அருண் குமாரைப் பார்க்கணும்''.

''அதெல்லாம் பார்க்கமுடியாது, என்று விடுவிடுத்தார் அந்த ஆள்.

''நா மதுரை ரசிக மன்றத்திலேந்து வந்திருக்கேன்யா!''

''சரி, அதுக்கென்ன? நேத்து விழாவுக்கு வந்திருந்தேயில்லே?''

''ஆமாங்க.''

''பெறகென்ன?''

''என் பணமெல்லாம் யாரோ களவாடிட்டாங்கய்யா.''

''அதுக்கு இங்கு வந்து ஏன் சொல்றே? மன்றத் தலைவர்கிட்டச் சொல்லு!''

''அருண்குமாரைப் பார்க்கணும்''.

''பார்க்க முடியாதுன்னு சொன்னேனில்லே?''

''ஏதாவது வேலை கிடைச்சா இங்கயே இருந்துகிடுவேன்'' என்றான் அவன் விடாக்கண்டனாக.

உள்ளிருந்து யார் குரலோ கேட்க அந்த ஆள் உள்ளே விரைந்தார்.

பிறகு வெளியே வந்து, ''அருண் குமார் காலையிலே ஷூட்டிங்குக்கு ஊட்டிக்குக்கு கிளம்பிப் போயிட்டார். வர்ற பத்து நாள் ஆகும். இப்ப நீ இங்க நின்னு ஒண்ணும் பிரயோஜனமில்லே'' என்றார். அவன் இன்னும் தயங்கிக் கொண்டு நிற்பதைப் பார்த்து, ''ஏண்டா கிளம்பலியா?'' என்று அவர் ஒரு அதட்டல் போட அவன் அங்கிருந்து நகர்ந்து ஒதுக்குப் புறமாய் ஒரு கடையோரம் நின்றான்.

பளபளவென்று ஒரு கார் அருண் குமார் வீட்டு வாசலில் நின்றது. வீட்டுக் கதவு திறந்து அருண்குமார் வெள்ளைச் சராயும் சட்டையும் கறுப்புக் கண்ணாடியுமாய் வெளியில் வந்தான். விருக்கென்று வண்டிக்குள் நுழைந்து உட்கார, வண்டி கிளம்பிப் போயிற்று.

பழனியின் மேல் உதட்டில் வியர்வை அரும்பிற்று. மூச்சு வாங்கிற்று. கார் கிளப்பிக் கொண்டு போன புழுதி இறங்கியதும் அவன் அந்த வீட்டின் முன் நின்றான். கையில் எடுத்திருந்த கல்லை அந்தப் பித்தளைக் குண்டானின் மேல் குறி பார்த்து அடித்தான்.

''யார்றா அவன்?'' என்று பின்னால் கர்ஜனைக் கேட்க அவன் சத்திரத்தை நோக்கி ஓட்டமெடுத்தான். தோள்பட்டைச் சுரீரென்று வலித்தது. ○

பேசும் படம்

Pesum Padam

The oldest cine magazine in Tamil

ராஜம்

Rajam

The leading women's journal in Tamil

திரையுலகின்
ஒளிவிளக்கு
பேசும் படம்

48 ஆண்டு காலமாக தரமான சினிமா செய்திகளோடு
வெளிவரும் ஒரே சினிமா மாத இதழ் பேசும் படம்

மங்கையரின்
மணிமகுடம்
ராஜம்

ஒரு குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு முன்னோடியாகத்
திகழும் ஒரே மாத இதழ் ராஜம்

RAMANATH PUBLICATIONS PRIVATE LIMITED,

325, N.S.K. ROAD, KODAMBAKKAM, MADRAS-600 024.

PHONE: 422064 & 420274.

நவராத்திரியில் சிவ வழிபாடும் அம்பிகை ஆராதனையும் சிறந்தவை. சிவன் ஆடிய தாண்டவக் கோலங்கள் நாம் அறிந்தவை. அவற்றுள் சிலவற்றை எம்பெருமான் ஆடிக்களித்த போது, தாண்டவத்துக்கேற்ற கோலங்களும், எம்பெருமாட்டியின் திரு அவதாரங்களும் நிகழ்ந்தன. ஆண்கள் ஆடுவது தாண்டவம்; பெண்கள் ஆடுவது லாஸ்யம். தில்லையம்பலக் கூத்தபிரானே அணுவுக்குள் அணுவாகவும், அண்டத்துக்குள் அண்டமாகவும் நின்று ஆடி, உலகத்தை இயக்கி வருகிறான். இறைவன் முப்பதாயிரம் கோடி நாட்டியங்களுக்கு மேலாக ஆடினான் என்பர். ஒவ்வொரு நாட்டியத்துக்கும் அங்க அசைவும் பாவமும் முத்திரைகளும் தனித்தனியானவை.

அத்தகைய நடனத் திருக்கோலங்களில் ஏன்பது தாண்டவங்களையும், அப்போது இறைவன் வரைந்த கோலங்களையும், ஆவிர்ப்பவித்த அம்பிகை உருவங்களையும் இப்போது காணலாம்.

கோலங்களும் கோலவிழித் தேவியர்களும்

1. ஆனந்த தாண்டவம்: இடது காலைத் தூக்கி வலக் காலை ஊன்றி ஆடும்நிலை. இந்தத் தாண்டவம் ஆடும் போதே, இடக்கால் சுண்டுவிரலால் தரையில் கோலத்தை வரைந்தார். கோலத்தின் பெயர் **ரிஷி மண்டலக் கோலம்.** இந்தக் கோலத்திலிருந்து ஆவிர்ப்பவித்த அம்பிகையின் திருநாமம் **சைலபுத்ரி.**

நவராத்திரியின் முதல் நாள், மஞ்சள் கலந்த அரிசிமாவினால் இந்தக் கோலமிட்டு வணங்கவேண்டும். இரண்டு வயதுப் பெண் குழந்தையை, இந்த அம்பிகையாக எண்ணிப் பூசித்தால் ஆஸ்துமா, நீரிழிவு போன்ற நோய்கள் குணமாகும். (பூசித்தல் என்றால், காலில் நலீங்கிட்டு, புத்தாடை அணிவித்து, வளையல், சீப்பு, கண்ணாடி ஆகியவை அளித்து, சாட்சாத் எம்பெருமாட்டியாகப் பூஜிப்பது; பால் பாயசம் நைவேத்தியம் செய்து அளிப்பது முதலியவை)

2. சந்தியா தாண்டவம்: சந்தியா வேளையில் இறைவன் ஆடிய திருநடனம். இந்தத் தாண்டவத்தின் மூலம் தாள வாத்தியங்களுக்கு ஒலி கொடுத்தார். தாண்டவ நிலையில் இடக்கால், இரண்டாம் விரலால் வரைந்த கோலம் இது; **சப்த ஒலிக் கோலம்.** இதிலிருந்து **கூஷ்மாண்டா** என்ற தேவி ஆவிர்ப்பவித்தாள். மூன்று வயதுப் பெண்குழந்தையைப் பூஜிக்க வேண்டும்.

கடன் படாத வாழ்வு கிட்டும்; மனம் அமைதியுற்று விளங்கும், அஸ்திரப் பயிற்சிகளுக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.

3. திரிபுர தாண்டவம்: திரிபுர சங்கார காலத்தில் ஆடிய திருக்கோலம். வலக்கால் கட்டை விரலால் **அஷ்ட வசுக் கோலம்** வரைந்தார். குங்கும வண்ணத்தில் **பிரம்ம சாரிணி** என்ற தேவி தோன்றினாள். குங்குமம் கலந்த அரிசிமாவுக் கோலமிட்டு, நான்கு வயதுக் குழந்தையைப் பூஜிக்கவேண்டும். வாயுத் தொல்லைகள், சந்திராஷ்டமக் காலத் தொல்லைகள் நீங்கும். தில்லையெம்பெருமானைச் சோமசுந்தரப் பெருமானாக எண்ணி வணங்கவேண்டும்.

4. ஊர்த்துவ தாண்டவம்: இடக்காலும் வலக்காலும் நேர்க்கோட்டில் அமைந்த தாண்டவ நிலை. அம்பிகை அப்படி ஆட முடியாமல் வெட்கித் தலை குனிந்த நிலை. திருவாலங்காட்டு நடனத்தில் காளி தோற்ற தாண்டவம்.

வலக்கால் ஐந்து விரல்களால் வரைந்த திருக்கோலத்தின் பெயர் **பிரணவ ஒலிக் கோலம்.** இந்தக்கோலத்திலிருந்து தோன்றிய தேவி **சந்திர காந்தா;** வெள்ளை நிறத்திருமேனி. ஐந்து வயதுப் பெண்குழந்தையைப் பூஜிக்க வேண்டும். நவராத்திரி சமயத்தில் இப்படிப் பூஜை செய்தால், தடைப்பட்ட திருமணங்கள் விரைவில் நடைபெறும்.

5. புஜங்க தாண்டவம்: பாற்கடல் கடந்த சமயம், நஞ்சை உண்டபோது, தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் எதிரில் ஆடிய தாண்டவம் இது. சீறிப் படம் எடுத்து ஆடும் அரவத்தைப் போன்ற நடனநிலை. அப்போது கைகளாலும் சடையாலும் வரைந்த கோலம் **புஜங்க தாண்டவக் கோலம்.** அந்தக் கோலத்தில் ஆவிர்ப்பவித்த தேவி **ஸ்கந்த மாதா.** இந்தத் தேவியின் தரிசனம் பெற்ற, தேவர்கள் சாப விமோசனம் பெற்றனராம். எம்பெருமாட்டி நீல நிறத் திருமேனியில் ஒளிர்பவள். வலக்கையில் சஞ்சீவி இலைக் கொத்தை தாங்கிய கோலம்.

அரிசிமாவுக் கோலம் வரைந்து, ஆறுவயதுக் குமரியை அலங்கரித்துப் பூஜித்தால், உணவுக் கலப்படத்தால் உண்டாகும் நோய்கள் விலகும்; நஞ்சும் நமனாக அமையாது.

6. முனிதாண்டவம்: பதஞ்சலி முனிவர், தம் கால்களால் மத்தளம் வாசிக்க - அவருக்காக இறைவன் ஆடிய திருநடனம் இது. அப்போது இறைவன் திருநயன ஒளி வரைந்த கோலம் **முனிதாண்டவக் கோலம்.** அந்தக் கோலத்திலிருந்து பால் வெள்ளை நிறத் திருமேனியாய்அம்பிகை கார்த்தியாயினி தோன்றினாள். குமரியம்மன் போன்ற நின்ற திருக்கோலம். சதங்கை கொஞ்சும் எழில் உருவம். ஏழு வயதுக் குமரிப் பெண்ணை,கார்த்தியாயினியாக அலங்கரித்துப் பூஜித்தால் நேத்திர ரோகங்கள் குணமாகும். கண்ணொளி சிறக்கும்.

7. பூதத் தாண்டவம்: கஜாசுரனைச் சம்ஹரித்த நிலையில் ஆடிய தாண்டவம் இது. பிரம்மா நட்டுவாங்கம் செய்ய, வாலை உத்தமி தேவி மத்தளம் வாசிக்க, நந்தி தேவர் கோல வாத்தியம் முழங்க, கணபதி ஜால்ரா போட, முருகன் பூச் சொரிய இறைவன் ஆடிய தாண்டவம் இது. இறைவன் அதிர்ந்து ஆடிய நடனத்தினால் விளைந்தது **பூதத் தாண்டவக் கோலம்.** இதிலிருந்து ஆவிர்ப்பவித்த அம்பிகை **காலராத்ரீ.** கருநிறத் திருமேனி.

அரிசிமாவில் கோலமிட்டு, எட்டு வயதுப் பெண்ணை அலங்கரித்துப் பூசித்தால் இளமைமாறாத இன்ப வாழ்வு அமையும்.

8. சுதா தாண்டவம்: தண்ட காரண்ய முனிவர்களின் வேண்டுகோளுக்காக இறைவன் ஆடிய தாண்டவம் இது. வரைந்த கோலம் **சுதா தாண்டவக் கோலம்.** இந்தத் தாண்டவக் கோலத்திலிருந்து தோன்றிய பிராட்டி **மகா தௌரி;** பச்சை நிறத் திருமேனியவள். அரிசிமாவில் இந்த கோலத்தை வரைந்து, எட்டு வயதுப் பெண்ணை அம்பிகையாக, எழிலுருவினளாக அலங்கரித்து வணங்கினால் வியாபார விருத்தி ஏற்படும்; விபத்துக்கள் உண்டாகா; எண்ணங்கள் செயல் உருவம் பெறும்.

9. சிருங்காரத் தாண்டவம்: நவரசங்களையும் எடுத்துக் காட்டும் எழில் தாண்டவத் திருக்கோலம் இது. இந்தத் தாண்டவத்தில் வரைந்த கோலம் **சிருங்காரத் தாண்டவக் கோலம்.** ஆவிர்ப்பவித்த அம்பிகை **ஸித்திதாத்ரீ;** சிவந்த திருமேனிப்பாங்கு; கரும்பும் அபயஹஸ்தமும் அண்டியவர்களுக்கு வாழ்வில் இனிமையையும் தைரியத்தையும் அளிக்க வல்லவை. அரிசிமாவில் கோலமிட்டு, பத்து வயதுக் குமரிப் பெண்ண்ணை, அம்பிகையாக உருவகித்து வழிபட்டால் எண்ணங்கள் ஈடேறும், கலைகளில் மேதையாகலாம்; வாக்குகள் பலிதமாகும்.

நவராத்திரி முடிந்த கையோடு தீபாவளி வருகிறது. தீபாவளிப் பொன்னாளில் வெற்றியை அளிக்கும் கோலங்களின் ரகசியங்களை - எம்பெருமாட்டியின் அவதாரங்களைச் சித்திரமாக வரைந்து அளித்திருக்கிறோம். மங்கையர் விரும்பும் மங்கலக் கோலங்கள்; மகிமை வாய்ந்த ஒன்பது கோலங்கள் இவை.

(இந்த வண்ணக் கோவைக்குக் கருத்து வழங்கி உதவியவர் ஸ்ரீ.ல-ஸ்ரீ ஆர்.வி. வேங்கடராமன் அவர்கள்)



ரிஷிமண்டலக் கோலம்
- சைலபுத்ரீ
- ஆனந்த தாண்டவம்

கோலங்களும் கோலவிழித் தேவியர்களும்

சப்த ஒலிக் கோலம்
- கூஷ்மாண்டா
- சந்தியா தாண்டவம்



சுதா தாண்டவக் கோலம்
- மஹாகௌரி
- சுதா தாண்டவம்



சிருங்காரத் தாண்டவக் கோலம்
- ஸித்தி தாத்ரீ
- சிருங்கார தாண்டவம்



அஷ்டவசுக் கோலம்
- பிரம்மசாரிணீ
- திரிபுர தாண்டவம்



பிரணவ ஒலிக் கோலம்
- சந்திரகாந்தா
- ஊர்த்துவ தாண்டவம்


புஜங்கதாண்டவக் கோலம்
- ஸ்கந்தமாதா
- புஜங்க தாண்டவம்



புஜங்கதாண்டவக் கோலம்
- ஸ்கந்தமாதா
- புஜங்க தாண்டவம்

முனிதாண்டவக் கோலம்
- காத்யாயினீ
- முனித் தாண்டவம்
பூதத்தாண்டவக் கோலம்
- காலராத்ரீ
- பூத தாண்டவம்

கண்ணம்மா என் காதலி

டாக்டர் மின்னூர் சீனிவாசன்

பாரதியாரின் கற்பனையில் தோன்றும் காதலன் கடற்கரையில் ஒரு மேடை மேல் காத்திருக்கின்றான். தன் உயிருக்குயிரான கண்ண ம்மாவுக்காக ஆவலோடு காத்திருக்கின்றான். அவன் வானத்தையும் கடலையும் பார்த்திருந்தான்; இல்லை - நோக்கியிருந்தான்.

நீலவானம், நீலக்கடல் - இரண்டுமே நீலம், இரண்டுமே அகண்டமானவை. காதலன் நுட்பமாக 'நோக்கியிருந்தது' பொறுமையால் மட்டுமில்லை, தன்னை மறந்த லயத்தாலுந்தான். அதனால் ''நீல நெருக்கிடையில்'' வான நீலம் கடல் நீலம் என்னும் நீல நெருக்கிடையில் தன் நெஞ்சைச் செலுத்தியிருந்தான். தன்னை மறந்த பின் லயம் அடைந்து இயற்கையின் காட்சி விரிவில் நெஞ்சு செலுத்தியிருந்தான். வானமும் கடலும் மருவி மணந்து முத்தமிட்டன, என்று மனந் தெளிந்தான். தன் நிலையோ எனில் காதலிக்காகக் காத்திருப்பதே.

இயற்கையில் வானம் வளைந்து கொண்டு கடலை . மருவுகின்றது. தொடுவான் வாய்ப்பில் வானவளையம் கடலை முத்தமிட்டுத் தழுவுகின்றது. முகிழ்ப்பாம் சங்கமம் நேரிடுகிறது. கடலும் வானும் ஒருமித்து மணக்கின்றன.

ஞானயோகமான கவியின் பெரும் பதம் பகற்கனவு என்று புனைந்து சொல்லப்படுகிறது. இயற்கையில் ஒருமித்த (காட்சி) சங்கமம் நேர்ந்த பின்பு காதலன், காதலி (கண்ணம்மா) இணைப்பு பேசப்பட்டுள்ளது. இயற்கையிற் காணும் ஒருமித்த காட்சி போலவே அத்வைதமாக ஜீவனும் பிரம்மமும் கலக்கின்ற காட்சியையே காத்திருக்கும் காதலன் வடிவிலும் - வந்து திகைப்பூட்டி - மகிழச் செய்யும் கண்ணம்மா வடிவிலும் காண்கின்றோம். துள்ளும் கடலும் தோயும் வானமும் அளித்த மணக்கோலத்தின் பின் பக்தித் திளைப்பின் அருங்காட்சி - ஜீவன் எனவும் பிரம்மம் எனவும் பிரிந்தவை மீண்டும் கூடும் அத்வைத சங்கமம் பேசப்படுகின்றது. தானே வந்து தவழ்ந்திறங்கும் பரம்பொருள் இங்கே கண்ணம்மா உருவம் புனைந்து மகாண்டுள்ளது. காதலன் தன்னை ஆளும் அன்புச் செல்வமாம் காதலியை - பின்புறத்தில் வந்து கண்மறைக்கும் 'ஆள்' என்றே சொல்கின்றான். ஆள்கின்ற பரம்பொருளாம் கண்ணனே கண்ணம்மாவாக 'ஆளாகி' வந்துள்ளான்.

ஆங்கப் பொழுதில் - வானமும் கடலும் தழுவி இன்புறும் பொழுதில் தனிமையினின்றும் மீட்க, கண்ணம்மா வந்து விட்டாள். காதலனும் கண்ணம்மாவும் இயற்கையிற் கண்ட வான் - கடல் சங்கமம் போலவே ஒரு சங்கமத்தைக் காண்கின்றனர்.

வானம் எவ்வாறு கடலை - தானே வளைந்து கொண்டதோ அவ்வாறே கண்ணம்மா காதலனின் முதுகுப் பக்கம் வந்து கைகளால் வளைத்துக் கட்டினாள். அதிற்கட்டுண்ட காதலன் பல பிறவிகளில் தொடரும் ஆன்மலயம் என்றறிந்தான். தன்னை மறந்த லயத்திலிருந்து ஆன்மலயமே இப்போது வந்து விட்டது. நாடிவந்த காதலி தொடுமின்பம், சோலையில் கமழும் வாசனை.

உள்ளூறும் களிப்பு ஆகியவை கடந்து ஒட்டும் இரண்டு உளத்தின் உறவு இங்கே விழித்துக் கொண்டது. மீண்டும் அத்வைத அன்பு வெள்ளம் கரைபுரண்டோடுமாறு ஒட்டும் இரண்டுளம் - 'இன்னும் கடைசி வரை ஒட்டியிருக்குமாம்' என்று பாடப் பெற்றது உள்ளம் மட்டுமில்லை, ஆன்மாவுமாகும். ஒட்டும் இரண்டுளத்தின் மருமமும் மாயமும் எப்படி வெளிப்படும்?

கவிதை, மருமத்தையும் மாயத்தையும் வெளிப்படும்படி, தெள்ளத் தெளிவாக்குகிறது. ஆம். மாயம் எவரிடத்தில் என்றே தொனிக்கிறது.

ஒட்டு மிரண்டுளத்தின் தட்டிலறிந்தேன்:

தீண்டுமின்பமும் பட்டுடையிற் கமழும் மணமும் உவகையும் ஆட்கொள்ள ஒட்டுமிரண்டுளத்தின் தட்டிலறிந்தேன் என்று காதலன் ஓங்கிய களிப்பில் பேசுகிறான். அப்பேச்சு கவனத்திற்கு உரிய பேச்சு. ஒட்டும் இரண்டுளத்தின் தட்டிலறிந்தேன். ஆம். தேர்த்தட்டில் அறிந்தேன். கண்ணனாகவும் அர்ச்சுனனாகவும் உறவு கொண்ட தேர்த்தட்டிலறிந்தேன். முன்னம் குருக்ஷேத்திரத்தில் கண்ணனாக வந்து கதியளித்த பரம்பொருளின் பிம்பம் கண்ணம்மாவாக மாயமாய் வந்து தெளிவிக்கின்றது. முற்பிறப்பு வாசனை எப்படித்தான் நீங்கும்! கமழும் பீதாம்பரத்தின் வாசம் பட்டுடையின் வீசுகமழ் ஆயிற்று.

பாங்கினிற் கையிரண்டும் தீண்டியறிந்தேன் என்றான் காதலன். அவன் கண்களை மறைத்த கைகள் கருத்தை மறைக்கமுடியவில்லை. கையிரண்டும் இன்று மென்கரங்கள் ஆயினும் அன்று அர்ச்சுனனுக்கு அருள் செய்த கையாகவும் தேரோட்டிய கருணைப் பாலிப்பில் தலைக்கயிறு பற்றிய கையாகவும் அறிந்தேன் என்று காதலன் சொல்லாமற் சொல்கின்றான்.

அர்ச்சுனனும் அச்சுதனும் தேரிலிருந்த காட்சி மீண்டும் இங்கு, காதலனாகவும் காதலி கண்ணம்மாகவும் பூத்துள்ளது. தற்போதமுற்ற போதினிலே மாயம் செல்லாது. ஒருமையாம் இறைவனே இரண்டாகப் பிரிந்து உறவாடி மறுபடி கலக்கும் பெரும்பதத்தில் பெறும் உரைகடந்த அனுபவமே உரையாடல் ஆயிற்று. மாயம் புரிய் முற்பட்டால் மாயம் காதலனுக்குப் புரிந்து விட்டதே என்று கண்ணம்மா சிரித்தாள். சிரிப்பின் தொனியும் கண்ணம்மாவெனக் காட்டும் 'என்ன செய்தி சொல்' என்றான் காதலன். கண்ணம்மா, தான் கண்ணனாக வந்த போது சொன்ன கீதை மறந்து போனதா என்றறியக் கேட்டாற் போல்.

''நெரித்த திரைக்கடலில் என்ன
கண்டிட்டாய்
நீலவிசும்பினிடை என்ன
கண்டிட்டாய்''

என்று கேட்கிறாள். வானமும் கடலும் தழுவியது போல்' திருமித் தழுவி - மீண்டும் இந்தப் பிறவியில் பெற்ற முந்தை 'உறவைப் போற்றி, 'செய்தியென்ன' என்றான் காதலன். அது கேட்டு நீலக்கடலிலும் வானிலும் கண்டதை விண்டுரைக்கச் 'சொல்கிறாள் கண்ணம்மா. காதலனோ அச்சுதன் மொழி கேட்ட அர்ச்சுனன் போல் (படைப்பு) எல்லாம் கண்ணன் மயம் என்பதையே - கண்ணம்மா பிம்பமே எனப் பேசுகிறான். நெரித்த திரைகள் மாயம் செய்தாலும் ஞானமயமாய்த் தெளிந்த காதலன் பார்வை கண்ணம்மாவின் பிம்பமே காட்டும். திரித்து விழும் வெண்ணுரைகளிலும் கண்ணம்மாவின் முகமே. சின்னக் குமிழிகளிலும் அவள் பிம்பமே. பிரித்துப் பிரித்து நிதம் மேகமளந்தாலும் அங்கெல்லாம் கண்ணம்மாவின் பிம்பமே. இது காதலனின் மறுமொழி.

தோளை வளைந்து கட்டிக் கொண்ட கண்ணம்மாவை அவள் காதலன் கைவிலக்கித் திருமித் தழுவினாள். வானமும் கடலும் தழுவின; காதலன் கண்ணம்மாவைத் தழுவினான். ஆன்மாக்கள் இரண்டும் முன்பு தேர்த்தட்டிலே சங்கமமாயின. இன்று மேடையில் கடலோரம் மீண்டும் திருமி (திரும்பி)த் தழுவி முகிழ்க்கின்றன! ○

அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

தி ஆரிய வைத்திய பார்மஸி
(கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை அலுவலகம்
1381-1382 - திருச்சி ரோடு : ; கோயமுத்தூர்-641 018
தந்தி : ''அம்ருதம்''
போன் : 26006, 22623, 30674

மறைந்த மாமேதை ஆரிய வைத்தியன் P. V. ராம வாரியர் அவர்களால்
நிறுவப்பட்டது

45 ஆண்டுகளாக மிகச் சிறந்த பயனளிக்கக் கூடிய ஆயுர்வேத மருந்துகள் தயார் செய்தும் சிகிச்சை அளித்தும் வருகின்ற பெயர் பெற்ற ஸ்தாபனம்

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD · AVP

104, லாயிட்ஸ் ரோடு. மைலாப்பூர் – சென்னை-600 004.
போன் : 472 552

பிரதம வைத்தியர் : ஆரிய வைத்தியன் K. S. வாரியர்
மானேஜிங் டைரக்டர் : P V. சந்திரசேகர வாரியர்

மேலும் முழு விவரங்களுக்குத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

AVP/OSR

கைப் பிடித்தாள்

-கவிஞர் குடந்தை புகழேந்தி

சின்னஞ் சிறு வயதில்
சிற்றடி எடுத்து வைக்க
தன்னந் தனி மையிலே
தனக்கு முடி யாமல்
இன்னோர் உதவி யுடன்
இனிய நடை பழகுதற்கு
தந்த கப்பன் கைப்பிடித்து
தன்னிளமை நகர்த் தினாள்!

பருவம் நெருங் கியதும்
பலபேரும் பெண் பார்த்து
ஒருவன் மனம் சேர
ஒருமித்த கருத் தோடு
இருவர் உயிர் ஒன்றாய்
இணையும் சடங் காலே
தருண மிது வென்று
தலைவனைக் கைப் பிடித்தாள்!

ஆண்டுகள் பலக ரைந்து
அன்புடன் இல்ல றத்தைத்
தீண்டியே இன்பங் கண்டு
திண்மையாய் ஆணும் பெண்ணும்
மண்ணதில் பெற்று விட்டு
மக்களைப் பேணிக் காத்தாள்!
எண்பதில் கணவன் கையை
இறுக்கமாய்ப் பிடித்துக் காத்தாள்!!

சீதனம் சுமக்கிற வாகனங்கள்!



கவிஞர் தாரா பாரதி

மன்னர் சுயம்வர மண்டபத்தில் - அன்று
மங்கையர் கண்டது பெண்ணுரிமை!

இன்று சுதந்தர மண்டபத்தில் - இங்கு
எங்கள் சுயம்வரம் கொத்தடிமை!

பூவையர் அந்நாளில் தேர்வுவைத்தார் - அங்குப்
போட்டி யிட்டார் பல ஆண்மகன்கள்!

பாவையர்க் கின்று மணமகன்கள் - தினம்
பற்பல தேர்வுகள் வைப்பது ஏன்?

மணப்பெண் நடத்தும் சுயம்வரம்போய் - இங்கு
மாப்பிள்ளை வைக்கும் சுயம்வரமா?

முடியரசாட்சியில் முன்னுரிமை - இந்தக்
குடியரசாட்சியில் பெண்ணடிமை!

பூமாலை அன்றைக்குப் போதுமடி - இன்று
பொன்மாலை தந்தாலும் காணாதடி!

தங்கமும் வைரச் சுரங்கங்களும் - வெள்ளித்
தட்டுகளிர் தர வேண்டுமடி!

தேன்கூடு கட்டாத பூங்கொடியை - இந்தத்
தேசத்தில் முடவனும் ஏற்பதில்லை!

சக்கர வர்த்திகள் மாப்பிள்ளைகள் - வெறும்
சிற்றரசர் பெண்ணைப் பெற்றவர்கள்!

தரகர் ஒருவர்தான் பெண் பார்க்கிறார் - பிறர்
தாம்பூலத் தட்டில்தான் கண் வைக்கிறார்!

கல்யாணப் பந்தலில் பாரடி நீ - அங்கும்
கையில் தராசுடன் சம்பந்திகள்!

பெண்கள் வணிகப் பொருள்களடி - பிள்ளை
பெற்றவர் வஞ்சத் தரகரடி!

சீர்கள் தருகிற சாதனங்கள் - பெண்கள்
சீதனம் சுமக்கிற வாகனங்கள்!

கொட்டிக் கொடுக்கிற சீர்செனத்தி - ஒரு
கூண்டுக் கிளியாக மாறுதற்கோ?

கணவன் உறவும் விலை கொடுத்தா - சிறைச்
கைதியாய்ப் போகவும் கட்டணமா?

அழகுப் பெண்

-இளங்கம்பன்



நெளிந்திடும் ஆற்றோட்டத்தில்
நேய மார்ப் பூக் கூட்டத்தில்,
தெளிந்தநீர்ப் பொய்கைப் பூக்கள்
தேன்முக நகைவெள்ளத்தில்,
ஒளிர்ந்திடும் தருக்கள் மீதில்
உதித்திடும் தளிர்கள் தம்மில்,
பொலிந்திடும் அழகுப் பெண்ணின்
பொற்பூறும் ஆட்சி என்னே?

பொங்கிடும் அருவிப் பேச்சில்,
புரண்டிடும் அலையின் வீச்சில்,
செங்கரத் தீபம் ஏந்திச்
சிவந்திடும் கிழக்கு வானில்
இங்கிதச் சேய் முகத்தில்
இலங்கிடும் உடல் நெளிப்பில்
தங்கியே விழியை அள்ளும்
தையலைக் காணார் உண்டோ?

பஞ்சுடன் பஞ்சுசேரும்
பான்மையை நினைவில் சேர்க்கும்
மஞ்செனும் மேகக் கூட்டம்
மலைமீதில் உலவும்போதும்
மிஞ்சிய மகிழ்வை நெஞ்சில்
மேன்மேலும் பெருக்கும் அந்த
வஞ்சியாம் அழகுப்பெண்ணின்
வசமாகார் புவியில் உண்டோ?

வெகு விரைவில் உங்கள் குழந்தையின் தேவைகளும் உங்கள் செலவுகளும் அதிகரிக்கும்



உங்களுக்கு உதவ யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியாவின் குழந்தைகள் பரிசு வளரும் நிதித்திட்டம்.

உங்கள் குழந்தைச் செல்வத்துக்கு நீங்கள் அளிக்கக்கூடிய சிறந்த பரிசு. யூனிட் டிரஸ்டின் குழந்தைகள் பரிசு வளரும் நிதித்திட்டத்தில்* குறைந்த பட்சமாக ரூ. 500/- முதலீடு செய்யுங்கள். உங்கள் கவலைகளுக்கு விடை கொடுங்கள்.

ஒவ்வொரு வருடமும் உத்தரவாத மான 12.5% டிவிடெண்டு மற்றும் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை உற்சாகமூட்டும் போனஸ் டிவிடெண்டு.

உங்கள் குழந்தைக்கு 21 வயதாகும் பொழுது, நீங்கள் அளித்த பரிசுத் தொகை, உங்கள் குழந்தையின் தேவைகளையும் உங்கள் செலவுகளையும் சமாளிக்க தேவையான நேரத்தில் கணிசமான வளர்ச்சி அடைந்திருக்கும்.

மேலும் விவரங்களுக்கு யூனிட் டிரஸ்டின் அலுவலகங்களையோ, ஏஜெண்டுகளையோ, முக்கிய பிரதிநிதிகளையோ, ஸ்பென்சர் அண்டு கம்பெனி கிளைகளையோ அணுகுங்கள். அல்லது கீழ்க்கண்ட கூப்பனை யூனிட் டிரஸ்ட் அலுவலகத்துக்கு தபால் மூலம் அனுப்புங்கள்.

Please send me a FREE CGGF brochure.

Name ______________________

Address ______________________

____

UNIT TRUST OF INDIA H.O. Bombay

(A Public Sector Financial Institution)

Regional Office:
45, Second Line Beach,
Madras 600 001.
Phone: 587433/580938

Our Chief Representatives in Tamil Nadu
☐ COIMBATORE • **A. Dhanabal,** Ph: 34776 ☐ MADURAI • **M. Ramamoorthi,** Ph : 36661, 43179 ☐ THANJAVUR • **K. Muthusamy,** Ph: 20374 ☐ SALEM • **N.K. Inkarsal,** Ph : 66414, 51520 ☐ TRICHY • **M. Ramalingam,** Ph: 41282 ☐ NORTH ARCOT • **P. Narayanan,** Ph : 21575 (Vellore) ☐ SOUTH ARCOT • **S. Balakrishnan,** Ph : 377, 46 (Cuddalore) ☐ KANYAKUMARI • **S. Subhas Chandra Bose,** Ph : 4449 (Nagercoil) ☐ NILGIRIS • **M. Madhavan Nambiar,** Ph : 6253, 7037 (Coonoor) ☐ PERIYAR • **K. Jyothi Ramalingam,** Ph : 71785, 78285,74785 (Erode)

* 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே CGGF பரிசு அளிக்க முடியும். பரிசுத்தொகை மற்றும் பெறும் குழந்தையின் வயது இவற்றைப் பொறுத்து திட்ட முதிர்வில் அளிக்கப்படும் தொகை வேறுபடும்.

Sista's – UTI.1188.89.TM E

நெருப்புக் கணைகள்

இனியவன்

விநயா அதிர்ந்து போனாள்...

எந்தச் செய்தி 'இளவரசுக்கு தெரியக்கூடாது' என்று இரகசியம் காத்தாளோ, அந்தச் செய்தி அவனுக்குத் தெரிந்துவிட்டிருக்கிறது!

'எப்படித் தெரிந்திருக்கும்...?'

'யார் சொல்லியிருப்பார்கள்...?'

- இவள் மனம் படபடத்தது.

''சொல் விநயா...! என்னிடம் அதை ஏன் மறைத்தாய்...?'' என ஆற்றாமையுடன் கேட்டான் அவன்.

ஏற்கனவே, இளவரசின் வீட்டில் இவர்களுடைய காதலை அங்கீகரிக்கவில்லை. ஒரு நாள், அவனுடைய அம்மா, வீடேறி வந்து - விநயாவின் தாயிடம் விரசமாகவெல்லாம் சுத்தி விட்டுப் போயிருக்கிறாள்!

இவள் அலுவலகத்திலிருந்து திரும்பியதும், ''நீ இளவரசை மறந்துவிடு விநயா...!'' என்று வேதனையுடன் கண் கலங்கினாள் பெற்றவள்.

அவர்களுக்கு இணையான பாரம் பரியப் பெருமை இல்லாத குடும்பமாம்.

'புளியங்கொம்பு கிடைத்தது' என்று தாயும், மகளும் வலை விரிக்கிறார்களாம்.

ஆண் துணை இல்லாமல் அலை பாயும் இழி பிறவிகளாம்...

''இவ்வளவையும் கேட்டுக் கொண்டு, நீ எப்படியம்மா அவளைச் சும்மா விட்டாய்...?'' என ஆத்திரப்பட்டாள் விநயா.

''அந்த ராட்சசி என்னை எங்கே பேச விட்டாள்...? என் பதிலை, அவள் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை விநயா! வாய் கூசாமல் வார்த்தைகளைக் கொட்டிவிட்டு, 'இனி என் பிள்ளையிடம் அவள் பேசினாளோ, நடக்கிற கதையே வேறு!' என்று பயமுறுத்தியபடி படியிறங்கிவிட்டாளே...!'' என இதய வலியுடன் பேசினாள் அம்மா.

''ஆனாலும், உனக்கு வகை போததம்மா. அவளை இழுத்து நிறுத்தி, உறைக்கப் புளிக்க நாலு வார்த்தை கேட்டிருக்க வேண்டும். நாமா வலை விரிக்கிறவர்கள்? நாமா இழி பிறவிகள்...?'' என விநயா பொங்கினாள்.

இவளால் நிலை கொள்ள முடியவில்லை; நெஞ்சுள் நெருப்பு மூண்ட மாதிரி இருந்தது; உள்ளத்தின் பாதிப்பு, உடல் முழுவதும் பரவிச் சங்கடப்படுத்தியது.

உண்ண முடியவில்லை...

உறங்க முடியவில்லை...

மறுநாள் -

பிற்பகல் உணவு கூட எடுத்துக் கொள்ளாமல் அலுவலகத்திற்குப் புறப்பட்டாள், விநயா.

இளவரசுக்காகக் காத்திருந்த ஒவ்வொரு நொடியும் நெடிதாயிற்று.

அவனைப் பார்த்த கணத்தில், படபடப்பு அதிகமாயிற்று. அகம் பூரா கோபக் கொழுந்துகள் அலையடித்தன.

நடந்ததை எல்லாம் இவளால் சுட்டுக்கோப்பாகச் சொல்ல முடியவில்லை. ஒரு வாக்கியம் சொல்லுகையில், துயரம் இடை மறித்தது.

ஒரு வழியாக அவனுடைய அம்மாவின் சாடலை விவரித்த விநயா -

''டேக் இட் ஈஸி விநயா...!''

''என்னது! டேக் இட் ஈஸியா...? உங்களால் எப்படி இப்படிப் பேச முடிகிறது...? என் குணம் உங்களுக்குத் தெரியாதா...? என்னைக் கேவலமாய் ஒருத்தி பேசியிருக்கிறாள் - என்னதான் உங்கள் அம்மாவானாலும் அவளை மன்னிக்கலாமா...?''

இளவரசு பொறுமையாய்ச் சிகரெட் கொளுத்தினான்; புகையில் ஆழ்ந்தான்.

இவளுக்கு, அவனை ஓங்கி அறையலாம் போல் இருந்தது.

''உங்கள் அம்மாவுக்கு எங்களைப் பற்றி என்ன தெரியும்? அவள் எப்படி நான் இல்லாதபோது என் வீட்டுக்கு வந்து அம்மாவை அவமானப் படுத்தலாம்? 'பாரம்பர்யம்' என்பது, பணத்தின் அடிப்படையால் அமைவது மட்டும்தானா...?'' என இரைந்து குமுறினாள்.

அதுவரை மௌனமாயிருந்த இளவரசு, ஒரு கட்டாயப் புன்னகை புரிந்தான்.

''என் இதயம் வெடிக்கும் போலிருக்கிறது... நீங்களானால் சிரிக்கிறீர்கள்... !''

''உணர்ச்சி வசப்படாதே விநயா... என் அம்மா கௌரவமான பரம்பரையைச் சேர்ந்தவள்.... அவளுடைய அப்பாவும், அண்ணன் தம்பிகளும் ஆடம்பரங்களால் ஒரு சமஸ்தானத்தையே அழித்தவர்கள்!'' என அவன் புகையினூடே பெருமை பேசினான்.

''இது வெறும் ஜம்பம்...!'' என வெடித்தாள் விநயா. ''உங்கள் குடும்பத்தின் இன்றைய நிலை என்ன? அப்படியே நீங்கள் செல்வத்தில் திளைத்தாலும், எங்களை இழிவாய்ப் பேச யாருக்குமே உரிமையில்லை!''

இளவரசு பேசவில்லை.

''பாரம்பாயப் பெருமையாம்... பாரம்பரியப் பெருமை...! பண்பாடு தெரியாமல் என்ன பெரிய பாரம் பரியம்...?'' என்று பொருமினாள் வினயா. ''கணவரை இழந்த நிலையில், என் அம்மா கண்ணியமாய் உழைத்து என்னைக் காப்பாற்றி இருக்கிறாள்! இன்று, என் உத்தியோகத்தால் நாங்கள் இருவருமே மரியாதைக்குரிய வாழ்வு நடத்துகிறோம். இப்படி இருக்கையில் நாக்கில் நரம்பில்லாமல் தகாத பேச் செல்லாம் பேசிவிடலாமா...?''

இளவரசு திடீரென்று இதமாக பேசலானான்.

''... வசதியான இடத்தில் சம்பந்தம் கொள்ள வேண்டும் என்று என் அம்மா வுக்கு ஆசை... 'உன்னால், தன் கனவு சிதைந்துவிடுமோ?' என்று அவளுக்கு ஆதங்கம்... நீ கொஞ்சம் பொறுமை யாய்ச் சகித்துக்கொள்ள வேண்டும்... காலப் போக்கில் அவளை மாற்றிவிட லாம்...''

வினயா ஓரளவு அமைதியடைந் தாள்.

நம்பிக்கையுடன் -

அவனுடைய சபலத்திற்கு இரை யாகாமல் -

'காலம் கனியட்டும்' என்று காத் திருந்தாள்.

''இவ்வளவு நாள் பழகியும், இன் னும் என்மேல் நம்பிக்கை வரவில் லையா வினயா....?'' என்று இரக்கம் விரவக் கெஞ்சினான், இளவரசு.

''நெறி முறியாமல் வாழ்கிற போதே ஒரு பெண்ணின் பேச்சில் கூசாமல் அபவாதம் சுமத்துகிற சூழலில் - உண் மையான பழிக்கு என்னை இலக்காக்க நினைக்கிறீர்களே, இது நியாயமா? இப் படி யாசிக்க உங்களுக்கு வெட்கமாக இல்லையா? உடனே நான் தேவை என் றால் சட்டென்று திருமணம் செய்து கொள்ள வேண்டியதுதானே?...'' என வெளிப்படையாகப் பேசினாள், இவள்.

இவளுடைய நியாயம் எடுபட வில்லை.

அவனுடைய அவசரத்திற்கு இணங் காததால், அவன் ஒதுங்குவது போல் தோன்றியது.

ஆனாலும், இவள் உறுதியுடனே இருந்தாள்.

'இளவரசு இல்லாமல் தன்னால் வாழ முடியாது!' என இதயம் நினைத் தது..

என்றாலும், பண்பு பிசக இவள் தயாராயில்லை.

அதற்காகப் போற்றாமல், அவன் இவளுடன் கோபங்கொண்டு வில கினான்.

இவளுடைய முறுவலுக்குப் பதி லில்லை; வார்த்தைக்கு மறுமொழி கிடையாது.

ஒரே இடத்தில் பணிபுரிந்த போதி லும், இவளை ஏறெடுத்தும் பார்ப்ப தில்லை.

இந்தக் கொடுமைகளினூடே -

இளவரசு வீட்டில் திருமணம் பேசு வதாக அவன் நண்பர்கள் கிசுகிசுத் தார்கள்.

'அவன், தன் அம்மாவுடன் எங்கோ சென்று பெண் பார்த்துவிட்டு வந்திருக் கிறான்!'

- இந்தச் செய்தியால் வினயா விக்கித் துப் போனாள்; உள்ளத்துள் விம்மல் வெடித்தது.

'நம் காதல் சத்தியமானது' என் றானே!

'நீ இல்லாமல் நானில்லை' என் றானே!

'நாம் இணைவதை உலகில் எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது!' என் றானே!

'ஒரு வேளை, ஏதாவது ஒரு இக் கட்டு வந்து நீ என்னை மறுக்கும்படி யானால் - மறு கணமே நான்... உயிர் விட்டுவிடுவேன்!' என்றானே!

'அவனை மடக்கி உலுக்கலாம்' என் றால்; அவன் அதற்கான வாய்ப்புக்கு அனுசரணையாக இல்லை.

அகம்பாவமாய் அடுத்த திசையில் நடந்தவன் -

இன்று -

அவனே, திடீரென்று வலிய வந்து நிற்கிறான்!

மகிழ்ச்சி மலரச் சிரிக்கிறான்.

இனிக்க இனிக்கப் பேசுகிறான்!

பிரியம் இழையச் சினந்து கொள் கிறான்!

ஒரு நிமிடம் இவளுக்கு ஒன்றுமே புரியவில்லை!

பிறகு -

அவனுடைய ஆர்வத்துக்கும், ஆனந்தத்துக்கும் காரணம் புரிந்த போது, இவள் இதயத்தில் இமயம் அழுத்தியது.

''சொல் வினயா... ஜயா உன் அக்கா என்பதை. எந்தச் சந்தர்ப்பத்திலும் நீ சொல்லாமல் மறைத்தது ஏன்?...'' என்று மீண்டும் கேட்டான் இளவரசு.

அவனுடைய ஒவ்வொரு சொல் லும், சம்மட்டி அடிகளாக இவள் நெஞ் சில் விழுந்தன.

அவமானமும், எரிச்சலும் விவரிக்க முடியாத வலியை உண்டாக்கின.

இவளின் விசுவரூபம் ஒடுங்கி, கூசிக் குறுகினாள்.

அவனுடைய கேள்வியால் அடி பட்டுச் சிதைந்தவளின் அகம், 'ஜயா நம்மோடு ஏன் பிறந்தாளோ?' என அரற்றிக் கொண்டது.

ஒரு நாள் -

''அம்மா.....! நான் சினிமாவில் சேரப் போகிறேன்!'' என்று ஜயா சொன்னபோது -

''சீ! புத்தி போவதைப் பார்!...'' என்று செல்லமாய்க் கடிந்து கொண்டு சிரித்தாள் அம்மா.

வினயா கூட விளையாட்டென்றே நினைத்தாள்.

ஆனால், அது விபரீதமான உண்மையாகிப் போனபோது -

பழைமையில் ஊறிய அம்மாவால் செறிமானம் செய்து கொள்ள முடிய வில்லை.

அவசரமாக இடம் மாறி - ஆழ்ந்த நேர்மையுடன் உழைத்து வினயாவை ஆளாக்கி - 'என்னைப் பொறுத்தவரை ஜயா செத்துப் போனாள்...' என்கிற பொய் ஆறுதலில் வாழ்ந்து -

அவள் இவர்களைத் தேடி வந்து கெஞ்சியும் அவளிடம் போகாமல் - அளவற்ற செல்வத்தில் திளைக்கும் அவளுடைய உள்ளன்பான உதவியை ஏற்காமல் -

காரித் துப்பி...

அவமதித்து...

'இதெல்லாம் இளவரசுக்கு எப்படித் தெரிந்தது?' -

'பாரம்பரியம் என்பது பண்பின் அடிப்படையில் அமையவேண்டும்' என்று சொல்லி - அவன் அம்மாவைத் தாக்கினோமே, அந்தச் சாட்டையை எடுத்து இப்போது நம்மீது சொடுக்கு வானோ?...'

'கூத்தாடிச் குடும்பம் என்று குத்திக் காட்டுவானோ?....'

'நடிகையின் தங்கை தானே நீ?' என்று ஏளனம் பேசுவானோ?...'

'நல்ல வேளை... உன்னிடமிருந்து தப்பினேனே!' என்று ஆறுதல் பெரு மூச்சுவிட்டு நம்மை இழிவு படுத்து வானோ?...'

- நெஞ்சு நெடுகலும் பல பல எண ணங்கள்... கேள்விகள்... பயங்கள்!

விநயாவின் இதயம் நடுங்கியது; தன்னை அறியாமலே தாழ்வு மனப் பான்மை மேலோங்கியது.

ஆனால், ஒரு சில நொடிகளுக்குள் ஒரு பொய்த் துணிவை வரவழைத்துக் கொண்டாள்.

''சொல் விநயா... ஜயா உன் அக்கா என்பதை என்னிடம் ஏன் மறைத் தாய்?...'' என்று மீண்டும் கேட்டான் இளவரசு.

''தேவையில்லாத விஷயங்களை எல்லாம் உங்களிடம் சொல்லவேண் டுமா, என்ன?... நீங்கள் கூடத்தான் யாரையோ பார்க்கப் போனீர்க ளாம்!...'' என்று மனத்தாங்கலுடன் பேசினாள், விநயா; சொற்களில் கடுமை தெறித்தது.

அவன் அசடு வழிந்தான்.

அநாவசியமாய்க் குழைந்தான்.

''அது... அது... வந்து... என் அம்மாவின் வற்புறுத்தலால்...'' என்று தடுமாறினான்.

அந்தப் பெண்ணை மறுத்துவிட்ட தாகத் தெரிவித்தான்.

''நான் பல தடவை சொன்னதையே இப்போதும் சொல்கிறேன் விநயா...! நீ இல்லாமல் என்னால் உயிர் வாழ முடியாது விநயா...!'' என்று அதிகம் உருகினான்.

''நாளை மாலை, என் பெற்றோர் உன் வீட்டுக்கு முறைப்படி வருவார்கள்! உன் அம்மாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, உரிய சம்பிரதாயங்களுட னும், கௌரவத்துடனும் உன்னை எனக்காகப் பேசி முடிப்பார்கள்!'' என்று உவகையுடன் தகவல் சொன் னான்.

விநயாவால் நம்ப முடியவில்லை; இன்ப அதிர்ச்சியால் இதயம் தவித்தது; திகைப்பில் இவளுக்குப் பேச வர வில்லை.

''அடேயப்பா!... ஜயாதான் எவ் வளவு நல்ல குணச்சித்திர நடிகை! அவளுக்குத் தங்கையாகப் பிறக்க, நீ ரொம்பவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் விநயா!...'' என்று பெறற் கரிய பேறு பெற்ற மாதிரி பேசினான் இளவரசு.

இவள் நெஞ்சில் 'பொக்'கென்று ஓர் இடி இறங்கிற்று.

''ஏன் விநயா?... பைத்தியமா உங் களுக்கு?... ஜயாவின் வெள்ளைக் கணக்கைக் கேள்விப்படும்போதே மயக் கம் வருகிறது! இன்னும், கறுப்பில் எவ் வளவு பணம் வைத்திருக்கிறாளோ?... அவளோடு யாராவது பகைத்துக் கொள் வார்களோ?... போ, விநயா!... ஜயாவை நேரில் பார்த்துப் பேசு!... அவளுடன் காம்ப்ரமைஸ் செய்து கொள்!... அவளுடைய ஆசீர்வாதத்

துடன் நம் கல்யாணம் நடக்கட்டும்!...'' என்றவாறு கனவுகளுடன் விநயாவை நெருங்கினான், அவன்.

இவள், விருட்டென்று விலகினாள்.

''நாம் எவ்வளவு காலம் வெறும் குமாஸ்தாக்களாகவே இருப்பது விநயா?... அத்தியாவசியப் பொருள்களைத் தவணை முறையில் வாங்கி முடிப்பதற்குள், நம் ஆயுளே பூர்த்தியாகிவிடும் போலிருக்கிறது ...'' என ஆயாசப்பட்டான் இளவரசு.

விநயா அவனைக் கேவலமாகப் பார்த்தாள்..

''அதற்காக?...'' என ஆத்திரமாக இரைந்தாள்.

''நீ உன் அக்காவை உடனே போய்ப் பார்க்கவேண்டும்!... நம் திருமணம் மிகவும் சிறப்பாக நடக்கும்!... நீ கொண்டு வரும் சீர் வரிசைகளால், என் அப்பா அம்மாவெல்லாம் உனக்குச் சேவகம் செய்வார்கள்!... ஜயாவின் பணத்தை முதலீடு செய்து, நாம் ஏதாவது தொழில் தொடங்கலாம், சீக்கிரத்தில் லட்சாதிபதி ஆகலாம்; காலப் போக்கில், கோடீசுவரராய்ப் பவனி வரலாம். பெண்களாயிருப்பதால், 'ஜான் வயிறு' பற்றியே நினைத்திருக்கிறீர்கள். சமுதாய அந்தஸ்து பற்றி நீங்கள் நினைக்கவே இல்லை!... பணமிருந்தால், அதன் மதிப்பே தனிதான்...'' என்று ஆசை அலைகளினூடே மிதந்து பெருமூச்சு விட்டான் இளவரசு.

''சீ!...'' என்றாள் விநயா. அவள் பார்வை, ஓர் அருவருப்பான பிராணியைப் பார்க்கிறாற்போல் அவன் மேல் நிலைத்தது. ''உங்களைப் போய் நான் இதுவரை ஓர் ஆண்பிள்ளை என்று நினைத்திருந்தேனே? ''

''விநயா?...''

ஜயாவின் பணம்தான் நம் திருமணத்துக்கு அடிப்படை என்றால், அந்த வாழ்வே எனக்குத் தேவையில்லை!...''

''தன் அக்காவிடம், ஒரு தங்கை உதவி கேட்பதில் என்ன தப்பு விநயா?... சினிமாவில் நடிப்பது என்பது நீங்கள் நினைக்கிற மாதிரி 'கேவலமே இல்லை!... நீ வேலை பார்க்கவில்லையா?... இந்த மாதிரிதான் அதுவும்!...'' என இதமாகப் பேசினான், இளவரசு.

''போதும் உங்கள் விளக்கம்!... 'உங்களைவிட, நடிகை ஜயா கௌரமானவள்!' என்பது புரிந்துவிட்டது! நீங்கள் போகலாம்.'' என்று கத்தினாள், விநயா.

அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். வார்த்தைகளில் கனிவு முலாம் பூச முயன்றான்... ''விநயா! நான் சொல்வதைக் கேளம்மா!... வறட்டுத் திமிரால், உன் வளமான வாழ்க்கையைப் பாழடித்துக் கொள்ளாதேம்மா!...''

இவள் கேலியாகச் சிரித்தாள்: ''வளமான வாழ்க்கையை, நீங்கள் அமைக்கப் போவதில்லையே? நான் பிச்சை எடுத்துப் போட்டால் அல்லவா, உங்களுக்கே அந்த மானங்கெட்ட வாழ்க்கை கிடைக்கப் போகிறது?... இதில் எச்சரிக்கை வேறா, வெட்கமில்லாமல்?...''

இளவரசால், இதற்கு மேலும் பொறுமையாக இருக்க முடியவில்லை.

''என்ன சொன்னாய்?...'' என்று ஆத்திரமாய்க் கை ஓங்கினான் அவன்.

''ச்சு..,'' என அலட்சியமாக ஒதுங்கினாள், விநயா. ''ஒரு பிச்சைக்காரன் கைகளை ஏந்தலாமே தவிர, அவன் தன் கையை உயர்த்தக் கூடாது: அதற்கு அவனுக்கு அறவே உரிமை இல்லை என்பதுடன், அருகதையும் கிடையாது.''

''ஆணவக்காரி!...'' என்று ஆவேசமாகப் பற்களைக் கடித்தபடி இவள் மேல் பாய முனைந்தான், இளவரசு.

திடீரென நகர்ந்து அவனை நிலை தடுமாற வைத்த விநயா, ''என் மாதிரி ஆணவக்காரிகள் நிறையப்பேர் பெருக வேண்டும்!... உன்னைப் போன்றவர்களின் மீசைகளைப் பொசுக்கி, 'இவர்கள் ஆண்களல்ல' என்று இனம் காட்ட வேண்டும்!... அப்போதுதான் இந்த நாடு உருப்படும்!'' என்று நெருப்புக் கணைகளாகச் சொற்களை வீசிவிட்டு அங்கிருந்து விரைந்தாள். ○

NOW AVAILABLE WITH

SVI®

VIGNESVAR

IS:8034 ISI
SUBMERSIBLE PUMPSETS


IS:7538 ISI
MONOBLOCKS


JETPUMPS

SRI VIGNESWARA ENGG. CO.,

1095, AVANASHI ROAD, COIMBATORE - 641 037. PHONE : 25481 GRAMS : 'SUBPUMP'

BRANCH AT BANGALORE No. 7, SUBHAN SAHIB LANE SILVER JUBILEE PARK CROSS

BANGALORE - 560 002. PHONE : 238895

OSR

எல்லோருக்கும் கல்வி

டாக்டர் கே.வேங்கடசுப்பிரமணியன்

கல்வியும் முன்னேற்றமும்: ஒரு நாட்டின் சமூகப், பொருளாதார, அரசியல், பண்பாட்டின் முன்னேற்றத்திற்குக் கல்வி மிகவும் அவசியம் என்பதைப் பல ஆராய்ச்சிகள் மூலம் வல்லுநர்கள் நிரூபித்துள்ளார்கள். தனிப்பட்டவனுக்கும், ஒரு நாட்டுக்கும் எதிரிகளாலும் தாக்கமுடியாத பாதுகாவலாக இருப்பது கல்வியே. தமிழ் மறை தந்த திருவள்ளுவர் கூறுகிறான்:-

> ''அறிவு அற்றம் காக்கும் கருவி பெறுவார்க்கும்
> உள்ளழிக்க லாகா அரண்''

அதுமட்டுமன்று ' கேடில் விழுச் செல்வம் கல்வி '. கல்வியையே அழியாச் செல்வம் என்று சொல்லுகிறான்.

உலகச் செய்திகளை அறியும் ஞானக்கண்ணே கல்வி. கண்ணுடையோர் என்போர் கற்றோர் '. நம் இலக்கியங்கள் அனைத்திலும் கல்வியின் சிறப்பைப் போற்றி இருப்பதைக் காணலாம்.

நாகரிகம் என்ன என்றே தெரியாமல் மற்ற கண்டங்கள் இருளில் மண்டிக்கிடந்த போதே, பரத கண்டம் பல்கலைக் கழகங்களைக் கொண்டு கல்வி ஒளி பரப்பி வந்தது. ஆண்களுடன் பெண்களும் சரிநிகர் சமானமாகக் கல்வி கற்றிருந்தனர். ஔவையார் போன்ற பல பெண்பாற் புலவர்களை நம் பண்டைய இலக்கியங்களில் காண்கின்றோம்.

விடுதலைக்கு முன்: பழம்பெருமைகள் பெற்ற பரதகண்டம் விடுதலை அடையுமுன் சமூகப் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியிருந்தது. மக்களில் எழுத்தறிவின்மையும் ஒரு காரணமாக இருந்தது. மக்கள் அனைவருக்கும் கல்வியை வழங்குவதன் அவசியத்தை விடுதலைக்கு முன்பிருந்தே நம் தேசீயத் தலைவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

' அனைவருக்கும் கல்வி ' என்ற கருத்தினை முதன் முதலில் 1882-இல் தாதாபாய் நௌரோஜி எடுத்துரைத்தார். ஆனால் அதை யாரும் பொருட்படுத்தவில்லை.

கட்டாயக் கல்விபற்றி, 1910-ஆம் ஆண்டு ஒரு தீர்மானத்தையும் 1911-இல் ஒரு மசோதாவையும் கோபாலகிருஷ்ண கோகலே கொணர்ந்தார்.' அதுவும் பயன் ஏதுமின்றித் தோல்வி கண்டது.

இந்தியர்களின் ஆளுகைக்குள் கல்வி 1921-இல் வந்த பிறகு பெருமுயற்சிக்குப் பின் 1930-இல் கட்டாயக் கல்விச் சட்டம் கோட்பாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1944-இல் சார்ஜண்ட் திட்டம் நாற்பது ஆண்டுகளுக்குள் (1944-84) எல்லோருக்கும் 8 ஆண்டு தொடக்கக் கல்வியை வ்ழங்க வேண்டும் என்று முடிவெடுத்தது.

கெர் கமிட்டி அனைவருக்கும் கட்டாயக் கல்வி பதினாறு ஆண்டுகளுக்குள் வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

விடுதலைக்குப் பின்:- இதனை 1950-இல் அரசியல் நிர்ணயச் சட்டத்தை இயற்றியவர்கள். 45-வது ஷரத்தில் 1950-இலிருந்து 10 ஆண்டுகளுக்குள் 14 வயதுவரை உள்ள அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

ஆனால் திட்டக்குழுவின் கல்விப் பிரிவினர் 1958-இல் நிலையை ஆராய்ந்து 1965-66 -க்குள் அனைவருக்கும் ஆரம்ப வகுப்புகள் (1-5) வரைக் கட்டாயக் கல்வியும் 1975-76 -க்குள் 8-ஆம் வகுப்புவரைக் கட்டாயக் கல்வியும் நிறைவேற்ற வேண்டும் என முடிவெடுத்தனர்.

இதுவும் முடியாத நிலையில் அனைவருக்கும் ஐந்து வகுப்புக்களுக்கான கல்வி 1975-க்குள்ளும், எட்டு வகுப்பு வரை 1980- க்குள்ளும் நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசு தீர்மானித்தது. இதுவும் நிறைவேறவில்லை.

கல்வித் துறையில் ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்திய புதிய கல்விக் கொள்கையின் படி 1995-க்குள் 14 வயதினர்

எல்லோருக்கும் கட்டாயக் கல்வி வழங்கவேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிலை என்ன?: அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும் என்று தொடர்ந்து முயன்றதனால் 1950-51 -இல் 2,10,000 ஆக இருந்த தொடக்கப்பள்ளிகள் 1984-85 -இல் 5,20,000 ஆக உயர்ந்தது. 1951-இல் சுமார் 223 இலட்சம் மாணவர்கள் 8-ஆம் வகுப்பு வரை படித்தார்கள். அது 1984-85 -இல் சுமார் 1,121 இலட்சமாக உயர்ந்தது. 14 வயதினரில் 32.4% மாணவர்கள்தான் 8 வகுப்பு வரை படித்தார்கள். அது 1984-85 வாக்கில் 50% ஆக உயர்ந்தது. இத்தனை ஆண்டுகள் அரும்பாடுபட்டும் 14 வயதினர் அனை வருக்கும் கல்வி என்னும் இலக்கில் 50% தான் எட்ட முடிந்தது.

ஏன் இந்த நிலை? காரணங்கள் என்ன?

வெடிக்கும் ஜனத்தொகை:- 'ஜான் ஏறினால் முழம் சறுக்கும்' என்ற பழமொழி ஒருவகையில் அனைவருக்கும் கல்வி வழங்குதல் என்ற பிரச்சனைக்குப் பொருந்தும். 1950-51 -ஆம் ஆண்டை விட (32%) 1984-85 -இல் நாம் அதிக மாணவர்களுக்கு (50%) இந்த வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளோம், என்றாலும், எண்ணிக்கையளவில் படிக்காமல் இருப்போர் மிக அதிகமாகியுள்ளனர் - ஜனத்தொகை பெருக்கத்தால். எனவே நாம் 32% த்திலிருந்து 40% அடைவதற்கு எடுக்கும் முயற்சியை விட 50% இலிருந்து 55% உயர்த்துவதற்கு மிகப் பெரும் முயற்சி எடுக்க வேண்டும். ஏன் எனில் ஜனத்தொகை பெருக்கத்தால் 14 வயது வரை உள்ளவரின் எண்ணிக்கை பன்மடங்காகி விடும். ஆண்டுதோறும் ஓர் ஆஸ்திரேலியாவின் ஜனத்தொகை அளவு இந்தியாவில் அதிகமாகிறது என்றால் மிகையாகாது.

மாணவர்களுக்கு வசதியாகக் கிராமத்திலேயே பள்ளிகளை அமைத்துக் கொடுத்தாலும், ஏன் 50% பிள்ளைகள் பள்ளிக்கு வருவதில்லை? வறுமை; வறுமை என்று சொல்ல வேண்டும். நாடு விடுதலை அடைந்து 42 ஆண்டுகள் ஆன போதிலும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருப்பவர்களின் எண்ணிக்கை குறையவில்லை. ஆகவே தாய் தந்தையருக்கு உதவ சிறுவர்கள், சிறுமிகள் பள்ளிக்குச் செல்வதற்குப் பதில் சிறு சிறு வேலைகளைச் செய்கின்றார்கள். இவர்களுக்கு உதவ முறைசாராக் கல்வி மூலம், வேலைக்கு அதிகமாக சிறுவர்கள் செல்லும் இடங்களில் அவர்களுக்கு ஏற்ற நேரத்தில் கல்வி புகட்டப்படுகின்றது.

பின்தங்கிய வகுப்பினர்:- பின்தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களில் வறுமை காரணமாகவும், முதல் பரம்பரையில் கற்போராகவும் உள்ளவர்களாக இருப்பதாலும், தொடர்ந்து பள்ளியில் கற்காமல் நின்றுவிடுவதால் குறிப்பிட்ட இலக்கை எட்டுவது தடைப்படுகின்றது.

கல்விக் காரணங்கள்:- எழுதப்படிக்கத் தெரியா ..தவர்கள் அதிகமாக உள்ள பகுதிகளில், பள்ளிக்குச் செல்வோர் சதவீதமும் குறைவாக உள்ளது. எழுதப் படிக்கத் தெரிந்தவர் சதவீதம் உயர்ந்து வந்தாலும், படிக்காதவர்களின் எண்ணிக்கை பெருகி வருகின்றது. ஜனத்தொகை பெருக்கம்தான் காரணம்.

சமூக, சமயக் காரணங்கள்:- பாரதி புதுமைப் பெண்ணைப் பாடிய பிறகு பெண்கள் கல்வியில் முன்னேற்றம் இருந்தாலும் இன்றும் கிராமப்புறங்களில் பெண்களை அதிகம் படிக்க வைப்பதில்லை, குறிப்பாக பூப்படைந்த பெண்களைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. முகமதியர்கள் பர்தா முறையினால் பெண்களைப் பள்ளிக்குச் செல்ல அதிகம் அனுப்புவதில்லை.

நிலவியல் காரணங்கள்:- காடு, ஆறு. மலை அதிகமுள்ள கரடுமுரடான பகுதிகளில் அதிக பள்ளிகள் அமைவதில்லை. அதிக பிள்ளைகள் படிக்க முன் வருவதில்லை.

நிதிநிலை:- மாணவர்கள் அதிகமாக படிக்க வருவதாகக் கொண்டாலும் அனைவருக்கும் தரமான வகுப்பறை மற்ற வசதிகளைக் கொடுக்க முடிவதில்லை. தளவாடங்கள் குறைவதால் கல்வி கற்பது எளிதாக இருப்பதில்லை; கடினமாகத் தோன்றும். இதனால் மாணவர் பள்ளிக்கு வரும் எண்ணிக்கை குறையலாம்.

கற்பிக்கும் முறைகள்:- கற்பிக்கும் உபகரணங்களையும் ஏற்ற முறைகளையும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பயன்படுத்தாவிட்டாலும் மாணவர்களுக்குப் பள்ளிக்கு வரும் ஆர்வம் குறையும். புதிய கல்வித் திட்டம் பல புதிய திட்டங்களை மேற்கொண்டுள்ளது 'கரும்பலகைத் திட்டம்' வழி தொடக்கப் பள்ளிகளுக்கு குறிப்பிட்ட அளவிற்கு உபகரணங்கள் வழங்கப்படுகின்றது. இவை எல்லாம் ஒழுங்காக நடைமுறைப்படுத்த நிர்வாகமும் மேலாண்மையும் சரியாக இருக்க வேண்டும்.

தனிமாணவர்கள் பற்றிய காரணம்:- உடல், உள்ளம் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் குறிப்பிட்ட சதவீதம் இருக்கிறார்கள், அவர்கள் பள்ளி வயது வந்தோர் எண்ணிக்கையில் இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் சிறப்பான பள்ளிகள் ஏற்படுத்த இயலுவதில்லை. ஏற்படுத்தினாலும் அனைவரும் வருவதில்லை. குழந்தைப் பருவத்தில் சத்துணவு இல்லையானால் மூளை வளர்ச்சி குன்றி படிப்பை நிறுத்த நேரிடலாம். இவ்வகையில் சத்துணவு திட்டம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது.

முடிவுரை: புதிய கல்வித் திட்டத்தில், மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு தடையையும் குறைக்கும் வழிமுறைகளை மேற்கொள்ள இடமுள்ளது. முதன்முறையாக கல்வி பற்றி நாடு தழுவிய விவாதம் மேற்கொண்டு புதிய செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு புறம் பள்ளிக்கு வரும் மாணாக்கரின் எண்ணிக்கையை அதிகரிக்க முயல்வதோடு, மறுபுறம், முறைசாரக் கல்வி முறை மற்றும் முதியோர் கல்வி மூலம், எல்லோருக்கும் கல்வி வழங்க பெருமுயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அனைவருக்கும் கல்வி உடனே முழுமையாக நிறைவேற்றப்பட முடியாதென்றாலும் தொடர்ந்து முயற்சி இருந்து வரும். ○

சந்தோஷ்பூர் செல்ல அய்யன் பட்டாசு ஸ்டாப்!

சில பாதுகாப்பு குறிப்புகள்:

- பட்டாசுகள் வெடிக்கும்போது செயற்கை இழை ஆடைகள் அணிவது ஏற்றதல்ல.
- பட்டாசுகளை நெருக்கமாய் வைத்து வெடிக்காதீர்கள்.
- கையில் பிடித்துக் கொளுத்தி வீசுவது சரியல்ல.
- வீட்டுக்கு உள்ளேயோ, அருகாமையிலேயோ வெடிக்காதீர்கள்.
- ராக்கெட்டுகளை சரியான திசையில் விட பாட்டில்களைப் பயன்படுத்துங்கள்.

BUNNY BRAND FANCY FIREWORKS

அய்யன்
பயர் ஒர்க்ஸ்
பாக்டரி (பி) லிமிடெட்.
தபால் பெட்டி எண்: 378,
சிவகாசி-626 123.

ADWAVE/AFW/387/1 A

என் அருமை மகளுக்கு...

நீ இல்லாமல் வீடு வெறிச்சென்றிருக்கிறது. உன் கால் சதங்கை ஒலியும், கள்ளமற்ற சிரிப்பொலியும் இந்த வீட்டையே கல கலப்பாக்கியது. ஆனால் எப்படியும் ஒரு நாள் நீ கணவன் வீட்டுக்குச் செல்ல வேண்டியவள் தானே! எனக்கும் ஒரு தந்தையின் கடமையை நல்ல முறையில் செய்துவிட்ட மனநிறைவு.

பிறந்தது முதல் உனக்குச் சிறந்தவற்றையே அளித்து மகிழ்ந்த பெற்றோர்கள் நாங்கள். அதனால் தான் நீ என்றென்றும் எண்ணிப் பெருமைப் படும் வகையில் உன் திருமணத்தை திட்டமிட்டோம். எங்கள் சேமிப்பில் உனது திருமணத்தை வெகு விமரிசையாக நடத்த முடிந்தது. அந்த பெருமை கரூர் வைஸ்யா பாங்கின் திருமகள் திருமணத் திட்டத்தையே சேரும்.

நீ நடக்கத் துவங்கியதும், நாங்கள் இத் திட்டத்தில் சேமிக்கத் துவங்கியதை எண்ணி இன்றும் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

எங்கள் கனவுகளை நனவாக்க உதவியது கரூர் வைஸ்யா பாங்க்.

அன்புள்ள அப்பா

திருமகள் திருமணத் திட்டம்

Anugrah 378/89 Tam

உங்கள் கனவுகளை நனவாக்கும் பாங்க்

KVB கரூர் வைஸ்யா பாங்க்

அன்னியச் செலாவணியில் வர்த்தகம் புரிய அங்கீகாரம் பெற்றவர்கள்.

B. பாஸ்கரன்
சேர்மன்

எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

அன்னை உதயம்

‘செய்யும் தொழிலே தெய்வம்’ என்று பாடினான் பாரதி. தெய்வத்தையே செய்யும் தொழிலாக அமைந்து விட்டால்...? அதைத் தொழில் என்று சொல்லமுடியாது. பக்தி பரிணமிக்கும் கலைப்பணி அது! நெஞ்சார்ந்த நெகிழ்ச்சியையும் மகிழ்ச்சியையும் மலர்ச்சியையும் அளிக்கும் தெய்வத் திருப்பணி.

கலைகள் மலிந்த தஞ்சைத் தரணியிலே சுவாமிமலை குன்றுதோறாடும் குமரன் உகந்தமர்ந்த திருத்தலம். அங்கே பரம்பரையாக, பஞ்சலோக விக்கிரங்கள் செய்யும் புனிதக் கலை வளர்ந்து வருகிறது. இங்கே வண்டல் மண் கிடைப்பதும் ஒரு காரணம்.

அண்மையில் பிரபையுடன் எட்டரை அடி உயரமுள்ள அன்னை துர்க்கையின் படிமம் ஒன்றை வடித்துள்ளார், கலையரசர் திரு. கருணாநிதி ஸ்தபதியார். பதினெண் கைகளுடன், கருணையும் வீரமும் மிகுந்த எம்பெருமாட்டி சிம்ம வாகனத்தில் எழுந்தருளியிருக்கிறாள். இந்தத் துர்க்கையம்மன் மத்தியப் பிரதேசத்தில், சத்னா மாவட்டத்திலுள்ள மைகார், நீலகண்ட ஆசிரமத்தில் எழுந்தருளியிருக்கிறாள்.

ஓர் அங்குல விக்கிரகமாக இருந்தாலும், எட்டடி உயரச் சிற்பமாக இருந்தாலும், சிற்ப சாஸ்திர விதிப்படி மெழுகினால் முதலில் உருவமைத்துக் கொள்ள வேண்டும். தேன்மெழுகு, குங்கிலியம், கடலெண்ணெய் கலந்த மெழுகை, சுடு தண்ணீரில் போட்டுப் பதப்படுத்தி - மெழுகில் அம்மனை உருவாக்குகிறார்கள். உருவத்துக்கு ஏற்ப, ஒடி ஓலை (தென்ன ஓலை)





யில், பாகம் செய்து கொள்கிறார்கள். உத்தமதசதாளம் என்பது 124 பாகங்கள் கொண்டது; உதாரணம் சிவன் போன்ற ஆண் இறையம்சங்கள்; ஒரே பாகம் கொண்டது ஏக தாளம்; பஞ்ச தாளம் - விநாயகர் - இப்படி பல அளவுகள் உள்ளன.

மெழுகு பிடித்ததும் மேலே வண்டல் மண் பூசி களிமண்பூசி, மெழுகு உரு வளையாமல் நெளியாமல் இருக்க இரும்புக் கம்பிகளால் சுற்றி, மூன்றாம் முறை மண் பூசி, மாதக் கணக்கில் காயவைக்க வேண்டும். இந்தத் துர்க்கை மெழுகு வார்ப்பு ஆறு மாதத்துக்கு மேல் காய்ந்ததாம்.

மெழுகு வார்ப்பு காய்ந்ததும், துளையில் வெப்பப் படுத்தினால், மண் பூச்சுக்கு உள்ளிருக்கும் மெழுகு உருகி வந்துவிடுகிறது. உள் வெற்றிடமான விக்கிரக உரு கிடைக்கிறது. பித்தளை, செம்பு, ஈயம் (பஞ்சலோக மானால் தங்கம், வெள்ளி) மூன்றையும் விகிதாசார



முறையில், சுமார் 1700 டிகிரியில் திரவமாக்கி, அந்த மண் உருவில் கொட்டுகிறார்கள். உலோகத்தை உருக்க உதவுவது மூசை என்ற மண்பாண்டம்; பல கொள்ளள வுகளில் உள்ளது. உலோகக் குழம்பு அந்த மண் பூச்சுக்குள் நிரம்பி, விக்கிரகம் உருவாகிறது. குளிர்ந்ததும், அந்த மண் பூச்சை லேசாக உடைத்து எடுத்தால், விக்கிர கம் தயார். சூடு ஆறிய பிறகு உருவத்தைச் செதுக்கி, அரத்தினால் ராவி, சீவு உளியால் சீவி, சன்ன வேலை

கள் செய்து, மெருகு ஏற்ற வேண்டும். மிகப் பெரிய விக்கிரகமானால் கைகள் போன்ற உறுப்புக்களைத் தனியாகச் செய்து பொருத்த வேண்டும்.

சிற்பத்தை வாகனத்துடன் இணைப்பதை ஜடிபந்தனம் என்பார்கள். இதற்குப் பிறகே பாத அமைப்பைச்

சுத்தம் செய்வார்கள். விக்கிரத்தின் புருவ மத்திலிருந்து, மூக்கு, மார்பு மத்தி, தொப்பூழ், பாதங்களின் இடை வழியாக நூல் வைத்து மையம் பார்ப்பார்கள். மையம் பார்ப்பது சிற்பம், வாகனத்தில் அம்சமாக அமர உதவுகிறது.

அன்னையின் உதயம் அகிலத்தை வாழ வைக்கிறது. சிம்ம வாகனத்தில் எழுந்தருளித் தரிசனம் அளிக்கும் அன்னை துர்க்காபரமேசுவரி, தீபாவளித் திருநாளில் புன்மைகளை ஒழித்து, புண்ணியம் சேர்க்க வேண்டுவோமாக.

போட்டோ: கருணாநிதி ஸ்தபதி
ஓம் சுப்பிரமணியம்

''நீயே அது. நீயே தெய்வம். உனக்குள் இருக்கிறான்; உணர்ந்து கொள்'' என்று எளிதாக இரண்டே வார்த்தைகளில் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள் உபநிடதத்தில்.

வயது, மனப்பக்குவம், ஞானம் - இவை இருந்தாலன்றி இதன் ஆழமான அர்த்தத்தைப் புரிந்து கொள்வது கடினம். அப்படி மனப்பக்குவம் பெறும் போதும், எண்ணிப் பார்க்கப் பார்க்க பல்வேறு பொருள்களையும், பல்வேறு விளக்கங்களையும், பல்வேறு தொடர் சிந்தனைகளையும் கொடுக்கிறது இந்த இரண்டு வார்த்தைகள்.

''நீ எதை எண்ணுகிறாயோ அதுவாக ஆகிறாய்'' என்பதுதான் அதன் பொருள். நாம் பொருளைப் பற்றி எண்ணினோமானால் - செல்வம் சேர்ப்பதைப் பற்றி சிந்தித்தோமானால் - பணம் சேர்க்கும் முயற்சிகள்தான் நம்மை விரட்டுகின்றன. 'செக்ஸை'ப் பற்றி எண்ணும் போது காம உணர்வுகள் நம்மை ஆட்கொண்டு, நம் உடலில் பரவி, அந்த எண்ணங்கள் நமது செயல்களைத் தூண்டுகின்றன.

''நான் யார்? ஏன் பிறந்தேன்? ஏன் உலகில் இத்தனை அவலங்கள், கொடுமைகள், துன்பங்கள் என்று புத்தரைப் போல எண்ணும் போது அது சம்பந்தமான விஷயங்கள் - உண்மைகள் புலப்படுகின்றன. எதைத் தேடுகிறோமோ அது கிடைக்கிறது. தன்னை மறந்து ஒரு பொருளின் தன்மையைப்

ஆனந்த பரவச நிலை' என்று எண்ணும் யோகிகள் அதைப் பெறுகிறார்கள். அதைச் சமாதி நிலை என்று கூறுகிறார்கள்.

அருட்பெரும் ஜோதி எங்கும் ஒரே ஒளிமயம். அது அன்பாக - கருணையாக - அருளாக எங்கும் பொங்கி வழிகிறது. என்னைத் தழுவுகிறது. இவ்வுலகை - இப்பிரபஞ்சத்தை அரவணைத்து மகிழ்கிறது என்று கூறுகிறார்கள், பாடுகிறார்கள் அதைக் கண்டவர்கள்.

நம்மிடம் மனம் என்ற ஒரு அற்புதமான ஒரு யந்திரம் - ஒரு சூட்சமம் - ஒரு விசை இருக்கிறது. அதை எப்படி இயக்குவது என்பது நம்மில் பலருக்குத் தெரிவதில்லை. அதை மட்டும் சரியாக இயக்கக் கற்றுக் கொண்டோமானால் சொர்க்கத்தை இப்பூவுலகில் கொண்டுவந்து விடலாம். ஏனெனில் மனம் என்கிற சூட்சமத்தை உணர்ந்து அதை இயக்கும் போது நாம் எதை விரும்புகிறோமோ அதை அடைய முடியும். ஏனெனில் நமது மனம் என்ற சின்னஞ் சிறிய யந்திரத்திற்கும், இப்பிரபஞ்ச சக்தி என்ற மாபெரும் சக்திக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. இந்த மனம் எனும் யந்திரத்தை இயக்கும் சாவி நம்மிடம்தான் இருக்கிறது. இந்த பூட்டைச் சரியான சாவி போட்டுத் திறக்கும் போது இப் பிரபஞ்சம் நம் முன் விரிகிறது. அங்கே நோயில்லை;

உள்ளே இருக்கிறது மனம் எனும் சூட்சுமம்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

பற்றித் தன் முழு மனதையும் செலுத்தும் விஞ்ஞானி, அதிலே ஆழ்ந்து அதைப் பற்றிய விஞ்ஞான உண்மைகளைக் கண்டு பிடிக்கிறான். ராகங்களில் தோய்ந்து அதிலே சஞ்சாரம் செய்யும் ஒரு பாடகன் தானே சிருஷ்டித்துக் கொள்ளும் ஒரு தனி உலகில் மிதக்கிறான்.

நான் யார்?

''நான்தான் அந்தப் பொருள். நான்தான் அந்த இசை. நான்தான் விஞ்ஞான உண்மை.

நான்தான் பரமன், நான்தான் பரம்பொருள் என்று எதை எதை எல்லாம் நாமாகப் பாவிக்கிறோமோ அதுவாக நாம் மாறுகிறோம். ஒரு பொருளைப் பற்றி தீவிரமாக - ஆழமாக எண்ணும் போது மூலாதாரத்திற்கே நாம் செல்கிறோம். அந்த மூலாதாரத்தை நாம் தொடுகிறோம். மூலாதாரத்தைத்தான் 'நாதப் பிரம்மம்' என்கிறான் இசைக் கலைஞன். அந்த மூலாதாரத்தைத்தான் ஆக்க சக்தி கொண்ட பிரபஞ்ச ஊற்று என்கிறான் எழுத்தாளன். 'அது தான் உலகின் மாபெரும் சக்தி ஆண்டவன்!' என்கிறார்கள் சமயப் பெரியார்கள். அதையே பிரபஞ்ச சக்தி என்றும், ஆகாய பேரேடு என்றும் விஞ்ஞானிகளும், திரிகால ஞானிகளும் கூறுகிறார்கள்.

மூப்பில்லை; காலமில்லை. இறந்தகால, எதிர்கால நிகழ்ச்சிகளை எல்லாம் இப்போது நடப்பது போல் பார்க்கின்ற ஒரு நிலை. பொருள்களின் தன்மைகளுக்குப் பின்னால் இருக்கும் விஞ்ஞான உண்மைகள் எல்லாம் அவிழ்க்கப்பட்ட நிலை அது.

'நீயே அது!' என்ற மகத்தான உண்மையை யார் கண்டு பிடித்தார்கள்? காலை எழுந்ததிலிருந்து அன்றாட வாழ்வின் தேவைகள், நெருக்கடிகளுக்கு நாம் ஆளாகிறோம்; அதற்கு ஈடு கொடுத்து வாழ்கிறோம். நாம் வாழும் உலகம் - பொருள், உணவு, துணி, மணி, உடல், மனிதர்கள், மரஞ் செடி கொடிகள், காற்று, மழை, கடல், மலை என்று பொருள்களால் நிறைந்த ஒரு உலகில் அதற்கு ஈடு கொடுத்து ஒரு ஜட வாழ்வை ''பிறந்தோம், வாழ்கிறோம், மடிவோம்!'' என்று வாழ்ந்து வருகிறோம்.

அதற்கும் மேலாகச் சென்று நம் முன்னோருள் சிலர், ''நான் யார்? இப்படி எண்ணுகிறேனே அந்த எண்ணம் எங்கிருந்து கிளம்புகிறது? நான் உடலா? ஜீவனா? இவ்வுடலில், என்னை, 'நான்' என்று எண்ணுகிற ஜீவன் எங்கிருக்கிறது? அதை அடக்க - அதைத் தொட - அதை ஆராய - அதைக் கட்டுப்படுத்த முடியுமா?'' என்றெல்லாம்

எண்ணியிருக்கிறார்கள். எண்ணத்தின் மூல இடம்தான் 'நான்.' எல்லா நினைவுகளையும், எல்லா உணர்வுகளையும் அந்த மூலத்தில் கொண்டு நிறுத்தும் போது அங்கே 'நானே எல்லாமாக விரிகின்ற' நிலை ஏற்படுகிறது. இப்பிரபஞ்சத்திலுள்ள மாபெரும் சக்திக்கும், எனக்கும் உள்ள தொடர்பு தெரிகிறது. ''உலகம், மரஞ் செடி கொடி, மனிதர்கள் எல்லாம் செத்து மடிவன; தோன்றி மறைவன; நிரந்தரமற்றவை; ஆகவே மாயை; இந்த புறத்தோற்றம் நிரந்தரமானதல்ல. இந்த புறத்தோற்த்திற்குப் பின்னால் ஆத்மா இருக்கிறது. அது சர்வ வல்லமை படைத்தது. எல்லாவற்றையும் உண்டுபண்ணக் கூடியது. அத்தகைய அற்புதமான ஆத்மாவாக நீ இருக்கும் போது, உன்னைப் பார்த்து நீ பரிதாபப்படுவதென்ன? உனது இயலாமை இல்லாமை என்று கூறி வருத்தப்படுவதென்ன? நீயே எல்லாமாக இருக்கிறாய்! மனிதா, உன்னைப் புரிந்து கொள். உன்னை உணர்ந்து கொள்! உன்னிடம் இருக்கும் மாபெரும் சக்தியை வெளிப்படுத்து. பிரபஞ்ச சக்தியுடன் தொடர்பு கொண்டு அதை இப்பூவுலகில் இறக்கு. உனக்கும், பிறருக்குமாக ஒரு தேவலோகத்தை - சொர்க்கத்தை உண்டு பண்ணு!'' என்று நம் மனம் நம்மிடம் சொல்கிறது.

இதுதான் உண்மை.

இதுதான் ''நீயே அது'' என்ற தத்துவம் காட்டும் பாதை; நம்மை அழைத்துச் செல்லும் இடம்.

இப்படி நம் முன்னோர் கண்டுபிடித்ததை ஞானிகள், சித்தர்கள் தெளிவாகவும், சூசகமாகவும், மறைபொருளாகவும் எழுதி வைத்து இருக்கிறார்கள்.

இதை எப்படிப் பெறுவது?

தேடுங்கள், கிடைக்கும்.

தட்டுங்கள், திறக்கப்படும்.

கேளுங்கள், கொடுக்கப்படும்.

என்று ஏசுபிரான் வழி சொல்லிக் கொடுக்கிறோம். தேடினால்தான் கிடைக்கும். எதில் கருத்து செலுத்துகிறோமோ அதுவாக நாம் ஆகிறோம்; அது கிடைக்கிறது. இப்படித் தாங்கள் கண்டு பிடித்ததைத்தான் 'தத்துவமசி' என்று எழுதி வைத்தார்கள் உபநிடதத்தில். ''அசி = நீ; தத்துவம் = கருத்து; முடிந்த முடிவு; எல்லாவற்றிற்கும் பின்னாலிருக்கும் உண்மை. நீதான் தத்துவம்; நீதான் அது எல்லாவற்றிற்கும் பின்னாலிருக்கும் உண்மை. நீதான் அது; நீயே அது.''

எத்தகைய மாபெரும் உண்மை! எண்ணிப் பாருங்கள்! அந்த எண்ணத்திலே தோய்ந்து நில்லுங்கள்! பிரபஞ்சமாக நாம் விரிவதை உணருங்கள். ஒரு செடியின் இலையைத் தொட்டால்கூட அது நம்முடன் பேசுவதை உணருங்கள். அதற்குள் நாம் இருப்பதை அறியுங்கள்.

காக்கைச் சிறகினிலே நந்தலாலா உந்தன்
கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா
தீக்குள் விரலை வைத்தால் - உன்னைத்
தீண்டுமின்பம் தோன்றுதையே நந்தலாலா.

என்கிறார் பாரதி.

தீக்குள் விரலை வைக்கிறார். அங்கே அதுவாக மாறுகிறார். அங்கே எண்ணெயின் தேவைதான் தெரிகிறதே ஒழிய தீயின் சூடு தெரிவதில்லை. வெளிச்சத்தைக் கொண்டு வருவதில் இன்பம் காண்கிறார். தத்துவங்களை எல்லாம் - அதன் பின்புலங்களை எல்லாம் இளவயதிலே புரிந்து கொண்ட கவிதா ஞானி பாரதி.

இந்த உலகில் உங்களுக்கும், எனக்கும் எது முச்கியமென்று எண்ணி, எதை நம் முன்னோருடைய சொத்தாக நமக்கு மொழிபெயர்ப்பு செய்து தந்துவிட்டுப் போயிருக்கிறார் பாரதி.

பகவத் கீதையை.

பதஞ்சலி யோக சூத்திரத்தை.

இவ்விரண்டிலுமே இவ்வுலகம் - இப்பிரபஞ்சம் - மனித வாழ்க்கைக்கு வேண்டிய அறிவு - அனைத்தும் இருக்கிறது. அவை போதும் என்று அவர் எண்ணி இருக்க வேண்டும். வீரத்திற்கும், ஜீவத் துடிப்பிற்கும் பெயர் போன தேசிய மகாகவி பாரதி; ஆனால் எத்தனை பேர் அதையும் தாண்டி அந்த தத்துவ ஞானியை தரிசித்திருக்கிறார்கள்? மனிதர்களுடைய இயல்புகளை அறிந்தவன் அவன். அதனால்தான் அவர்களைப் பாப்பா பாட்டில் இருந்து அழைத்துச் செல்கிறான் குயில் பாட்டு வரை, பகவத் கீதை வரை; பதஞ்சலி யோக சூத்திரம் வரை. தெரியாமலா சொன்னான் ''எனக்கும் முன்னர் சித்தர் பலர் இருந்தாரப்பா, யானும் வந்தேன் ஒரு சித்தனிந்த நாட்டில்'' என்று?

பாரதி தத்துவ தரிசனம் செய்து வைக்கிறான். ஹரிஜனனையும், பிராமணனாக்கியவனல்லவா அவன்! தத்துவ தரிசனம் பெறுங்கள். புனிதம் பெறுங்கள். அசுத்தங்கள் நீங்கட்டும்! புடம் போட்ட தங்கமாகத் தூய்மையுடன் வெளி வாருங்கள்.

'நீயே அது' என்பதைப் பாரதியார் கூறுகிறார் இன்னும் எளிமையாக. ''பாவித்தால் போதும் பரம நிலை எய்து தற்கே!'' என்று. பாவித்தால் போதும். பாவனை செய்தால் போதும். கற்பனை செய்து கொண்டால் போதும். இதையேதான் பைபிள் கூறுகிறது. "AS A MAN THINKETH SO IS HE". எதை மனிதன் எண்ணுகிறானோ அதுவாக அவன் மாறுகிறான் என்று. பிரபஞ்சத்தின் உண்மையை வெவ்வேறு காலத்தில், வெவ்வேறு நாட்டில், வெவ்வேறு மனிதர்கள் கண்டு பிடித்து இருக்கிறார்கள்.

புத்தர் சொல்லி இருக்கிறார், ''மனத்தில் தோன்றிய எண்ணம்தான் அந்த மனிதனை உருவாக்கி இருக்கிறது. நமது எண்ணங்கள்தான் நம்மை உருவாக்கி இன்றைய நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றன'' என்று.

புத்தரைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் பர உலகைப் பற்றி அதிகம் பேசுபவரல்ல. ''இவ்வுலகில் பிறந்திருக்கிறோம். உலக உண்மைகளை, நியாயங்களைப் புரிந்து கொள். அதற்கேற்ப வாழ்ந்து விடு'' என்று பேசும் நடைமுறை உலக மனிதர் - மகான்; யதார்த்தவாதி.

அவரும் வாழ்வைப் பற்றி நிறைய யோசித்திருக்கிறார்; ஆகாயப் பேரேட்டைப் படித்திருக்கிறார்; மூலாதாரத்தைத் தொட்டிருக்கிறார். அவருக்குச் சில தெளிவுகள் பிறந்தன; பல உண்மைகள் விளங்கின. தன் உடலை ஒடுக்கி வருத்திப் பார்த்திருக்கிறார். பின் உணர்கிறார் - இவ்வுடல் ஒரு வாய்ப்பு; இவ்வுடலிலுள்ள மூளை மூலம்தான் நாம் சிந்திக்க முடியும்; விஷயங்களைப் புரிந்து கொள்ள முடியும். ஆகவே இவ்வுடலைப் பேணு. சரியானபடி வளர்த்துக் கொள் என்ற ஞானம் பெறுகிறார். பிறகு தியானம் செய்கிறார். யோக நிலையில் - எல்லாப் புலன்களையும் ஒருங்கிணைத்த நிலையில் - மூலாதாரத்துடன் ஐக்கியமாகிறார். ''பிரபஞ்ச சக்தி. ஆண்டவன். கடவுள். எல்லாம் ஒரே இயக்கம்'' என்ற பேருண்மைகள் புரிந்தாலும் ''வாழ்க்கை ஏன்? துக்கம் ஏன்? பிணி ஏன்? மூப்பு ஏன்?'' என்ற கேள்விகள் எழுப்பிச் சிந்திக்கிறார். எதைக் கேட்கிறோமோ அதற்கான விடை கிடைக்கிறது. அவருக்கு வாழ்வின் தாத்பரியம் புரிகிறது. ''இவ்வுலகில் பிறந்த நாம் என்ன செய்ய வேண்டும்? எப்படி வாழ்வது?'' என்பதைக் கற்கண்டு போல நமக்கு எடுத்து வழங்குகிறார்.

அவர் வேறு ஒரு கோணத்தில் இருந்து வாழ்வை அணுகுகிறார். வாழ்வின் பரவச நிலையைத் தடுப்பது எது? என்று தேடுகிறார். நமது எண்ணங்களும் அதைத்தான் தேடுகின்றன. ''இவ்வுலகில் ஏன் இவ்வளவு பிணிகள், துன்பங்கள்? இதிலிருந்து மீள்வது எப்படி?'' என்பதைத் தீர்க்கமாகச் சிந்தித்து விட்டு வழி கூறுகிறார்.

''துக்கம் என்றால் என்ன? அதன் காரணம் என்ன? அதைப் போக்கும் வழிகளென்ன? எந்த வழியைக் கடைப் பிடித்தால் துக்கம் போக்கி மகிழ்வுடன் வாழ முடியும்?'' என்று கேட்டு விடை தருகிறார். துக்கம் என்பது விளைவு. ஆகவே ''இன்றிருக்கிற சூழ்நிலை ஏற்பட என்ன காரணம்?'' என்ற கேள்வியை நாம் எழுப்புவோமானால் நமக்கு விடை கிடைக்கிறது.

''வாழ்வை வெறுத்தொதுக்காதே; வாழ்விலிருந்து தப் பிக்க முயலாதே. இவ்வுலகில் அவதிப்பட வேண்டிய அவசியமில்லை. இந்தக் கோடி, அந்தக் கோடி என்று நீ ஒதுங்காமல் வாழ்வில் ஒரு நடுப்பாதையில் நட. அங்கே எட்டு படிகள் உள்ளன. ஒவ்வொரு படியாக எடுத்து வை காலை. உன் வாழ்வு அற்புதமாக அமையும்'' என்று கூறுகிறார்.

இல்லற வாழ்க்கை வாழும் எல்லோரையும் பார்த்து நீயே அது!' என்ற தாரக மந்திரத்தை எட்டு நிலைகளில் உபயோகியுங்கள்: வாழ்வின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் முடிவுகளைக் காண்பீர்கள்'' என்று கூறுகிறார்.

அருமையான கண்டுபிடிப்பு.

எளிதான உண்மைகள்.

புரிந்து கொண்டால் ஞானம் வரும்.

கடைப்பிடித்தால் சூழ்நிலைகளின் கெடுபிடிகளிடமிருந்து மீளலாம்.

புத்தர் காட்டும் பாதை என்ன? இதுதான் அந்த எட்டு வழிப் பாதை.

1. சரியாகப் புரிந்து கொள் : வாழ்வையும், உலக இயல்புகளையும், வாழ வேண்டிய நெறிகளையும் புரிந்து கொள்.

2. சரியாக எண்ணு : மனத்தில் தூய்மை இருக்கட்டும். கொடுமையையும், கெட்ட எண்ணத்தையும், ஆசை வெறி யையும் அகற்று.

3. சரியானபடி பேசு : சாந்தமாகப் பேசு. பொய் சொல்லாதே. புறஞ்சொல்லாதே. கடுமையான வார்த்தை களை உபயோகிக்காதே. வம்பு பேசாதே.

4. சரியான செயல்களில் ஈடுபடு : உன் செயல் தூய்மையான செயலாக இருக்கட்டும். துன்பம் கொடுக்

காதே. அழிக்காதே. அவர்களது நிதானத்திற்குப் பங்கமேற் படுத்தாதே.

5. சரியான தொழிலைத் தேர்ந்தெடு : நாணயமான தொழிலைச் செய். பிறருக்குக் கேடு செய்யாதே. நியாய மற்றவைகளைச் செய்யாதே.

6. சரியான முயற்சியில் ஈடுபடு : உழைப்பதிலும், முயற்சியிலும் ஈடுபடும் போது கெட்ட எண்ணம் எழாது. நல்லெண்ணங்களை வளர்த்துக் கொள்.

7. சரியான் சிந்தனை : மனத்தைப் பற்றி - உடலைப் பற்றி - உன் உணர்வுகளைப் பற்றி - இயற்கையைப் பற்றி - சரியாகச் சிந்தித்துத் தெரிந்து கொள்.

8. சரியான கவனம் : மன சக்தியை ஒன்று திரட்டிக் கருத்தில் செலுத்து. அமைதி பெறுவாய். உள்ளொளி பெறுவாய்.

'நான் யார்? இவ்வுலகில் எப்படி வாழ வேண்டும்?' என்றெல்லாம் தெரிந்து கொள்ளுமுன் நாம் வாழத் துவங்கி விடுகிறோம்; வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பிள்ளைகளை எப்படி வளர்ப்பது என்கிற ஞானம் பெறு முன் கைகளில் குழந்தைகளை ஏந்திக் கொண்டு இருக் கிறோம்.

மனம் எப்படி இயங்குகிறது என்று தெரிந்து கொள்ளு முன் அதில் எல்லாக் குப்பைகளையும் கொட்டி வைக் கிறோம்.

ஒரு வெள்ளிக்கிழமை இரவில், ஒரு பெண் ஒரு ஆணுடன் கை கோத்துக் கொண்டு ஓடிக் கொண்டு இருந் தாள். திடீரென்று கூவினாள். 'ஏய்! உன்னுடைய அறைக்குப் போகுமுன் உன்னுடைய பெயரை நான் தெரிந்து கொள் ளட்டும்!' என்றாள். பெயரைக்கூடத் தெரிந்துகொள்ளு முன்பாக உறவை நாடி ஓடுகிறார்கள்! அவ்வளவு அவசரம்!

இந்த உலகம் முட்டாள்தனமான அவசரத்தில் - அறி யாமையினால் ஏற்பட்ட அவசரத்தில் ஓடிக் கொண்டிருக் கிறது. நில்லுங்கள் கொஞ்சம். எப்படி வாழ வேண்டு மென்று புரிந்து கொள்ளுங்கள். அதை முதலில் குழந்தை களுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

புத்தர் காட்டிய வாழ்க்கை முறைகளை வாழ்வில் கடைப் பிடிக்க முயலுங்கள். யாருடைய வாழ்விலும் நேர்ந்திராத புதிய புதிய சோதனைகள் உங்கள் வாழ்வில் ஏற்படும். ஒவ்வோர் சமயமும் இந்த எட்டுப் படியின் அடிப்படைகளை உபயோகியுங்கள். ஆரம்ப காலத்தில், ''இது உதவி செய் யாது!'' என்று எண்ணுகிற அளவுக்கு நம்பிக்கை தளரும். சந்தர்ப்பங்கள் நேரிடும். தைரியமுடன் நம்பிச் செயல் படுங்கள்.

காலப்போக்கில், இவ்வுலகை இயக்கும் உண்மைகளைப் புரிந்து கொள்வீர்கள். நமது வாழ்வை இயக்கும் தாத்பரியங் களை அறிந்து கொள்வீர்கள். வாழ்வின் தாத்பரியமே 'நல்லெண்ணம்' என்ற ஒரு சொல்லில் அடங்கி இருப்பதாக நான் அறிந்து கொண்டேன்.

இப்பிரபஞ்சம் முழுதும் நிறைந்து கிடக்கும் ஒரு மூலப் பொருள் இருக்கிறதென்றால் - ஒரு ஈர்ப்பு சக்தி இருக்கிற தென்றால் - ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டிருக்கும் வலை இருக்கின்றதென்றால் அதன் பெயர்தான் நல் லெண்ணம். அதன் மறுபெயர் அன்பு. அதற்கு கட்டுப் பட்டுத்தான் இப்பிரபஞ்சம் இயங்குகிறது. நல்லெண்ணம் என்ற ஒரு சொல்லின் விரிவைத்தான் தேவைக்கேற்ப எட்டு படிக்கட்டுகளாலான பாதையாகக் காட்டி, புத்தர் பிரான் நம்மை அழைத்துச் செல்கிறார்.

புத்தம் சரணம் கச்சாமி.

ஓம் நமசிவாய.

நமோ நாராயண ஓம்.

ஆயுட்காலம் பூராவும் பலன் தரக்கூடிய

ஸ்பெஷல் ஸ்ரீ மஹாலக்ஷ்மி தங்க ரக்ஷை

பூஜா செலவும் இதரமும் ரூ. 1111-00

ரக்ஷை வேண்டியவர்கள் அவர்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 1111-00 அனுப்பவும். ¼ மண்டலம் பூஜை செய்து அனுப்பப்படும். உங்களுடைய ஜாதக பலன் எதுவாயிருந்தாலும் சரி, அதற்கும் அப்பாற்பட்ட தெய்வீக சக்தி வாய்ந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மி கடாக்ஷத்தை அளிக்க வல்லது. உங்கள் வாழ்க்கையில் நிறைவேற எல்லா நன்மைகளையும், அதிசயிக்கத்தக்க வகையில் ஆயுட்காலம் பூராவிற்கும் பலன் தரும் அபூர்வ சக்தி வாய்ந்த தெய்வீக ரக்ஷை.

குறிப்பு :

1, ரக்ஷை வேண்டியவர்கள் பூரா செலவையும் முன்னதாக அனுப்பவும். V.P.P. இல்லை.

2. ரக்ஷை ஆர்டர் கிடைத்த 12-வது நாள் ரக்ஷையை இன்ஷியூர் தபால் மூலம் அனுப்பப்படும்.

3. எமது ஸ்தாபனம் இந்தியாவில் 1—12—1937 முதல் இயங்கி வருகிறது. எமது ஸ்தாபனத்தில் ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை தவிர வேறு வகை ரக்ஷைகள் தயார் செய்வதில்லை.

4. சாஸ்திர நம்பிக்கையுள்ளவர்கள் மட்டும் இதில் கலந்துகொள்ளவும். ரக்ஷைக்காக அனுப்பும் செலவைத் திரும்பப் பெற சட்ட பூர்வமாகவோ, இதர ரூபமாகவோ இடமில்லை. இதற்கு சம்மதமுள்ளவர்கள்தான் வாங்கிக்கொள்ளலாம். இப்புனிதத் தெய்வீக சம்பந்தமான ரக்ஷை தெய்வீக சந்நிதியில் தயார் செய்வது. ஆயிரமாயிரம் நேயர்கள் ரக்ஷை அணிந்து பலனடைந்து இருக்கிறார்கள்.

ஜோஸ்யர் பாரத்வாஜ ஜெயராமய்யர்

(75)

கோட்டமருதூர்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்

அரகண்டநல்லூர்-605 752.

தமிழகத்தில்

பாகவத மேளா

நாராயணஸ்வாமி

நாட்டியம், நாடகம், கீதம் ஆகிய மூன்று கலைகளைப் பற்றித் தெரியாதவர்கள் இல்லை. கல்வி அறிவு அற்ற பாமர மக்களிடையேயும் கலையை ரசிக்கும் பான்மை சிறந்து விளங்குகிறது. பிற நாடுகளில் இயங்கும் கலைப் போக்குக்கும் நம் நாட்டுப் பாணிக்கும் பெருத்த வித்தியாசம் உண்டு. கலை, கலைக்காகவே என்று ஓலமிடுகிறார்கள் அவர்கள். நமக்கோ மத அடிப்படையில், உள்ளுணர்வுகளின் மலர்ச்சியே கலை. இதனாலேயே இந்தக் கலைகள் தெய்வார்ப்பணமாகச் செயல்பட்டன.

நாட்டிய நாடகக் கலைகளில் ஒரு பெரிய தத்துவமே அடங்கியிருக்கிறது. உள்ளுணர்வின் மலர்ச்சியும், கருத்துக்களின் செழுமையும் அழகு உணர்ச்சிகளாக வடிவெடுக்கின்றன. கடவுளின் அவதாரங்களை ஆடிக்காட்டுகிறோம்; ஆனால் கொஞ்சங் கொஞ்சமாக ஆட்டத்தின் லயிப்பில் இவ்வுடலை அறவே மறந்து உணர்ச்சிப் பிழம்பாகி, தெய்விக நிலைக்கு உயர்ந்துவிடச் செய்வதே இக் கலைகளின் சிறப்பு.

நாட்டியத்தில் ஒரு சிறப்பான அம்சம் இதை ஆட்டத்துடன் இணைப்பது. கி.பி. 200 இல் எழுந்த ஹரிவம்சம் இத்தகைய நாட்டிய நாடகத்தைக் கூறுகிறது. கி.பி. 9, 10 - ஆம் நூற்றாண்டுகளில் விளங்கிய கல்வெட்டுகளை ஆராய்ந்தால், கர்நாடகம், ஆந்திரம், தமிழ் நாடுகளில் நாட்டிய நாடகங்கள் செழிப்பாக விளங்கியதை அறியலாம். புதிய மாதிரி நாடகங்களை நாட்டியத்துடன் இணைத்து ஒரு நூல் மலர்ந்தது. கொஹால என்ற அந்தக் கிரந்தம் இன்று மறைந்துவிட்டது.

பக்தியின் விளைவே இக்கலை என்பது உண்மை. தென்னாட்டில் இரண்டு கவிகள், சித்தேந்திர யோகி, தீர்த்த நாராயணயதி என்பவர்கள் நாட்டியம் - இசை - நாடகம் மூன்றையும் இணைத்து பாகவதத்திலிருந்தும் பிற புராணங்களிலிருந்தும் பல கதைகளை எடுத்து நாட்டிய நாடகமாக கையாண்டார்கள். இதைப் பின்பற்றினவர்களைப் பாகவதலு என்று ஆந்திரத்திலும், பாகவதர் எனத் தமிழ் நாட்டிலும் அழைத்தனர். இவற்றுள் குச்சிப்புடி பழமையானது. ஆந்திரம் குச்சிப்புடி கிராமத்தில், விஜயநகர மன்னன் வீர நரசிம்மராயன் காலத்தே முளைத்தது என்று தெரிகிறது.

விஜயநகரப் பேரரசு விழுந்ததும் புகழ்மிக்க பல நாடகாசாரியர்கள் இடம் பெயர்ந்து தஞ்சாவூர் நாயக்கர் அரசர் அவையில் புகுந்தனர். தமிழகத்தில், பாகவத மேளா உற்பத்தியாயிற்று. அரசன் அச்சுதப்ப நாயக்கன் (கி.பி. 1576- 1614) கலைஞர்களைப் போற்றினான். இம்மன்னன், ரகுநாத நாயக்கன் இருவருமே சிறந்த கலா ரசிகர்கள். ஆந்திராவிலிருந்து குடியேறியதால் மொழி தெலுங்கு. ஆனால் நாட்டியம் பரதம் தான். ரகுநாத மன்னனே சாகித்ய கர்த்தா.

பிரகலாத சரித்திரம், ருக்மிணி பரிணயம் என்ற இரு மேளாக்களுக்கும் பல பாடல்கள் இயற்றினான். கி.பி. 1610 இல் பாகவத மேளா நாட்டிய நாடகம் பக்தியுடன் இசை மழையாய்ப் பொழிந்தது.

ஏற்கனவே தஞ்சையில் வழங்கிய பரத நாட்டிய நுணுக்கங்கள் இணைந்த ஒரு புதிய பாணி மலர்ந்தது. அரசன் அச்சுதப்பன் இந்தக் குடும்பங்களுக்குத் தலைக்கு ஒரு வீடு, ஒரு கிணறு, சிறிது நஞ்சை தானம் அளித்தான். இதற்கு முன்பே கீவலூரில் ஒரு நாட்டிய நாடகம் வழங்கி வந்தது. இத்துடன் மெலட்டூர், சாலிய மங்கலம், சூலமங்கலம், காளி மங்கலம், நீடாமங்கலம், ஒரத்த நாடு, ஊத்துக்காடு, மூவாநல்லூர், தேப்பெருமா நல்லூர் - இப்படிப் பல ஊர்களிலும் இந்த நாட்டிய நாடக வகை பரவியது. ஒரு ஊருக்குப் பாகவத மேளம் என்ற பெயரே ஏற்பட்டது.

அத்வைத துறவியான தீர்த்த நாராயணர், கிருஷ்ணன் பிறப்பு முதல் ருக்மிணிக் கல்யாணம் வரை வடமொழியில் நூல் இயற்றி, வரகூரில் ஒரு பஜனை சம்பிரதாயத்தை நிறுவினார். இவர் சிஷ்யர்கள் ஜென்மாஷ்டமியின் போது இந்த நாடகத்தை ஆடிப் பாடி அபிநயித்துக் கொண்டாடினார்கள். கலையை வளர்த்த இவருடைய சீடர்களுள் முக்கியமானவர் கோபால கிருஷ்ண சாஸ்திரி. இன்று நடிக்கப்படும் பாகவத மேளா பாணியின் கர்த்தா இவரே. இவர் சீடர் வேங்கட ராம சாஸ்திரி எழுதிய நூல்கள் - மேளாவுக்குப் பயன்பட்டன. பிரகலாத சரித்திரம், மார்க்கண்டேயர், உஷா பரிணயம், ருக்மாங்கதா, கொல்ல பாமா, சீதா கல்யாணம், ருக்மிணிக் கல்யாணம், அரிச்சந்திரா - இப்படிப் பல நாட்டிய நாடகங்கள். இவர் தியாகையாவுக்கு மூத்தவர்.

சாலிய மங்கலத்தில் பிரும்மோற்சவத்தின்போதும் ஸ்ரீராமநவமியின் போதும் பிரகலாதா, விப்ரநாராயணா, ருக்மாங்கதா - ஆகிய நாடகங்கள் இரு தடவைகள் நிகழ்ந்தன. தேப்பெருமா நல்லூரில் பிரகலாத சரித்திரத்தைச் சம்ஸ்கிருதம், தெலுங்கு, தமிழ்ப் பாடல்களுடன் நடத்தினார்கள். ஊத்துக்காட்டில் கிருஷ்ணனின் உருவம் நடனமாடும் விக்ரகமே. முகாரிக்குச் சாலிய மங்கலம், மோகனத்துக்கு மெலட்டூர், அடானாவிற்குச் சூலமங்கலம், ஆஹிரிக்கு ஊத்துக்காடு என்ற ராகப் பழமொழிகளே ஏற்பட்டன. மெலட்டூர் பாகவதர்களுள் நடேசையர் பிரபலமானவர். இவரே ஒரு நட்டுவனார். ஆழமான அறிவு. கிருஷ்ணையர் பற்றிச் சங்கீத உலகில் அறியாதவர் இல்லை. இவர் பரத நாட்டியத்தை நடேசையரிடம் பயின்றார். பரதம் நல்லூர் நாராயணசாமி ஐயர், நடன காசிநாதன் ஆகியோர் மெலட்டூர் சீடர்களே.

மற்ற நாடகங்களில் இல்லாத ஒரு தனிச்சிறப்பு பாகவத மேளாவுக்கு உண்டு. சில பாத்திரங்கள் முகக் கவசம் பூண்டு நடிப்பது தான்..... ஏன்?

நாகரீகத்தில் முற்றியவர்கள் நாடகக் கவசங்களை, கற்பனை, (மௌட்டீகம்) என்று நகையாடுகிறார்கள். அவர்கள் ஒன்றை மறந்துவிடுகிறார்கள், அல்லது மறைக்கிறார்கள். மனித உடலே ஒரு கவசம் மாதிரிதான். அன்றாட வாழ்வில்

சாலியமங்கலம் - பிரகலாத நாட்டிய நாடகத்தில்

நரசிம்மர் முக கவசம் - வீதியுலா

விநாயகரும் முருகனும்

சமயத்திற்கேற்ப உள் உணர்ச்சிகளை மறைத்துப் போலி பாவங்களைக் காட்டப் பழகிவிடுகிறோம். அதோடு அந்தக் கவசத்தை அடிக்கடி மாற்றுகிறோம். கிரீஷ் கார்நாட், தம் ஹயவதனா என்ற நூலில், தற்கால மனிதன் தன் கவசத்தை நீக்க முடியாமல் அவதிப்படுவதை அற்புதமாகக் குறித்திருக்கிறார்.

இந்தியாவில் பழங்குடியினர் கலாசாரத்தை ஆராய்ந்தால் அவர்கள் சமய உணர்வில் ஓர் அதிசயம் தென்படும். பஸ்தார் முண்டா, ஒரிஸ்ஸா ஒரியான், சந்தாள், பைகா - இக்குடியினர் கவசமணிந்து மதவிழா கொண்டாடி மகிழ்ந்தனர். எந்தக் கவசம் பூணுகிறோமோ, அந்தப் பிராணியின் சக்தி தங்களுக்கு ஆவிர்ப்பவிப்பதாக நம்பினார்கள். கவசமணிந்தவுடன் இவன் மனநிலை மாறி அப்பாத்திரமாகவே மாறிவிடுகிறான். அது மட்டுமா குழுமியிருக்கும் அனைவருமே தெய்விக உணர்வு பெற்றவராகி விடுவார்கள். சொல்லப் போனல் இந்த நோக்கத்தில் தான் மேளா கவசத்துடன் நடைபெறுகிறது.

இவ்வளவு . முக்யத்துவம் வாய்ந்த இக்கவசங்களை, பிரதிமங்களாகவே எண்ணி, தினப்படி பூஜைகள் நடக்கின்றன. களிமண், மரப்பட்டை, காகிதம், மூங்கில், வெள்ளெருக்கு இவைகளால் கவசம் செய்யப்படுகிறது. மேளாவிற்குச் சில நாட்கள் முன்பு இதன் சக்தியைக் கவசத்தில் ஆவாகனம் செய்து, சுத்தமாக்கி, வண்ணம் பூசி மீண்டும் பிராணப் பிரதிட்டை நடைபெறுகிறது.

பிரகலாத மேளா நாடகம்: நீண்ட தொரு தெரு. இருபுறம் நெருங்கிய வீடுகள். ஒரு கோடியில் ஒரு பந்தல். அதில் மேடை. இதுவே அரங்கம். எதிர்க் கோடியில் உள்ளூர் ஆலய இறைவன் பிரசன்னமாயிருக்கிறார். அவர் எதிரே தான் இம்மேளா நடைபெறுகிறது.

அன்று நரசிம்ம ஜயந்தி. மேடையில் பாகவதர்கள் தோடய மங்களம் பாடுகிறார்கள். அது முடிந்ததும் கோணங்கி தோன்றித் தன் நாட்டியத்தால் அவையினரை மகிழ்விக்கிறான். பின் ஒரு பாலன், கணபதி முக கவசத்துடன் தோன்றி நடனமாடுகிறான். இல்லை, ஆட்டுவிக்கப்படுகிறான். முகத்தைக் கவசம் மறைத்துவிட்டதால் ஒருவர் பின்னாலிருந்து இவனை நடன கதியில் இயக்குகிறார். பூர்வாங்கத்திலேயே களை கட்டிவிடுகிறது.

ஒரு பாகவதர் காம்போதி ராகத்தில் பிரகலாத சரித்திரத்தை நமக்குக் கூறுகிறார். பிறகு பாத்திரப் பிரவேசம், ஒவ்வொரு அறிமுகத்திற்குப் பின் துவிபதம் பாடப்படுகிறது. கமாஸ், தேவகாந்தாரி, பந்துவராளி, பைரவி, தோடி ஒலிக்கின்றன.

இரண்யகசிபு அறிமுகமாகிறான். கம்பீர ஆகிருதி. கோபம் கக்கும் கனல் விழிகள். துடிக்கும் மீசை. அட்டகாசமாக உயர்த்திப் பேசும் தொனி. அவன் அசைவுகள் ஒவ்வொன்றிலும் இறுமாப்பு. அவன் அடியெடுத்து வைக்கும் நடனகதியே கதி கலங்க வைக்கிறது.

இம்மேளாவில் பெண்களுக்குப் பங்கு இல்லை. ஆடவர்களே பெண் வேடம் தரிக்கிறார்கள்.

கதை எல்லாருக்கும் தெரிந்தது தான். இருந்தும் நமக்கு அலுப்புத் தட்டுவதில்லை. இரண்யனின் பார்வை நமக்கு ஒரு வேகத்தைக் கிளப்புகிறது. பிரகலாதனின் பொறாமை நம் பொறுமையைச் சோதிக்கிறது. அவன் கபடற்ற முகம் நம் மனத்தைச் சுண்டி இழுக்கிறது.

இரவு நீள்கிறது. உஷத்காலம் நெருங்குகிறது. பகலிலோ இரவிலோ இரணியனை அழிக்க முடியாதே. தெரு ஓரத்தில் ஸ்தம்பம் தயாராகிவிட்டது. அதனுள் ஒருவர் நரசிம்ம பாத்திரம் ஏன்று அமர்ந்திருக்கிறார். முகத்தைச் சிங்க முகக் கவசம் மூடியிருக்கிறது. கடும் உபவாசம் வேறு. ஆவேச நிலையில் அவரைப் பலர் பிடித்து அடக்க வேண்டியதாகிறது.

இரணிய பிரகலாத வாதம் முற்றி, தைத்யன் தூணைக் காலால் உதைக்க வெடிச்சத்தம் ஊரையே அதிர வைக்க, தூண் பிளந்து, நரசிம்மம் வெளிப் பாய்ந்து இரண்யனைச் சம்கரிக்கிறார்.

மங்கள ஆரத்தியுடன் பிரகலாத நாடகம் முடிகிறது. தீயவை முடிந்து நன்மை உதித்தே தீரும் என்பதைக் காட்டக் கீழ்வானில் கதிரவன் உதயமாகிறான். பொது மக்கள் ஆதரவும், பாராட்டும் மேலும் அதிகரித்தால், இந்தப் புராதன கலை, பக்தி செறிந்த நாட்டிய நாடகம் சிறப்புற்று வளரும்.

WITH BEST WISHES ON THE EVE OF HAPPY DEEPAVALI

Nobel Laureate Mother Teresa, Blesses Doyen Educationist Dr (Mrs) Elizabeth Thomas,
The First Lady in India who received the Royal Awards from Austria, Italy & U.S.A.

- **ST. MARY'S MAT. BOYS' HR.SEC.SCHOOL, No.10, RAJAVELU STREET, PERAMBUR, MADRAS-600 011.**
- **ST. MARY'S MAT. GIRLS' HR.SEC. SCHOOL, No.16, ST. MARY'S ROAD, SEMBIUM, MADRAS-600 011. Phone No. 575753. HOSTEL ATTACHED.**
- **ST. MARY'S MAT. HR.SEC.SCHOOL, THIRUVALLUR KOOTU ROAD, REDHILLS, MADRAS-600 052. HOSTEL ATTACHED. Phone No. 67337.**
- **CHEVALIER T. THOMAS ELIZABETH MAT.BOYS' HR.SEC. SCHOOL, No.37, MADURAISWAMI MADAM STREET, PERAMBUR, MADRAS-600 011. Phone No. 575154.**
- **CHEVALIER T. THOMAS ELIZABETH COLLEGE FOR WOMEN, No.16, ST.MARY'S ROAD, SEMBIUM, MADRAS-600 011. HOSTEL ATTACHED. Phone No. 575160.**
- **MARIAN JUNIOR COLLEGE, KALATHIPADI, VADAVATHOOR POST, KOTTAYAM-686 010, KERALA STATE. (C.B.S.E.PATTERN) HOSTEL ATTACHED. Phone No. 8458.**
- **DANIEL THANGAM ORPHANAGE, No.16, ST. MARY'S ROAD, SEMBIUM, MADRAS-600 011.**

WE HAVE BROUGHT OUT MANY STATE RANK HOLDERS FROM OUR SCHOOLS AND COLLEGE.
WE ALSO TRAIN THE CHILDREN IN CO-CURRICULAR ACTIVITIES LIKE DANCE-BHARATHA NATYAM, GUITAR, YOGA, FINE ARTS, MARTIAL ART (KUNG-FU), GYMNASTICS, SCOUTS & GUIDES, N.S.S. SCHOOL BAND ETC.
TALENTED STUDENTS FROM INDIA AND ABROAD WILL BE ADMITTED IN OUR SCHOOLS AND COLLEGE FROM MAY 1990.

T. THOMAS EDUCATIONAL TRUST (REGD.)
16, St. Mary's Road, Sembium, Madras - 11.

SILVER JUBILEE YEAR
ST. MARY'S GROUP OF SCHOOLS, MADRAS & KERALA
FOUNDED BY CHEV. T. THOMAS AND MRS. ELIZABETH-1964
25
1989
MADRAS-600 011

DR. (MRS.) ELIZABETH THOMAS, L.G.C.G.,
FOUNDER, SECRETARY & CORRESPONDENT.

CHEVALIER T.THOMAS

கான்பெர்ராவில் மினி கிராமம்

நவராத்திரி பொம்மைக் கொலுவில் அழகிய ஒரு கிராமச் சூழ்நிலையை சிறிய பொம்மைகளைக் கொண்டே உருவாக்கி வைத்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இது போன்று ஆஸ்திரேலியாவின் தலைநகரான கான்பெர்ராவில் ஒரு பிரிட்டிஷ் குடும்பத்தினர் சுமார் பதினைந்து கிரவுண்டு நிலத்தில் அழகிய '**மினி கிராமம்**' ஒன்றையே அமைத்துச் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்து அவர்களைப் பரவசப்படுத்துகின்றனர்.

காக்கிங் டான் கிரீன் (COCKINGTON GREEN) என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த 'மினி' கிராமம், இங்கிலாந்திலுள்ள DEVON பிராந்தியத்திலுள்ள காக்கிங்டன் என்ற கிராமத்தை ஒத்திருக்கும் மாதிரியாக கூறப்படுகிறது.

கடந்த 1972-ஆம் ஆண்டு டௌக் ஸாரா (DOUG SARA) என்பவரது குடும்பத்தினர் இங்கிலாந்து சென்றிருந்த பொழுது பாபாகோம்ப் (BABA COMBE) என்ற இடத்தில் ஒரு கிராமத்தின், 'மாடலை'ப் பார்த்தபொழுது, தாமும் தன் ஊரில் அது போன்ற ஒரு மாதிரி பிரிட்டிஷ் கிராம சூழ்நிலையை 'மினி' யாக அமைக்க எண்ணினர். பல மாதங்கள் அவர்கள் செய்த ஆராய்ச்சியின் பலனாக, ஆறு ஆண்டுகள் உழைப்பிற்கு பின் இந்த காக்கிங் டான் கிரீன் 'மினி' கிராமம் கான் பெர்ரா நகரில் தோன்றியது.

இந்த 'மினி' கிராமத்திலுள்ள தெருக்கள், அதில் நடமாடும் ஜனங்கள், மிருகங்கள், நிறுத்தப்பட்டிருக்கும் மோட்டார், குதிரை வண்டி ஆகிய வாகனங்கள், அங்குள்ள அங்காடிகள், 'ஹோட்டல்' கால்பந்து ஸ்டேடியம், ஊரின் நடுவே ஓடும் சிறு கால்வாய், அதன் கரையில் அமைந்த பயணிகள் விடுதி, கிராமத்துக் 'கவுன்சில்' கட்டிடம், அவ்வூரில் இயங்கும் ரெயில் பாதை, கிராமத்தின் அருகேயுள்ள பழமையான ஒரு கோட்டை, ஆகிய அனைத்துக் காட்சிகளும் இரண்டடிக்கும் குறைவான உயரத்தில் ஒன்றுக் கொன்று விகித அளவுப்படி அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

கிராமத்து வயோதிகர் ஒருவர் தின சரிப் பத்திரிகையை படிப்பது முதல் மீன் பிடிக்கும் இளைஞன் வரை அக்கிராமச் சூழ்நிலையின் அனைத்துப் பாத்திரங்களும் இயல்பாக அமைக்கப்பட்டு பார்ப்பவர்களை பரவசப்படுத்துகின்றன.

காக்கிங்டன் கிரீன் கிராமத்தின் 'மினி' கட்டிடங்களை அமைப்பதில் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டினாலான மற்றும் எஃகு நூலிழைக்கண்ணாடி (FIBRE GLASS) என்ற கண்ணாடி இழையினாலான நுண்ணிய பலகைகளும், உபயோகிக்கப்பட்டுள்ளன. அவற்றின் சுவர்களிலுள்ள செங்கல்களும், கதவுகளும், ஜன்னல்களும் உருவாக்க, தனித்தனியே ரப்பரினாலான அச்சுகள் தயாரிக்கப்பட்டு அவற்றின் மூலம் பிசின், அல்லது குங்கிலியத்தில் வார்க்கப்பட்டு, அதன் மீது இயற்கையழகும் பழமையும் பிரதிபலிக்கும்படி வண்ணம் பூசப்பட்டுள்ளன. அங்கு வைக்கப் பட்டிருக்கும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள், மிருகங்கள், பட்சிகள் அனைத்தும் களிமண்ணில் செய்யப்பட்டு, சுட்டு, வண்ணம் பூசப் பட்டுள்ளவையாகும்.

இந்தக் கிராமத்தில் இயங்கி வரும் சுமார் 18 அங்குல உயரமேயுள்ள மூன்று பெட்டிகளடங்கிய ரெயில் வண்டி ஒன்று 12 வோல்ட் மின்சார மோட்டார் உதவியால் இயங்கி, ஊரைச் சுற்றி வந்து, ரெயில் நிலையத்தில் நின்று, ஆற்றுப் பாலத்தின் மீது ஓடி, அந்தக் கிராமச் சூழ்நிலையை மேலும் அழகுபடுத்துகிறது.

இந்த 'மினி' கிராமத்திலுள்ள படைப்புகளின் உயரத்துக்கு தக்கபடி, குட்டையாக வளரும் 'மினி' பூச்செடி கொடிகளும், நிறைந்த நிலப்பரப்பை அமைப்பதற்கு 600-க்கு மேற்பட்ட செடி கொடி வகைகள் வளர்க்கப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. புல்தரை அடர்ந்து வளர்ந்த பூங்காக்களில் (HIGHLAND BENT) என்ற நுண்ணிய புல் வகைகள் வளர்க்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அந்தப் புல்தரை வழவழப்பாக அமைந்துள்ளது. புல் வளர வளர அவற்றை வெட்டுவதற்கென, சிறிய தனிரகப் புல்வெட்டும் இயந்திரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. கால நிலை மாறுவதற்கேற்ப, தவிர, புல் தரைகளும் செடிகொடிகளும் வளர்வதைக் கட்டுப்படுத்தி ஒழுங்காகச் சீர் படுத்துவதற்கு ஏதுவாக, அங்கு வைக்கப் பட்டிருக்கும் 'மினி'ப் படைப்புகளை அவ்வப்போது அகற்றி, தேவையானால் அவற்றைப் பழுது பார்த்து வண்ணம் பூசி, இந்தக் கிராமத்தின் அழகு குன்றாமல் பாதுகாத்து வருகின்றனர்.

'காக்கிங்டன் கிரீன் கிராமத்தைப் பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக சிற்றுண்டிச் சாலை இன்று இங்கு இயங்கி வருகிறது.

இத்துணை சிறப்பு வாய்ந்த இந்த 'மினி கிராமத்தை'க் கண்டு மகிழ சில ஆஸ்திரேலிய டாலர்கள் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றன. கான்பெர்ரா நகருக்கு செல்பவர் எவரும் இக்கலையழகு மிகுந்த 'மினி' பிரிட்டிஷ் கிராமக் காட்சியைக் கண்டுகளிக்கத் தவறுவதில்லை.

புகைப்படங்களும் கட்டுரையும்: ஜனார்த்தனன்

கூடத்தில் படுத்திருந்தேன். கல்யாணக் கூடம். உயரமான கூரை. மேலே மொட்டை மாடியிலிருந்து பார்க்கும்படியாக ஜன்னல்கள். பூ வேலைப்பாட்டுத் திரை. இந்தக் கூடத்தில் வெயில் உறைத்ததாகவே நினைவில்லை. சின்ன வயதில் வருடா வருடம் சம்மருக்கு இங்கே கிராமத்துக்கு அனுப்பி விடுவார்கள். வாய்க்காலில் அளைந்து, மாவடுவோடு தயிர் சாதமும் சாப்பிட்டு விட்டு, ஜில்லென்று இதே கூடத்தில்தான் தலை மாடு கால்மாடாய்த் தூங்கி, இரண்டு மாதம் எப்படிப் போயிற்றென்றே தெரியாமல் போய் விடும்.

சுஜாவை இங்கே கூட்டிக் கொண்டு வரவேண்டும், இதையெல்லாம் அவளுக்குக் காட்ட வேண்டும், பசுமை, போறா? டான்ஸ் மாஸ்டர் ஏற்கெனவே சொல்லிட்டார். 'சம்மர்ல எங்கேயும் மூட்டை கட்டிடாதிங்க. அவளுக்கு லீவா இருக்கச்சேதான், எனக்கு எப்ப சௌகரியமோ நினைச்ச போது வந்து சொல்லிக் கொடுக்க தோதுபடும்னு.' ஆச்சு, அடுத்த வருஷம் அரங்கேத்தம் பண்ணணும்னு நெனச்சிண்டிருக்கேன்...''

ஐய்யோ பா...வமாக சுஜாவைப் பார்க்கத்தான் என்னால் முடிந்தது.

''அதெல்லாம் இல்லை, நானும் வருவேன். ஒருதரம்கூட நான் நம்ம ஊரெல்லாம் பாத்ததேயில்லை. நீ மட்டும் ஜாலியா போயிட்டு வா...'' என்று என்னிடம் முணுமுணுத்தாளே தவிர, சுஜாவால் அவள் அம்மாவின் கும். 'தட்டைப் பார்த்துக் கொண்டு சாப்பிடுடி. ஒரு நாளைக்கு ரெண்டு பூச்சியைப் பிடிச்சு தட்டிலே போடறேன் பார்...' என்றெல்லாம் பயமுறுத்திப் பார்த்து, அலுத்து விட்டு விட்டேன். அப்புறம் எனக்கே தோன்றியது, விளையாடத்தான் இல்லை, காமிக்சாவது படிக்கட்டுமே! வேறு ஏது நேரம்... என்று.

அம்மாக்காரி திட்டமெல்லாம் வேறே. ஒரே குழந்தை எல்லாவற்றிலும் சகலகலாவல்லி (வல்லபி?)யாகி விட வேண்டுமாம். நாட்டியத்தில் அபிநய சரஸ்வதி பட்டம், ஸ்விம்மிங்கில் ஒலிம்பிக் லெவலுக்குத் தேர்ச்சி, படிப்பில் கோல்ட் மெடல்...

வேரில்லாத மரங்கள்



கோமளா வரதன்

இனிமை ஆற அமர வாழ்க்கையென்றால் அவள் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் நான் நினைத்துக் கொள்வேன். அதோடு சரி, அந்தப் பேச்சை எடுத்தாலே என் மனைவி முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வாள்; நொடிப்பாள்.

''அம்மாவும், பெண்ணும் எக்கேடோ கெட்டுப் போங்கள். எனக்குப் போயே ஆக வேண்டும். என் ஊரே எனக்கு மறந்துவிடும் போலிருக்கு...'' என்று இந்த முறை நான் கிளம்பிய போதும், அதே கதைதான்.

''நன்னாருக்கு... அங்கே போய் வாய்க்காலையும், வாழைக் கொல்லையையும் பாத்துண்டு, நாளெல்லாம் உக்காண்டு அவ என்ன பண்ணப் முறைப்புக்கு முன் பிடிவாதம் பிடிக்க முடியவில்லை.

தன்னை மறந்த விளையாட்டு, கலகலவென்ற சிரிப்பு, தாத்தா, பாட்டி, அத்தை, சித்தியென்று மாற்றி மாற்றிச் செல்லம். இதெல்லாம் தெரியவே தெரியாத பக்கா பட்டணத்து வார்ப்பு அந்தக் குழந்தை. இரண்டரை வயதில் நர்ஸரி ஸ்கூலில் சேர்த்தாயிற்று. ஐந்தில் டான்ஸ் மாஸ்டர் வந்தார். எட்டு, ஒன்பதில் ஸ்விம்மிங், யோகா, வீணை மூன்றும் ஆரம்பம். இருக்கவே இருக்கிறது ஹோம் ஒர்க். பாக்கிப் போது ஏதாவது பாக்கி இருந்தால், அதனை ஆக்ரமித்துக் கொண்டு காமிக் புத்தகங்கள்.

அதைப் படிக்கக்கூடச் சாப்பிடும் போதுதான் அவளுக்கு நேரம் கிடைக்

இப்போது சொல்லுங்கள், எனக்கு ஏன் சுஜாவைப் பார்த்தால் ஐயோ பாவமாக இருக்காதென்று. மாற்றி மாற்றி ஏதோ ஒரு வாத்தியாரிடம் வறுபட்டுக் கொண்டிருக்கிறாளே...

இதே, நாங்கள் சின்னவர்களாயிருந்த போது எவ்வளவு ஜாலியாயிருந்தோம். அதுவும் லீவு என்று வந்து விட்டால் போதும், அடித்த லூட்டிக்கும், கொம்மாளத்துக்கும் ஈடேது. தப்பித் தவறிக்கூடப் புத்தகத்தைத் தொட மாட்டோம். அப்படியே ஏதாவது கதைப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தால்கூடத் தாத்தா விடமாட்டார். 'பெரிய மனுஷன் படிச்சுக் கிழிக்கறான். ஸ்கூல்லதான் விழுந்து விழுந்து படிச்சு கண்ணைக் கெடுத்துக்கறிங்களே,

இங்கே லீவிலே வேறே என்னடா? எழுந்து போங்கடா. ஓடியாட வேண்டிய வயசிலே போய் விளையாடுங்கடா...' என்று விரட்டி விடுவார்.

அதோடா...! எல்லாவற்றுக்கும் ஒரு கதை சொல்லிக் கொண்டிருப்பார். கோவிலுக்குப் போனால் சித்திரை, கருடன், பார் வேட்டை இத்யாதி பற்றி. மாம்பழத்தைப் பார்த்தால் பிள்ளையாரின் சாமர்த்தியம், ஏற்றக் கிணற்றைக் கண்டால் ஏற்றப் பாட்டோ, கம்பன் கதையோ... கூடக் கூட அவருடைய சிறு வயது நடப்புகளையும் சேர்த்து...

எவ்வளவு இனிமையாயிருந்தது எங்கள் இளமைப் பருவம்! ஏட்டுப் படிப்பில்விட, இந்த மாதிரியான கர்ண பரம்பரை மூலந்தான் கலாசாரமும், பாரம்பரியமும் விளையாட்டுப் போக்காக அடுத்த தலைமுறைக்குத் தெரிவிக்கப்பட்டுக் காப்பாற்றப்படுகின்றன. ம்...! சுஜாவுக்கு இந்த மாதிரி வாய்ப்பெல்லாம் கிடையவே கிடையாது...

டக டக டக டக...

'வாசல் நாதாங்கியா... எத்தனை நாழியாகத் தட்டுகிறார்கள்?' எழுந்து, கழற்றி வைத்திருந்த கைக் கடியாரத்தை எடுத்து மணி பார்க்கிறேன். நாலு! வெயில் தாழ ஆரம்பித்திருப்பது ஜன்னல் வழியே புகுந்த வெளிச்சத்தில் தெரிகிறது.

தாமுதான் கையில் பிளாஸ்குடன் நின்று கொண்டிருந்தான்.

''சித்த மின்னாடி ஒரு தரம் வந்து தட்டினேன். திறக்கலே. சரி, பிரயாணகளைப்பாக்கும், தூங்கட்டும்னு போயிட்டேன்...'' என்றவாறே பிளாஸ்கைத் திறந்து காபியை டம்ளரில் வார்த்துக் கொடுத்தான்.

மாடு கறந்த புதுப்பால். நகரங்களில் நசித்துப் போய்விட்ட வஸ்து. நுரை பொங்கக் காபி அருமையாய் இருந்தது.

''வரேளாண்ணா, இப்படிப் போயிட்டு வரலாம். புதுசா பம்ப் செட் போட்டிருக்கார் சின்னசாமி. சேச்சு வாத்யார் ஞாபகம் இருக்கா, காரியமெல்லாம் பண்ணி வெப்பாரே, அவர் பிள்ளை பாச்சா கோழிப் பண்ணை வெச்சிருக்கான்.''

''என்னது...?''

''ஆமாண்ணா, போன அஞ்சாறு வருஷத்திலே ஊர் எவ்வளவு மாறிடுத்துங்கறேள். அப்பன் புரோகிதம்னால் பிள்ளையும் அப்படியேன்னு சொல்லி வெச்சிருக்கா என்ன? பாண்ட்டும், கிராப்புமா அவனவன் மசால் தோசையும், காபியும் சாப்டுட்டு, டிராமாக்கு வேஷம் கட்டிக்கறா மாதிரி சித்த நேரம் வேஷ்டியோட மணையிலே வந்து நிப்பான். இவனுக்கெல்லாம் பண்ணி வெக்கறதுக்காக நான் மட்டும் குடுமியோட, சாஸ்திரம் சம்பிரதாயம் எல்லாத்தையும் கட்டிண்டு மாரடிக்கணுமா, முன்னேற்ற வழியைப் பாக்க வாணாமாங்கறான்... மஹா இடக்கு...!''

ஒரு நொடி திடுக்கிடத்தான் செய்தது. அப்புறம் அசை போட்டதில் பத்தாம்பசலித்தனம் இல்லாமல் முன்னேற வேண்டும் என்ற உணர்வு ஒருத்தனுக்கு வந்திருக்கிறதேயென்று தோன்றியது.

மூன்றாம் நாள் தாமுவிடம் கேட்டேன். ''ஏம்பா உம் பெண் அம்புஜா

வும் நம்ம சுஜா ஈடுதானே, என்ன பண்றா...?''

''என்னத்தைப் பண்றது? பத்தாவது முடிச்சுட்டு வீட்டோட இருக்கா. நம்ம வீட்லே வசதியா இருந்தாகூடப் போற இடத்திலே எப்படி இருக்குமோன்னு வீட்டு வேலையெல்லாம் டிரெயினிங் கொடுத்திருக்கு. கதைப் புஸ்தகம், பத்திரிகை, ரேடியோ, சினிமா... எத்தனை இல்லே. டி.விகூட வாங்கணுனு தான்.''

''பாட்டு, கீட்டு ஒண்ணும் கத்துக் கலியா...?''

''பாட்டு வாத்யார்லாம் பட்டணத்தைப் பாக்கப் போயி எந்தக் காலமாச்சு? இப்ப யார் இருக்கா இங்கே? நீங்க இன்னும் பழைய நினைப்பிலேயே பேசறேள் போலிருக்கு...''

இந்த மூன்று நாளில் மாறுதல்களைக் கவனிக்கத்தான் செய்திருந்தேன்.

அந்தக் காலத்தில் பாட்டுக் குரல் கேட்காத வீடே எங்கள் தெருவில் கிடையாது. சரளி ஜண்டையிலிருந்து கீர்த்தனை, ஆலாபனை வரை விதவிதமாய்க் குரல்கள் வீட்டுக்கு வீடு ஒலிக்கும். சாயங்காலமானால் எல்லார் வீட்டிலும் விளக்கேற்றி வைத்துப் பாடுவார்கள். நவராத்திரி வந்து விட்டால் கேட்க வேண்டாம். சங்கீத மழையே தான். வீடுகளில் மட்டுமில்லை, கோவிலிலும் மாற்றி மாற்றிக் கச்சேரிகள் இருக்கும்.

எல்லாம் எங்கே போயிற்று...? நான் கவனித்த வரையில் தாமு வீட்டில் பரிமாறும் போது அம்புஜா கூடச் சினிமா டியூனை முணுமுணுத்துக் கொண்டுதான் பரிமாறுகிறாள். அவள் தலைமுறை, அடுத்த தலைமுறைக்கு எப்படிக் கலாசார பரிமாற்றம் செயது வைக்கும்... யோசனையில் இன்னும் இரண்டு நாள் கழிந்தது.

‘‘சேச்சு வாத்யார் பிள்ளை, பாச்சாவா, என்ன பேர் சொன்னே? போய்ப் பார்த்துட்டு வரலாமா’’ என்றேன் தாமுவிடம்.

‘‘கோழிப் பண்ணைக்கா... என்னண்ணா நீங்க...?’’ இழுத்தான் தாமு.

‘‘ஊர்லே எல்லாத்தையுந்தான் பாக்கணும், வாயேன்’’ என்று வற்புறுத்தியதும் கிளம்பினான்.

கோழிப் பண்ணை பெரியதாகத்தான் இருந்தது. பாச்சா சுற்றிக் காட்டினான். இப்போதுதான் வேர் பிடித்திருப்பதாகவும், இனிமேல் விறுவிறுவென்று வளரும் நிலைக்கு வந்திருப்பதாகவும் சொன்னான். ‘‘கொஞ்சம் வசதியெல்லாம் இம்ப்ரூவ் பண்ணிட்டாக் கவலையில்லே சார்...’’ என்றான். தாமு சொன்னது போல் இடக்கு ஆசாமியாக எனக்குப் படவில்லை.

அதனால் கேட்டேன், ‘‘ஆமாம், உனக்கு எப்படிப்பா இந்த ஐடியா தோணித்து, இந்த மாதிரி பண்ணை வெக்கலாம்னு...’’

‘‘எங்கப்பாவை உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். புரோகிதத்திலே என்ன பெரட்டியிருக்க முடியும்? என்ன தோணித்தோ, தனக்கே கை கொடுக்காத தொழில் பிள்ளையை எங்கே காப்பாத்தப் போறதுன்னு தோணித்தோ என்னமோ? அப்படியிப்படி என்னைப் பி.ஏ. வரைக்கும் படிக்க வெச்சார். வீட்ல தொழிலும் சொல்லிக் கொடுத்தார். இல்லேங்கலே. ஆனா, உங்களைப் போல இருக்கறவாள்ளாம் ஊரைக் காலி பண்ணிட்டு பட்டணத்தைப் பார்க்கப் போனப்பறம், இங்கே என்ன பிழைப்பு? நம்ம தாமு மாமாவாட்டம் இருக்கிறவா ஏதோ ஒரு நாள், கிழமைன்னு கூப்பிட்டு ரெண்டோ, நாலோ கொடுத்தா, அதுல சம்சாரம் நடத்த முடியுமோ? நானும் பட்டணம் போனேன். வெறும் பி.ஏ. அதுவும் சவடால் இல்லே, சிபாரிசு இல்லே, மொபசல் டவுன்லே படிச்சுட்டு வந்தவனுக்கு எங்கே வேலை கிடைக்கும்? பின்தங்கிய வகுப்பாயிருந்தாலும் பியூன் வேலையானா கிடைச்சிருக்கும். தவறிப் போய்ச் சேச்சு வாத்யார் பிள்ளையானா பிறந்து தொலைச்சிட்டேன். பிச்சையெடுக்க முடியல்லே. கூலி வேலை செஞ்சு பழக்கமில்லே. அல்லாடி திரிஞ்சுட்டு, சரி, நம்ம ஊரிலே நாமே சொந்தமா ஏதானா பண்ணாதான் உண்டுன்னு ஞானோதயம் வந்தது, வந்துட்டேன். பொத்தலானாலும் தலைக்கு மேலே ஒரு கூரை. இதோ இந்த நிலம் பிதுரார்ஜிதம். விவசாயத்திலே இருக்கிற வில்லங்கம் உங்களுக்கே தெரிஞ்சிருக்கும். அதனாலே யோசிச்சு, பி.டி.ஓ, அவர், இவர்னு யார் யார் காலையோ பிடிச்சு இதை ஆரம்பிச்சேன். இன்னும் கொஞ்சம் தாக்கு பிடிச்சுட்டேன்னா, அப்புறம் கவலையில்லே. ஊரிலே என்ன பேசிக்கறான்னும் தெரியும். எனக்கு அக்கறையில்லே. ஏன்னா, அப்பா போயி, நான் கிடந்து அல்லாடச்சே யார் எனக்குக் கை கொடுத்தா? முன்னேறின வகுப்புன்னாலும் யோக்கியமான பிள்ளைன்னு யாரானா சிபாரிசு பண்ணினாளா? எப்பேர்ப்பட்ட வம்சங்கறாளே இப்போ, அதுக்கானா மதிப்பிருந்ததா... சரி, அப்படிப்பட்ட பரம்பரை வாரிசு இப்படித் திண்டாடி தெருவிலே நிக்கறதே ஏதானா பண்ணுவமேன்னு, யாராவது ஒருத்தர்... சொல்லுங்க சார்...’’

அவன் நியாயங்கள் மனத்தில் உறைத்தன. மௌனமாக இருந்தேன். அப்புறம் பொதுவாகச் சமாதானம் சொல்லும் வகையில், ‘‘எல்லாம் ரொம்ப மாறித்தான் போச்சுப்பா. மனசாட்சி உறுத்தாத வகையிலே எது செஞ்சாலும் சரின்னுதான் சொல்லணும்...’’

‘‘செய்யறவங்களுக்கு மட்டுமா மனச்சாட்சி! சொல்லறவாளுக்கும் இருக்கணுமில்லையா? பிராமணனாப் பொறந்துட்டு கோழிப் பண்ணை என்னடா, காசு வரும்னா நாளைக்குக் கசாப்புக் கடைகூடத் திறப்பே போலிருக்கேன்னாளே, உருப்படியா ஒரு வேலை தேடிண்டு தலையெடுக்கணும்னு கதவு, கதவா தட்டினப்போ

ஒரு கை கொடுத்துத் தூக்கி விடலாமேன்னு ஒருத்தருக்காவது மனச்சாட்சி சொல்லலியே... ஏன் சார்...? கோழிப் பண்ணை வெச்சதினாலே கொறைஞ்சு போயிட்டதா நான் நினைக்கலே...''

அவன் நிறுத்திய போது எல்லோருமே சும்மாயிருந்தோம். க்குகுங், க்குங், குகுங் என்று கோழிகளின் சத்தந்தான் கேட்டுக் கொண்டிருந்தது.

இப்படி இன்னும் எத்தனை சேச்சு வாத்தியார் பிள்ளைகளோ என்று யோசிப்பதில் அடுத்த இரண்டு நாட்கள் கழிந்தன. பாரம்பரியம், ஆசாரம், கலாசாரம் எல்லாம் அவசியந்தான். ஆனால் காலி வயிற்றில் ஈரத் துணியைப் போட்டுக் கொண்டா ஆசாரத்தையும், கலாசாரத்தையும் காப்பாற்ற முடியும்! இன்று அவனைச் சுட்டிக் காட்டுபவர்களில் ஒருவராவது அவன் வேண்டிய போது உதவவில்லையே! பாரம்பரியத்தின் வாரிசை வாட விட்டு விட்டுப் பாரம்பரியத்தைக் காப்பாற்ற முடியுமோ...!

''இன்னிக்குச் சனிக்கிழமையாச்சே, இங்கே...''

''நான் வந்து ஒரு வாரம் ஆயிடுத்தா...''

''சனியோட சனி எட்டு நாளாச்சு. இன்னிக்கு இங்கே சந்தை நாள். போன வாரம் வந்திறங்கினவுடனே உங்களை இழுத்தடிக்க வாணாமேன்னு... அப்பகூட கூப்பிட்டேன் பாருங்கோ, ஒரு ரவுண்ட் அடிச்சுட்டு வரலாமான்னு. வாணாம்னுட்டேளே அண்ணா...''

''சந்தைன்னு சொல்லலியே நீ...''

''இன்னிக்குப் புரட்டாசி சனிக்கிழமையா, இன்னும் விசேஷமாவே இருக்கும். கோவில் கும்புல் வேற சாயும். நானும் வரேன். தாவணிக்கு மேட்சா பிளாஸ்டிக் வளையல் வாங்கணும்...'' என்று கூடக் கிளம்புகிறாள் அம்புஜா.

நைலான் ரிப்பனும், பிராவும், பிளாஸ்டிக் வளையலுமாக அலங்காரச் சாமான் கடைகள் இருந்த பக்கம் பெண்ணை விட்டு விட்டு, டிரான் ஸிஸ்டர், டூ இன் ஒன் என்றிருந்த கடையில் நேரத்தைச் செலவிட்டான் தாமு. திடீரென்று, 'கரகம், கரகாட்டம் ஆரம்பிக்குதாம்..' என்று ஓடிய கும்பலில் நான் சேர்ந்து கொண்டேன்.

அலங்காரம் கண்ணை உறுத்திற்று. நைலான் சரிகை அந்தி வெயிலில் அசிங்கமாய்ப் பளபளத்தது. முன்பெல்லாம் கைத்தறி வஸ்திரங்கள் பதவிசாய் இருக்கும். பார் பார் என்று கண்ணை உறுத்தாது. அதே போல் ஜவந்தி சரமும், மல்லிகை மாலையும் மணத்த இடத்தில், ரத்தச் சிவப்பில் பளபளவென்று பிளாஸ்டிக் பூ.

''இதென்ன கண்ராவி...!'' உரக்கவே சொல்லி விட்டேன் போலிருக்கு.

''வாடிப் போகாதுங்களே. நாளெல்லாம் ஆடினாகூடப் பளிச்சுனு இருக்கும்...'' என்றான் பக்கத்தில் இருந்தவன்.

'நொண்டிப் புறா படத்திலே வர்ற கரகாட்டப் பாடலுக்கு ஆடுங்க' வென்று யாரோ ஒருவர் நேயர் விருப்பக் குரல் கொடுக்க, நான் கிளம்பி வந்து விட்டேன்.

மறு நாள் பஸ்ஸில் பட்டணம் திரும்புகையிலும் மனத்தில் ஊரைப் பற்றியே சிந்தனை. இத்தனை வருடம் கழித்து இப்போது போனதைப் போகாமலே இருந்திருக்கலாம் என்று தோன்றியது. கடந்தகால நினைவுகளே பசுமையாக நிலைத்திருந்திருக்கும். கிராமமாகவும் இல்லாமல், ஊராகவும் இல்லாமல் ஒரு இரண்டுங்கெட்டான் வளர்ச்சி. சேச்சு வாத்தியார் பிள்ளை கோழிப் பண்ணை பாச்சாவானதில் மட்டுமின்றி வேறு பல தேவையில்லாத மாற்றங்கள்...

''ஹாய்...! நீ மட்டும் ஊருக்குப் போய் ஜோரா என்ஜாய் பண்ணிட்டு வந்துட்டியோல்லியோ...!'' என்று கழுத்தைக் கட்டிக் கொண்டாள். சுஜா, கதவைத் திறந்ததும்.

''உன்னை விட்டுட்டுப் போய் என்ஜாய் பண்ண முடியுமோ? இந்தப் பட்டணத்து அவசரத்துக்கும், அவதிக்கும் ஒரு சேஞ்ச். அவ்வளவுதான்...'' என்றேன் விவரிக்காமல்.

''நீ என்ன பண்ணே சொல்லு இந்தப் பத்து நாள்லே...?''

''ஹே, இத பாரு...'' என்று ஒரு பெரிய வெள்ளிக் கோப்பையை நீட்டினாள். ''இன்டர் காலேஜ் கோலாட்டப் போட்டியிலே எங்க காலேஜ் ஜெயிச்சுதாக்கும். நான் டான்ஸ் கத்துக்கறேனேன்னு என்னைத்தான் தயார் பண்ணச் சொன்னா எங்க காலேஜ்ல. மொத்தம் எட்டுக் கேர்ல்ஸை செலக்ட் பண்ணி நான்தான் சொல்லிக் கொடுத்தேனாக்கும். கப்பை ஒரு மாசம் நம்ம வீட்லயே வெச்சுக்கலாம். அப்புறம் சர்டிபிகேட்...''

அட! இந்தக் கோலாட்டம், கும்மி வார்த்தைகளைக் கிராமத்தில் கேட்கவேயில்லையே என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

''நீ என்ன பண்ணே, கும்மி தயார் பண்ணியா...?'' என்று சீண்டினேன் என் மனைவியை.

''நான் என்ன காலேஜ்ல படிக்கிறேனா, இல்லே டான்ஸ் கத்துக்கறேனா... சும்மாதான் இருந்தேன்...''

''பொய்ப்பா. அம்மா போன்சாய் கிளாஸ்ல சேர்ந்திருக்கா. அதோ பாரு...''

சுஜா சுட்டிக்காட்டிய மூலையில் ஸ்டூல் மேல் அழகாய் வீற்றிருந்தது ஓர் ஆலமரம், வாமன ரூபத்தில்! ஒரு கையகலப் பேசினில் அதற்குத் தகுந்தாற் போல் தன் ஆகிருதியைக் குறுக்கிக் கொண்டு அப்படியே ஓர் ஆலமரம்! என் வீட்டு டேபிளில் ஆலமரம்...

''என்ன அப்படிப் பார்க்கறேள் அதை! இந்தப் போன்சாய்ங்கறது பெரிய ஆர்ட். இப்ப அதுதான் கிரேஸ் இங்கே. லேடிஸ் கிளப்லே சொல்லிக் கொடுக்கிறதுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கா. சாம்பிளுக்கு நான் ஒண்ணு விலை கொடுத்து வாங்கிண்டு வந்து வெச்சிருக்கேன். ரொம்ப அழகாயில்லே...''

''...''

''இப்படியே எல்லா மரத்தையும் இந்த மாதிரி குறுக்கிக் கொஞ்சம் வேரோட சின்ன சின்னதா வளர்க்கலாம். நான் கத்துக்கப் போறேன்...''

ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோடியென்று சொல்வார்கள்... அதே போல் பரவித் தழைத்திருந்த நம் கலைகள், கலாசாரம் இதெல்லாமே தாம் பிறந்த மண்ணிலிருந்து பிடுங்கப்பட்டு, வேர்கள் நறுக்கப்பட்டு, உருவம் குறுக்கப்பட்டு, நகரங்களில் இந்த மாதிரி நடுத்தர வர்க்கத்துக் கூடங்களில் காட்சிப் பொருளாக, தம் கடைசிப் புகலிடத்தில் இருப்பதாக எனக்குள் ஓர் உவமை தோன்றுகிறது...!

அதை அவர்களுக்கு விளக்குவதாக எண்ணி, 'ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடின்னு...' என்று ஆரம்பிக்கிறேன்.

''ஓஹோ! கிராமத்துக்குப் போயிட்டு வயக்காடெல்லாம் ஜிம்முனு சுத்திட்டு வந்தவுடனே, இது வித்தியாசமா படறதோ? உவமை பொங்கறது. ஆலமரம் தழைக்கறது, விழுதோட படர்றது எல்லாம் கிராமத்திலே சரி. நாம இருக்கிற வீடோ, குடிசையோகூட அதன் நிழல்லேயே இருக்கும். வீட்டைச் சுத்தி மண்ணு, தோட்டம், ஆல், வேல், அரசு எல்லாம் சரி. ஆனா மெட்ராஸ், பம்பாய்னு பட்டணத்திலே இருக்கறவா என்ன பண்ண முடியும்? ஆலமரத்தைக் கொண்டு வந்து நடுக்கூடத்திலே நட்டு வெக்க முடியுமா? ஒண்டுக்குடித்தனமா நாம பிளாட்ல இருக்கிறதுக்குத் தகுந்த மாதிரி ஆலமரம் வேணும்னா, இப்படி போன்சாய் பண்ணி, நீங்க சொல்றா மாதிரி வாமன ரூபத்திலே கொண்டு வெச்சுண்டாதான் முடியும்...!''

வாயடைத்துப் போயிற்று எனக்கு.

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள் !

When you come to the Rock City, Tiruchirapalli,

A warm welcome awaits you at

Abbirami Hotels.

For a change, be with us
for Economy and Convenience,
Experience your stay at
Abbirami Hotels.
Our rich hospitality and service
would want you to stay
with us forever.

Phone : 41635 - 29819

Abbirami
HOTELS (P) LTD
10, MacDonald's Road, Tiruchirapalli-620 001.

Come and Experience it yourself
(VASANTA BHAVAN A/C. DELUXE RESTAURANT WITH SOUTH INDIAN, NORTH INDIAN, CUISINE.)

நேரிலேயே காணலாம்!
சிறந்த சேவை!
மிகுந்த சுகம்!

அபிராமி ஹோட்டல்

(வசந்தபவன் ஸ்தாபனத்தைச் சார்ந்தது.)

வியாபார துறையினருக்கும் உல்லாசப் பிரயாணிகளுக்கும் மிகச் சிறந்த தங்குமிடம். நகரப் பேருந்து நிலையத்திற்கு அடுத்தும், ரயில் நிலையம் அருகிலும் உள்ளது. குளியல் அறை வசதியோடு கூடிய ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அறைகள். (டி.வி. காட்சிகளைக் கண்டு களிக்கலாம்).

மிகப்பணிவன்புடன் கூடிய சேவை. ருசி மிகுந்த சைவ உணவு வகைகள். சௌகரியமாக சாமான்கள் வாங்க வசதியாக கடைகள் உள்ளன. கார்களை நிறுத்த அதிகமான இடவசதி.

ஐஸ்வரியா
கல்யாண மண்டபம்

குளு குளு வசதியுடன் கூடிய சிறிய 'கான்ஃபரன்ஸ்' ஹால், லிஃப்ட் வசதி, சங்கீதத்தைக் கேட்டு ரசிக்க வசதிகள் உள்ளன.

10, மெக்டெனால்ட் ரோடு,
பஸ் ஸ்டாண்ட் எதிரில்,
திருச்சி - 1
போன் : 41635 - 29819.

* நல்ல உயர்தரமான உணவு ! * நல்ல சுத்தம், சுகாதாரம் !!
* நல்ல உபசரிப்பு !!! * வாடிக்கையாளர்களுக்கு நல்ல சேவை !!!!
* நல்ல உயர்தரமான ஸ்வீட் வகையறா !!!!!

இவைகள் நாங்கள் எல்லோருக்கும் செய்யும் சேவை.
இதுவே எங்களது இலட்சியம்

வஸந்தபவன் A/c.

ரெஸ்டாரெண்ட்

24, N. S. B. ரோடு, திருச்சி-2. ★ எக்மோர், சென்னை-3.

- நாகசந்திரம்

ஜான் ஈஸ்வர் சர்மா

கிருஷ்ணமணி

ஜான் ஈஸ்வர் சர்மா என் நண்பன். இருபத்து மூன்று வயது இளைஞன். நல்ல உயரம். அமெரிக்க மண்ணுக்கு ஐம்பது சதவீத உரிமைக்காரன் என்று சொல்லிக் கொள்பவன். காரணம், அவன் தந்தை டாக்டர் ஆனந்த சர்மா தஞ்சையில் பிறந்து, வளர்ந்து, கும்பகோணத்தில் படித்துப் பின்னர் மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்று (UCLA)யுனிவர்ஸிடி ஆஃப் கலிஃபோர்னியா, லாஸ் ஏஞ்ஜலிஸில் படித்து டாக்டர் பட்டம் பெற்று, விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவில் ஒரு சர்வதேசக் கம்பெனியில் கொழுத்த சம்பளம் வாங்கிக் கொண்டு, அமெரிக்கப் பிரஜையாகி விட்டார். பிறப்பில் பாதி இந்தியன், பாதி அமெரிக்கன் என்று ஜான் ஈஸ்வர் சொன்னதற்குக் காரணம் அவன் தாய் எலிஸபெத் சர்மா கலிஃபோர்னியாவிலேயே குடியேறிய மூத்த குடிகளுள் ஒன்றான மெக்கன்ஸி குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதே.

ஜான் ஈஸ்வர் இப்போது என்னுடன் இந்தியாவுக்கு வந்து கொண்டிருக்கிறான். அட்லாண்டிக் மகாசமுத்திரம் கீழே. நாங்கள் பறந்து கொண்டிருப்பது நாற்பதினாயிரம் அடி உயரத்தில். விமானப் பணிப் பெண் ஜப்பானியக்காரி. தன் குட்டையான ஸ்கர்ட்டில் செழுமையான தன் தொடைகளின் தந்தநிறத் தசைகள் அசைய, வசீகரமான புன்னகையுடன் எங்களருகில் வந்து மெல்லிய குரலில் கேட்டாள்! 'எனி ட்ரிங்ஸ் ஃபார் யூ ஜென்டில்மென்!'

சர்மா வேண்டாமென்று சொன்னான். அவள் முகத்தில் ஆச்சரியம் பளிச்சிட்டது. எனக்கும் வேண்டாம் என்று நான் சைகை மூலம் சொல்ல அவள் திரும்பிப் போகலானாள். அவளுடைய பின்னழகு ஒரு விதமான லயத்துடன் அசைந்து கொடுத்தது. நடு நாற்பதுகளிலிருந்த ஒருவர் அவளைத் தொட்டு நிறுத்த. அவள் அவரிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.

'காலையிலேயே விஸ்கி குடிப்பது என்பது அமெரிக்காில் பலருக்கும் பழக்கமாகிவிட்டது. ஏனோ எனக்கு இந்தப் பழக்கங்கள் பிடிப்பதில்லை' என்றான் சர்மா. நான் அவனையே பார்த்தேன்.

'மனோஹர்! நீ ஏன் என்னை இப்படிப் பார்க்கிறாய்.'

'நீ முற்றிலும் ஒரு அமெரிக்கனாக இருந்தும் அன்னியப் பட்டவன் போல் பேசுகிறாயே.'

'ஏனோ தெரியவில்லை! என் தாய் வழி உறவுக்காரர்கள் கூட இதையே தான் சொல்கிறார்கள். என் தாய்க்கு மட்டும் என்னைப் புரிகிறது. அவளுடைய குடும்பம் அமெரிக்காவில் குடியேறி ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகி விட்டது. மகாராணி விக்டோரியாவின் காலத்திலேயே அவர்கள் இங்கிலாந்தை விட்டு வந்து விட்டார்கள். ஆனாலும் எங்களுடைய இங்கிலாந்து உறவுக்காரர்களுடன் தொடர்பு விட்டுப் போகவில்லை. சொல்லப் போனால் ஸ்காட்லாந்துக்காரர்கள் தாம் என் தாய் வழி முன்னோர்கள். சிக்கனத்திற்குப் பெயர் பெற்றவர்கள்!

'சரி! நீ என்ன சொல்ல வருகிறாய்! புரியவில்லையே.'

'அவர்களுக்கு எப்படி இத்தனை ஆண்டுகளாகியும் அந்த மண்ணின் பெருமையைப் பேசி மாளவில்லையோ அதைப் போன்றே என்னுள்ளும் நான் பாரத நாட்டினின்றும் வந்தவன் என்ற உணர்வுதான் மேலோங்கியுள்ளது.'

'பட் யூ ஆர் நாட்! நீ பிறப்பினாலேயே ஓர் அமெரிக்கன்.'

''என் தந்தை வழிப் பாட்டனார் ஈஸ்வர் சர்மாவைப் பற்றிய எண்ணமே என்னை இவ்விதம் பாதித்திருக்க வேண்டும். அம்மாவின் தந்தை ஜான் தியோடர் மெக்கன்ஸி என்னிடம் மிகுந்த அன்பு கொண்டவர். தம்முடைய பொருளாதார சாம்ராஜ்யத்தில் எனக்கும் கணிசமான பங்கு ஒதுக்கி வைத்துள்ளார். என் தந்தைக்கு நான் முழு மனதுடன் என் வியாபார வாழ்க்கையை மேற்கொள்ளாததில் வருத்தம்தான். நான் கர்நாடக சங்கீதம் கற்றுக் கொண்டதில் அவருக்கு அவ்வளவாக மகிழ்ச்சியில்லை. என் தாய் மட்டும் எனக்கு ஆதரவாகப் பேசியிராவிட்டால் நான் கர்நாடக சங்கீதமே கற்றுக் கொண்டிருக்க முடியாது தெரியுமா!''

''ம்...!'' என்றேன் நான்.

''என்ன ம்... நான்காண்டுகளுக்கு முன்னர் நியூயார்க்கில் நடந்த நாகஸ்ரக் கச்சேரிக்கு நான் போயிருந்தேன். அந்த வித்வான் என்ன இனிமையாக வாசித்தார் தெரியுமா? ஐம்பத்தைந்து வயதான ஒருவர் ஒலிக் கருவியொன்றை அவ்வளவு லாகவமாகக் கையாண்டது என்னை வியப்பிலாழ்த்தியது. அவர்தாம் என்னைக் கர்நாடக இசைப் பேராசிரியர் தஞ்சாவூர் வைத்தியனாதனுக்கு அறிமுகம் செய்து வைத்தார். உங்கள் . ஸாரி மனோஹர்! இந்திய நாட்டில் கலைகள் அற்புதமான முறையில் வளர்க்கப்பட்டு வந்துள்ளன. பேராசிரியர் வைத்தியனாதன் எனக்கு முறைப்படி இந்தியக் கலைகளின் பிரிவுகள், நுண்ணிய வித்தியாசங்கள், முறைகள், படிமங்கள், படிகள் என்றவாறு விளக்கிச் சொன்ன போது நான் வியந்து போனேன். பரத முனி என்பவர் 'நாட்டிய சாஸ்திரம்' என்ற நூலில் பாவம், இசை, நாடகம் என்ற முப்பெரும் பகுதிகளைப் பற்றி விவரமாக எழுதியுள்ளாராமே! பாரத நாட்டில் நாடகக் கலையும், நாட்டியக் கலையும், இசைக் கலையும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உன்னதமான நிலையை அடைந்

திருக்க வேண்டும். இல்லையெனில் அவற்றிற்கு இலக்கணம் போல் ஒரு நூல் எழுதி, முறைப்படுத்தியிருக்க முடியுமா?''

''சரி! இப்ப என்ன அதற்கு?''

''எவ்வளவு சாதாரணமாகச் சொல்லி விட்டாய்? இருநூறு ஆண்டுகளில் இங்கே, அமெரிக்காவில் ஒரு சுதம்பமான கலாச்சாரம் உருவெடுத்துள்ளது. அதற்கே வரலாறு எழுதி விட்டார்கள். அமெரிக்காவில் சுதேசிய நாடகம் என்பதே இருபதாம் நூற்றாண்டில்தான் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்னர் ஆங்கிலேயப் பண்பின் அடிப்படையிலமைந்த நாடகங்களைத்தான் மேடையேற்றினார்கள். யூஜின் ஓ நீல் என்றவர்தாம் அமெரிக்க நாடக மரபின் தந்தை. ஆனால் அமெரிக்க நாடக இலக்கியம், அதன் வரலாறு என்று பல புத்தகங்கள் வெளிவந்து விட்டன. அறுபதே ஆண்டுகளில் ஒரு மின்னல் வேகப் பாய்ச்சல். இந்திய நாட்டு நாடக வரலாறு என்று எவரேனும் எழுதியுள்ளார்களா? மனோஹர்! கேன் யூ டெல் மீ...?'' அவன் கேள்வியில் வருத்தம் கலந்து ஒலித்தது.

ஜான் ஈஸ்வர் சர்மாவை இனி ஜான் என்று மட்டுமே குறிப்பிடலாம் என்று எண்ணுகிறேன். அவனுக்குத் தமிழ் தெரியாது என்ற காரணத்தினால் என்னை அவனுடன், அவனுடைய பாட்டனார் வாழும் கிராமமான கல்யாணபுரத்துக்கு உடன் வரும்படி கேட்டுக் கொண்டான். நானும் சரியென்று ஒப்புக் கொண்டேன். அவனை அவனுடைய பாட்டனாருக்கும், பாட்டிக்கும் அறிமுகம் செய்து வைத்து விட்டு, அவனுடன் ஓரிரு தினங்கள் மட்டும் தங்கி விட்டு, நன்னிலம் செல்ல நான் திட்டமிட்டேன். நன்னிலம் எனக்குச் சொந்த ஊர். என் பெற்றோர்க்கு இது குறித்து முன்னரேயே எழுதி விட்டேன்.

கல்யாணபுரம் திருவையாற்றுக்கருகாமையிலமைந்துள்ள ஒரு கிராமம். பச்சைப் பசேல் என்ற வயல் வெளிகளும், வாழை, தென்னை மரத் தோப்புகளும், ஆற்றுப் படுகையும் என எழில் மிகுந்த கிராமம். அநேகமாக அந்த ஊரில் எல்லோருமே சங்கீதத்தில் ஓரளவுக்குப் பயிற்சியும், அறிமுகமும் உள்ளவர்கள்தாம். திருவையாற்றின் சங்கீதக் காற்று வீசுவதனாலேயோ என்னவோ கல்யாணபுரமும் சங்கீத சோபையுடன் விளங்குகிறது என்பார்கள்.

மார்கழியின் பனிப்படலம் மெல்லிய திரையாய் மரங்களை மறைத்துக் கொண்டிருந்தது. நானும், ஜானும் புதிய மாருதி காரில் மெள்ள மெள்ள அந்தக் கிராமத்தின் சிறு சிறு தெருக்களைக் கடந்து கொண்டிருந்தோம். ஜான் தமிழ் நாட்டுக்கு வருமுன்னரே அவனுக்குத் தனி உபயோகத்துக்கென்று விசேஷ ஏற்பாடுகளுடன் ஒரு மாருதி தயாராக வாங்கி வைக்கப்பட்டிருந்தது.

சங்கீத வித்வான் மஹேஸ்வர சர்மாவின் வீடு அக்ரஹாரத்திலிருந்தது. அக்ரஹாரம் என்றால் என்ன? ஏன் வேதம் படித்தவர்கள் தனிப் பிரிவாக வாழ்ந்தார்கள் என்பன போன்ற கேள்விகளையெல்லாம் என்னிடம் விமானப் பயணத்தின் போதே கேட்டுத் தெரிந்து கொண்டு விட்டான் அவன். ஒரு காலத்தில் அறிவைத் தேடுவதிலும், பெற்ற ஞானத்தைக் குருஸ்தானத்திலிருந்து கொண்டு சமுதாயத்திற்கு வழங்குவதுமாக இருந்த பெருமக்கள் இன்று அரசாங்க சேவகம் மற்றும் பல் துறைகளில் மற்றவர்களின் கீழ்ப் பணிபுரியும் நிலை எவ்விதம் உண்டானது என்றும் அவன் கேட்டான். வேதமோதிய வேதியர்கள் லௌகீக வாழ்க்கையை விரும்பி மேற்கொள்ள ஆரம்பித்தது ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் மிக உச்ச கட்டத்தையடைய அன்றே அவர்களுடைய சமுதாய ரீதியான வீழ்ச்சியும் ஆரம்பித்தது என்று நான் பதிலிறுத்தேன். அவன் பல நேரங்களில் மௌனமாகவே இருந்தான்.



''ஜான்! காரை வலது பக்கம் ஒடித்துத் திருப்பு. மெள்ள, மிக மெள்ள ஓட்ட வேண்டும்.'' அவன் அப்படியே செய்தான்.

''சரி! காரை இங்கேயே நிறுத்தி விடலாமா?''

''ஏன்?''

''நீயே பார்.'' சொல்லி விட்டு அவன் புன்னகைத்தான்.

ஒவ்வொரு வீட்டு வாசலிலும் பெண்கள் மாவுக்கோலம் போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் அப்போது மார்கழி மாதம் என்பதை நினைவு படுத்திக் கொண்டேன்.

காரை விட்டிறங்கித் தெருவில் நடக்கலானோம்.

ஜானின் பாட்டிக்கு எழுபது வயதிருக்கும். முன்பக்க மேல் வரிசையில் ஓரிரு பற்களைக் காணவில்லை. ஆனாலும் முகத்தில் பொலிவு மிகுந்திருந்தது. நான் பாட்டியிடம் ஜானை அறிமுகம் செய்து வைத்தேன். அவள் வைத்த கண் வாங்காது பேரனையே பார்த்தாள். அவளுள்ளத்தில் எழுந்த உணர்வுகள் என்னவாக இருக்கக் கூடுமென்று என் மனம் சிந்தித்தது.

''இவர் சினன வயசில இபபடித் தான் இருப்பார். இந்தப் பையன் வெள்ளையா இருக்கான். தலைமயிர் கொஞ்சம் செம்பட்டையா இருக்கு. ஆனா சாட்சாத் தாத்தாவேதான்.'' சொல்லிவிட்டு ஆசையுடன், பரிவுடன் பேரனையே பார்த்தாள். புன்னகைத்தாள்.

''பாட்டி என்ன சொல்கிறாள்?''

நான் மொழிபெயர்த்தேன். அவன் வாய் விட்டு உரக்கச் சிரித்தான். எழுந்தான். தன் பாட்டியை ஒருசேர அணைத்துக் கொண்டான். கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டு விட்டான். அவன் கண்களில் நீர் விளிம்பு கட்டியிருந்தது.

பாட்டியைப் பார்த்தேன். அவள் கண்களிலும் நீர் மல்கியிருந்தது. ''மடியா இருந்தேன். பேரன் ஆசையா கட்டிண்டுட்டான். இன்னொரு தடவை

ஸ்நானம் பண்ணணும். அவனுக்கு நம்ம ஊர் சமாசாரம்லாம் தெரியாதே!'' சொல்லிவிட்டுப் பாட்டி புன்னகைத்தாள்.

நான் மீண்டும் மொழிபெயர்க்க ஜான் வியந்து போனான். பாட்டியிடம் ''ஸாரி... ஸாரி...கிரண்ட்மா!'' என்றான். ஆனால் பாட்டி அதைப் பொருட்படுத்தாதவள் போன்று பேசினாள் : ''கொல்லைப் பக்கமா போய் கை, கால் அலம்பிண்டு வாங்கோ. காபி தரேன்'' என்றாள்.

நாவ ஜானுக்கு இந்நாட்டு அன்றாட வாழ்க்கை முறைகளை விளக்கிச் சொல்லிவிட்டு, அவனை அழைத்துக் கொண்டு கொல்லைப்புறம் சென்றேன். அவன் தன் பாட்டியை மீண்டும் குளிக்க வைக்க நேரிட்டு விட்டதே என்று சிறிது வருத்தப்பட்டுக் கொண்டான்.

நான் எங்கள் ஊருக்குப் பயணமானேன்.

நன்னிலத்தில் அக்ரஹாரம் மாறிப் போயிருந்தது. அமெரிக்கா சென்று, எட்டு ஆண்டுகளுக்கு அங்கேயே தங்கிப் பின்னர் தாயகம் திரும்பிய எனக்கு, நானே என் பிறந்த மண்ணுக்கு மிகவும் அன்னியப்பட்டுப் போய் விட்டதைப் போன்று தோன்றியது. புது முகங்கள் நிறைய தென்பட்டன. பழைய குடும்பங்களில் வெகு சிலவே இருந்தன.

ஏழு ஆண்டுகள் ஒருவன் தொடர்ந்து தன் பிறந்த மண்ணில் இல்லாது போனால், அதைப் பார்க்காது போனால் அதனுடன் அவனுக்குண்டான பாந்தவ்யம் இயல்பாகவே குறைந்துதான் போய்விடும் போலும். நான் ஜான் ஈஸ்வர் சர்மாவின் பிறப்பை, வளர்ப்பை, இருப்பைப் பற்றியெல்லாம் என் பெற்றோர்களிடம் சொன்னேன். அவனுள் எழுந்து, அவனுள் ஒருவித தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்திவிட்டிருந்த, தன்னைத்தானே அடையாளம் காட்டிக் கொள்ள முயற்சிக்கும் ஒரு பிரச்னை எனக்கும் ஏற்பட்டிருந்தது என்பதையுணர்ந்தேன். இதை ஆங்கிலத்தில் 'ஐடென்டிடி க்ரைஸிஸ்' என்கிறார்கள். நாம் யார் என்ற வினா விஸ்வரூபமெடுத்து மனத்தில் நிற்கும் ஒரு கலக்கமுற்ற, சலனமான நிலை.

எனக்கு முப்பதாம் வயது நெருங்கி விட்டது. எனவே என் அத்தை மகளை நான் மணந்து கொள்ள வேண்டியது என்று ஏற்பாடாகியது. மீண்டும் என்னால் நூற்றுக்கு நூறு ஒரு பாரதீயனாக இருக்க முடியுமா என்ற ஐயமே மேலோங்கியிருந்தது. குடும்பத்தினரும் என்னுள் ஏற்பட்டுவிட்ட மாறுதலைப் புரிந்து கொண்டு விட்டார்கள். இதற்கிடையில் கல்யாணபுரம் ஜான் கடிதம் போட்டிருந்தான். மிக நீண்ட கடிதம். அவனுடைய எழுத்து நேரிடையாகப் பேசுவது போலிருந்தது. அவன் விஷயங்களை விளக்கியிருந்த தோரணை மிகவும் நன்றாக இருந்தது. அதன் தமிழ் வடிவம் இப்படி வரக்கூடும்.

கல்யாணபுரம்,
4-1-1989.

அன்புடைய என் இனிய நண்பனே!
நான் என் பாட்டனாருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தக் குறுகிய கால அளவிலேயே அவர் எப்பேர்ப்பட்ட மனிதர் என்பதை ஓரளவிற்குப் புரிந்து கொண்டு விட்டேன். ஒழுக்கசீலர். சொல்லும், செயலும் ஒன்றாக இருப்பவர். இது இன்றைய காலகட்டத்தில் எத்தனை பேருக்குச் சாத்தியமாகக் கூடும்? பொருளைச் சம்பாதித்துக் குவிக்க வேண்டுமென்ற ஆசையோ, தாம் ஒரு பெரும் செல்வந்தர் என்று சமூகத்தில் மதிக்கப்பட வேண்டுமென்ற அவாவோ சிறிதும் அவருக்கில்லை.

அவர் என்னிடம் நீ கடவுளை நம்புகிறாயா என்று கேட்டபொழுது நான் சிரித்தேன். நான் ஒரு அக்னாஸ்ட் என்றேன். கடவுளின் இருப்பு அல்லது இல்லாமையைப் பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை என்றேன். அவர் சிரித்தார். ஸநாதன தர்மத்தில் அக்னாஸ்டிக் பிலாஸபியை நிரீஸ்வர வாதம் என்றழைப்பது வழக்கம் என்றும், ஆதி காலந்தொட்டே அது இருக்கிறது என்றும் சொல்லி விட்டார்!

ஜான் ஈஸ்வர் என்ற பெயரை இணைத்து ஞானேஸ்வர் என்றே என்னை அழைக்கிறார். அவரிடம் பல தரப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பேச முடிகிறது. முதல்தரமான ஆங்கிலம் பேசுகிறார். 'நான் அந்தக் காலத்து மெட்ரிக்குலேஷன் பாஸ் பண்ணினவன்' என்று சொல்கிறார். எவ்வளவு சிறந்த கல்விமான்! நிறைய விஷயங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டு மிக அடக்கமாக இருப்பவர்.

தினமும் யோகம் பயில்கிறார். தியானம் செய்கிறார். சங்கீத சாதகம் பண்ணுகிறார். குரலில் சிறிது தளர்ச்சி தெரிகிறது. ஆனால் ஆத்ம லயிப்பு பளிச்சிடுகிறது. நான் சங்கீத பாவங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது.

மஹேஸ்வர சர்மா தம் இளம் வயதிலேயே கச்சேரிகள் பல செய்து பல இடங்களில் சம்மானங்கள், விருதுகள் என்று பெற்றிருக்கிறார். அவர் ஆங்கில அரசில் உத்தியோகம் பார்த்திருக்கலாம். ஆனால் ஒரு முழு நேர சங்கீதக் கலைஞராகவே வாழ்ந்து வந்திருக்கிறார். இளம் வயது முதற் கொண்டே சுதந்திரப் போக்குடையவராக இருந்திருக்கிறார்.

என் தந்தையைப் படிக்க வைக்க மிகவும் சிரமப்பட்டிருக்கிறார். மேற்படிப்புக்காக என் தந்தை யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா செல்ல வேண்டும் என்று இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர் பிரயாசைப்பட்டபொழுது எம் பாட்டன் தம்முடைய இசைப் புலமைக்குப் பரிசாகக் கிடைத்த தங்க ஆபரணங்கள் பல வற்றை விற்றுக் காசாக்கித் தந்திருக்கிறார். ஒரு தந்தையின் கடமை தம் மகனைச் சிறந்த கல்விமானாக்குவதே என்ற கொள்கையின் அடிப்படையில் எம் பாட்டனார் செய்துள்ள தியாகங்கள் நினைத்தாலே மனத்தை உருக வைக்கும் தன்மை பெற்றவை. அதற்குப் பிரதிபலனாக எதையுமே அவர் தம் மகனிடமிருந்து எதிர்பார்க்கவில்லையென்பதுதான் மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விஷயம்.

தஞ்சையில், வானளாவி கம்பீரமாக நிற்கும் பிரஹதீஸ்வரர் கோவிலின் கோபுரத்தைப் பார்த்து வியந்தேன். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே இப்படியொரு கோபுரத்தை நிர்மாணித்த அந்தச் சிற்பியின் கணிதத் திறமை ஏன் தொடர்ந்து இந்த நாட்டின் கட்டிடக் கலை வளர்ச்சிக்கு ஓர் அடிப்படையாக இருக்கவில்லை. எம் பாட்டன் சொன்ன பதில் என்னை வருத்தத்துக்குள்ளாக்கியது. பல கலைகள் வரும் தலைமுறைகளுக்குத் தெரியாது போக அவைகளைப் பற்றி முறையாக எழுதிவைக்கப்படவில்லை யென்றார். இது ஒரு பெரும் நஷ்டமே!

நீ ஒரு நடை இங்கே வந்து போக வேண்டும். சில விஷயங்களில் எனக்கு உன் யோசனை தேவைப்படுகிறது.

அன்புடன்
ஞானேஷ்வர்

நான் மீண்டும் கல்யாணபுரம் செல்லும்படியாகிவிட்டது.

மஹேஸ்வர சர்மா என்னிடம் கேட்டார் : ''மனோஹர்! நீதானப்பா இவனுக்குச் சொல்ல வேண்டும். என்னையும், பாட்டியையும் அங்கே வரும்படி அழைக்கிறான். இனிமேல் நாங்கள் இந்த மண்ணிலிருந்து எங்கள் வேரை அறுத்துக் கொண்டு போக முடியுமா? இந்தக் காவிரிக் கரைதான் எங்களுக்குச் சர்வமும் என்றாகி விட்டது.''

ஜானை நான் சமாதானப்படுத்தினேன்.

மற்றொரு சிக்கல் எழுந்தது. ஜானின் தகப்பனார் ஆனந்த சர்மா மாதம் தவறாமல் இருபதாண்டுகளாகத் தம் பெற்றோர்க்கு அமெரிக்காவிலிருந்து அனுப்பி வந்த பணம் வங்கியில் அசலும் வட்டியுமெனச் சில இலட்சங்களுக்குச் சேர்ந்திருந்தது. மஹேஸ்வர சர்மா தம் மகனின் பணத்தில் சல்லிக் காசுகூட தொடவில்லை. கிராமத்தில் அவருக்கிருந்த சொற்ப

பெருமைமிகு வாடிக்கையாளர்கள், வியாபாரிகள் மற்றும்
அன்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

OUR QUALITY IS YOUR SECURITY

அனைவரும் போற்றும் எமது அற்புதப் படைப்புகள்



ஜெட் பம்ப் பேஸ், பிராக்கெட், பிளாஞ்ச்
மற்றும் எல்லாவித மெஷினரி, ஒழுகரை வார்ப்பட வேலைகள்
குறித்த நேரத்தில் நேர்த்தியாக செய்து தரப்படும்.

தயாரிப்பாளர்கள்:

ஸ்ரீ கிருஷ்ண பவுண்டரி

FOUNDERS & ENGINEERS

31, காஜா தெரு, சுப்பிரமணியபுரம், மதுரை-625011.

தந்தி: FOUNDRY. ☎ 22918 & 32912

ஆத்மாஸ்...

நிலத்திலிருந்து கிடைத்து வந்த வருமானத்தினின்றுமே அவர் தம் குடும்பத்தை நடத்தி வந்திருக்கிறார்.

''மனோஹர்! நான் எப்படி அந்தப் பணத்தை எடுத்துப் போக முடியும்? அது இவருடையதல்லவா?'' பேரனின் கேள்வி.

''ஆமாம்!''

''எனக்கு எதற்கப்பா அவ்வளவு பணம்? அது என் சுதந்திரத்தைக் கெடுத்து விடும்.'' பாட்டனின் பதில்.

''ஒரு யோசனை சொல்லட்டுமா?''

''என்ன?''

''ஒரு அறக்கட்டளை நிறுவி, அதன் மூலம் சங்கீதம் கற்க விரும்பும் வசதியற்ற குழந்தைகளுக்கு நிதியுதவி அளிக்கலாமே!''

பாட்டன், பேரன் இருவருமே என் யோசனையை அங்கீகரிக்கப் பிரச்னை முடிந்தது. ஜான் அமெரிக்கா செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்தது. அவனை உடனடியாகப் புறப்படும்படி மஹேஸ்வர சர்மா துரிதப்படுத்தினார்.

''ஜானின் தாய்க்குத் திடீரென்று உடல்நிலை சரியில்லையாம். அவளுக்கு இவனைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறதாம். அதனால்தான் உடனே போகச் சொல்கிறேன்...! நேற்று கேபிள் வந்திருக்கிறது...'' மஹேஸ்வர சர்மா புலம்பி விட்டார்.

ஜான் மறுத்துப் பேசவில்லை. ''என் தாயைப் பூரணமாக நீங்கள் வாழ்த்த வேண்டும்'' என்றான்.

''நிச்சயமாக! ஓர் ஆணுக்கு வாழ்க்கைத் துணைவியாகப் பெண்ணொருத்தி வேண்டும். அந்தக் கோணத்திலிருந்துதான் நான் ஆனந்த் சர்மாவின் திருமணக்கைப் பார்த்தேன். ஆனால் அவன்தான் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு, இங்கே வராது இருந்து விட்டான். பரவாயில்லை. எம் பேரன் அந்தக் குறையைப் போக்கி விட்டான்...'' கிழவரின் குரல் தழதழத்தது.

ஜானுக்கு மெய்சிலிர்த்துப் போய் விட்டது.

கிழவரின் பாதங்களைத் தொட்டு வணங்கினான்.

''ஜான் இன்றே புறப்படுகிறான்!''

''மனோஹர்! உன் திருமணத்துக்கு என்னால் இருக்க முடியவில்லை.''

''புரிகிறது...''

''தாத்தா! எனக்கு நீங்கள் உங்களுடைய நினைவாக உங்களுடைய தம்புராக்களிலொன்றைத் தர வேண்டும். பாட்டியுடன் உங்களைச் சேர்த்து வைத்துப் புகைப்படங்கள் எடுத்துக் கொள்கிறேன்!'' சொல்லி விட்டுப் பல புகைப்படங்களை எடுத்துக் கொண்டான்.

கிழவர் அவனைத் தொட்டு ஆசீர்வதித்தார்.

''நான் என்னுடன் இந்த ஒரு மாத காலத்தின் இனிமையான நினைவுகளைச் சுமந்து செல்கிறேன். உங்கள் தம்புராவைக் கண்ணாடிப் பெட்டியொன்றில் வைத்துப் பராமரிப்பேன். என்னால் இயன்றவரை கர்நாடக இசையை அமெரிக்க மண்ணில் வளர்ப்பேன். உங்கள் நல்வாழ்த்துக்களை அருளுங்கள் பாட்டனாரே!''

அவனுடைய கண்கள் கலங்கியிருந்தன.

''பாட்டி! நான் உங்களை முத்தமிடலாமா?''

''பேராண்டி! என் ராஜா...!'' இப்போது பாட்டியே தம் பேரனின் கன்னங்களில் முத்தமிட்டார். திருஷ்டி சுற்றுவது போல் பாவனை செய்து தன் புறங்கையை மடக்கிக் கன்னங்களிலழுத்திச் சொடுக்கினார்.

''ஒரு பெரும் பாரம்பர்யத்தின் வாரிசு நான் என்கிற பெருமிதத்துடன் அமெரிக்கா திரும்புகிறேன்'' என்றான் அவன். ○

கிளைகள்: சேலம் ஃபோன்: 7920 மதுரை ஃபோன்: 31404 சென்னை ஃபோன: 566694

அம்மாவும் ஒரு ஒரு கதையும்

இராகுலதாசன்

கிழக்குத் திண்ணைதான் இரணடு பேர் படுத்துக் கொள்கிற மாதிரி சிறிது அகலமாக இருக்கும். மேறகுத் திண்ணை ஒடுங்கி வாலோடியாய் இருக்கும். அது கோழிகள் அடையத் தான் போதுமானது. ராமர் அடிக்கடி சொல்லிக் கொள்வான், ''அது கோழித் திண்ணை, இது அம்மா கதை சொல்லுற திண்ணை'' என்று.

வெளியே போய்த் திரிந்து, தானியம் பொறுக்கி, புழுவைத் தோண்டி வயிறு நிரப்பிய கோழிகள் திண்ணைக்கு வந்து வரிசையாய் உட்கார்ந்து கொள்ளுகிற நேரத்திற்குத்தான் ராமரும் பள்ளிக்கூடத்திலிருந்து வருவான். திண்ணையில் உட்கார்ந்ததும் கோழிகளை எண்ணிப் பார்த்துக் கொள்ளுவான். அந்தக் கோழிகளை எண்ணி எண்ணித் தான் அவனுக்கு 'ஒன்று இரண்டு' மனப்பாடம் ஆகியிருந்தது. பத்து வரைக்கும் மனப்பாடம் ஆக வேண்டுமென்றால் அம்மா இன்னும் ஆறு கோழிகள் வாங்க வேண்டும்.

பழனி வழிநடைப் பஜனைக் குழுவின் விருந்தன்றைக்கு அம்மா பாத்திரம் தேய்க்கப் போன போது ''சரவணபவ, சரவணபவ'' என்று நான்கு விளிம்புகளிலும் பொறிக்கப்பட்ட மஞ்சள் கலர்ப் பை ஒன்று அம்மாவுக்கு இனாமாகக் கிடைத்தது. அந்தப் பைதான் ராமருக்கு இப்போது பள்ளிக்கூடத்துப் பை. அந்தப் பைக்குள் 'தமிழ்த் தாய்' இருந்தாள்; அரசாங்கம் இலவசமாய் வழங்கிய முதலாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகத்தின் அட்டை. அந்தத் தமிழ்த் தாயை ஓரமாய்ப் பைக்கட்டோடு திண்ணையில் வைத்து விட்டு ராமர் வீதிப்பக்கம் கவனித்துப் பார்த்தான், தன் தாய் வருகிறாளா என்று.

ராமர் பள்ளிக்கூடத்திலிருந்து வருவதற்கு முன்பாக ஒருநாள்கூட அம்மா வந்ததே இல்லை. இருட்டு மெது மெதுவாய்ப் பூசிக் கொண்டு வந்த பிறகுதான் அம்மா வருவாள். ஊரைச் சுற்றி வளைந்து போகும் வண்டிப் பாதை வழியே வந்து, குடிசைப் பகுதிக்குள் நுழைந்து, வெறும் பீடம் மட்டுமே இருக்கின்ற காளியம்மன் கோவில் மேடையைச் சுற்றிக் கொண்டு அவள். திரும்பும் போது குடிசை அவள் பார்வையிலே படும். மறக்காமல் காளியம்மனை வணங்கி விட்டுக் குடிசை நோக்கி விரையும் போது நடை சிறிது படபடக்கும். ''ராமரு இந்நேரம் திண்ணையில் உட்கார்ந்திருக்குமே'' என்று மனசுக்குள் சொல்லிக் கொள்ளுவாள். தெரு முனையில் திரும்பி 'விக்கு, விக்கு' என்று நடந்து திண்ணையை எட்டும் போது, ''வந்துட்டியா ராமரு'' என்று சொல்லியவாறு பிள்ளையை அணைத்துக் கொண்டு உட்காருவாள். தினமும் சேற்றில் களை பறித்து, நாற்று நட்டுத் தொழில் புரிவதால் அம்மாவின் கைகள் பொதும்பி, நிறம் மாறி, கரடு தட்டிக் கிடந்தன. பள்ளிக்கூடத்தின் உப்புப் பூத்த மண் சுவரில் சாய்ந்திருந்ததால் முதுகும் உப்புப் பூத்து, உடல் முழுதும் வியர்த்துக் கசகசத்துப் போயிருப்பான் ராமர். அம்மா அவனை அணைத்துக் கொள்கிற போது இருவருக்கும் இருந்த உடல் கசகசப்பு மாறிப் போய், இப்போது மனங்கள் மட்டும் கசிவடைந்து சங்கமம் ஆகிக் கொள்ளும். சிறிது நேரம் பரஸ்பரப் பாசப் பரிமாற்றத்தில் பெருமூச்செறிவார்கள். அலுப்பும், ஆயாசமும் வடிந்து போன பிறகு அம்மாதான் பேச்சைத் தொடங்குவாள் : ''கோழியெல்லாம் வந்துருச்சா ராமரு'' என்று.

ஏற்கனவே, தான் வந்து திண்ணையில் உட்கார்ந்த போது எண்ணிப் பார்த்திருந்தாலும், அம்மா கேட்டு விட்டதால் அவளுக்குப் பதில் சொல்லுவதற்காக என்று மறுபடியும் ராமர் எண்ணுவான். அவன் எண்ணி முடிப்பதற்குள் அம்மா எண்ணி முடித்திருப்பாள். இருந்தாலும் அவன் சொல்லித் தான் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று அம்மாவுக்கு ஆசையாக இருக்கும். அதனால், ''எண்ணிட்டியா ராமரு, எத்தனை இருக்கு?'' என்பாள்.

''நாலு இருக்கும்மா'' என்று அம்மாவின் முகத்துக்கு நேரே மூன்று விரல்களைக் காட்டிச் சிரிப்பான் ராமர்.

இருட்டோடு இருட்டாய் அம்மா வந்து சேரும் அந்த நேரத்தில் ராமரின் விழிகளில் பசி ததும்பி நிற்கும். அம்மாவின் மடியில் ஏதேனும் இருக்கிறதா என்று அவனது பார்வை ஏறி இறங்கும். சிறு தீனியாக ஏதேனும் வாங்கி வர முடியாத நாட்களில் சமையலுக்கான வேலைகளைத் துரிதப்படுத்தி அது பற்றிப் பேச ஆரம்பிப்பாள். ''இந்தப் பானையில சோறு ஆக்கினால்தானே ராமருக்குப் பிடிக்கும்'' என்று அம்மா கேட்கும் போது ராமரின் கவனம் மாறிப் போகும். அம்மா வந்துவிட்ட மகிழ்ச்சி, அவள் சமையல் செய்து சாப்பாடு போடப் போகிறாள் என்ற நினைவு அனைத்

தும் ராமரின் பசி நினைப்ப்பக்கூடச் சிறிது ஆற்றியிருக்கும்.

நேரம் ஆக, ஆக உடம்புக்கு அசதியாக வரும். அப்போது ராமர் வெளியே வந்து வானத்தைப் பார்த்துக் கொண்டு வாசற்படியில் உட்காருவான். வாசலைத் தழுவி வரும் வயல் வெளியின் குளிர்ச்சியான காற்று அவனுக்கு இதமாக இருக்கும். அவன் அப்படி வாசற்படியில் உட்கார்ந்து வாசல் காற்றில் இதம் காணும் போது அவனுக்குக் கொட்டாவி வந்து விடும் என்று அம்மாவுக்குத் தெரியும். ''ஐயர், ராமரு, தூங்கிராதய்யா, சோறு வடிச்சதும் துவையல் அரைச்சுச் சாப்பிடலாம்'' என்பாள்: இப்போது தான் அரிசி உலையில் ஏறியிருக்கிறது. ரேசனில் வாங்கிய பழுப்பரிசி. வெந்து நைய்ய நீண்ட நேரம் ஆகும். நெருப்பை நெருக்கி நெருக்கி எத்தனை தரம் தூண்டினாலும் ரேசன் அரிசி சாமானியத்தில் மசிவதில்லை. இதெல்லாம் அம்மாவுக்குத் தெரியும்.

அது மசிந்து, வடித்து, நிமிர்த்தி, துவையலும் அரைத்து தயார் செய்வதற்குள் ராமர் தூங்கிப் போய் விடுவான். அடுப்படியில் கையும் காலும் பரக்கப் பரக்கக் காரியம் பார்க்கும் அம்மா, அவன் தூங்கிப் போய்விடாமல் இருக்க ஏதாவது பேச்சுக் கொடுக்க வேண்டியிருக்கும். வாசற்படியிலிருக்கும் அவனோடு அம்மா பேச்சுக் கொடுக்கும் போது ராமர் கேட்பான் : ''அம்மா, வந்து கதை சொல்லும்மா'' என்று. ''கதைதானய்யா, இந்தா வந்து சொல்றேன்'' என்று அம்மா ஓடி வந்து கட்டிக் கொள்வாள். தூக்கம் செருகிக் கொண்டுள்ள ராமரின் விழிகளில் வழியும் கொஞ்சுதலான பாவனையை அம்மாவினால் மீற முடிவதில்லை.

அடுப்பில் இருக்கும் ரேசன் அரிசி அது போக்கில் வெந்து நசியட்டும் என்று விட்டு விட்டு அம்மா கிழக்குத் திண்ணைக்கு வருவாள். அப்போது, ''எத்தனை தரம் சாணம் போட்டு மெழுகினாலும் மண்ணுப் பரிஞ்சு போகுதே'' என்று தனக்குள் சொல்லிக் கொள்ளுவாள். ''இந்தத் தைப்பொங்கலுக்கு மறக்காமல் செம்மண் கொண்டாந்து பூசித் தீத்தாங் கல்லினால் தேச்சு விடணும், கண்ணாடி மாதிரி'' என்று நினைத்துக் கொள்ளுவாள்.

திண்ணைத் தூசியைப் பெருக்கி, சாயம் போய், சன்னலாய்க் கீறிக் கிடந்த பாயை எடுத்துத் திண்ணையில் விரிக்கும் வரை ராமர் அம்மாவின் சேலை முகப்பைப் பிடித்துக் கொண்டே நிற்பான். பாய் விரித்ததும் ஓடிப் போய்ப் பாயில் விழுந்து திண்ணையின் வெளி ஓரமாய்ப் படுத்துக் கொள்வான். அவன் அப்படித் திண்ணை ஓரமாய்ப் படுத்துக் கொள்ள அம்மா விடமாட்டாள். ''ஓரமாய்ப் படுக்காத ராமரு, விழுந்துருவே, சுவத்தை ஒட்டிப் படு'' என்று சொல்லிக் கொண்டு அம்மா திண்ணையின் வெளி ஓரமாய்ப் படுத்துக் கொள்ளுவாள்.

அம்மாவுடன் நெருக்கமாய் அணைத்துப் படுத்துக் கொள்ளும் ராமர், அம்மாவின் நெஞ்சுக்குள் முகம் புதைத்துக் கொண்டு மெதுவாய்க் கிசுகிசுத்த குரலில், ''அம்மா, கதை'' என்பான். அம்மாவும் அவனைப் போலவே குரலை மட்டுப்படுத்திக் கொண்டு, அவன் காதுக்குள் ''சொல்றேன் ராமரு'' என்பாள்.

சொல்லுவதற்கென்று அவளிடம், அவள் பற்றிய, அவள் வாழ்க்கை பற்றிய கதைகளே ஒரு ராமாயணம் போலவும், ஒரு மகாபாரதம் போலவும் ஏராளமாக இருந்தன. இரண்டு

இதிகாசங்கள் ஒரு நாட்டுக்குள் இருந்தது மாதிரி அவள் ஒருத்தியின் வீட்டுக்குள்ளே இரண்டு இதிகாசங்கள் நடந்து முடிந்திருந்தன. இரண்டினாலும் பாதிக்கப்பட்டவள் அம்மா ஒருத்தி என்பதால் மீள முடியாச் சோகமாக ஆகிவிட்டது அவள் வாழ்க்கை.

ராமர் பிறப்பதற்கு முன்பு அம்மாவின் மீது யாரோ தூஷணை கிளப்பினார்கள். ஊர் பூராவும் பேசி அது அம்மாவின் காதுகளில் விழுந்த போது அம்மா அதிர்ச்சி கொள்ளவில்லை. ஆனால் அது ஊர் வீதிகளில் திரிந்து, காற்றில் கலந்து, அப்பாவின் மனசுக்குள்ளும் புகுந்தது. எல்லா ஆண்களையும் போலவே அப்பாவும் குடிசையின் முகடு தெறிக்க எவ்விக் குதித்தார். கணவனும் அந்தப் பேச்சை நம்பி விட்டானே என்று நினைத்த போது அம்மாவுக்கு நெஞ்சு காயப்பட்டு விட்டது. காலம் என்னும் மருந்து அப்பாவின் சந்தேகத்தை ஆற்றி விட்டது. ஆனாலும் அம்மாவின் மனசுக்குள் விழுந்துவிட்ட வடுவுக்கு மருந்தேதும் இல்லை.

ஒருவழியாய்க் குடிசைக்குள்ளிருந்த இந்த ராமாயணம் முடிந்து போன சில நாளில் மகாபாரதம் ஆரம்பித்து விட்டது. அப்பா 'மங்கு, மங்கு' என்று பாடுபட்டார். அம்மாவும் அப்பாவுக்கு நிழலாக இருந்தாள். ஊர் எல்லையில், அய்யனார் கோவில் ஓரமாக அரை ஏக்கர் நிலம் விலைக்கு வந்தது. குருவி சேர்த்தது போலச் சேர்த்த பணத்தில் அப்பா அந்த நிலத்தை வாங்கினார். சொந்த நிலத்தில் உழைக்கிறோம் என்ற உற்சாகம் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் நாளுக்கு நாள் வளர்ந்தது. வியர்வை முத்துக்களை அவர்கள் நிலத்தில் விதைத்தார்கள். மணி மணியாய் வருசந்தோறும் கதிர்களைக் களத்தில் குவித்தார்கள். அய்யனார் கோவிலுக்குப் பூசாரித்தனம் பண்ணுகிற பொன்னுரங்கமும், அய்யனார் கோயில் மான்ய நிலங்களை மேல் பார்க்கிற மேகவர்ணமும் இதையெல்லாம் கூர்ந்து கவனித்தார்கள். ஒரு நாள் ராத்திரியில் அப்பாவைச் சந்தித்து கமுக்கமாய்ப் பேசினார்கள். ''இது வில்லங்கமான சொத்து. நீ வாங்கினதே தப்பு'' என்று சீறினார்கள்.

குறைந்த விலைக்குத் தங்களுக்குத் தருமாறு கேட்டார்கள். அப்பா மறுத்துப் பேசினார். கோவிலையும், கோர்ட்டையும் ஒன்றாக நினைக்கிற அப்பா கோவில் வாசலில் நின்று முறையிட்டுப் பார்த்தார். அவர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள். எல்லாவற்றையும் கோவில் அய்யனார் பார்த்துக் கொண்டேதான் இருந்தார். ''வில்

லங்கமான சொத்தை வாங்கியது, தப்பு'' என்று கோர்ட் தீர்ப்பளித்து விட்டது.

தீர்ப்பு நாளன்று அப்பா அய்யனார் கோவில் முன்னால் நின்று, இரண்டு கைகளையும் ஏந்திக் கொண்டு நீண்ட நேரம் புலம்பிக் கொண்டே இருந்தார். அப்பா புலம்பியது அய்யனார் காதுகளுக்குக் கேட்டதோ இல்லையோ, மேகவர்ணத்தின் காதுகளுக்குக் கேட்டு விட்டது பூசாரி பொன்னுரங்கம் மூலமாக. அவர் ஆட்களைத் திரட்டிக் கொண்டு வந்து, ''எங்க கோவிலுக்கு முன்னால வந்து என்ன கிசும்பா பண்றே?'' என்று அப்பாவை அங்கிருந்து விரட்டி விட்டார். ஓடி வந்த அப்பா வீட்டுக்குள்ளேயே படுத்துக் கிடந்தார், நான்கு பேர் தூக்கி வெளியே கொண்டு செல்லும் வரைக்கும்.

அம்மாவைச் சுற்றி நடந்த இந்தக் கதைகள் அவளைப் பட்ட மரமாய் நிறுத்தி விட்டு ஓய்ந்தன. ராமர் பிறந்த போது, வற்றிப் போன தன் வாழ்க்கையும் தளிர்க்கக் கூடும் எனச் சிறிது நம்பிக்கை கொண்டாள். தன் வாழ்க்கைக் கிணற்றுக்குள், புற உலகுக்குத் தெரியாமல் அமுங்கிப் போய்க் கிடந்த இந்தக் கதைகளை அவள் யாரிடம் சொல்லப் போகிறாள்? கேட்பதற்கு உரிய வழிமுறையான வாரிசு ராமர் தான் என்றாலும் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அப்படி அப்படியே அவனிடம் எப்படிச் சொல்ல முடியும்? துன்பக் கேணியின் அலைகளை மென்று விழுங்கியபடியே அவள் தனது அநுபவச் சூடுகளைப் பொதுப் படையாக்கி, யாருக்கோ, எங்கேயோ நிகழ்ந்தது மாதிரி, ஒரே ஒரு கதையாக்கி அதை மட்டுமே தினந்தோறும் ராமருக்குச் சொல்லிக் கொண்டே இருந்தாள்.

தினம் தினமும் அந்த ஒரே ஒரு கதைதான். அது தன்னுடைய வாழ்க்கையோடு சந்பந்தப்பட்டுவிட்ட சோக சித்திரங்கள் என்பதனால் அம்மாவுக்கு ஒரு பாரத்தை இறக்கி வைப்பது மாதிரி இருந்தது; ஏறிய துருவைச் சுரண்டிப் போடுவது மாதிரி இருந்தது. கதையின் உள்ளம்சங்களை வாங்கிக் கொள்ள வயது போதாது ராமருக்கு. அம்மா அய்யனார் கோவிலைப் பற்றிச் சொல்லும் போது மட்டும், ''நம்ம அய்யனார் கோவில் மாதிரியாம்மா?'' என்று கேட்டுக் கொள்வான். அம்மா பற்றிச் சொல்லும் போது, தன் இரு கைகளையும் விரித்து அம்மாவின் மார்பின் மீது அழுத்தமாகப் பதித்துக் கொண்டு, ''இந்த அம்மா மாதிரியா'' என்பான். கதை சொல்லிக் கொண்டு வரும் போதே இடைமறித்து, ''அந்தப் பையன் பேரு என்னம்மா'' என்பான். ராமர் முதல் முதலில் கேட்ட போது சிறிது திகைத்துப் போன அம்மா, சற்று யோசித்து விட்டு, ''ம், லட்சுமணன்னு வச்சுக்கோ ராமரு'' என்று சொல்லியிருந்தாள்.

உலை அரிசி வெந்திருக்கும் என்று நிதானித்துக் கொள்ளும் அம்மா, திண்ணையிலிருந்து ராமரையும் அழைத்துக் கொண்டு உள்ளே வருவாள். சோற்றைப் பதம் பார்த்து இறக்கி வடிப்பாள். வடித்த நிலையில் இருக்கும் சோற்றுப் பானையை ராமர் பார்த்துக் கொண்டிருக்கும் சிறு பொழுதுக்குள் அம்மா துவையல் அரைத்து வழித்தெடுப்பாள். ராமர் வழக்கமாய்ச் சாப்பிடும் அலுமினியத் தட்டை எடுத்துக் கழுவி அவனுக்கு முன் வைப்பாள். சோற்றுப் பானையை நிமிர்த்தி இரண்டு கரண்டி அள்ளிப் போட்டுப் பழைய நீராகாரத் தண்ணியை ஊற்றுவாள். துவையலைத் தன் கையிலேயே வைத்துக் கொண்டு, அவனுக்கு முன்னால் நீட்டியவாறு, ''சாப்பிடு ராமரு, சாப்பிடு'' என்பாள்.

ஒரு கையை அம்மாவின் மடியில் வைத்துக் கொண்டு, ஒரு கையில் சுடு கஞ்சியை அள்ளிக் கொள்ளும் ராமர், அம்மாவின் முகத்தைப் பார்த்துக் கேட்பான், ''அம்மா, அந்த லட்சுமணன் சாப்பிட்டானா?'' என்று.

TRICHY STEEL ROLLING MILLS LIMITED

USE TSRM TISCON/TOR STEEL (Cold Twisted Deformed Bars)
Tested to IS : 1786 for your Building constructions and save 40% in Steel Costs.
For your requirements please contact your nearest TSRM Dealers or write to:

The Commercial Manager
Trichy Steel Rolling Mills Limited
Senthannipuram, Tiruchirapalli - 4
PIN CODE : 620 004
TAMIL NADU (INDIA)

PHONE : 25301 (4 lines) Grams : ROLMILL TELEX : 0455-204

Manufacturers of :
Tiscon/Tor Steel, Mild Steel Reinforcing Rounds Bars, M.S. Flats
MS Angles, MS Squares, Gate Channels, Special Steel Rounds and
Steel Castings.

Selling Agents for :
'Lakshmi' Welded Wire Mesh

Registered Office : & Madurai Sales Office
290, West Masi Street,
MADURAI 625 001
PHONE : 24385 TELEX : 0445 - 205

★★★ **Rajali** Hotel

ONLY THREE STAR

AT 3/14, McDonald's Road
Cantonment
TIRUCHIRAPALLI - 620 001.

Phone : 31302 (10 Lines)
Cable : HOTRAJALI
Telex : 0455 - 279 RHPL IN

Our Hotel is easily accessible by road, rail and air. It offers over 78 rooms, of which 70 are airconditioned including six suites. The rooms are equipped with hot and cold shower, closed circuit colour TV/Video and Channel Music. Our other facilities are 24 hours room service, vegetarian and speciality restaurants serving local, continental and Chinese cuisine, panoramic swimming pool, poolside barbecue, Fitness Centre with Sauna bath to keep you slim and trim. Permit room (bar) to keep you in high spirits. Conference Hall, travel counter, ample parking space, telex, secretarial and teleprinter facilities etc.

Member :
AmEx, FHRAI, SIHRA, IATO

WE ACCEPT :
AmEx, DinersClub, VISA, Andhra, Central, Mercard, and Cancard.

புரட்சிகரமான வழிவமைப்புள்ள ஒரு புதுமையான ஸ்டெபிலைசர்!



நீங்கள் இதற்குமுன் கண்டிராத புதுமையான ஸ்டெபிலைசர். யு.எம்.எஸ் வழங்கும் இத்தகைய தரமான சக்தி வாய்ந்த ஈடு இணையற்ற ஸ்டெபிலைசர் மற்றதை விட முன்னணியில் நிற்கிறது.

யு.எம்.எஸ் ஸ்டெபிலைசர் அச்சில் வார்த்த அலுமினியம் மூடிய கேபினெட்டில் வருவதால், தூசி மற்றும் பூச்சியிலிருந்து பாதுகாக்கப்படுகிறது. அதன் காபினெட் நெடுகிலும் உள்ள ஹீட் சிங்க், ஸ்டெபிலைசரின் வெப்பத்தை விரைவில் தணிக்க உதவுகிறது. அதோடு, அதை எளிதில் எடுத்துச் செல்லலாம்; அதி நவீனமானது.

உங்கள் டிவிக்கும் **VCR**-க்கும் மிகவும் ஏற்றது.

2 திறனளவுகளில் கிடைக்கிறது — 90–280 வோல்ட்
140–280 வோல்ட்

UMS



வோல்டேஜ் ஸ்டெபிலைசர்

தரத்தில் உயர்ந்து தனித்து நிற்பது யு.எம்.எஸ்.

த.பெ.எண். 3771, அவனுசி ரோடு, கோயம்புத்தூர் 641 018.
165, கிரீம்ஸ் லேன், சென்னை-600 006.

Mudra:M:UMS:3719 Tam

இலக்கியப் படைப்புகள் பெருக...

டாக்டர் க.ப. அறவாணன்

இந்தியா விடுதலை பெற்ற பிறகு, தமிழ் இலக்கியத்தின் அரை நூற்றாண்டு வளர்ச்சியைப் பின்வருமாறு வகைப் படுத்திக் கொள்ளலாம்.

1. சிறுகதை இலக்கியம், 2. புதின இலக்கியம், 3. கவிதை இலக்கியம், 4. கட்டுரை இலக்கியம், 5. நாடக இலக்கியம்.

சிறுகதை இலக்கியமும், புதின இலக்கியமும் பெருகி வளர இக்காலத்து வார, மாத இதழ்கள் பெருங் காரணங் களாக இருந்து வந்தன; இருந்து வருகின்றன. கவிதை இலக் கியம் வளர 30 விழுக்காடு இதழ்களும், 50 விழுக்காடு கவி யரங்குகளும், 20 விழுக்காடு பதிப்பகங்களும் காரணம் எனலாம். கட்டுரை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு 60 விழுக் காடு தனியாரும், பதிப்பகங்களும், 20 விழுக்காடு இதழ் களும், 20 விழுக்காடு மலர்களும் காரணமாக இருந்தன; இருந்து வருகின்றன. நாடக இலக்கியம் வளர 60 விழுக் காடு திரைப்படமும், 30 விழுக்காடு நாடக அரங்குகளும், 10 விழுக்காடு ஏடுகளும் காரணமாக இருந்தன; இருந்து வருகின்றன.

1947 வாக்கில் 10 விழுக்காடாக இருந்த படித்தோர் தொகை தற்போது 40 விழுக்காடாக வளர்ந்து, அதற் கேற்பத் தமிழில் வார இதழ்கள் 10 மடங்கும், மாத இதழ்கள் 5 மடங்கும், நாளிதழ்கள் 10 மடங்கும் பெருகி இருக்கின்றன. இதனால், தமிழ் வாசகர் வட்டம் 1947-இல் இருந்ததைவிட விரிவு அடைந்திருக்கிறது என்பதில் ஐய மில்லை. விடுதலைக்குப் பிறகு வளர்ந்த பொது நூலகங் களும், நடமாடும் நூலகங்களும், பள்ளி, கல்லூரி, பல் கலைக்கழகப் பெருக்கங்களும் பெரும் துணையாக இருந்தன. ஆனால், இவை அனைத்தும் போதுமான வளர்ச்சியைக் காட்டுகின்றனவா என்பது கேள்விக்குரியது.

"கடந்த 1981-ஆம் ஆண்டில் எடுத்த கணக்கெடுப்புப் படி இந்நாட்டின் கல்வியறிவு பெற்றோர் 37 சதவீதமாகும். 1971-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கைவிட 7 சதவீதம் அதிகமாகும். இதனால், கல்வியறிவு அற்றவர்களின் எண் ணிக்கை குறைந்துவிட்டதாகக் கருதிவிட முடியாது. அதற்கு மாறாக மக்கட்தொகை அதிகமாகிவிட்ட காரணத்தால் இன்று இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரியாதோரின் எண் ணிக்கை 48 கோடி ஆகும்."[1]

1984-ஆவது ஆண்டு வரையுள்ள புள்ளி விவரப்படி இந்தியாவில் 15 மொழிகளையும் சேர்த்து 20,000 நூல் களே வெளிவந்துள்ளன. இந்தத் தொகையில் ஏறத்தாழ 40 விழுக்காடு ஆங்கில நூல்களாகும். 1984-ஆவது ஆண்டுக் கணக்குப்படி சோவியத் ஒன்றியம் 82,790 தலைப்புகளில் நூல்களை வெளியிட்டு இருக்கிறது. பிரிட்டன் 51,411 தலைப்புகளில் நூல்களை வெளியிட்டு இருக்கிறது. ஆசிய நாடான சப்பான் 44,255 தலைப்புகளில் நூல்களை வெளியிட்டு இருக்கிறது. மிகச் சிறிய நாடான கொரியா 35,446 தலைப்புகளில் நூல்களை வெளியிட்டு இருக்கிறது. ஏறத்தாழ 70 கோடி மக்கள் தொகையுடைய இந்தியப் பெரு நாட்டில் 20,000 நூல்களே வெளிவந்துள்ளன என்பதை ஒப்பிடும்போது, நம் நாட்டின் அறிவு வெளிப்பாட்டு வறுமை தெளிவுபடும்.[2] எனவே, உலக நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது, தமிழ் மொழியில் இலக்கிய வளர்ச்சி என்பது மிகப் பின்தங்கி இருக்கிறது என்பது தெளிவு.

ஏற்பட்டிருக்கும் இலக்கிய வளர்ச்சியும்கூட, இலக்கிய வளர்ச்சி என்ற தலைப்புக்கு உட்பட்டதுதானா என்பது கருதத்தக்கது. இலக்கியத்தை உயர் இலக்கியம் (Classic Literature), பாமர இலக்கியம் (Popular Literature) என்று வகைப் படுத்திக் கொண்டோமேயானால், தமிழில் வளர்ந்திருப்பது பாமரத் தமிழ் இலக்கியம் என்ற உண்மை விளங்கும். இதனை இதழ்களைச் சார்ந்து சிறுகதைகளும், புதினங்களும் வளர்ந்து இருப்பதும், பாமர மக்கள் நிறுவனமான திரை வழி நாடக இலக்கியம் வளர்ந்து இருப்பதும், வளர்ந்து இருப்பது உயர்நிலை இலக்கியம் அன்று பாமர இலக்கியம் என்பதை உறுதிப்படுத்தும். ஏனைய மொழிக்காரர்களும் ஒப்புக் கொள்ளும் உயர்நிலை இலக்கியங்கள் வளரவில்லை என்பதைத் தமிழ் பெற்று வரும் 'பாரதீய ஞானபீடப் பரிசு' எண்ணிக்கையும் எடுத்துரைக்கும். சான்றாக, இந்தி, கன்னடம், மலையாளம், வங்காளம் ஆகிய மொழிகள் ஒன்றிற்கு மேற்பட்ட தடவை பாரதீய ஞானபீடப் பரிசைப் பெற்றிருந்து, தமிழ் ஒரே ஒரு பரிசில் நிற்பது இதனை மறை முகமாக வற்புறுத்துவது ஆகும். நம்முடைய படைப்புகளுள் பெரும்பாலான இலக்கிய ஆய்வாளர்களுக்குரிய இலக்கியப் படைப்புகளாகப் படைக்கப்பெற்றன என்று கூறல் இய லாது. அந்தந்த வாரம் இதழ் வழி எதிர்நோக்கும் பொழுது போக்கு வாசகர்களுக்குத் தீனி போடும் நோக்கிலேயே இதழ்ப் படைப்புகள் படைக்கப்பெறுகின்றன. ஒருசில விதி விலக்காக இருத்தல் கூடும். நம்முடைய இலக்கிய வளர்ச்சி சிறப்பான நிலையை எய்தாமைக்கு வாசகர்களின் பொழுது போக்கு நோக்கும், இதழ்களின் காசுநோக்குப் போக்கும் தலையாயக் காரணங்கள்.

கட்டுரை இலக்கியம், உலக மொழிகளில் குறைந்த அளவே படைக்கப்பெறுகின்றது. அமெரிக்காவில் 7 விழுக் காடு, சோவியத் நாட்டில் 12 விழுக்காடு, சப்பானில் 18 விழுக்காடு, மேற்கு செர்மனியில் 21 விழுக்காடு, பிரிட் டனில் 21 விழுக்காடு. ஆனால் தமிழில் இது கிட்டத்தட்ட 60 விழுக்காடு என்று சொல்லலாம். ஆனால், 60 விழுக் காடு இலக்கியமும், இலக்கியங்களாக அமைந்து இருப்பது இல்லை. 90 விழுக்காடு இலக்கியங்களைப் பற்றிய விளக்கக் கட்டுரைகளாகவும், 5 விழுக்காடு சமயக் கட்டுரை களாகவும், 5 விழுக்காடு திறனாய்வாகவும் கட்டுரை அமை கின்றது. எனவே, சுய சிந்தனைகள் நிறைந்த கட்டுரை இலக்கியம் தமிழில் வளரவில்லை.

"இந்தியாவின் முக்கிய மொழி வெளியீடுகளைப் பற்றியும், இந்திய ஆசிரியர்களால் எழுதப்படும் ஆங்கிலப் படைப்புகள் பற்றியும் அறியக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் உதவும். அண்மை யில் ஓர் ஆண்டில் இந்தியாவில் 21,265 நூல்கள் வெளியிடப்பட்டன. அஸ்ஸாமிய மொழியில் 77, வங்காளியில் 1.302, ஆங்கிலத்தில் 10,438, குச

ராத்தியில் 972, இந்தியில் 2,633, கன்னடத்தில் 306, மலையாளத்தில் 595, மராத்தியில் 1,514, ஒரியாவில் 322, பஞ்சாபில் 597, சமஸ்கிருதத்தில் 177, தமிழில் 910, தெலுங்கில் 817, உருதுவில் 352, மற்ற மொழிகளில் 253. இவற்றில் 33 சதவீதம் இலக்கியங்கள்.'''[3]

ஏடுகள் வளர்க்கும் கட்டுரை இலக்கியம்கூட, திரைப்படத் திறனாய்வாகவும், நடிக, நடிகையர்களின் வாழ்க்கைக் குறிப்பாகவும், கட்சி உணர்வுடைய அரசியல் குழப்பங்களாகவுமே பெரும்பாலும் அமைகின்றன. இவை அனைத்தும் அன்றாட இலக்கியங்கள்; பொன்றும் படைப்புகள்; பொன்றாப் படைப்புகள் அல்ல.

ஆங்கிலத்தில் வெளிவரும் நாளிதழ்களையும், தமிழில் வெளிவரும் நாளிதழ்களையும், அவற்றுள் இடம் பெறும் கட்டுரைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், நம் கட்டுரை இலக்கியத்தின் தொய்வு மிகத் தெளிவாகப் புலப்படும். அந்த வகையில் செப்டம்பர் 1988-இல் வெளிவந்த இந்து, தினமணி, தினமலர், தினத்தந்தி ஆகிய நான்கு இதழ்களிலும் வந்த கட்டுரைகளைப் பற்றிய புள்ளி விவரம் இங்கே பாகுபாடு செய்து தரப்பெற்றுள்ளது. இப்பாகுபாடுகளில் இருந்து தமிழ் ஏடுகள் கட்டுரை இலக்கியத்தை வெளியிடுவதில் எத்தனை பின்தங்கியிருக்கின்றன என்பதை வெட்ட வெளிச்சமாகத் தெரிந்து கொள்ளலாம்.

தினமணி

மொத்த பக்கங்கள்		:	256
அரசியல்	- 8/256	:	3.12%
இலக்கியம்	- 4½/256	:	1.75%
வேளாண்மை	- 2½/256	:	0.97%
அறிவியல்	- 16/256	:	6.25%
பிற	- 4½/256	:	1.66%
பொருளியல்	- 2/256	:	0.78%

தினத்தந்தி

மொத்த பக்கங்கள்		:	438
அரசியல்	- ½/438	:	0.115%
சமூகம்	- ½/438	:	0.114%
பயணக் கட்டுரை	- 1/438	:	0.228%

இந்து

மொத்த பக்கங்கள்		:	680
அரசியல்	- 7/680	:	1.02%
நீதி	- 1¼/680	:	0.18%
தத்துவம்	- ¼/680	:	0.03%
மருத்துவம்	- ¾/680	:	0.11%
பொருளியல்	- 2¼/680	:	0.33%
அறிவியல்	- 1/680	:	0.14%
சமாதானம்	- 2¼/680	:	0.33%

1. நான்கு நாளிதழ்கள் கணக்கெடுப்பில் எடுத்துக் கொள்ளப்பெற்றன. அதில் 'தினமலர்' நாளிதழில் எவ் விதக் கட்டுரையும் இடம் பெற்றிலது.[4]
2. வார மலர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப் பெற வில்லை.
3. தினமணியில் எல்லா நாட்களிலும் கட்டுரை இடம் பெற்றது.
4. தினத்தந்தியில் ஐந்து நாட்கள் மட்டுமே கட்டுரை வெளி வந்துள்ளது.
5. இந்து நாளிதழில் 24 நாட்கள் மட்டுமே கட்டுரை வெளியிடப் பெற்றுள்ளது.

இந்நிலையில் நம்முடைய இலக்கிய மேம்பாடு சுதந்தரத்துக்குப் பின், சுதந்திரத்திற்கு முந்திய நிலையைவிட வளர்ந்தது என்பதும், அவ்வளர்ச்சி இந்திய மொழிகளோடு ஒப்பிடும்போது போதுமானதாக இல்லை என்பதும், உலக மொழிகளோடு ஒப்பிடும்போது அவ்வளர்ச்சி மிகப் பரிதாபகரமானது என்பதும் தெளிவு இந்நிலையிலிருந்து விடுபடத் தமிழ் இலக்கிய மேம்பாட்டை உலக அளவுக்கு உயர்த்த என்ன என்ன புதிய உத்திகளை - முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம் என்பது ஆராயத்தக்கது.

1. அடிப்படைத் தேவையான கல்வியை நூற்றுக்கு நூறாக நாம் ஆக்கிக் காட்டுதல் வேண்டும். அஃது இயலக் கூடியதே. சான்றாக; சோமாலி நாட்டிலும், சீன நாட்டிலும் இதனைச் செயல்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். எழுத்து வடிவமே இல்லாத சோமாலி மொழிக்கு எழுத்து வடிவம் அமைத்தனர். ஓர் ஆண்டிற்குப் பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றிற்கு விடுமுறை விட்டனர். படித்துக் கொண்டிருந்த மாணாக்கர்களையும், பயின்று கொண்டிருந்த ஆசிரியர்களையும் பிரிவு பிரிவாகச் சோமாலி நாட்டில் உள்ள சிற்றூர் எங்கும் சரியான பயிற்சி அளித்து அனுப்பினர். முதியோர் கல்வியும், கட்டாயக் கல்வியும் பயிற்சி பெற்ற மாணாக்கர்களாலும், ஆசிரியர்களாலும் வழங்கப்பெற்றன. ஒரே ஆண்டில் 60 விழுக்காடு கல்வி அளவைச் சோமாலி நாடு எய்தியது. இது போன்ற ஓர் அரிய முயற்சி சீன நாட்டிலும் மேற்கொள்ளப் பெற்றது. தமிழ்நாட்டில் நூற்றுக்கு நூறு கல்வி விழுக்காட்டை அமைத்தே தீருவது; அதனை ஐந்தே ஆண்டுகளில் சாதித்தே தீருவது என்று அரசு கடுமையான ஒரு முடிவை எடுத்துச் செயல்படுத்துதல் வேண்டும்.

2. வங்காளம், மலையாளம், இந்தி போன்ற இந்திய மொழிகளில் சிறந்த சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள் ஆகியன வெளிவருகின்றன. பிரெஞ்சு, ஆங்கிலம், உருசியம், சீனம், சப்பான் ஆகிய மொழிகளில் சிறந்த இலக்கியப் படைப்புகள் வெளிவருகின்றன. அவை அனைத்தையும் உடனுக்குடன் இயல்பான தமிழில் மொழிபெயர்த்து அளிக்கும் மொழிபெயர்ப்பு இயக்கம் அனைத்து நிறுவனங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் அமைக்கப்பெற வேண்டும். வேற்று மொழிகளில் இருந்து அனைத்துச் செய்திகளையும் தமிழுக்கு இறக்குமதி செய்ய உழைத்தல் வேண்டும்.

3. தமிழில் சிறந்த சிறுகதைகள், புதினங்கள், கவிதைகள், கட்டுரைகள் படைக்கப்பெறும் போது அவை உடனுக்குடன் புகழ் பெற்ற இந்திய மொழிகளிலும், உலக மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பெறுதல் வேண்டும்.

4. இலக்கியம் ஒரே குறிப்பிட்ட பாட்டையில் எழுதப் படுவது, சொல்லப்படுவது தவிர்க்கப்பெற்று, புதிய பாணியில் படைக்கப்பெறும் படைப்புகளை ஊக்கப்படுத்துதல் வேண்டும். இந்த வகையில் வெளிவரும் படைப்புகளை வாங்குவதிலும், பள்ளி நூலகம், கல்லூரி நூலகம், பல்கலைக்கழக நூலகம், பொது நூலகம் ஆகியவற்றின்வழி பரப்புவதிலும் அரசு தனி அக்கறை கொள்ளுதல் வேண்டும்.

5. நூல்களைப் படிக்கும் பழக்கத்தைப் பள்ளிப் பருவத்தில் இருந்தே வளர்க்க வழிவகை தேட வேண்டும். படிக்கும் பழக்கம் வளர்க்கப் பெற்றால்தான், வாங்கும் பழக்கம் பல்கிப் பெருகும். எனவே, நூல்களைப் படித்தல், பயன்படுத்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் முறைகளைக் கற்கும் பருவத்துப் பல்வேறு கட்டங்களில் அறிமுகப்படுத்த வேண்டும்.

6. நல்ல இலக்கியங்கள் எழுதப்பட்டாலும், விற்பனை நோக்கில் பதிப்பகத்தார்கள் ஏற்பது இல்லை. எனவே, சிறந்த இலக்கியங்கள் வெளிவராமல் புதையுண்டு விடுகின்றன. அதனால் சிறந்த படைப்பாளர்கள் புதிய இலக்கியங்களைப் புதிய உத்திகளில் எழுதும் முயற்சிகளில் இறங்குவது இல்லை. இதனை மாற்ற சிறந்த நூல்களை வெளிக்கொணர, கூட்டுறவு முறை அமைப்புகளை மாவட்டந்தோறும் ஏற்படுத்த வேண்டும். ○

ஒன்றும் குடிமுழுகிப் 'போய் விடவில்லை. கர்நாடக இசை செழிப்பாக, வளமாக வளர்ந்து வருகிறது. ''அந்தக் காலத்தில், அந்தக் காலத்தில்'' என்று பழம்பெருமை பேசிக் கொண்டு இருப்பவர்களைப் பற்றி நமக்குக் கவலை இல்லை.

அன்று நிலை வேறு. இன்று நிலை வேறு.

அந்தக் காலத்தில் ஒரு ராஜாவோ, ஜமீன்தாரோ இசைக் கச்சேரிகள் ஏற்பாடு செய்வார்கள். அல்லது கோவில்களில் உற்சவங்களில் கச்சேரிகள் நடைபெறும்.

வித்வான்களுக்கு வேறு பிடுங்கல்கள் கிடையா. காரிய தரிசிகளின் காலைப் பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அப்போது இல்லை. இப்போதுள்ள விவரம் தெரிந்த ரசிகர்கள் அப்போது இல்லை.

வானொலியும், இசைப் பள்ளிகளும், கல்லூரிகளும் பொது மக்களிடையே பெருமளவில் இசைப் பிரக்ஞையை உண்பண்ணியிருக்கிறது. ஒரு இருபது வருடங்களுக்கு முன்பு திரைப்பட இசை சுத்தமான கர்நாடக மரபில் அமைந்திருந்தது.

ஏறக்குறைய எல்லா மேளகர்த்தா ராகங்களையும் அடையாளம் கண்டுகொள்ள முடியும். சும்மா பல்லைப் பிடித்துப் பார்த்து விடுவார்கள். மற்றோர் ஆச்சரியம் பாருங்கள் அந்தக் காலத்தில் பெண்மணி வித்வான்கள் என்றால் விரல் விட்டு எண்ணிவிடலாம். ஆனால் இன்று அற்புதமாகப் பாடக்கூடிய எத்தனையோ இளஞ்சிட்டுகள் இருக்கின்றன. இதற்குச் சான்றாக டிசம்பர் சீசனில் காலை எட்டு மணி முதல் மனலை ஐந்து மணி வரை, பல சபாக்களில் எத்தனையோ இளம் வித்வான்கள், வித்வாம்சினிகள் தங்கள் இசைத் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு இருக்கிறது.

அது தவிர, ஒவ்வொரு பேட்டையிலும் சிறிய சிறிய சபாக்கள். அவை வாரா வாரம் ஏதாவது இசை நிகழ்ச்சியை நடத்திக் கொண்டே இருக்கிறார்கள். இதனால் எத்தனை பேருக்கு வாய்ப்பு? பக்க வாத்தியம் என்று எடுத்துக் கொண்டால் இன்று நூற்றுக்கணக்கான இளைஞர்கள் சக்கைபோடு போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பெரியவர்கள் மனசு வைத்தால் இந்த இளைஞர்கள் கொடி கட்டிப் பறப்பார்கள். என்ன செய்வது?

கர்நாடக இசையின் இன்றைய நிலை

— சுப்புடு

பாபநாசம் சிவன், உடுமலை நாரயணகவி, மருதகாசி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் போன்றவர்கள் நல்ல சாஸ்திரியமான திரை இசையை அமைத்தார்கள். எம்.கே. தியாகராஜ பாகவதர், பி.யூ. சின்னப்பா, எஸ்.வி. சுப்பையா பாகவதர் போன்ற வித்வான்கள் இலக்கண மரபு தவறாமல் பாடி லட்சோப லட்சம் பேர்களுக்கு இசை உணர்வை உண்டுபண்ணினார்கள். அவர்கள் பாடல்களை முணுமுணுக்காத வாய்களே கிடையா.

வானொலி நிலையங்களை நையாண்டி செய்வது இப்போது வழக்கமாகி விட்டது. அது செய்துள்ள மகத்தான தொண்டை யாரும் கண்டு கொள்வதில்லை. மேடைக் கச்சேரிகளை ஒரு குறிப்பிட்ட குழு ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கும் தருணத்தில் எவ்வளவோ இளம் வித்வான்களுக்கும், மற்றவர்களுக்கும் அது தஞ்சம் அளித்திருக்கிறது. அது தவிர எவ்வளவோ பேர்களுக்கு வேலை வாய்ப்பு.

இன்று இசைக் கச்சேரிகளுக்கு வரும் கூட்டத்தில் பெரும் பகுதி இளைஞர்கள்தான். அந்தக் காலத்தில் இது நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

பாகவதைரைப் பதம் பிடித்துப் பார்க்கும் வன்மை அந்தக் காலத்தில் கிடையாது. இன்று வரும் ரசிகக் கூட்டத்திற்கு

இசையிலும் அரசியல் புகுந்து, கட்சிகள் உருவாகி, இந்த இளைஞர்களை முன்னுக்கு வரவிடாமல் தடுக்கிறது. சொன்னால் கோபித்துக் கொள்ளக் கூடாது. ஒரு டி. ருக்மணி, கன்யாகுமாரி போன்ற வயலின் விதுஷிகள் அந்தக் கால வித்வான்களுக்கு எந்த விதத்திலும் சோடை போகவில்லை. எது கொடுத்தாலும் உடனே பதில் அடி கொடுக்கக்கூடிய அபார தன்னம்பிக்கை இவர்களுக்கு இருக்கிறது. பாலக்காடு மணி ஐயரோடு போச்சு! பாப்பாவோட போச்சு! சௌடையாவோட போச்சு! என்று காவிப் பல்லைக் காட்டிக் கூப்பாடு போடுகிறவர்களை அவர்கள் போன இடத்திற்கு அனுப்பிவிட வேண்டும்.

ஒரு மாண்டலின் சீனுவாசனை எடுத்துக் கொள்ளுங்கள். அல்லது, கோட்டு வாத்தியம் ரவிக்கிரனை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த இரண்டு பிறவி மேதைகளும் கர்நாடக இசையின் சரித்திரத்தையே மாற்றி எழுதி விட்டார்கள். அதுவும் மாண்டலின் ஒரு ஒண்ணரை அடி வாத்தியம். சினிமாவில் எப்போதாவது பின்னணியாக ஒலிக்கத்தான் பயன்படுத்தப் பட்டு வந்திருக்கிறது. இந்த மாண்டலின் பொடியன், அதை வீணையைவிட நன்றாக வாசிக்கிறான். கமகம், கார்வை, குழைவு எல்லாம் அவனிடம் கை கட்டிச் சேவகம் புரிகின்றன. பக்க வாத்யக்காரர்களுக்குச் சிம்ம சொப்பனமாய்

இருக்கிறான். எந்தக் கலையும் அழியாது. அவ்வப்போது ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். அவ்வளவுதான் விஷயம். அந்தக் காலத்தில் ஜி.என்.பி. இருந்தார் என்றால் இந்தக் காலத்தில் சேஷகோபாலன். அபரிமிதமான கற்பனைத் திறனுடன் இசை மாரி பொழிகிறார். சமீபகாலத்தில் திடீரென்று கிளம்பிய சூறாவளி இவர். இவையெல்லாம் நல்ல சகுனங்கள். பழமை பேசிப் பயனில்லை.

அந்தக் காலத்தில் பாலக்காடு மணி ஐயர், பழநி சுப்புடு இருந்தார்கள் என்றால் இந்தக் காலத்தில் காரைக்குடி மணியும், ஹரி சங்கரும் இருக்கிறார்கள். நான் ஏதோ பழம் வித்வான்களைக் குறை கூறுவதாக நினைக்கக் கூடாது. அவர்கள் பாடுபட்டுச் சேர்த்த நேர்த்தியான இசை வழிகள் இன்றைய சந்ததிக்கு மூலதனமாக அமைந்து விட்டது. உலகம் முன்னேறிக் கொண்டே இருக்கிறது அல்லவா!

அது சரி. இவ்வளவு திறமையும், மும்மூர்த்திகள் போன்றவர்களின் அபாரமான கவனங்கள் கைவசம் இருந்தும் சர்வதேச அரங்கில் கர்நாடக இசைக்கு ஏன் அங்கீகாரம் கிடைக்கவில்லை? இதை நமது வித்வான்கள் எப்போதாவது யோசித்துப்பார்த்தார்களா?

கட்சிப் பூசல்களிலும், ஒருவரையொருவர் காலை வாரி விடுவதிலும்தான் இவர்களுக்குப் பொழுது இருக்கிறது. சர்வதேச அரங்கில் எந்த விழா நடந்தாலும் அதில் நமது கலைஞர்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் கிடையாது.

எதற்கெடுத்தாலும் ரவிசங்கரும், அம்ஜத் அலியும், பீம்சேன் ஜோஷியும், அண்டாக்காரனும், குண்டாக்காரனும் தான். ஏன் கேட்கிறீர்கள். விழாக் கமிட்டியில் ஒரு வடக்கத்திய அதி மேதாவி 'கர்நாடக வாத்திய இசை ஓரளவு பொறுத்துக் கொள்ளலாம். வாய்ப்பாட்டு சகிக்காது' என்று திருவாய் மலர்ந்து அருளினாராம். இதை மறுத்துக் கூற அந்தக் குழுவில் இருந்த ஓரிரு தென்னிந்தியர்கள்கூட முன்வரவில்லை. வெட்கக் கேடு! நாம் என்ன செய்கிறோம்? ஒரு பர்வீன் சுல்தானாவோ, கிஷோரி அமோல்காரோ, பீம்சேன் ஜோஷியோ சென்னைக்கு வந்தால் ராஜ உபசாரம் செய்கிறோம்.

ஐந்து நட்சத்திர வரவேற்பு. ஐந்து லக்கங்களில் சன்மானம்.

சபாக் காரியதரிசியும், தலைவரும் ஏர்போர்ட்டுக்கு ஓடுகிறார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே எல்லா டிக்கெட்டுகளும் விற்பனை ஆகி விடுகின்றன.

நமது வித்வான்களை ஏறெடுத்தும் பார்க்காத உள்ளூர்ப் பத்திரிக்கையாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு அவர்களின் சிறப்புப் பேட்டிக்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்கள் பாடுவது ஒண்ணரை மணி நேரம்தான். கீர்த்தனையோ, ஸ்வர பிரஸ்தாரங்களோ, தாளப் பின்னல்களோ மூச்!

அவர்கள் வழங்குகிற பாட்டுக்கும் சாகித்தியம் ஒரே வரிதான். 'அனுமாருக்கு வால் நீளம்' என்ற ஒரு வரியை வைத்துக் கொண்டு நீட்டிக் கொண்டே போவார்கள். 'நம்மிடம் அளவிட முடியாத இசைச் சொத்து இருந்து என்ன பயன்?' என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா?

இப்போது ஒரு கசப்பான உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். நமது வித்வான்களில் 80 சதத்திற்கு மேல் 'தாய் இல்லாப்' பிள்ளைகள். சுதி - மாதா, லயம் - பிதா என்பது வேத வாக்கு. சாரீரத்தை வளமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற பிரக்ஞையே இவர்களுக்குக் கிடையாது.

சாதகம் என்பது இவர்கள் அகராதியிலேயே கிடையாது. இந்தக் குறைபாட்டை ஈடு கட்டுவதற்காகக் கச்சேரியில் வர்ணத்தில் இருந்து தில்லானா வரை ஸ்வரப் பிரஸ்தாரம். இரண்டரை மணி நேரக் கச்சேரியில் பாதி ஸ்வரப் பிரஸ்தாரம்; மற்றொரு பாதி பக்கவாத்தியமும், தனி ஆவர்த்தனமும். ஒரு கச்சேரியில் நான்கு, ஐந்து உருப்படிகள் தேறினால் ஆச்சரியம். இதற்கு மாறாக இந்த வடக்கத்தி வித்வான்கள் அசுர சாதகம் செய்து சாரீரத்தை அடக்கியாண்டு சுதி சுத்தமாய், பரம சௌக்கியமாய்ப் பாடுகிறார்கள். இந்த ஒரே ஒரு அம்சத்தை வைத்துக் கொண்டு அவர்கள் கொடி கட்டிப் பறக்கிறார்கள்.

தாஸரோ, தியாகராஜரோ சுதி சேராமல் பாட வேண்டும் என்று எங்குமே சொன்னதாகத் தெரியவில்லை.

இந்த ஒரு குறையை நாம் நிவர்த்தி செய்து கொண்டு விட்டால் கர்நாடக சங்கீதத்திற்கு உலக அளவில் அமோகமான வரவேற்பு கிட்டும்.

கடைசியாக, ஒலிபெருக்கி வேதனை தென்னாட்டைப் போல் வேறு எங்குமே கிடையாது. அந்த மைக்கை வைத்துக் கொண்டு பாடகர்களும், பக்கவாத்தியக்காரர்களும் படுத்தும் பாடு சகிக்க முடியவில்லை. இது என்ன கஷ்டம்? அந்தச் சாதனத்தை இயக்குபவர்களோ கச்சேரி ஆரம்பிக்கும் முன்பு "ON" பண்ணினார்கள் என்றால் அது முடியும் வரை அம்பேல் ஆகிவிடுகிறார்கள். இந்த ஒலி வேட்டையை (NOISE POLLUTION)-ஐத் தடுக்க ஏதாவது ஒரு சட்டம் பிறப்பித்தால் தேவலை போலிருக்கிறது.

கர்நாடக இசை வேதத்துக்கு ஒப்பானது. ஆகவே, அது சனாதமானது. அதற்கு அழிவே கிடையாது. ○

கயிலையில் பார்வதியும் பரமேசுவரனும் வீற்றிருக்கிறார்கள். தேவியின் திருவுள்ளத்தில் திருவிளையாடல் புரியும் எண்ணம் எழுந்தது. என்ன விளையாட்டு? குழந்தைகள் கண்ணைப் பொத்திக் கண்ணாமூச்சி விளையாடுவார்கள் அல்லவா? அது போல் நினைத்துப் பரமனின் கண்களைப் பொத்தினாள். சூரிய சந்திரர்கள் அல்லவா பரமனின் கண்களாக விளங்குகிறார்கள். கண்ணைப் பொத்தியது என்னவோ ஒரு கணந்தான். ஆனாலும் நடந்தது என்ன? கண்களைப் பொத்தியதும் சூரிய சந்திரர்கள் இல்லாமல் உலகம் இருண்டு செயல்பட முடியாமல் போய்விட்டது. உலகத்தைச் செயலிழக்கச் செய்துவிட்டாளே தேவி, என்று பரமனுக்குக் கோபம் வந்தது. உலகமே ஒரு நாடக மேடை. அதில் நாடகத்தை நடத்துபவன் பரமன். அதற்குக் குந்தகம் விளைவித்தால் கோபம் வராதா? விளைவைக் கண்டு நடுங்கி நிற்கும் தேவியைப் பார்த்து, ''நீ பூவுலகுக்குச் சென்று என்னைக் குறித்து தவமியற்று. நான் அங்கே, வந்து உன்னை ஆட்கொள்கிறேன்'' என்றான்.

விளையாட்டு வினையாயிற்று என்பார்களே! அது தேவியிடமிருந்துதான் தோன்றிற்று போலும். சென்னையை அடுத்த மாங்காட்டிலே வந்து பஞ்சாக்கினி மத்தியிலே தவம் இயற்றினாள் தேவி. கடுந்தவம் புரிந்தாள். பரமனின் மனம் இரங்கியது. இறைவன் பூவுலகுக்கு இறங்கி வந்து காஞ்சியில் கம்பா நதிக் கரையில் மாமரத்தடியில் வீற்றிருக்கிறார். இறைவியை அங்கே வருமாறு பணிக்கிறார். தேவி அங்கே காமகோஷ்டம் என்னுமிடத்தில் வந்து தங்குகிறாள்.

மத்யேதுண்டீர பூவ்ருத்தம் கம்பா வேகவதீ த்வயோ:

தயோர் மத்யம் காமகோஷ்டம் காமாக்ஷீ தத்ர வர்ததே:

பரமனை அடைய தேவியும் தேவியை அடைய இறைவனும் விரக தாபத்தால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை வர்ணிப்பதுதான் விப்ரலம்ப சிருங்காரம் - பிரிவுத் துயரால் வாடும் நிலை.

ஸ்ரீ கிருஷ்ணனும் ராதையும் இதே நிலையில் யமுனைக் கரையில் மலர்கள் பூத்துக் குலுங்கும் சமயத்தில் ஒருவரை ஒருவர் காணத் துடிப்பதையும் ராதையின் தோழி ஒருத்தி அவ்விருவர்களையும் சேர்த்து வைப்பதையும் நமக்குத் தெரிவிக்கிறார் ஜயதேவர் என்ற மகாகவி. அஷ்டபதி என்ற சிருங்கார காவியத்தில் 24 அஷ்டபதிகள் (எட்டுப் பாதங்கள் கொண்டது ஒவ்வொன்றும்) கொண்டது இந்தக் காவியம். கடைசியில் ராதையின் கல்யாணத்தில் முடிவுபெறுகிறது. நாம சங்கீர்த்தன பஜனை சம்பிரதாயத்தில் பாகவதர்கள் இன்றைக்கும் ஆண்டுதோறும் வசந்தத்தில் (மாம்பூ பூத்துக் குலுங்கும் காலம்) அஷ்டபதி பாடி, ராதா கல்யாணம் நடத்திக் கொண்டாடுவதைக் காண்கிறோம்.

மன்மதனுடைய புஷ்ப பாணங்களில் ஒன்று மாம்பூக்களால் ஆனது. மற்றவை அரவிந்தம் (தாமரை), அசோகப்பூ, மல்லிகை, நீலோத்பலம் (நீலத்தாமரை), ஆக ஐந்து மலர்களைப் பெற்றவன் காமன்.

ஜயதேவரின் சிருங்கார மகா காவியத்தை முன்னுதாரணமாகக் கொண்டு ஆதிசங்கரர் ஸ்தாபித்த ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் 62 -ஆவது ஆசார்யர்களாகத் திகழ்ந்த ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் கம்பை ஆற்றின். கரையில் பூத்துக் குலுங்கும் வசந்தத்தில் பிரிவுத் துயரால் வாடும் பரமன் ஏகம்பன் பராசக்தி காமாக்ஷி இருவரையும் வர்ணிக்கிறார். **சிவகீதிமாலா** என்ற சிருங்கார காவியம்தான் அது. இதில் எட்டு அடிகள் கொண்ட இருபது அஷ்டபதிகள் காண்கின்றன.

ஜயதேவரின் கிருஷ்ணாஷ்டபதிகள் எந்த ராகம் தாளத்தில் அமைந்திருக்கின்றனவோ அதே வரிசையில் அதே ராகம் தாளத்தில்தான் இந்தச் சிவாஷ்டபதிகளை அமைத்திருக்கிறார் ஆசார்ய சுவாமிகள். எனவே பாகவதர்கள் சுலபமாக அதே மெட்டில் பாடிப் பரமனின் கருணையைப் பெறலாம். சம்ஸ்கிருதத்திலே அமைந்திருந்தாலும் சுலபமாகப் பொருள் உணர்ந்து பாடும்படி எளிய நடையில் பாடல்கள் விளங்குகின்றன.

அன்பை (காதலை) முக்கியமாகக் கொண்டு நாயக நாயகி பாவத்தில் அமைத்திருப்பதால் இந்தக் காப்பியத்தில் சிருங்காரரசம் அதிகமாக உள்ளது. அதே அன்பைப் பரமனிடத்திலே செலுத்தும்போது அது பக்தியாக மாறுகிறது. சிருங்காரம் அதிகமாக இருந்தாலும் இது பக்தி காவியம். அந்தக் கண்கொண்டு பார்க்கும்போது இந்த நூலில் பொதிந்திருக்கும் தத்துவங்களை நாம் காணமுடியும். ஸ்ரீ கிருஷ்ணாஷ்டபதி, சிவாஷ்டபதி இரண்டு நூலுமே ஜீவாத்ம- பரமாத்ம தத்துவங்களை விளக்க வந்தவைதாம். ராதையும், கௌரியும் ஜீவனின் பிரதிநிதிகள். அவர்களிடம் கோபம், தாபம், அகந்தை, எல்லாம் உண்டாகின்றன.

அப்போதுதான் நல்லுபதேசம் செய்ய ஆசான் ஒருவன் தேவைப்படுகிறான்.

இங்கே ஆசான் உருவில் தோழிவருகிறாள். ஜீவனுக்குப் பரமனைச் சுட்டிக் காட்டுகிறாள். ஜீவனுக்காகப் பரிந்து பரமனிடம் தூது செல்கிறாள். பரமன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தாலும் அதற்கான பக்குவம் ஜீவனிடம் இல்லை. ஆதலால் அதற்காக வேண்டிச் சோதனைகளைக் கொடுக்கிறான். சோதனைகளைக் கண்டு கலங்குகிறான் ஜீவன். அப்போதுதான் ஆசானின் ஆற்றல் வெளிப்படுகிறது. அவன் ஞானமென்னும் அறிவைப் புகட்டுகிறான். பரமாத்மா - பரந்தாமன் ஒருத்தர்தான். ஆனால் ஜீவன்கள் அநேகம். அத்தனை ஜீவன்களும்

காஞ்சித் திருவூடல்

பரமனிடம் உரிமை கொண்டாடும் தகுதி படைத்தவர்கள். எனவே நீ மட்டுமே பரமனை அடைய உரிமை உடையவள் என்ற அகந்தையை விட்டு அவன் உன்னை அணுகி வரும்போது அவனிடம் அடைக்கலம்கொள் என்று உபதேசம் செய்கிறாள் தோழி. இந்த அடிப்படையிலேதான் இரண்டு காவியங்களும் அமைந்திருக்கின்றன.

ஜயதேவரின் முதல் அஷ்டபதி திருமாலின் பத்து அவதாரங்களை வர்ணிக்கிறது. அதுபோல் சிவாஷ்டபதியில் சிவபிரானின் பத்துத் திருக்கோலங்களைக் காண்கிறோம். 1. தில்லை சபாபதி நடராஜன், 2. நஞ்சுண்ட கண்டன், 3. முப்புரமெரித்த முக்கண்ணன், 4. காமனை எரித்த காலகாலன், 5. மோனகுரு தக்ஷிணாமூர்த்தி, 6. ராமர் அர்ச்சித்த ராமநாதன், 7. தாரக மந்திரமோதும் காசிநாதர், 8. காமாட்சிக்கிரங்கும் ஏகம்பன், 9. கச்சபன் அர்ச்சித்த கச்சபேசன், 10. சங்கர குரு ஆராதித்த சந்திரமௌளி.

வெள்ளிப்பனிமலையில் பார்வதி, பரமேசுவரனின் கண்களை விளையாட்டாகப் பொத்துகிறாள்.

காஞ்சி கம்பை நதிக்கரை பூத்துக்குலுங்கும் மாந்தோப்பு. வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன. குயில்கள் கூவுகின்றன. வசந்த காலம். மந்த மாருதம் வீசுகிறது. லதா மண்டபத்தில் (கொடி இல்லம்) பெருமான் குங்குமப் பூ கலந்த சந்தனம் பூசிப் பொன்னாற் மேனியனாகப் பெண்களின் மனத்தைப் பறிக்கும் அழகு பொழியும் திருக்கோலத்தில் அமர்ந்திருக்கிறார். மன்மதனின் மலர்க் கணைகளுக்காளான மங்கையரின் மனத்தைத் துளைத்துச் செல்லும் மலர் விழிகளோடு காண்கிறான். கரத்திலுள்ள மான் நஞ்சுண்ட நெஞ்சத்தைக் கண்டு தளிர்மேல் அமர்ந்த

வண்டுக் கூட்டமோ எனச் சந்தேகிக்கிறது. நங்கையரின் நெஞ்சத்தை (மனத்தை)ப் பிளந்து செல்லும் புன்முறுவலின் ஒளிக்கற்றைகள் பரமனிடம் பளிச்சிடுகின்றன. கால்களில் கலீர் கலீரென ஒலிக்கும் சதங்கைகள்.

வெள்ளிமலையெனத் திகழும் காளையில் அமர்ந்த கோலம். இப்படி இருக்கும் பரமனைச் சுட்டிக்காட்டி, நிலவைப் பொழியும் முகத்தைக் கொண்ட கௌரியிடம் தோழி அவன் பெருமையைக் கூறுகிறாள்.

முக்கண்ணனும் விரக வேதனையால் துன்புறுகிறான். கௌரியை மனத்துள் எண்ணிப் பலவாறு புலம்புகிறான். விளையாட்டுக்காகக் கோபித்துக் கொண்டதை இவ்வளவு பெரிதாக எடுத்துக் கொள்ளலாமா? நீ இல்லாமல் ஒரு கணங்கூட என்னால் இருக்க முடியாதே!.. நீ கோபித்துக் கொண்டு உன் தாமரைத் தாள்களால் என் தலையில் உதைத்தாலும் நான் அவற்றுக்கு என் கரங்களால் அர்ச்சனைதானே செய்வேன். நான் தவறு செய்திருந்தாலும் மன்னித்துவிடு. உன்னை வணங்கிக் கேட்கிறேன். என்மீது கருணை கொள். (பரமன் ஏன் இப்படிக் கூறுகிறார். பக்த பராதீனன் அவன் அன்புக்குக் கட்டுப்பட்டவன். பக்தை பா லிக்கும்போது அவனுள்ளம் உருகுகிறது.)

கம்பை ஆற்றங்கரை: மாந்தோப்பில் மாதவிக் கொடி இல்லம் பிரிவுத் துயரால் வாடிய முகத்துடன் அமர்ந்திருக்கும் பிறை சூடிய பெம்மானிடம் கௌரியின் தோழி கூறுகிறாள்: 'பெம்மானே! கௌரி உங்களை விட்டுப் பிரிந்த துயரால் மிகவும் மெலிந்து விட்டாள். உங்களையே சதா எண்ணிய வண்ணம் இருக்கிறாள். நீங்கள் இல்லாமல் குயில்களின் இனிய கூவலும் அவள் காதுகளுக்கு நாராசமாக இருக்கிறது. பறவை ஜோடிகள் கிளைகளில் அமர்ந்து களித்திருப்பதைக் கண்டு அவள் பெருமூச்சு விடுகிறாள். தோழிகளிடமும் சரியாகப் பேசுவதில்லை. கேட்டாலும் பதில் சொல்வதில்லை. கோபித்துக் கொள்வாள். எப்போதும் வாட்டத்துடன் அமர்ந்து 'சிவ சிவ' என்று தங்கள் நாமாவையே சொல்லிக் கொண்டிருக்கிறாள். தேவர்களுக்குகந்த கனி வகைகளைச் சாப்பிடக் கொடுத்தாலும் அவற்றை விஷத்தைப் போல் கண்டு முகத்தைச் சுளிக்கிறாள்.'

இதைக் கேட்ட பெருமான் 'நான் இந்த மா மரத்தடியில் கொடி இல்லத்தில் அவளுக்காகக் காத்திருக்கிறேன், அவளுக்கு என் ஆறுதல் மொழிகளைக் கூறி இங்கே அழைத்து வா!' என்று தோழியைப் பணிக்கிறார்.

தோழி கௌரியிடம், 'பிரான் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார், வா' என்கிறாள். ஆனால் விரக வேதனையால் மெலிந்து விட்ட உடலுடன் அவளால் ஓர் அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. இந்த நிலையைக் கண்ட தோழி, சிவனையே அங்கே அழைத்து விடுவதாகச் சொல்லிச் செல்கிறாள். ஆனால் நிலவைப் பொழியும் இரவுதான் கடந்து சென்றதே ஒழியப் பிரான் வருவதாகத் தெரியவில்லை. கடைசியில் பிரானின்றித் தோழி மட்டும் வருவதைக் கண்டு கௌரி தன் விதியை நொந்து கொள்கிறாள். 'தோழி சொல்லைக் கேட்டு நான் ஏமாந்து போனேனே! நான் என்ன செய்வேன்? ஏ விதியே! இப்படிச் சதி செய்யாதே! நீண்ட நாளைய பிரிவுத் துயரைப் போக்க ஏதேனும் வழி செய்' என்றெல்லாம் புலம்புகிறாள்.

பின்னர் தன்னைக்காட்டிலும் அழகிலும் அன்பிலும் சிறந்தவளான வேறொருத்தியிடம் தன் காதலர் மனத்தைப் பறிகொடுத்துவிட்டாரோ எனச் சந்தேகிக்கிறாள். வேறொருத்தி, குணத்தில் என்னைக்காட்டிலும் சிறந்து விளங்குபவள், சிவனுடன் கேளிக்கையில் ஈடுபட்டிருப்பாளோ! கட்டியணைத்து முத்தம் கொடுக்கும் காதலனின் அன்புப் பிணைப்பில் மயங்கிக் கிடப்பாளோ! அகில் சந்தனமும் கஸ்தூரியும் பூசிய மார்பகங்கள் அவரை களிப்பில் ஆழ்த்திக்கொண்டிருக்குமோ! மென்மையான தளிர்ப் படுக்கையில் படுத்துச் சிறிதே திறந்திருக்கும் மலர் விழிகளால் முக்கண்ணனையும் இன்பத்தில் மூழ்கடித்துக் கொண்டிருக்கிறாளோ என்றெல்லாம் கற்பனை செய்கிறாள்.

இப்படியெல்லாம் புலம்பியவாறே இரவைக் கழித்த கௌரி, பொழுது விடியு முன்னர் வந்து சேர்ந்த மகேசனைக் கண்டதும் கடுமையான வார்த்தைகளால் சாடுகிறாள். 'நெற்றிக் கண்ணை உடையவரே! மற்ற இரு கண்களுமே, கலங்கிய நிலையில் கண் விழித்த உங்கள் செயலைக் காட்டிக் கொடுக்கின்றனவே! நஞ்சைக் கலந்த அமுதம் போன்ற சாரமற்ற உங்கள் ஆறுதல் மொழிகள் எனக்கு வேண்டாம். இரவெல்லாம் எவள் ஒருத்தி உங்களை மகிழ்ச்சியில் திளைக்க வைத்தாளோ, அந்த அழகியையே சென்றடையுங்கள். அந்த மங்கையின் செயலால் புண்ணாக உள்ள உங்கள் அதரங்களைக் கண்டு என் மனம் பொங்கியெழுவது உங்களுக்கு எப்படித் தெரியப்போகிறது?' என்றெல்லாம் கூறிக் கோபிக்கிறாள் உமை.

தோழி கௌரிக்கு இங்கே நல்லுரை வழங்குகிறாள். 'உனக்கு இந்தக் கோபம் ஆகாது. பிரபு மகாதேவன் உன்னிடம் மன்னிப்புக் கோரும் வகையில் உன் எதிரில் வந்து தலைகுனிந்து நிற்கும்போது, நீ அவனுடைய தலையில் காலால் உதைப்பதுபோல் பேசுவது உனக்கு அழகல்ல. அவருக்குக் கோபத்தை உண்டு பண்ணாதே! அவர் மனம் குளிர நீ நடந்து கொண்டால் உன்னுடைய தாபமும் வேதனையும் தணலில் தண்ணீர்விட்டது போல் ஆகிவிடும்! என்கிறாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டுத் தேறிய தேவி சிவனைப் பார்க்கவும் வெட்கப்பட்டு, தைரியத்தை இழந்த நிலையில் மெல்லக் கண்ணெடுத்துக் கணவரைக் காண்கிறாள்.

'பெண்ணே! மலைமகளே! கோபப்படாதே! என்மீது குற்றமிருந்தால் அதை மனத்தில் கொள்ளாதே! உன்னையன்றி வேறு யாரையும் என் மனம் நாடாது. உன் பிரிவை ஒரு கணமும் என் மனம் சகிக்காது. இதற்கு மேல் நான் என்ன கூறக்கிடக்கிறது.'

'சிவந்த தாமரைக் கண்ணை உடையவளே! நீ என்னிடம் கோபம் கொண்டால் எனக்கு யார் அடைக்கலம்? சரண் புகுந்தவனிடம் குறைகாண்பது நல்லதல்லவே! மலர்க் கணைகள் துளைக்கும் என்னை மலர் விழியால் நோக்கி என் மனம் குளிரச் செய். இப்போது நீ என்னை மன்னித்து ஏற்றுக்கொண்டால் என்றைக்கும் உன்னை விட்டுப் பிரியாமல் உன் அன்புக்குரியவனாக நிற்பேன்' என்கிறார் பிரான்.

பிரிவாற்றாமையால் துடித்த உமை இப்போது மன மகிழ்ச்சி கொள்கிறாள். அவளுக்கு ஆறுதல் பல கூறி, தேற்றித் தம் தளிர்க் கரங்களால் தேவியைத் தழுவியபடி தம் கேளிக்கைக் கொடி இல்லத்துக்கு அழைத்து வந்துவிடுகிறார் பிரான்.

கொடி இல்லத்தில் உமையுடன் கூடிய மகிழ்ச்சியால் துயரினின்று விடுபட்ட பெருமான் களிப்பின் மிகுதியால் தேவியிடம் மீண்டும் கூறுகிறான்:

தளிர்ப்படுக்கையில் அமர்ந்து கேளிக்கை புரிவாய் பெண்ணே!

அதரமமுது படைத்து அன்பைப் பொழிவாய் கண்ணே! (அந்த அதரத்துக்கு அப்படி ஒரு பெருமை. சிவ நாமத்தைச் சொல்லிச் சொல்லி உரு ஏற்றி தனிச்சுவையுடன் விளங்குகிறது).

அன்னைக்கும் அப்பனுக்கும் தலைவணங்கிய லக்ஷ்மிதேவி கலைமகளுடன் சேர்ந்து சாமரம் வீசுகிறாள். பரமன், கட்டளையிடத் திருமாள் பங்குனி உத்திரத் திருநாளில் சுப முகூர்த்தம் - சுபலக்கினத்தில் பிரமன் மந்திரம் ஓதுகிறார். மீண்டும் லக்ஷ்மி நீரை வார்க்க திருமால் காமாக்ஷி தேவியைப் பரமனுக்கு மணம் செய்து கொடுக்கிறார்.

காஞ்சித் திருவுடல், காமாட்சி - ஏகாம்பரநாதர் திருமணத்தில் முடிந்து இனிக்கிறது. இந்த இனிய காட்சிகளை அடுத்துப் பார்க்கிறீர்கள்.

- 'தில்லை நாதன்'


கலைமகள் தீபாவளி மலர்-1989.
காஞ்சித்
திருவூடல்

லதா
கலைமகள் தீபாவளி மலர்


கலைமகள் தீபமலர்
1989


கலைமகள் தீபாவளி மலர்-1989


கலைமகள் தீபாவளி மலர் 1989

கலைமகள் தீபாவளிமலர்
1989


ராம்கோவின்
தீபாவளி வாழ்த்துக்கள்
நாட்டில் தொழில் வளம் பெருக்கி வேலை வாய்ப்புகள்,
கல்வி மற்றும் பல அடிப்படை வசதிகளைப்
பெருக்கி, சுபிட்சமும், மக்கள் மன நிறைவும், வளமும் பெற்று
வாழ ராம்கோ நிறுவனங்கள் வழிகாட்டி ஒளிர்கின்றன.
ராம்கோ குருப் நிறுவனங்கள் :
ராஜபாளையம் மில்ஸ் லிட்
மத்ராஸ் சிமெண்ட்ஸ் லிட்
ராம்கோ இண்டஸ்டிரீஸ் லிட்
கௌரி ஹவுஸ் மெட்டல் ஒர்க்ஸ்
ராமராஜு சர்ஜிகல் காட்டன் மில்ஸ் லிட்
சுதர்சனம் ஸ்பின்னிங் மில்ஸ் லிட்
ஜெயராம் மில்ஸ் லிட்
பி.ஏ.சி. ராமசாமி ராஜா பாலிடெக்னிக்
சின்மயா வித்யாலயா பி.ஏ.சி. ராமசாமி ராஜா
மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி ஸ்கூல்
பி.ஏ.சி. சின்னையா ராஜா ஞாபகார்த்த
மேல்நிலைப் பள்ளி
பி.ஏ.சி. ஆர். அம்மணி அம்மாள் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி
பி.ஏ.சி. ராமசாமி ராஜா கல்வி அறக்கட்டளை
ராஜா அறக்கட்டளை

JG/RIL/89

நல்லி
சின்னசாமி செட்டி

விசுவரூபம்

அரசு மணிமேகலை

"ஏண்டா? பி.எஸ்ஸி. படிக்கிறே! உனக்கு இது புரியலையா?"

"என்னதும்மா?"

"அடேயப்பா! போதி மரத்தடிப் புத்தன் மாதிரி என்ன பொறுமையா, கேக்கறான் பாரு! என்னதும்மா வாமே..."

"என்னதும்மான்னு கேட்டாலும் தப்பு, கேக்காட்டாலும் தப்பு..."

"ஆமாண்டா அம்மா சண்டைக்காரி, உன்னைப் புடிச்சி நிறுத்தி வெச்சிக்கிட்டு அர்த்தம் கெட்டதனமா, சண்டை போட்டுக்கிட்டு இருக்கிறேன். இல்லையா?"

"நீ விஷயத்தைச் சொல்லும்மா..."

"இதோ பாரு! இமயவரம்பா! எல்லாம் உனக்குத் தெரிஞ்ச விஷயம் தான். தெரியாதவன் மாதிரி என்னையே கேட்டுக்கிட்டு நிக்காதே!"

"என் பிரெண்ட்ஸ் விஷயமா?"

"என்னடா அவ்வளவு அலட்சியமா சொல்லிட்டு உள்ளே போறே!"

"பின்னே என்னம்மா? அவங்களை ஏம்மா நீ இப்படி வெறுக்கறே? ஏழைகளாப் பொறக்குறது என்ன அவ்வளவு பெரிய பாவமா? அவங்களா இஷ்டப் பட்டா ஏழை வீட்டுலே பொறந்தாங்க? ஒருத்தன் ஒருத்தனும் என் மேலே உயிரையே வெச்சிருக்காங்க, குமரன் இருக்கானே அவன் போனமாசம் 'டூர்' போயிருந்தமே, அப்ப நான் மயக்கம் போட்டு விழுந்துட்டேன்னு சொன்னேன் இல்லியா? அப்போ குமரன் என்னைத் தோள்லே தூக்கிப் போட்டுக்கிட்டு ரெண்டு மைல்தூரம் டாக்டர் வீடு தேடி ஓடியிருக்கிறான் தெரியுமா? மொழி தெரியாத ஊர். குமரனுக்கு என்ன தலையெழுத்தா? மத்தவங்களை மாதிரி, ரூம்லே போட்டுட்டுப் போயிருக்கலாம் இல்லியா? மருது இருக்கானே மருது... அவன் என்ன பண்ணான் தெரியுமா?"

"போதும் இமயா! நீ புராணம் அடுக்க வேண்டாம்."

"அய்யோ! அம்மா! இது புராணம் இல்லேம்மா! சத்தியம்,"

"இதோ பாரு இமயா! உனககு இன்னும் உலகம் புரியலே. நீ பணக்கார வீட்டுப் பையன்னு உன்னை அவனுங்க சுத்திச் சுத்தி வரானுங்க. நீ என்னமோ பாசம்னு நினைச்சி ஏமாந்து போறே. இதோ பாரு, பரம்பரையா நல்ல பணக்கார வீட்டுலே பொறந்து வளர்ற பையன் இருக்கானே, அவன் குணம் அலாதியா இருக்கும். அவன் கிட்டே பெருந்தன்மை இருக்கும். அப்படிப் பட்டவன் நட்பைத் தேடிக்கோ, நான் என்ன வேண்டாம்னா சொல்றேன்? நீ என்னன்னா, எப்பப் பார்த்தாலும் இந்தப் பஞ்சை, பராரிங்க, ஏழை, பாழைங்க இந்தச் சனியனுங்களையே இல்லே சுத்திச் சுத்தி வரே? அதுங்க கிட்டே ஒரு நல்ல நடத்தை இருக்குமா? நாகரிகம் இருக்குமா?"

"ப்ளீஸ்மா! இதே வார்த்தையை வேற யாராவது சொல்லியிருந்தா, நான் சும்மா இருந்திருக்க மாட்டேன். வேற எந்தக் கொம்பனா இருந்தாலும் சரி... ஆனா..."

"அம்மாவா இருக்கிறதாலே பொறுத்துக்கிட்டீங்களோ? போடா! புத்தி கெட்டவனே! அததுக்கு ஒரு தரம் உண்டுடா. செருப்பை எங்கே விடணும், குடையை எங்கே வைக்கணும், வைரத்தை எங்கே வைக்கணும்னு ஒரு நியதி இல்லையா? ஓட்டை சைக்கிள்லே ஏறி வந்துட்றானுங்க ஒருத்தொருத்தனும். தோள் மேலே கை போட்டுக்கிட்டு, ஹால்லே கூப்பிட்டு ஒக்கார வைச்சிக்கிறே."

"ம்! என்னம்மா நீ? நம்ம வீட்டுலே ஹால்லே தானேம்மா ஒக்கார வெக்கறேன். அவனுங்க தங்களோட மனசுலியே சிம்மாசனம் போட்டு என்னை ஒக்காரி வெச்சிருக்காங்கம்மா. அதை நீ புரிஞ்சுக்கணும்."

"சினிமாவுக்குக் கதைவசனம் எழுதறப்போ, இப்படி எல்லாம் எழுது - இதயச் சிம்மாசனம் அது இதுன்னு - ஆடியன்ஸ் கைத்தட்டுவான். கேட்டுக்கோ இமயா! உன் பிரண்ட்ஸை வெச்சுத்தாண்டா ஒன்னை மதிப்பாங்க. கண்ட கழுதைங்களோட நீ சுத்திக்கிட்டிருந்தா ஒரு அந்தஸ்து இருக்குமா?"

"அந்தஸ்து... அந்தஸ்து... அந்தஸ்து...ச்சே! நீ என்னம்மா மனுஷ ஜென்மம்தானா? ஒரு மனிதாபிமானம் இருந்தா இப்படி எல்லாம் பேசுவியா? பணக்கார வீட்டுப் பையனா இருந்தா அவன் வைர்மா, வைடூர்யமா ஜொலிப்பானா என்ன? அப்படியே ஒரு மாணிக்கமாவா அவன் இந்த மண்ணுலே வாழ்ந்துகிட்டிருப்பான்? ஏன் நீ அப்படி நினைக்கிறே? எத்தனைப் பணக்கார வீட்டுப் பசங்க தெருப் பொறுக்கிங்களா அலைஞ்சிக்கிட்டு இருக்காங்க தெரியுமா?"

"ஆமாமாம்! ஏழைப் பசங்க நோபல் பரிசா வாங்கிக் குவிக்கிறானுங்க. இவனுங்கதான் தெருப் பொறுக்கிங்களா அலைஞ்சிக்கிட்டு இருக்கானுங்க. இவன்தான் கண்டான். அடேய்! இமய வரம்பா! ஒண்ணைப் புரிஞ்சுக்கோ. சைக்காலஜிப்படி அவனுங்களுக்கு - அதுதான் ஏழைப் பசங்களுக்குப் பணக்காரங்களைக் கண்டா ஒரு வெறுப்பு இருக்கும். ஒரு வெறி இருக்கும். குழி தோண்டிப் புதைச்சிட ஒரு 'சான்ஸ்' பாத்துக் கிட்டேதாண்டா இருப்பாங்க். அது மட்டும் நிச்சயம்..."

இமய வரம்பன் சலிப்புடன் நகர்ந்தான். அம்மாவின் எண்ணத்தை மாற்றவே முடியாது. தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று சாதிப்பவள். பரம்பரைப் பணக்காரி. காரும், பங்களாவும், ஏ.சி.யுமாகப் பிறந்தவள். அந்த ஆணவம் அவள் உடல் முழுக்க இரத்தத்தோடு கலந்திருந்தது. கீழ்க் கண்ணால் அவள் ஏழையைப் பார்ப்பதே, ஏழேழு ஜென்மத்துக்கும் மறக்க முடியாத கொடிய அநுபவமாக அந்த ஏழைக்கு அமைந்துவிடும். அப்படித் தானே தன்னைத் தேடிவந்த நண்பனின் தாயை அவமதித்து அனுப்பினாள்? சே! என்ன பெண்மணியோ?

''என்ன இமய வரம்பா? காலேஜுக்குக் கிளம்பலை?''

''கிளம்பணும்ப்பா...''

''ஏம்ப்பா! ஒரு மாதிரி இருக்கே? அம்மா என்னவாவது சொன்னாளா?''

''என்னப்பா பின்னே? எந்த நேரமும் என் பிரெண்ட்ஸ் பத்தியேவா பேச்சு? சே! என்னப்பா? நீங்க எவ்வளவு பெரிய பேக்டரி வெச்சி நடத்தறீங்க! உங்க அநுபவத்துலே எவ்வளவு பாத்திருப்பீங்க? ஏழைங்கன்னா அவங்க கெட்டவங்களாத்தான் இருக்கணும்னு ஏதாவது 'டெபனிஷன்' இருக்கா என்ன? சொல்லுங்க பணக்காரப் பசங்கன்னா அவனுங்களோட நான் பழகலாமாம். ஏன்னா, என் மரியாதை ஒசந்துடுமாம். நாலாங்கிளாஸ் படிக்கிற பையன் கூட இதெல்லாம் சகிச்சுக்கிட்டு இருக்க மாட்டான். ஆமாம்...''

அப்பா ஆதரவாக இமயன் தோளைப் பற்றிக் கொண்டார். வார்த்தைகள் தராத ஆறுதலை, விரல்களின் வருடல்கள் தந்து நின்றன. பொதுவாக, அப்பாவுக்கும், மகனுக்கும்தான் ஒத்துக் கொள்ளாது என்பார்கள். அம்மாதான் பாலமாக இருப்பாள். இமயன் சிரித்துக் கொண்டான்... அப்பாவின் முகத்தை ஆதரவாகப் பார்த்துச் சிரித்தான்.

''கிடக்கட்டும். விடுடா கண்ணா! சிலர் குணம் அப்படி. அவங்களை யாருமே மாத்த முடியாது. ஒங்கம்மாவுக்கு அந்தப் பணக்காரத்திமிர் கொஞ்சம் அதிகம்தான். அடேயப்பா. இன்னிக்கு நேத்தா? வீணா ஏன் சண்டை போடறே?''

இமயனுக்கு மனம் சமாதானம் அடையவில்லை. குமரன் மருது வீடுகளில் எதையாவது சாப்பிடக் கொடுக்காமல் அனுப்பவே மாட்டார்கள். தங்கள் வீட்டு மைதா மாவு தோசையை அவன் சாப்பிடுவானா என்கிற தயக்கத்தில் குமரன் அம்மா தயங்குவார்கள், இமயன் ஆசையாகச் சமையற்கட்டிலேயே உட்கார்ந்து, குமரனோடு சேர்ந்து நான்கு தோசையை உள்ளே தள்ளிவிட்டுத்தான் வருவான். அவர்கள் வீடுகளில் எல்லாம் என்ன மாதிரியான விருந்தோம்பல்? எப்படிப்பட்ட பாசம் வார்த்தைகள்?

இமயன் அம்மாவைப் போலவா? கதவை கூடத் திறக்கமாட்டாள் மகராசி...

''ஆங்... இமயன் வெளியிலே போயிருக்கிறான். வந்தா சொல்றேன்!'' அவ்வளவுதான், அடுத்த வார்த்தையை வாய் உதிர்க்க லட்சம் பொன் கொடுத்தாக வேண்டும்.

இமயன் நண்பர்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்கள். அதனால் கூடுமானவரை வீட்டுக்கு வந்து, இமயனுக்குச் சுடுசொல் தேடித் தருவதில்லை. ஆனால், இமயனுக்குத்தான் ஏக்கமாக இருக்கும். நண்பர்களை அழைத்து உபசரிக்க வேண்டும் என்று. ஹூம்! இந்தப் பிறவியில் அதற்கெல்லாம் கொடுத்து வைத்திருக்கவில்லை.

அம்மா என்றால் 'பாசம்' என்பது மாறி அம்மா என்றால் 'ஆணவம்' என்று அகராதியில் குறிக்கத் தக்க விதமாய் இவள் இப்படி நடந்து கொள்கிறாளே! இமயனுக்கு ஆத்திரத்தில் வீட்டை விட்டு ஓடிவிடலாமா என்று இருந்தது...

''என்னக்கா? இங்கே வந்தும், உன் புள்ளை ஞாபகமா?''

டாக்டர் மாணிக்கவாசகம் தமக்கை மரகதவல்லியைப் பார்த்துச் சிரித்தார். மரகதவல்லி ஏதும் பேசவில்லை.

''க்கும்... இவன் ரொம்ப யோக்கியனா? சித்தி, சித்தப்பா அந்த நாள்லே எப்படி வருத்தப்படுவாங்க? இவனும் இமயவரம்பன் மாதிரி தானே அப்போ ஆடுவான்? பண்ணையிலே வேலை பாக்கறவன் வீட்டுக்கெல்லாம் போயிடுவானே...'' எரிச்சலுடன் தன் சித்தப்பா மகனைப் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பாக்கறே? பழைய ஞாபகமா? 'மலரும் நினைவுகளா?' வெரி குட்... என்ன அப்படித் தப்புப் பண்ணிட்டான் இமயன்? ஏழைங்க கிட்டே பாசமா இருக்கான். அவன் நண்பர்கள் எல்லாருமே சாதாரண வீட்டுப் பசங்க. இதுலே என்ன தப்பு கண்டுட்டே நீ?''

''உன் வேலையைப் பாத்துக்கிட்டுப் போ! நான் ஒண்ணும் இப்போ உன் கிட்டே நியாயம் கேக்கலை! வந்துட்டான்!''

''என்ன நீ வந்துட்டான், போயிட்டான்னு எல்லாம் பேசறே. நான் என்ன சின்னப் பையனா? வயசு நாப்பத்திரெண்டு. காதோரம் பாத்தியா... நரைச்சிப் போயிட்டுது. அப்படின்னா நான் யாரு? பெரிய மனுஷன்! ஒரு டாக்டர்...''

''ஆமாண்டா! ஒனக்குக் காதோரம் நரைச்சா மட்டும்தாண்டா பெரியமனுஷன்னு ஒலகம் ஒத்துக்கும். மாமன்



காரணா அவனைக் கணடிப்பேன்னு பாத்தா...''

''யக்கா! நீ இன்னாவோ பழைய ஞாபகத்திலியே கீரே! இன்னா பெரிய்ய அந்தஸ்து? அட! நீ யாரு... உன்னையே ஓங்க நயினா, அதான் என் பெரீ நயினா தவிட்டுக்கு வாங்கினார்னு ஊரே பேசிக்குது! ஹக்காங்! அய்யே! இன்னான்றே நீயி...''

''சனியன்! ஒரு டாக்டராட்டமாவா நீ பேசறே?''

''ஹை! அப்பா... அப்பா... லூஸ் மோகன் மாதிரியே இருக்குதுப்பா! பேசுங்கப்பா! ப்ளீஸ்ப்பா!''

''டேய்! ஓடுங்க! ஓடுங்க! கோவளம் பீச்சுக்குக் குளிக்கலாம்னுதானே வந்தீங்க. போங்கடா! அத்தை வேற கோவமா இருக்காங்க...''

மாணிக்க வாசகத்தின் மனைவி லட்சுமியும், குழந்தைகளும் சிரித்த படியே நகர்ந்தார்கள்.

மரகதவல்லிக்குப் பொங்கிப் பொங்கி வந்தது. ''எல்லாருக்கும் என் பேச்சு சிரிப்பா இருக்குது. என்னைப் பாக்கக் கிண்டலா இருக்குது! நான் சொல்றதிலே நியாயம் இல்லியா? அதை ஏன் இவனுங்க கவனிக்க மாட்டேங்கறானுங்க?''

மனசுக்குள் சொல்லிச் சொல்லிப் பொருமினாள். மெல்ல நடந்து ஒரு பாறை மீது உட்கார்ந்து கொண்டாள். கோவளம் பீச்சு அமைதியாக இருந்தது. மாணிக்கவாசகம் கட்டாயமாக மாதத்திற்கு ஒரு முறையாவது வந்துவிடுகிறான்.

இப்படி வந்தால்தான் மனத்திற்கு ஒரு மாறுதல் இல்லையென்றால், அப்படியே கிடக்க வேண்டியதுதான்.

அலைகளும், மேகங்களும், கரையோரம் நடைபோடும் மழலைகளும் பார்க்கப் பார்க்க, சொல்ல முடியாத ஒரு நிம்மதி மனத்துக்குள் பரவுவது தெரிந்தது.

இமயனும் வந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? அவன்தான் பிடிவாதமாக வர மறுத்துவிட்டானே! காரிலிருந்து சிப்ஸ், வேர்க்கடலை, உப்புக் கடலை, பிஸ்கட்ஸ் எடுத்துக்கொண்டு மாணிக்க வாசகமும், லட்சுமியும் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

மூன்று சிறுவர்கள் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். கிழிந்து போன டிராயரின் பின் பகுதி பெரும் பாகம் காணாமல் போயிருந்தது.

என்ன, ஏழெட்டு வயதிருக்கலாம் பற்களின் வெண்மையில் அவர்களின் கறுப்பு இன்னும் அதிகக் கறுப்பாகத் தெரிந்தது. எண்ணெய் என்பதை எப்படியும் அந்தத் தலை பிறந்ததிலிருந்தே பார்த்திராது என்பது ஒரே பார்வையில் புரிந்தது.



மாணிக்கவாசகம் மூன்று பேரையும் அருகில் அழைத்தான். ஆளுக்கு ஒரு பிடி வேர்க்கடலை அள்ளிக் கொடுத்தான். அதுதான் போகட்டும்! தொடுத்தோமா, அனுப்பினோமா என்று விட வேண்டடியதுதானே! அவர்களையும் உட்கார வைத்துக் கொண்டான் கூடவே...

பாறையிலிருந்து பார்க்க மரகதவல்லிக்குத் தெளிவாகத் தெரிந்தது... ம்! 'இவன் எல்லாம் ஒரு டாக்டர்! கோவளம் பீச்சில் இப்படிக் கடலைக்குக் கையேந்துகிற பையன்களுடன் உட்கார்ந்து கொண்டிருக்கிறானே! பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்?'

''என்னடா அது கையிலே?''

''இதுவா? இது மீனு...''

''டேய்! கிளிஞ்சலு, சோழியைப் போயி மீனுங்கறே?''

''இல்லேசார்! மீனுதான்! வேக வெச்சா நல்லா இருக்கும்.''

''ஆமாம்! பள்ளிக்கூடம் போறீங்களாடா?''

''நான் மட்டும்தான் சார் போறேன்''

''இவனுங்கள்ளாம்...''

''இவனுங்கள்ளாம் படிக்கப் போவலை! இதோ கீரானே! செம்பட்டை! இவன் அடுத்த வருசம் படிக்கப்போறான்''

''அது சரிடா! உங்கள்லே யார் யார் வீட்டுலே சாராயம் காச்சறீங்க?''

''இதோ! இவன் வூட்டுலே சார்! இவங்கப்பா காச்சறார்.''

''ச்சீ! எங்கப்பா ஒண்ணும் காச்சலை! விக்கறாரு! அவ்வளவுதான்!''

''அது சரி சாரு! நீ ஏன் அதையெல்லாம் கேக்கறே?''

''நானு போலீசுடா...''

பையன்கள் 'கெக்கெக்கெக்' என்று சிரித்துக் கொண்டார்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்,

''பார்ரா... இவரு போலீசாம்... அய்யே!''

''ஏண்டா பசங்களா சிரிக்கறீங்க? நானு போலீசுடா!''

''போ சாரு! போலீசு ஒத்தை தவிர வேற எதையும் கொடுக்காதே!''

பையன்களின் விளக்கம் கேட்டு, மாணிக்கவாசகம், 'ஹோஹோஹோ' என்று உரக்கச் சத்தமிட்டுச் சிரித்தான்

''அக்கா! கேக்குதாக்கா உனக்கு''

''எல்லாம் கேக்குது...''

சே! என்ன இவன் இப்படி ஆடுகிறான்? இவன் வயசென்ன? வேலை என்ன?

மாணிக்கவாசகம் அந்தப் பையன்களைப் புன்முறுவலுடன் பார்த்தான். அவர்களும், அவனைத் தோழமையுடன் பார்த்தார்கள்.

''சரிடா! நீதானே சொன்னே? ஓங்கப்பா இது விக்கறாருன்னு. போயி ஒரு 'கிளாஸ்' எடுத்துக்கிட்டு வா.''

''அய்யய்யோ! அப்பன் என் பெண்டை நிமித்திடும்!''

''போடா சரிதான்! போயி எடுத்தாடான்னா...''

மரகதவல்லிக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. விறகு கட்டையால் தன் தம்பி மாணிக்கவாசகம் மண்டையை ஒரே போடாகப் போட்டுப் பிளந்து விடலாம் போல் இருந்தது! பேச்சைப் பாரேன் பேச்சை...

''ஏண்டா பசங்களா? வெளிநாட்டுக்காரருங்க நிறையபேர் வருவாங்களா?''

''ஓ! நெறைய்ய...''

''நீங்க எப்படிடா அவங்க கிட்டே பேசுவீங்க?''

''கையைக் கையை நீட்டி 'சார்! சார்!' னு கத்துவோம். பிச்சைக்கு பேச்சு என்னாத்துக்கு?''

''ஏண்டா இது அசிங்கமாயில்லியா?''

''வேலை கேட்டா யார் சார் குடுக்கறாங்க? அப்புறம் இன்னாதான் பண்றது?''

மாணிக்கவாசகம் பச்சாதாபத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான். மெல்ல, தன்னை சமாளித்துக் கொண்டவனாய், ஒரு பொட்டலத்தைப் பிரித்து, உப்புக் கடலை எடுத்துக் கொடுத்தான்.

''இன்னா சார்! மொத தடவைய்யே நிறைய குடுத்தே! இப்போ இவ்ளோதானா? கொட்டு சார்...''

சுற்றிலும் அமர்ந்திருப்பவர்கள் யாரையும் அவர்கள் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. பிச்சையெடுக்கவும் போகவில்லை. தங்களை மதித்து இவ்வளவு பேசுகிற 'சினேகிதக்காரரை' விட்டு விட்டு, அப்படிப் போனால் மரியாதையாகுமா?

''ஏண்டா பையா, நீ மட்டும் கையிலே அப்படியே வெச்சிருக்கே கடலையை!''

''அது சார் வந்து...''

இன்னும் சின்னவன் ஒருவன் - இன்னும் கிழிந்த துணியை உடுத்தியிருந்தவன் - வடக்கத்திக் கும்பலில் கையேந்தி விட்டு, இவர்கள் பக்கம் வந்தான்.

''தோ வரான்! பாருங்க! அவன் பேருதான் சார் சுண்டெலி! இதோ இவன் தம்பி... அதான் அவன் தம்பிக்குன்னு கடலை வெச்சிக்கினு இருக்கிறான்...''

கடலையைக் கையில் வைத்துக் கொண்டிருந்தவன் தம்பியைப் பரிவுடன் அழைத்தான்.

அவன் புதுப்பெண் போல நாணத்துடன் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

மாணிக்கவாசகம்தான் பேச்சை ஆரம்பித்தான்.

''என்னடா கொடுத்தாங்க அவங்க?''

''இதோ! காராபூந்தி...''

பிஞ்சு கைக்குள் கொஞ்சம் போல, காராபூந்தி.

''டேய்! சண்டெலி! நாங்கள்லாம் வேர்க்கடலை சாப்பிட்டமே சார் குடுத்தாரே!''

''ஏண்டா சுண்டெலி? எனக்குடா காராபூந்தி...''

மாணிக்கவாசகம் சிரித்துக் கொண்டே கேட்டான். மரகதவல்லிக்கு ஆத்திரமான ஆத்திரம். பீச்சுக்கு வந்தும் பிரச்சினை ஒழியவில்லையே!

இவன் போய் ஒரு பிச்சைக்காரப் பையனிடம் கேட்பதா? அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?

''ஏண்டா! எனக்குக் கிடையாதா?''

மாணிக்கவாசகம் விளையாட்டாகத்தான் கேட்டான். அந்தச் சிறுவன் தன் கையில் இருந்ததை அப்படியே கொடுக்க எழுந்தான்.

''வெளையாட்டில்லேடா! நிசம்மாத்தான் கேக்கறேன்...''

அந்தக் குழந்தையின் முகத்தில் புன்னகை மாறவில்லை. சின்னஞ்சிறு கையில் இருந்ததை அப்படியே தர முன் வந்தான்.

மரகதவல்லியின் சிடுசிடுப்பு, ஸ்விட்சைத் தட்டியதும் இருள் ஓடுவதைப் போல், மறைந்தது. மானுடத்தின் விசுவரூப தரிசனத்தைக் கண்ட அதிர்ச்சியில் அவள் பாறை மீது இன்னும் ஒரு பாறையாக உட்கார்ந்திருந்தாள்.

மிஞ்சி மிஞ்சிப் போனால், ஆறு வயதிருக்குமா இந்தக் குழந்தைக்கு? இந்தக் குழந்தைக்கு - இந்தப் பிச்சைக்காரக் குழந்தைக்கு இப்படி ஒரு வள்ளல் மனதா?

லேடீஸ் கிளப் பிரசிடெண்ட் வீட்டில் போன வாரம் நடந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. ''ஒரு மிட்டாய் கூடத் தரமாட்டேன்'' என்று அடம் பிடித்தானே அவர்கள் வீட்டுப் பேரன் - அந்த நிகழ்ச்சி இப்போது ஞாபகத்துக்கு வந்தது.

பார்க்கப் பார்க்க, அந்தச் சிறுவன் உயரமாகிக் கொண்டே போனான். அவன் அளித்த விசுவரூப தரிசனத்தின் முன்னால், மரகதவல்லி சிறுத்துச் சிறுத்துக் கடுகு போலானாள்.

சட்டையில்லாத அந்த அழுக்குப் பையன் இப்போது மிக அழகாகத் தெரிந்தான். மாலை வெயிலின் மஞ்சள் நிறம் அவனுக்குப் புதுச்சோபை அளித்தது.

மரகதவல்லி பிரமித்து நின்றாள். பிச்சை எடுக்கிற பையன்தான்! ஆனாலும் என்ன? ஒரு விதமான தயக்கமும் இல்லாமல் எடுத்து நீட்டுகிற பரந்துபட்ட மனம் இருக்கிறதே! இவனா பிச்சைக்காரன்?

முதல் முறையாக யோசிக்க ஆரம்பித்தாள். இப்படித்தான் ஒவ்வொருவனிடமும் நல்ல குணம் இருக்குமா? பார்க்கத் தவறியது யார் குற்றம்?

இத்தனை கஷ்டத்திலும் தம்பிக்கு என்று பங்கு எடுத்து வைத்திருக்கும் சிறுவன் - குழந்தைத் தனமான குதூகலத்துடன், பாசத்துடன் ஒட்டிக் கொண்டு விட்ட மற்றச் சிறுவர்கள் -

மரகதவல்லி பாறையிலிருந்து இறங்கி வந்து அந்தச் சிறுவர்களை அப்படியே அணைத்துக் கொண்டாள். குட்டிப் பையன்கள் திகைத்துப் போனார்கள்.

''எனக்குடா...'' கையை நீட்டினாள். அந்தக் குழந்தை அதே புன்முறுவலுடன் கையை நீட்டிக் கொடுக்க வந்தது. அவனை வாரி அணைத்துக் கொண்டு கேவிக் கேவி அழுதாள் மரகதவல்லி.

ஆணவம், அகங்காரம் கரைந்து - கருணை ஈரம் கட்டுவதைக் கண்டார், டாக்டர் மாணிக்கவாசகம். ○

Amalgamations
A name that means many things to many people

Tractors to the farmer. Engines, components, battery, and paints to the vehicle industry. Metal cutting tools to manufacturers. Fertilisers and pesticides to planters. Tea and coffee to homes. International connections to exporters. And to consumers it means service ... from advertising to human resource development. From education to trading and retailing.

EQUIPMENT MANUFACTURE

TRACTORS AND FARM EQUIPMENT LTD
Tractors

SIMPSON & CO LTD
Diesel Engines

AUTO COMPONENT MANUFACTURE

INDIA PISTONS LTD
Pistons, Rings, Pins & Cylinder Liners

BIMETAL BEARINGS LTD
Thinwall Bearings & Bushes

AMALGAMATIONS REPCO LTD
Clutch Assemblies & Driven Plates

INDIAPISTONS-REPCO LTD
Flywheel Ring Gears

SHARDLOW INDIA LTD
Crankshafts. Also Forgings.



PACKAGED ENERGY

AMCO BATTERIES LTD
Lead-acid Batteries

PAINTS

ADDISONS PAINTS & CHEMICALS LTD
Paints, Lacquers, Enamels

ENGINEERS' TOOLS

ADDISON & CO LTD
Cutting Tools, Machine Tool Accessories

L.M. VAN MOPPES DIAMOND TOOLS INDIA LTD
Diamond Tools

DISTRIBUTION

T STANES & CO LTD
Fertiliser Mixes, Pesticides

STANES MOTORS (SOUTH INDIA) LTD
Vehicle Franchise

SPEED-A-WAY LTD
Auto Components

GEORGE OAKES LTD
Auto Components

PLANTATIONS

STANES AMALGAMATED ESTATES LTD
Coffee & Tea

THE UNITED NILGIRI TEA ESTATES CO LTD
Tea

SERVICE

THE MADRAS ADVERTISING CO LTD
Advertising

SIMPSON & GENERAL FINANCE CO LTD
Leasing & Hire Purchase

STANES TYRE & RUBBER PRODUCTS LTD
Tyre Retreading

ASSOCIATED PRINTERS (MADRAS) LTD
Printing

ASSOCIATED PUBLISHERS (MADRAS) LTD
Publishing

SRI RAMA VILAS SERVICE LTD
Shipping and Forwarding

EXPORTS

EXPORT PROMOTION DIVISION

HUMAN RESOURCE DEVELOPMENT

MANPOWER DEVELOPMENT CENTRE

EDUCATION

SRI PARAMAKALYANI EDUCATION SOCIETY

TRADING

HIGGINBOTHAMS LTD
Books, Magazines

THE WHEEL & RIM CO OF INDIA LTD
Cycle Rims

STANES TEA AND COFFEE LTD
Coffee and Tea

STANES AGENCIES LTD
Plantation Products

Amalgamations — present in many walks of national life.

MAC/AMAL/1120

அற்புதச் சிவலிங்க வடிவங்கள்

கி. ஸ்ரீதரன்

சிவாலயங்களில் சிவபெருமான இலிங்க வடிவமாகவே காட்சி அளிக்கிறார். இந்த இலிங்கத்திலிருந்தே எல்லாம் தோன்றின. ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய மூன்று தொழிலும் அடங்கியதால் இலிங்கம் எனப்பட்டது.

''காணாத அறிவினுக்கும்
உருவினுக்கும் காரணமாய்
நீணாக மணிந்தார்க்கு
நிகழ்குறியாம் சிவலிங்கம்''

என்று சேக்கிழார் பெருமான் போற்றுகின்றார்.



இந்தத் திருவுருவில் சதுர வடிவமான அடிப்பகுதியைப் பிரம்ம பாகம் எனவும், எட்டுப் பட்டையான இடைப் பகுதி விஷ்ணு பாகம் எனவும், திரண்ட தலைப்பகுதி ருத்ர பாகம் எனவும் அழைக்கப்படுகிறது.

திருமூலர் அருளிய திருமந்திரம் இலிங்கத்தின் சிறப்பினை அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம் எனப் பல தலைப்புகளில் விளக்கியுள்ளது.

தூலலிங்கம் : கோயிலின் கருவறையின் மேல் உள்ள விமானம் 'தூலலிங்கம்' எனவும், கருவறையின் உள்ளே உள்ளது 'சூக்குமலிங்கம்' எனவும் அழைக்கப்படுகிறது. கங்கைகொண்ட சோழபுரம் கோயிலின் விமானமே இலிங்க வடிவாக உள்ளது எனலாம். கருவறையின் அடிப்பகுதி சதுரமாகவும், நடுப்பகுதி எண்கோண வடிவத்திலும், உச்சிப்பகுதி வட்ட வடிவமாகவும் உள்ளது.

சிவசூடாமணி : பல்லவ மன்னர்களில் பரமேசுவரவர்மனும், அவன் மகன் இராஜசிம்மனும் சிறந்த சிவபக்தர்கள். உருத்திராக்கத்தால் ஆன சிவலிங்கத்தைப் பரமேசுவரவர்மன் முடியாகத் தரித்திருந்தான் எனக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. இராஜசிம்மன் சிறந்த சிற்ப வேலைப்பாடும், சிவனுடைய பலவிதத் தோற்றங்கள் கொண்ட கைலாசநாதர் கோயிலைக் காஞ்சிபுரத்தில் கட்டினான். இவன் சிவசூடாமணி, ஆகமப்பிரியன், சிவனை தன் முடி மேல் தரித்துள்ளவன் என்று அந்தக் கோயில் கல்வெட்டு கூறுகிறது.

சிவபெருமானின் வீர செயல்களில் திரிபுரம் எரித்த வரலாறு திருமுறைகளில் சிறப்பாகப் போற்றப்படுகிறது. திரிபுர அசுரர்கள் மூவரும் சிவபக்தி கொண்டவர்கள். எப்பொழுதும் தன் தலை மீது சிவலிங்கத்தைத் தாங்கிக் கொண்டிருப்பவர்கள். இதனால்தான் இவர்களை அழிக்காமல், மூவரில் இருவரை வாயிற் காவலராகவும், ஒருவனைத் தனக்குக் 'குடமுழா' என்ற இசைக் கருவியை வாசிக்கவும் அமர்த்திக் கொண்டார் எனத் திருமுறைகள் கூறுகின்றன. திரிபுரம் அசுரர்கள் மூவரும் இலிங்கத்தைத் தாங்கியிருக்கும் சிற்பங்களைத் தஞ்சைப் பெரிய கோயிலில் காணலாம்.

சதுர்முகலிங்கம் — திருவதிகை

மானுஷலிங்கம் : கல்லிலே ஆகமச் சிற்ப இலக்கணங்களுக்கு ஏற்பச் செய்யப்படும் இலிங்கம் 'மானுஷலிங்கம்' எனப்படும். இதிலே பலவகை உண்டு. ஒரே இலிங்கத்தில் (இலிங்க பானத்தில்) சிறு சிறு இலிங்கங்களாகச் செதுக்கப்பட்டிருக்கும். இதனை 108 லிங்கம், 1008 லிங்கம் (சஹஸ்ர லிங்கம்) எனப் பெயரிட்டு அழைக்கப்படுவதைக் காணலாம்.

சதுர்முகலிங்கம் : இலிங்க் நாளத்தின் ருத்ர பாகத்தில் புடைப்புச் சிற்பமாக மார்பளவு உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இவை சத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், அகோரம், ஈசானம் என்ற சதாசிவ மூர்த்தியின் முகங்கள் ஆகும். இங்ஙனம் நான்கு முகங்கள் அமைக்கப்பட்டு விளங்குவது 'சதுர்முகலிங்கம்' எனப்படும். ஈசான முகம் வடிவின்றி லிங்கத்தின் உச்சிப் பகுதியாகக் காட்டப்பட்டுள்ளது. இத்தகைய இலிங்கங்களைக் காளஹஸ்தி, திருவதிகை, காஞ்சிபுரம் கச்சபேசுவரர்

கோயில், திருவண்ணாமலை, திருவக்கரை, திருவானைக்கோயில், திருப்புன்கூர் போன்ற கோயில்களில் காணலாம்.

சதாசிவ மூர்த்தி : தமிழகத்தில் சதாசிவ மூர்த்தியின் வழிபாடு சிறந்திருந்தது. சிவபெருமானை அமர்ந்த கோலத்தில், நான்கு திருமுகங்களோடு வாகீச சிவனாகப் படைத்தனர். இந்த வழிபாடு தஞ்சைப் பகுதியில் மட்டும் சிறந்திருந்தது. தஞ்சை, (கரந்தை), கண்டியூர், செந்தலை போன்ற இடங்களில் இத்தகைய சிற்பங்கள் காணப்படுகின்றன. தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இராசராசன் 'பஞ்ச தேக மூர்த்தி' என்று அழைக்கப்பட்ட செப்புத் திருமேனியைச் செய்தளித்தான் என அக்கோயில் கல்வெட்டு கூறுகிறது. சதுர்முகலிங்க வடிவம் போன்று முழு உருவத்துடன் அது அமைக்கப்பட்டிருக்க வேண்டும். தஞ்சை, திருவிடைமருதூர், சிதம்பரம் கோயில்களின் கோபுரங்களில் சதாசிவ உருவங்கள் சுதை சிற்பமாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சக்திலிங்கம் : காஞ்சிபுரத்தில் ஆதி பீட பரமேசுவரி கோயிலில் 'சக்தி இலிங்கம்' என அழைக்கப்படுகின்ற இலிங்கம் காணப்படுகிறது. உருத்திர பாகத்தில் 'சக்தியின்' வடிவம் அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. சக்தி தன் நான்கு கரங்களில்; மேற்கரங்களில் அங்குசமும், சூலமும்; கீழ்க்கரங்களில் வாளும், கபாலமும் ஏந்தியிருக்கிறாள். இத்தகைய வடிவிலான இலிங்கம் தமிழகத்தில் வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

இறைவனும், இறைவியும் இணைந்த நிலையே உலகின் தோற்றம். சக்தியும், சிவனும் ஒன்று என்பதைத் திருமந்திரம் பின்வருமாறு கூறுகிறது.

> **''சக்தி சிவமாம் இலிங்கமே தாபரஞ்**
> **சக்தி சிவமாம் இலிங்கமே சங்கமஞ்**
> **சக்தி சிவமாம் இலிங்கஞ் சதாசிவஞ்**
> **சக்தி சிவமாகுந் தரபரந்தானே''**

சக்தியும், சிவனும் ஒன்றான தத்துவத்தை விளக்கும் வகையில் இந்த இலிங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது எனக் கொள்ளலாம்.

புராணக் கதைகள் : மேலும் சிவலிங்கங்கள் புராணக் கதைகளுடன் அதன் பின்னணியில் சித்திரிக்கப்பட்டுள்ளது. இறைவன் காலசஸ்கார மூர்த்தியாக இருக்கும்பொழுது இலிங்கத்திலிருந்து எழுந்து காலனை அழிக்கும் கோலம் காட்டப்பெற்றிருக்கும். கண்ணப்ப நாயனார் வரலாற்றில் இறைவன் கண் மீது கண்ணை வைப்பதற்காக இலிங்கத்தின் மேலேயே காலை வைத்திருப்பான் திண்ணப்பன். கண்ணை அம்பால் தோண்ட முயற்சி

செய்யும்பொழுது இலிங்கத்தினிலிருந்து கை ஒன்று தோன்றி அச்செயலைத் தடுக்க முயலுவதைப் போல காட்டப்பெற்றிருக்கும். கோயிலின் கருவறையில் பின்புறத்தில் 'லிங்கோத்பவர்' வடிவினைக் காணலாம். 'அடிமுடி காண அண்ணல்' வரலாற்றினை எடுத்துரைக்கும் தோற்றம் இது. லிங்கத்தின் நடுவே சிவனும், அதன் இருபுறமும் திருமாலும், பிரம்மாவும் வழிபடும் நிலையில் சிற்பங்களைக் காணலாம்.

தழுவக் குழைந்த பெருமான் : பிற்காலச் சோழர் தலைநகரமான பழையாறையில் திருச்சத்தி முற்றம் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் இறைவி, இறைவனைத் தழுவும் கோலத்தில் ஓர் இலிங்கம் காணப்படுகிறது. சிவபெருமானைப் பூசை செய்து வழிபட விரும்பிய தேவி பூமியில் பெண்ணாகப் பிறந்து, ஒரு காலில் நின்று தவமியற்றி இறைவனை இலிங்க வடிவில் மண்ணால் செய்து வழிபடுகிறாள். தேவிக்கு அருள் வழங்க வேண்டிக் காவிரியின் வெள்ளத்தை அங்கு பெருகிவரச் செய்தார். வெள்ளத்தைக் கண்டு பயந்த தேவி இறைவனைக் கட்டித் தழுவவே, இறைவனே குழைந்து வேண்டிய வரங்களை அளித்தார் எனப் புராண வரலாறு கூறு

தழுவக் குழைந்த பெருமான்

← தஞ்சை, மராட்டியர் கால ஓவியம்

சக்திலிங்கம் - காஞ்சிபுரம்

கிறது. இந்தக் காட்சியைச் சித்திரிக்கும் வகையில் தேவி தவமிருக்கும் கோலமும், லிங்க வடிவில் உள்ள இறைவனைத் தழுவும் நிலையில் உள்ள லிங்கத்தையும் காணலாம்.

ஓவியத்தில் : லிங்க வடிவினை ஓவியத்திலும் தீட்டப்படுவது உண்டு. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் உள்ள லிங்க வடிவினை ஓவியமாகத் தீட்டியிருப்பது தனிச் சிறப்புடன் விளங்குகிறது. இறைவனுக்கு முகமும், கழுத்தில் பல்வேறு அணிகலன்களும், ஆடையும் அணிந்திருக்கும் கோலத்தைக் காணலாம். மராட்டியர் கால ஓவியங்களில் இவ்வாறே தீட்டப் பெற்றிருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

இலிங்கத்தில் ஐயனார் : செங்கோட்டை அருகே இலத்தூர் என்ற ஊரில் இலிங்கத்தில் ஐயப்பனின் (சாஸ்தா) உருவத்தை அமைத்திருக்கும் அற்புதமான வடிவினைக் காணலாம்.

இலிங்கத் திருமேனி ஒரே வடிவமாக இருந்தாலும் காலத்திற்கு ஏற்ப மனிதன் தன் கற்பனைகளுக்கு ஏற்பப் பல்வேறு வடிவங்களாக அமைத்தான். இது பண்டைய மக்களின் இறை நம்பிக்கை, புராணங்களின் மீது கொண்டிருந்த ஈடுபாடு ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

காதல் கடிதங்கள்

என் பெயர் ராமமூர்த்தி. நாற்பத்தெட்டு வயசு. மகேசுவரியைச் சின்ன வயசிலேயே கல்யாணம் செய்து கொண்டு விட்டதால் இந்த வயசில் எனக்கு வளர்ந்த பெண்ணும், பிள்ளையும் இருக்கிறார்கள். பெண் பெயர் தேவிகா, பிள்ளை ரமேஷ். எனக்குச் சர்க்கார் உத்தியோகம். சென்னைப் போஸ்டிங், க்வார்ட்டர்ஸ் உண்டு; நந்தனம் காலனியில். ரமேஷ் ஐ.ஐ.டி-யில் எண்ட்ரன்ஸ் எழுதிச் சென்னையிலேயே அட்மிஷன் கிடைத்தது. தேவிகா எஸ்.ஐ.இ.டி-யில் ஹோம் சைன்ஸ் படிக்கிறாள். தக்க சமயத்தில் அவளுக்குத் திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்ததால் மெடிக்கல், கம்ப்யூட்டர் 'சைன்ஸ் என்று அவளுக்காக அலையவில்லை.

எனக்கு ரத்த அழுத்தம் இல்லை. டயபடிஸ் இல்லை. கண்கள் நன்றாகத் தெரிகின்றன. பற்கள் நன்றாகக் கடிக்கின்றன. வேறு எந்தவிதப் பிரச்னையும் இல்லை. மகேசுவரி விதம் விதமாகச் சமைப்பாள். நிமிஷமாக ட்ரஸ் பண்ணிக் கொண்டு விடுவாள். பளிச்சென்று இருப்பாள்... எங்களுக்கு நல்லதொரு குடும்பத்துக்கு உண்டான அத்தனை அங்க லட்சணங்களும் இருந்தன. பிரச்னையே இல்லை, அந்தக் காதல் கடிதங்களை மகேசுவரி என்னிடம் காட்டும் வரை.

காதல் என்பது பற்றி எனக்குச் சுத்தமாகத் தெரியாது. நானும், மகேசுவரியும் ஒருவரை ஒருவர் நேசிக்கிறோமே தவிர, காதல் என்று இல்லை. என் கல்யாணமே சித்தப்பா ஏற்பாடு பண்ணீயது. அவளை முழுசாக நிமிர்ந்து பார்த்ததே ஒரு மாதம் கழித்துத்தான். என்னைப் பற்றி அவள் பெருமையாகப் பேசிக் கொள்ள மூன்று வருஷம் ஆயிற்று. என் மனசுக்குள் அந்தக் கணக்கு இருக்கிறது. மகேசுவரி அழகான பெண். இப்போதுகூட, நாற்பத்தொரு வயசில்கூட, அவளுடன் நடந்து போகும் போது திரும்பித் திரும்பிப் பார்ப்பவர்கள் பார்வை சொல்வதை என்னால் படிக்க முடிகிறது.

என் பெண் தேவிகா மகேசுவரியைப் போல் தோற்றம். அவளை நான் ஷாப்பிங்கெல்லாம் அழைத்துப் போவதில்லை. ஒரு மாதிரி இருக்கும் என்பதால் அம்மாவும், பெண்ணும்தான் போவார்கள்.

என்ன என்னவோ சொல்லிக் கொண்டே போகிறேனே, காதல் கடிதங்களை விட்டு விட்டு. மகேசுவரிதான் கொண்டு வந்து காட்டினாள். கத்தையாக இருந்தது. காதல் கடிதங்கள் எல்லாம் பூப்போட்ட பேப்பரில்தான் எழுதுவார்கள் போல. சில கொஞ்சம் வாசனையாகக்கூட இருந்தது.

உதாரணத்துக்குச் சில வாக்கியங்கள் :

''என்னுயிரே! நேற்று உன்னை ஒரே ஒரு முறை தொட்டேன். அது உனக்கு நினைவு இருக்கிறதோ என்னவோ! அந்த ஸ்பரிசத்தில் இந்தப் பிரபஞ்சம் எங்கும் பரவிய இன்பம் ஒரு கணம் சிறைப்பிடிக்கப்பட்டு, ஒரு நிமிஷம் என் உள்ளுயிர், தேன் கூட்டைப் பிரிந்து காற்றில் மிதந்தது.

வில்லியம் ப்ளேக்கும், கீதாஞ்சலியும், பாப்லோ நெருடாவும் ஞாபகம் வந்தது...''

''எங்க அவ...?''

''தூங்கறா. எழுப்பிக் கூப்பிட்டுண்டு வரேன். உடனே கண்டிச்சுடுங்கோ. இதை வளர விட்டா...''

''இரு, முதல்ல எழுதினவன் யாருன்னு கண்டுபிடிக்கணும்.''

''எல்லாம் அந்த ராதாங்கற பையன்தான், ராதாகிஷன். ரமேஷைப் பார்க்க வராப்பல இவகூட மணிக்கணக்கா பேசிண்டிருப்பான்...''

''வடக்கத்திக்காரப் பையனா? நான் பார்த்திருக்கேனோ?''

''உங்களுக்கு ஏது சமயம்?'' இவளுக்கு எங்க புத்தி போச்சு? எழுப்பிக் கன்னத்தில அப்டியே வெச்சு இழைக்கணும் போல வரது!''

''இரு, இரு மகேசுவரி! நாம இந்த மாட்டரைக் கொஞ்சம் ஜாக்கிரதையா அணுகணும்.''

''என்ன ஜாக்கிரதை? எழுப்பிச் செவுட்டில அறையணும். ஏய் தேவிகா!''

''இரும்மா. இரு. ப்ளீஸ்! நான் சமாளிக்கிறேன். வயசுக்கு வந்த பொண்ணு. ரொம்ப ஹார்ஷா எல்லாம் இருக்கக் கூடாது.''

''இப்ப என்ன பண்ணணும்ங்கறீங்க? காதல் பண்றதுக்கு ஆரத்தி சுத்தணுமா?''

''பொறுமையா இரு. அந்தப் பையனை நான் முதல்ல பார்த்துக் கேக்கணும். இந்த அவனைப் பற்றி விசாரிக்கணும்.''

''எல்லாம் ரமேஷ் வருவான், அவனைக் கேளுங்க. அவனைப் பத்திச் சொல்லுவான்.''

''ரமேஷ் எங்க?''

''டென்னிஸ் போயிருக்கான். இப்ப இவகிட்ட 'இதைப் பத்திக் கேக்க வேணாம்ங்கறீங்களா?''

''இப்ப வேண்டாம்.''

''என்னவோ அப்பாவும் பொண்ணும்...''

''என்னம்மா'' என்று தேவிகா கண்ணைக் கசக்கிக் கொண்டு வந்தாள். நான் அந்தக் கடிதக் கட்டை மறைத்தேன். இரட்டைச் சடை கருநாகம் போல இருக்கக் கண்கள் கலங்கி அங்கங்கே ஓரிரு மயிர்க் கற்றைகள் உலவ மகேசுவரியின் இளைய பதிப்பு. கண்

களில்தான் எத்தனை ஆர்வம்! இவளா?''

''தேவிகா! உன்னோட அப்பா பேசணுமாம்.''

''அப்பா பேசுவார். நீ எதுக்குக் குறுக்க? இண்டர்ப்ரெட்டரா?''

''நீ போய்ப் பல் தேச்சு, காபி சாப்ட்டுட்டு வாம்மா. ஜஸ்ட் லீவ் இட்.''

''என்னப்பா! ப்ரின்ஸிபால்கிட்டிருந்து எதாவது புகாரா? ஒரு நாள் ஸ்ட்ரைக் பண்ணணும்னு சுவர் மேல ஏறி உக்காந்துண்டிருந்தோம், பத்து கேர்ள்ஸ்...''

''இல்லைம்மா; அதெல்லாம் இல்லை.''

''சுவர் மேல ஏர்றவ எல்லாம்தான் பண்ணுவா.''

''என்ன பண்ணுவா?'' என்றாள் ஆர்வத்துடன்.

''நீ போம்மா. பல் தேச்சுட்டு வா.'' அவள் போனதும் மகேசுவரியை நான் முறைத்துப் பார்த்து, ''ரொம்பப் போட்டுக் குழப்பாத நீ. உள்ளே போ, நான் பாத்துக்கறேன்.''

நான் கடிதங்களை மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்துப் பார்த்தேன். நேர்த்தியான கையெழுத்து. ஒவ்வொன்றின் இறுதியிலும் 'ஆர்'. அவ்வளவுதான். முழுப் பெயர் இல்லை. யாரும் நேரடியாக நிரூபிக்க முடியாது. கையெழுத்தை ஒப்பிட்டுப் பார்த்துதான் நிரூபிக்க முடியும். எனக்குத் தெரிந்த போலீஸ் ஆபிசரிடம் கொடுக்கலாமா? வேண்டாம். என்ன இது? இப்போதே போலீஸ் என்று நானே குழப்புகிறேனே.

பகவானே, என் வாழ்க்கையில் நான் கொஞ்சம்கூட தயாரில்லாத சிக்கல். ரமேஷ் டென்னிஸ் ஆடிவிட்டு வியர்வையுடன் வந்தான். ''ஹாய் டாட்'' என்று கடந்தான்.

''ரமேஷ்! உங்கிட்ட ஒண்ணு கேக்கணும்.''

''ஒண்ணு இல்லை ஒம்போது கேளுங்க.''

''ராதாகிருஷ்ணன்னு உனக்கு ப்ரண்டு இருக்கானா?''

''ராதா, ஆமாம்! தெரியாது உனக்கு?''

''அவன் இங்க அடிக்கடி வருவானா?''

''என்ன டாட் இப்படிச் சொல்றிங்க? தினம் வரான். பாத்ததில்லை? ஏன், என்ன விஷயம்? ஏதாவது கெட்ட காரியம் பண்ணிட்டானா? செத்து கித்து போய்ட்டானா?''

இதற்குள் தேவிகா பல் தேய்த்து விட்டு வர, ''ஜூ, என்னம்மா சீக்ரம் எயுந்துட்டே? குழந்தை லீவு நாள் மூண்ரைக்குக் குறைஞ்சு எழுந்திருக்காதே.''

(ஜூ என்பது தேவிகாவின் செல்லப் பெயர்.)

''அந்தப் பையனை நான் பார்க்கணும்.''

''வருவான். என்ன விஷயம்னு சொன்னா போன் பண்ணி வரவழைக்கிறேன்.''

''யாரு?'' என்றாள் தேவிகா.

''ராதா.''

அண்ணனும், தங்கையும் சதிப் பார்வை பார்த்துக் கொண்டார்கள்.

''அப்பாவுக்கு ராதாவைப் பார்க்கணுமாம்.''

''எந்த ராதா?''

''ராதாகிஷன்'' என்றான் மெல்ல எழுத்து எழுத்தாக.

இரண்டு பேரும் நாடகம் ஆடுகிறார்கள் என்பது எனக்குத் தெரிந்து விட்டது. ஒன்றுமே அறியாதவன் போல இருந்தேன்.

''வாட்ஸ் ஹிஸ் ஃபாதர்?''

''பிக் ஷாட். என்ன பேரு ஜூ?''

''எனக்கென்ன தெரியும்? அவன் உன் ஃப்ரண்டுதானே!''

''ஏய்! அவன் உனக்கு ப்ரண்டு இல்லை. எத்தனை நேரம் பேசியிருக்கான் உன்கூட.''

''அவன் உன்னைப் பார்க்கத்தான் வருவான்.''

''ஆமாப்பா. இவ சொல்றது நிஜம். அவன் என்னைப் பார்க்கத்தான் வருவான்.''

''ஸ்டாப் இட் ரமேஷ். திஸ் இஸ் சீரியஸ். அவன் வந்தா பாக்கணும். அவன் அட்ரஸ் வேணும்.''

''அவன் பாம்பே போயிருக்கான்னு நெனைக்கிறேன். உங்கிட்ட சொல்லலை ஜூ?''

''எனக்கென்ன தெரியும்'' என்றாள் தேவிகா.

''வாட்ஸ் ஹி?''

''எம்.ஏ. லிட்ரேச்சர் ஜர்னலிஸம் படிச்சிருக்கான். பம்பாய்ல ஒரு பேப்பர்ல வேலை கிடைக்கும் போல இருக்கு. எதுக்காகக் கேக்கறிங்க?''

எனக்கு இந்தத் தகவல் ஆறுதலாக இருந்தது. அப்படியொன்றும் அராத்துப் பையன் இல்லை. இருந்தாலும் ஏன் நேராக என் மக்களிடம் கடித சமாசாரத்தைப் போட்டு உடைக்காமல் தயங்குகிறேன். உண்மையைச் சந்திக்கத் தயக்கமா, பயமா? இல்லை. எனக்கும், அவர்களுக்கும் உள்ள ஜெனரேஷன் காப். நான் எதாவது சொல்லப் போய் அதில என்ன தப்பு என்று அவர்கள் ஆரம்பித்து, வாக்குவாதம் வலுத்து... முதலில் அணுகுவதற்குச் சரியான முறை அவன் அப்பாவைச் சந்திப்பது தான். சந்தித்து, 'உங்கள் பையனை அடக்கி வையுங்கள். நான் என் பெண்ணைக் கண்டித்து வைக்கிறேன்' என்று நாசுக்காகத் தீர்த்து வைப்பதுதான்.

''அவன் அப்பா அட்ரஸ்'' என்றேன்.

''ஜூ உனக்குத் தெரியாது?''

''ஷட் அப்'' என்றாள் கோபத்துடன். மறுபடி அண்ணனும், தங்கையும் பார்த்துக் கொண்டார்கள்.

ஏதோ சதிதான்! இரண்டு பேருக்கும் தெரியும்!

''போன் நம்பர் தரட்டுமா?''

''இல்லை, அட்ரஸ் வேணும்.''

''யார் ராதா ஃபாதரா? மவுண்ட் ரோட் பார்ஸன் காம்ப்ளெக்ஸ் இருக்கு தெரியுமா? அதில புதுசா எட்டு மாடிக் கட்டடம் வருமே, பேரு ஜோதி காம்ப்ளெக்ஸோ என்னவோ?''

''கேள்விப்பட்டாப்பல இருக்கு. அதில எங்க?''

''கட்டடமே அவர்துதான். பேர் ஷ்யாம் சுந்தர்.''

''அதாவது இந்த ராதாகிஷனோட அப்பா வந்து பிக் ஷாட்?''

''நாய்க்கே நாலாயிரம் செலவழிக்கிறார்.''

''நாய்க்கா?''

''ஆமாப்பா. பவுடர் போட, குளுப்பாட்ட, மாம்சம் வாங்க, வேலைக்காரனுக்கு...''

நானும், மகேசுவரியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள என் மகனும், மகளும் புன்னகைத்துக் கொண்டார்கள்.

''வேற எதாவது விவரம் தேவையா, குளிக்கப் போகலாமா?''

''போ.''

தனியாக இருக்கும் போது, ''அவளா நம்மகிட்ட விஷயத்தைச் சொல்றாளா பாருங்கோ. அழுத்தம்'' என்றாள்.

''பையன் என்னவோ பெரிய ஃபாமிலி போலத்தான் இருக்கு மகே. இதை ஏன் நாம ஸ்போர்ட்டிங்கா எடுத்துக்கக் கூடாது?''

''என்ன?''

''ஒரு மாறுதலுக்கு நாம பெண்ணோட காதலுக்குச் சம்மதம் தரலாமே! பையனை விசாரிச்சுட்டு அவாகிட்ட நேராப் போய் கல்யாணம் ஏற்பாடு பண்ணக் கேட்டுரலாமே.''

''ரொம்பப் பணக்காராளா இருப்பா போலருக்கே'' என்றாள். மகேசுவரியின் குரல் இப்போதே தழைந்து சமாதான சமனமாகி விட்டது. அத்தனை கோபமில்லை.

''ரொம்ப ஆசைப்பட வேண்டாம். எதுக்கும் அந்த ஆளைப் போய்ப் பார்க்கறேன். பார்த்து இந்த மாதிரி விஷயங்கறதைச் சொல்லி...''

''பார்க்கலாம். இப்ப இந்தக் கடுதாசியை என் செய்யணுங்கறிங்க?''

''எங்க பார்த்த இதை?''

''தலைகாணி அடியில் ஒளிச்சு வெச்சிருந்தா.''

''அங்கயே திருப்பி வெச்சுரு. ஒண்ணே ஒண்ணு மட்டும் எங்கிட்ட கொடு.''

மறுநாள் அலுவலகத்திலிருந்து போன் பண்ணி ஷ்யாம் சுந்தரின் பி.ஏயிடம் மாலை அஞ்சரை மணிக்கு அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிக் கொண்டேன்.

நான்காவது மாடி அறை. வெளியே கண்ணாடிப் பச்சைக்குப் பின் நுங்கம்பாக்கம் போகும் கார்களின் சப்தம் மழுப்பப்பட்டு மவுனமாக ஊர்ந்து கொண்டிருந்தன. நவீன மேசையில் ஒரே ஒரு புதிய ரோஜா வைத்திருந்



தது. செகரட்ரி ''மிஸ்டர் ஷ்யாம் வில் ஸீ யு'' என்றாள்.

உள்ளே ஷ்யாம் சுந்தர் என்னைவிட இளமையாகவும், பளபளப்பாகவும் எழுந்து வந்து வரவேற்றுக் கை குலுக்கி, ''ரேகா, காஃபி பார் மிஸ்டர்- பேர் என்ன சொன்னிங்க...''

''ராமமூர்த்தி.''

''சொல்லுங்க. என்ன விஷயம்?''

''உங்க பையனைப் பத்தி.''

''என்ன? ஹிஸ் இன் பாம்பே.'' புன்னகை கால் இன்ச் சுருங்கியது.

''மிஸ்டர் ஷ்யாம்! நான் நேரா விஷயத்துக்கு வரேன். உங்க பையன் என் பெண்ணுக்கு லவ் லட்டர்ஸ் எழுதியிருக்கான்.''

''அப்படியா'' என்றார் ஆச்சரியத்துடன்.

நான் மெல்ல, நிதானமாக முன்பே ஒத்திகை பார்த்து வைத்திருந்ததை அவரிடம் சொன்னேன். ''இதை நாம ரெண்டு விதமா அணுக முடியும். உங்ககிட்ட சண்டை போட்டு, பிரச்னையாக்கி, இளைஞர்கள் சந்திக்க முடியாம பிரிச்சு, சினிமால வர்றாப்ல" அவங்க எங்காவது ஓடிப் போயி! இல்லை இதைவிடச் சிக்கலாக்கலாம் அல்லது...

''அல்லது?''

''சம்பந்தம் பேசலாம்.''

யோசித்தார். ''லெட் மி ஸீ தி லெட்டர்ஸ்."அந்த ஒரு கடிதத்தை எடுத்துக் காட்டினேன். அதை நிதானமாகப் பார்த்தார். வாசனை பார்த்தார். அவன் எழுத்துத்தான்."ம். பாப்லோ, நெருடா எல்லாம் படிக்கிறானா என்ன! ஸர்ப்ரைஸிங். ம். ம்.''

என்னை நிமிர்ந்து பார்த்தார். புன்னகைத்தார். ''ஐ லைக் யுர் அப்ரோச்! ப்ராக்மாட்டிக் உங்க மனைவி என்ன சொல்றாங்க?''

''அவ நான் சொல்றதைக் கேக்கறா.''

''நான் உங்க பொண்ணைப் பார்த்திருக்கேனா?''

''இல்லன்னு நினைக்கிறேன்.''

''ஃபோட்டோ இருக்கா?''

பர்ஸிலிருந்து காட்டினேன். ''கொஞ்சம் பழசு.''

"ஓ எஸ். ஐ ஹாவ் ஸீன் ஹர். 'ஜு'ன்னு ராதா சொல்லியிருக்கான். முழுப் பேரு என்ன?''

''தேவிகா.''

''நைஸ் நேம்.'' போட்டோவை மறுபடி பார்த்தார்.

காப்பி வந்ததும் மௌனமாகக் குடித்தோம்.

''ராமமூர்த்தி பாருங்க, நீங்களும், நானும் தீர்மானிக்கிற விஷயமில்லை. அவங்க தீர்மானிக்க வேண்டியது. உங்க மகளைக் கேட்டிங்களா? இந்தக் கடிதங்கள் உங்க மகளுக்குத்தானே எழுதியது?''

''ஆமாம். ஆனா இன்னம் கேக்கலை. முதல்ல உங்ககூடப் பேசலாம்னு... அவங்க சம்மதிப்பாங்கன்னுதான் முதல் அஸம்ஷன்.''

''எதனால்?''

''கடிதங்கள். காதல். நமக்குப் புரியாத சமாசாரம். இவங்களுக்கு வேற உலகம். வேற ஜெனரேஷன். அதனாலதான் சம்பிரதாயமா சண்டை போடாம இப்படி அணுகலாம்னு.''

''நீங்க ராதாவைப் பார்த்திருக்கிங்களா?''

''பார்த்திருக்கேன். எங்க வீட்டுக்கு அடிக்கடி வருவான். என் ஸன்னோட, டாட்டரோட பேசிக்கிட்டிருப்பான்.''

''அவனைப்பத்தி உங்களுக்குத் தெரியுமா?''

''நேரடியா பேசிப் பார்த்ததில்லை.''

''கடிதங்களை எப்படிக் கண்டு பிடிச்சிங்க?''

''அது வந்து என் பெண் படுக்கைத் தலையணை கீழ இருந்தது.''

''எதுக்கும் ராதா பம்பாய்லருந்து திரும்பி வரட்டும் மிஸ்டர் ராமமூர்த்தி. இந்த நாட்களில் பெற்றோர் சம்மதம்ங் கறது ஒருவிதமான ஃபார்மாலிட் டின்னுதான் நெனைக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் என் பையனுக்கு முழுச் சுதந்திரம் கொடுத் திருக்கேன். அவன் உங்க பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சா போதும். ஒரு பெண்ணைக் கல் யாணம் செய்துக்க விரும்பறதையே பெரிய பாக்கியமா கருதறவன் நான். நமக்கே நம்ம பிள்ளைகளைப் புரிஞ்சுக் கறது கஷ்டம்! எங்க ஃபாமிலியைப் பத்தித் தெரியும்னு நெனைக்கிறேன். ஜோதி இண்டஸ்ட்ரிஸ், ப்ளாஸ்டிக்ஸ் அப்ளையன்ஸஸ், லீஸிங்க் சிட் பண் டுன்னு...?''

''ஓ அந்த ஜோதியா? டீ.வி-யில விளம்பரம் வரதே?''

''அதே ஜோதிதான்.''

''என் பெண் ரொம்பக் கொடுத்து வெச்சவள்.''

''ஹோப் ஸோ!''

வீட்டுக்குத் திரும்பும் போது குதூ கலமாக இருந்தது. இதில் விதியின் கை எதோ இருப்பதாகவும் பட்டது. தேவி காவின் கல்யாணம் இழுத்தடிக்கும் என்று பயந்து கொண்டிருந்தேன். மன சுக்குப் பிடித்த பையன், பணக்காரன்! வேறு என்ன வேண்டும்? ஒரே பையன், பெரிய பண சாம்ராஜ்யம். எதோ கனவில் போலக் காரியங்கள் நழுவிக் கொண்டிருக்கின்றன. மகேசுவரி காத்திருந்தாள்.

''என்ன ஆச்சு? சண்டை போட்டிங் களா?''

''சே, என்ன மகே? என்னைத் தெரி யாம பேசறியே. எல்லாம் ரொம்ப நாசுக்கா தீர்த்து வெச்சாச்சு. ரொம்ப பெரிய மனுஷன் பையனோட அப்பா. சின்னவா சம்மதிச்சா, விரும்பினா எனக்கு ஆட்சேபணையே இல்லைன் னுட்டார் பெரிய இடம். புடிச்சா புளியங்கொம்பாத்தான் புடிச்சிருக்கா என் பொண்ணு.''

''அவளா கடுதாசி எழுதினா? அவன்தானே எழுதியிருக்கான்?''

''காதல்ங்கறதுக்கு ரெண்டு ஆசாமி யோட கோ-ஆப்பரேஷன் வேணும். உனக்கெல்லாம் என்ன தெரியும்?''

''ஒருதலைக் காதல்னுகூட ஒண்ணு சொல்வா!''

''அட, எங்க படிச்ச?''

''எல்லாம் கன்னா பின்னா புஸ்த கத்தில தினந்தோறும் வரதே. இப்ப என்ன பண்ணனும்?''

''எம் பொண்ணு வந்ததும் நான் சமாளிக்கிறனே. லெட்ஸ் ஹாவ் ஸம் ஃபன்'' என்றேன்.

சாயங்காலம் இருட்டினதும் அண்ணன், தங்கை இருவரும் சினிமா பார்த்து விட்டு வந்தார்கள்.

''தேவிகா நில்லு'' என்றேன் சற்றுக் கடுமையாகவே முகத்தை வைத்துக் கொண்டு.

''என்னப்பா?''

''உங்கூடப் பேசணும்.''

''நானும் உண்டா?'' என்றான் ரமேஷ்.

''நீயும் இரு, உன் ஃப்ரண்டு ராதா கிருஷ்ணனைப் பற்றித்தான் இது.''

''என்ன?''

நான் தேவிகாவை முறைத்துப் பார்த்தேன். அவள் கண்களில் சந் தேகம் தெரிந்தது.

''என்னப்பா என்னமோ மாதிரி பார்க்கறிங்க?''

சட்டென்று அவள் கையைப் பற்றி, ''கை குடு'' என்று சொல்லிச் சிரித் தேன். மகேசுவரி! ஸ்வீட் கொண்டு வா.''

''என்னப்பா?''

''உனக்கு ராதாகிருஷ்ணன் எழுதின காதல் கடிதங்களையெல்லாம் அம்மா நேற்றுக் காலையில எங்கிட்ட காட்டினா. படிச்சதும் எனக்கு முதல்ல கோபம்தான் வந்தது. ஆனா அதை டிஸ்பாஷனேட்டா, ஒரு தகப்பன் போல இல்லாம ஒரு தனி மனிதனா அலசிப் பார்த்த போது எனக்கு இதில அநாவசியமாக் கோபப்பட வேண் டாம்னு தோணித்து. அதனால் உடனே ராதாகிருஷ்ணனோட அப்பாவைப் போய்ப் பார்த்தேன். ரிமார்க்கபிள் மேன். அவருக்கும் முதல்ல அதிரிச்சி யாகத்தான் இருந்தது. அதுக்கப்புறம் சம்மதிச்சுட்டார்!''

''எதுக்குப்பா?''

''அவர் பையனுக்கும், உனக்கும் கல் யாணத்துக்கு!''

தேவிகாவின் முகத்தில் முதலில் முறுவலை, சிரிப்பை, அதன்பின் வெடிச் சிரிப்பை... என்னை வந்து கட்டிக் கொள்வதை எதிர்பார்த்தேன். பதிலாக, ''அப்பா என்னப்பா செய் துட்டிங்க?'' என்றாள் அதிர்ச்சியுடன்.

''என்ன?''

''ஜு, நீ போ நான் சொல்றேன்'' என்றான் ரமேஷ்.

''என்னடா?'' என்றேன் புரியாமல்.

ரமேஷ், ''நீ போ ஜு! நான் அப்பா வோட பேசிக்கிறேன்!''

''இல்லை, நான் இருக்கேன்'' என் றாள் பிடிவாதமாக.

ரமேஷ் என்னைப் பார்த்து, ''அப்பா அவசரப்பட்டுட்டீங்க. ராதா கிருஷ்ணன் தேவிகாவைக் காதலிக் கலை!''

''யார் சொன்னா? படுக்கை அடியில் எத்தனை காதல் கடிதம் பார்த்தியா? என்னுயிரே, நேற்று உன்னை ஒரு முறை தொட்டேன்...'' என்று படித்துக் காட்டினேன்.

''எல்லாம் நான் வெச்சது.''

''என்னடா சொல்றே?''

''அப்பா, இந்தக் கடிதங்கள் எல் லாம் ராதா எனக்கு எழுதியது'' என் றான் ரமேஷ். ஷாக் உதறினது போல நான் பின்வாங்க

தேவிகா என்னையே பார்த்துக் கொண்டிருந்தவள், ''லைப்ங்கறது அத் தனை எளிதானதில்லைப்பா இந்த நாட்களில'' என்றாள். ○

தமிழ் நாட்டில் பிறந்த இசை முறைகள்

டி. எஸ். பார்த்தசாரதி

தென்னாட்டு இசைக்குக் கர்நாடக ஸங்கீதம் என்ற பெயர் அமைவதற்கு முன் தமிழ் நாட்டில் அது 'இசை' என்றே அழைக்கப்பட்டு வந்தது. சில நூல்களில் அது தேவாரப் பண் இசை என்றும் திவ்வியப் பிரபந்தப் பண் இசை என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்த இசை முறையில் இலக்கணம் பெருங் காப்பியமான சிலப்பதிகாரத்தில் மிகவும் விரிவாகக் கூறப் பட்டுள்ளது.

இதற்கு உரை எழுதிய அரும்பத உரை ஆசிரியர், அடியார்க்கு நல்லார் ஆகிய இருவரும் தமிழ் இசையைப் பற்றிப் பல அரிய உண்மைகளை விளக்கியுள்ளார்கள். பழந்தமிழர் மின்சாரக் கருவிகள் எதுவும் இல்லாமலே இசையின் பல கூறிய அம்சங்களைத் தமது நுண்ணறிவினால் தெளிவாக அறிந்திருந்தார்கள். ஸ ரி க ம ப த நி என்ற ஏழு சுரங்களுக்கும் குரல், துத்தம், கைக்கிளை, ஊழை, இளி, விளரி, தாரம் என்ற தமிழ்ப் பெயர்கள் இருந்தன. சுருதிபேதம் என்ற முறைப்படி ஒரு பாலையிலிருந்து வேறு பாலைகள் பிறக்கும் முறை **'இளிக்கிரமம்'** என்று குறிப்பிடப்படுகிறது.

ஆயினும் தேவார காலத்திற்கு முன்பு இசையுடன் இயற்றப்பட்ட பாடங்கள் எதுவும் நமக்குக் கிடைக்க வில்லை. நாயன்மார்கள் பாடிய தேவாரம், ஆழ்வார்கள் பாடிய திவ்வியபிரபந்தம் ஆகியவையே இந்தியாவிலேயே முதல் முதலாகப் பாடப்பட்ட இசை வடிவங்கள் ஆகும். அந்தக் காலத்தில் பாரத நாட்டின் மற்றப் பகுதிகளில் எந்த இசைமுறை வழக்கத்தில் இருந்தது என்பதற்கு ஒரு வித ஆதாரமும் இல்லை.

இசை வடிவங்களை இயற்றிய விஷயத்தில் நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் பலவித ஒற்றுமைகள் உண்டு. இவர்கள் பக்தியை உலகில் பரவச் செய்வதற்காகவே தோன்றிய அவதார புருஷர்கள் ஆவர். அவர்கள் காலம் முதல் தமிழ் நாட்டில் ஒரு சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. தமிழ் நாடு எங்கும் ஊர்தோறும் விளங்கிய கோயில்களுக்குச் சென்று பாடல்கள் புனைந்து வழிபாடு நடத்தினர். இசைப்பாடல்களாக இருந்ததால் நூற்றுக்கணக்கான மக்கள் கூட்டம் வழிபாட்டில் ஈடுபட இது உதவியது.

இரண்டாவதாக, இந்த அடியார்கள் அந்தக் காலத்தில் வழங்கி வந்த பண் இசையின் இலக்கணத்திலிருந்து சிறிதும் வழுவாமல் தமது பாடல்களை அமைத்ததால் அப்பண்களின் இசை வடிவங்களை நாம் இன்றும் காண முடிகிறது. நாயன்மார், ஆழ்வார்களுள் பலர் இசையிலும் வல்லுநர்களாக இருந்தார்கள் என்பது அவர்களுடைய வரலாறுகளிலிருந்து அறிகிறோம்.

உதாரணமாக, சிறுபிள்ளையாகிய ஞான சம்பந்தர் கைத் தாளம் போட்டுக் கொண்டு பாடியபொழுது சீர்காழியில் கோயில் கொண்ட சிவபெருமான் அவருக்குப் பொற்றாளம் வழங்கினார் என்று கூறப்படுகிறது. ஞான சம்பந்தர் பாடிய பொழுது அவருக்கு யாழில் பக்க வாத்தியம் வாசித்தவர் திரு நீலகண்ட யாழ்ப்பாணர் ஆவர். ஒரு முறை சம்பந்தர் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் ஒரு பதிகம் பாடிய பொழுது அதை யாழில் வாசிக்கமுடியாத யாழ்ப்பாணர் தமது கருவியை உடைக்கப் போன சமயம் சம்பந்தர் தடுத்து, ''அது உமது குற்றமல்ல, கருவியின் குற்றம். இறைவன் பெருமை கருவியில் அடங்குமோ?'' என்று ஆறுதல் கூறினார்.

இவ்விதமே பெரியாழ்வார், திருப்பாணாழ்வார் போன்ற பெரியாரும் இசைவாணர்களாக இருந்தனர். பின்னவர் வீணை வாசிக்கும் பாணர் வகுப்பைச் சேர்ந்தவர். தேவாரத்தில் 23 பண்களும் திவ்வியப் பிரபந்தத்தில் 32 பண்களும் காணப்படுகின்றன. பிற்காலத்தில் தேவார இசை சம்பந்தமாக ஆராய்ச்சி செய்த ஓதுவா மூர்த்திகளும் குடந்தை சுந்தரேசனார், டாக்டர் இராமநாதன் முதலிய அறிஞர்களும் பண்களுக்கு இணையான கர்நாடக ராகங்களைக் கண்டுபிடித்து நமக்கு வழங்கியுள்ளனர்.

நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் பொதுவாக உள்ள மற்றோர் அம்சம் அவர்களுடைய கவிதையின் சிறப்பாகும். ஞானசம்பந்தர் முதலியோர் சிறந்த் தமிழ்க் கவிகள் ஆவர். பின்னர் அருணகிரி நாதர் ஆகியோரால் கையாளப் பட்ட சந்தக்கவிக்கு ஆதிகர்த்தா சம்பந்தரே ஆவர். அப்பர் சுவாமிகளின் வாக்கின் இனிமைக்காகவே அவருக்குத் திரு + நாவு + கரசு என்ற பெயர் வழங்கப்பட்டது. மாணிக்க வாசகரும் ஒரு சிறந்த தமிழ்ப்புலவர். ''திரு வாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' என்பது பழமொழி.

ஆழ்வார்கள் அனைவருமே சங்க காலத்து இலக்கியங்களில் ஊறிய கவிகள் ஆவர். நம்மாழ்வார், பெரியாழ்வார்,



ஆண்டாள் முதலியோரின் கவிதை நெஞ்சை உருக்கும் பாமாலை ஆகும். திரு மங்கை ஆழ்வார் நாலு கவிப் பொரு மாள் என்ற விருது பெற்றவர். அவருடைய பாசுரங்கள் 'தமிழ் நன்னூல் துறைகள் ஐந்திற்கிலக்கணம்' என்று பறை சாற்றப்படுகின்றன. பத்தே பாடல்களை எழுதிப் புகழ் பெற்றவர் திருப்பாணாழ்வார். ஆகவே திருப்பள்ளி யெழுச்சி, பாவை, திரு விருத்தம், தாண்டகம் முதலிய பிர பந்த வகைகளில் ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகிய இரு வருமே பாமாலை பாடியிருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை யல்லவா?

மற்றொரு விதத்திலும் ஒரு ஒற்றுமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. ஆழ்வார், நாயன்மார் காலத்திற்குப் பிறகு சில காலத்திற்குப் பிரபந்தமும், தேவாரமும் மறைந்து போய் நாத முனிகள், நம்பியாண்டார் நம்பி ஆகிய இரு பெரியோர் களால் அவை மீட்கப்பட்டன என்பது ருசிகரமான ஒரு வர லாறு. இவற்றுள் முதலில் மீட்கப்பட்டது திவ்வியப் பிரபந்தம் ஆகும். ஒன்பதாம் நூற்றாண்டில் காட்டு மன்னார் கோயிலில் வாழ்ந்து வந்த நாதமுனி என்ற வைணவப் பெரியார் ஒரு சமயம், 'ஆராவமுதே' என்று தொடங்கும் பாசுரத்தைக் கேட்க நேர்ந்தது. அதன் இறுதியில், 'குரு கூர்ச் சடகோபன்



சொன்ன ஆயிரத்துள் இப்பத்தும்' என்று வருவதைக் கவனித்த நாதமுனிகள் நம்மாழ்வார் இயற்றிய பாடல்கள் ஆயிரம் என்று ஊகித்துக் கொண்டார். உடனே அவர் நம் மாழ்வார் பிறந்த குரு கூருக்குச் சென்று மதுரகவிகளின் சிஷ்யரான பராங்குச தாசரை அணுகினார். அவருடைய உப தேசப்படி நம்மாழ்வாரை உபாசனை செய்து பாடல்களைப் பெற்றுத் திரும்பினார் என்று குருபரம்பரா பிரபாவம் கூறு கிறது.

வட மொழியில் பல நூல்களை இயற்றிய நாதமுனி இசை யிலும் வல்லவராக இருந்தார். அந்தக் காலத்தில் தமிழ் நாட் டில் தேவகானம், மனுஷ்யகானம் என்ற இரு இசை முறை கள் இருந்ததாக அறிகிறோம். இது சம்பந்தமாக அச்சமயம் கங்கை கொண்ட சோழ புரத்தில் அரசு புரிந்து வந்த சோழ மன்னனுக்கு ஐயம் ஏற்பட்ட பொழுது மன்னன் நாதமுனி களை வரவழைத்து விளக்கம் தருமாறு வேண்டினான். கூரிய இசையறிவு படைத்திருந்த நாதமுனிகள் இரு இசைமுறை களையும், கேட்டு, தேவகானமே சிறந்தது என்று தீர்ப்பு அளித்தனராம். தமது அறிவைப் பற்றி மன்னனுக்கு எழுந்த சந்தேகத்தைப் போக்குவதற்காக இப் பெரியார் பல வெண் கலத்தாளங்களை ஒலிக்கச் செய்து அவற்றின் ஓசையைக் கொண்டே தாளங்களின் எடையை இம்மியளவு பிசகாமல் கூறினார்.

பின்னர் இப்பெரியார் தமது மருமக்களான கீழை அகத் தாழ்வார், மேலை அகத்தாழ்வார் என்ற இருவரது உதவி யுடன் தாம் சேகரித்த பாசுரங்களுக்குப் பண் முறைப்படி இசை அமைத்து உலகிற்கு வழங்கினார். தேவாரம், பிரபந்தம் ஆகியவற்றைத் தாளமில்லாமல் பாடுவதை 'சுத்தாங்கம்' என் றும், தாளத்துடன் பாடுவதைத் 'தாளங்கம்' என்றும் இசை யறிஞர் கூறுவர். நாதமுனிகள் அமைத்த இசை தாளத்துடன் கூடியது. இந்த மாபெரும் தொண்டிற்காக அவரை வேதாந்த தேசிகர் என்ற மற்றொரு பெரியார் "தாளம் வழங்கித் தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளல்' என்று போற்றுகிறார்.

நாதமுனிகளின் இரு மருமக்களும் தங்களுடைய இனிய கானத்தினால் திருவரங்க நாதனைத் துதித்துப் பாடவும், இறைவன் மனம் குளிர்ந்து அவர்களுக்கு 'மணவாளப் பெரு மாள் அரையர்', 'நாத விநோத அரையர்' ஆகிய பட்டங்களை அருளியதாக 'கோயில் ஒழுகு' என்ற வைணவ நூல் கூறு கிறது. வைணவக் கோயில்களில் திருவாய்மொழிக்குத் தாளத் துடன் அபிநயம் பிடிப்பவர்களுக்கு அரையர்கள் என்று பெயர். இவர்கள் இன்றும் ஸ்ரீ ரங்கம், ஆழ்வார் திருநகர், ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆகிய தலங்களில் தங்களுடைய சேவையைப் புரிந்து வருவதைக் காணலாம். ஸ்ரீ மந் நாதமுனிகள் அமைத்த ஏற்பாடு 1100 ஆண்டுகளுக்குப் பின்னரும் ஆலயங்களில் நடந்து வருவது அவருடைய பெருமைக்குச் சான்றல்லவா?

பரதமுனிவரின் நாட்டிய சாஸ்தீரத்தில் கூறப்பட்டுள்ள அபிநய இலக்கணத்திலிருந்து சிறிதும் வழுவாமல் அரையர் கள் நடனம் புரிந்தார்கள் என்று கூறினால் நாட்டியம் புரி வோர் பலருக்கு விந்தையாக இருக்கலாம். இராமானுசர் போன்ற ஆசாரியர்கள் அரையர்களின் அபிநயத்தில் மிகுந்த அக்கறை செலுத்தி வந்தனர் என்பதற்கு வியாக்கியானத்தில் மேற்கோள்கள் உள்ளன. ஒரு முறை அரையர் ஒருவர் "என்னை வருக' என்ற பாசுரத்திற்கு அபிநயம் பிடித்த பொழுது, 'என் சினம் தீர்வன் நானே' என்ற இடத்தில் தவறாக அபிநயம் பிடித்த பொழுது எம்பார் என்ற ஆசாரி யன் அவரைத் திருத்தினார் என்று வியாக்கியானம் கூறுகிறது.

திவ்வியப் பிரபந்தம் மக்களால் மறக்கப்பட்டது போலவே தேவாரமும் மறக்கப்பட்டது, வியப்பையூட்டும் ஒரு சம்பவமாகும். பல்லவ மன்னர்களின் காலத்தில் தேவாரப் பதிகங்கள் ஏராளமாகக் குவிந்து விட்டன. ஆயினும் முத லாவது ராஜராஜ சோழனின் காலத்தில்தான் அவை சிதம் பரம் நடராஜப் பெருமானின் கோயிலிலுள்ள ஓர் அறையிலி ருந்து வெளியே எடுக்கப்பட்டு நம்பியாண்டார் நம்பி என்ற பெரியோரால் சேகரிக்கப்பட்டன.

திருவாழ்மொழிக்கு நாதமுனிகள் புரிந்த தொண்டை நம்பியாண்டார் நம்பி தேவாரத்திற்குப் புரிந்தார். பதிகங்

களின் இசைகளும் மறக்கப்பட்டிருந்ததால், நம்பியாண்டார் நம்பி திரு வெருக்கத் தம்புலியூரில் இருந்தவரும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்தவருமான ஓர் அம்மையாரின் உதவியால் கிடைத்த பண்ணிற்கு இசை வகுத்தார். பல சுவடி கள் கறையானுக்கு இரையாகி இருந்தன என்று குறிப்புகள் கூறுகின்றன.

நம்பியாண்டார் நம்பி அமைத்த இசையுடன் தேவாரப் பதிகங்களைச் சிவாலயங்களில் ஓதுவார்களைக் கொண்டு நிரந்தரமாகப் பாடச் செய்வதற்கு சோழ மன்னர்களின் காலத்தில் மானியங்கள் விடப்பட்டன. கல்வெட்டுக்களில் இவை 'திருப்பதிகம்' என்றே குறிப்பிடப்படுகின்றன. ஓது வார்களின் பெயர்களும் அவர்களுக்கு அளிக்கப்பெற்ற மானியங்களின் விவரங்களும் கூட சாசனங்களில் தரப்பட் டுள்ளன. இத்தகைய ஓர் ஏற்பாடு வைணவ ஆலயங்களில் இருந்ததாகத் தெரியவில்லை. கோயில்களுக்கு வரும் வைணவப் பெரியோர் வடமொழி வேத பாராயணத்துடன் சேர்ந்தே பிரபந்தம் சேவிப்பது வழக்கம். இதற்கு அனாயர்கள் மாத்திரமே விதிவிலக்கு.

தேவார இசைக்கும் திவ்விய பிரபந்த இசைக்கும் மற் றொரு முக்கியமான ஒற்றுமையுமுண்டு. இரு இசைமுறைகளி லுமே பாடல்களின் கருத்திற்கு ஏற்றவாறு பண்கள் அமைக் கப்பட்டுள்ளன. உதாரணமாக, திருத்தாண்டகம் அரிசுரம் பொதியிலும், திரு நேரிசை நபரோசியலும், திரு விருத்தம் பைரவியிலும், பாடுவது மரபு. சம்பந்தரின் மேகராகக் குறிஞ்சிப் பாடல்கள் நீலாம்பரியிலும், சுந்தரரின் தக்கேசிப் பாடல்கள் காம்போதியிலும் பாடுகிறார்கள். அப்பரின் திருக்குறுந்தொகையில் உள்ள பாடல்கள் லயத்துடன் மாளவ கௌளையில் பாடப்படுகின்றன. மேலும், பகற்பண், இரவுப் பண், பொதுப் பண் என்ற மரபும் இருந்து வந்தது.

இவ்விதமே திவ்வியப்பிரபந்தத்தில் திருப்பல்லாண்டிற்கு நாட்டையும், திருப்பள்ளி எழுச்சிக்குப் பூபாளமும், தாலாட்டுப் பாடல்களுக்கு நீலாம்பரியும் பொருத்தமாக அமைக்கப்பட்டுள்ளன.

பிற்காலத்தில் இசை அறிஞர் புரிந்த ஆராய்ச்சியின் பயனாக நமக்குப் பல அரிய விஷயங்கள் கிடைத்துள்ளன. பாலையாழ் அரிகாம்போதியின் சுரங்களை உடைய தென்றும், நைவளமும் நட்டபாடையும் ஒன்றே என்றும், அந் தாளி சாமா ராகம் என்றும் நிச்சயமாகக் கூறலாம். தோடி ஒரு பண் அல்லவெனினும் செவ்வழிப் பாலையின் சுரங்களிலி ருந்து அது பிறக்கிறது. தக்கேசிப் பண் காம்போதியே என்றும் உறுதியாகிறது. படுமலைப்பாலை கல்யாணி ஆகிறது. கம்ப ராமாயணம் முதலிய காப்பியங்களில் பண்களைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. உதாரணமாக:

''நைவளம் நவிற்று மொழி நண்ணவரலோடும்
வையம் நுகர் கொற்றவனும் மாதவரும் அல்லார்
கைகள் தலை புக்கன: கருத்துளவை எல்லாம்
தெய்வம் என உற்ற உடல் சிந்தை வசம் என்றோ''
(கம்பராமாயணம்)

கி.பி. 1865-ம் ஆண்டில் அச்சிடப் பெற்ற பதிப்பு முதல் பல திவ்விய பிரபந்த பதிப்புக்களில் பண்கள் கிடைக்கின்றன. தமிழ் இசைச் சங்கத்துப் பண் ஆராய்ச்சினால் கிடைத்த ஒளியைக் கொண்டு பிரபந்தப் பண்களையும் ஆராயலாம்.

ஆகவே சோழ மன்னர்களில் காலத்துக்குப் பிறகு தமிழ் நாட்டில் விஜயநகர சாம்ராஜ்ய ஆட்சியும் அதன் பின் மராட் டியர்களின் ஆட்சியும் தோன்றி அந்தப் பாதிப்புகளின் மூலம் கர்நாடக இசை உருவாகிய போதிலும், அதற்கு அடிப் படையை நாம் தேவார இசையில்தான் காணமுடிகிறது. 'ஸங்கீத ரத்நாகரம்' இயற்றிய சார்ங்கதேவரே சில ராகங் களை, ''தேவார வர்த்தனை'' என்று குறிப்பிடுகிறார். தென் னிந்திய இசைக்குத் தமிழ் நாட்டில் பிந்த பண் இசையே அஸ் திவாரம் என்பதை நினைத்துப் பெருமைப்படாத தமிழனும் உண்டோ?

கல்லிலும் ஈரம்

லட்சுமி ராஜரத்னம்

வானத்து நிலவு வையத்தோடு உற வாட விழைந்த முன்னிரவு நேரம். இரவின் போர்வையை விலக்கிய ஒளி வெள்ளத்தின் நிழலோவியங்கள் என இரண்டு புரவிகள் ஓடி வருகின்றன. தக்காணத்திலிருந்து தளராமல் வேகமாக ஓடிவரும் அப்புரவிகள் கூடத் தமது தலைவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். புரவிகள் ஆக்ராவை நோக்கித்தான் விரைந்து கொண்டிருந்தன.

ஒன்றில் இளவரசன் முஹையத்தின் ஒளரங்கசீப் அமர்ந்து வந்தான். இன்னொன்றில் உற்ற நண்பனான ஜகத்சிங் அமர்ந்து வந்தார். உற்ற நண்பன் என்றாலும் வயதில் கொஞ்சம் பெரியவர். தமது அநுபவத்தின் காரணமாக அவர் மௌனமாகவே பயணப்பட்டார். இளவரசனின் இரசனையற்ற குணத்தை அறியாதவரா? நிலவும், வானும் உறவாடி அருவியில் வெள்ளிப் பாய் போடும் விந்தையை அவர் மனம் மட்டும் ரசித்துக் கொண்டிருந்தது.

''ஜகத்சிங், எனது தமக்கை பிழைத்துக் கொள்வாள் இல்லையா?'' என்று கேட்டான் இளவரசன் ஒளரங்கசீப்.

''அல்லாஹ் கைவிடமாட்டார் இளவரசே. இளவரசியார் ஜகனாரா பேகம் கண்டிப்பாகப் பிழைத்துக் கொள்வார்.''

''என் தந்தையார் ஷாஜஹான் பாதுஷாவிடமிருந்து ஓலை வந்ததிலிருந்து என் மனம் அமைதி இழந்து விட்டது. ஜகனாரா பேகம் தீ விபத்து ஒன்றில் சிக்கி நோயுற்றுக் கிடக்கிறாள் என்பதை அறிந்ததிலிருந்து...''

ஒளரங்கசீப்பின் இரும்பு மனம் கூட சற்று கசிந்தது. ''இளவரசரின் கவலை ஆக்ரா அடைந்ததும் வீணானதாக ஆகி விடும் பாருங்களேன். இளவரசி, இளவரசரைக் கண்டதும் கரை காணாத அன்பு கொண்டு எழுந்து விடுவார்'' என்று ஜகத்சிங் அமைதிபடுத்தினார்.

புரவிகள் ஆக்ராவை நெருங்க நெருங்க நகரமெங்கும் தீப ஒளிகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. மாமன்னன் ஷாஜஹான் தமது பேகத்தின் நினைவாலயமாக எழுப்பும் மும்தாஜ்மஹால் பல்லாயிரக் கணக்கானவர்களின் உழைப்பினால் எழும்பிக் கொண்டிருந்தது.

''இளவரசர் ஒளரங்கசீப் நேராகப் பாதுஷாவைக் காணத் தானே போகிறார்?''

''இல்லை; எனது சகோதரியைக் காணப் போகிறேன். பாதுஷாவைக் காணவா இங்கு வந்தேன்? ஜகத்சிங், சதுரங்கச் சூதாட்டத்தில் வெட்டப்பட்டு வெட்டப்பட்டு உயிர் பெற்று எழும் காய் இந்த ஒளரங்கசீப். எனக்கு உற்ற துணை எனது வாளும், எனது மூளையும்தான். பாதுஷாவின் கண்களுக்கு நான் சுண்ணாம்பு. எனது சகோதரன் தாரா தான் வெண்ணெய்.''

''இளவரசர் மனம் தளரக் கூடாது.''

''இந்த ஒளரங்கசீப் மனம் தளர்ந்ததாக யார் சொன்னார்கள் ஜகத்சிங், ஆனால் கலை கலை என்ற பெயரில் பாதுஷாவின் மனத்தைக் கவர்வதில் தாரா ஷூக்கோ வல்லவர்.''

''தாங்கள் கலைகளுக்கு எதிரி இல்லையே!''

''கண்டிப்பாக ரசிகன் இல்லை ஜகத்சிங்.''

''தாங்கள் அரசியல் ஈடுபாடு உடையவர். மதக் கோட்பாடுகளைக் கண்டிப்பாக கடைப்பிடிப்பவர்''

''உண்மைதான், எனக்குத் தாராவைப் போல் கலைகளைக் காட்டிப் பாதுஷாவை கவரத் தெரியாது.''

அரண்மனை வந்து விட்டதால் அவர்களின் பேச்சு நின்றது, என்றாலும் ''இப்பொழுது போய்ப் பார்த்தாலும் தாரா எனது தந்தையார் கட்டும் இந்த மும்தாஜ் மஹாலில் தான் சலவைக் கற்களுடன் நின்று கொண்டிருப்பான். நான் சொன்னது பொய் இல்லை ஜகத்சிங். சென்று பார்த்து தாங்கள் நிரூபித்துக் கொள்ளலாம்'' என்று ஜகத்சிங்கை நிறுத்திக் கூறிய ஒளரங்கசீப் நடை அதிர தன் தமக்கையைக் காணச் சென்றான்.

சற்றே உடல் தேறியுள்ள தமது சகோதரி உறங்கி விட்டதை அறிந்து தொந்தரவு செய்ய மனமின்றி ஒளரங்கசீப் ஓய்வெடுக்கச் சென்று விட்டான்.

சூரஜ் என்று ஹிந்தியில் பெருமை படுத்தப்படும் சூரியன் யமுனை நதியைப் பொன்னாக்கிக் கொண்டு எழுந்து வந்தான். நிலாமுற்றத்து உப்பரிகையில் நின்று சிந்தித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான் ஒளரங்கசீப்.

''இளவரசர், ஆதவனை ரசித்துக் கொண்டு நிற்கிறாரோ?'' என்ற இனிய குரலைக் கேட்டுச் சட்டென்று திரும்பினான்.

நதியின் விளிம்பைப் பிளந்து கொண்டு எழும் சூரியன், மெல்லிய துகிலால் முக்காடு போட்டுத் தன்னை மறைத்துக் கொண்டு நிற்கிறதோ என்று ஐயுறும்படி நின்ற பெண்ணை நகைப்புடன் பார்த்தான் ஒளரங்கசீப்.

''என்ன சொன்னாய் பெண்ணே?''

'' 'ஆதவனை ரசிக்கிறீர்களோ?' என்று கேட்டேன்.'' பயத்துடன் மருண்டு பார்த்துத் தலை குனிந்தாள் அவள்.

''ஆற்றில் நீர் வருவதும், ஆதவன் அதிகாலைப் பொழுது உதிப்பதும் இயற்கையின் நியதி. அகில உலகங்களையும் ஆட்டிப் படைக்கும் ஆண்டவன், அன்றாடக் கடமைகளை எப்படி நிறைவேற்றுகிறான் என்பதை இவற்றின் மூலம் பாடம் கற்பிக்கிறான். நமக்கு அது புரியவில்லை. ரசித்துக் கொண்டும், பிதற்றிக் கொண்டும் நிற்கிறோம். ரசிப்பதற்கு இதில் என்ன இருக்கிறது?''

''.........

''ஏன் பெண்ணே மௌனமாகி விட்டாய்''

''பேசப் பயமாக உள்ளது.''

யமுனை நதியே குலுங்குவது போல நகைத்தான் ஒளரங்கசீப்.

''நானென்ன புலியா, சிங்கமா?''

''இல்லை; அதைவிடப் பயங்கரமானவர். இரும்பு மனம் படைத்தவர்.''

''இப்படிச் சொன்னவர் யார்?''

''தங்கள் சகோதரியார் இளவரசி ஜகானாரா பேகம்.''

''உன் பெயர் என்ன?''

''ஸலீமா.''

''உம்'' என்று உறுமினான் ஒளரங்கசீப்.

பெயர் அழகாக இருக்கிறது என்று கூறுவான் என்று எதிர்பார்த்த அவளின் முகம் வாடிப் போயிற்று.

''எதற்காக இங்கே வந்தாய்?''

''தங்களை இளவரசி பேகம் அழைத்து வரச்சொன்னார்.''

''நான் வந்தது பேகத்திற்கு எப்படித் தெரியும்?''

''நான்தான் சொன்னேன்.''

''ஒற்றுவேலையை நன்கு கற்றிருக் கிறாய்.''

''அந்தப்புரத்து ஆரணங்கும் அமை தியாய் இருக்க முடியாது, அரண்மனை வாழ்வில். இன்னும் சில தினங்களில் தாங்களை ஒரு பேரிடிச் செய்தி தாக்கும் இளவரசே. சமாளித்துக் கொள்வது தங்கள் சாமர்த்தியம்'' என்றவள், கல் கல்லென்று காலணி ஒலிக்க நடந்தாள்.

'அவள் வரும்பொழுது ஏன் இந்த காலணி தன்னைக் கவரவில்லை?' என்று யோசித்தபடி ஔரங்கசீப் தன் மூத்த சகோதரியைக் காணப் போனான்.

மூன்று மாதங்கள் விரைந்து ஓடி யதே தெரியவில்லை. தக்காணம் செல்ல வேண்டும் என்று தன் சகோதரியிடம் கூறினான் ஔரங்கசீப். ஜஹானாரா சிரித்தாள்.

''என்ன சிரிக்கிறாய் தீதீ?''

''உன் வீரத்தை நினைத்தேன், சிரிப்பு வந்தது''

''என் வீரம்... என்ன குறைச்சல் கண்டாய் தீதீ?''

''பாதுஷா ஹாஜஹானின் வீரப் புதல்வர்களின் வீரத்தில் சந்தேகம் ஏதாவது உண்டா. முஹைதீன், இது ஒரு மகிழ்ச்சிச் சிரிப்பு. ஒரு சமயம் அரசப் பேரவையில் யானையின் களியாட்டங் களைக் கண்டு கொண்டிருந்தோம்.''

சகோதரனும், சகோதரியும் பேசிக் கொண்டு அமர்ந்திருந்த இந்தச் சமயம் களுக்கென்ற ஒற்றைச் சிரிப்பு ஒன்று வெடித்து வந்தது. ஜஹானாரா பேகம் திரும்பிப் பார்த்தாள். வெண்முத்துப் பற்கள் ஒளியிடச் சிரித்தபடி நின்றாள் ஸலீமா.

''ஏய்... என்ன சிரிப்பு?''

''ஒன்றுமில்லை இளவரசி. இளவர சர் யானையின் களியாட்டங்களை ரசித்தாரா என்று யோசித்தேன். சிரிப்பு வந்தது''

''மாவீரனுக்கு அழகு வீரத்தை ரசிப் பது. நீ நினைப்பது போல் வானையும், மண்ணையும், நீரையும், பூவையும் ரசிப் பது அல்ல. புரிந்ததா! தீதீ, இந்தப் பெண்ணின் துடுக்குத்தனத்தை அடக் கும் வீரன் ஒருவனைப் பார்த்து மணம் செய்துவை'' என்று சினந்தவனைப் போல் கூறிவிட்டு வெளியேற எண்ணி எழுந்தான் ஔரங்கசீப்.

''இளவரசே, அவ்வளவு சீக்கிரம் எழ வேண்டாம்.''

''ஏன் உன்னுடைய நிக்காஹ் இப் பொழுதே நடைபெறப் போகிறதா?''

''இல்லை... என்னுடைய திருமணம் நிச்சயம் ஒரு சுத்த வீரனுடன் தான் நடைபெறும். பாதுஷா தங்களுக்குச் சேதி சொல்லி அனுப்பியிருக்கிறார். தூதுவர்கள் வருகிறார்கள்.''

சேதியுடன் வந்த தூதுவர்கள் சொன்ன சேதியோ... தக்காணத்தின் பொறுப்பை நிர்வகித்து வந்த ஔரங்க சீப்பைப் பாதுஷா பொறுப்பிலிருந்து நீக்கி விட்டார். 'இதற்குக் காரணம் என்ன? இதற்குக் காரணம் என்ன?' ஔரங்கசீப்பின் மனம் அலறியது.

எட்டு மாதங்கள் எப்படி ஓடின என்றே தெரியவில்லை. ஔரங்கசீப் ராஜ்ய விவகாரங்களிலிருந்து ஒதுங்கி இருந்தார் என்றாலும் மனம் அமைதி இல்லாமல் தவித்தது. இளவரசி ஜஹானாரா பேகம் தன் இளவலின் மனக் கலக்கத்தை அறிந்து பாதுஷா விடம் பேசுவதாக வாக்களித்தாள். அத னால் ஏற்பட்ட சிறிய நிம்மதியுடன் நந்த வனத்தில் உலாவ வந்தான்.

மோகன நிலா மெல்லத் திரை விலக்கி வானின் தடத்தில் பவனி வந்து கொண்டிருந்தது. நந்தவனத்தின் நுழை வாயில் ஔரங்கசீப் நுழையும்பொழுது சன்ன இசை நெஞ்சை வருடும் வகையில் காற்றில் கரைந்து வந்தது. இதெல்லாம் ஔரங்கசீப்பைக் கவருமா என்ன? மோதும் மன எழுச்சிக்கு எந்தப் பாதை யைக் காட்டுவது என்ற திண்றலில் இருக்கும்பொழுது...

தான்சேனின் மால்கோஷா மனத்தை அசைக்கப் போகிறது?

''ஸலீமா, நீ இசைக்கும் இந்தத் தான் சேனின் பாடல் என்னை எப்படிக் கவர்ந்து வி[illegible] தெரியு[illegible]''

''அப்படியா தாரா சாஹேப்... பாதுஷாவின் மனம் கவர்ந்த தாங்களை

எனது பாடல் கவர்ந்து விட்டது என்றால்... இந்தப் பேதை அடிமைப் பெண் செய்த பாக்கியமே... பாக்கியம்....''

''அரிய கலை யாரிடமிருந்தாலும் ஆராதிப்பது எனது வழக்கம் ஸலீமா.''

''மெத்த மகிழ்ச்சி இளவரசே... அதனால்தான் அரிய பதவிக்கும் ஆசைப் படுகிறீர்கள்''

''அரச குமாரன் நான். அரியணைக்கப் போட்டியிடுவது தவறா?''

''தவறென்று நான் சொல்லவில்லையே பிரபோ.''

''எனது சகோதரர்கள் மூவரும் என்னுடன் போட்டியிடுவது தவறல்லவா?''

''எந்த வகையிலும் நியாயமில்லை''

''உனக்குத் தெரிந்த நியாயங்கள் அவர்களுக்குத் தெரியவில்லை பார்''

''நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறாய். ஸலீமா நீ மட்டும் அரச குடும்பத்தில் பிறந்திருந்தால் அரியாசனம் ஏறியிருப்பாய்.''

''இப்பொழுது மட்டும் என்ன? இளவரசர் தமது மனத்தில் சரியாசனம் தரமாட்டாரா?''

''இளவரசர் என்று யாரைக் குறிப்பிடுகிறாய்? என்னையா? இல்லை ஔரங்கசீப்பையா? இல்லை, எனது மற்ற இரு சகோதரர்களையா?''

''இளவரசர் ஏன் இன்னும் புரிந்து கொள்ளவில்லை? ஔரங்கசீப் இளவரசர் ஒரு கல் பாறை. அவர் மனத்தில் சிறிதாவது ரசிகத்தனம் இருந்தால் பாதுஷா கட்டும் மும்தாஜ்மஹாலைப் பார்க்க வராமல் இருப்பாரா? தாங்கள் தான் இளவரசே, இந்த நாட்டை ஆளத் தக்கவர்.''

தாராவின் நீண்ட கூர்மையான கண்ணிமைகள் மகிழ்ச்சியினால் விரிந்தன.

''இந்தா, இந்த நவரத்ன மாலை... எடுத்துக் கொள் எனது பரிசாக, உனது வெண்மையான கழுத்தில் தவழட்டும் எனது மாலை.''

''நன்றி சாப்...''

''இதற்கு நன்றி தேவையில்லை. உன்னை நான் அயல் நாட்டிலிருந்து அடிமையாக விலைக்கு வாங்கி வந்தேன்.''

''அதை நான் அறிவேன் சாப்.''

''ஆனால் நீ ஔரங்கசீப்பிடம் நெருங்கி உறவாட விழைகிறாய். இது எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை.''

''அப்படியா இளவரசே! ஔரங்கசீப்பை நான் மதிக்கிறேன் - தங்களுக்கு இளையவர் என்பதால். அதற்குப் பிறகு பெரிதும் மதிக்கிறேன் - அவர் கடவுள் வழிபாட்டைக் கைவிடுவதில்லை என்பதால். அதற்குப் பிறகு இன்னும் பெரிதாக மதிக்கிறேன் - அவர் நியாயமற்ற செயல்களைப் புரிவதில்லை என்பதால். அதற்குப் பிறகு இன்னும் இன்னும் மதிக்கிறேன் - அவர் யாரையும் அநாவசியமாக, கொல்லுவதில்லை. அவர் கடவுளுக்குப் பயப்படுபவர்.''

''போதும் நிறுத்து, அவன் புகழ் மாலையை. அவன் எதையும் ரசிக்கத் தெரியாதவன்.''

''அவர் யாருக்கும் தீங்கு செய்வதில்லையே?''

''நீ இப்படிப் பேசுவதினால் எனக்குத் தீங்கு செய்கிறாய்.''

''இளவரசே!''

''இப்படி வா என் அருகில். நான் சொல்லுவதைக் கவனமாகக் கேட்டுக் கொள்.''

இளவரசன் தாரா கூறுவதைக் கேட்கக் கேட்க ஸலீமாவின் முகம் இருண்டது. அதைப் பற்றிக் கவலைப் படாத தாரா விர்ரென்று வந்த வழியே கிளம்பிப் போனான். தளர்ந்த நடையுடன் ஸலீமா நந்தவனத்தை விட்டு வெளியேறினாள். நந்தவன நுழை வாயிலின் பந்தல் மறைவில் ஔரங்கசீப் நிற்பதை அவள் கவனிக்கவில்லை.

''உதய்புரி'' கனத்த குரலில் ஔரங்கசீப் அழைப்பதைக் கேட்டு நின்று விட்டாள் ஸலீமா.

அது ஔரங்கசீப்பின் குரல் என்பதை அறியாதவளா?

''திடுக்கிட்டு நின்று விட்டால் உண்மைகள் மறைந்து விடுமா?''

மெல்ல அடியெடுத்து அவன் அருகில் வந்து நின்றாள். வண்ணத் துகில் அணிந்தவனின் கண்ணிமைகள் வீங்கிக் கிடந்தன.

''பாதுஷாவின் அருமைக் குமாரன். பாதுஷா தனது வாரிசாக நியமித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படிப் பட்டவன் உன்னிடம் அடி பணிந்து நிற்கையில் விழிசிவக்க அழுவானேன்? கன்னத்துச் சிவப்பை அவனிடம் காட்டி விட்டு, வேதனையான கண்களின் சிவப்பை என்னிடம் காட்டுகிறாய். இந்த ஔரங்கசீப் நினைத்தால்...'' பெருமூச்சிறைக்க சொல்லாமல் நிறுத்தினான் ஔரங்கசீப்.

''பேதையான என்னைக் கொன்று விடலாம்.''

''இல்லை, கொல்லப் போவதில்லை.''

''தயவு காட்டுகிறீர்களா சாப்.''

''தயவு இல்லை, அநாவசியமாக ஔரங்கசீப் ஓர் உயிரையும் அழிக்க மாட்டான் என்ற உன் நம்பிக்கையை அழிக்காமல் இருக்க...''

''நன்றி பிரபோ''

''என்றோ நீ தாராவினால் அடிமையாக விலைக்கு வாங்கப்பட்டவள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் ஸலீமா என்று என்னிடமே நடித்தாய். இந்த இஸ்லாமிய நாட்டில் கண்ணிமைக்காமல் நடப்பவன் ஒருவன் உண்டென்றால் அது இந்த ஔரங்கசீப் தான்.''

''அதைப் பொய்யாக்கிக் காட்டுகிறேன். இளவரசே!''

''எப்படி.... ம்... எப்படி என்று கேட்கிறேன்.''

''தாங்கள் என்னுடன் வருகிறீர்கள்.''

''எங்கே என்று சொல்.''

''சொன்னால் தான் வருவீர்களா?''

''இந்த ஔரங்கசீப் நீ பாடும் தான்சேனின் இசையல்ல, இஷ்டப்படி குரலை வளைத்து இசைக்க.''

''இளவரசே, தாமதியாமல் தாங்கள் என்னுடன் வரவேண்டும்.''

''வரமறுத்தால்...?''

''தாங்கள் இங்கேயே என்னைக் கொன்று போட்டு விடுங்கள்.''

''பெண்களைக் கொல்லுவது சுத்த வீரத்திற்கு அழகல்ல. ஏதோ ஒன்று என் மனத்தினுள் உன் சொல்லை கேட்டு நட என்று உத்தரவு இடுகிறது. அது அல்லாவின் கட்டளை என மதித்து வருகிறேன். ஆனால் எனக்கு எதிராகச் சூழ்ச்சி ஏதாவது நடந்தால்... நான் என் வாளுக்கு வேலை வைத்து விடுவேன். உன் வாழ்வுக்கு முடிவை தந்து விடுவேன்.''

''இப்பொழுது நான் தங்கள் வாழ்வுக்கு முடிவைத் தருபவளாக ஆகக் கூடாது என்று அஞ்சுகிறேன் சாப்.''

பல குறுக்கு வழிகளில் நடந்து நடந்து இளவரசனை அழைத்துச் சென்றாள் ஸலீமா.

''பாதுஷா என்னைத் தேடுவதாகச் சொன்னாயே?''

ஆக்ராவின் ஒதுக்குப் புறமான இடத்தில் இருந்தது ஸலீமாவின் இல்லம். அது ஒரு சிறு மாளிகை போலத் தான் இருந்தது. சற்று உயரமான இடத்தில் இருந்ததால் நகரம் பூராவும் நன்றாகவே தெரிந்தது.

''பாதுஷா இங்கேயா இருக்கிறார்?'' என்று வற்புறுத்தலாகக் கேட்டான் இளவரசன்.

''இளவரசே, நடப்பதைப் பற்றி எதுவும் கேட்கக் கூடாது. இன்றிரவு இங்கேயே தாங்கள் தங்கவேண்டும். தங்கியிருப்பதாக எனக்கு வாக்கு தர வேண்டும்.''

''எனக்கு உன் எண்ணம் புரிகிறது. ஸலீமா, எனக்கு மணமாகி விட்டது. அழகான கட்டிளம் பெண் காதற் களத்தில் களித்துத் திளைக்க துணை வருகிறாள்.''

''ம்...'' என்று சிரித்த ஸலீமா, ''காதற்களத்தில் துணைவியுடன் தான் களிக்க வேண்டும் என்ற சித்தாந்தம் எங்கே எழுதி இருக்கிறது. இளவரசே! அரண்மனை வாசிகளுக்கு அது

பொறுத்தமற்றது'' என்று எனக்கும் தெரியும். இங்கே காதலிக்க தாங்கள் வரவில்லை. ஆபத்திலிருந்து தப்ப தங்களை அழைத்து வந்திருக்கிறேன். என் அழகு தங்களை அழைத்து வரவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அதோ தங்கள் திரும்பி மேற்குத் திசையைப் பாருங்கள்''

''ஏன்? 'அந்தியழகு அங்கே அஸ்தமிக்கிறது' என்று கவிதை எழுதி, உன் ஆசை நாயகன் தாராவிடம் காட்டப் போகிறாயா?''

''அடிமைப் பெண்தானே என்று எதையோ பேசுகிறீர்கள் சாப். அதோ பாருங்கள். அந்தி சூரியன் அஸ்தமிக்கவில்லை. தங்கள் மாளிகை எரிகிறது. தாங்கள் அதில் பொசுங்கி விட்டீர்கள் என்று சூழ்ச்சியாளர்கள் கரம் கொட்டி மகிழ்வார்கள்.''

பலகணி வழியே பார்த்தான் ஔரங்கசீப். வானத்தை எட்டும் கரிய புகை மேகத்தைத் தழுவ ஓடிக் கொண்டிருந்தது.

''பெண்ணே, அபாயம் சூழ்ந்த இந்நிலையில் என்னை இங்கு கொண்டு வந்து விட்டாயே? இது நியாயமா?''

''போரிடும் நிலையிலும் கூடக் குதிரையிலிருந்து தொழுகை நடத்துவீர்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன், இளவரசே. அந்த அல்லாவின் மேல் உறுதி பூண்டு சொல்லுகிறேன். தாங்களைக் காப்பாற்றவே அவ்வாறு செய்தேன்.''

''நம்புகிறேன் ஸலீமா. இப்பொழுது நான் அங்கே செல்ல வேண்டும்.''

''என் மேல் ஆணை... தாங்கள் செல்லக்கூடாது. அதிகாலையில் தாங்கள் செல்லலாம். மன்னர் தங்களைக் கூர்ஜரத்திற்கு அனுப்புவதாக ஜஹானாரா பேகத்திடம் கூறியிருக்கிறார். அதனால் தாங்கள் பேகத்தைச் சந்தித்துவிட்டுக் கூர்ஜரத்திற்குப் புறப்பட்டுவிடுங்கள்'' என்ற ஸலீமா வேகமாக வெளியேறினாள்.

ஒரு பெண்ணின் பேச்சை எடுத்துக் கொண்டு தாம் அங்கே அமர்ந்திருப்பதா என்ற சஞ்சலம் ஏற்பட்டது ஔரங்கசீப்பிற்கு. ஆனால் என்னவோ மீறி வெளியேறத் துணிவும் ஏற்படவில்லை. சற்று நேரம் அந்த அறையையே சுற்றிச் சுற்றி வந்தவரின் பார்வையில் எழுத்தாணியும், ஓலைச்சுவடிகளும் பட்டன. எடுத்து அந்த நறுக்கோலையில் வேகமாக எழுதத் தொடங்கினார்.

'குர் ஆன்' அந்த இரவில் நறுக்கோலைகளில் விறுவிறு என்று விளக்கமாக மலரத் தொடங்கிற்று.

புரவி வேகமாக ஓடியது. ஔரங்கசீப் அதன் மீது கம்பீரமாக அமர்ந்திருந்தான். அன்றைய அதிகாலையில் தன்னைக் கண்டதும் சகோதரி ஜஹானாரா பேகம் மலர்ந்து ஆரவாரம் செய்ததும், அருகில் உள்ள தாராவின் முகம் செத்தாற் போல் உணர்ச்சி குன்றியதும் நினைவுக்கு வந்தன.

ஆனால் இன்னொரு நினைவும், பார்வையும் தன்னைத் துரத்தி வருவதை ஔரங்கசீப் அறிந்தானா!

கூர்ஜரத்திற்குப் பாதுஷாவின் கட்டளை ஏற்றுப் புறப்படும் வரை - உதய்புரி - (இந்த உதய்புரிதான் இளவரசன் தாரா இறந்த பின்பு ஔரங்கசீப்பின் நான்காவது மனைவியாக - அன்பு மனைவியாக இருக்கிறாள். இவள்தான் காம்பெக்ஷ் என்ற மகனை ஈன்றெடுத்தவள்) ஸலீமாவைக் கண்டு விடை பெறத் துடித்தான் ஔரங்கசீப். ஆனால் அவள் வரவில்லை. புரவி புறப்பட்டு விட்ட பின்பு பாறை ஒன்றின் மீது தனியாக நின்றவளின் பார்வையை ஔரங்கசீப் சந்தித்துவிட்டு பின்பு -

அங்கே பேச வேண்டியதில்லையே...

அவள் கண்கள், ''காத்திருப்பேன்'' என்று கூறியதை ஔரங்கசீப் தன்னுள்ளத்தில் ஏந்திக் கொண்டு விட்டானோ?

நீண்ட பாதைப் பயணம் இப்பொழுது சுமையாக இல்லை ஔரங்கசீப்புக்கு. ○

With the Best Compliments of:

Dr. B. மதுரம் & சன்ஸ்

குரு மருந்துகள்

100 ஆண்டுகள் ஆராய்ச்சி அனுபவம்.

குரு தைலம் குரு பல்பொடி

Dr. B. மதுரம் & சன்ஸ்

குரு மருந்துசாலை, திருச்சிராப்பள்ளி-17.

போன் நெ : 25648

To keep pace with the advances in technology, Addison today are equipped with fully automatic computer numerically controlled machines that ensure highest possible accuracies.

The advantages of these machines are :—

- Production rate is assured
- Operator's fatigue is reduced
- Delivery schedules can be advanced
- Machine downtime is reduced
- Human error is completely eliminated

As leaders in the field, Addison manufacture a comprehensive range of precision Engineers' Cutting Tools — Twist Drills, Threading Taps, Reamers, Milling Cutters, End Mills, etc. — both high speed steel and carbide tipped.

Addison's top of the line technology offers the finest of tools, whatever the machining operation — turning, drilling, reaming, tapping, facing, boring, milling, chamfering, etc., and whatever the material— nimonic steels, alloy steels, cast iron, non-ferrous metals, plastics, etc.

Lower overall machining costs, longer tool life and faster production are the other measurable benefits from Addison tools.

Addison's service engineers work closely with their counterparts at customers' factories, solving machining problems, matching up tools with applications, expediting special requirements ...... and maximising productivity.



Addison–Leaders in cutting tool technology

Addison & Company Limited
(A unit company of the Amalgamations Group
803, Anna Salai, Madras - 600 002

Branches : Ahmedabad, Bangalore, Bombay, Calcutta, Ernakulam, Kanpur, Ludhiana, Madras & New Delhi

MAC/ADD-139

தேய்புக் கம்பள வரலாறு



அந்தக் காலத்தில் மன்னர்கள், பட்ட மகிஷிகள் நடந்து வருவதற்கு நடைப் படாம் விரிப்பார்கள். நடைப் பாவாடை என்றும் சொல்வதுண்டு. மதுரை மீனாட்சித் திருக்கல்யாணத்துக்கு எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளுக்கு நடைப் படாம் விரித்தார்களாம். 'பையர வுரியி னன்ன நடைப் படாம் பரப்பி' என்று திருவிளையாடலில் வருகிறது.







அயல் நாட்டு அரசியல் தலைவர்கள் விஜயம் செய்யும்போது இப்போதும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்பு அளிப்பது உண்டு. மதிப்புக்கும் அந்தஸ்துக்கும் உரிய மரியாதையின் சின்னமாக விளங்கும் சிவப்பு வண்ணக் கம்பளம்(Red Carpet) தேங்காய் நாரிலிருந்தும் தயாரிக்கப்படுகிறது. சன்னமும், பளபளப்பும் வழுவழுப்பும் மிகுந்த தேங்காய் நாரிலிருந்து எத்தனை எத்தனை வகையான பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. எத்தனை ஏழை எளிய மக்கள் நார்த் தொழிலில் ஈடுபட்டுத் தங்கள் வாழ்க்கையை ஓட்டுகின்றனர்.





இந்தியாவில், அதிலும் தென் மாநிலங்களில் இந்த நார்த் தொழிலுக்கு மிகுந்த வாய்ப்பு இருப்பதை அறிந்து மத்திய அரசு, 'கயிறு வாரியம்' என்ற அமைப்பை 1976-இல் தொடங்கியது. கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, ஒரிசா ஆகிய மாநிலங்களில் தென்னை வளர்ப்பு மிகவும் செறிந்துள்ளது. ஆண்டொன்றுக்குச் சுமார் மூவாயிரம் மில்லியன் தேங்காய் கிடைக்கிறது. இத்தனை தேங்காய் மட்டைகளும் அடுப்பெரிக்கவும், காளவாய் எரிபொருளாகவுமே வீணாகிவந்தன. கயிறு வாரியத்தின் முயற்சியினால் சுமார் 60 சதவிகித தேங்காய் மட்டைகளிலிருந்து பழுப்பு நார் தயாரிக்கப்படுகிறது. அதிக மாதம் ஊற வைக்காமல், மட்டையைச் சில நாட்கள் நனைத்து, யந்திரத்தின் உதவியால், எடுக்கும் தேங்காய் நார், பழுப்பு நார் என்றழைக்கப்படுகிறது.

மலை மலையாகக் குவிந்திருக்கும் தேங்காய் மட்டைகளை, யந்திரத்தில் கொடுத்தால், இரண்டு நிலைகளில், பழுப்பு நார், பழுப்புப்பட்டு நூல் போல வெளிவந்து விடுகிறது.



பெண்கள் ஊறிய மட்டையைத் தடியால் அடித்து, நாரைப் பிரித்தெடுக்கிறார்கள். ஈரிழை, மூவிழை போன்ற கயிறு திரிப்பதும் பெண்கள்தாம். யந்திர மயமாக்காமல், குடிசைத் தொழிலாகவே கேரளாவில் செய்து வருகிறார்கள்.

பழுப்பு நார் தயாரிப்பதிலும், அதிலிருந்து பல்வேறு வகை கயிறுகள் திரிப்பதிலும் தமிழ் நாட்டில் மட்டும் சுமார் ஐந் நூறுக்கும் மேற்பட்ட சிறிய, பெரிய நிறுவனங்கள் ஈடு

ஆனால் கேரளத்தில் தயாரிக்கப்படும் நார், வெள்ளை நார் எனப்படுகிறது. அங்கே தேங்காய் மட்டைகளை, உப்பங்கழிகளில் பந்தல் போல் கட்டி, அதன் மேல் மட்டைகளைப் பரப்பி, நீருக்குள் அமிழ்த்தி விடுகின்றனர். ஐந்தாறு மாதம் மட்டை உப்பு நீரில் நன்றாக ஊறுகிறது. கேரளப்

பட்டிருக்கின்றன.

மூலப்பொருள் தடங்களின்றிக் கிடைக்கிறது. குடிசைத் தொழிலாகச் செய்தாலும், யந்திரங்களை உபயோகித்தாலும், பல்லாயிரம் மக்களுக்குச் சிறந்த வேலை வாய்ப்பாக அமைந்திருக்கிறது. அதனால் கயிறு வாரியம், தொழில் நுட்ப உதவியும், பயிற்சியும் அளிக்கும் நிலையங்களையும் பல மாநிலங்களில் அமைத்திருக்கிறது, தஞ்சையையடுத்த பிள்ளையார்பட்டியிலும் இத்தகைய பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு உதவிப் பணமும் கொடுத்துப் பயிற்சியும் அளிக்கிறார்கள்.

பல்வகை மிதியடிகள், ஜன்னல் படுதாக்கள், கார் விரிப்புகள், மெல்லிழை நார்ப் பொருள்கள், அழகுப் பொருள்கள், வடக்கயிறு, கயிறு பாய், இரப்பர் கலந்த கயிறுகள் போன்ற நார்ப்







பொருள்கள் ஏழாம் திட்ட ஆண்டு இறுதியில் 75,000 டன் உற்பத்தியாகும் என்று தெரிகிறது.

இந்த இலக்கை எட்டும் போது புதியதாக 15,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டாகும். இந்த நான்கு மாநிலங்களிலும் ஆறு மாதப் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் 528-ம், மூன்று மாதப் பயிற்சி அளிக்கும் களப் பயிற்சிப் பள்ளி 1494-ம் உள்ளன. அப்படியும் கிடைக்கும் தேங்காய் மட்டைகளில் 40லிருந்து 50 சதவீதத்தைதான் உபயோகப் படுத்துகிறோம். முழுவதையும் உபயோகப்படுத்தத் தொடங்கினால், வேலை வாய்ப்பும் அந்நியச் செலாவணியும் இரட்டிப்பு மடங்கு பெருகும்.

இத்தாலி, இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற இருபது நாடுகள் நமது



கயிறு பொருள்களை விரும்பி வாங்குகின்றன. முப்பத்திரண்டு கோடி ரூபாய்க்கு மேல் அந்நியச் செலாவணியை ஆண்டு தோறும் கயிற்றுப் பொருள்கள் சம்பாதித்துக் கொடுக்கின்றன. மேலும் பெருக வாய்ப்புள்ளது.

தஞ்சையையடுத்த, வல்லம் சாலையிலுள்ள பிள்ளையார்ப் பட்டி - பிராந்திய கயிறு, தொழில் பயிற்சி மேம்பாட்டு மையம் இந்த வண்ணக் கோவை அமைக்க உதவியதற்கு நன்றி.

போட்டோ : ஓம் சுப்பிரமணியம்

சந்தனப் புன்னகை மேனியில் தவழட்டும்...
"GOKUL"
SANTOL
TALCUM POWDER
"GOKUL"
SANTO
TALCUM POWDE
GOKUL
SANDAL
WOOD
FACE POWDER
கோகுல்
ஸாண்டால் &
ஸாண்டல்வுட்
முகப் பவுடர்.
ADWAVE/TSR/3876A

10
வருட
உத்திரவாதம்

IS:2347

ISI

இப்பொழுது
ISI முத்திரையுடன்

பட்டர்ஃப்ளை
ஸ்டாண்டர்ட்
பிரஷர் குக்கர்

இலவசம்!
சேலம்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
18 G ல் தயாரிக்கப்பட்ட
ஒரு அன்னக்குத்தி
மற்றும் கரண்டி

பட்டர்ஃப்ளை குரூப் நிறுவனத்தினர் 40 ஆண்டுகளுக்கும் மேல் தரம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தயாரிக்கப்படும் சமையல் உபகரணங்களில் ஒன்றான பட்டர்ஃப்ளை ஸ்டாண்டர்ட் பிரஷர் குக்கருக்கும் இப்பொழுது ISI மார்க் கிடைத்துள்ளது.

- தலைசிறந்த உலோகக் கலவையினால் தயாரிக்கப்பட்டது.
- "காஸ்கெட் ரிலீஸ் ஸிஸ்டம்" உள்ளது. எனவே 100% பாதுகாப்பு.
- துரித சமையல், எனவே எரிபொருள் மற்றும் நேரம் மிச்சம்.
- 3, 5, 6, 7.5, 10 & 12 லிட்டர்களில் உள்ளன.

தயாரிப்பாளர்கள் :

கங்காதரம் எண்டர்பிரைஸஸ்

272, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை-600 018.
போன் : 454186, 458722.

பிரஷர் பான்களும்
உள்ளன.

Concept

நரகத்தில் ஒரு நறுமலர்

பானுமதி பாஸ்கோ

மாலை வெயில் மௌனமாய் விலகி வழிவிட, மெல்லிருட்டு சகல எல்லைகளிலும் கவிந்து கொள்ள ஆரம்பித்தது. சாயங்கால நேரத்திற்குரிய சில பழக்கமானதும், பரபரப்பானதுமான ஓசைகள் கொஞ்சம் கொஞ்சமாய் ஓய்ந்து போக, வரப் போகும் இரவுக்கான ஆரம்பங்கள் தெரியலாயின.

முன்புறந்துக் கதவைச் சாத்திவிட்டு அறைக்குள் வந்த கல்யாணி ஜன்னல் கம்பிகள் கோடிமுத்துக் காட்டிய வானப் பகுதியில் பார்வையைப் பதித்தாள்.

நட்சத்திரங்கள் எங்குமாய்ப் பூத்திருந்தன. வெள்ளையும், சாம்பலுமாய் நீளவாக்கில் ஓடியிருந்த மேகங்கள் வானத்தின் மகத்துவத்தை வெளிப்படுத்துவதெனத் தோற்றம் தந்தன. ஜன்னல் கதவுகளை அசைத்துக் கொண்டு ஓடிவந்த குளிர்ந்த காற்று கல்யாணியை சந்தோஷப்படுத்திற்று.

"... காலராத்திர் மகாராத்திரிர்
மோகராத்ரிச்ச - தாருணா
த்வம் ஸ்ரீஸ் த்வமீச்வரி த்வம்
ஹ்ரீஸ்-த்வம் புத்திர்-போத லக்ஷ்ணா...

"காலராத்ரியாகவும், மகா ராத்ரியாகவும், மோக ராத்ரியாகவும், பயங்கர வடிவினளாகவும் நீ இருக்கின்றாய். நீயே ஸ்ரீ, நீயே ஈசுவரி, நீயே ஹ்ரீ, நீயே நிச்சய வடிவான புத்தி..."

'ஸப்தசதீ' என்று போற்றப்படும் தேவி மாகாத்மியத்தை மேசையிலிருந்து எடுத்து கல்யாணி மெல்லிய குரலில் படிக்க ஆரம்பித்தாள்.

வேர்வையும், சோர்வுமாய் ஆபீசிலிருந்து வீடு திரும்பி, குளித்து, உடை மாற்றி, களைப்பு தீர ஒரு வாய் சூடாகக் காபி குடித்துப் பிறகு மெதுவாக உடம்பை நாற்காலியில் சாய்த்துக் கொள்ளும் போது கிடைக்கிற சுகம் எவ்வளவு பிரியத்துக்குரியதாய் இருக்கிறது? இப்படி பிரியத்துக்குரிய தருணங்களில் நெஞ்சம் மிதக்கும் போதெல்லாம் -

"கிரதுக்களில் எங்ஙனம் அசுவமேதமோ, தேவர்களில் எங்ஙனம் ஹரியோ அங்ஙனமே ஸ்துதிகளில் 'ஸப்தசதீ' என்று புகழப்படுகிற தேவி மாகாத்மியத்தைக் கல்யாணி பாராயணம் செய்ய முயற்சி செய்வாள்.

கணவனை இழந்து கடந்த பதினாறு வருடங்களை எந்தத் துணையுமின்றி தனிமையிலே கழித்துவிட்டு, நெஞ்சை முட்டிக் கொண்டு எழுந்த சோகங்களையெல்லாம் மிக எளிதாய் வென்று தீர்த்துவிட்டு அவள் துணிவுடன் நிமிர்ந்து நின்றதற்கான உரத்தையும், உற்சாகத்தையும் அபரிமிதமாய் அள்ளித் தந்ததெல்லாம் எழுநூறு மந்திர வடிவான இந்த தேவி மாகாத்மியம்தான் என்பதை அவள் பாராயணம் செய்யும் ஒவ்வொரு முறையும் உணர்ந்திருக்கிறாள். மஞ்சளையும், குங்குமத்தையும், மகிழ்ச்சியையும் ஒரேயடியாய்த் தொலைத்துவிட்டு விதவையாய்த் தான் வாழ நேர்ந்துவிட்ட போதிலும்கூடத் தான் அனாதையல்ல என்ற உள்மன வலிமையைக் கல்யாணிக்குத் தந்தவை இந்த மந்திரங்கள் தான்...

தேவி மாகாத்மியத்தைப் பாதியாய் திறந்து வைத்துவிட்டு ஜன்னல் வழியாக மீண்டும் அந்த இருண்ட ஆகாயத்தைக் கல்யாணி கூர்மையாய்ப் பார்க்கலானாள்.

'இரவு அப்படியொன்றும் வெறுக்கத் தக்கதல்ல. இரவுதான் இப்பிரபஞ்ச முழுமைக்கும் அழகு கொண்டு வந்து சேர்க்கிறது... இரவு இல்லையெனில் நிலவு ஏது...? கோடானு கோடியாய் வானவெளியெங்கும் குவிந்து கிடக்கும் இந்த நட்சத்திரங்களை யார்தான் பார்க்க முடியும்?' - இப்படித்தான் கல்யாணி வெகு நாட்களுக்கு முன்பு வரை நினைத்திருந்தாள்.

'வெகு நாட்களுக்கு முன்பு வரை...' என்றால்?

அவளது அன்புக்குரிய கணவன் கிருஷ்ணமூர்த்தி மூச்சடங்கி முடிந்து போவதற்கு முன்பு வரை...

அவளையும் - அவளுக்கு அவன் தந்துவிட்டுப் போன ஒரே மகள் ஜயந்தியையும் ஒரேயடியாக அழுது புலம்ப வைத்துவிட்டு அவ்வளவு எளிதாய் விழிகளை மூடிக் கொள்ள அவனுக்கு எப்படி மனம் வந்தது...? அவளது அழகும், இளமையும் அவனுக்கென காத்திருக்கையில் அவளுடைய சகல சந்தோஷங்களையும், சொப்பனங்களையும் சடுதியில் வீழ்த்தி விட்டுப் போக அவனால் எப்படி முடிந்தது...?

கல்யாணி பெருமூச்செறிந்தாள். நீர் தழும்பி நிற்கும் விழிகளைத் தாழ்த்தி புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு அவள் நிமிர்ந்த போது -

பிரகாசமாய் ஒளிர்ந்து கொண்டிருந்த நட்சத்திரமொன்று வானத்தில் ஒளிக் கோடாய் இழுபட்டு பூமியை நோக்கிச் சரிந்து மறைந்து போவது கண்களில் பட்டது. அவளது பிரியத்துக்குரிய கணவனும் இப்படித்தானே ஒரு நாள் உதிர்ந்து போனான்?

அப்பாவை மரணம் பறித்துக் கொண்ட போது ஐந்து வயதுச் சிறுமியாகயிருந்த ஜயந்தி - வளர்ந்து, விளையாட்டு நினைவுகளைக் கடந்து வாலிபமாகி, உலக விவகாரங்களைப் புரிந்து கொள்ளுகிற பருவம் வந்தபோது அம்மாவைப் பார்த்து அடிக்கடி கேட்பாள் :

"அம்மா எனக்கும் கொஞ்சம் சொல்லறயா... அப்பா எப்பிடி இருப்பார்னு?"

கல்யாணி பொங்கியெழும்பும் பாசத்தோடு மகளைப் பார்ப்பாள். பிறகு சோகம் படிந்த ஒரு எளிய சிரிப்பை மெல்லிசாய் வெளிப்படுத்தி விட்டுச் சொல்லுவாள் :

"அப்பா எப்பிடி இருப்பார்னு சொல்லறது ரொம்ப சுலபம் ஜயந்தி..."

"அப்ப சொல்லேன்..."

"ஒரே வார்த்தையில சொன்னா, ஒன்னை மாதிரியே இருப்பார்..."

"என்னை மாதிரியேவா?"

"ஆமா ஜயந்தி. ஒங்க அப்பாவைப் போலவேதான் ஒனக்கும் பெரிய பெரிய கண்கள், அதே மாதிரியே அந்த எடுப்பான நாசி, அகலமான நெற்றி, சற்றே சிறியதான உதடுகள்...

- கல்யாணி சொல்லி முடிக்கும் முன்னமே ஜயந்தி இருக்கையிலிருந்து எழுந்து ஓடிப்போய் கண்ணாடியின் முன் நின்று கொண்டு தனது முகத்

தோற்றம் பார்த்து பெருமைப் படுவாள்.

கல்யாணியின் நெஞ்சுக்குள் வேதனை பரவும். அவளால் என்றுமே மறந்திட முடியாத அந்த மாபெரும் சோகம் ஒரு மேகம் போல அவளது முகத்தில் வந்து மூடிக் கொள்ளும். நெஞ்சப் பரப்பெங்கும் நிறைந்திருக்கும் துயரத்தின் பிரதிபலிப்பாய்த் தொண்டைக்குழி அடைத்துக் கொள்ள வெளிவர முடியாத வார்த்தைகள் உதட்டில் துடித்து நிற்கும்.

''அப்பாவோட மொகம் ஒனக்கு ஞாபகத்துல வரலையா ஜயந்தி...?''

''வர்றது... ஆனா சரியா புரிபட மாட்டேங்கறது. சில ராத்திரிகள்லே நாம கனவு காணறோம். விடிஞ்சு பாத்தா கனவு கண்டோங்கிறது மாத்ரம்தான் ஞாபகத்துக்கு வர்றது... ஆனா கண்ட கனவு ஒரேயடியா மறந்து போயிடறதே அது மாதிரி...''

''பேஷ்... ரொம்ப அருமையான விளக்கம் சொல்லிட்டே... நான் புரிஞ்சுட்டேன்...''

ஜயந்தி பூரித்துப் போவாள்.

வெளியே காற்று வேகம் கொண்டு ஜன்னல் கதவுகளைத் தாக்கிற்று. பக்கத்து வேப்ப மரம் முறிந்துவிடும் போல் கிளைகளை அசைத்துக் கொண்டு சீறிற்று.

கல்யாணி நாற்காலியிலிருந்து எழுந்து, அடித்துக் கொண்டிருந்த கதவுகளையெல்லாம் அவசாமாய் மூடிவிட்டு, பாதியாய்த் திறந்திருந்த தேவி மாகாத்மியத்தில் பார்வையை மீண்டும் திருப்பினாள் :

''கட்க சூல கதாதீனி யானி
சாஸ்த்ராணி தேம்பிகே
கர பல்லவ ஸங்கீனி தைரஸ்மான்
ரக்ஷ ஸர்வத...''

'அம்பிகே! வாள், சூலம், கதை முதலிய ஆயுதங்கள் எவையெல்லாம் உனது தளிர் போன்ற கரங்களில் ஏந்தப் பெறுகின்றனவோ அவற்றால் எத்திக்கிலும் எங்களைக் காத்தருள்வாய்...'

''**உலகில் பாவம் என்பது உண்டென்றால் அது பயமும், பலஹீனமும்தான்'' என்று சுவாமி விவேகானந்தர் சொல்லியிருப்பதை எங்கேயோ கல்யாணி படித்திருக்கிறாள். ஆனால் அந்த பயத்துக்கும், பலஹீனத்திற்கும் தானே அடிமையாகி, தனி மனுஷியாய் நின்று மனங்குமுறி அழுது, புலம்பி, மாய வேண்டிய நிலை தன்னை வந்து சேரும் என்று ஆரம்பத்திலேயே அவள் அறிந்திருந்தாளா என்ன?**

ஆரம்பம் என்பது - கல்யாணி கிருஷ்ணமூர்த்தியோடு வாழ்ந்து மகிழ்ந்த அந்த வசந்த காலங்கள் தான்... மணம் நிறைந்த, மகிழ்ச்சிகரமான பொற்கனவுகள் நெஞ்சுக்குள் சதா மிதந்து கொண்டிருந்த மங்கல காலங்கள்... அவையெல்லாம் இவ்வளவு விரைவில் எரிந்து, கருகி, அழிந்து போகுமென்று யார்தான் நினைத்திருக்க முடியும்...?

''தேவி... உன்னருளைக் கூட்டி வைக்கும் விபத்துக்கள் அவ்வப்போது வந்து கொண்டே இருக்கட்டும்'' என்று குந்தி தேவி பிரார்த்தித்தாளாமே...?

கல்யாணிக்கு விபத்து கிருஷ்ணமூர்த்திக்கு உண்டான வியாதியினால் நேர்ந்தது. இந்த சரீரம் மண் பானையைப் போன்றதென்று சொல்லியிருக்கிறார்களே அது சரிதானோ? நீர் நிறைந்த பானையில் ஒரு சிறிய துவாரம் விழுந்தாலும் அதன் வழியே எல்லா நீருமே ஒழுகிப் போகுமல்லவா...? தெரியாத்தனமாய் கை நழுவி விட்டாலும் மண் பானை இருந்த இடம் தெரியாமல் நொறுங்கிப் போகுமல்லவா?

சரீரத்தில் வியாதியும், வருத்தமும் வரக்கூடாது என்பதல்ல... ஆனால் இப்படியா அது ஒரேயடியாகக் கல்யாணியின் மஞ்சளையும், குங்குமத்தையும் வாரிச் சுருட்டிக் கொண்டு போக வேண்டும்?

சில மத்தியான நேரங்களில் -

கையை மடித்து தலைக்கடியில் கொடுத்து, வெறுந்தரையில் கல்யாணி படுத்திருக்கும் போது ஜயந்தி அவளைப் பார்த்துக் கேட்பாள் :

''அப்பாவுக்கு எப்பிடிம்மா அவ்வளவு சீக்கிரத்தில...?''

''சாவு சொல்லிண்டா வரும்டீ?''

அம்மாவின் கண்களிலிருந்து பெருகிய நீர் கன்னங்களின் வழியே தரையில் இறங்கும்.

''அழாதேம்மா... அழாதே...'' என்று அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கண்களின் ஈரத்தைத் துடைத்து விடுவாள் ஜயந்தி.

நேரம் ஓடிக் கொண்டேயிருக்கும்.

மேற்கு வானத்தில் குழும்பிய சிவப்பாய் மேகங்கள் மிதக்கும். மஞ்சள் வெய்யில் சாய்ந்து போக, சூரியனின் பயணம் முடிந்து கொண்டிருக்கும்.

முடிவடையாத கல்யாணியின் கடந்தகால, துயரகரமான ஞாபகங்கள் நெஞ்சையே அறுத்துக் கொண்டு பெருமூச்சுக்களோடு மேலெழும்பும்...

''யா தேவீ ஸர்வபூதேஷு
ஸ்ம்ருதிரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை
நமஸ்தஸ்யை - நமோ நம...''

'எல்லா உயிர்களிடத்திலும் எந்த தேவி ஞாபக வடிவில் உறைகின்றாளோ அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்...'

இரவு உணவை முடித்துக் கொண்டு படுக்கையில் வந்து விழுந்தாள் கல்யாணி. இப்போதெல்லாம் முன்னைப்போல அவ்வளவு எளிதாய் அவளுக்கு உறக்கம் வந்து விடுவதில்லை. ஜயந்திக்கு திருமணத்தை முடித்து, இந்த வீட்டை விட்டு அனுப்பி வைத்து இரண்டு மாதங்களுக்கு மேலாயிற்று. தன்னோடு அவள் இருந்த வரையிலும் தனக்கு கிடைத்து வந்த உற்சாகத்தையும் உறுதுணையையும் இப்போது முற்றாகவே இழந்து, தான் ஒரேயடியாய் தனிமைப்பட்டு, கவலைப்பட்டு வெறுமையாகிப் போனதாக இப்போதெல்லாம் அவள் அதிகமாக உணரலானாள்.



படுக்கையில் உருண்டும் புரண்டும் உறக்கம் வராத விழிகளிரண்டும் கனத்துப் போக, இறந்து எத்தனையோ வருடங்களாகிவிட்ட கணவனின் எண்ணங்களோடே போராடி மாய்வதும், ஒற்றையாய் வாழ நேர்ந்துவிட்ட காரணத்தால் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டிய இந்தக் கேவலமான சமூகத்தின் அவமரியாதைகளுக்காகவும், அவமானங்களுக்காகவும், மனம் நொந்து புலம்புவதும் இப்போதெல்லாம் அவளால் தவிர்க்க முடியாததாயிற்று.

இரவின் அமைதியில் அவள் மௌனமாக வெளிப்படுத்திய இதயத்தின் அதிர்வுகள் கண்களிலிருந்து கண்ணீராய் இறங்கி, வீங்கிச் சிவந்த கன்னங்களில் கோடிழுத்துக் கறையாகும்.

நேரம் செல்லச் செல்ல அவள் எப்படியோ உறங்கிப் போவாள்.

இரவுச் சொப்பனத்தில் கிருஷ்ணமூர்த்தி வந்து சிரிப்பான்.

''சிரிக்கவா செய்யறேள்... என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிட்டு உங்களால சிரிக்கவும் முடியறதா...?''

இவ்வளவு சீக்கிரத்தில் ஜயந்திக்கு திருமணத்தை முடித்து வைக்க முடியுமென்று உண்மையிலேயே கல்யாணி நினைத்திருக்கவில்லைதான்.

''எனக்காம்மா...? கலியாணம் இப்போது வேண்டாம்... நான் தொடர்ந்து எம்.ஏ. படிக்கிறேனே...'' என்று ஜயந்தி அம்மாவிடம் தனது மறுப்பை தெரிவித்துத்தான் பார்த்தாள்.

''அப்படியெல்லாம் சொல்லாதே ஜயந்தி... நம்மகிட்ட சொத்து சொகம்னு எந்த வசதியும் இல்ல... ஏதோ வரதட்சிணை, சீர் செனத்தின்னு எதுவும் வேண்டாம்... எல்லா சிலவுகளையும் நாங்களே ஏத்துக்கிறோம்னு பிள்ளை வீட்டார் சொல்றா... ரெண்டாம் தாரமேன்னு யோசிக்காதே... அவாளுக்கு ஒன்னை ரொம்ப புடிச்சிருக்காம்...''

ஜயந்தி அம்மாவை ஏறிட்டுப் பார்த்துக் கேட்டாள் :

''புடிக்காம என்ன செய்யும்...? ஒரு கிழட்டு மனுஷருக்கு ரெண்டாம் தாரமா வாழ்க்கைப்படனும்னு என் தலையில எழுதியிருக்கச்சில...''

''நீ நெனைக்கிற மாதிரி அப்படியொன்னும் அவர் கிழவரில்லடி... நாப்பத்தஞ்சு வயசெல்லாம் இப்ப பெரிய வயசுன்னு யாரு நெனைக்கிறா...? அதுவும் அவருக்கு குழந்தை குட்டிகள்னு எந்த தொந்தரவும் இல்லாதிருக்கச்சில...''

''நீ முடிவா இப்ப என்னம்மா சொல்லுற?

''முடிவு நீதான் சொல்லணும் ஜயந்தி... நான் சொல்ல வர்றதெல்லாம் நீ இந்த வரனுக்கு சம்மதிச்சா ரொம்ப சந்தோஷமா, நல்ல வசதிகளோட இருப்பே அவ்ளவ்தான்... மாப்பிள்ளைக்கு மிகப் பெரிய தனியார் கம்பெனியில் மானேஜர் உத்தியோகம்... கை நெறைய சம்பளம். கார், பங்களான்னு ஏராளமான வசதிங்க... கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர வேலைக்காரங்க...''

''வசதி மட்டுமே போறும்னு நீ நெனைக்கற இல்லையாம்மா...?

''ஆமாண்டீ... அப்பிடியேதான் வச்சுக்கோயேன்... இன்னைக்கு எல்லா மனுஷாளும் பணம் பணம்னுதான் அடிச்சுக்கிறா... பணம் இருந்தா போறும், தான் எல்லாத்தையும் வாங்கிடலாமுன்னு நெனைக்கிறா... என் ஒரே மகளோட சந்தோஷத்துக்காக நானும் பணக்காரனை மாப்பிள்ளையாக்க நெனச்சா அது தப்பா சொல்லு...?''

ஜயந்தி வாயடைத்துப் போனாள்.

சராசரி பெண்களுக்கேயுரித்தான பணம், பொருள், ஆடம்பரம், நாகரிகம் போன்ற கௌரவமும், அந்தஸ்தும் அளிக்கின்ற சமூக ஆசைகள் இந்த அம்மாவையும் தொற்றிக்கொண்டதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

அம்மா சொல்லுவதையெல்லாம் ஏற்றுக் கொள்வதா அல்லது எடுத்தெறிந்து விடுவதா என்பது குறித்து ஜயந்தி அதிகமாக யோசிக்கலானாள்.

தாய்க்கும், மகளுக்கும் இடையே மௌனமாய் ஒரு கனத்த திரை அதிவேகத்தோடு கீழிறங்கிற்று. நிர்மலமான வானம் போல் பளிச்சென்றிருந்த ஜயந்தியின் முகப்பரப்பில் சிந்தனையின் விளைவால் உண்டான பயமும், குழப்பமும் விரவியிருந்தது.

புற்று நோய் என்பது உடலில் செல்கள் அளவு கடந்து பெருகுவதால் உண்டாவதாம். இவ்வாறு பெருகுகின்ற செல்கள் நாட்கள் செல்லச் செல்ல கல்லீரல், நுரையீரல் போன்ற அதிமுக்கிய உறுப்புகளிலும் பரவி அவற்றிலுள்ள திசுக்களைத் தாக்கி இறுதியில் மரணத்தில் போய் முடிகிறதாம்...

ஆரம்ப காலத்திலேயே கண்டுபிடித்து விட்டால் நூற்றுக்கு நூறு இந்தப் புற்று நோயைக் கொன்று குழிதோண்டிப் புதைத்து விடலாமாம்...

ஆனால்...?

அந்த ஆரம்பம் எப்போதென்று யாருக்குத் தெரிந்தது? ஆரம்பத்தைக் கண்டுபிடிக்கும் முன்னமேயே மரணம் வந்து முன்கதவைத் தட்டுமென்று யார் தான் நினைத்திருக்க முடியும்?

கிருஷ்ணமூர்த்திக்கு நடனத்திலும், சங்கீதத்திலும் இருந்து வந்த ஈடுபாட்டை வார்த்தைகளால் விவரிக்கவே முடியாது.

''கல்யாணி... இன்னைக்கு நாரத கான சபாவில் பரத நாட்டியம்... சாயங்காலம் ஆபீஸிலேர்ந்து சீக்கிரமா வந்திடுவேன்... நீ ரெடியா இருந்துக்கோ'' என்று முன்கூட்டியே சொல்லிவிட்டுப் போவான். மறுநாள், ''பாரதீய வித்யா பவனில் பரத நாட்டிய நிகழ்ச்சி இருக்கு... போயிட்டு வருவோமே...'' என்பான்.

கல்யாணி அவனுடைய எல்லா ரசனைகளுக்கும் தலையசைப்பாள்.



அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

என்றும் கோபால் பல்பொடி

வாங்கி உபயோகியுங்கள்!

பாக்கெட் விலை 70 காசுகள்

மணிவாசகர் பதிப்பகம்

55, லிங்கி தெரு, சென்னை - 600 001.

★ மணிவாசகர் பதிப்பகம் தமிழ் நாட்டில் தலைசிறந்த பதிப்பகங்களில் ஒன்று

★ ஆராய்ச்சி நூல்கள் வெளியிடுவதில் முதலிடம் பெறுகிறது

★ இலக்கிய வெளியீட்டிற்குப் பல பரிசுகளைக் குவித்த பதிப்பகம்

★ எங்கள் நூல்களை தமிழ் வழங்கும் இந்தியப் பல்கலைக்கழகங்களனைத்தும் பாட நூல்களாக ஏற்றுக் கொண்டுள்ளன.

★ தமிழ் மறுமலர்ச்சிக்குத் துணை நிற்பன

★ புதியதோர் உலகு காண வழிவகை காண்பன

★ புதிய தமிழ் ஆய்வுக்கு வழிவகுப்பன

★ அறிஞர்களின் சிந்தனைப் பதிவு எங்கள் வெளியீடு

★ முத்தான நூல்கள் முந்நூறு வெளியீடுகளை அழகிய அமைப்புடன் வெளியிட்ட பதிப்பகம்

★ அறக் கொடைகள் பல நிறுவியுள்ளது

கிடைக்குமிடம் : **மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னிதி, சிதம்பரம்-1

28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-1

14, சுங்குராம் தெரு, சென்னை-1

3/4, ராஜ வீதி, கோயமுத்தூர்-1

20, நந்தி கோயில் தெரு, திருச்சி-2

''ஓ... தாராளமா போகலாமே...'' என்று புன்னகையுடன் சம்மதம் தருவாள்.

நாட்டிய நிகழ்ச்சிகளைப் பார்த்து விட்டு வந்து விடாமல் அவைகளை விமர்சிப்பான் :

''பார்த்தியா... அந்த 'வேலனை வரச் சொல்' என்ற பைரவி வர்ணத்தில் அவளோட ஜதிக் கோர்வைகள் என்னமாய் அணியணிகளாக வந்தன... ஓ... அந்தத் தீர்மானங்களில் லய சுத்தம் மிக அபாரம்... இல்லையா?''

சங்கீத, நாட்டிய ஞானம் அதிகமில்லாத கல்யாணி, கிருஷ்ணமூர்த்தி சொல்லுவதற்கெல்லாம் தலையசைத்துக் கொள்வாள்.

கல்யாணிக்கு அவன் பேசுகிற எவ்வளவோ விஷயங்கள் புரியாது. எனினும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டேயிருப்பாள் அவன் மீது கொண்டிருந்த பேரன்பினால்...

சரஸ்வதி பூஜை நாளன்று படிக்கக் கூடாதாம்... எழுதக் கூடாதாம்... அழ மட்டும் செய்யலாமா...? நெஞ்சில் அடித்துக் கொண்டு நொறுங்கிப் போகலாமா?

உடலில் பதுங்கியிருந்து, உடலைத் துன்புறுத்தாமலே அடியெடுத்து வைத்த அந்தப் புற்று நோயின் ஆரம்பம் கிருஷ்ணமூர்த்தியின் உடம்பில் தெரிய ஆரம்பித்ததே அன்றுதானே...?

அப்போதெல்லாம் ஜயந்திக்கு அவ்வளவாக விவரம் தெரியாது. விவரம் புரிய ஆரம்பித்த போது அம்மாவிடம் அவள் அடிக்கடி கேட்கலானாள் :

அப்பாவுக்கு வந்த நோயைப் பற்றித் தெரிந்து கொண்டால் மகள் பயந்து விடக் கூடுமென்று இத்தனை நாள் நினைத்தது தப்பா...? இல்லை ஒரு பயங்கரமான வியாதியினால் பாதிக்கப்பட்டுத் தன் தந்தை அல்ப ஆயுசிலேயே மரித்துப் போனார் என்பதைத் தெரிந்து கொண்ட மாத்திரத்திலேயே மகள் முகம் சுளித்து அருவருப்படையக் கூடுமென்று இத்தனை காலம் சொல்லாமல் இருந்தது தன்னுடைய தவறோ...?

ஜயந்தி முகத்தில் அறைவது போல அன்று அம்மாவிடம் பதில் சொன்னாளே...

''அம்மா... உண்மை உன்னுடைய வாயிலேர்ந்து வரணுமேன்னுதான் இத்தனை காலமா காத்திருக்கேன்... நீ அப்பாவுக்கு வந்த நோயைப் பற்றி என்னிடம் சொல்லாம மறைக்கப் பார்க்கறே... ஏம்மா மறைக்கறே...? அப்பாவுக்குக் கேன்சர் வந்ததனால தான் செத்துப் போனார்ங்கற உண்மையை இன்னும் எத்தனை நாளைக்கம்மா நீ மறைக்க முடியும்...? நீ மறைக்கற அளவுக்கு இந்தப் புற்று நோய் ஒருத்தரிட்டயிருந்து மத்தவாளுக்குப் பரவி விடுற நோயல்ல... சிலர் சொல்லற மாதிரி பரம்பரையில் வர்ற நோயுமல்ல... வினையால் வர்ற வியாதியுமல்ல... எனக்கு நல்லாத் தெரியும்மா... நம்மைச் சுத்தி பக்கத்தில இருக்கறவாளுக்கெல்லாம் அப்பா எப்படிச் செத்துப் போனார்ங்கறது தெரிஞ்சிருக்கச்சில நீ ஏம்மா இந்த விஷயத்தை மூடி மறைக்கப் பார்க்கிறே...?''

கல்யாணி அதிர்ந்து போனாள்.

கல்யாணி மகளைக் கட்டித் தழுவிக் கொண்டாள். அவளது கண்களிலிருந்து பெருகி வழிந்த நீர் ஜயந்தியின் உச்சந்தலையில் தெறித்துச் சிதறிற்று.

சில நிமிட நேரங்கள் மௌனத்தில் இறுகின. உண்மைகளைப் புரிந்து கொண்டதில் லேசாகிப் போன நெஞ்சங்கள் உணர்ச்சிப் பெருக்கில் நனைந்தன.

அன்று கல்யாணி எல்லா விஷயங்களையும் மகளிடம் கொட்டித் தீர்த்து விட்டாள் :

''இதோ பாரு ஜயந்தி... சங்கீதத்திலும், நாட்டியத்திலும் உங்க அப்பாவுக்கு அளவு கடந்த ஈடுபாடு இருந்தது போலவே வாய் நிறைய வெற்றிலை போட்டு, புகையிலை அடக்கிக்கிற வழக்கமும் இருந்ததென்னவோ உண்மைதான்... ஆனால் புகையிலை போட்டுக்கிறது புற்று நோயை உண்டாக்குகிற அளவுக்கு மிகக் கொடிய பழக்கம்ங்கிறது அப்ப எனக்கே தெரியாம போயிடுத்து... என்ன செய்ய...? ஆரம்பத்திலேயே நான் தடுத்து நிறுத்தியிருக்கலாம்... விஷயம் புரியாததால நான் எதையுமே கவனிக்கத் தவறிட்டேன்... சோறு சமைக்கறதும், நேரம் காலத்தில கணவனை ஆபீசுக்கு அனுப்பறது மட்டுமே ஒரு மனைவியோட கடமையல்ல... அதற்கும் மேலே, சில தீய பழக்கங்களுக்கு அடிமையாகிப் போன கணவனை அதிலிருந்து மீட்டு அன்பினால் அரவணைத்துக் கொள்கிற மிகப் பெரிய பொறுப்பும் அவளுக்கு வேணுங்கிறத உங்க அப்பாவை இழந்த பிறகுதான் நான் தெரிஞ்சிக்கிட்டேன் ஜயந்தி...''

வேக வேகமாக வார்த்தைகளைக் கொட்டியதில் கல்யாணிக்கு மூச்சு யிரைத்தது. நெற்றியோரங்களிலும், மூக்கு நுனியிலும் வியர்வையின் ஈரம் தெரிந்தது.

ஜயந்தி அம்மாவின் முகத்தையும், நெற்றியையும் புடவைத் தலைப்பால் அழுத்தித் துடைத்து விட்டாள்.

குளிர்ந்த மென்காற்றைப் பரப்பிக் கொண்டு அதிகாலைப் பொழுது மலர்ந்து கொண்டிருந்தது. சன்னலோரமாய்ப் படர்ந்திருந்த போகன் வில்லாப் பூக்கள் குளிர்ச்சியின் சுகத்தில் மௌனமாய்ச் சிரித்துக் கொண்டன.

கல்யாணி வழக்கம் போலவே, இருள் பிரியும் முன்னரே படுக்கையிலிருந்து எழுந்து, குளித்து, வாசல் தெளித்து, கோலமிட்டு, தனக்கு மிகவும் பிடித்தமான தேவி மாகாத்மிய மந்திரத்தை மௌனமாய் உதடுகளால் உச்சரித்தாள், சற்றே கண்களை மூடிக் கொண்டு...

லம் - ப்ருதிவ்யாத்மிகாயை கந்தம்
ஸமர்ப்பயாமி
ஹம் - ஆகாசாத்மிகாயை புஷ்பை:
பூஜயாமி
யம் - வாய்வாத்மிகாயை
தூபமாக்ராபயாமி
ரம் - அக்ன்யாத்மிகாயை தீபம்
தர்சயாமி...

('லம்' என்ற பிருதிவி பீஜத்தால் பிருதிவி வடிவான உனக்குக் கந்தம் சமர்ப்பிக்கின்றேன். 'ஹம்' என்ற ஆகாச பீஜத்தால் பிருதிவி வடிவான உன்னைப் புஷ்பங்களால் பூஜிக்கின்றேன். 'யம்' என்ற வாயு பீஜத்தால் வாயு வடிவினளான உனக்குத் தூபம் காட்டுகின்றேன். 'ரம்' என்ற அக்னி பீஜத்தால் அக்னி வடிவினளான உனக்குத் தீபம் காட்டுகின்றேன்...')

வெளியே கதவைத் தட்டுகிற சப்தம் கேட்டது.

கல்யாணி 'திடு'மெனக் கண்களைத் திறந்தாள்.

மீண்டும் கதவு தட்டுகிற சப்தம்.

இந்த அதிகாலை நேரத்தில் யாராக இருக்கக்கூடும்?

தொடர்ந்து உச்சரிக்கவிருந்த மந்திரங்களை அத்தோடு நிறுத்திக் கொண்டு, ஒருவித அவசரத்தோடு கல்யாணி எழுந்து வந்து கதவைத் திறந்தாள்.

விழிகள் வியப்பினுள் வீழ்ந்தன.

'அட ஜயந்தியா...?' உதடுகளில் வார்த்தைகள் துடித்தன.

'அம்மா...' - ஜயந்தி கல்யாணியைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள் - ஒரு குழந்தையைப் போல...

அம்மாவின் எண்ண ஓட்டங்கள் முடிவடையும் முன்னே - ஜயந்தியின் கண்களிலிருந்து நீரோட்டம் ஆரம்பமாயிற்று.

''என்ன ஜயந்தி... எதுக்காக அழறே...? உள்ளே வா...'' - என்று மகளின் கையைப் பிடித்து அறைக்குள் கூட்டிக் கொண்டு போனாள் கல்யாணி.

ஜயந்தியின் விசும்பல் தொடர்ந்தது. முகம் குழம்பிச் சிவந்தது.

கல்யாணியின் உடம்பு பதறிற்று. படபடப்போடு மகளை ஏறிட்டுக் கேட்டாள் :

''அழாதே ஜயந்தி... என்ன நடந்தது, சொல்லு...''

''ம்... என்ன ஆயிடுச்சுன்னா கேக்கறே... போம்மா... ஒரு கூலிக்காரனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாகூட - அவனோட மனைவின்னு நான் சந்தோஷமா, கௌரவமா வாழ்க்கை நடத்தியிருக்கலாம்... என்னை நரகத்தில கொண்டு போயி தள்ளிட்டியேம்மா...''

''ஏன் ஜயந்தி அப்படிச் சொல்றே?''

''வேற எப்படிம்மா சொல்லச் சொல்றே... அந்தக் கிழட்டு மனுஷருக்கு நான் வெறும் வேலைக்காரிதாம்மா... அவரோட சல்லாபிக்கவும், அவரைச் சந்தோஷப்படுத்தவும் - தாலி கட்டாத எத்தனையோ மனைவிக அவருக்கு இருக்காங்கம்மா...''

கல்யாணி நெஞ்சுக்குள் அதிர்ந்தாள் :

''என்னால நம்ப முடியலயே ஜயந்தி...!''

''நீ நம்புறதும், நம்பாததும் எனக்கு முக்கியமில்ல... நீ என்னைக் கொண்டு போயி தள்ளினது தீராத அக்கினி ஜுவாலை கிளப்பி எரியும் படு பாதாள நரகம்மா... ஒரு பணக்கார வீட்டு வேலைக்காரி மாதிரி வாழறதை விட, ஒரு ஏழை வீட்டில எஜமானியா இருக்கிறது ரொம்ப கௌரவமான காரியம்மா... அந்தப் பணக்காரக் கிழட்டு மனுஷருக்குக் கை கால் புடிச்சி விடுகிற, தேவையான வீட்டு வேலைகளைச் செய்கிற ஒரு வேலைக்காரியா மட்டும் வாழ எனக்குப் பிடிக்கலேம்மா... என் உள்ளத்தை முழுசா புரிஞ்சுக்கிற்ற - என் உணர்ச்சிகளை மதிக்கிற ஓர் ஆண்மகனை எனக்கு மாப்பிள்ளையா பார்க்காம வெறும் பணம் அடைச்சு வெச்சிருக்கிற தோல் பையை 'புருஷன்னு' தேடிக் கொடுத்திட்டியேம்மா... குடி, கும்மாளம், கேடு கெட்ட எத்தனையோ பொம்மனாட்டிகளாடு மிகக் கேவலத்துக்குரிய சகவாசம்... மீறிக் கேட்டா அடி, உதை, ஆகாத பேச்சு... போதும்மா. என்னால பொறுத்துக்க முடியலேம்மா. நரகத்தையும் சொர்க்கமா நினைச்சிண்டு பெண்க மட்டும் வாழணும்னு எந்தச் சாஸ்திரம் சொல்றது? அந்தச் சாஸ்திரமே வேண்டாமே! ஒங்கிட்டயே திரும்பி வந்திட்டேம்மா...'' - உணர்ச்சிப் பெருக்கால் வார்த்தைகள் தொண்டைக் குழிக்குள்ளிருந்து சிக்கித் திணறி வெளிவந்து விழுந்தன.

''உனக்குச் சிரமம் இல்லேன்னா நிரந்தரமா இங்கேயே இருந்திடலாமுன்னு முடிவு பண்ணிட்டேம்மா...''

கல்யாணி பதிலேதும் பேசத் தோன்றாதவளாய் மௌனமாகி நின்றாள். அவளது மௌனத்தைக் கலைப்பது போலத் தொடர்ந்து ஜயந்தியே பேசினாள் :

''உனக்குப் பாரமாயிடுவேன்னு பயப்படுறியாம்மா... கவலைப் படாதே. நானும் ஏதாவது ஒரு வேலையைத் தேடிண்டு உனக்கு உதவியாவே இருப்பேன்... அப்பாவைப் பறி கொடுத்திட்ட நீ விதவையா காலமெல்லாம் வாழ்ந்திட்டே.... நானோ கணவனை வேண்டாம்னு விலக்கிட்டுத் தனிமையிலே நாட்களைக் கடத்திடலாமுனு நினைக்கிறேம்மா... நீ என்னைத் தள்ளிடாதேம்மா...''

ஜயந்தி அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு குலுங்கினாள். கல்யாணி ஆதரவோடு ஜயந்தியின் முதுகைத் தடவி அவளது நெற்றியில் முத்தமிட்டாள். ○

ஸ்ரீ சாமுண்டீஸ்வரி தசாங்கம்
நறுமண தூபப் பவுடர்
SREE CHAMUNDEESWARI DASANGAM
●
பூஜைக்கும், பூரிப்பிற்கும் ஏற்ற நறுமணப் பவுடர்
வாங்கி உபயோகியுங்கள்

VEDAVYASA PARIMALA WORKS
57, Malai Vasal,
TRICHY - 620 002.

ராமகிருஷ்ணா லஞ்ச் ஹோம்

223, N.S.C. போஸ் ரோடு சென்னை-600 001. போன் : 582124

ELEGANT

வைரக்கல்

கவிஞர் ஆற்றலரசு

பொறுக்கின்ற இதயங்கள் இமய மாகும்
பொறுக்காத நெஞ்சந்தான் மலைத்தீ யாகும்!
பொறுத்திருக்கும் உயிரெல்லாம் நெடுநாள் வாழும்
பொறுமையிலா உயிரேதான் விரைவில் சாயும்!
பொறுமைக்கே இலக்கணமாய் இலங்கும் பெண்டிர்;
புவியாளும் வாய்ப்பினையும் இங்கு பெற்றார்!
பொறுமைதரும் செயலெல்லாம் உலகை யாளும்
பொறுமைபெறா வெறிச்செயலால் வன்மை ஓங்கும்!

கற்களிலே உயிர்ச்சிலையைத் தோற்றும் சிற்பக்
கலைகற்றோன் கைகட்கே பொறுமை வேண்டும்!
கற்பனையில் இறவாத நினைவைத் தேக்கிக்
கடமைப்'பா' கற்றுயரப் பொறுமை வேண்டும்!
கற்கண்டுக் குழவியரின் அழுகை மாற்றிக்
கமலமுகம் காணுதற்கும் பொறுமை வேண்டும்!
அற்புதத்தை உருவாக்கும் விஞ்ஞா னிக்கே;
ஆய்ந்தறிந்தே பணிமுடிக்கப் பொறுமை வேண்டும்!

பாரதத்தை அடிமையெனும் விலங்கைக் கொண்டே
பரங்கியர்கள் முன்னாளில் இந்த நாட்டை
போர்க்கைதி யாய்ச் செய்த நிலையி னாலே;
புனிதத்தாய் உரிமையினைச் சிறையி லிட்டார்!
போர்பந்தர் நல்லூரான் தனது வாழ்வைப்
பொறுமைத்தாய் துயர்நீக்க அர்ப்பணித்தான்!
போரில்லா புரட்சியினைத் தோற்றி யன்றே;
புவிமீதே அடிமைவிலங் கொடித்தார் காந்தி!

இந்நாட்டின் சிறைப்பூட்டை உடைத் தெறிந்து
இலங்கும் நல் லூரிமையெனும் வண்ணத் தேரை
அந்நாளில் அகிலமெனும் பாதை ஊடே;
ஆற்றலொடு நாமெல்லாம் இழுத்தே வந்தோம்!
எந்நாளும் விரைகின்ற வேகம் நீக்கி;
ஏனோதேர் செல்கின்ற நிலைதா னிங்கே
இந்நிலையில் இத்தேரை இங்கு மங்கும்;
இழுத்திட்டால் தேர்நிலைமை என்ன வாகும்?

உரிமைத்தேர் பள்ளத்தில் ஓடும் போதே;
ஊர்வழியில் அதுசாய்ந்தே விழுதல் கூடும்!
புரியாத எண்ணத்தால் கலகம் செய்யும்
புதிருக்கே புதுப்பாதை காணல் வேண்டும்!
சரிஇஃதே கிடக்கட்டும் என்றே பேசிச்
சமுதாயத் திடர்செய்யும் மக்க ளாலே;
அரியசெயல் வீழ்த்திடவே எண்ணும் தீமை
அடங்கிட்டால் அதுவேதான் உலகின் வெற்றி!

தென்றல்தன் பொறுமையினை இழக்குங் காலம்;
திசையெங்கும் சூறையெனும் காற்றே தோன்றும்!
மன்றத்தில் உணர்வாலே சினமே மீளின்
மக்கள்சேர் கூட்டமதில் போரே மிஞ்சும்!
என்றைக்கும் உடமையொடு உரிமை எல்லாம்;
எங்கெங்கும் வாழ்ந்திடவே வேண்டு மென்றால்
நன்றிய வையத்துள் பொறுமை என்னும்;
நங்கையவள் நின்றிருக்க உரிமை வாழும்!

மயிலாட வான்நோக்கிப் பொறுத்திருக்க
மயில்காணக் கார்நங்கை முகிலாய் வந்தாள்!
குயில்கூவிக் களிப்பெய்தக் காலம் நோக்கிக்
குயில்காத்தே யிருந்ததினால் வேனில் வந்தாள்!
தயிர்ப்பொறுமை மத்துக்கே காட்டும் போதே
தானெழுமே கடல்நுரைபோல் வெண்ணெய் பந்து?
பயிர்பொறுத்து விளைவதிலே பாரில் மக்கள்
பசியாற்ற இன்றைக்கே பயிரா லாமோ?

உயிர்த்தமிழின் காப்பியத்தில் வாழும் மங்கை
உயிராகி உயிர்காக்கும் உயிராய் ஆனாள்!
உயிர்நங்கை உடலுக்கே உணர்வை யூட்டும்
உடற்கவையைப் பொறையாக்கி உளத்துள் வைத்தாள்!
உயிர்த்தலைவன் பிரிவினுக்கும் பொறுத் திருந்தே
உலகத்தில் உயர்மகளின் பண்பி னாலே
உயிராடல் தோற்றிடுவாள் வயிற்று தித்தாள்;
உயிர்க்காக்க மேகலையாள் தெய்வ மானாள்!

மலர்க்கொடியில் பூத்துமலர் காத்தி ருக்க
மலர்க்காவில் பூவெல்லாம் காயாய் மாறும்!
மலர்க்காயாய் மாறிடவே பொறுமை கொள்ள
மரக்கிளையில் தேன்கனியாய் மாறிற் றம்மா!
நிலத்திற்குள் நிலக்கரியே பொறுமை காட்ட
நிலமங்கை 'வைரக்கல்' மகனைப் பெற்றாள்!
உலகத்தின் மெய்யதனைப் பார்ப்ப தற்கே;
உணர்வடக்கும் தவஞானம் வெற்றி யாகும்!

பொறைகாணும் நாவிற்குள் இனிதே தோன்றும்
பொறையுடலில் அடக்கமெலாம் பொதிந் திருக்கும்!
பொறுமையெனும் ஒளிச்சுடரே இருள்போ தல்போல்
பொல்லாத கடுஞ்சினமே நில்லா தோடும்!
வறுமையிலும் பிறர்க்கின்னா செய்யா மாந்தன்
வலிமையினை வையந்தான் வாழ்த்தும் போற்றும்!
பொறையாலே அருள்கொள்வீர் நலமே கண்டீர்
புத்துலகின் ஒளியாகி விழிபோல் வாழ்வீர்!

ரோகிணி வளர்த்த துறவு

கபிலவாஸ்து நகரம். சுத்தோதனரது அரண்மனை பொலிவிழந்து விட்டது. அந்தக் கடமை வீரன் மறைந்து விட்டார். இல்லற வாழ்வில் இடி மேல் இடி விழுந்தபோதும், மனம் தளராமல் தம் குடிமக்களைக் காப்பதே கடமை என்று வாழ்ந்தவர். அளப்பரியச் செல்வம், அரண்மனை நிறைந்த உறவினர்கள், நண்பர்கள். சுத்தோதன மகாராஜாவுக்கு அனைத்துப் பாக்கியங்களும் இருந்தன. ஆனால் அவர் வாழ்க்கையில் நிம்மதியான ஆனந்தம் பெற்ற நாள் கிடையாது.

இளமையில் அரசுக் கட்டில் ஏறினார். அரசவைச் சூதுகளால் பல வகைத் துன்பம் அநுபவித்தார். இனி அரச பதவி உறுதியாக இருக்கும் என்கிற நம்பிக்கை நிலைத்தபோது, சந்தான பாக்கியம் இல்லையே என்ற கவலை அரித்தது. திருமணமாகி இருபது ஆண்டுகள் சென்ற பின்னரே ராணி மகாமாயை கர்ப்பம் தரித்தாள். ஆனால் இந்த நாட்களில் ராணியுடன் சகஜமாகப் பழக முடியவில்லை. அவளைப் பார்க்கும் போதே ஏதோ ஒரு பயமும், பக்தியும் அவரது நெஞ்சை அமுத்தலாயின. மகாமாயை தன்னுள் வெண்ணிற அரசயானை ஒன்று புகுந்தது போல் கனவு கண்ட நாளிலிருந்து அவர்கள் அன்புக் காதலன் - காதலியாக மயில் தோட்டத்தில் வாழ்ந்த இன்பம் மறைந்தது.

லும்பினியின் புறச்சேரியில், பட்ச மரங்கள் நிறைந்த தோட்டத்தில் மகாமாயைக்கு ஆண் குழந்தை பிறந்த போது சுத்தோதனர் மனம் பொங்கிப் பூரித்தது. வம்சம் தழைத்து விட்டதல்லவா? பொன்னும், மணியும், தானியமும், பசுவுமாகக் கை சிவக்கத் தானம் செய்தார்.

தானம் செய்து தளர்ந்த அரசர் ஓய்வு எடுத்துக் கொள்ளும் போது, அரசவைப் புரோகிதர்கள் வந்தனர். ''இக்குழந்தை சக்கரவர்த்தி ஆவான் இல்லையேல் பேரரசரும் பணியும் சந்நியாசி ஆவான்'' என்று அவர்கள் கூறினார்கள். அரசர் மனம் துணுக்குற்றது. இதென்ன?

ஒருவழியாகத் தம்முள் விரியும் கவலையை மூடி வைத்தபோது, மகாமாயை அவரைப் பிரிந்து சென்று விட்டாள். ஏழே நாட்கள் ஆன பச்சிளங் குழவியை விட்டு ராணி மறைந்தாள். அன்பு மனைவியாக, ஆதரிசப் பெண்மணியாக, அருள் நோக்குத் தேவதையாக அந்தக் கோலியர் குலக்கொழுந்து இந்தச் சாக்கிய குலத்தில் விளக்கேற்ற வந்தாள். உலகம் உய்ய ஒரு நற்செல்வனை ஈந்து வானுலகம் சென்றாள்.

அந்தக் கணமே சுத்தோதனர் மனத்தளவில் சந்நியாசம் ஏற்றார். அருமைச் சகோதரியின் சடலத்தின் மேல் விழுந்து கதறும் மகாபிரஜாபதியை அழைத்தார்.

''இக்குழந்தையை வளர்த்து மனிதனாக்குவது உன் கடமை. செய்வாயா?''

தாமரை மலர் போன்ற குழந்தை. என்ன கொடுமை! மகாமாயைக்கு இவனைச் சீராட்டும் பாக்கியம் இல்லாமல் போயிற்றே!

குமுறும் அப்பெண்ணை அரசர் சமாதானப்படுத்தினார். ''தேவகி பெற்றாள். ஆனால் யசோதைதானே வளர்த்தாள்?''

குழந்தையை மார்புடன் அணைத்துக் கொண்டாள் மகாபிரஜாபதி கௌதமி. ''ஓ! இவனும் தெய்விக அவதாரமே!''

அதுவரை குழந்தைப் பேறு இல்லாத கௌதமியே சித்தார்த்தனை வளர்த்தாள். அவளுக்கென்று நந்தனும், ரூபநந்தையும் பிறந்த போதும், சித்தார்த்தனே அவளுக்குச் செல்லப் பிள்ளை. அவனது வீரத் திருவிழிப் பார்வையும், கருணை சிந்தும் உள்ளமும், நெடிதுயர்ந்த சிவந்த மேனியும் கண்டு பெருமையால் பூரித்தாள். கல்வியிலும் சிறந்து விளங்கின சித்தார்த்தனுக்குப் பொருத்தமான மனைவியைத் தேடினாள். கோலியர்களில் பெருஞ்செல்வனாகிய சுப்பிரபுத்தனின் மகள் கோபையைத் தேர்ந்தெடுத்து, யசோதரை என்ற மறு பெயரிட்டு, சித்தார்த்தனுக்கு மணமுடித்தாள். உரிய காலத்தில் மகனும் பிறந்தான். அரண்மனை எங்கும் இன்ப வெள்ளம்!

தட்டு நிறையக் கற்கண்டுக் கட்டிகளையும், கோப்பையில் மணமிக்க கஸ்தூரியையும் எடுத்துக் கொண்டு மகாபிரஜாபதி சித்தார்த்தனிடம் சென்றாள்.

''தந்தையாகி விட்டனை, மகனே!''

சித்தியை நோக்கிய சித்தார்த்தன் முகத்தில் பூரிப்பு இல்லை. ஏதோ யோசனையாக, ''ராகுலோ ஜாதோ'' என்றார்.

''அபசகுனமாகப் பேச வேண்டாமப்பா. மகன் பிறந்ததால் 'தடுப்பு ஏற்பட்டது' என்கிறாயே! நம் வம்சம் தொடரும் என்று மகிழ வேண்டிய சமயம் இது!''

''வம்சம்! ஆ! முடிவில்லாத பரம்பரைகள்! மீண்டும் மீண்டும் இறப்பு, பிறப்புச் சுழலில் சிக்கிய சோர்வு என்னை அழுத்துகிறது அம்மா!''

கையோடு மனைவியை, மகனை, மாளிகையைத் துறந்து சென்று விட்டார் இளவரசர். இதென்ன பேரிடி! அதையும் தாங்கினார் மாமன்னர். பேரனுக்கு ராகுலன் என்றே பெயரிட்டு வளர்த்தார். வயது மூத்து, சரீரம்

பிரேமா நந்தகுமார்

தளர்ந்தது. ஆயினும் கடமையே கண்ணாகச் சுத்தோதனர் வாழ்ந்தார். அமரிக்கையுள்ள பேரன் ராகுலனிடம் நம்பிக்கையை ஊன்றிக் கொண்டார். ஆனால் விதி அவரை விடவில்லை. ஏழே வயது ராகுலன் தந்தையின் பிட்சுக்கள் சங்கத்தில் சேர்ந்து விட்டான். இனி யாருக்காக இந்த அரசுக் கட்டிலைக் காக்க வேண்டும்?

நாளாக ஆக, சுத்தோதனருக்கு மகன் செய்தது சரி என்றே தோன்றியது. நிலையில்லாத, அல்லல் நிறைந்த வாழ்வில் தோய்ந்து தேய்வானேன்? நிம்மதியாகச் சங்கத்தில் சேர்ந்து ஏதேனுமொரு தோட்டத்தில் அமைதியாக எஞ்சிய வாழ்நாட்களைக் கழிக்கலாம். ஆனால் அவருடைய நாடு குடியரசு. அவரது குடிமக்களுக்கு அவர் வேண்டும். அவரால் துறவறம் ஏற்க முடியாது. கடைசி மூச்சு வரை பாடுபட வேண்டும். பாவம், அவரது கடைசி நாட்களும் வேதனையானவை. முன்னாள் வினைப்பயன் போலும்!

சிறு பொறி பெருந்தீ ஆவது போல், அவர் நாட்டுக்கும், அண்டை நாட்டுக்கும் இடையே பெரும்போர் மூண்டு விட்டது. சாக்கியக் குடிமக்களுக்கும், கோலியருக்கும் சண்டை. இருவரது நாடுகளுக்கும் நடுவே பாய்ந்து உயிர்ப்பு தந்த ரோகிணி நதி இப்பொழுது உயிர் கொல்லும் நச்சுப் பொய்கையாகி விட்டது. பயிர் முற்றும் தருணம், நீர் போதவில்லை என்று கோலியர்கள் ரோகிணிக்கு அணை கட்டினார்கள். "மகசூலின்றி நெற்களஞ்சியத்திற்காகப் பொற்களஞ்சியத்தைக் காலி செய்ய மாட்டோம். எங்களுக்கு நதி பாயட்டும்" என்று சாக்கியர்கள் அணையைத் தாக்கினார்கள். வசவு, திட்டு, ஏசல், அடிதடி, தீ வைத்தல், கொலை!

சுத்தோதன மகராஜா நோயுடன் போராடும் நேரம். அவர் சாக்கியர். ஆனால் மனைவி கோலியர் குடிப் பிறந்தவள். இரண்டு குடிகளும் உறவு முறைகளால் கட்டுண்டவை. கடவுள் உவந்தளிக்கும் நீரை முறையாகப் பகிர்ந்து கொள்ளாமல் பங்காளிச் சண்டை நீடித்தது. ரோகிணி ஆற்றில் செங்குருதி கலந்தது.

"நீதான் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும், கௌதமி! உன்னிடம் எந்தப் பொறுப்பு அளித்தாலும் நீ பின் வாங்கியதில்லை. மீண்டும் சகோதர பாவம் என் நாட்டில் நிலவும் என்ற நம்பிக்கையுடன் கண் மூடுகிறேன்!"

மகாபிரஜாபதி கௌதமி கலங்காத குரலில் பேசினாள்.

"ஐயனே! நிம்மதியாக வானுலகம் செல்வீர். அங்கிருந்து இந்நாட்டில் அமைதி நிலவக் காண்பீர்" என்ற சொற்கள் அமுதைத் தெளிக்க, சுத்தோதனர் விண்ணுலகு சென்றார்.

'இந்த அமைதி எப்படி ஏற்படும்? தண்ணீர்ச் சண்டையை நிறுத்துவது எப்படி?' என்பதே கௌதமியின் யோசனை. புதிய அரசன், அரசி வந்து விட்டாலும், அனைவருக்கும் அவளே தாய், வழிகாட்டி. அவள் சொல்லப் போவதைச் செயலாக்குவதற்கு அனைவரும் தயாராக இருந்தனர்.

"அன்னையே! வகுளமாலை வந்திருக்கிறாள்."

"வரச் சொல்!"

கோலியர்களது குடும்பங்களில் பெருதன வணிகன் தேவபால சிரேஷ்டியின் மனைவி இரு பெண்களுடன் வந்து வணங்கினாள். அப்படியே நிலத்தில் சாய்ந்து விசும்பினாள்.

"எல்லாம் நலந்தானே?"

வழக்கமான உபசார வார்த்தை. ஆனால் கண்கள் கவனித்த போது துணுக்குற்றாள்.

"இப்பெண்கள் சுமதி, சுஷேணா அல்லவா?"

கைம்பெண் கோலத்தில் இரு அழகிய பெண்கள். அழுவதற்குக்கூடப் பயம் போலும். இறுகிய முகங்களுடன் நின்றனர்.

"ரோகிணித் தாய் கூற்றமாகி விட்டாள், சகோதரி. என் இரு மகன்களையும் விழுங்கி விட்டாள். அதனால் இப்பெண்களைத் தீ விழுங்க வேண்டுமாம்! இழுத்துக் கொண்டு இரவோடு இரவாக ஓடி வந்தேன்."

மகாபிரஜாபதி மெள்ள எழுந்து வந்து வகுளமாலை பக்கத்தில் இருந்த தாழ்ந்த முக்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

"ரோகிணி உயிர் கொடுப்பவள். உயிரை எடுப்பவளல்ல. இது நாமாகச் செய்து கொள்ளும் கொடுமை."

"எதுவானால் என்ன? என் துக்கம் மாளாது."

இது தினசரி வழக்கமாகி விட்டது. தினமும் சண்டை, சச்சரவு. சாக்கியப் பெண்கள் அல்லது கோலியப் பெண்கள் முறையீடு. சண்டையில் ஆண்கள் சாக, அவர்களது சிதைகளில் இளம் மனைவிகளைத் தள்ளும் முறைகேடு. அவள் யாருக்காகப் பேசுவாள், எந்தக் கைம்பெண்ணுக்காக வருந்துவாள்?

"நான் மகனை உயிரோடு பறிகொடுத்திருக்கிறேன், வகுளமாலை" என்றாள் துக்கத்துடன்.

"நீங்கள் வேண்டுமானால் சித்தார்த்தரைப் பார்க்கலாம். என் புதல்வர்களை மண் தின்று விட்டதே! இனி அவர்களைக் காண முடியாதே!"

"மகனைப் பார்த்து என்ன பிரயோசனம், வகுளமாலை? சாகுமட்டும் அரசர் கூறி வருந்துவதுண்டு. எவ்வளவு ஆசையாக மகனைக் காணச் சென்றார்! அப்பா என்று ஒரு வார்த்தை, ஆதரவாக ஒரு சொல் உண்டா? தந்தையை வேற்றாளைப் பார்ப்பது போல் பார்த்து அனுப்

பினது ஒரு வகையில் கொடுமை தானே?''

யசோதரை அறைக்குள் வந்தாள். கோலியப் பெண்களின் கோலத்தைப் பார்த்ததுமே புரிந்து விட்டது. சிரிப்பு என்பதை மறந்துவிட்ட அவள் முகம் வேதனையில் முறுகிற்று. அவ்விளம் பெண்களை அணைத்தவாறு உள் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

''உண்மைதான்!'' பெருமூச்செறிந் தாள் வகுளமாலை. ''கைம்பெண் கோலமில்லாவிட்டாலும், பாவம் யசோதரை! கருகிப் போனதே அவள் வாழ்வு! எனக்கு ஒன்று தோன்றுகிறது, சகோதரி.''

''என்னம்மா?''

''மகாராஜா சாக்கியர்களையும், கோலியர்களையும் ஒருங்கிணைக்க முயற்சி செய்தார். வன்முறை தற் கொலைக்கு ஒப்பானது என்று அவர் மன்றாடியும் மக்கள் கேட்கவில்லை. அந்த வேதனை தீராமல் காலமானார். உங்கள் மகனை உலகமே புகழுகிறது. அவர் முன் நின்றால் மந்திரத்தினால் கட்டுண்டது போல் ஆகிவிடுகிறார் களாம். ஒரு வேளை தந்தையால் முடி யாதது தனையனால் முடியலாம் அல்லவா?''

''அர்த்தமுள்ள பேச்சு வகுள மாலை. ஆனால் சித்தார்த்தன் வரு வானா?''

''அவரைக் கருணாமூர்த்தி என் கிறார்கள். முன்பு இங்கு வந்த போது அவருடைய கண்களில் தோன்றிய சாந்தம் நினைவிருக்கிறதா? அவரது சந் நிதியில் என்ன சித்து நடக்குமோ! என் மனத்தில் வருத்தமும், கோபமும் இல் லாமல் ஒழிந்ததே! அவர் வந்து ரோகிணி ஆற்றின் கரையில் நின் றாலே போதும். பூசலும், பொறாமை யும், ஆசையும், அற்பத்தனமும் அடங்கி விடும் என்று தோன்றுகிறது.''

மகாபிரஜாபதிக்குத் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டுப் பூரிப்பு.

''உண்மைதான் வகுளமாலை; இனியும் இந்த அவலம் பொறுப்ப தில்லை. ஐயோ, நிலத்தில் பாடுபட்டு, மரகதமும், பொன்னும் விளைவிக்க வேண்டிய இளைஞர்கள் இப்படி நூற்றுக் கணக்கில் பட்டுப் போவதைக் காணும்போது கை கட்டி இருப்பதா? யாரங்கே?''

தாதியிடம் எழுத்தாணி வாங்கிக் கடிதமெழுதினாள் கௌதமி.

'அருமை மகனுக்குச் சுருக்கமான வாசகம். சித்தார்த்தரின் தந்தை வீடும், தாய் வீடும் பொருது கொண்டு அழி கின்றன. ததாகதரின் வரவு அத்தியா வசியம்.'

சந்நியாசிகள்கூடத் தாய் சொல் லைக் கட்டலாகாது.

ரோகிணி ஆற்றின் கரையில் பிட் சுக்கள் புடைசூழ வேள்வித் தீயே போல் வந்தமர்ந்த புத்த பகவானது அருள்வாக்கைக் கோலியர்களும், சாக்கியர்களும் கேட்டனர். தொடர்ந்து வரும் பகை நினைவுகளைக் களைந் தனர். அமைதியை நிலைநாட்டினர்.

மகாபிரஜாபதியின் எண்ணம் ஈடேறியது. சுத்தோதனரது ஆத்மா நிம்மதி அடைந்திருக்கும் என்று மகிழ்ந் தாள். சித்தார்த்தனைப் போற்றினாள். சில வாரங்கள் கபிலவாஸ்து நகரத் திலும், புரச்சேரிகளிலும் தரும முழக் கம். ரோகிணியின் நிர்மலமான நீர் கங்கையினும் புனிதமான ஒளியுடன் பாய்ந்தவாறு புத்த பெருமானின் உப தேசங்களை எதிரொலித்தது.

''பழக்குகிறவனால் அடக்கப்பட்ட குதிரைகளைப் போல எவனுடைய காமங்களானவை அடக்கப்பட்டிருக் கின்றனவோ, எவன் அகங்காரத்தைத் துறந்தவனோ, எவன் அசுத்தத்தி னின்றும் விலகினவனோ அவ்வித மான பரிபக்குவமுற்றவனைக் கண்டு தேவர்களும் அழுக்காறடைவார்கள். பகை நிரம்பிய இவ்வுலகத்தில் ஒரு சத் துருவும் இல்லாமல் பரிபூரணானந்தத் தில் நாங்கள் வாழ்கிறோம்; பகை நிரம்பிய மனிதரிடையில் பகையில் லாமல் நாங்கள் வசிக்கிறோம்... ஒரு வரும் இல்லாமல் ஒழிந்திருக்கிற வீட்டில் இருந்து கொண்டு தன் ஆத்மா வைச் சாந்தியால் நிரப்பிக் கொண் டிருக்கிற பிட்சுவானவன் சத்தியத்தி லேயே கருத்துடையவனாகி, மனிதர்க் குரிய ஆனந்தத்தைக் காட்டிலும் சிறந்த ஆனந்தத்தை அநுபவிக்கிறான்.''

பிம்பிசார மன்னன் அழைப்பை ஏற்று ததாகதர் ராஜகிருஹம் சென்று விட்டார். அவர் கூறிச் சென்ற பொன் மொழிகள் கபிலவாஸ்து நகர மக்கள் இதயங்களில் ஒலித்தவாறு இருந்தன. பல ஆண்டுகளுக்குப் பின் மகாபிரஜா பதி கௌதமி மனத்தில் நிம்மதி குடி யேறியது.

''தாயே, வகுளமாலையார் வந் திருக்கிறார்.''

முகமெல்லாம் பிரகாசமாக மகா பிரஜாபதி தன் தோழியை வர வேற்றாள். மூப்பு ஏற ஏற, தனிமை பயமுறுத்துகிறது. பழங்கதைகள் பேசிப் போது போக்கி இத்தனிமையை ஓரளவு போக்க முடியும்.

ஆனால் இதென்ன?

''மீண்டும் சண்டையா, வகுள மாலை?'' கௌதமி அவசரமாக இருக்கையிலிருந்து எழுந்தாள். உடல் தள்ளாடியது.

வகுளமாலைக்குப் பின்னால் ஒரு கூட்டமாகப் பெண்கள். இளவயதினர், நடு வயதினர், மூதாட்டிகள்.

''சண்டையில்லை. சமாதானம் தான்.''

வகுளமாலை முகத்தில் சுரத்து இல்லை. அவள் பின்னால் நின்ற பெண்கள் தலைப்போர்வையை முகத்தின் மீது இழுத்துக் கொண்டு விசும்பினார்கள்

''என்ன நடந்து விட்டது? ஏனம்மா, இவர்கள் அனைவரும் சுமங்கலிகளாகத் தெரிகிறார்கள். சுமங்கலிகள் கண்ணீர்விடக் கூடாது.''

வகுளமாலை மகாபிரஜாபதியின் கைகளைப் பிடித்துக் கொண்டு அவளது கண்களை உற்றுப் பார்த்தாள். குரல் நடுங்கியது.

''சண்டைதான் கண்ணீரைப் பெருக்கும் என்பதில்லை. இங்குச் சமாதானமும் அவலத்திற்குக் காரணமாகியிருக்கிறது. வாழ்க்கையில் சண்டையானாலும், சமாதானமானாலும் துயர்ப்படுவது பெண்களே என்பதை ரோகிணி ஆற்றின் இரு கரைகளும் எடுத்துக்காட்டுகின்றன.''

''புரியும்படி சொல். இது என்ன விடுகதை? ரோகிணியின் கரைகளில் நடப்பதென்ன? ஆவினங்களும், ஆட்டு மந்தைகளும் வரவில்லையா? நிலங்களுக்கு நீர் பாயவில்லையா? சாக்கிய இளைஞர்களும், கோலிய இளைஞர்களும் ஆக்கப் பணிகளில் ஈடுபடவில்லையா?''

வகுளமாலை பெருமூச்சு விட்டாள்.

''ஆற்றங்கரைகள் வெறிச்சோடி விட்டன.''

''என்ன?''

''அநேகமாக எல்லா ஆண்களும் புத்த பெருமானுடன் சென்று விட்டார்கள். கண்ணன் குழல் கேட்டுப் பின்தொடர்ந்த கோபியர் போல், தேவபால ச்ரேஷ்டியாரை முன்னிட்டுக் கொண்டு நம் சாக்கியரும், கோலியரும் தருமங்கேட்டுத் தவம் புரியச் சென்றுவிட்டனர். புத்த பெருமானது சங்கம் கடல் போன்று விரிந்து விட்டது. ஜேதவனமே போதவில்லையாம்! தோட்டங்களிலும், காடுகளிலும் துவராடையே காட்சியாம்!''

மகாபிரஜாபதி திடுக்கிட்டு நின்றாள்.

''அம்மா! வகுளமாலையார் சொல்வது போல் சண்டையானாலும், சமாதானமானாலும், யார் என்ன செய்தாலும் பெண்களே துன்புற வேண்டியிருக்கிறது. இந்தப் பெண் ஜன்மம் உலகில் இல்லாது போகட்டும்!

அருமை யசோதரையை அணைத்துக் கொண்டாள் மகாபிரஜாபதி.

''இழந்த சோகம் சுசப்பாக மாறக் கூடாகா. யசோதரை. பெண்மை தெய்விகமான செயல்பாடு. அதைப் பழிப்பதால் பயனில்லை. நடந்துவிட்ட ஒன்றுக்காக வெறுப்பதைவிட, நடக்கப் போவது பற்றி ஆலோசிப்பதே விவேகம்!''

''ஆலோசனையால் பலன் என்ன? என் கணவர் திரும்பப் போவதில்லை. என் அருமை மகன் பிட்சு ஆகி விட்டான். இனி சந்ததி இல்லை. வகுளமாலையார் தள்ளாத வயதில் கணவனை உயிரோடு பறிகொடுத்துள்ளார். இந்தப் பெண்களும் அப்படிக் கைவிடப்பட்டவர்கள். சண்டை காரணமாகக் கடவுளால் கைவிடப்பட்ட பெண்கள் கூட்டம் இல்லாத இடமில்லை. வேறு என்ன வழி? இப்படி வருந்தி வருந்தி வாழ்வில் தேய்வானேன்? ரோகிணியின் மடி எங்களை அழைக்கிறது.''

யசோதரையின் முகத்தில் தோன்றிய தீவிரம் மகாபிரஜாபதியின் முகத்தில் தணலை வீசியது. அன்னையின் நெஞ்சம் அலையுற்று ஓய்ந்தது.

''இல்லையம்மா. நம் ரோகிணி ரத்தினகர்ப்பை. இந்த உயர்ந்த அன்னை மடியில் வளர்ந்த சாக்கியர்களும், கோலியர்களும் சம்பந்தம் செய்ததினால் பிறந்தவன் உன் கணவன். நமது வழிகாட்டியாக அறநெறி கூறும் தயாளன். வருந்தாதே. அவனே நமக்கு இச்சிக்கலிலிருந்து விடுதலை தருவான். வகுளமாலை! குழந்தைகளே! எல்லோரும் பறப்படுங்கள்!''

மகாபிரஜாபதியும், வகுளமாலையும் ததாகதரை வைசாலி நகரத்தில் சந்தித்த போது, சங்கம் வெகுவாகப் பெருகி விட்டதைக் கண்டார்கள். ஆனால் அந்தப் பிட்சுக்களில் யாரை யார் அடையாளம் கொள்வது? அனைவர் கையிலும் பிட்சாபாத்திரம். இடையில் துவராடை. துக்கத்தையும் மீறிய ஆர்வத்துடன் சாக்கிய, கோலியப் பெண்மணிகள் இந்த அதிசயத்தைக் கண்டார்கள். கபிலவாஸ்துவிலிருந்து வந்த பெண்கள் வணங்கி உட்கார்ந்த பின் வழக்கம் போல் ததாகதர் அவர்களுக்குத் தருமோபதேசம் செய்தார்.

''பிறவி துன்பம். அனைத்தும் துன்பம். பற்றினால் பிறவி ஏற்படுகிறது. வீடுமின் முற்றவும்! பெண்மணிகளே, உங்கள் வாழ்வில் பல்லாயிரம் வேதனைகள் அலை மோதுவது அறிவேன். பெண்கள், ஆண்கள் எல்லாருக்குமே பிறந்தால் வருவது துன்பம். இத்துன்பத்தைக் கடப்பதற்கு வழியான அஷ்டாங்க மார்க்கத்தில் நடவுங்கள்; நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு என்னும் எட்டைப் பின்பற்றுங்கள்!''

பெண்கள் அனைவரும் வெளிச்சென்றபின் மகாபிரஜாபதி மாத்திரம் கை கூப்பியவாறு நின்றாள்.

''ஒரு விண்ணப்பம்!''

ததாகதர் முறுவலித்தார்.

''என்ன தாயே?''

''சங்கம் விரிந்து வருகிறது.''

''ஆமாம். நல்வழியில் நடக்க சித்தமாக சாதனை ஏற்கிறார்கள். நன்று.''

''எல்லாம் அறிந்த ததாகதருக்கு இதுவும் தெரிந்திருக்கும்.''

''என்ன?''

''சங்கம் விரிந்த அளவு திக்கில்லாத பெண்கள் சமூகமும் விரிந்து விட்டது.''

''அறிவேன்.''

''இந்த அபாக்கியவதிகளுக்கு வழி என்ன?''

''வாழ்க்கையின் துக்கங்களில் இதுவும் ஒன்று.''

''யசோதரை போல.''

''ஆமாம். ஆனால் அதைத் துக்கம் என்று நினைக்க வேண்டியதில்லை. விடுதலை என்றும் மகிழலாம்.''

அனைவருக்கும் எங்கள் அகம் கனிந்த தீபாவளி வாழ்த்துகள்

ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி யருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி யேறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி யேகஜோதி யேகஜோதி யேகஜோதி.

ஆதிநீதி வேதனே ஆடல்நீடு பாதனே
வாதிஞான போதனே வாழ்கவாழ்க நாதனே

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

\- திருஅருட்பிரகாச வள்ளலார்

விளம்பர உதவி :

சக்தி சுகர்ஸ் லிமிடெட்

(வார்ப்பக பிரிவு)

சக்தி சுகர்ஸ் வார்ப்பகம் அதி நவீன முறையில் அமைந்த வார்ப்பகம். தமிழ் நாட்டிலேயே சி.என்.சி. மெஷின்கள் எங்கள் வார்ப்பகத்தில் உள்ளன. தயார் செய்யும் காஸ்டிங்குகளை மிகமிகத் துல்லியமாக மெஷினிங் செய்து அனுப்புகிறோம்.

சக்தி சுகர்சின் வார்ப்பகம் நமது நாட்டின் மோட்டார் வாகனத் தொழிலுக்குத் தேவைப்படும் சிறந்த ரக எஸ்.ஜி. அயர்ன், கிரே அயர்ன், வார்ப்படங்கள் தயாரித்து வருகிறது.

சக்தி சுகர்ஸ் வார்ப்பகத்தில் உருவாக்கப்படும் வார்ப்படங்கள் மிகவும் தரமுள்ளதாகவும், உறுதியாகவும் இருக்கின்றன. தயாரித்த பொருட்களைத் தக்க தரம் வாய்ந்த இயந்திரங்களைக் கொண்டு பரிசோதனை செய்து அவைகளை எக்ஸ்ரே மூலமும் நுட்பமான முறையில் சோதனை செய்யப்படுகின்றன.

சக்தி சுகர்ஸ் லிமிடெட்,
(வார்ப்பக பிரிவு)

முகாசிபல்லகவுண்டன்பாளையம் - 638 056.
ஈரோடு ஆர்.எம்.எஸ்.

தொலைபேசி : 54 & 74

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

மங்கல சௌபாக்கியத்தின் சின்னம்

ஐடெக்ஸ்

பூர்ணிமா குங்குமம்

matt finish

ஐடெக்ஸ் 50 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின் மகத்தான சின்னம்

அரவிந்த் லாபரடரீஸ், சென்னை 600 033.

Imageads 2790

பற்றை முற்றும் களைந்து, மலை போல் அசைவற்று அமர்ந்துள்ள மகனைக் கௌதமி பார்த்து வருந்தினாள். இப்படியும் விரக்தி பாவனை உண்டா!

அவள் பேசினாள்.

''அது போகட்டும். விதி கை விட்டது, கட்டிய கணவன் கைவிட்டான், பெற்ற மகன்களும் கைவிட்டனர் என்பது மாத்திரமல்ல. அவ் விடத்திய தருமோபதேசம் கேட்ட பின்னர் பல பெண்களிடமும் விழிப்பு தோன்றியிருக்கிறது. இவர்கள் அனைவரும் ஏன் சாதனை மேற்கொள்ளக் கூடாது?''

''என்ன சாதனை தாயே?''

''பிட்சுக்கள் ஏற்றிருக்கும் சாதனை.''

பகவான் புத்தரது கண்களில் சுழி விரக்கம் தோன்றியது.

''சங்கத்தில் சேர்ந்து சாதனையுடன் ஒன்றுவது எளிதல்ல. ஆண்கள்கூட முழுமையாகச் செயல்பட முடியாமல் தத்தளிக்கிறார்கள்.''

''அதற்காக நாங்கள் சம்சாரத்தில் பாழ்கிணற்றுத் தவளைகளாகவாழ்ந்து, இறந்தின்னம் பிறக்க வேண்டுமா?''

''அப்படியல்ல, தாயே'' என்றார் ததாகதர்.

கனிவான சொற்களை மேலும் கூற லானார். ''உபாசிகையாக இருந்தால் போதும். நகுலனின் அன்னை போலும், மிகாரனின் நாட்டுப்பெண் போலும் இருக்கலாமே! இல்வாழ்க்கையில் இருந்தும் தருமத்தைப் பற்றி இவர்கள் வாழ்கின்றனர். மும்மணிகளைச் சரண்டைந்து அன்பு, கருணை, மலர்ச்சி, நடு நிலைமையுடன் வாழ்ந்தால் அதுவே பெருஞ்சாதனை!''

''சொல்வது சுலபம். ஆனால் மனத்தையும், உடலையும் கட்டுப்படுத்தப் புறவழியும் அவசியமானது என்பது ததாகதருக்குத் தெரியும்'' என்றாள் கௌதமி.

''இப்புறவழிகளைப் பெண்கள் விரும்ப மாட்டார்கள்.''

ததாகதருக்குப் பெண்களது ஆன்ம பலம் பற்றிய உண்மை பூரணமாகப் புரியவில்லையோ?''

மகாபிரஜாபதியின் குரலில் சிறிதளவு சூடு தோன்றியது.

புத்த பெருமான் மெதுவாகக் கூறினார்.

''புரியாமல் இல்லை. பாரதப் பெண்கள் வந்த வழி வீரம் விளைத்த வழி. சாவித்ரி என்பவள் தெய்வத்தின் முடிவையே மாற்றியமைத்த குணமணி என்பது அறிவேன், தாயே!''

''பின் ஏன் இந்தத் தயக்கம்! பிட்சுக்கள் சங்கம் அமைத்துச் சாதனையில் ஈடுபட்டிருப்பது போல் நாங்களும் சாதனை செய்கிறோம். அனுமதி அருள வேண்டும். வழிகாட்ட வேண்டும்.''

'மாரனது சோதனை போல் அல்லவா இருக்கிறது! எப்படியேனும் கௌதமியின் மனத்தை மாற்றி அவர்களைக் கபிலவாஸ்துவிற்குத் திருப்பி அனுப்ப வேண்டும்.'

''தாயே! பெண்களால் முடியாது என்பதற்காகக் கூறவில்லை. பெண்களை உள்ளே அனுமதிப்பதால் சங்கத்திற்கே கேடு வருமோ என்று அஞ்சுகிறேன்.''

சித்தார்த்தரது குரல் செருமிற்று.

''தாயே! பிட்சுக்கள், பிட்சுணிகள் என்றால் போதுமா? அழியும்வரை இவ்வுடலுக்குச் சில சேஷ்டைகள் உண்டு. பஞ்சும், நெருப்புமன்றோ?''

மனத்தில் உள்ளதைச் சூசகமாகக் குறிப்பிட்டு விட்டார். ஆனால் மகா பிரஜாபதி பாரதப் பெண். ஆன்ம வீராங்கனை, எடுத்த காரியத்தை நன்கு செய்து முடிப்பதில் ஆர்வமுள்ளவள். சித்தார்த்தனை வளர்த்ததும், ரோகிணியின் கரையில் அமைதியை வளர்த்ததும் அவளே! உறுதியுடன் பேசினாள் :

''ததாகதர் தோற்றுவித்த சங்கத்திற்கு அழிவில்லை. பௌத்த சங்கம் காலம் காலமாக வாழ எங்கள் கூட்டம் வழிகாட்டும் என்று உறுதி கூறுகிறேன். எங்களுக்குத் தனியாகச் சங்கமொன்று அமைத்துத் தருவீர். உங்களது நெறிகளைவிடக் கடுமையான நெறிகளும், வாழ்க்கை முறையும் அமைத்துத் தருவீர். பொறுமை, தியாகம், கடின உழைப்பு, இந்திரிய நிக்ரஹம் அனைத்துக்கும் பேர் போனவர்கள் பாரதப் பெண்கள். இப்பெண் இனம் பௌத்த சங்கத்தில் சேர்ந்தபின்தான் சங்கத்திற்கு முழுமையான தகுதி, நீண்ட ஆயுள் வரப் போகிறது!''

ததாகதர் யோசனையில் ஆழ்ந்தார். கௌதமியே மௌனத்தைக் கலைத்தாள்.

''ஐயனே, ஆத்ம சம்பத்து பெற்ற எங்களை ஏற்பீர். எங்களில் என்ன குற்றம் கண்டீர்? நல்ல மனித ஜாதியில் பிறந்தோம். கையில்லை, காலில்லை, மூளைக் கோளாறு என்ற குறைவேதுமில்லை. அப்படிக் குறையிருப்பினும் தங்களது அபாரமான கருணை எங்களை ஏற்காதோ?''

ததாகதர் நிமிர்ந்தார். அந்தத் தாமரைக் கண்களை, பரிவு பொங்கும் கண்களைப் பார்க்கும் போது அன்னைக்கு நெஞ்சை அடைத்தது.

''தாயே! ஏற்பதற்கு நான் யார் என்றுகூடத் தோன்றுகிறது. பிட்சுக்களுக்கு நான் விதித்துள்ள கட்டுப்பாடுகள் கொடியன. சங்கத்தில் இருக்கத் தகுதி வேண்டி இக்கட்டுப்பாடுகளைத் தளர்த்த முடியாதே! இரந்துண்பது எளிதல்லவே! நிலையான கூரையின்றித் திரிய வேண்டும். தலைமுடி களைந்து, துவராடை அணிந்து, கையில் பிச்சைப் பாத்திரத்துடன் தெருவில் நடப்பது சுலபமல்ல. ப்ராவிராஜிகையாக, இடம் விட்டு இடம் பெயர்ந்தவாறு இருப்பது மிகவும் துயரம் தரும். உங்கள் இருப்பிடம் சென்று தருமத்தில் நிலைத்திருங்கள்.'

மகாபிரஜாபதி விடுவதாக இல்லை.

''ப்ராவிராஜிகையால்தான் பூர்ணமான தரும வழியில் செல்ல முடியும். சங்கத்தில் சேரும் போதுதான் இந்த உடலால் வரும் பந்தபாசங்களை, இந்த நகை, பட்டு எனும் பெரும் சுமைகளை, வகை வகையான ஆகாரங்களை, மின்னும் பொன் நாணயங்களை முற்றவும் விடமுடியும். உண்மையாகவே இக வாழ்வில் வீட்டைத் துறந்தால்தான் அகத்தில் அமைதி பெற்று வீடு பேறு அடைய வேண்டிய ஆர்வம் பொங்கும். முக்காலமும் உணர்ந்த ததாகதர் அறியாததல்ல. பிட்சுணிகள் சங்கம் உலகிற்கு ஒளி தரும் விளக்காக, பசிப்பிணி தீர்க்கும் அமுத சுரபியாக, உடல் நோய் தீர்க்கும் காமதேனுவாக, உயிர்களுக்கெல்லாம் அடைக்கலம் தரும் தாயாக விளங்கும் என்பதை ததாகதர் இதற்குள் உணர்ந்து விட்டிருப்பாரே!''

மகாபிரஜாபதியின் தைரியம், உறுதி யாவும் ததாகதருக்குத் தெரியாததல்ல. இருப்பினும் எல்லாராலும் அவளைப் போல் இருக்க முடியாது. அரண்மனை வாழ்க்கையிலும், வெளியிலும் பெண்களைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார்! அவர்களில் பெரும்பாலோர் நகைகளிலும், சுக வாழ்க்கையிலும், வீடு, கணவன், குழந்தைகள் என்ற பாச வலையில் கட்டுண்டிருப்பதை அறிவார். அது அன்னைக்குத் தெரியாததா? தமது கடைசி அம்பை விடுத்தார்.

''தாயே, பிட்சுணி வாழ்வைப் பெண்கள் எளிதில் விரும்ப மாட்டார்கள். இருப்பிடம் சென்று அவர்களிடம் பேசுங்கள். வெகு நேரம் ஆகிவிட்டது. நாளை சந்திப்போம்.''

கௌதமிக்கு இது சரியெனத் தோன்றியது. ஓரளவு முன்னேற்றம் அடைந்த திருப்தியுடன் எழுந்தாள். மாலைப் பொழுது வரும் நேரம். புத்தர் தங்கியிருந்த தோட்டத்திற்குள் ஒரு கூட்டம் நுழைவது கண்டாள்.

''சங்கம் என்னமாகத் தழைத்து விட்டது!'' என்று ஆச்சரியமுடன் பார்த்தவாறு நின்றாள் கௌதமி. சந்நியாசிக் கூட்டம் நேரே பெருமாளிடம் சென்று வணங்கியது. சுமார் இருபத்

தைந்து பேர்கள். முதலில் வந்த இரு வரும் தலை நிமிர்ந்த போது கௌதமி ஸ்தம்பித்து விட்டாள்.

சாந்தமும், அன்பும் மலர்ந்த முகங்கள். இதுவரை யசோதரை முகத்தில் இருந்த வேதனையும், வெறுப்பும், கோபமும், கடுகடுப்பும் எங்கே? சிவப்புக் கற்கள் இழைத்த சூடாமணி அலங்கரித்த சுருள் கற்றைகள் எங்கே? ஆனால் இந்த முகம் அலர்ந்த தாமரையாகத் தோன்றுகிறது. விடுதலையாகி நிற்கும் வானம்பாடி போன்று அழகாக இருக்கிறது. அன்புத் தோழி வகுளமாலைக்கு ஆண்டுகள் எழுபதைக் கடந்தும், கேசம் நரைத்ததில்லை. காதிலும், மூக்கிலும், கழுத்திலும் ரத்தின ஆபரணங்கள் அணியாது இருந்ததில்லை. இப்பொழுது இயற்கை தந்த கருங்குழலும், செல்வம் தந்த பொன்னாபரணங்களும் களைந்து விட்டாள். அத்துடன் அவள் முகத்தில் நிலவிய கவலையும், இறுக்கமும் கூடவே களைந்து விட்டாளே!

''என்ன வகுளமாலை! எப்போது! என் தங்கமே, யசோதரை!''

யசோதரையை நோக்கி மகாபிரஜாபதியின் தாய்மைக் கரங்கள் நீண்டன.

சலனமில்லாது, புன்னகையுடன் ''இப்போதுதான். இங்கே தோட்டத்தின் புறக்காட்டில்'' என்றாள் வகுளமாலை.

''அடுத்து வந்த எம்மைத் தள்ளலாகாது, பெருமானே!'' பிசிறில்லாது, ஆர்வமுடன் யசோதரையின் குரல் ஒலித்தது.

மகாபிரஜாபதி கௌதமி இரண்டடி முன் வைத்துத் ததாகதரை நோக்கினாள். காடும், மேடும் நடந்தும், கடினமான தவ வாழ்வு மேற்கொண்டும் ஒளி குன்றாத உடல். சந்திரனொளியின் குளுமை தூவும் நோக்கு. வலக்கரத்தால் நிலத்தைத் தொட்டவாறு பூமிஸ்பர்சன முத்திரையுடன் அமர்ந்திருந்த புத்தரின் கண்கள் தியானத்தில் குவிந்திருந்தன.

''தானம் செய்து, சீலங்களில் நிலை பெற்றிருக்கும் பெண்கள் இவர்கள் என்று ததாகதர் அறிவாரன்றோ?'' என்று கௌதமி அந்த மகானைப் பார்த்தவாறு கூறினாள்.

ஆசிய ஜோதி கண் மலர்ந்தது.

''தாயே, உன்னையும் அப்படியே அறிகிறேன்.''

மகாபிரஜாபதி கை கூப்பினாள். பெண்கள் அனைவரும் அவள் பின்னால் வரிசையாக வணங்கியவாறு நின்றனர்.

கௌதம புத்தரது திருக்கரங்கள் உபதேச முத்திரையில் கூடின :

''இவ்வுலகம் காணும் நோக்கில் அநித்தியமானது. நிலையில்லாத இவ்வுலகம் ஒரு துன்பக் கேணி. பற்றினை வளர்த்து இந்தத் துன்பமயமான தொடர்கதையை நீட்டாமல் பற்றை அறுத்து நல்வழி நோக்கி அடியெடுத்து வைத்திருக்கிறீர்கள். அறிவுண்டாக! பற்றில்லா வாழ்க்கை வாழ்ந்தாலும், இவ்வுலகில் உள்ளவரை அனைத்து உயிர்களிடமும் அன்புடன் இருங்கள். உயிர்களிடம் இரக்கம் காட்டுங்கள். எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்ற தியானத்தில் நிலை பெறுங்கள். விருப்பு வெறுப்பின்றி எல்லா உயிர்களையும் சமமாகப் பாவியுங்கள். இதுவே பிறப்புக்குக் காரணமான குற்றங்கள் நீங்கும் வழி. மும்மணிகளை மணம், மொழி, மெய்யால் வணங்குங்கள்!''

ததாகதர் எடுத்துக்கூற, பிட்சுணிகள் மும்மணிகளை அடைக்கலம் புகுந்தனர். வைசாலி நகரத்தில், சூரியன் மேற்கே மறையும் தருணத்தில், புனிதமான கோதூளி வேளையில் பௌத்த பிட்சுணிகள் சங்கம் தோன்றியது. மகாபிரஜாபதியும், யசோதரையும் வழி காட்ட, மும்மணிகளை ஜபித்தவாறு, பிட்சுணிகள் தோட்டத்தை நீங்கிக் கபிலவாஸ்துவை நோக்கிச் சென்றனர்.

புத்தம் சரணம் கச்சாமி!

தம்மம் சரணம் கச்சாமி!

சங்கம் சரணம் கச்சாமி!

தந்தி: "சௌபைஞன்ஸ்" ஸ்தாபிதம்: 1964

சௌடாம்பிகா

பைஞன்ஸ் சிட்ஸ் பிரைவேட் லிட்.,

பதிவு & தலைமை அலுவலகம், 'சௌடாம்பிகாமாளிகை'
113, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-641 001
போன்: 26727 35541 & 40828

கிளைகள்: திருச்சி • சேலம் • திருப்பூர் • மதுரை • துறையூர்.

பொதுமக்களின் நம்பிக்கையையும், நாணயத்தையும் பெற்று, அத்துடன் தன் திறமை, பேராற்றல், ஸ்திரத் தன்மை ஆகியவைகளை ஒருங்கே அமையப்பெற்று அப்பழுக்கற்ற நேர்மையுடன்

ரூபாய் 1 லட்சம் முதல் 5 லட்சங்கள்

வரை ஏலச் சீட்டுக்களைத் திறம்பட நடத்தி வரும் அண்மையில் பொதுமக்கள் யாவரும் பாராட்டும் வண்ணம் வெள்ளி விழா கண்ட முதல் தரமான ஏலச்சீட்டு நிறுவனம்

26-வது ஆண்டு

SOWDAMBIKA BRINGS SOWBAGYA

மோதேரா கோயில்



அங்கொன்றும், இங்கொன்றுமாகப் பரிதாபமான சில குடிசைகள். கொஞ்சம் பசுமை. புதர்கள், மரங்கள். தண்ணீர் வற்றிய புஷ்பாவதி நதி.

நிமிர்ந்து பார்க்கிறோம். அவ்வளவு தான்! கண் இமைக்க மறந்து விடுகிறது. நுணுக்கமான வேலைப்பாடு அமைந்த ஒரு பிரம்மாண்டமான கிரீடம் அங்கு முளைத்திருப்பதைப் போல் அற்புதமான ஒரு சிற்பக் களஞ்சியம்!

பதினோராம் நூற்றாண்டில் சோலாங்கி அரசன் முதலாம் பீமதேவனால் கட்டப்பட்ட சூரியன் கோயில், காலத்தை வென்று கம்பீரமாக நிற்கிறது. அகமதாபாதிலிருந்து 110 கி.மீ. தொலைவில் உள்ள மோதேரா என்ற குக்கிராமத்தில் இப்படி ஒரு கலைப் பெட்டகம். சூரிய வழிபாடு முன்பு வழங்கி வந்ததன் அடையாளமாக நம் நாட்டில் உள்ள முக்கியமான கோயில்களில் மோதேராவும் ஒன்று.

மோதேரபுரம், மோதேரகம், முந்தெரா என்றெல்லாம் வழங்கப்படும் இந்தத் தலம் ஸ்கந்த புராணத்தில் தர்மாரண்ய க்ஷேத்ரம் என்று குறிப்பிடப்படுகிறது. கிருத யுகத்தில். தர்மாரண்யம் என்றும், திரேதாயுகத்தில் ஸத்ய மந்திரம் என்றும், துவாபர யுகத்தில் வேத பவனம் என்றும், கலியுகத்தில் மோதேரா என்றும் இதற்குப் பெயர்களாம்.

கர்ப்பக் கிருகம் அமைந்துள்ள மண்டபத்தின் முன் சபா மண்டபம் ஒன்றும், அதற்கு முன்பு சூரிய குண்டம் என்று கூறப்படும் குளம் ஒன்றும் உள்ளன. தூண்களிலும், சுவர்களிலும், கூரையிலும் காணப்படும் அடர்த்தியான வேலைப்பாடு பேலூர், ஹளேபீடு கோயில்களை நினைவுபடுத்துகிறது.

கோயிலைக் கட்டப் பயன்படுத்தியுள்ள கல் கடினமாக இல்லாமல் மிருதுவாக இருப்பதால் காற்று, மழையில் கரைந்து, தேய்ந்து பல சிற்பங்கள் மொண்ணையாகவும், சிதைந்தும் காணப்படுகின்றன. படையெடுப்பில் சில பகுதிகள் வெடி வைத்துத் தகர்க்கப் பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். மனிதனும், இயற்கையும் விளைவித்த சேதத்தில் அழிந்தது போக எஞ்சி நிற்கும் இன்றைய தோற்றமே இப்படி இருக்குமானால் அக் கோயில் நல்ல நிலையில் எப்படி இருந்திருக்கும்!

கர்ப்பக் கிருகத்தில் இருந்த பொன்னாலான சூரிய பகவான் விக்கிரகத்தை முகமதியர்கள் படையெடுப்பில் தூக்கிச் சென்று விட்டதாகக் கைடு சொல்லுகிறார். ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் அமர்ந்தது போன்ற வடிவமாம். மூல விக்கிரகத்தின் கீழ் இருந்த பொன்னும், மணியும் நிறைந்த கருவூலமும் சூறையாடப்பட்டதாகக் கூறுகிறார்கள். மார்ச் 21-ம் தேதியும், செப்டம்பர் 23-ஆம் தேதியும், அதாவது சூரியன் பூமத்திய ரேகையின் மேல் இருக்கும் இரு நாட்களிலும் காலையில் உதய கிரணங்கள் கர்ப்பக் கிருகத்தில் நேராக வந்து பாயும் வண்ணம் கோயில் கட்டப்பட்டிருப்பது ஒரு விசேஷம். சூரிய பகவானின் பன்னிரெண்டு தோற்றங்கள் உட்பிராகாரத்தில் காட்சி தருகின்றன. வெளிச் சுவர்களில் அஷ்டதிக் பாலகர்கள் தத்தம் மனைவிமாருடன் எழுந்தருளியிருக்கிறார்கள்.

இளவட்டங்களுக்கும் இந்தக் கோயிலில் கொஞ்சம் சுவாரஸ்யம் இருக்கும், ஒருபுறத்தில் மிதுனச் சிற்பங்கள் இருப்பதால். தவிர, கருவில் உருவாவது முதல் பிறப்பது வரை தொடர்ச் சிற்பங்களாக இன்னொரு சுவரில் இடம் பெற்றுள்ளன. சிறப்பான கலைப் படைப்பு.

கோயிலே அழகு என்றால் அதன் முன் காணப்படும் குளம் அதைவிட அழகு! நாலு புறமும் வரிசை வரிசையாக இறங்கும் படிக்கட்டுகளில் சின்னதும், பெரியதுமாக நூற்று எட்டுச் சந்நிதிகள்! ஒவ்வொன்றிலும் ஒரு கடவுளின் விக்கிரகம். பெரிய சந்நிதிகள் இரண்டில் மகாவிஷ்ணுவின் சயனத் திருக்கோலமும், நடராஜரும்! வாமன - திரிவிக்கிரம அவதாரம், அஷ்டபுஜ நரசிம்மர், ஹரிஹரன், சீதளாதேவி முதலிய பல விக்கிரகங்கள் மற்றச் சந்நிதிகளில். கீழே உள்ள கடைசிப் படியிலிருந்து அண்ணாந்து பார்க்கும் போது நீலவானப் பின்னணியில் நிமிர்ந்து நிற்கும் கோயிலை எவ்வளவு நேரம் பார்த்தாலும் அலுக்கவில்லை. எந்தக் கோணத்தில் பார்த்தாலும் நெஞ்சை அள்ளுகிறது.

குஜராத் மாநிலச் சுற்றுலா வாரியம் இந்தக் கோயிலைப் பராமரித்து வரும் சிறப்பைப் பாராட்ட வேண்டும். சிதிலமாகிப் போன குளத்துப் படிகளைச் செப்பனிட்டு இருக்கிறார்கள். 'தோரண்' என்ற பெயர் கொண்ட சிற்றுண்டிச் சாலை பசிக்கு மட்டுமல்ல, கண்ணுக்கும் விருந்தாக இருக்கிறது. கண்ணைக் கவரும் வண்ணம் இந்தக் கோயிலைப் பற்றிச் சுற்றுலா வாரியம் வெளியிட்டுள்ள கையேடு (brochure) ஒன்றே போதும், பயணிகளை இங்கு அழைத்து வர.

சுஜாதா விஜயராகவன்



(அம்பலம் கெமிக்கல்ஸ் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் அம்பலவாணன் காலிங்பெல்லை அழுத்துகிறார். அதற்குப் பியூன் பட்டாணி செவி சாய்க்காததால், பெல்லின் மேலேயே ஏறி உட்கார்ந்து தொடர்ந்து மணியை ஒலிக்கச் செய்கிறார். அப்போது மிகவும் சாவகாசமாகக் கொட்டாவி விட்டுக்கொண்டே பட்டாணி உள்ளே வருகிறான்.)

பட்டாணி: ஆவ்... ஆ... ஐயே... என்ன இது?... இப்படி மணியைப் போட்டு அமுக்கினா எத்தினி நாளைக்கு வரும்?... ஆஹ்... பட்டாணின்னு ஒரு கொரல் கூவினா ஓடி வரமாட்டேன்?...

அம்பலவாணன்: பேசாதே... எனக்குக் கெட்ட கோவம் வரும்... இத்தனை மணி அடிச்சே ஆள் வரலே... பட்டாணின்னு கூவறதாம்... கூவினா... வெளியே எவனாவது வேர்கடலை, பட்டாணி விக்கறவன்தான் உள்ளே வருவான்... பேரைப் பாரு... பட்டாணி... பொட்டுக்கடலைன்னு...

பட்டாணி: ஐயே... அப்படிச் சொல்லாதே சார்... இது எங்க குலதெய்வம் பேரு... பழிச்ச பல பேருக்கு எங்க கிராமத்துல வாய் இழுத்துகிச்சு...

(பயத்தில் வேர்வை வழிய, கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டே)

அம்பல: தப்புடா... தப்பு... தெரியாமச் சொல்லிட்டேன்... நீ மொதல்ல இன்ட்டர்வியூவுக்கு வந்தவங்களை உள்ள அனுப்பு... போ... போ...

பட்டாணி: (அப்போதுதான் அவரைச் சரியாகப் பார்த்தவன், விழுந்து விழுந்து சிரிக்கிறான்.)

அம்பல: என்னடா சிரிப்பு... நான் இன்ட்டர்வியூ நடத்தறது உனக்குச் சிரிப்பா இருக்கா...?

பட்டாணி: பின்ன என்ன சார்... இப்படிச் சட்டை கூடப் போடாம, டை மட்டும் கட்டிக்கிட்டு, ஆபீஸ் வந்திருக்கியே... இதை பார்த்துச் சிரிக்காம, இன்னா செய்வாங்களாம்... ஆஹ்...

(ஞாபகமறதிக்காரரான அம்பலவாணன் அப்போதுதான் தம்மைக் கவனிக்கிறார். அவசரத்தில், வீட்டில் இருந்து வரும்போது சட்டை இல்லாமல், வெறும் உடம்புடன் வந்ததைக் கவனிக்கிறார்.)

அம்பல: அடாடா... ஆமா... சட்டையே போடலே... திமிர் புடிச்ச கழுதை... என் பொண்டாட்டி... வாசல் வரைக்கும் வந்து வழியனுப்பிச்சா... டாடா சொன்னா... அவளும் இதை கவனிக்கலே பாரு...

பட்டாணி: அவங்களாவது புடவை கட்டியிருந்தாங்களா சார்...

அம்பல: டு... மச்... வாயை மூடு... இன்னிக்கு எப்படி இருந்தாலும் இன்ட்டர்வியூ நடந்தாகணும்... பட்டாணி... உள்ள வர்றவங்களையெல்லாம் சட்டையைக் கழட்டிட்டு வரச் சொல்லு... ஆபீஸ்ல இன்னிக்கு யாருமே சட்டை போடக் கூடாது... இது எம்டி உத்திரவுன்னு அறிவிப்புக் கொடு...

(முனகிக் கொண்டே பட்டாணி வெளியே போய், முதல் ஆளாக, இளங்கோ என்ற இளைஞனை உள்ளே அனுப்ப, உள்ளே வரும் இளைஞன் சட்டையைக் கழற்றி இடுப்பிலே கட்டிக் கொண்டு, பயபக்தியுடன் கந்தர் சஷ்டி கவசம் சொல்லிக் கொண்டே வருகிறான்.)

தீவளிக்குள்ள பொண்ணு பாரு

கோவை அனுராதா

இளங்கோ: காக்க... காக்க... கனகவேல் காக்க... நோக்க நோக்க நொடியினில் நோக்க...

அம்பல: (தானும் பக்தியுடன் எழுந்து நின்று) பாக்க... பாக்க பாவம் பொடிபட...

(ஏதோ நினைவு வந்தவராக) நிறுத்துப்பா... நிறுத்து... நீ என்ன இன்ட்டர்வியூவுக்கு வந்தயா?... வேண்டுதலைக்கு வந்தயா... இப்ப எதுக்கு சஷ்டி கவசம் சொன்னே?

இளங்: சட்டையைக் கழட்டிட்டு உள்ள போகணும்னு சொன்னாங்க... ஒரு வேளை நீங்க சாமியாரா இருப்பீங்களோன்னு பய பக்தியா விபூதி இட்டுகிட்டு, சுலோகம் சொல்லிட்டு வந்தேன் சார்... உங்களுக்குப் பிடிக்கலேன்னா ஒரு சினிமா பாட்டு பாடறேன் சார்... எப்படியாவது எனக்கு வேலை கொடுங்க சார்... (உடனே பாடுகிறான்...) மாமா... பொண்ணைக் கொடு... மாமா.... பொண்ணைக் கொடு...

அம்பல: நிறுத்துப்பா... ஐசே நிறுத்து... ஸ்டாப்... கொஞ்சம் விட்டா தலைக்கு மேல போறயே...

இளங்: (பாதி அழுகையுடன்) எம்.ஏ. படிச்சி எட்டு வருஷமா வேலை இல்லாம இருக்கேன்... தலைக்கு மேல என்ன?... மொட்டை மாடி மேல கூட ஏறிக் குதிக்கிறேன் சார்... வேலை கொடுங்க சார்...

அம்பல: ஆல்... ரைட்... டேக் யுவர் சீட்... என்ன விஷயமா வந்தே?

பட்டாணி: சார்... இன்ட்டர்வியூ... இன்ட்டர்வியூ...

அம்பல: ஓ... இன்ட்டர்வியூ இல்லே.... எனக்குக் கொஞ்சம் மறந்து போகும்...

அம்பல: .... கண்டுக்காதே... ஆமா... சர்டிபிகேட் வச்சிருக்கயா?

இளங்: இருக்கு சார்.... கர்ணனுக்குக் கவச குண்டலம் மாதிரி... வேலை கிடைக்கற வரைக்கும் சர்டிபிகேட்டை, இடுப்பிலயே கட்டிக் கிட்டுத்தான் தூங்குவேன் சார்...

அம்பல: வெரி குட்... ஏ... பட்டாணி... இங்கதான் வேலையே காலி இல்லையே... அப்புறம் எதுக்கு இன்ட்டர்வியூ வச்சேன்? ...ம்... (தலையைச் சொறிந்து கொள்கிறார்.)

பட்டாணி: இன்னா ஆளு நீ... புச்சா பிரான்ச் ஓபன் பண்ணப் போறயே...

அதுக்குத்தானே ஆள் எடுக்கறே? ஐயே... சரிதான்... இன்னும் கொஞ்ச நாள் போனா என்னையே யார்னு கேப்பே போல இருக்கே...

இளங்: என்ன சார்... இது... இந்த ஆபீசுல ஒரு பியூனுக்குத் தெரியறது உங்களுக்குத் தெரியலையே...

அம்பல: உனக்கு எட்டு வருஷமா ஏன் வேலை கிடைக்கலேன்னு இப்பத்தான் எனக்குப் புரியுது... நீ அனாவசியமா மத்தவங்க விஷயத்துல சம்மன் இல்லாம ஆஜர் ஆவே போல இருக்கே... இந்த பட்டாணி... உன் கண்ணுக்குச் சாதாரண பியூன்... இந்த எம்டி அம்பலவாணனோட பாய் பிரண்டு... அதாவது நாங்க ரெண்டு பேரும் சில்லரைப் பசங்களா இருந்ததுல இருந்தே நட்பு.... தெரியுமா?

பட்டாணி: அந்தச் சினேகிதம் இல்லேன்னா இந்த ஆள் கூட நான் ஏன் மாரடிக்கிறேன்?

அம்பல: சரி... சரி.... பர்சனல் மேட்டர் எல்லாம் உனக்கு வேண்டாம்... இது காஷியர் போஸ்ட்... டெபாசிட் கட்டுவாயா?... ரூபாய் பத்தாயிரம்...

இளங்: (வாயைப் பொளந்து) பத்தாயிரமா...? அது இருந்தா நான் ஏன் சார் வேலைக்கு வரேன்... எங்கயாவது பொட்டிக் கடை வச்சி பொழைச்சிக்குவேனே... சர்டிபிகேட்டைப் பாருங்க சார்... நான் அதெலடிக்.... ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்துல பர்ஸ்ட் வந்தவன் சார்...

அம்பல: அதுனாலதான் உங்கிட்ட டெபாசிட் கேக்கறேன்... ஏன்னா இதுவோ லடச லட்சமா பொழங்கற கேஷியர் வேலை... நீயோ நல்லா ஓடறவன்... நாளைக்குப் பணத்தைத் தூக்கிட்டு ஓடிட்டீன்னா... யாருப்பா தொரத்திப் பிடிக்க முடியும்?... எனக்கு ஒரு பாதுகாப்பு வேண்டாம்...? பத்தாயிரத்தோட, அடுத்த மாசம் இருபதாம் தேதிக்கு முன்னால வந்தா உனக்கே இந்த வேலை... இல்லே சம் எக்ஸ் தட்டிக்கிட்டுப் போயிடுவான்... ஓகே... யு கேன் கோ... பட்டாணி... ஐயா இந்தக் காலத்து எம்.ஏ..... புரியலேன்னா தமிழ்ல செப்பி, வெளியே அனுப்பு...

பட்டாணி: (கையைப் பிடித்து தூக்கி) நீ வெளியே போகலாம் தம்பீ...

இளங்: (எழுந்து நின்று பிச்சைக்காரன் போல் கையை நீட்டுகிறான்.) ஐயா தர்மம் போடுங்கய்யா...

அம்பல: என்னய்யா இது....? ஆபீசுக்குள்ளயே வந்து பிச்சை கேக்கறே?

இளங்: பிச்சை இல்லே சார்... வேண்டுதலை... எப்படியாவது தர்மம் வாங்கி இந்த டெபாசிட் கட்டிடணும்னு இந்த நிமிஷத்துல இருந்து முடிவு பண்ணிட்டேன். மொதல் தர்மம்... உங்க ராசியான கையால ஆரம்பிச்சி வையுங்க சார்...

அம்பல: ஆ...

காட்சி 2

(இளங்கோவின் வீடு. பாத்திரங்கள்: இளங்கோ, அம்மா திலகம்.)

இளங்: சே... சே... ஒரு வேலை கிடைக்கறது எத்தனை கஷ்டமா இருக்கு... அப்ளிகேஷன் போடறதுக்கு ஸ்டாம்ப் காசுக்கே திண்டாட்டம்... பத்தாயிரம் டெபாசிட்டுக்கு எங்க போவேன்?

திலகம்: என்னடா இளங்கோ... வேலை கிடைக்கலேன்னு தனியா பொலம்ப ஆரம்பிச்சிட்டே... பயமா இருக்கே...

இளங்: இப்படிப் போற எடத்துல எல்லாம் டெபாசிட் கேட்டா, பைத்தியமே பிடிச்சாலும் பிடிக்கும்... சே! வரதட்சிணையே கேக்கக் கூடாதுன்னு மாதர் சங்கம் கொடி பிடிக்கறாங்களே... இப்படி வேலைக்கு நாயா பேயா ஆம்பளை அலையும்போது, ஹெல்ப்பா பண்றாங்க?

திலகம்: ஏண்டா... இளங்கோ... டெபாசிட் கட்டாத வேலையா அப்பா ஒன்னு சொன்னாரே... அங்க போயி பாத்தியா?

இளங்: எது...? அந்த கட்டதொட்டி குருசாமிகிட்டயா...? போனேன்... அவர் வேலை இல்லேன்னு சொல்லிட்டாரு...

திலகம்: ஏண்டா இப்படிப் பொய் சொல்றே?... இன்னிக்கு மார்கெட்ல குருசாமி பொண்டாட்டியைப் பார்த்தேன்... அவர் மொட்டை அடிக்க பழனிக்குப் போயிட்டார்ன்னு சொன்னாங்களே... ம்... உங்க அப்பா என்னடான்னா உண்மையே பேசறார்... நீ என்னடான்னா பொய்யைத் தவிர எதையும் பேச மாட்டேங்கறே...

இளங்: நான் எப்பவுமே பொய் சொல்றேனா?... ஏம்மா அநியாயமா சொல்றே?... எம்.ஏ. படிச்சிட்டுக் கட்டத் தொட்டி வேலைக்கெல்லாம் போகச் சொல்றயே... உனக்கே நல்லாயிருக்கா?... அம்மா... அம்மா... பத்தாயிரம் டெபாசிட் கட்டினா உடனே ஒரு வேலை கிடைக்கும்... அப்பா எங்கே?

அம்மா: அவர் அரிச்சந்திர மஹாராஜா ஆச்சே... சத்தியமூர்த்தின்னு பேருக்கு ஏத்தமாதிரி, எங்க நின்னு உண்மையை பேசிக்கிட்டு இருக்காரோ?...

காட்சி 3.

(இடம்: மார்க்கட். பாத்திரங்கள்: சத்தியமூர்த்தி, காய்கறி கடைக்காரன், ராமசாமி)

கடைக்காரன்: என்ன சாமி...? பேரிக்காயைக் கையில வச்சிக்கிட்டு யோசனை? வேணுமா?... வேண்டாமா?... காலங்கார்த்தால வந்து பேஜார் பண்றே!



சத்தியமூர்த்தி: இல்லப்பா... எனக்கோ பல் செட்டு... பொண்டாட்டிக்கோ டயாபடீஸ்... பையன் ஒருத்தன் தான்... எத்தனை வாங்கலான்னு பாக்கறேன்...

கடைக்: சரிதான்... போ... ரெண்டு பேரிக்காய் வாங்க பங்களா கட்டற மாதிரி திட்டம் போடறயே... வேணும்னா எடு... இல்லே எடத்தை காலிபண்ணு...

சத்திய: நீ சொல்றதும் வாஸ்தவம் தான்... வியாபாரத்துக்கு இடைஞ்சல் பண்ணக் கூடாது... வெலையைப் பார்த்து சொல்லுப்பா...

கடைக்: ஒரே ரேட்டுதான்... ஒன்னு எடு ஐம்பது பைசா... அஞ்சு எடு... ரெண்டு ரூபா... உன்னை பார்த்தா போணி பண்ற மாதிரி தெரியலே... சாவுகிராக்கி...

சத்திய: ஆஹ்... ஹா... வெள்ளிக் கிழமையும் அதுவுமா அப்படி எல்லாம் சொல்லாதப்பா... ரெண்டு ரூபாயுக்குக் குடு...

(பர்சைத் திறந்து பணத்தை எடுக்கும் போது, இருக்கும் இரண்டு ஒரு ரூபாய் நோட்டில், ஒன்று கிழிந்து ஒட்ட வைத்திருப்பதைக் கவனிக்கிறார்.)

சத்திய: அடடா... இந்த நோட்டு கொஞ்சம் கிழிஞ்சு ஒட்ட வச்சிருக்கே... இந்தாப்பா... கவலைப் படாம வாங்கிக்க... பேங்க்ல குடுத்தா மாத்திக்கிலாம்...

கடைக்: (அவரை முறைத்துவிட்டு, மூன்று பேரிக்காய்களைப் பிடுங்கிக் கொள்கிறான்.) அப்படியா... ரெண்டு வாங்கிக்க... இன்னும் ரெண்டு பேங்க்ல போயி வாங்கிக்க...

சத்திய: என்னப்பா... உண்மையைச் சொன்னா கோபப்படறே?

கடைக்: ஆமா... இவரு பெரிய சத்தியமூர்த்தி... போய்யா... வேலையைப் பார்த்துகிட்டு...

சத்திய: பரவாயில்லையே... என் பேரைக் கரெக்டா சொல்றயே...

(இரண்டு பேரிக்காயுடன் இடத்தை விட்டு நகர்ந்த, சத்தியமூர்த்தியை, கையைத் தட்டிக் கூப்பிடுகிறார் அவரின் நண்பர் ராமசாமி.)

ராமசாமி: வணக்கம் சார்... சௌக்கியமா?

சத்திய: இருக்கேன்... என்ன ரெண்டு நாளா சாப்பிட்டா உடனே விக்கல் வருது... மத்தபடி சௌக்கியம் தான்...

ராம: உங்கிட்ட ஒரு உதவி கேக்கப் போறேன்... அவசியம் செய்யணும் சார்... ரொம்ப அர்ஜெண்ட்...

சத்திய: என்ன விஷயம் சொல்லுப்பா...?

ராம: வீட்டுல பாட்டிக்கு உடம்பு சரியில்லை. நர்சிங்ஹோம்ல அட்மிட் பண்ணணும்... ஒரு 500 ரூபா கைமாத்தா கொடுங்க சார்... அடுத்த மாசம் திருப்பி கொடுத்துருவேன்...

சத்திய: இங்க பாருப்பா ராமசாமி... (யோசிக்கிறார்.)

ராம: சார்... சார்... ஏதாவது சாக்கு சொல்லி இல்லேன்னு சொல்லிடாதீங்க சார்...

சத்திய: என்னப்பா இத்தனை வருஷம் ஒரே ஆபீஸ்ல பழகியும் என்னைப் பத்தி நீ தெரிஞ்சுக்கலையே... இல்லேன்னு நான் பொய் சொல்லுவேனா? இருக்கு... கிராஜுவிடி பணம் பத்தாயிரம் பேங்க்ல இருக்கு... அவசரச் செலவுக்கு 3,000 சேவிங்ஸ்ல இருக்கு... ஆனா... அதை நம்பித்தான் நான் காலத்தை ஓட்டிக்கிட்டு இருக்கேன்... ஆகையினால தயவு செஞ்சு கடன் கேக்காதே... பையனுக்கும் வேலை கிடையாது... ஆகையினால தயவு செஞ்சு கடன் கேக்காதே...

(சத்தியமூர்த்தி அங்கிருந்து நகர)

ராம: ம்... இந்த ஆள் எல்லாம் காசை கட்டிக்கிட்டுத்தான் சாகப் போறான்...

சத்திய: (திரும்பிப் பார்த்து) ராமசாமி... நீ ஊரையே தின்னு ஏப்பம் விடறவன்... போயும்... போயும் இந்த ஏழை கிட்டத்தானா உன் கைவரிசையைக் காட்டணும்... ம்... உனக்கிருக்கிறது ஒரே பாட்டி... அவளோட காரியத்துக்கு நான் வந்திருந்தேனே... மறந்துட்டயா?... நான் பொய் சொல்ல மாட்டேன்னு தெரிஞ்சு கடன் கேக்க வந்தே... ஆனா எனக்கு ஞாபகமறதி கிடையாதுன்னு உனக்குத் தெரியாம போச்சே...

காட்சி 4.

(இளங்கோ வீடு. பாத்திரங்கள்: இளங்கோ, அப்பா சத்தியமூர்த்தி, அம்மா திலகம், போஸ்ட் மேன்.)

சத்தியமூர்த்தி உள்ளே, நுழைய, திலகம் புதுப்புடவை ஒன்றைக் கட்டிக் கொண்டு, அவரை எதிர்கொள்கிறாள்.

திலகம்: என்னங்க... இந்தப் புடவை புதுசா வாங்கினேன்... நல்லா இருக்கா பாருங்க...

சத்திய: புடவைக்கு என்ன?... நல்லாத் தான் இருக்கு...

திலகம்: எனக்கு நல்லா இருக்கா சொல்லுங்க...

சத்திய: இங்க பாரு திலகா... முகஸ்துதி எனக்குப் பழக்கம் இல்லே... புடவை நல்லாயிருக்கு...ஆனா கட்டிக்கிட்ட விதம்... தூணுக்குச் சுத்தின மாதிரி இருக்கு... போதுமா?

(அப்போது இளங்கோ அங்கு வந்து)

இளங்: அப்பா... எனக்கு வேலை கிடைக்கப் போகுது... ஆனா நீ ஒரு ஹெல்ப் பண்ணும்... டெபாசிட் கட்ட பத்தாயிரம் வேணும்ப்பா...

சத்திய: நான்தான் உன்னை டெபாசிட் இல்லாத வேலையா பார்க்கச் சொன்னேனேடா.

இளங்: பெத்த பையன்... உங்கிட்ட இருக்கற பணத்தை தரக் கூடாதா?

சத்திய: அப்புறம் நான் சாப்பாட்டுக்கு என்னடா பண்றது?

இளங்: ஏன்... நான் சம்பாதிச்சி சாப்பாடு போட மாட்டேனா?

சத்திய: இங்க பாரு... அதையெல்லாம் இந்தக் காலத்துல நம்ப முடியாது... நீ போன எடத்துல எவளையாவது லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிகிட் டேன்னு வச்சிக்க... அப்புறம் என் கதி... உங்கம்மா கழுத்துல மூணு முடிச்சி போடும்போதே நான் அவ ளைக் கடைசி வரைக்கும் வயிறு வாடாம வச்சி காப்பாத்தறேன்னு சத் தியம் பண்ணியிருக்கேன்... உங்கிட்ட அப்படிச் சத்தியம் வாங்க முடி யுமா?... என்ன தொந்திரவு பண் ணாதடா...

(அப்போது போஸ்ட் என்ற குரல் கேட்க, ஓடிப் போய் இளங்கோ தபாலை வாங்கிப் பிரிக்கிறான். அதி லிருந்து ஒரு பெண்ணின் போட்டோ விழுகிறது.)

திலகம்: என்னடா... இளங்கோ... பொம்பளை போட்டோ எல்லாம் உனக்கு வருது?

இளங்: பதறாதம்மா... எனக்கு வேலை கிடைச்சாச்சு... என்னோட திட்டம் பலிக்கப் போகுது...

திலகம்: திட்டமா?

இளங்: ஆமாம்மா... பேர்ப்பர்ல மெட் ரிமோனியல் காலத்துல இந்தப் பொண்ணுக்காக விளம்பரம் கொடுத்திருந்தாங்க... நல்ல வசதி யான எடமாம்... அப்ளை பண்ணி னேன்... செலக்ஷன் ஆகிடிச்சி... இவங்ககிட்ட பத்தாயிரம் வரதட் சனை வாங்கி டெபாசிட் கட்டினா என் பிராப்ளம் ஓவர்...

சத்திய: அது சரிடா... வேலை வெட்டி இல்லாத பையனுக்கு எவன் பொண் ணைக் கொடுப்பான்...?

இளங்: ஏன் வேலை இல்லேன்னு சொல்லணும்... அம்பலம் கெமிக்கல் கம்பெனியில காஷியர்னு சொல்லி யிருக்கேன்... பத்தாயிரம் கைக்கு வந்தா, கல்யாணம் நடக்கறதுக்கு முன் னால, நான் கேஷியர் ஆகிடுவேன்... ஒரு சின்ன அட்ஜெஸ்மெண்ட் தானே?... அப்பா... அம்மா... எப் படியாவது இந்தக் கல்யாணத்தை நடத்தி வையுங்கப்பா...

சத்திய: போடா... போக்கத்த பயலே... உன் பொய்யுக்கு நான் உடந்தையா இருக்க மாட்டேன்...

இளங்: உன்னை யாருப்பா பொய் சொல்லச் சொன்னது?... பேசாம என் கூட வந்தா போதும்... எது கேட் டாலும் நான் பேசிக்கிறேன்... உனக்கு வாயில புண்... பேசமுடியா துன்னு சொல்லிடறேன்...

சத்திய: அதுவும் பொய்தானே?

இளங்: அதையும் நான்தானே சொல் லப் போறேன்... அப்பா...

திலகம்: என்னங்க... நல்ல காரியத் துக்கு பொய் சொன்னா தப்பு இல் லீங்க... பொய்மையும் வாய்மை இடத்துன்னு வள்ளுவரே சொல்லி யிருக்காருங்க...

சத்திய: இது ஒன்னுக்காகத்தான் எனக்கு வள்ளுவரைக் கொஞ்சம் பிடிக் காது...

இளங்: ப்ளீஸ்... அப்பா... நல்ல வேலைப்பா... வேலைக்குச் சேர்ந்த வுடனே நான் அவங்க பணத்தை இன்ஸ்ட்டால்மெண்ட்ல திருப்பிக் கொடுத்துருவேம்ப்பா...



சத்திய: சரி... ஆனா... ஒரு கண்டி ஷன்... அங்க வந்து... நான் வாயைத் திறக்க மாட்டேன்... அப்படித் திறந்தா உண்மைதான் பேசுவேன்... புறப்படு...

காட்சி 5.

(மணப்பெண் சாந்தியின் வீடு. அங்கு சாந்தியின் அப்பா, மற்றும் இளங்கோ குடும்பம் அமர்ந்திருக்கிறார் கள்.)

பரமசிவம்: மாப்பிள்ளை எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு... அதுவும் அம்பலம் கெமிக்கல் கம்பெனியில காஷியர்னு சொன்னதும் இரட்டிப்பு சந்தோஷம்...

இளங்: ஹி...ஹி... பெண்ணை வரச் சொல்லலாமே...

பரம: கொஞ்சம் பொறுங்க... எங்க மாமா... தாய் மாமாவுக்குச் சொல்லி அனுப்பிச்சிருக்கேன்... வந்துட் டார்னா பங்ஷனை ஆரம்பிச்சிட லாம்...

(வாசலை எட்டி, எட்டிப் பார்க் கிறார்.)

(இளங்கோவிடம் திரும்பி) ஆமா... உங்க அப்பா என்ன பேசவே மாட் டேங்கறாரே... பேச்சு வராதா?

இளங்: (சமாளித்து) வரும்... வரும்... வாயுல கொஞ்சம் புண்ணு... அது தான் பேசாம இருக்காரு... அவரைக் கேக்காதீங்க... யார் கேட்டாலும் கோபம் வந்துரும்...

பரம: அது சரி... வெட்டி வம்பை நான் ஏன் விலைக்கு வாங்கறேன்...?

இளங்: அப்புறம் சார்... பொண்ணு பிடிச்சிருந்தா மத்த விஷயங்களைப் பேசிக்கலாம் இல்லையா?... ஏன் னா... என் ஜாதகப் பிரகாரம் வர்ற 20-ந் தேதிக்குள்ள கல்யாணம் நடக் கணும்...

பரம: நாங்க இப்பவே ரெடிங்கறேன்... நல்ல வசதியான குடும்பம்... நீங்க டௌரியைப் பத்தி கவலையே பட வேண்டாம்... இருபதாயிரம் கேட் டாலும் தருவேன்... எங்க மாமனார் பொண்ணு பேருக்கு மூணு லட்சம் எழுதி வச்சிட்டு, கண்ணை மூடி யிருக்காரு...

இளங்: அவ்வளவு கேக்க மாட்டேன் சார்... ஒரு பத்தாயிரம் போதும்...

(அப்போது அம்பலம் கெமிக்கல்ஸ் எம்டி அம்பலவாணன், பியூன் பட்டா ணியுடன் உள்ளே நுழைய, இளங்கோ வெலவெலத்துப் போகிறான்.)

இளங்: சார்... இதுதான் உங்க மாமாவா?

பரம: இவரேதான்... என்ன உங்களுக் குத் தெரியாத மாதிரி கேக்கறீங்க?... உங்க எம்டி இல்லையா?... சஸ் பென்சா இருக்கட்டும்னுதான் நான் அவர் கிட்ட முன் கூட்டியே உங் களைப் பத்திச் சொல்லலே... ஹி... ஹி...

அம்பலம்: பரமசிவம்... வள வளன்னு பேசாம, பெண்ணை வரச் சொல்லு... அந்த வீணையை எடுத் துத் தேவ கானம் பாடச் சொல்லு...

மாப்பிள்ளை மனம் குளிரக் கேக்கட்டும்...

(அப்போது பட்டாணி சந்தேகத்துடன் இளங்கோவை நோக்க, இளங்கோ முகத்தைத் திருப்பிக் கொள்கிறான்.)

பட்டாணி: *(அம்பலவாணனிடம்)* சார்... எனக்கு ஒரு டவுட்டு... இந்த ஆளைப் பார்த்தா.

அம்பல: பேசாம இரு... உனக்கு எதுல பாரு டவுட்டுதான்... சாந்தி... நீ பாடும்மா

(சாந்தி வீணையை எடுத்து, வாசித்துக் கொண்டே மாயக்கண்ணா... திருட்டுக் கண்ணா என்று பாடுகிறாள்.)

இளங்கோவின் கைகால்கள் நடுங்குகின்றன.

பரம: மாமா... இவர் யாரு தெரியுமா?... அம்பலம் மெகிக்கல் கம்பெனி காஷியர்...

அம்பல: அம்பலம் கெமிக்கல்சா...! ரொம்ப பேமசான பெயர்... அதுல கேஷியரா இருக்காரா... வெரி குட்...

பட்டாணி: சார்... அது உங்க கம்பெனி...

அம்பல: ஆமா... அது என் கம்பெனியாச்சே... அதுல இவர் காஷியரா... எவன் வேலை கொடுத்தான்... (கோபத்துடன் எழுந்து இளங்கோவின் சட்டையைப் பிடித்து) ஏண்டா... எங்க வீட்டுக்கே வந்து, என் கம்பெனியிலேயே வேலை செய்யறேன்னு சொல்ல உனக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கணும்?

இளங்: சார்... சார்... என்னை மன்னிச்சிருங்க சார்... இது உங்க வீடுன்னு சத்தியமா தெரியாது... இங்க பத்தாயிரம் வாங்கி டெபாசிட் கட்டி, கல்யாணத்துக்குள்ள வேலைக்குச் சேர்ந்துடலான்னுதான் திட்டம் போட்டேன்... தவுடு பொடியா யிடிச்சு...

அம்பல: ம்... இவ்வளவு நடந்திருக்கு... பையனைப் பெத்த அப்பன் வாயுல கொழக்கட்டையா வச்சிருக்கான்... உம்முனு இருக்கான் பாரு...

சத்திய: (கோபத்துடன் துண்டை உதறிக் கொண்டு எழுந்து) பேசமுடியாம இந்த அறிவு கெட்ட மடையன் என்னைக் கட்டிப் போட்டான்ய்யா... இப்பவும் சொல்றேன்... இந்த சத்தியமூர்த்தி என்னைக்கும் பொய் பேச மாட்டான்... என் பையன் வேலை வெட்டி இல்லாதவன்தான்... ஆனா யோக்கியமானவன்... (இளங்கோவிடம் திரும்பி) அட பாவி... சர்வீசுல என்னை முதல் தடவையா பொய்யுக்கு உடந்தையா போகப் பண்ணி மானத்தை வாங்கிட்டயே... (அம்பலவாணனிடம்) இங்க நல்ல புளிய மரமா இருக்கா...?

அம்பல: எதுக்கு?... போகும்போது விறகுக்கு வெட்டிக்கிட்டுப் போகலாம்னா?

சத்திய: இல்லே... இப்படிப்பட்ட பிள்ளையைப் பெத்ததுக்குத் தூக்கு மாட்டிக்கிட்டுத் தொங்கலான்னு...

(பெண் சாந்தி குறுக்கிட்டு)

சாந்தி: இங்க யாரும் தூக்கு மாட்டிக்க வேண்டாம்... மாமா... இவரை எனக்குப் புடிச்சிருக்கு...

அம்பல: ஐயோ... உண்மையே பேசுவார்ங்கற ஒரே காரணத்துக்காக புடிச்சிருக்குன்னு சொல்றயே... இவருக்கு ரொம்பவும் வயசாச் சும்மா...

சாந்தி: ஐயோ... மாமா... நான் அவர் பையனைத்தான் சொல்றேன்... மாமா... உங்களுக்குத் தெரியும்... நான் எதுலயும் புதுமை விரும்பி... எல்லாரும் வேலை தேடிக்கிட்டு, அப்புறமா கல்யாணம் பண்ண பொண்ணைத் தேடுவாங்க... இவரோ கல்யாணம் பண்ணிக்கிட்டு, வேலை தேடப் போறார்... புது டைப்பா இல்லே... அதுவும் இல்லாம, இந்தச் சத்தியமூர்த்தி சார்... ஒரு தடவை நான் ஒர்க் பண்ற பேங்குக்கு வந்திருக்காரு... நான் தவறுதலா பத்தாயிரத்துக்கு, பதினைஞ்சாயிரமா கேஷ் குடுத்துட்டேன். அதை நாணயமா திருப்பிக் கொண்டு வந்து கொடுத்திருக்காரு... அப்படிப்பட்ட நாணயமானவரோட குடும்பத்துல மருமகளா போறதுக்கு நான் ஆசைப்படறேன் மாமா... ஒரு வேலை கிடைக்கறதுக்காகச் சொன்ன பொய்யை மன்னிச்சி அவரை... அவரை ஏத்துக்கறேன் மாமா...

(இளங்கோ வெட்கப்பட்டு நெளிய, அவன் தோளைப் பற்றித் திருப்பிய சத்தியமூர்த்தி)

சத்திய: பாருடா... முட்டாப்பயலே... நேர்மைக்கு என்னைக்குமே சக்தி அதிகம்...

காதல் என்பது.

அது ஏசி அறைதான். ஆனாலும், கல்பனாவிற்கு வியர்த்து கொட்டியது. தலையில், அதிகமாக எண்ணெய் தேய்த்து, அது பிடறி வழியாகவும், கன்னங்களை நோக்கியும் வழிவதுபோல் இருந்தது. அந்த அறைக்கு வெளியே கண்களை போட்டாள். வருவேன் என்று சொன்ன சீனியரை காணவில்லை. நேரம் ஆக ஆக, அவள் இதயம் அந்தச் சுவரில் மாட்டப்பட்ட கடிகாரம் மாதிரியே சத்தம் போட்டது. இதுவரை தனியாகச் செய்தி எழுதி பழக்கமில்லாதவள். என்ன செய்யலாம் என்று அவள் பயந்தபோது—

இடையில் செவ்வக உருவத்தோடும், இரண்டு பக்கமும் முட்டை வடிவத்தோடும் இருந்த அந்த அறையின் முக்கால் பகுதியில், வரிசைக்குப் பதினைந்து நாற்காலிகள், செய்தியாளர்களால் நிரப்பப்பட்டன. இந்த மேஜைக்கு இடையே, சன் மைக்கா போட்ட நீண்ட மேஜை. உட்கார்ந்தவர்கள் போக, நின்றவர்களே அதிகம். செய்தியாளர்கள் இவர்கள். அமைச்சரின் வருகையை இவர்கள் அலட்சியத்தோடும், அதிகாரிகள் உஷாரோடும் எதிர்பார்த்திருந்த வேளை. கிராமத்து சேரி போல் மேஜைக்குச் சற்று தள்ளி ஒதுக்கமாகப் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அரசாங்கத்தின் அண்டர், அஸிஸ்டன்ட், டெபுடி, ஜாயின்ட், அடிஷனல், ஸ்பெஷல், செகரட்டரிகள் தங்களது எடுபிடி

சு. சமுத்திரம்

களோடு வாசலில் கண்களையும், செய்தியாளர்களின் கிசுகிசுக்கலில் காதுகளையும் வைத்தபடி நின்றார்கள்.

கல்பனா, தனக்கு இரண்டு பக்கமும் இருந்தவர்களையும் சேர்த்துப் பார்த்தாள். வலதுபக்கம் இருந்தவர் தாடி மீசை. அவர் காதுகளைக் கண்டுபிடிப்பதே கடினம். இடது பக்கம் இருந்தவர் அல்லது இருந்தவன் இளைஞன். கித்தாப்பான தலை. ஒல்லியான அதே சமயம் உறுதியான உடம்பு. கையில் உள்ள பால் பாயின்ட் பேனாவை எடுத்து, வேப்பம் குச்சிபோல், பல் குத்திக்கொண்டிருந்தான். கல்பனா படபடப்பாகக் கேட்டாள்-



''ஸார்.. நான் ''நேற்று'' பத்திரிகையோட ரிப்போர்ட்டர்... டிரய்னீ ஸார்''

''ஐ... நோ.''

அவன், அவளுக்கு முகத்தைத் திருப்பாமலே பதில் சொன்னது, கல்பனாவிற்கு முகத்தில் அறைவது போல் இருந்தது. இவ்வளவு அரெகன்ஸ் அகாது. இதுகிட்டே இனிமேல் பேசப்படாது. பாவி சீனியரை இன்னும் காணோமே...

கல்பனாவால் பேசாமல் இருக்க முடியவில்லை. காரியம் அப்படி. அதற்காக இதன் காலைப் பிடிக்கவில்லையானாலும், காதைப் பிடித்துதான் ஆக வேண்டும்.

''உங்கள் பெயர் என்ன ஸார்'

''இப்போ என் பெயரு முக்கியமல்ல. அமைச்சர் ஏன் லேட்டு என்கிறதுதான் முக்கியம்.''

''ஆனாலும் உங்க பெயரைச் சொல்லலாமே.''

''என் பெயரைச் சொல்றதுனாலே உங்களுக்கு ரிலாக்ஷேஷன்ஸ் கிடைக்கும்னா சொல்றேன். பெயரு ராசன்..''

''ஓ... ராஜனா?''

''எல். ராசன்... ராஜனில்ல...''

''அதாவது... நீங்க தேசீயமல்ல... திராவிடம்... அப்படித்தானே?''

அவன் இப்போது அவளை சற்றே பொருட்படுத்தியபோது, அவள் தொடர்ந்தாள்—

''எனக்குத் தெரியும் மிஸ்டர் ராசன். நான் உங்களோட பேனாக்கும்... நீங்க... செய்தியாளர் கூட்டத்தில் கேள்விமேல் கேள்வியாய் கேட்கிறதைக் கேட்டு... எனக்குக் கேள்விஞானமே வந்திடுச்சு...''

''நன்றி, ஆனால் எனக்கு பேன் முக்கியமல்ல... பேனாதான் முக்கியம்... அதோடு ஒரு உண்மையான செய்தியாளர் மூன்று வார்த்தைகளையும் ஒரே எழுத்துலே துவக்கப்படாது. உதாரணமா கேள்விமேல் கேள்வி கேட்டு, கேள்வி ஞானம்... இப்படி எழுதினால் அது கேலிலலேதான்போய் முடியும். அதனாலே... 'நீங்க கேட்கிற அழுத்தமான கேள்விகளாலே எனக்கும் செய்தித் துறையிலே அநுபவம் ஏற்பட்டது'ன்னு நீங்க ரத்தினச் சுருக்கமாகச் சொல்லியிருக்கனும்.''

''நன்றி மிஸ்டர் ராஜன்.. உங்களுக்கே தெரியும்... நான் கப்-ரிப்போர்ட்டர் சீனியோரடதான் வருவேன். இன்னிக்கு அவரு வாரதுமாதிரி தெரியல... நான் என்னென்ன கேள்விகள அமைச்சர்கிட்டே கேட்கலாம்... சொல்லுங்க ப்ளீஸ்.''

''அமைச்சரையே காணோம்... நீங்க வேற. ஆமா, அந்த ஆளு என்னதான் நினைச்சுக்கிட்டார்? வாட் எ இன்டிபிரன்ஸ்!''

எல். ராசன், இடுப்புக்குமேல் இருந்த உடல் பகுதியை தலையோடு சேர்த்து மேஜைமேல் மடித்துப்போட்டு, எதிர்பக்கம் இருந்த ஒரு தாடி மீசைக்காரனின் கையை பிடித்து அழுத்தி, ஏதோ சொன்னான். தாடி மீசை ஒரு மொட்டதலையின் காதைக்கடிக்க அந்தத் தலைக்குரியவர் எழுந்து கத்தினார்.

''என்ன சார் அநியாயம். 11 மணிக்குப் பிரஸ் கான்பிரன்ஸ்ஸுன்னு பெயரு. இப்போ மணி 11½. இன்னும் மினிஸ்டரைக் காணோம். இது என்ன கட்சிக்கூட்டம்னு நினைச்சாரா? வி ஆர் பிரஸ். எழுந்திருங்கப்பா.. லெட்டஸ் கோ...''

எல்லோரும் எழுந்தார்கள். ராசன் 'வெறிபேட், வெறிபேட்' என்று சொன்னபடியே எழுந்தான், பூமியிலிருந்து ஆகாயத்தை நோக்கி ஓட முடிந்தால் எப்படியோ அப்படி எழுந்தான். எழாமல் இருந்த கல்பனாவின் கையைப் பிடித்து இழுத்து அவளைத் தூக்கி நிறுத்தினான். அவள், அவனைக் கோபத்தோடு பார்த்தாள். அதை அறியாத இவனோ கூச்சல் போட்டான்.

''நத்திங் டூயிங்.. இதுக்குமேல நாம் இருந்தால், நாம் நியூஸ்மேன்னு அர்த்தமில்ல. அமைச்சருக்கு ஒரு பிரஸ் கான்பிரன்ஸ். நமக்கோ ஆயிரம். நடங்கப்பா...''

அதுவரை அதிகாரத்தை அவதாரமாக நினைத்து, தன்னை ஒரு அவதார புருஷன் போல் காட்டிக்கொண்ட அடிஷனல் செகரட்டிரி, இப்போது கையெடுத்துக் கும்பிட்டார். கும்பிட்ட கைகளில் வாய் ஊன்றியபடியே கெஞ்சினார்.

''ப்ளீஸ்... உட்காருங்க... மாண்புமிகு ஐயா அமைச்சர் அவர்களை இன்னும் ஐந்து நிமிடத்தில் கொண்டு வருவது என்னோட பொறுப்பு.''

அடிஷனல் செகரட்டரி ஓடினார். அவர் ஓடிய மூன்று நிமிட நேரத்திற்குள் அமைச்சர் வந்தார். உடனே அதிகாரிகள் எழுந்து, வாய்களில் தத்தம் ஆள் காட்டி விரல்களை தாளிட்டபடி, பணிவைக் காட்டிக்கொள்ளும் வகையில், கூனிக்குறுகி நின்றார்கள். செய்தியாளர்களோ, அமைச்சரையும், தத்தம் கடிகாரங்களையும், மாறிமாறி கோபங் கோபமாகப் பார்த்தார்கள். உடனே அமைச்சர், ''உங்களை தாமதப்படுத்தியதற்கு மன்னிப்பு வேண்டுகிறேன். 'தாமதம் என்பது, என் மதமும் அல்ல, அப்படிப்பட்ட மதம் எனக்குப் பிடிக்கவும் இல்லை' என்று வார்த்தைகளில்

விளையாடி, தான் பழைய பெருச்சாளி என்பதை நிரூபித்துக் காட்டினார்.

செய்தியாளர்கள் அனைவரும் சிரித்தபடியே உட்கார்ந்தபோது, கல்பனா, ராசனிடம், ''இவ்வளவுதானா உங்க உதாறு... அமைச்சர் ஒவ்வொரு வருடைய ஒவ்வொரு காதிலயும் ஒரு முழம் பூ சூட்டரார். நீங்க அதுல அரை முழத்தை எடுத்து இன்னொரு காதுலேயும் வச்சுக்கங்களேன்'' என்றாள்.

ராசன் விளக்கினான்—

''நாமும் ஆர்ட்டிஸ்ட் மாதிரிதான். உணர்ச்சி வசப்படறது இயற்கை. அது அதோட சரி. ஆனால் செய்தியாளன் என்பவன் விட்டுப்பிடிப்பவனாகவும், நீக்குப் போக்குள்ளவனாகவும் இருக்கணும். எதிர்ப்பக் காட்டணும். ஆனால், எதிரியாகக் காட்டப்படாது. இதுதான் ஒரு செய்தியாளனின் உண்மையான இலக்கணம்.''

''இந்த ஆண் ஆதிக்கம்தானே கூடாதுங்கறது. செய்தியாளர்ன்னு பெண்களையும் சேர்த்துச் சொல்லுங்க. நானும் ஜெர்னலிஸம் படிச்சுதான் வந்திருக்கேன்.''

ராசன், கல்பனாவை ஆச்சரிப்படாத வகையில் பார்த்துவிட்டு, பிறகு ஆச்சரிப்பட்டான். சினிமாக்காரர்களும், டீ.வி.காரர்களும் காட்டுவது மாதிரியான ஜீன்ஸ்போட்ட ரிப்போர்ட்டர் இல்லை இவள். சேலை கட்டியவள்தான். அதை ஜீன்ஸ்மாதிரி இறுக்கிக் கட்டியிருக்கிறாள். அவ்வளவுதான்.

அமைச்சர் யாரோ எழுதிக்கொடுத்த ஒரு அறிக்கையை வாசித்தார். அவரது துறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சாதனைகளையும், முந்திய அரசு செய்த வேதனைகளையும் அழுத்தமாகப் படித்தார். பிறகு செய்தியாளர்களைக் கேளுங்கள் என்பது மாதிரி பார்த்தார். கேள்விகள் பிறந்தன, பறந்தன.

''உங்கத் துறையில் அதிகாரிகளை நீங்கள் சுதந்தரமாய்ச் செயல்படவிட வில்லை என்பது, உண்மையா?''

''அமைச்சர் திருப்பிக்கொடுத்தார்,''

''சுதந்திரம் என்பது, ஆளுக்கு ஆள் மாறுபட்ட கண்ணோட்டம். பூரண சுதந்திரமுன்னு யாருக்கும் கிடையாது. இதோ கேள்வி கேட்டாரே ராசன், அவர் சுதந்திரம் என்கிற உரிமையில் அவரோட பத்திரிகை முதலாளிக்கு எதிராய் எழுத முடியுமா? இதுமாதிரிதான் எங்கள் அதிகாரிகளின் சுதந்திரம்.''

கல்பனா, ராசனை உசும்பிவிட்டாள். ''உங்களுக்கு சுதந்திரமே இல்லன்னு அமைச்சர் சொல்றார். நீங்க அதை நிரூபிப்பதுபோல, சும்மா இருக்கீங்களே'' என்றாள்

அவன் விளக்கினான்.

''நோ கல்பனா நோ... ஒரு செய்தியாளனோட கடமை, தகவல் கிடைக்கும் அளவிற்கு கேள்வி கேட்பதுதானே தவிர, தகராறுக்குப் போவதல்ல. ரிப்போர்ட்டிங் பணி என்பது, இன்பர்மேஷன் கேட்பது. இன்சல்ட் செய்வதல்ல. எந்தக் கேள்வியையும் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்குமேல அழுத்தப் படாது. ஆனால் எழுதும்போது அதை நம்மோட... விமர்சனத்தோடு எழுதலாம்...''

கல்பனா அவனிடம் சில சந்தேகங்களைக் கேட்டாள். ''கேள்வி, பதில் கேள்வி - பதிலே கேள்வி, கேள்வியே பதில்'' என்று நடந்து கொண்டிருந்த கூட்டத்தில் அவளுக்குச் சந்தேகங்கள் அதிகரித்தன. ரகசியமாகக் கேட்டாள்.

''அந்த ரிப்போர்ட்டர் ஏன் சார் அப்படி லெச்சர் அடிச்சார்.''

''இவர் எப்பவுமே அப்படித்தான். கேள்வியையே உபன்யாசமாக்கிவிடுவார். இன்னும் கொஞ்சம் இடம் கொடுத்தால், அமைச்சரைத் தள்ளிட்டு அந்த இடத்திலே போய்கூட உட்காருவார். ஒரு செய்தியாளன், சாரி, ஒரு செய்தியாளர், இதைத் தவிர்க்கணும்.''

''நிக்கறவங்கதான் கேள்வி கேட்கிறாங்க... உட்கார்ந்திருக்கறவங்க சும்மா இருக்காங்களே ஏன் சார்?''

''நிக்கறவங்க பெரிய பத்திரிகைளோட நிருபர்கள். இவங்க வாரத்துக்கு முன்னாலேயே உதிரி பத்திரிகைக் காரங்க வேலைவெட்டி இல்லாததினாலே முதல்லேயே வந்து உக்கார்ந்துட்டாங்க..''

''அதோ... கறுப்பா ஒருத்தரும், சிவப்பா ஒருத்தரும் பேசாம இருக்காங்களே.''

''அவங்களா... கறுப்பு... ஆல் இண்டியா ரேடியோ நீயூஸ் எடிட்டர். சிவப்பு அங்கேயே சீனியர் கரெஸ்பான்டன்ட்... அவர்களுக்கு செய்தியாளர்கள் என்ற நினைப்பைவிட கவர்ன்மென்ட் சர்வன்ட் என்கிற பயம்தான் அதிகம்... வருவாங்க, ஆனா வாயத்திறக்க மாட்டாங்க...''

''என்ன அது? உங்க வீட்டுக்காரர் அவ்வளவு தண்ணியை குடிக்கறாரு?''

''வெயில்ல பாமாயிலுக்கு நின்னுட்டு வந்திருக்கார்!''

கல்பனா மேலும் சில சந்தேகங்களை கேட்கப்போனாள். திடீரென்று ராசன் பேசாமல் இரு என்பதுபோல், அவள் கையைப்பிடித்து, அதனால் அவள் இடுப்பிலேயே குத்தினான். பிறகும் அவள் கையை விடாமல் அமைச்சரை நோக்கி சரஞ்சரமாகக் கேட்டான்.

''ஒங்களுக்கு முன்பு இருந்த அமைச்சர்... பல ஊழல்கள் செய்ததாகக் கூறப்படுகிறது. அவர்மீது விசாரணை நடத்துவீர்களா?''

''பழிவாங்கும் நோக்கம் எனக்கோ, எங்கள் தானைத் தலைவருக்கோ கிடையாது.''

''ஊழலை விசாரிப்பது எப்படி பழிவாங்குவதாகும்?''

''சரி.. பழைய குப்பையை எதுக்காக கிளறணும்?''

''அப்படி கிளறினால், அவருக்கு முன்பு இதே துறைக்கு அமைச்சராக இருந்த உங்களுடைய சமாச்சாரம் வெளியில் வரும் என்று நீங்கள் பயப்படுவதாக மக்கள் நினைக்கலாம் அல்லவா?''

''மக்கள் ஏற்கனவே தீர்ப்பு அளித்துவிட்டார்கள்.''

''மக்களிடம் இப்படிப்பட்ட ஊழல்கள்மீது விசாரணை நடக்கும் என்று சொன்னது நீங்கள். சம்பந்தப்பட்ட அமைச்சர் உங்களுடைய் சமாசாரங்களை சொல்லிவிடுவார். என்று பயப்பட்டு, இப்படி விசாரணை இல்லை என்று சொல்லுவதாக, ஒரு கருத்து அடிபட்டால், அதுபற்றிய உங்க கருத்து என்ன?''

இது என்னடா வம்பாப்போச்சு?... ''சரி, விசாரணை நடக்கும்'',

''விசாரணை கமிஷன் அறிக்கைப்படி தண்டனை வழங்கப்படுமா?''

''எங்கள் நோக்கம் தண்டிப்பதல்ல. திருத்துவதே...''

''அப்படியானால், இந்த விசாரணை ஒரு கண் துடைப்பா?''

''அப்படி நான் சொல்லலியே?''

''விசாரணைக் கமிஷன் அறிக்கையை வெளியிடுவீர்களா?''

''இது என்னடா வம்பு. ''சரி வெளியிடுவோம்''

''நடவடிக்கை எடுப்பீங்களா?''

''கண்டிப்பா!''

அமைச்சர் அவசரம் அவசரமாகக் கூட்டத்தை முடித்தார். பயல்கள் வாயைப் பிடுங்கிட்டாங்களே. யாரைக்

கேட்டுய்யா, விசாரணை நடத்துவேன்னு சொன்னே என்று தலைவர் கேட்டால், என்ன பதில் சொல்றது? 'அந்த . பிரமுகர் வந்தால் ''உனக்கு முக்கியத்வம் இல்லாமல் போய்விடும்'' என்று எண்ணி, இப்படி என் முன் அனுமதி இல்லாமல், விசாரணைக்கா உத்தரவிடுகிறாய் என்று என்மீதே விசாரணை துவங்கினால்? அமைச்சர் கோபத்தோடு கத்தினார். செய்தியாளர் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த அதிகாரியை தேடிக்கொண்டே கத்தினார்.

''எங்கேய்யா அடிஷனல் செகரட்டரி?''

''உங்கள கூட்டி வரதுக்காக, போனவர் இன்னும் வரல சார்.''

செய்தியாளர்கள், லிப்டிற்கு காத்திருக்க பொறுமை இல்லாமல், படிகள் வழியாக ஓடினார்கள். சட்டப்பேரவைக்கருகே உள்ள பிரஸ் ரூமுக்குள் போய், கிடைத்த டெலிபோன்களை கைப்பற்றினார்கள். அங்கிருந்த டெலிபோன்களில் ஒன்று ராசனிடமும் சிக்கியது. அவன் தனது பத்திரிகை அலுவலகத்திற்கு எண்களை சுழற்றப் போனான். கல்பனா அங்கே தாளும் கையுமாக வந்தாள்.

''ராசன், ராசன்...இது கரெக்டா இருக்குதா ராசன்?''

''என்னம்மா இது? அமைச்சர் வெள்ளைச் சட்டை போட்டிருந்தார். இதுவா முக்கியம்? நீ சினிமா ரிப்போர்ட்டர்ரல்லம்மா... சீரியஸ் ரிப்போர்ட்டர். பழய அமைச்சர் பரமசிவம்மேல் ஊழல் விசாரணை. அமைச்சர் கன்னையா திட்டவட்ட அறிவிப்பு. கண்டிப்பாக தண்டிக்கப்படுவார். என்று கூறுகிறார்.'' இப்படி எழுது... இதுதான் தலைப்பு.

''அவர் அப்படி ஒன்றும் சொல்லலியே...' .

''நீங்க கேட்டதாலதான் நான் சொன்னேன். அப்புறம் ஒங்க இஷ்டம்...''

''ராசன்... ராசன்... பிளீஸ் ராசன். நான் இதுவரைக்கும் சுயேச்சையாய் ரிப்போர்ட் செய்யல ராசன். எனக்கு கொஞ்சம் எழுதிக்குடுங்க ராசன். இல்லன்னா என் வேலை போயிடும். ஒரே அம்மா, ஒரே அப்பா... கஷ்டமான குடும்பம் ராசன்''

கல்பனா, ராசனின் தோளைத் தொட்டு உலுப்பினாள். அது சுகமாக இருந்ததாலும் தனக்குப் பிடிக்காத அவள் சீனியரைவிட, அவள் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தாலும், ராசன், டெலிபோனை வைத்துவிட்டு, அவளை அருகே கூப்பிட்டான். அவன் சொல்லச் சொல்ல, அவள் எழுதினாள். இடையிடையே பிரமாதம் என்றாள்.

இப்படிப்பட்ட ஒரு செய்தியை தனது சீனியராலும் எழுத முடியாது என்றாள். ராசன் இரட்டைச் சிரிப்பாய், சிரித்தான். தன்னைத்தானே வியக்கும் சிரிப்பு ஒன்று, அந்தச் சீனியரான அழுமூஞ்சியைப் பரிகசிக்கும் சிரிப்பு இரண்டு.

இப்படியாக அவன் யோசிக்கும் போது, இவள் பாராட்டுவதும், இவள் பாராட்டும் போது அவன் சிரிப்பதுமாய் ஒருமாத காலம், நான்கைந்து செய்தியாளர் கூட்டங்களுடன் நிறைவு பெற்றது. அவர்களுக்கிடையே இத்தகைய பழக்கம், ஒரு வழக்கமாகிவிட்டது. ஆனாலும். ஒருநாளில்—

நட்சத்திர ஓட்டல் ஒன்றில், செய்தியாளர் கூட்டம். பிரபல தொழிலதிபர் தனது புதிய தயாரிப்பை அறிமுகம் செய்து வைக்கும் அற்புதக்கூட்டம். போர்ம் மெத்தைப் போட்ட தரை. வர்ணஜால மின்விளக்குகள். ஆகாயக் கூரை. ஒருபக்கம் விஸ்கி பிராந்தி வகையறாக்கள், நீளம் நீளமாக கண்ணாடி ஜாடிகள். இன்னோரு பக்கம் நெருப்பில் வெந்து கொண்டிருந்த் அசைவ, சைவ சமாசாரங்கள்.

செய்தியாளர் கூட்டம் துவங்கத் துவங்கியது. ராசனைத்தான் காணோம் கல்பான, வழக்கம்போல் பக்கத்து நாற்காலியில் கைக்குட்டையைப்போட்டு, அவனுக்காக, ஒரு இடம் ரிசர்வ் செய்திருந்தாள். அவனை காணவில்லை. அவள் வெளியே திரும்பித் திரும்பி பார்த்த சமயத்தில், அவன் தென்பட்டான். உடனே அவள் துள்ளிக் குதிக்காத குறையாக, அவனைக் கையாட்டிக் கூப்பிட்டாள். அவனோ அவளைப் பார்த்துவிட்டும் வேறு எங்கேயோ போய் உட்கார்ந்தான்.

செய்தியாளர் கூட்டமென்ற முன்னுரை, முடிந்து, 'காக்டைல்' என்றும் முடிவுரை உதயமாகப்போன நேரம். அவன் தன்னருகே வருவான் என்று அவள் நினைத்தாள். ஆனால் அவன் வரவில்லை, சிறிது நேரம் வீம்பாக இருந்தவளுக்கு இருக்க முடியவில்லை. நேரடியாக அவனிடம் போய் கேட்டாள்.

''இன்னிக்கு என்னாச்சு உங்களுக்கு?''

''சாரி கல்பனா? இனிமேல் நான் உனக்கு டிக்டேஷன் கொடுக்க மாட்டேன். ஏன்னா... எங்க எடிட்டர் கொஞ்ச நாளா என் ஸ்டோரி நல்லா இல்லேன்னு சத்தம் போடரார் அந்தச் சத்தம் என்னை ஹைதராபாத்துக்கு தூக்கிட்டுப் போகப் போவுது.''

''எனக்கே பிரமாதமா தாறிங்க... உங்க பத்திரிகைக்கு அதவிட பிரமாதமாகத்தானே எழுதிக் கொடுப்பீங்க?''

''அப்படி சொல்ல முடியாது. உனக்கு ஒரிஜினலாய் சொல்லிடறேனா... அப்புறம் எங்க பத்திரிகைக்கு வேற விதமா லீடு போட வேண்டி வருது. இதுல ஒரு வேடிக்க. உன் பத்திரிகையில வெளியாகிற செய்திய பாராட்டுற எங்க எடிட்டரு, நான் ஊருப்படாம போயிட்டேன்கிறார்.''

''கவலைப்படாதீங்க.''

''எப்படி இருக்க முடியும்? இந்தக் கூட்டத்துல கூட என்ன பேசினாங்கன்னு எனக்கு கேட்கிற மனோபாவம் இல்ல. எப்படித்தான் ரிப்போர்ட் செய்யப்போறேனோ?''

''கவலைப்படாதீங்க... நான் குறிப்பெடுத்திருக்கேன். நான் உங்களுக்கு டிக்டேஷன் கொடுக்கிறேன்.''

''நல்லா இருக்குதே வேடிக்கை. சரி சொல்லு பார்க்கலாம்''

கல்பனாவின் சொற்களுக்கு ராசன் எழுத்து வடிவம் கொடுத்தான். இடையிடையே அவளை வியந்து பார்த்தான். அவள் சிரிப்பும் கும்மாலமாய் கேட்டாள்—

''இருட்டிட்டு. என்னோட பஸ் ஸ்டாண்டு வரைக்கும் துணைக்கு வாங்க.''

''சாரிம்மா... மனசு சரியில்ல... ரெண்டு பெக் போட்டுட்டுதான் வரப் போறேன்.''

''ஓ... அந்தப் பழக்கம்கூட ஒங்களுக்கு உண்டா? நத்திங் டூயிங் . உங்கள அந்தப் பக்கம் நகர விட மாட்டேன். இது ரொம்ப மோசமான பழக்கம்.''

''அதோ எத்தனையோ பேர் அந்தப் பக்கமா நடக்கிறாங்க... உன்னால தடுக்க முடியுமா?''

''எனக்கு நீங்களும் அவங்களும் ஒண்ணா! டோண்ட் பி சில்லி... சரி புறப்படுங்க.''

அவன், அவளை ஒரு மாதிரி பார்த்தான். அவன் கையைப்பிடித்து இழுக்கப் போனவள் சிரித்தபடியே, அதை உள்வாங்கிக்கொண்டாள். இருவரும் வெளியே வந்தார்கள். கல்பனா ஒரு சந்தேகம் கேட்டாள்.

''காதல் என்றால் என்ன? அது எப்படி இருக்கணும்? உங்களத்தான் ராசன்''

"புது சப்ஜெக்ட். ஆனாலும் சொல்றேன். சம வயதுள்ள தகுதியுள்ள ஒரு ஆணும் பெண்ணும், பழகுவது தெரியாமல் பழகி, அவர்களுக்கிடையே வருவது தெரியாமல் வருகிற அன்புக்குப் பெயர்தான் காதல். அதாவது இருவரும் காதலிப்பது தெரியாமலே காதலிப்பதுதான் நிசமான காதல். வலியப் ப்பார்த்தோ, அல்லது வம்படி செய்தோ உருவாகிற காதல் கடைசியில் வலியைத்தான் கொடுக்கும். வலிமையைக் கொடுக்காது.''

''நீங்க முதல்லே சொன்னது, நமக்குள்ள நடந்துடுத்துன்னு நினைக்கிறேன். நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''அப்படி நடந்ததாலேதான் நாம் ரெண்டு பேரும் இப்படி நடக்கிறோம்.''

அனுபவம் வாய்ந்த
விரல்கள்தான்
இதன் மேன்மையை
அறியும்!
IS 496480
உயர்ந்த ரசனையுள்ளவர்களால்
உயர்ந்த தரத்தைத்தான் நாடமுடியும்.
வைகிங் பனியன்கள் மற்றும் ஜட்டிகள்
உலகத்தரம் வாய்ந்தவை....
தரத்தில்....சுகத்தில்...கவர்ச்சியில்...
நீடித்து உழைப்பதில்....
என்றென்றும் உங்களுடன் உடன்
வருபவை.
வைகிங் அணிவீர் தன்னம்பிக்கையை உணர்வீர்.
Viking®
வைகிங்®
பனியன்கள் ஜட்டிகள்
தலைசிறந்த வல்லுநர்களால் உருவாக்கப்பட்டது.
2784 ad TAM

வேத காலத்திலும், சங்க காலத்திலும் பல பெண்பாற் புலவர்கள் சிறப்பாக விளங்கியிருக்கிறார்கள்.

ரிக்வேதத்தில் ஐந்தாவது அஷ்டகந்தில் விச்வவாரா, எட்டாவது மண்டலத்தில் அபாலா, மேலும் கோஷா, லோபாமுத்திரை, கார்கி, பிராதி தேவி போன்ற மாதரசிகள், மந்திர திருஷ்டிகளாக விளங்கியிருக்கிறார்கள். திரிவேனி, லட்சுமி, சுந்தரவல்லி போன்ற கவிஞர்கள் 19-ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்திருக்கிறார்கள்.

சங்க காலத்தில்தான் எத்தனை பெண் கவிஞர்கள்! முதலில் நம் நினைவுக்கு வருபவர் ஔவையார். தொடர்ந்து பல மாதரசிகள். அஞ்சியத்தை மகள் நாகையார், ஊட்டியார், ஒக்கூர் மாசாத்தியார், வரிமுலையாரித்தி, வெறிபாடிய காமக்கண்ணியார் என்று பட்டியல் நீள்கிறது. பிற்காலத்தில் தோன்றிய பெண் கவிகளுள் இரு சுடர் போல் ஒளிர்கிறவர்கள் காரைக்காலம்மையாரும் ஆண்டாளும்.

கவிஞர்களிடையேயும் கற்பனைத் திறன் மிகுந்த, எழுத்தாற்றல் வாய்ந்த மாதரசிகள் இன்றும் விளங்குகின்றனர். குறுந்தொகை, நற்றினை, புற நானூறு போன்ற சங்க இலக்கியப் பாடல்களைப் பார்த்தால், பெண் பாற் கவிஞர்களின் கற்பனை வளத்தை, கல்விச் செழிப்பை உணரலாம். அமரத்துவம் வாய்ந்த இந்த மாதரசிகளின் பாடல்கள் படிக்குந்தோறும் இனிமையும் உற்சாகமும் பயந்து விளங்குகின்றன. சங்க காலப் பெண்பாற் புலவர்கள் சிலரின் பாடல்களின் கருத்துக்களை ஓவியர் உமாபதி வண்ணச் சித்திரமாகத் தீட்டி, தீபாவளி இலக்கிய விருந்தாக அளித்திருக்கிறார்.

கவிக்குயில்களின் கானம்

நச்செள்ளையார்:

பதிற்றுப்பத்துள் ஆறாம் பத்தைப் பாடியவர் இவர். ஆடுகோட்பாட்டு சேரலாதன் என்ற மன்னனின் பெருமையை அதில் பாடியிருக்கிறார். அதற்காக ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் பரிசாகப் பெற்றவர்.

பொருள் தேடச் சென்ற தலைவன் திரும்பி வந்து, தன் காதலியின் தோழியைப் புகழ்கிறான். 'நான் வரும் வரையில், கவலையுற்று வருந்தாமல் தலைவியைக் காத்திருக்கிறாய்' என்கிறான். தோழி சொல்கிறாள்:

அடர்ந்த கானகம் - மலையருவி - மாடுகள் மேய்கின்றன.
அந்தப் பசுக்கள் அளித்த நெய்-
நெல் வயல் - முற்றிச் சாய்ந்த கதிர் - நன்றாக விளைந்திருக்கிறது. இந்த அரிசியும் நெய்யும் கலந்த சோற்றை ஏழு பானைகளில் பொங்கிக் காக்கைகளுக்கு விருந்து வைத்தாள். காகங்களுக்கு மகிழ்ச்சி. 'கா' 'கா' என்று கரைகின்றன. காகம் கரைந்தால் விருந்தினர் வருவார் அல்லவா! 'தலைவியும், நீங்கள் விரைந்து வருவீர்' என்று ஆற்றியிருந்தாள். காகங்களுக்கு இட்ட விருந்து சிறிதளவு; அவற்றின் உதவியோ மலையளவு'

காக்கையைப் புகழ்ந்து பாடியதால் காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்ற புகழ் பெற்றார் இந்தக் கவிஞர். குறுந்தொகையில் (210) வரும் பாடல்:

'திண்தேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றோண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெய் வெஞ்சோறு
எழுகலத் தேர்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே'

2. ஆதிமந்தியார்

நல்லிசைப் புலமைவாய்ந்த மெல்லியலார்களுள் ஒருவர் கரிகால் பெருவளவனுடைய மகள். ஆதி மருதி என்பது இயற்பெயர். வஞ்சிக்கோனாகிய ஆட்டனந்தியை மணந்தவர். மயிலாடுதுறைக்கு அருகில் கழார் என்ற ஊரில், காவிரியில் புதுப்புனல் பெருக்கெடுத்துவந்தபோது, இருவரும் புனலாடி மகிழ்ந்தனர்.

குறுந்தொகையில் (31) வரும் இவரது பாடலைப் பார்ப்போம். 'உனக்கு மணம் பேச எண்ணியிருக்கிறார்கள்' என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள். அப்போது தன் மனத்தைக் கவர்ந்தவனைப் பற்றித் தலைவி கூறுகிறாள்:

பசுமை படர்ந்த ஆற்றங்கரை - அதன் ஒரு பக்கத்தில் ஒரு சேரி - அந்த மக்கள் கிராமதேவதைக்கு விழா எடுக்கிறார்கள். அப்போது பெண்கள் கைகொட்டி ஆடுகின்றனர்; வீரமிக்க இளைஞர்கள், தங்களுக்குப் பிடித்த பெண்களின் கைப்பிடித்து நடனமாடுகிறார்கள். அப்படி நானும் அவரும் துணங்கைக் கூத்து ஆடினோம். அதற்குப் பிறகு அவரை நான் எங்கும் கண்டேனில்லை. சங்கை அறுத்துச் செய்த வளைகள், அவர் நினைவால் நெகிழ்கின்றன.

'மன்னர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோர் ஆடுகள மகளே என்கைக்
கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே!'

3. நக்கண்ணையார்

இவர் வணிக மரபினர். உறையூர் வீரை வேண்மான் வெளியன் தித்தனது மகன், போர்வைக் கோப்பெருநற்கிள்ளி என்ற சோழன், தன் தந்தையோடு பகைத்து நாடிழந்து, புல்லரிசிக் கூழுண்டு வருந்தினான். காட்டில் அலைந்தான். ஆனால் பக்கத்து நாட்டில் ஆமூர் மல்லன் என்ற மல்லனோடு பொருது வெற்றி பெற்றான். பெருநற்கிள்ளியின் வீரத்தைக் கண்டு காதல் கொண்டார் இந்தப் புலவர். மணக்க எண்ணியும் ஊருக்காக அஞ்சினார்; நாடற்ற ஒருவனை மணந்தால் உற்றார் தூற்றுவர்; என்று பயந்தாள். காதல் மிகுந்து மேனி பசலை கண்டது. சிலம்பு ஆர்ப்பத் தன் மனையின்கண் சென்றார் - 'ஊரார் - உற்றார் அவன் வெற்றியை ஏற்கினும் ஒதுக்கினும் என் வளையும் கலையும் நெகிழச் செய்யும் ஆண்மையுடையவன், அழகன் - இந்த வெற்றி அவனுடையதுதான்...! என்று தன் மனம் கவர்ந்தானை, உள்ள அரியாசனத்தில் அமர்த்துகிறார்.

புறநானூற்றில் (85) வரும் பாடல் இதோ:

'என்னைக் கூரிஃ தன்மையானும்
என்னைக்கு நாடிஃ தன்மையானும்
ஆடா டென்ப வொருசா ரோரே
ஆடன் றென்ப வொருசா ரோரே
நல்ல பல்லோ ரிருநன் மொழியே
அஞ்சிலம் பொலிப்ப வோடி யெம்மில்
முழாவரைப் போந்த பொருந்திநின்
றியான்கண் டனன்அவன் ஆடாகுதலே'

4. வெள்ளிவீதியார்

தம் அநுபவங்களையே இவர் பெரிதும் பாடியுள்ளார். இவர், தம் கணவனைத் தேடி அலைந்தார் என்று ஔவையார் பாடியிருப்பதிலிருந்து (அக.நா : 14) தெரிகிறது.

தலைவன் மணம்பேச, தலைவியின் வீட்டுக்குத் தம் உறவினர்களை அனுப்பினான். தலையில் பெரிய தலைப்பாகை கட்டியிருக்கின்றனர்; பூ, பழம், பரிசுப் பொருள்கள் நிறைந்த நட்டங்கள். தலைவியின் வீட்டுக்கு வந்து மணம் பேசுகின்றனர். தலைவியின் பெற்றோர், வந்தவர்களை வரவேற்று, விருந்து வைக்கிறார்கள்.

ஆனால் அதே சமயத்தில், அயல் அறையில் இருந்த தலைவி மிகவும் கவலைப்படுகிறாள், 'மணத்தைப் பேசி முடிப்பார்களா, முறித்துவிடுவார்களா?' என்ற கவலை. அந்தச் சமயத்தில் தோழி, கைநிறையப் பூக்களையும், பெரிய மாலையையும் கொண்டுவந்து தலைவியின் கழுத்திலும் தலையிலும் போட்டு, 'நம் ஊர்ப் பெரியவர்கள், பிரிந்தவர்களைச் சேர்த்து வைக்கும் தன்மையினர் - கவலைப்படாதே' என்கிறாள்; தலைவி மகிழ்கிறாள்.

'அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போ ரிருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னு மாக்களோடு
இன்றுபெரி தென்னு மாங்கண தவையே' (குறுந்: 146)









துரோகிகள்

கோவி. மணிசேகரன்

இந்தியாவின் உரிமை முழக்கத்து உலைக்களமாய்த் திகழ்ந்த பாஞ்சாலக் குறிச்சியின் ஒரு சதுக்கத்தில் நின்று உரத்த சிந்தனையுடன் நமனுக்கஞ்சாது ஓங்கிய குரலில் நாவசைக்கிறான் புலவன் புரட்சிப்பித்தன்:

''ஒண்ட இடம் கேட்டவன், ஊர் பெண்களைத் தண்டல் கேட்டானாம் என்பது அந்நியர்க்கு இடம் கொடுத்த அத்தனை தேசங்களுக்கும் பொருத்தமான உண்மை. குறிப்பாகத் தமிழகத்துக்கு மிக மிக உண்மையான சாசனம்.

தமிழகத்துத் தெற்கு வாசலைத் தவிர, வேறு எந்த வாசல் அந்நியர் வாசனையில் அடிமைப்படவில்லை?

''இன்றைக்கு எவனும் தன்னை அசல் தமிழ் ரத்தத்துக்குரியவன் என்று ஆதாரப் பூர்வமாக மார்தட்டி நிமிர்ந்து கொள்ளமுடியவில்லை. ரத்தத்தின் ரகசிய மூலம் என்பது ரிஷி மூலம் நதி மூலம் போன்றது தான்! ஆயினும் மொழியால் நாம் தமிழர்களாய் வாழ்கிறோம்! நாம் எந்த அளவுக்குக் கலந்து போனோம்! கலங்கிப் போனோம்; களங்கப்பட்டுப் போனோம் என்பதற்கு நம்மை நாமே பரிசோதித்துக் கொள்வதைவிட, நமது மொழியைப் பரிசோதனை செய்தால் போதும்! சங்க காலத் தமிழ் என்பது வேறு; இக்காலத் தமிழ் என்பது முற்றிலும் மாறு! அந்தத் தமிழை நாம் தமிழ் என்று சொல்லிக் கொண்டாலும் அது வேறு மொழி போலவே நமக்குப் புலப்படுகிறது. இப்போது ஆங்கிலக் கும்பினிக்காரனுக்குத் துவிபாஷி (துபாஷ்) இல்லையா? அது போல நமக்கு எங்கோ சில பழந்தமிழ் அறிந்த புலவர்கள் பொருளுரைத்து வருகிறார்கள். கம்பன் காலத்துத் தமிழ் வரை இந்தக் கஷ்டம்தான். அதற்கு மேல்... அதற்குமேல்...? இலக்கணம் செத்த புதுப் புலவர்களின் புதுப் பாடல்கள் போலிகளாய்த் தலைவிரித்தன. ஆந்திர நாயக்க போலி, இஸ்லாமிய மயக்கம், மராட்டிய பாதிப்பு, இப்போது ஆங்கிலக் கும்பினியரின் கிருத்துவக் கிறக்கம்! கட்டபொம்மனைப் பிடிக்க ஆங்கிலக் கும்பினிக்காரன் அலைகிறான்! அவன் தமிழனல்ல என்பதற்காக சில பாளையக்காரர்கள் காட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இல்லாவிட்டால் என்ன? தமிழ் மண்ணுக்குப் போராடுகிறான் அல்லவா? கேட்டால் சுயநலம் என்கிறார்கள்! இந்தப் பாளையங்கள் என்ன பொது நலத்துக்கா பறை சாற்றித் திரிகின்றன? வெள்ளைப் பறங்கியன் கேட்டால் மானத்தையும் வெகுமதியாகத் தந்து மேலும் கலப்பு செய்யத் தயாராக இருப்பவர்கள்தாமே! இல்லையென்றால், தலைமறைவாகி விட்ட வெள்ளைத் தேவன் என்கிற பாதர் (பஹதூர்) வெள்ளையின் தலை கொண்டு வருபவர்களுக்கு ஆயிரம் ★ வெள்ளி வெகுமானம் தரப்படும் என்று கும்பினி அரசாங்கம் அதோ தன் டோரா போடுகிறது! பாருங்களேன்... தமிழனைத் தமிழனே காட்டிக் கொடுக்க நீ நான் என்று அலைவதை? நூற்றுக்கு ஐந்து சதவிகிதமாக வந்த வெளிநாட்டவனை விரட்ட முடியவில்லை? ஆயுதங்களின் பயம்! அவர்களது ஆயுதங்களைப் பிடுங்கி அவர்களை விரட்ட இந்தத் தமிழர்களுக்குத் திராணி இல்லை? பணமோ? காமப்பசியோ என்று அலையும் இந்தத் தமிழன் இனி தலைதூக்கவே....''

டுமீல்... டுமீல்...

உண்மையைப் பொது மக்களிடையே எடுத்துக் கூறி கொண்டிருந்த புலவன் புரட்சிப் பித்தன் சுடுபட்டு வீழ்ந்தான்.

சுட்டவன் ஆங்கிலக் கும்பினி அதிகாரம் பெற்றவன்.

சுட்டவர்கள் ஐவர் தான்; குழுமி இருந்தவர் நூற்றுக்கு மேல்! ஐந்து துப்பாக்கிகள் தாமே? தயார் நிலையில் பத்து குண்டுகள் தாமே? இரண்டு குண்டுகள் புலவன் தமிழைக் குடித்தாலும் எட்டு குண்டுகளுக்கு எட்டு பேர் மாண்டு, ஏனைத் தமிழர்கள் இந்த

★ ஒரு வெள்ளி என்பது (சக்கரம் அல்லது ரூபாய்) இன்றைக்கு ஏறத்தாழ பத்து லட்சம் ரூபாய்க்குச் சமம்.

எதிரிகளை வெட்டி மாய்த்திருக்க முடியாதா? துப்பாக்கிகளைப் பறிமுதல் செய்திருக்க முடியாதா? அவ்வை பின்னால் பயன்பட்டிருக்க முடியாதா?

கலைந்து மூலைக்கு ஒருவராக ஓடுவானேன்? உயிருக்குப் பயம்? இந்த லட்சணத்தில் வீர மார்தட்டல்!

உண்மைதான் சுடும்! உண்மையையுமா சுடும்? சுட்டுவிட்டானே! புலவன், மாண்டு போனானே!

'கோழை மக்கள்; காசுக்கும் காமத்துக்கும் அலையும் ரத்தங்கள்! சுய உணர்வற்ற சுயநலமிகள்' - என்று எண்ணியவாறு அந்தப் புரட்சிப் பித்தன் உயிர் துடியாய், துடித்துப் பிரிந்தது.

பாஞ்சாலங் குறிச்சி மட்டுமல்லாது, ஏனைய பாளையங்களிலும் தண்டோரா செவிப்பறைகளைக் கிழிக்கிறது.

''பாதர் வெள்ளையாம் வெள்ளைத் தேவனை உயிருடனே அல்லது அவனது தலையையோ கொண்டு வருபவர்களுக்கு ஆயிரம் வெள்ளி வெகுமானம். இது தளபதி மேஜர் பானர்மேன் அறிவிப்பு...''

பறை சத்தம் ஒலித்துக்கொண்டே போகிறது...

பாவி மக்கள் அலைகிறார்கள்.

எங்கே பாதர் வெள்ளை...

எங்கே பாதர் வெள்ளை...? ஆயிரம் வெள்ளி...

வீரபாண்டிய கட்டபொம்மனைப் பிடித்து வீழ்த்த பாஞ்சாலக் குறிச்சி போர்க்கோலம் பூண்டுவிட்டது. ஏனைய பாளையக்காரத் தமிழர்களைப் போல, இந்தக் கம்பளத்தான் (தெலுங்கு) மரபில் வந்த கட்டபொம்மனால் பணிந்து கொடுக்க முடியவில்லை. நான் அந்நியனானாலும் தமிழகத்தில் வேரூன்றிப் போனவன்! எங்கோ இருந்து வந்த வெள்ளைத் தோல் கும்பினிக்காரன் - அந்நியன் இந்த மண்ணை அபகரிப்பதாவது? இதனை நாம் அங்கீகரிப்பதாவது என்று சுதந்திர முழக்கமிடுகிறான் பாண்டிய மரபிலிருந்து வராவிட்டாலும் பாண்டியன் பெயரை பவித்திரமாகப் போற்றி வைத்துக்கொண்ட கட்டபொம்மு வீரபாண்டியன்!

பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியாவைப் பிடித்துக் கபளீகரம் செய்ய முனைந்த போர்த்துகீசியன், டச்சுக்காரன், பிரஞ்சுக்காரன் ஆகியவர்களை மீறி ஆங்கிலேய கும்(கம்)பினிக்காரன் தலைதூக்கிவிட்டான்; யூனியன் ஜாக்கிக் கொடியை எங்கெங்குப் பறக்கவிடலாம் என்று இடம் தேடி அலையவும் முற்பட்டுவிட்டான்.

சிவகங்கை மறவர்ச் சீமையில், 1750-72, முதல் சுதந்திரக் குரல் கொடுத்து வாளையுருவினாள் தமிழ் மறக்குலத்து வீராங்கனை ராணி வேலு நாச்சியார். அவளைத் தொடர்ந்து அகமுடை முதலியார் வகுப்பைச் சார்ந்த சேர்பைக்காரக் குடும்பத்து மருது பாண்டியர்கள் முழுக்கமிடத் தொடங்கினர். அந்தச் சுதந்திரத் தீயின் பரவல் தான் பாஞ்சாலங்குறிச்சியில் பற்றியது. ஏனைய பாளையங்களின் தமிழ் ரத்தத்துக்குப் பற்றவில்லையே என்று மருது பாண்டியர் குமுறியபோதுதான் வீர பாண்டிய கட்டபொம்மனின் கர்ஜனைக்குரல் இராமேஸ்வரக் கோபுரத்தில் பட்டு எதிரொலித்தது, சென்னைக் கோட்டையில் பறந்த யூனியன் ஜாக் கொடியில் தெறித்து அதிர்ச்சி காணச் செய்தது.

கட்டபொம்மனுக்கு உறுதுணையாக யார் வந்தனர்? நாகலாபுரப் பாளையக்காரன், கோலார்ப்பட்டிப் பாளையக்காரன், ஏழாயிரம் பண்ணை, காடல்குடி, குளத்தூர் போன்ற ஐவர். 84 பாளையங்களில் ஐந்து போதுமா? இவர்களுள்ளும் அசல் தமிழர் ஓரிருவரே!

அதோ, பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைப் பீரங்கிகளை வைத்துத் தகர்க்க முனைகிறான் ஆங்கிலத் தளபதி மேஜர் பானர்மேன்.

ஒருநாள், பீரங்கிகளின் தாக்குதலில் கோட்டை பிளவு கண்டு விட்டது. அதன் எதிரொலி வீரபாண்டிய கட்டபொம்மனின் நெஞ்சும் பிளவு கண்டதுபோன்ற அவதி.

''தப்பியோடுங்கள்; தலைமறைவாகுங்கள்.'' வீரபாண்டிய கட்டபொம்மன் கத்துகிறான்.

மாலைச் சூரியன் மேற்குப் பிளவில் நுழைந்து கொண்டிருந்தநேரம்...

பாஞ்சையின் அவலக்குரல்களையும் சுதந்திர ரத்தம் ஆறாய்ப் பெருகி ஓடுவதையும் காணமுடியாமல் விரைந்து மறைய முனைகிறான்.

காலின்ஸ் துரை வெறிகொண்டு நுழைந்த அடுத்தகணம்...

கட்டபொம்மனின் இதய நேசனான பாதர் வெள்ளை என்கிற வெள்ளைத் தேவன், கூரிய ஈட்டிகொண்டு காலின்ஸ் துரைமீது பாய்ந்தான். மார்பில் ஆழச் சொருகிய ஈட்டியின் தாக்குதலால், ''பானர்மேன்'' என்று பெருங் கூச்சலிட்டு அங்கேயே வீழ்ந்து மாண்டு போனான்.

கோட்டை இடிபட்டுத் துகளாகி, தரைமட்டமானது. அனைவரும் தப்பியோடிவிட்டனர். சில அரசு பிரதானிகள் சிறை பட்டனர். ஆயினும் வீரபாண்டிய கட்டபொம்மனும், காலின்ஸை ஈட்டியால் வீழ்த்திய வெள்ளைத் துரையும் தப்பியோடிவிட்டார்களே!

படைத்தலைவர்களான ஒரெய்லி, புரூஸ், டக்ளஸ், டார்மிக்ஸ், பிளேக், பிரௌன் போன்றோருக்கு காலின்ஸ் இழப்பு, கண்களில் தீப்பொறிகளைக் கிளப்பியது. ''யார் அவன் பாதர் வெள்ளை? அவனைப் பிடிக்க ஆயிரம் வெள்ளி என்று தண்டோரா போடுங்கள்.''

இதன் எதிரொலியாய் ஒலித்தது தான் தண்டோராவும், இதன் பயனாய் மக்களைத் திரட்டிக் கருத்தைச் சொன்ன புலவர் புரட்சிப் பித்தன் மார்பில் குண்டு நுழைந்து மாண்டதும்!

உண்மையை ஒருபோதும் சொல்லக்கூடாது; எழுதக்கூடாது. அது சுடும். எந்த ரூபத்தில்? சுடும்; அவ்வளவே!

தனது தலைக்கு ஆயிரம் வெள்ளி என்று அறிவித்து விட்டபோது, எமனோடு செய்து கொண்ட ஒப்பந்தமாகி விட்டது. அது இன்னும் இருக்கலாம்; நாளை, அல்லது வாரம், மாதம்...

ஆண்டுக் கணக்கில் என்பது அநியாயமான சிந்தனை. காட்டிக் கொடுப்பதில் பெயர்போன இன்றைய நிலை தமிழர்கள் விட்டா வைப்பார்கள்?

''வெள்ளைத் தேவன்! கொஞ்ச காலத்துக்கு நீ...'' வீரபாண்டிய கட்டபொம்மன் முடிக்கவில்லை.

''தலைமறைவாக இருக்க வேண்டும் என்கிறீர்களா? ★ மகாராஜா? முதலில் எனது பலி பாரதப்போரின் அரவான் பலியாக இருக்கட்டும், என் மூலம் இப்போர் வெற்றி பெறுமானால் என்தலை கோடி வெள்ளி பெறும்!''

வெள்ளைத் தேவனாம் பாதர் வெள்ளையின் மூர்க்கமான பிடிவாதம் என்பது நேற்று இன்று அறிந்ததல்லவே?

கட்டபொம்மு பெருமிதமாய்ச் சிரித்துக் கொண்டார். அத்துடன் சொல்லவேண்டாமே என்று அதுவரை மறைத்து வைத்திருந்தசெய்தியையும் சொன்னார்:

''வெள்ளைத் தேவர்! உன் மனைவி மக்களை வெள்ளைப் பறங்கியர் சிறைபடுத்திப் பிடித்துவைத்திருக்கிறார்கள். அப்போதாவது நீ சரணடையமாட்டாயா என்று! இப்போத உன் காதலி சண்பகவடிவு உன்னைக் காணவேண்டும் என்று கண்ணீருடன் இருக்கிறாளாம். நீ இறந்த பிறகு பார்ப்பதை அவள் விரும்பவில்லையாம். எப்படியாவது மாறுவேடத்திலாவது போய் அவளை ஒருமுறை சந்தித்து வந்துவிடு. அவளும் ஒரு திருப்தியுடன் உயிருடனிருப்பாள். உயிருடன் இருக்கிற அளவுக்குச் சமாதானம் செய்ய வேண்டியது உன் சாமர்த்தியம்.''

வெள்ளைத் தேவனால் மறுக்க முடியவில்லை. தலைவனின் அன்புக் கட்டளையாயிற்றே!

அன்றிரவு...

தக்கத் துணைவர்களுடன் செல்வது ஆபத்து என்கிற ராஜதந்திரத்தை மனத்

★ அந்தக் காலத்தில் பணம் பெருத்தவனையே மகாராஜா என்று அழைக்கிறபோது பாளையக்காரர்களை அழைத்ததில் வியப்பில்லை.

தில் வைத்துப் பிச்சைக்காரன் புனை வடிவம் பூண்டு பாஞ்சாலங்குறிச்சி யிலிருந்து பத்துகல் தொலைவிலிருந்த கிராமத்து மாமன் வீடு நோக்கிச் சென் றான். சொல்லப்போனால் இதுவும் காதல் பிச்சைதானோ?

இரவு மூன்றாம் ஜாமம்...

ஏற்கெனவே செய்தி சென்றுவிட்ட தால் சண்பகவடிவு தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு காத்திருந் தாள். வாசற்படியில் அவனது தந்தை - வெள்ளைத் தேவனின் மாமன்.

தனது வீட்டை நோக்கி யாரோ வரு வது கண்டு முதலில் தயங்கினார் மாமன் காரன். யார் இந்த பைராகி?

''யார் நீ?''

''மாமா! நான்தான், பாதர் வெள்ளை.''

வெள்ளைத் தேவன் அந்த ஒட்டு வீட்டுக்குள் நுழைய, சண்பகவடிவின் பேரலங்காரம் கண்டு பிரமித்துப் போனான்.

ஆனால் சண்பகவடிவு? அதிர்ச்சி அவளை ஆக்கிரமிக்கக் கவனிக்கிறாள்.

''நான்தான் சண்பகவடிவு'' என்று சொல்லியவண்ணம் அவன் தனது வேஷத்தைக் கலைத்தான், அடுத்த கணம்...

அணையில் தேக்கிவைத்த நீரை மடைதிறந்துவிட்ட வெள்ளம் ஆவேசத் துடன் பாய்ந்த சண்பகவடிவு, வெள் ளைத் தேவனைச் சேர்த்து அணைத்துக் கொண்டாள். எங்கிருந்து வந்தது அந்தப்பலம்? காதல் பலம் ஏனைய பலத்தினும் மிகுதியானதோ?

வெள்ளைத்தேவனிடம் அனுமதி பெறுவதாவது? அநாவசியமாக வாயைப் பேச விடுவதாவது? முத்தங் கள் அணைபோட்டுப் பேச்சை நிறுத் தின.

''சண்ப...''

'கம்' என்ற எழுத்துக்கள் வெளிவர வேண்டுமே! பசைபோல ஒட்டிக் கொண்டன உதடுகள்!

ஓரளவு தனது வேகம் குறைந்த சண் பகவடிவு, ''அத்தான்! மீண்டும் நீங்கள் என்னை வந்து சந்திப்பீர்கள் என்கிற நம்பிக்கை எனக்கில்லை.''

''ஏன் சண்பகம்?''

''நம் நாட்டில் ரோகிகள் குறைவு; துரோகிகள் அதிகம். அதுவும் ஆயிரம் வெள்ளி, வாழ்நாளில் எவனும் சம்பா திக்க முடியாததல்லவா? வீணாகப் பேசி,நேரத்தைக் கடத்த வேண்டாம். அத்தான்! எனக்கு ஓர் ஆசை. நிறை வேற்று வீர்களா?

''என்ன? சொல்!''

''நிறைவேற்றுவீர்களா? சத்தியம் செய்யுங்கள்.''

''நிறைவேற்றுவேன். காரணம், அடுத்த சந்திப்பு நமக்கு நிச்சயமில்லை.''



"நாம் திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை. முதலிரவு அனுபவித்தோம் என்கிற நிறைவுடன் இருவருமே சாகலாம் அல்லவா?"

யோசிக்கிறான் வெள்ளைத்தேவன். எவ்வளவு ரத்தினச் சுருக்கமாகச் சொல்லிவிட்டாள்?

"அத்தான் கோழி கூவிவிடும்."

ஒரு நீண்ட பெருமூச்சுடன், தனது காதலி சொன்னாளே... 'தெரியாத ஒன்னு...' அதனைத் தெரியவைக்க அணைத்து முனைகிறபோது...

'பூட்ஸ்' சத்தம் திமுதிமு வென்று கேட்கிறது.

அரண்டு மருண்டு அணைப்பிலிருந்து விடுபட்ட இருவரும் கவனிக்க, அந்த வீட்டினுள் பறங்கி வீரர்களும் அவர்களின் தலைவன் டக்ளஸும் நுழைந்து வெள்ளைத் தேவனைச் சூழ்ந்துகொண்டனர்.

"கைது செய்து விலங்கு மாட்டுங்கள். காலின்ஸை ஈட்டியால் குத்தியது போல, இவனை பல ஈட்டிகள் கொண்டு உடலைத் துளைக்க வேண்டும். இழுத்துச் செல்லுங்கள்."

எப்படித் தெரிந்து அகப்பட்டுக் கொண்டோம்?

பாதர் வெள்ளை யோசிக்குமுன், டக்ளஸ், ஆயிரம் வெள்ளிப்பணம் அடங்கிய பையை, தனது மாமனிடம் நீட்டியபோதுதான்...

ஓ... துரோகி வேறு எங்கிருந்தும் முளைக்கவில்லை. மாமன் உருவிலேயே முளைத்துவிட்டான் என்பது புரிந்தது.

'கோ' வென்று பதறித்துடித்து அழுகிறாள் சண்பகவடிவு. தந்தையா இப்படிக் காட்டிக் கொடுத்தார்?

வெள்ளைத் தேவன் விதியின் பின் தொடர்ந்து நடந்தான்.

அவன் சென்று வெகுநேரம் வரை பிரமைபிடித்தவளாக சிலைபோல நின்றாள். தந்தையைத் தாறுமாறாகப் பேசி என்ன பயன், இன்னும் முயன்றால் தன்னையும் ஆயிரம் வெள்ளிக்கு விற்க எந்நேரம் பிடிக்கும் என்பதையல்லவோ வீரக்காதலர் சொல்லாமல் சொல்லிச் செல்கிறார்.

என்ன நினைத்தாளோ?

தற்பாதுகாப்புக்காக, இடுப்பிலிருந்த குத்துவாளை எடுத்து தனது மார்பில் ஆழமாகச் சொருகிக் கொண்டு தரையில் சாய்ந்தாள் சண்பக வடிவு.

அரண்டு போனான் தந்தை

"சண்பகம்!"

"சீ! என் பெயரைச் சொல்லாதே நியாயப்படி உன்னைக் குத்திக் கொன்றிருக்க வேண்டும். உன்னைவிட்டு வைப்பதன் மூலமாவது சில துரோகிகள் திருந்தலாம் அல்லவா? அதற்காகத் தான்! நீ என் அப்பனா, சத்தியமாக நான் நம்ப மாட்டேன். ஒரு பெண் தனது உறவுடையவனுடன் இன்பம் அனுபவிக்கிறபோது எந்தத் தந்தை எதிரியை விட்டுப் பிரிப்பான்? எந்த தந்தை அமங்கலியாக்குவான்? என் தாய் எவனோ ஒரு சுத்த வீரனுக்கு என்னைப் பெற்றிருக்க வேண்டும். நீ ஒரு கயவன் என்பதை அவள் அப்போதே புரிந்து இருக்க வேண்டும்."

"சண்பகம்..."

"ஆறுதலான கோபமா? ஆயிரம் வெள்ளிக் கோபமா? என் தாயை நான் சந்தேகப்பட்டது குற்றம்தான். அவள் சத்திய மாகத் தர்மபத்தினி. இல்லையென்றால் இப்படி ஒரு மகளை அவள் பெற்றிருக்கமாட்டாள். உனக்கு சூடு சுரணை வரவேண்டுமே என்று இப்படிச் சொல்லிப்பார்த்தேன். இப்போது சொல்கிறேன். உன் தாய், உன் தகப்பனுக்கு உன்னைப்பெற்றிருக்க மாட்டாள், சத்தியமாகப் பெற்றிருக்க மாட்டாள். ஒரு கேவலமான தரகனுக்குப் பெற்றிருப்பாள். சந்தேகமே இல்லை..."

"சண்பகம்" என்று மீண்டும் கதறிய வண்ணம் அப்பன் பாய்ந்தபோது...

சண்பக வடிவு உயிர் பிரிந்து விண்ணுலகம் சென்றுவிட்டது. ○

"அர்ச்சனா....... நான் வர்றேன்!"

'டிரஸ்ஸிங் டேபிள்' முன்னால் அலங்கரித்துக் கொண்டிருந்தவளிடம் விடைபெற்றான் ரவி.

"ஸ்கூலுக்குத்தானே?" என்றவள் பல்லைக் கடித்துக் கொண்டாள். "டிச்சீங் பிராக்டீஸ்! நேத்தோடு முடிஞ்சிப் போச்சில்லே!" அவளே சொல்லிக் கொண்டாள்.

"அப்ப...... இருங்களேன்! நானும் வர்றேனே! தெருமுனை 'பஸ் ஸ்டாப்' வரைக்குமாவது ஒண்ணாப் போவோமே?" கண்ணாடியில் தெரிந்த ரவியின் பிம்பத்தைப் பார்த்துக் கண் டித்தாள்.

"இல்லே........ அர்ச்சனா! நான் முதல்லே போயிடறேன்! நாம்ப ஒண்ணாப் போனா..... ஓங்கப்பா சொல்றதை என்னாலே தாள முடியாது!" ரவியின் கண்களில் கண்ணீர்ப் பேரணி.

"ஓ....... நோ!" துள்ளி எழுந்தாள் அர்ச்சனா. "எனக்கு முன்னாலே கண்ணிலே தூசி விழுந்துதுன்னு....... கூட நீங்க........ இதை சிந்தக்கூடாது!" ஆதரவாய்க் கண்ணீரைத் துடைத்தாள்.

"ஒனக்குப் பின்னாலே அழலாம்னு சொல்றியா?" தன்னை மீறிய சோகத்திலும் ரவி 'ஜோக்' அடித்தான்.

"எப்பவும் நீங்க அழக்கூடாது! நான் சொல்லலே! கடவுளோட கட்டளை இது! ஆமாம்! ஒரு சிலருக்கே வாய்க்கும்........ சிரிச்ச முகம்! எப்பவும் பளீர்னு ஒளிர்ற முகம்! அதை எதுக்குக் கடவுள் கொடுத்திருக்கணும்?"

கொஞ்சலாய்க் கேட்டாள் அர்ச்சனா.

"சாயந்திரம் வரைக்கும் நேரத்தை மெல்லணுமே? அதுக்குத் தயார் செய்துக்கறேன்!"

ரவியின் குரல் நடுங்கியது.

"ஈ.சி.... டியர்!" என்ற அர்ச்சனா, மேசை மீதிருந்த கைப்பையைத் திறந்து, இருபது ரூபாய் நோட்டை நீட்டினாள்.

"இந்தாங்க! போஸ்டல் ஆர்டர் வாங்கணும்னு சொன்னீங்களே.... அதுக்கும்..... ஓங்க கமல், அப்புவா அசத்தறாராமே அதைப் பாக்கவும்!"

"அது ஒண்ணுதான் குறைச்சல்!" தயங்கினான்.

"எனக்கு டைம் ஆவுது! ஓங்களுக்கு வேலை வரட்டும்! ஒரு பைசா விடாமத் தண்டல் செய்திடறேன்!"

அவன் கைகளில் திணித்துவிட்டு, டிரஸ்ஸிங் டேபிளுக்கு விரைந்தாள்.

"சத்தியமா...... என்னைத் தெண்டச் சோறுன்னு நினைக்கலியே?" அவள் முதுகில் சாய்ந்து குலுங்கினான் ரவி.

"என்னங்க .... இது... சின்னப்பிள்ளையாட்டம்?"

அர்ச்சனாவின் குரலில் முதல் முறையாய்க் கோபம் எட்டிப் பார்த்தது.

"ஓங்களுக்கு என்னாங்க? இங்கிலீஷ்லே எம்.ஏ.எம்.பில்! பத்தாததுக்கு இதோ பி.எட்.செய்றீங்க! எக்சாம் எழுதிட்டா ஜாம், ஜாம்னு வாத்யாரு... ஆயிடுவீங்க! அப்புறம் இந்த டெஸ்பாச் கிளார்க்கை மதிப்பீங்களா?" போலியாய்ச் சிணுங்கினாள்.

"ஏய்... ஏய்... விடைக்கிறியா? சரி... நான் வர்றேன்!" கிளம்பினான் ரவி.

சைக்கிளை எடுத்து வெளியில் வந்தான்.

"எங்கே போறது?' இரண்டு மாத இடைவெளிக்குப் பிறகு, இந்தக் கேள்வி அவனை இம்சித்தது.

'லைப்ரரிக்குப் போவோம்!' தனக்குள் சொல்லிக் கொண்டவன் வேகமாய்ச் சைக்கிளை மிதித்தான்.

'ஆமாம்! எதற்காக இப்படிப் பறக்கிறோம்?.... ஓ! இரண்டு மாதப் பழக்கமா?'

சிரித்துக் கொண்டான். அந்த நாட்களை நினைக்கும்போது மனத்துக்குள் மல்லிகை மணத்தது. ஆமாம்! கடந்த ஒரு வருடத்தில், அவனில் காணாமற்போயிருந்த உற்சாகம் உயிர்த்தெழுந்த நாட்கள் அவை! நேரத்துக்கும் ஒரு மதிப்பு இருந்த நாட்கள் அவை!

இரவெல்லாம் கண்விழித்துப் பாடத் திட்டம் தயாரிக்கவும், 'டீச்சிங் எய்டு' காகப் படம் போடவும் அவன் காட்டிய ஆர்வத்தைக் கேலி செய்தாள் அர்ச்சனா.

காலையில் அவள் கொடுக்கும் ஏதாவது 'கிளறல் சாதத்தோடு' ஐந்து மைல் தொலைவில் இருந்த அந்தப் பள்ளிக்குச் சைக்கிளை மிதிக்கும் போது மனம் ராஜபாட்டையில் ஓடும். வகுப்பில் மாணவர்கள் அவனை 'எல். போர்டாய்ப்' பார்க்காமல் அவனுடைய உற்சாகமான போதனையில் கலக்கும் போது சிலிர்த்துப் போவான்.

"சார்... இப்படிப் போகக் கூடாது..." கவர்னர் மாளிகைக்கு அருகே நின்றிருந்த போலீஸ்காரர் குரல் அவனை நினைவுக்கு உலுக்கியது.

"லைப்ரரிக்கும் போகணும்..." பொறுமையிழந்தான் ரவி.

"ஆமாங்க! ஆனா... இன்னைக்குப் பிரசிடெண்ட் வர்றாருங்க..." என்றபடி சீறிப் பாய்ந்த, 'யமகாவை'யும் நிறுத்தினார்.

"என்ன ஜனநாயகம்டா... இது!" யமகா உரக்கவே முணுமுணுத்தது. ரவி மனத்துக்குள் திட்டியபடி சைக்கிளைத் திருப்பி, பாரதிதாசனார் சிலைப்பக்கம் சென்றான்.

நூல் நிலையத்துக்குள் நுழைந்தான். மேசை மீது ஓரிரு தினசரிகளே! வார, மாத இதழ்களைக் காணோம்! கொஞ்ச நாளாய் நூல்நிலையம் ஏனோ இப்படி வறண்டிருக்கிறது!

'ம்! ஏதாவது இருந்தாலாவது... ஒரு மணி நேரம் உபயோகமாய்ப் போயிருக்கும்!'

வெளியே வந்தான். சைக்கிளை எடுக்கும்போது, "சார்... டோக்கன்...?" என்றான் ஒரு சிறுவன்.

"நான் உள்ளே போனப்ப... ஒண்ணைக் காணோம்! இப்ப காசு கேக்கறே...?"

புத்தகம் இல்லாத எரிச்சலை அவன் மேல் காட்டினான் ரவி.

எப்போதும் உட்காரும் சிமெண்ட் நாற்காலிக்கு வந்தான். பெருமூச்சுடன் அதைப் பார்த்தான். சாயந்திரம் ஐந்து அல்லது ஆறுமணி வரைக்கும் அவன் அமரப்போகும் சிம்மாசனம்! மேலே பவழமல்லி மரம் படர்ந்து அவனுக்காக வெண்கொற்றக் குடை பிடித்துக் கொண்டிருந்தது.

உட்கார்ந்தான்.

''கைரேகை பார்க்கலாமா, சார்?'' என்று வினவும் சோதிடக்காரர் வருகிறார். அவருக்கும் அவன் தலையாட்டம் வேண்டும்!

பின், பின்... எதிரே இருக்கும் பூங்காவின் நடுவே நிற்கும் செம்மண் குன்றையும், சற்றுத் தள்ளி நிற்கும் பெருமாள் சிலையையும் திருப்பித் திருப்பி வெறித்துப் பார்க்கவேண்டும்!

'என்னடா, அங்கே சேலை வேலைக்குப் போகிறது! இவன் பூங்கா நாற்காலியோடு புதைந்து கிடக்கிறான்! சரியான சோம்பேறி!' எனத் திட்டுகிறீர்களா?

பாவம், அவனைத் திட்டாதீர்கள்!

''என்னப்பா சொல்றீங்க? எனக்குக் கல்யணமா?'' கோபமும், ஆச்சரியமும் கண்களில் கொப்புளிக்க, ரவி துள்ளினான்.

''ஆமாண்டா!'' அம்மாவும் வாஞ்சையோடு சொன்னாள். அவள் கண்களில் திடுமெனப் பிரகாசம்! ஓ! அவள் பிள்ளைக்குக் கல்யாணம் என்கிற பூரிப்பா?

''என்னம்மா இது? ஏண்டா, வேலை ஏதும் இல்லாம சுத்தி வரே! நாலு காசு கொண்டாந்தாத்தான் சோறு போடுவேன்னு சொல்லுங்க... ஏத்துக்கறேன்! ஆனா இது என் தன்மானத்தையே சீண்டிவிடற செய்தியா இருக்கே?''

படபடத்த ரவியைக் கோபமாய் முறைத்தார் சிங்காரவேலு - அவனுடைய தந்தை!

''என்ன வார்த்தை சொல்றடா, படுவா! கடலாட்டம் வீடு இருக்கு! கையிலே ஏதோ காசு இருக்கு! என் சொத்தைப் பத்து பேருக்குப் போடற துணிச்சல் எனக்கு இருக்குடா! அப்படி இருக்க நீ காசு கொண்டாறலேன்னு யாரு அழுதா? ஏதோ நல்ல எடம் வருதேன்னு பார்த்தா...'' அவருடைய நரைத்த மீசை வேகமாய்ப் படபடத்தது.

''ஆமாம் ரவி! பொண்ணு அம்சமா இருக்கா?'' மாமியார் வருங்கால மருமகளுக்கு நற்சான்றிதழ் வழங்கினாள்.

''ஊஹும்! ஒங்க பிரண்ட் பொண்ணு கல்யாணத்துக்குப் போன நீங்க, எங்கழுத்துக்கு...''

''மாலை வாங்கி வந்திருக்கோம்!'' அப்பா குறுக்கிட்டார்.

''எனக்கு 'டைம்' கொடுங்க'' தயங்கினான் ரவி.

''ஓ! ஒன்னோட நற்பணி மன்ற நண்பர்களைக் 'கன்சல்ட்' பண்ணணுமா? டேக் யுவர் ஒன் டைம்!''

அப்பா உற்சாகமாய் இருந்தால் ஆங்கிலம் பேச்சு தலைதூக்கும்!

ரவியின் நல்ல நேரமோ, கெட்ட நேரமோ! நண்பர்கள் கேலி செய்யவில்லை. ''போடா மடையா! தன் மானத்தை அடகு வைக்கப்போறியா?'' என்று துள்ளவில்லை.

''ரவி! ஒங்க அப்பா சொல்ற மாதிரி இது நல்ல வாய்ப்பா தெரியுது... இங்கே நமக்கு இப்ப வேலை கிடைக்கிற திசையே தெரியல்லியே?'' என்றான் ஒருவன்.

''ரவி! இதிலேயும் ஒரு திரில் இருக்கு! ஒவ்வொரு இண்டர்வியூவும் புஸ்வாணம் ஆவிப்போது, மனசு எவ்வளவு சோர்ந்து போவுது! அதுக்கு ஒத்தடம் கொடுக்க, ஒனக்கு ஒரு துணை கெடைக்குது. அதுக்காகவே நீ கல்யாணம் செய்துக்கலாம்!'' என்று இன்னொருவன் சொல்ல, அப்போதும் அரைமனத்தோடு ஏற்றவன், திடீரென மறுத்தான்.

''நற்பணி மன்றத்தை விட்டு என்னால் பிரிய முடியாது!''

''எங்கேடா, போறே? நாம்ப இருக்கிறது பண்ருட்டி! எட்டிப் பிடிக்கிற தொலைவுடா... பாண்டி! சனி ஞாயிறிலே வந்திடு! ஜமாய்ச்சிடுவோம்.''

''ஆமாண்டா...'' நண்பர்கள் துளைத்தனர்.

ரவியும் திருமணமேடை ஏறினான். புதுவைக்குக் கிளம்பும் முன்னால் நற்பணி மன்றத்தை ஏக்கமாய்ப் பார்த்தான்.

''சீக்கிரம் நல்ல சேதியோடு வா!'' கைகுலுக்கினர் நண்பர்கள்.

''வளைய, வளைய நீ வர்ற வீடு, வெறிச்சோடிப் போயிடுமேடா!'' அம்மா விம்மினாள்.

''எங்களைப் பத்திக் கவலைப் படாதே! நல்ல வேலை சீக்கிரம் கிடைக்கும்!'' தழுவிக் கொண்டார் அப்பா.

பஸ் புறப்பட்டது. அவனுக்கு முன்னால் தெரிந்த பாதை வெறுமையாய் நீண்டிருந்தது. அது அவனுடைய வெறுமையைத்தான் சோதிடம் சொல்கிறது என்று அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

''மாப்பிள்ளை! தம்பியைக் கூட்டிட்டுப் போய் 'எம்ப்ளாய்மெண்ட் ஆபீசிலே' பதிஞ்சிட்டு வாங்க! நாளைக்கு நான் மந்திரியைப் பாக்கப் கூட்டிப் போறேன்.''

செங்கல்வராயன் தன் பெரிய மாப்பிள்ளை சங்கரிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

உள்ளே அறையிலே கிளம்பிய ரவியின் காதில் அர்ச்சனா கிசுகிசுத்தாள்.

''என்னங்க! எங்க அப்பாவையும், அத்தானையும் ஒரே ஏரிலே பூட்டலாம்! இழைஞ்சா ஒரேடியா இழைவாங்க! தூக்கிப் போட்டா அவ்வளவுதான்! அதிலேயும் அப்பாவுக்கு மூலத்தொந்திரவு! எப்ப எரிஞ்சி விழுவோம்னு அவருக்கே தெரியாது. ஏன் சொல்றேன்னா, இந்த ரெண்டு நாள்லே ஒங்களைத் தெரிஞ்சிக்கிட்டேன்! நீங்க ரொம்ப சாப்ட் டைப்!'' என்ற அர்ச்சனாவை ஆச்சரியமாய்ப் பார்த்தான்.

''ஏன்... இவ்வளவு பெரிய அட்வைஸ்!''

''அட்வைஸ் இல்லே!'' என்று சொல்ல வந்தவள், ''சரி! சரி! அதோ அத்தான் கூப்பிடறாரு! இந்தாங்க 'பைல்'!'' கொடுக்கும்போது கண்ணை மூடிப் பிரார்த்தித்துக் கொடுத்தாள் கூடவே செல்லமாய்க் கன்னத்தில் ஒ(ரு) ''குல்பி'யும் கொடுத்தாள். நண்பன் சொன்னதுபோல 'திரில்' இருக்கத்தான் செய்கிறது.. ரவி சிரித்துக் கொண்டான்.

அன்று தொடங்கினது புதிய அத்தியாயம்! சங்கர் வெகு அன்போடு நடந்து கொண்டான். மந்திரியிடம் அழைத்துச் சென்ற மாமனார் வாய்நிறைய ''தம்பி'' என்று உருகினார். இவர்கள் மீதா அர்ச்சனா குற்றப் பத்திரிகை படித்தாள்?

போன இடங்களில் கிடைத்த மரியாதை, .வேலை கிடைப்பது வெகு சாதாரணம் போலத் தோன்றியது!

சொல்லி வைத்தாற்போல் ஒரு வேலைக்கு 'இண்டர்வியூ' வந்தது! கம்பீரமாய்ப் பதில் சொன்னான். சங்கரும், மாமனாரும் யாரையோ பார்த்தார்கள். வரும்போது உதட்டைச் சுழித்தார்கள். ''அடுத்து பார்க்கலாம், தம்பி!'' மாமனார் தைரியம் சொன்னார்.

''ஹாட் லக்!'' சங்கர் தோளைத் தட்டினான்.

''சோர்ந்து போயிடாதீங்க!'' அர்ச்சனா அணைப்பால் மூச்சுத் திணற வைத்தாள்.

மூன்று மாதங்கள் ஓடின. முகத்திரைகள் மெல்ல விலகின.

சங்கர் கண்களில் ஒருவித பொறாமை! பேச்சில் ஒரு நஞ்சு!

''ஏன் அர்ச்சனா! காபியிலே கூடச் சரியா சக்கரைப் போடக்கூடாதா? எப்போ... ஒரு தடவைதானே வர்றேன்! ஒன் புருஷன் மாதிரி இங்கேயேவா ஒக்காந்து தின்னறேன்'' கண்களில் வஞ்சம் வலை விரித்திருந்தது. சொற்களில் இருந்த வெப்பம் கேலி ரவியை மட்டுமல்ல, அர்ச்சனாவையே சீறவைத்தது!

''அத்தான்! வார்த்தை அளந்து பேசுங்க! என் புருஷன் ஒங்க மாமனார் சொத்திலே சாப்பிடல்லே! என் சம்பளந்தான் ஒங்க மாமனாருக்குச் சோறு போடுது... ஞாபகம் இருக்கட்டும்!''

சங்கர் அவள் கூச்சலைக் கேட்டுக் காபியையே கீழே கொட்டிவிட்டான்.

''வெத்து வெட்டி ஆபீசரா இருக்கறவருக்கு... இவ்வளவு பரிஞ்சி...'' அவளை முடிக்கவிடவில்லை.

''அத்தான்! நான் பொறுமை இழக்க நேரிட்டா, ஒங்க மரியாதை போயிடும்!''

கண்களில் கண்ணகியின் அனலைக் கொண்டு வந்தாள் அர்ச்சனா. விருட்டென்று சங்கர் எழுந்து வெளியே போனான். திகைத்து உட்கார்ந்திருக்கும் ரவியை ஆதரவாய்ப் பற்றியவள், ''ஏங்க... இங்கேயே வேலை கிடைக்குமான்னுப் பாக்காதீங்க! நாளைலேந்து எல்லா பேப்பரையும் வரவழைப்போம்! எழுதிப் போடுங்க! ஒங்களுக்கு எப்படி வேலை கிடைக்காம போவுதுன்னும் பார்த்திடுவோம்!''

மறு நாளே வீடு நிறைய தினசரி! அர்ச்சனாவே, ''இதோ பாருங்க! இது ஒங்களுக்குப் பிடிக்குதா... பாருங்க!'' என்று நீட்டுவாள்.

''சரிதான்! ஆனா அப்ளிகேஷன் ஐம்பது ரூபான்னுப் போட்டிருக்கே...?''

''சோ... வாட்? நீங்க எழுதிப் போடுங்க! இந்தாங்க காசு!'' முழுசாய் நூறு ரூபாயை நீட்டுவாள். பெருமையாய் அவளை நோக்கிச் சிரிப்பான். உள்ளுக்குள்ளேயே அழுவான்!

'பாங்க் கிளார்க் எக்சாம், புரொபஷனரி ஆபீசர் எக்சாம்', 'யு.பி.எஸ்.சி' எக்சாம்! என்று அவனும் எழுதினான். கல்லூரியில் 'பார்ட் டைம் போஸ்ட்டு'க்கு எழுதிப் போட்டான். இண்டர்வியூவில் மனசாட்சிக்குத் தெரிந்து எல்லா பதில்களையும் ஒழுங்காகவே சொன்னான். ஏனோ வேலைதான் வர மறுத்தது!

அவனே துவண்டாலும், அர்ச்சனா வளைந்த அவனது நம்பிக்கையை நிமிர்த்துவாள்.

உடலுக்குள் ஒவ்வொரு செல்லிலும் திடீரென்று மின்னல் வெட்டியது!

''என்னது என் பிள்ளையா? ஓ! ஏய் திருட்டுக்கழுதை!'' ஆவேசமாய்த் தழுவிய அவன் பிடியில் அர்ச்சனா பூங்கொத்தாய் மிதந்தாள்.

''ஆமாம்! எத்தனை மாசம்?''

''ஏன்? மூணு...'' அவன் மார்பில் கோலம் போட்டாள் அர்ச்சனா.

''அதுக்கில்லே, என் பிள்ளை பிறக்கிறதுக்கு முன்னாலேயாவது எனக்கு வேலை கிடைக்குமான்னு யோசிச்சிப் பார்த்தேன்.''

''நல்ல சேதி சொல்றப்போ... ஏன் ஏதாவது வேண்டாததை எல்லாம் யோசிக்கறீங்க?'' மென்மையாய்க் கொஞ்சினாள் அர்ச்சனா.

''எனக்கு வேலை கிடைக்கிறது... வேண்டாததா?'' போலியான கோபத்தோடு அவன் திமிர, ''ஒங்களைப் பேச விடறதே தப்பு!'' என்று அர்ச்சனா ஆவேசமாய் அவனைப் பேசவிடாமல் தவிக்கச் செய்தாள்.

''சார், சார்!'' குரல் கேட்டு அறைக்குள் இருந்து ரவி வருவதற்குள், செங்கல்வராயன் அச்சிறுவனை எதிர்கொண்டார்.

''என்னடா வேணும்?'' எரிச்சலோடு கேட்டார்.

''பேப்பர் காசு கேட்டு வாங்கினு வரச் சொன்னாங்க...'' பில்லை அவரிடம் நீட்டினான்.

''என்னது? நூத்தைம்பதா? மாசா மாசம் இது வேறவா தண்டச் செலவு? என் பொண்ணு காசு இப்படியா ஒழியணும்?'' உறுமியவர், ''சாயந்திரமா வா! அவங்க இருப்பாங்க.''

சிறுவன் சும்மா போகக்கூடாதா!

''தோ சாரு வர்றாரே, அவுருதானே ஆர்டர் கொடுப்பாரு?'' இழுத்தான்.

இடியோசையாய்ச் செங்கல்வராயன் சிரித்தார்.

''பையா! ஆர்டர் கொடுக்கறதோட சரி! பணத்துக்கு அம்மாதான் வரணும்.''

இன்னும் எளக்காரமாய்ச் சிரித்தார்.

அடுத்த நிமிடம், ''தம்பி! அந்தப் பில்லைக் கொண்டா... இன்னும் அரைமணி நேரத்திலே... பணம் வரும்!''

நிற்காமல் பில்லை வாங்கிக் கொண்டு வெளியேறினான் ரவி. கையில் இருந்த 'வாட்ச்' சேட் கடையில் விலை போனது! பத்திரிகைக் கடையில் 'பில்லை'த் தீர்த்தான். 'இனி போட வேண்டாம்' எனக் கேட்டுக் கொண்டான்.

அன்றிரவு அர்ச்சனா மன்னிப்பு கேட்டாள்.

''அப்பா! ஒங்களோட எல்லை எதுன்னு தெரிஞ்சிக்கங்க! எம்.ஏ. மாப்பிள்ளையை ஒங்க பொண்ணுக்கு முடிக்கறப்ப என்ன சொன்னீங்க? நாங்க வேலை வாங்கித் தர்றோம்! அதுவரைக்கும் பிள்ளை இல்லாக் குறையைத் தீர்க்கட்டும்னு தானே? திரும்பச் சொல்றேன். அவரு ஒங்க சம்பாதனையிலே வாழல்லே! முழுக்க, முழுக்க என்னோட ரத்த வியர்வை! வீடு ஒங்களுடையதுன்னு சொன்னா, அடுத்த மாசத்திலிருந்து வாடகை வாங்கிக்கங்க!''

ரவி என்ன தேற்றினாலும், அவளது ஆவேசம் அடங்க நெடுநேரம் ஆயிற்று! ரவியின் நெஞ்சு பெருமிதத்தால் விம்மியது!

மணக்குள விநாயகர் சந்நிதியில் மனமுருக வேண்டினான்.

''எனக்கு ஏதாவது வழி காட்டு!'' கண்ணைத் திறக்கும்போது காதில் விழுந்தது.

''ஏன் சோமு? காலத்தை விண்டாக்கறே? அண்ணாமலை யுனிவர்சிடிலே பி.எட்.கரெஸ்பாண்ட் செய்யேன்!'' யாரோ சொல்லிக் கொண்டு போனார்கள்.

'ஓ... விநாயகா! எனக்கு இது வரைக்கும் உறைக்காத ஒன்றைச் சுட்டிக் காட்டுகிறாயா?'

நன்றிப் பெருக்கோடு வணங்கினான்.

அன்றிரவு, ''அர்ச்சனா! நான் பி.எட். செய்யலாம்னு நினைக்கறேன்...'' என்றான்.

''செய்யலாமே!''

''நாளைக்கு ஊருக்குப் போறேன்! அம்மா, அப்பாவைப் பாத்திட்டு, அப்ளை செய்திட்டு வர்றேன்!''

''செய்யுங்க! மாமா, மாமியை நான் விசாரிச்சேன்னு சொல்லுங்க... காலையிலேயே போவணுமா? மத்யானம் ஆபீசுக்கு வாங்க! பேங்க்கிலேருந்து 'டிரா' பண்ணி வைக்க்றேன்!''

''கராத்தேயில் என் பொண்ணு பிளாக் பெல்ட் வாங்கியிருக்கா மாப்ளே!''

''இல்லே அர்ச்சனா. போவ மட்டும் காசு கொடு! அப்பாகிட்டே வாங்கிக்கறேன்!''

இவ்வளவு நேரம் வெளிச்சமாய் இருந்த அர்ச்சனாவின் முகம் அமாவாசை வானம் ஆயிற்று! விழி ஊசிகளில் கண்ணீர் நூலாய் ஓடியது!

''என்ன இருந்தாலும் நீங்க என்னை விலக்கி வைச்சே பாக்கறீங்க?'' விம்மினாள்.

''இல்லேம்மா! ஒவ்வொரு தடவையும் ஒன்கிட்டே காசு கேட்டு நீட்டும்போது, நான் செத்து செத்துப் பிழைக்கறேன்!''

''ஏன் அப்படி?''

''அதுவா? தெருவிலே போறேன், மல்லிகைப் பூ வாங்க நினைக்கறேன். ஆன்னா அந்த முழம் வாங்கறதும்... ஒன் காசிலே! ஒரு முழம் பூ கூடச் சொந்தக் காசிலே வாங்க வக்கத்த வாழ்க்கை தேவையா?''

''போச்சு, போச்சு! என்னடா என் புருஷன் இன்னைக்கு அழலேன்னு பாத்தேன். இன்னைய 'கோட்டா' ஓவர்! என்ன சரிதானே?'' அர்ச்சனாவோடு ரவியும் சிரித்தான்.

மறுநாள் பண்ருட்டியில் இறங்கினதும் நண்பர்கள் சூழ்ந்து கொண்டனர். எல்லோரும் பளபளப்பாய் இருந்தனர்.

''என்னடா எல்லாருக்கும் வேலை கெடைச்சிட்டுதா?''

''தேடிக்கொண்டோம்!'' தோள் உயர்த்தினார்கள். புரியாமல் விழித்தவனை அழைத்துச் சென்றார்கள். நற்பணி மன்றம் தொலைந்து போயிருந்தது. அங்கே ''நண்பர்கள் கேசட் சென்டர்!'' பொலிவுடன் நின்றது.

''என்னடா - இது?'' வெகுண்டான் ரவி.

''பிராக்டிகலா வாழறோம்! இலக்கியம், நற்பணியெல்லாம் ஓரம் கட்டிட்டோம்!'' என்றபோது அவனை யாரோ மிதித்தார்கள்.

''என்ன?''

''எங்களுக்கும் ஒரு சேலை நிழல் இருந்தா ஒன்னை மாதிரி நிம்மதியா இருக்கலாம்'' என்றொரு குரல் முதுகுக்குப் பின்னால் முணுமுணுத்தது. வேகமாய்த் திரும்பினான். எல்லா கண்களில் சிநேக பாவம்! உதடுகளில் விஷமப் புன்முறுவல்!

அதற்கு மேல் அவனால் நிற்க முடியவில்லை. வீட்டில் ''வாடா...!'' வாய் உபசாரத்துடன் அப்பா நிறுத்திக் கொண்டார்.

''வாடா ரவி, வழி இப்பதான் தெரியுதா?'' அம்மா கண்களில் பாசம் வழிந்தது.

''அம்மா! என் மேல அப்பாவுக்கு என்ன கோவம்?'' மெல்லக் கேட்டான்.

'அதுவா என்னதான் பொண்டாட்டி காசிலே வாழ்ந்தாலும், எங்களை மறந்திடணுமா?'' காபி டம்ளரை நீட்டினாள்.

''என்ன சொல்றேம்மா?''

''பின்ன என்னடா? தனியா ஒரு கடிதாசி கூடப் போடக்கூடாதா? பொண்டாட்டி எழுதற லெட்டர்லே ரெண்டே வார்த்தை கிறுக்கறே.''

''அதில்லேருந்து என் நிலைமை புரியலையா? என் சொந்தக் காலிலே என்னைக்கு நிக்கறேனோ அன்னைக்குத்தான் நான் தனியா ஒங்களுக்கு லெட்டர் போடுவேன்!''

''ஓ! நீ அப்படி வர்றீயா? கீப் இட் அப்!'' தட்டிக் கொடுத்தார் அப்பா. இறுக்கம் விலகி நெருக்கமானார். அர்ச்சனா உடல்நிலை விசாரிப்புக்குப் பின்னர், வேலை வாய்ப்புகள் பற்றிக் கேட்டார். 'அப்ளிகேஷன்' போடப் பணம் கொடுத்தார்.

FIBROFLEX

RUBBERISED COIR

MATTRESSES • PILLOWS • CUSHIONS



The most ideal cushioning material for homes, hotels, hostels hospitals, restaurants, cinema houses, auditoria etc.

Available in different densities, sizes and shapes in an exiting range of colourful covers, It's comfy, luxurious ... yet economical.



பைப்ரோபிளெக்ஸ்

IS:8391

ISI

சுகமான நித்திரைக்கு
தரமான மெத்தை

Manufacturers :

bm **BHARAT MOTORS**

151, Mount Road, Madras-600 002 Phone : 865512, 861923
Grams : FIBROFLEX - Telex : 041-6136 BM IN
Branch : 37, Greams Road, Madras-600 006. Phone : 863250, 471626
Factory : Industrial Estate, Pettai, Tirunelveli-627 010. Phone : 23622 25932

adsindia

ஆனால் ரவியின் மனம் தனக்குள்ளே அழுதது. பெற்ற தாயே, 'பெண்டாட்டிக் காசில வாழ்ந்தாலும்' என்று சொடுக்கு தட்டுகிறார். அப்பாவும் அதை ஆமோதிக்கிறார்.. ஓ... சொந்தமாய் அவுளை நினைத்த உறவுகளே... அவனுடைய இந்த நிலைக்குக் காரணமானவர்களே அவனைக் காயப் படுத்துகிறார்களே... அவன் மாமனாரும், சங்கரும் கல்லெறிவதில் தவறில்லையே! மறுநாளே புதுவைக்குக் கிளம்பிவிட்டான்.

அடுத்த நாளில் இருந்து 'மாமனாரிடம் வதைப்படலம்' தொடங்கியது. ஆர்ப்பாட்டம் எல்லை மீறத் தொடங்கியது! அன்றுதான் அவனின் 'நேரத்தைத் தின்னும் பழக்கம்' தொடங்கியது.

அர்ச்சனாவுக்குத் தெரியாதிருந்த 'கண்ணாமூச்சி ஆட்டம்!' கண்ணம்மா மூலம் தெரிந்தேவிட்டது. அப்பாவிடம் பாயப் போனவளைத் தடுத்தாள்.

''ஒரு கண்டிஷன்! வெளியே போங்க! ஆனா பட்டினி கிடக்கக் கூடாது! நான் 'பாக்கெட் மணி' தர்றேன்!''

''அர்ச்சனா ஒங்கப்பா என்னை ஒரு கோணத்திலே தாக்கிறாருன்னா... நீ இன்னொரு கோணத்திலே இம்சிக்கிறியே?'' ரவி தவித்துப் போனான்.

வயிறு 'பசி! பசி!' எனக் கூச்சலிட, எழுந்தான். ''தம்பீ!'' குரல் கேட்டுத் திரும்பினான். அவன் பக்கத்தில் அவர் உட்கார்ந்திருக்கிறார். பழைய நினைவுகளில் அலைபாய்ந்தவனுக்கு அவர் வந்ததோ, அமர்ந்ததோ தெரியாது.

''என்னங்க?''

''கொஞ்சம் உட்காருங்களேன்!''

அவர் சொல்லுக்குப் பணிந்தான். அவர் பேசப் பேச, ரவியின் முகம் ஒளிரத் தொடங்கியது.

''எனக்கு அதைப் பத்தியெல்லாம் கவலையில்லே! நேர்மையான வழியிலே சம்பாதிக்கணும்! நாளைக்கே வரத் தயார்!'' என்றான்.

''ரொம்ப நல்லதுங்க தம்பி! நாளைக்குக் காலையிலே எட்டு மணிக்கே வீட்டுக்கு வந்திடுங்க! ஸ்கூட்டர்லே 'ஸ்பாட்'டுக்குப் போயிடுவோம்! சாப்பாடு எடுத்திட்டு வந்திடுங்க!''

கைகூப்பி விடைபெற்றான்.

''அர்ச்சனா, ஒரு நல்ல சேதி! எனக்கு வேலை கிடைச்சிருக்கு!''

''வெரிகுட்.'' முகமே வெளிச்சமாகத் திரும்பினாள். ரவி சொன்னதும், அர்ச்சனா ஆடிப்போய்விட்டாள். முகம் வெளுக்க, கண்கள் நெருப்புக் கோளமாய்க் கொதிக்க, உடல் எங்கும் ஒரு நடுக்கம் பரவ, ''ஏங்க, என்னைக் கவது நான் ஒங்களை ஏன் வேலைக்குப் போவலேன்னு கேட்டிருக்கேனா? அப்புறம் ஏங்க இப்படிச் செஞ்சிட்டீங்க? ஒங்க படிப்பு என்ன? ஏதோ கட்டிடக் காண்டிராக்டர் கிட்டே கணக்குப் பிள்ளை வேலை போறேன்னு சொல்றீங்களே?''

அர்ச்சனா அப்படிக் கதறி ரவி பார்த்ததே இல்லை. ஹாலில் இருந்து எட்டிப் பார்த்த செங்கல்வராயன், ''இதுக்குத்தான் லாயக்கு!'' என்று முணுமுணுக்க, ''அப்பா!'' என்ற அவள் கர்ஜனையில் ஆள் எழுந்து வெளியே ஓடிவிட்டார்.

''சரி, சரி! ஒங்களுக்கு மன நிம்மதியும், மகிழ்ச்சியும் இது கொடுக்குதுன்னா அதுக்கு நான் தடையா இல்லே!''

''தட்ஸ் இட்!'' துள்ளிய ரவி 'அர்ச்சனா...'' என்று கனிவான குரலில், ''கைநிறைய சம்பாதிக்கிற கணவனோட மன நிம்மதியையோ, மகிழ்ச்சியையோ கவலைப்படாத மனைவிங்க மத்தியிலே... என்னைப் போல...''

மேல பேசவிடாமல் அவன் வாயைப் பொத்தினாள் அர்ச்சனா.

''ம்...ஓங்க கனவு பலிச்சிடுத்து''. பெருமூச்சிட்டாள். புரியாமல் விழித்த ரவியிடம், ''அது தான்... என் பிள்ளை வரதுக்கு முன்னாலே எனக்கு ஏதாவது வேலை கிடைக்குமான்னு ஏங்கினீங்களே...!

''ம்... ம்...'' தலையாட்டினான்.

''போ, போ! இங்கெலாம் பிச்சை போடமாட்டாங்க.''
''பிச்சையா? யாருக்கு? ஹோட்டல்ல ரூம் எடுக்க வந்திருக்கேன்யா. ஏ.ஸி. ரூம் '2' வாரத்துக்கு புக் பண்ணனு!'' — குமார்

மீண்டும் உற்சாக நதி பெருக்கெடுத்தது. ரவியின் வாழ்வில்! மறுநாள் காலை -

''பத்திரமாய்ப் போயிட்டு வாங்க! கட்டிடத்து மேலெல்லாம் ஏறாதீங்க... பழக்கமில்லேன்னா சறுக்கி விட்டுடும்! பத்திரம்!'' திரும்பத் திரும்ப அர்ச்சனா சொல்ல, ரவி சிரித்தான்.

''என்ன அர்ச்சனா இது! பள்ளிக்கூடம் போற புள்ளைக்குச் சொல்றாப்பலே போரடிக்கிறே?'' போலியாய் அலுத்தான்.

''சரி! சரி! மகாராணி கட்டளைப் படி மகா கவனத்துடன் இருக்கேன்...'' என்று விடைபெற்றான்.

ஆனால் அவன் கவனம் தவறாமல் இருந்தாலும், செங்கல் கொட்டவந்த லாரி 'ரிவர்ஸ்' எடுக்கும் போது அவன் பின்னால் நிற்பது தெரியாமல் மோத, தடுமாறி விழுந்த ரவியின் வலது காலின் மேல் சக்கரம் சாவதானமாக ஏறி இறங்க, கூழாகிப் போயிற்று.

ரவியை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்த அர்ச்சனாவிடம்,

''ரவி தம்பி, வீடு இதுதானே?'' என்று காண்டிராக்டர் கையைப் பிசைந்தபோதே, அவள் வயிறு குலுங்கியது. மருத்துவமனைக்குப் பதறி ஓடினாள். ஆப்ரேஷன் ஆகிய ரவி மயக்கத்தில் இருந்தான். வலது கால் மொக்கையாய் இருந்தது. அர்ச்சனா ''அவருக்கு இனிமே ஆபத்தில்லியே?'' என்று டாக்டரை, நர்சை, வார்டு பாயை கேட்டுத் துளைத்தாள். கேட்டுவிட்டு, ''இருக்காது... இருக்கக்கூடாது!'' என ஆவேசமாய்த் தலையாட்டினாள்.

பண்ருட்டியில் இருந்து ரவியின் பெற்றோர் ஓடிவந்தபோது, செங்கல்வராயன் தலைமறைவாகிவிட்டார்.

ரவியின் உடல் மெல்லத் தேறி வீடு திரும்பும் நாள்! அர்ச்சனாவிடம் ரவி ஏதோ சொல்லிக் கொண்டிருக்கையில், ''அர்ச்சனா...!'' சந்தேகமாய் ஒரு குரல் ஒலித்தது. திரும்பியவள், ''வாங்க சார்! பிளீஸ்!'' அழைத்தாள்.

''இங்கே... யாரு?'' என்றார் அந்த வழுக்கைத் தலை மனிதர்.

''இவருதான் என் ஹஸ்பெண்ட்! இவருக்குத்தான் அன்னைக்கு ஏதாவது வழி செய்ய...'' முடிக்காமல் கதறினாள்.

''நான் வரச் சொன்னேனே... வரல்லே! ஆமாம்! இதென்ன டிராஜடி?'' நெளிந்தார்.

சொன்னாள்.

''ஓ...'' என்றவர், ''ஒரு நிமிஷம்!'' என்று அவளை வெளியே அழைத்தார்.

ஐந்து நிமிடம் கழித்து அர்ச்சனா மட்டும் உள்ளே வந்தாள்.

''என்ன அர்ச்சனா?'' ரவி அவளையே பார்த்தான்.

''ஒண்ணுமில்லே...''

''பரவாயில்லே, சொல்லு அர்ச்சனா!'' ரவி பொறுமையிழந்து கத்தினான்.

''வந்து ! ஓங்களை மாதிரி வேலை இல்லாதவங்களுக்குச் சொந்தமா தொழில் செய்ய பத்தாயிரம் கடன் தர்றாங்களாம். அதிலே... இப்படி... நீங்க ஆயிட்டதாலே... ஊனமுற்றவங்க லிஸ்டிலே வர்றீங்களாம்... அப்ப நெறையவே சலுகை கிடைக்கும். நாளைக்கே என்னை வந்து பாக்கச் சொன்னாரு!'' தட்டுத் தடுமாறினாள்.

''ஈஸ்... இட்?'' என்றவன் கண்கள் அகல விரிந்தன.

——

மன நலமும் திருக்குறளும்

டாக்டர் சிவ.நம்பி

மக்கள் நல்வாழ்வு பெற்று வாழ உடல் நலம், மனநலம் ஆகிய இரண்டும் இன்றியமையாதன. உடல் நலமும், மன நலமும் நல்வாழ்வின் இரண்டு கண்களாகும். இவையிரண்டில் உடல் நலம் பேணவேண்டிய அவசியம் பற்றி பலர் அறிந்துள்ளனர். ஆனால் 'மனநலம் மண்ணுயிர்க்கு ஆக்கம்' என்ற குறள் நெறி இன்றும் மக்களிடையே முழுமையான அளவில் பரவிடவில்லை. மனநலம் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியத்தையும், அதன் குறைபாடுகளால் ஏற்படும் இன்னல்கள் பற்றியும் இன்றைய மனநல மருத்துவர்களும், உளவியலாளரும் உரக்கக் குரல் எழுப்புகின்றனர்.

உலகத்து உயிர்களில், மனிதருக்குப் பெரும் சொத்து அவரின் நல்ல மனமே ஆகும்.

வள்ளுவர் வகுத்த நல்ல மனம்: அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் இந்நான்கையும் தவிர்த்து அமைதியோடு வாழும் மனம் நல்ல மனம். 'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்துப் புன்முறுவல் பூக்கின்ற மனம் நல்ல மனம். வாய்ப்புக் கிடைக்கிற போதெல்லாம் அறத்தினைச் செய்யும் மனம் நல்ல மனம். 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்கின்ற' இளகிய மனம் நல்ல மனம். யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக என்ற உயர்ந்த நெறியுடன் தான் இன்புறுவதால் உலகம் இன்புறக் காணும் மனமே நல்ல மனம். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனப் பெருந்தன்மையுடன் 'எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் குலம்' என சமத்துவம் கருதுகின்ற மனம் நல்ல மனம். 'குற்றம் இலனாயக் குடி செய்து வாழும்' மனமே நல்ல மனம். அமரருள் உய்க்கும் அடக்கம் உடைய மனம் நல்ல மனம். உள்ளத்தால் பொய்யாது ஒழுகி உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உறைகிறவர் மனமே நல்ல மனம்.

மன நலத்தின் சிறப்பியல்புகள்: 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதரிது' இன்றைய உளவியலாளர் கூறுவதைவிடவும் சிறப்புற மனநலத்தின் மாண்பு பெறும் சிறப்பியல்புகளைச் சீரிய முறையில் விளக்குகிறார் வள்ளுவர்.

மற்றவர்களோடு ஒத்துப்போய் மன நிறைவுடன் மகிழ்வுடன் வாழும் வாழ்க்கையே மனநலம் பெற்றவர்களின் சிறப்பாகக் கருதப்படுகிறது. 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' உயர்ந்த நெறி; அது இல்லாதவர் கல்வி கற்றும் மூடரே எனச் சமுதாயத்தில் உள்ள மற்றவரோடு ஒத்துப்போவதை வலியுறுத்துகிறார் வள்ளுவர். ''எவ்வதுறைவது உலகம் உலகத்தோடு, அவ்வதுறைவது அறிவு'' எனவும் கூறுகிறார்.

உண்மைப் பொருளை அறிந்த உயர்ந்தவர் கருத்தை, சான்றோர்களின் அநுபவத்தை ஏற்றுக்கொள்ளும் மன நலம், மாண்பு பெறும் வழியாகும். 'உற்றறிவான் உள்ளம் கொளல்' என்கிறது உலகப் பொதுமறை.

மற்றவர்களிடத்துப் பணிவு காட்டுதல் மிகப்பெரிய செயலாகும், மனநலம் பெற்று வாழ்பவரின் சிறப்பாகும். இதை ''பணியுமாம் என்றும் பெருமை'' என்றும் ''எல்லார்க்கு நன்றாம் பணிதல்'' எனத் தெளிவுபடக் கூறுகிறது குறள். மனநலத்தின் சிறப்புக் குணங்களாக ஐந்து பண்புகளைக் கூறுகிறது குறள்.

'அன்பு நாண் ஒப்புரவு
கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றி தூண்'

'தான்' என்கிற எண்ணம் அற்று இருத்தல் மனநலத்தின் சிறப்பியல்பு. வேதங்களும், இதிகாசங்களும், முனிவர்களும், முற்றுந்துறந்தவர்களும் மனநலம் பெறுதற்குக் காட்டுகின்ற மார்க்கமும் இதுவே. இதையே வள்ளுவம்,

யான்எனது என்றும் செறுக்கு
அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்'. என, மனநலம் பெற்றிருந்தால் மறுமை இன்பமும் அடையலாம் எனப் பெருமைப்படுத்துகிறது. மற்றவர் செய்த தவறுகளை மிகைப்படுத்தி இருப்பினும் அவரின் தீய குணங்களைப் பறைசாற்றாது இருப்பது மனநலத்தின் சிறப்பாகும். 'பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு'.

மனமும் எண்ணமும்: எண்ணத்தின் பிறப்பிடம் மனமே, பண்பட்ட நிலத்தில்தான் பயிர் செழித்து வளரும்; அது போன்றே மனம் நலம் பெற்று அமைதியுடன் இருந்தால்தான் எண்ணங்களும் வளம்பெற்று தெளிவுடன் இருக்கும்; உள்ளம் எந்த அளவு உயர்ந்த பண்புகளால் நிரம்பி உள்ளதோ அதே அளவு அவர் உயர்வும் இருக்கும்.

''வெள்ளத்தனைய மலர்நீட்டம்
மாந்தர் தம்
உள்ளத்தனையது உயர்வு'.

எண்ணிய முடிதலுக்கும் நல்லவே எண்ணுதற்கும் திண்ணிய நெஞ்சம் இன்றியமையாதது.

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியர்
திண்ணியராகப்பெறின்'. என்றும் வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத் திட்பம்'' என்று மன உறுதியின் மாட்சிமைப் பற்றிக் கூறுகிறது குறள். உள்ளம் சீர்பெற்று இருந்தால் எண்ணமும் சீர் பெறும். அதனாலேயே 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்கிறார் வள்ளுவர். அதே நேரம் சிறுமையான சிந்தனைகளையும் செயல்களையும் தவிர்க்கவேண்டிய அவசியத்தையும் உணர்த்துகிறார். ''உள்ளற்க உள்ளம் சிறுகுவ'' என்று கூறுவதன் வாயிலாக.

மனநலக் குறைபாடுகளும் குறள் காட்டும் குறிப்பும்: மனநலம் பற்றி விரிவாகக் கூறும் வள்ளுவர் அது குறைவதால் ஏற்படும் கோளாறுகளையும் மனநோய்த் தன்மைகளையும் படம்பிடித்துக் காட்டுகின்றார். இவரின் இந்த விரிவான அறிவியல் பூர்வ அணுகுமுறையைப் பார்க்குங்கால் வள்ளுவர் எத்துணை சிறந்த மனநல மருத்துவராக விளங்குகிறார் என்பது புரியும்.

உலகத்து வாழ்க்கையில் எதுவுமே அளவோடு இருந்தால் மகிழ்ச்சி உண்டாகும். அளவு கூடினாலும் குறைந்தாலும் அவை நோய்களை உண்டாக்கும். 'மிகினும் குறையினும் நோய் செயும்'. மனதிலே மகிழ்ச்சி, வருத்தம் இரண்டில் எது அதிகம் ஆனாலும் மனநோய் வரும் என்ற மகத்துவத்தை அன்றே அறிந்துள்ளார் வள்ளுவர். நோய்களின் காரணத்தை மட்டும் சொல்லாது அது தீர்க்கும் வாய் நாடி வாய்ப்பச் சொல்லுகின்றார் வள்ளுவர்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதால் இன்றைய மனநல மருத்துவர்கள் முகபாவனையை வைத்து (Facial Expression) ஒருவரின் மனநிலையை (Mood) எடைபோடும் அறிவியல் நோக்கை அன்றே வள்ளுவர்,

''அடுத்தது காட்டும் பளிங்குபோல்
நெஞ்சம்
கருத்தறு காட்டும் முகம்' என்கிறார்.

மனநலம் பெறுதற்கும், குறைதற்கும் மனநோய்கள் ஏற்பதற்கும் பாரம்பரியமும் (Genetics), சுற்றுப்புறச் சூழலும் (Environment), முக்கிய பங்கு வகிப்பதை இன்றைய மனநல மருத்துவர்கள் அறிந்துள்ளனர். மனநலம் பெற்று அன்பு வாழ்க்கை வாழ்வதற்கு நல்ல பாரம்பரியம் அவசியம் என்பதை வள்ளுவர்,

''அன்புடமை ஆன்ற குடிப்பிறத்தல்'' என அழகுறக் கூறுகிறார்.

சுற்றுப் புறச் சூழலும், சார்ந்திருக்கும் இனமும் (Peer Group Influence)

ஒருவரின் மனநலத்தை மாற்ற வல்லது என்ற கருத்துப்பட

''மனநலம் நன்குடையராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்புடைத்து'' என

மனநலம் பாதிக்கும் சமூகவியல் காரணங்களைக் கூறுகிறார் வள்ளுவர்.

மனவருத்தம் ஏற்பட வழிகள் பல உள்ளன. நல்ல குடிப்பிறந்தாரின் தன்மானம் கெடும்படியான காரியங்கள் ஏதும் நடக்குமாயின் வருத்தம் மேலிட்டு தங்கள் இழிவை நினைத்து வெறுப்புற்று தற்கொலை செய்து கொள்வர் என்பதை 'இனிவரின் வாழாத மானம் உடையார்' என்றும்,

''மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்''

என்றும், தற்கொலை (Suicide) புரிவதற்கான காரணங்களை விளக்கும் மனோதத்துவ நிபுணராக விளங்குகிறார் திருவள்ளுவர்.

திடீரென்று ஏற்படும் சமூக, பொருளாதார இழப்புக்களால் மனம் உடைந்து அதிர்ச்சிக்கு (Shock) ஆளாவோர் பலரை நாம் காண முடிகிறது. மன அதிர்ச்சி (Psyhological Crisis) என்பது பலரை மனம் பதற வைத்து பைத்தியம் பிடித்தவர்களாக்குகிறது. இப்படிப்பட்ட நோய்களை வள்ளுவர், 'அதிர வருவதோர் நோய்' என அழகுறக் கூறி மனநல மருத்துவ அகராதிக்குப் புதுப் பொலிவு சேர்க்கிறார். அந்த அதிர வரும் நோயை தடுப்பது எப்படி என்றும் வழி கூறுகிறார். ஒன்று போனாலும் இன்னொன்று உதவும் என்ற முன்யோசனைக்காரனாக விளங்கி, தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

''எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்'' எனக் குறிப்பிடுகிறார். சந்தேகம் என்பது மனித மனத்தின் கூடப் பிறந்த ஒரு நோய்; சந்தேகமே சிலருக்கு வாழ்க்கையாகி சந்தோஷக் கேட்டை உண்டுபண்ணும். அப்படி மனச் சந்தேக நோய்களை (Paranoid Disorder) என்று மனநல மருத்துவர் கூறுவர். இதுபற்றி வள்ளுவர் பல இடங்களில் கூறி, அதனால் ஏற்படும் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அழகுறப் படம்பிடித்துக் காட்டுகிறார். 'தெரிந்தான் கண் ஐயுறவு தீரா இடும்பை தரும்' எனக் கூறுகிறார் வள்ளுவர்.

காரணமற்ற கற்பனை எண்ணங்களின் (Delusion) ஆதிக்கம் மேலோங்கி, சந்தேகம் என்கிற கொடிய நோய் பரவாது உள்ளதை உள்ளவாறு உணர வல்லவர் உயர்ந்தோர்; மனநலம் மிக்கவர். இவர்களை 'ஐயப்படா, அது அகத்தது உணர்வானை' எனக் குறிப்பிடுகிறார் வள்ளுவர்.

சந்தேக நோய் பெண்களையும் தாக்கும் என்பது வள்ளுவர் காட்டும் மனநல மருத்துவக் குறிப்பு.

'யான் தும்மினேனாக; அவள் நூறாண்டு' என வாழ்த்தினாள். உடனே அதை விட்டு 'யார் நினைத்தால் தும்மினீர்' என்று கேட்டு அழுது அரற்றினாள்.

''வழுத்தினாள் தும்மினேனாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று''

அவளுடைய சந்தேகத்துக்கு அஞ்சி யான் தும்மலை அடக்கிக்கொள்ள 'உம்மவர் உம்மை நினைப்பதை எமக்குத் தெரியாமல் மறைக்கின்றீரோ' என அழுது புலம்பினாள். எனக் கற்பனை சந்தேகத்தை வளர்க்கிறாள்.

''தும்மச் செறுப்ப அழுதாள் நுமர் உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று''

சிவ. நம்பி, MD., D.P.M., FIPS.

என்று சந்தேகத்தின் விபரீத விளைவுகளை விளக்குகிறார் வள்ளுவர்.

மனநலம் பாதிக்கப்பட்டு நல்ல குணங்கள் எவையும் கொள்ளாது கயமை குணமே நிரம்பப் பெற்றவர்களை மனநல மருத்துவர் 'குணநலக் கேடர்கள்' (Pyschopaths) என்று அழைப்பர். இவர்களை வள்ளுவர் 'வஞ்ச மனத்தான்' என அழைப்பதின் மூலம் மனநல மருத்துவத்தின் தமிழ் அகராதியில் புதுச்சொல்லை உருவாக்குகிறார். 'மக்களே போல்வர் கயவர்' என்றும், 'கயவர் நெஞ்சத்து அவலம் இலர்' என்றும் குறிப்பிடுகிறார். எந்த விதக் கட்டுப்பாடோ ஒழுக்க நெறியோ அற்று தறிகெட்டுப்போன காளைபோல் தன்னிச்சையாகச் செயல்படுவதால் கயவர், தேவர்களை ஒத்தவர் என வஞ்சகப்புகழ்ச்சி அணியில் ''தேவர் அனையர் கயவர் அவருந்தாம் மேவன செய்தொழுகலான்'' எனச் சாடுகிறார்.

குடிநோய் என்பது மனநல மருத்துவர்களை எதிர்நோக்கியுள்ள ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. மது அருந்தும் பழக்கம் பண்டைத் தமிழகத்தும் இருந்து வந்ததும் அதனால் கேடுகள் நேர்ந்ததும் இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். குடிப்பழக்கம் உள்ளவர்களைப் பெற்ற தாயும் வெறுப்பாள் என்று கூறுகிறார் வள்ளுவர். மற்றும் 'உண்ணற்க கள்ளை உனில் எண்க சான்றோரால் எண்ணப்படவேண்டாதார்' எனக்குறிப்பிடுவதன்மூலம் சான்றோர் பழிக்கும் செயல் குடிப்பழக்கம் எனக் குறிப்பிடுகின்றார். கள்ளுண்பவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களை தாங்களே அழித்துக்கொள்வர். இவர்கள் செயல் 'நாட்படு தற்கொலைக்குச் (Chronic suicide) சமம் என அறிவியல் பூர்வமாக இன்று பேசப்படுவதை அன்றே வள்ளுவர் 'நஞ்சுண்பார் கள்ளுண்பவர்' எனத் தெளிவுபடுத்தியுள்ளார். குடிப்பழக்கம் உள்ளோர் மனந்திருந்த எண்ணினால் அவர்கள் தாம் குடிக்காத நேரத்தில், குடித்து மயங்கியவரின் மதிகெட்ட செயலைப் பார்த்து அறிதல்வேண்டும் என கருதிய வள்ளுவர்,

''கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானை காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு'' என அறிவுறுத்துகிறார்.

மனம் அமைதிபெற மனநலம் பெற வழிகள்: இவ்வுலக வாழ்வின் சங்கடங்களில் மாட்டித் தவித்து மன உறுத்தலும் மன உளைச்சலும் மேலிட்டு மனக் கவலை அடைந்தோர்க்குப் பரிகாரமாய் ஆன்மீக வழியை, ஆதிபகவன் தாள் சேரும் வழியைக் காட்டுகிறார் வள்ளுவர்.

''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''.

மனம் தூய்மை பெற பொய்யற்ற வாழ்வை மேற்கொள்ளுதல் அவசியம். 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின்' அதுவே மனநலம் மனம் தூய்மை பெறுவது வாய்மையால் தவிர மற்றில்லை என்ற பொருள்படும்.

'அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்' என மன அமைதிக்கு வழி அமைத்துத் தருகிறார் வள்ளுவர்.

மனநலம் போற்றும் மாட்சிமை பொருந்திய கருத்துக்கள் திருக்குறள் முழுதும் பரவிக் கிடக்கின்றது, ஆழ் கடல் முத்துக்களைப்போல. ஆனாலும் இதுகாறும் கூறப்பட்ட கருத்துக்கள் ஒருவர் சிறிது நேரம் முத்துக்குளித்ததால் வெளிக்கொணர்ந்த முத்துக்களே யல்லாது முழுமையும் இதுவேயன்று. வள்ளுவர் காட்டும் மனநலம் மிகப்பரந்தது, விரிந்தது, ஆழமானது, அறிவுக்கு உகந்தது, அறிவியலின் அடிப்படை கொண்டது. வள்ளுவர் காட்டும் வழியில் நடந்து மனநலம் காப்போமாக!

அவள் மனம் பனிக் கடல்

கௌதம நீலாம்பரன்

அந்தச் சமயம் அத்தனை அனல் அம்மாவின் முகத்தில் எதற்காக....? அம்மா ரொம்ப நல்லவளாச்சே....! கோபம் கூட வருமா என்ன....? சாந்தம் தவழும் அந்த முகத்தைப் பூஜை மாடத்திலிருக்கும் அம்பாள் படமுகத்தோடு எத்தனை முறை ஒப்பிட்டு, அவன் உள்ளுக்குள் மகிழ்ந்து போயிருக்கிறான்...!

பேசினாலும் - பேசாதிருந்தாலும் - பாராட்டினாலும் - சின்னச்சின்ன திட்டுக்களின் போதும் அம்மா அதே குமின் சிரிப்போடுதான் காணப்படுவாள்.

''என்ன விஜய்.... இந்த மிட்டம்ல மார்க் இவ்ளோ குறைஞ்சுடுத்து....? நோ.... நோ... மை சைல்ட். இதுக்குல்லாம் அம்மா கோவிச்சுக்காம இருக்க மாட்டா-சொல்லிட்டே. நல்லா படிக்கணும், என்ன....... புரியலேன்னா கேளேன், அம்மா சொல்லிக் கொடுக்கறது பத்தலேன்னா சொல்லிடு. பக்கத்துல நாலைஞ்சு வீடு தள்ளி ஒரு டீச்சர் ஆன்டி குடியிருக்காங்கல்லே, அங்க டியூஷனுக்கு ஏற்பாடு செய்யறேன்.....''

அம்மா இத்தனையும் கோபத்தோடு தான் பொரிந்து தள்ளுவாள். ஆனா, அப்பவும் அந்த குமின் சிரிப்பு மட்டும் மாறினதே இல்ல. அம்மாவோட கோபம் எதுவானாலும் பட்டு நூல் இழைகள்ள ஏற்பட்ட சிக்கலை எடுக்கற கவனம் புலப்படுமே தவிர, அறுத்தெறியற மூர்க்கம் வந்ததே இல்லை. ஆனா, இன்னிக்கு...?

யப்பா! எத்தனை அனல்.... ரௌத்ரம் .....! அந்த மேகஸினை அம்மா தூக்கி எறிஞ்சப்ப அவன் நெஞ்சு படபடத்தது. 'அம்மா அடிச்சுடுவாளோ' என்ற பயம் கவ்வியது. பதைபதைப்புடன் சூறாவளியின் அடுத்த செய்கை எதுவென்று புரியாமல் தடுமாறி நின்றான் அவன்.

அட, என்ன ஆச்சரியம்....! பொங்கின பால்ல தண்ணி பட்ட மாதிரி அம்மா கோபம் நிமிஷமா காணாமப் போயிடுச்சே....

''நோ.... விஜய், நீ பண்ணது ரொம்ப தப்பு. நான்தான் உன்னை இது மாதிரி மேகஸின்ஸ்லாம் படிக்கக் கூடாதுன்னுருக்கேன்ல. அப்புறம் ஏன் 'தொட்டே....? வர வர நீ சொல்ற பேச்சு கேக்காதவனாயிட்டிருக்கே...''

''இல்ல மம்மி! வந்து..... அந்த மேகஸின் திறந்தாப்ல மேஜை மேல கவுத்து வச்சிருந்தது. எடுத்து மூடி வைக்கலாம்னு பார்த்தேன். அதுல டாடி போட்டோ மாதிரி திடீர்னு கண்ணுல பட்டதும் என்னன்னு பார்த்தேன். அதான் உன்கிட்டே டவுட் கிளியர் பண்ணிடலாம்னு கேட்டேன். ஐ'ம் ஸாரி மம்மி....! தப்புன்னா மன்னிச்சுடு. இனிமே தொடலை....''

தாட்சாயணி இளகிப் போனாள். பிள்ளையின் கண்கள் தளும்பி நிற்பது கண்டு, மனசு துடித்தது. ஓடிவந்து, அவனைத் தழுவிக் கொண்டாள். அந்த அணைப்பில் ஆயிரம் ஆறுதல் - கோபத்தீ தன் மகனைப் பொசுக்கி விட்டதோ என்ற பரிவுத் தழுவல்.

கண்டிப்பு - கட்டுப்பாடுங்கற சுவர்களுக்குள்ளே சிறை வச்சுட முடியுமா என்ன அந்தப் பூங்குருத்தின் மன உணர்வுகளை! கண்டிப்புகள் எப்போதும் கனிவுங்கற சுகர் கோட்டட் பில்ஸா இருக்கறதுதான் நல்லதுங்கற சூக்குமம் புரிஞ்சு நடந்துக்கற எஜுகேட்டட் தாய் அல்லவா அவள்........

ஆனாலும் ஒரு லிமிட் வேணுங்கறது அவளோட எதிர்பார்ப்பு. 'இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமே, அவன் இதையெல்லாம் படிக்க' என்று அவள் மனசு சொல்லிக் கொண்டே இருந்தது. என்ன செய்வது....... பஞ்ச தந்திரம், ராயத் - அப்பாஜி, தெனாலிராமன், பீர்பால், முல்லா, விக்கிரமாதித்தன், ஆயிரத்தோரு அராபிய இரவுகள் எல்லாம் புத்திசாலித்தனத்தை - வீரத்தை - சாகசத்தை - எதையும் சமாளிக்கும் மனத்துணிவை வளர்க்கும் கதைகள் என்று நினைத்து, அவன் வாசிக்க அனுமதித்தாள். உலகையே அறிந்து தீர்க்கும் ஆர்வ ஆவேசத்தில் அவன் ஆயிரம் கேள்விகள் கேட்கிறான்.

''நோ விஜய்........ படிக்கறதோட நிறுத்திக்க. புரியாததுல்லாம் புரியற வயசு வரும். அப்ப மறுபடியும் படி. அதுதான் நல்லது....''

இப்படிப் பலமுறை சொல்ல நேர்ந்தது அவளுக்கு. பிறகென்ன.... மன்மதச் சாந்தணிந்து, பள்ளியறை மஞ்சத்துல காத்திருந்தப்புறம் என்ன நடந்ததுன்னு விளக்க முடியுமா? காமம்னா - கலவி சுகம்னா என்ன தெரியுமான்னு ஆரம்பிச்சு, அவனோட டவுட்டைக் கிளியர் பண்ண விரிவுரை நிகழ்த்த முடியுமா?

இதுக்கே இப்படின்னா, அந்தக் கட்டுரையை அவன் படிச்சிருந்தா...... ஓ.... மை காட்!

மனுஷனுக்கு ஏன்தான் புத்தி இப்படியெல்லாம் போறது...... கதை எழுதிக் குப்பை கொட்டிண்டிருந்த மனுஷன் எதுக்காக இப்படி உண்மைச் சம்பவக் கட்டுரைத் தொடர் எழுத ஆரம்பிச்சிருக்கிறார்? அதுவும் 'எனது கதாபாத்திரங்களை நான் நிஜமாகச் சந்தித்த நாட்கள்'னு தலைப்பு வேறே.

என்ன பெரிசா மாஸ்டர் பீஸ் இலக்கியங்கள் படைச்சுட்டார். ஏதோ ஐம்பது வருஷம் எழுதிக் கிழிச்சுட்டமாதிரி அதுக்குள்ள எதுக்கு பழைய நினைவுகளைத் திரும்பிப் பார்க்க ஆரம்பிச்சாச்சு.......

இந்தப் பழைய நினைவுப் புலம்பல் ஒன்றுதானே அவர்களின் பிரிவுக்குக் காரணமாக அமைந்தது!

விஜய் ஸ்கூலுக்குக் கிளம்பியாச்சு. அவனை அனுப்பிய கையோடு அவளும் நாலு வாய் அவசர அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டு, டிபன் பாக்ஸில் கொஞ்சம் அடைத்து ஹேண்ட் பேக் ஆயத்தம் முடிந்ததும் தலைவாரி, முகம் துடைத்து, பவுடர் ஈ ஷி, திலகம் திருத்தி, ஃபோல்டிங் குடை எடுத்துக் கொண்டு ஆபீஸ் புறப்பட்டாள். மறக்காமல் அந்தச் சஞ்சிகையையும் தேடி எடுத்துச் சுருட்டிப் பிடித்துக் கொண்டாள். அது ஆபீஸ் சிநேகிதி கமலாவுடையது. இன்னிக்கே கொடுத்துத் தொலைச்சுடறதுதான் நல்லது.

நேற்று அவளாகவே இந்த சஞ்சிகையைக் கொடுத்து, ''பார்த்தியா தாட்சாயணி....... உங்களவர் எழுதற புதுக் கட்டுரைத் தொடர் ஆரம்பமாயிருக்கு. எடுத்துக்கிட்டுப் போய்ப் படிச்சுதான் பாரேன். ரொம்ப நல்லாருக்கு. நிஜ அனுபவங்கள்னு சொல்றார். இவ்ளோ பெரிய கிரேட் ரைட்டரை நீ எப்படித்தான் மிஸ் பண்றயோ தெரியலே. அவரோட எழுத்துக்களை ஊரே படிச்சு, உச்சி மேல வச்சுக் கொண்டாடறப்ப, நீ உம்மணா மூஞ்சியாட்டம் அவர்கிட்டேருந்தே ஒதுங்கி வாழறே. எதுக்காக இந்தப் பிரிவு....?'' என்று உபதேச காண்டத்தை ஆரம்பித்தாள்.

''சரி, சரி கொடு...... படிச்சுட்டு வந்து நாளைக்குப் பேசறேன். நேரமாச்சு...'' என்று கூறி வாங்கி வந்திருந்தாள்.

ஆபீஸ் போனதும், முதல் வேலையாக கமலாவிடம் அந்த சஞ்சிகையைக் கொடுத்து, ''உன்னால வீட்ல பெரிய ரகளை. என் மகன் கிட்ட இன்னிக்கு நான் ரொம்ப அநாகரீகமா கோபம் காட்டிட்டேன். மனசே சரியில்ல கமலி, இனிமே வாரா:வாரம் இதை என்னோட கண்ணுல காட்டாத. இதெல்லாம் படிக்கணும்னு எனக்கு அவசியமே இல்லே....'' என்றாள்

''என்ன தாட்சாயணி இது..... முதல் வாரமே இந்தக் கட்டுரைத் தொடர் போரடிச்சுடுச்சா உனக்கு.... நிஜமாவே நீ படிச்சியா இல்லே...... அது சரி, எதுக்காக உன் சன் கிட்ட அத்தினி கோபம் காட்டினே.......?''

''சொல்றேன். ஆனா இப்ப இல்லே. இன்னிக்கு சாயங்காலம் கொஞ்சம் எங்கே வீட்டுக்கு வா. பேசுவோம். தனியா, மனசு விட்டு உங்கிட்ட நான் பேசணும். அப்படிப் பேசற அளவு எனக்கு இருக்கற ஒரே சிநேகிதி நீதான்...''

''ஓ.கே. வரேன்'' பேசலாம்.

மாலையில், கமலாவுடன் தாட்சாயணி வீட்டுக்குள் நுழைந்ததுமே விஜய், ''அம்மா, பாரேன் இந்தச் சேதியை... இதை நீ வாசிச்சியோ.....?'' என்றான், கையில் ஏதோ பேப்பரை வைத்துக் கொண்டு.

''என்ன சேதி விஜய்... அது என்ன பேப்பர்.... அப்படியென்ன விசேஷ சேதி....?''

''நேற்று ஈவினிங் பேப்பர்ம்மா. இதுல ஒரு அருமையான சேதி வந்திருக்கு. ஒரு விஞ்ஞானி தமிழர் தென் துருவப் பனிப் பிரேதேசத்துல போய் மாசக் கணக்குல இருந்துட்டு வந்திருக்கார். அவரோட பேட்டி இதுல பப்ளிஷ் ஆயிருக்கு. என்னென்னல்லாம் சொல்றார் தெரியுமா.... ரொம்ப வியப்பா இருக்கு.

''சரிடா. என்னன்னுதான் சொல்லேன்....''

''வானம் எது, பூமி எதுன்னே தெரியாதாம் அம்மா அங்கே. எங்கும் பனி - வெள்ளை வெளேர்னு எல்லா இடமும் பனி மயம். எது கிட்ட, எது தூரம்னு கூடப் புரியறது கஷ்டமாம். ஏதோ சின்ன வெடிப்பு. தாண்டிடலாம்னு நினைச்சா, அது ஐந்நூறு அடி பள்ளமா இருக்குமாம். ஒரு தபா அங்கே திடீர்னு ஏதோ அடுக்கு மாடி மாதிரி தோணிச்சாம். இது ஏதுடா இங்க... எப்பிடின்னு கிட்ட போய்ப் பார்த்தா அது காலி சிகரெட்டப்பாவாம்...! ரொம்ப வேடிக்கையா இல்லே. இது மாதிரில்லாம் கூட உலகத்துல இடம் இருக்குமா அம்மா.?''

''இருக்கே. இருக்கறதாலதான போய்ப் பார்த்துட்டு வந்து எழுதியிருக்காங்க. ஓகே. விஜய், இவங்க பேரு கமலா. என்னோட சிநேகிதி. ஆபிஸ்ல ஒண்ணா வேலை பாக்கறாங்க. இவங்களோட கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. உனக்கு டிபன், காபி ரெடி பண்ணிக் கொடுத்துட்டு, அம்மா இவங்களோட போய் மாடில பேசிக்கிட்டிருப்பேன். நீ சமத்தா உக்காந்து ஹோம் ஒர்க் பண்ணணும்.. என்ன..?''

விஜய் சம்மதித்தான். தாட்சாயணி கிச்சனுக்குள் புகுந்தாள். கமலாவுடன் விஜய் நிமிஷத்தில் ஒட்டிக் கொண்டு விட்டான். கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தனர். டிபன், காபி ஆனதும் கமலாவை அழைத்துக் கொண்டு தாட்சாயணி மேல்மாடிக்குச் சென்றாள்.

''கமலி, நான் அவரைப் பார்த்து ஐந்து வருஷத்துக்கு மேல ஆயிடுச்சு. எதுக்காகப் பிரிஞ்சோம்னு உனக்குத் தெரியுமா?'' என்று பேச்சைத் துவக்கினாள் தாட்சாயணி.

''கமலா, ஒரு விஷயத்தை நீ தெளிவா புரிஞ்சுக்கணும். தேவா என்னை ஒரு போதும் ஒதுக்கலே. நான்தான் அவர்கிட்டேருந்து ஒதுங்கியிருக்கேன். நாங்க விவாகரத்து கூட செஞ்சுக்கலே. மனசுல விரிசல் விழுந்துடுத்து. கௌரவமாக விலகி வாழறோம். அவ்வளவுதான். அதுக்குக் காரணம், அவர் ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டது மட்டுமில்லே. அவரோட எழுத்துக்கள் பற்றி எங்களிடையே ஏற்பட்ட விவாதமும் கருத்து வேறுபாடும்தான் எங்கள் பிரிவுக்கு முக்கியமான காரணமாக அமைந்துவிட்டது....''

''என்ன சொல்றே தாட்சாயணி? அவரோட எழுத்துக்கள் உனக்குப் பிடிக்கலியா... அப்படியென்ன கருத்து வேறுபாடு...?''

''கமலா, ஆரம்பத்துல அவர் ரொம்பப் பிரபலமா இல்லே. எங்க கல்யாணத்துப் போது அவர் ஏதோ பத்திரிகையெல்லாம் எழுதுவார்னு சொன்னாங்களே தவிர, குறிப்பிட்டுச் சொல்ற மாதிரி எதுவுமில்லே. தனியார் கம்பெனி ஒண்ணுல நல்ல ஜாப். கை நிறைய சம்பளம். மாப்பிள்ளை பார்க்க லட்சணமா ஹீரோவாட்டம் இருக்கார்ங்கற விஷயம்லாம்தான் கல்யாணத்தப்ப பெரிசா கவனிக்கப்பட்டது. இரண்டே வருஷத்துல மளமளன்னு அவரோட எழுத்துக்கள் பத்திரிகைகள்ல நிறைய வர ஆரம்பிச்சுடுத்து. பேர் சொன்னா எல்லாருக்கும் தெரியற நிலை தொடர்கதை, மாத நாவல்கள்னு நிறைய வர ஆரம்பிச்சதும் பணம், புகழ், பாராட்டு எல்லாமே அதிகமாச்சு.

'எல்லாம் நீ வந்த வேளை தாட்சாயணி'ன்னு சதா சொல்லிட்டிருந்தார். எனக்கும் உள்ளுக்குள் பூரிப்பு அதிகரிச்சுது. ஆபீஸ்ல எல்லாருடைய கவனிப்பும், மரியாதையும் ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு. ஆனா, போகப்போக அவர் போக்கு, பேச்சு.... எல்லாமே மாறிப் போச்சு.

''அவரோட கதைகளை நிறைய பெண்கள் விரும்பி வாசிக்கறதாகவும், வாசகிகள் தபால் அதிகமா வர்றதாகவும் பெருமைப்பட்டார். சில பெண்கள் வீடு தேடி வந்து பாராட்டினதும் நிஜம்தான். ஆனா, மனுஷன் அடியோடு மாறிப் போவார்னு நான் எதிர்பார்க்கவே இல்லே.

''கல்யாணத்துக்கு முன்னால அபார்ஷன் பண்ணிக்கிட்டவ - கல்யாணத்துக்கு அப்புறமும் பழைய காதலனோட சிநேகம் மறக்க முடியலேன்னு புருஷன் கிட்ட வாதம் பண்றவ - கல்யாணம் ஆகாம பிள்ளை பெற்றுக் கொண்டவள்னு கதைகள் எழுதித் தள்ளினார். 'இதெல்லாம் உண்மைக் கதைகள். இதுல வர்ற கதாநாயகிகளை எனக்கு நேர்ல பழக்கம் உண்டு'ன்னு பேட்டிகளில் சொன்னார். பொதுவா அவரோட கதைகள்ல குடும்பக் கட்டைத் தகர்த்து எறியும் குதர்க்க வாதங்களே மையக்கருத்தா இருக்குதுன்னு எனக்கு தோணிச்சு.

''என்னைத் தேடி நிறைய பெண்கள வருகிறார்கள். எனக்கு அவர்களில் சிலரோடு எல்லாவித நெருக்கமும் ஏற்பட்டு விடுகிறது. இதை நீ சகித்துக் கொள்வதுதான் நல்லது. ஒரு நடிகனின் மனைவி இது போன்ற விஷயங்களைக் கண்டு

கொள்ளாமல்தானே இருக்கிறாள்... ஓர் அரசியல்வாதி பிரபலமான பிறகு இதுபோன்ற வாழ்வுதானே மேற்கொள் கிறான்? மனைவிக்கு நல்ல கணவனாக இருப்பேன். மற்றபடி என் அந்தரங்கத் தில் தலையை நுழைப்பது உனக்கு நல்ல தல்ல...'' என்றார்.

எப்படியிருக்கிறது சிந்தனையாள ரின் சித்தாந்தம்?

கமலா அமைதியாகத் தாட்சாயணி யின் முகத்தையே நோக்கியிருந்தாள்.

''இந்த நிலையில்தான் எங்களுக்குள் மனவிரிசல் முத்திப்போச்சு. ஒரு நாள், ''ரெண்டு பேரும் உத்தியோகம் பார்க் கிறோம். கைநிறைய சம்பாதிக்கிறோம். கௌரவமா வாழ இது போதுங்க. எதுக்கு நீங்க எழுதணும்... அதுவும் கன்னா பின்னான்னு? பொம்பளைங் கள விட்டா வேற சப்ஜெக்டே இல்லாத மாதிரி எழுதித் தள்ளிக்கிட்டு - கெட்ட பேரு ஜாஸ்தியாவுதுங்க. வேணாங்க இதெல்லாம்...' னேன்.

தாட்சாயணி!! ஊர்ல இருக்கற அத்தனை பெண்களுக்காகவும் சிந்திக் கற என்னோட உயர்ந்த மன உணர்வு களைப் புரிஞ்சுக்காம கொச்சைப் படுத் தற நீ...''ன்னாரு

''உங்க உயர்ந்த மன உணர்வுகள் லாம் எனக்குத் தெரியும். ஒழுக்கக் கேடுகள்தான் உங்க ருசி. ஊர் பூரா குட்டிச்சுவரா இருந்தாலும் நல்ல துன்னுதான் கழுதைகள் நினைக்கும். கெட்டுப் போனவ பக்கத்து நியாயத்தை எழுதறதே குறிக்கோளா அலையற உங்க புத்தி எப்பவோ புரிஞ்சுபோச்சு. இதே கதைகளைல்லாம் நான் எழுதறவளா இருந்து, நீங்க ஒரு சாதாரண குமாஸ்தா புருஷனா இருந்தா இத்தனை நாளா நடந்திருக்கறதே வேறா இருந்திருக் கும்''ன்னேன்.

''இப்ப நீ என்னதான் சொல்றே...? நான் கண்டவளோட சுத்தினா, நீயும் கண்ட ஆம்பளையோட சுத்துவேங் கறியா... அதுக்கு உனக்கு அனுமதி வேணும்னு கேக்கறியா...?'ன்னாரு

அப்படில்லாம் சொல்றவ இல்லீங்க நான். அந்தப் பொம்பளைய நாளைக்கே இங்கிருந்து போயிடச் சொல்லுங்க. உங்க எழுத்துல இன்னும் கொஞ்சம் கண்ணியம் காப்பாத்துங்க...' ன்னு அமைதியாச் சொன்னேன்.

''சர்தான் போடி. இரண்டும் முடியாது. இனிமே அவளை என்கிட்டேருந்து எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது...''ன்னாரு.

''சரிங்க... அப்ப என் கதி...?''

''உனக்கென்னா... நீயும் உத்தியோகம் பாக்கறே. இஷ்டப்பட்டா மூத்தவளா லட்சணமா இங்க இரு. இல்லேன்னா போ. கேஸ் போடு. என்னைச் சந்தி சிரிக்க வை. கோர்ட்டுக்கு இழு. உள்ள தள்ள ஏற்பாடு பண்ணு. இல்லேன்னா இப்ப கேட்டிய சுதந்திரம் - எவனோட வேணும்னாலும் போகலாமான்னு. ஓகே. எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லே.''

''அப்புறம் தேவா உன்னைச் சமாதானப்படுத்தவே முயற்சி பண்ணலையா தாட்சாயணி...''

''புரியாத பேசறியே கமலா. இவ்வளவு ஆனப்புறம் சமாதானம் எங்கிருந்து வரும்...? நிறையவாட்டி நீளம் நீளமா கடிதாசு எழுதினாரு. உன்னோட அந்தஸ்து ஒருபோதும் குறையாது. வந்து என்னோட வாழலாம்னாரு. ஆனா, நான்தான் சுன்னா பின்னான்னு கதை எழுதறவரைக்கும் அவரோட சேர்ந்து வாழற பேச்சுக்கே இடமில்லேன்னு தீர்மானம் பண்ணிட்டேன். பாரு கமலா, நீ அவரோட கதைல்லாம் படிக்கறதுண்டுன்னு சொல்றே. ஒரு கதைல குடும்பஸ்தனா இருக்கற ஒருத்தன் சின்னப் பொண்ணு ஒருத்திய சீரழிக்கிறான். என்னடான்னா, அவங்க வீட்ல அந்தப் பொண்ணுகிட்ட யாரும் ஆதரவா நடக்கல அவங்க அன்பு போலி அன்பு. அப்பன் அயோக்கியன், அண்ணன் பொறுக்கி, அம்மா வாயாடி, நான்தான் அந்தப் பொண்ணுக்கு உலகம் புரிய வைக்கற சிநேகிதன். உடம்புன்னா என்ன, உணர்வுன்னா என்னன்னும் புரியவச்சேன். இதுல என்ன தப்புன்னு வாதம் பண்றான்.

''இப்படி எத்தினி கதைங்க. உலகம் பூரா அயோக்கியனுங்க, நான் ஒருத்தன்தான் யோக்கியன்னு ஒருவன் சொன்னா ஒண்ணு அவன் பைத்தியமா இருக்கணும், இல்லே கடைஞ்செடுத்த அயோக்கியனா இருக்கணும்.''

''இப்ப நீ காட்டினியே ஒரு கட்டுரைத் தொடர். அதுல வர்ற விஷயங்களையே எடுத்துக்க - எத்தனை பொம்பளைங்களோட தனக்குப் படுக்கையறை வரை பழக்கம்னு இந்த ஆளு கூச்சநாச்சம் இல்லாம எழுதறாரு. இதையே ஒரு பொம்பளை எழுத முடியுமா சொல்லு? எழுதினா அவளை விபசாரின்னு சொல்லாம வேற என்னன்னு சொல்லி இந்தச் சமூகம் போற்றும்? இந்த எழுத்தாள மகாபுருஷனையே கேக்கறேன், நாலு ஆம்பளைங்களோட என் அந்தரங்க நட்பு இப்படின்னு, கட்டுரைத் தொடர் எழுதினா இந்த ஆளு ஒத்துப்பானா...? லோலாயிம்பான். ஒழுக்கம் இல்லாதவன்னு ஊர் தூற்றும். இதுதான் கமலா நிஜம். பெண்களுக்கு வக்காலத்து வாங்கறதா சொல்லிக்கிட்டு இது மாதிரி ஆசாமிக எழுதற அத்தனையும் சாத்தான் ஓதற வேதம்...''

''மம்மி... மம்மி...! விஜய் அழைத்தவாறே மாடியேறி வந்தான். தாட்சாயணி பேச்சு நிறுத்தி, ஆவேசம் தணிய மூச்சு வாங்கினாள்.

கமலாவுக்கு அவள் மனசு முழுக்க புரிந்தது. ஆதரவாகத் தன் கரத்தைத் தாட்சாயணியின் தோளில் பதித்து அழுத்தி, இதமூட்டினாள். சற்று நேரம் முன்பு விஜய் தட்சிண கங்கோத்ரி பத்தி வியப்பாகச் சொன்னதெல்லாம் கமலாவுக்கு இப்போது நெஞ்சில் நிழலாடியது.

'ஆம்; தாட்சாயணி மனம் கூட ஒரு தட்சிண கங்கோத்ரிதான். அந்தப் பனிக்கண்டத்து அதிசயங்கள் எல்லாம் இவள் உள்ளத்திலும் இருக்கிறது. பனிக்கண்டத்தில் இருப்பது போன்ற கொதிக்கும் வெந்நீர் ஊற்றுக்களும் கூடத்தான்' என்று எண்ணியபடியே கமலா தாட்சாயணியுடன் மாடியிலிருந்து இறங்கலானாள். ○

உறுதியான, ஆரோக்கியமான பற்கள் மற்றும் தூய புத்துணர்ச்சியுள்ள சுவாசம்.



ப்ராமிஸ் — பண்டைக்காலம் முதல் உபயோகத்தில் உள்ள கிராம்புத் தைலம் அடங்கிய ஒப்பற்ற டூத் பேஸ்ட்.

பிராமிஸ் 15—15° கோணத்தில் வளைத்து உருவாக்கப்பட்டுள்ள ஒப்பற்ற டூத் பிரஷ். இது கடைவாய்ப் பற்களின் பின்புறத்தையும் இலகுவாகத துலக்கவல்லது.

ப்ராமிஸ்

ப்ராமிஸ் டூத்பேஸ்ட் மற்றும் ப்ராமிஸ் டூத் பிரஷ்.

பல்ஸாரா— டூத்பேஸ்ட் நிபுணர்கள்.

BALSARA

CHAITRA-B BLS 925 TAM

5 எளிய வழிகளில் உங்கள் மிக்ஸியை
ஒரு ஃபுட் ப்ராசசராக சிக்கனமான முறையில் மாற்ற
பட்டர்ஃபிளை உங்களுக்குக் காட்டுகிறது.
Butterfly
பட்டர்ஃபிளையின் மெல்லிய இயங்கும் ஒலி, உங்கள் தோசை மாவு எத்தனை வேகமாக அரைபடுகிறது என்பதை சொல்லிவிடுமே! மிக்ஸி ஓடும்போது தொட்டுப்பாருங்கள், மெல்லிய அதிர்வு கூட இல்லாததிற்குக் காரணம் பட்டர்ஃபிளையின் சிறப்பான கூடுதல் சக்தி மோட்டார்தான்.
உங்களுக்கு என்ன தேவை?
ப்ளேடுகளைக் கழற்றிக் கொண்டும், கழுவிக் கொண்டும் இருக்க இனி அவசியமில்லை. அரைக்க, கலக்க, கடைய — சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீலினாலான இரண்டு பெரிய ஜாடிகள், உலர்ந்த பொருட்களை அரைக்க ஒரு சிறிய ஸ்டெய்ன் லெஸ் ஸ்டீல் ஜாடி. அரைத்தவற்றை சேர்த்து வைக்க ஒரு பாத்திரம் — இவற்றை அடிப்படை பாகங்களாக வழங்குகின்றது பட்டர்ஃபிளை.
மோட்டார் மீது அளவுக்கு மிஞ்சிய பாரம் விழுவதைத் தடுக்க சிறப்பு (கட் ஆஃப்) ஸுவிட்ச்.
மிகச் சுலப
பழச்சாறு எடுக்க உதவும்.
பழங்களைப் பிழியவும் முடியும்
காய்கறிகளை மிக எளிதாக நறுக்க முடியும்
பொடிப் பொடியாக துண்டாக்க
மாவு பிசைவது கூட முடியும்
பட்டர்ஃபிளை மிக்ஸியை வாங்குங்கள் உங்களுக்கு ஃபுட் ப்ராசசரே அவசியமில்லை
பட்டர்ஃபிளை
— இது ஒரு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் குடும்பம்
MAC/1159

ஒப்பற்ற ஸர்ஃப்

''உண்மை!'' ஆமோதிக்கிறார் லலிதா. ''ஸர்ஃப் சலவைதான்: எதையும் விட 'டாப்', இதுதான் அசல். வேறெதுவும் உதவாது எனக்கு ஸர்ஃப் ஒண்ணுதான் சரி!''

ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவை தருவது ஸர்ஃப் ஒன்றுதான்.

LINTAS SU 402 2518 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

மகாகவி பாரதியாரின் தனிப் பாடல் ஒன்று. அதில் அந்திப் பொழுதில், விளக்கேற்றும் நேரத்திலே பெண் ஒருத்தி வீணைக் குரலில் ஒரு பாட்டிசைக்கிறாள்.

கோல மிட்டு விளக்கினை யேற்றிக்
  கூடிநின்று பராசக்தி முன்னே
ஓலமிட்டுப் புகழ்ச்சிகள் சொல்வார்,
  உண்மை கண்டிலர் வையத்து மாக்கள்
ஞால முற்றும் பராசக்தி தோற்றம்
  ஞான மென்ற விளக்கினை யேற்றிக்
கால முற்றுந் தொழுதிடல் வேண்டும்
  காத லென்பதோர் கோயிலின் கண்ணே

ஞான விளக்கின் உதவியால் உலகமெங்கும் அன்னை பராசக்தியைக் கண்டு தொழ வேண்டும். உலகத்தில் அவளைத் தொழும் இடம் காதல் அதாவது பக்தி என்ற கோயிலாகி விடுகிறது. மகாகவி சுப்பிரமணிய பாரதிக்கு அவர் கவிதைத் தாய் உணர்த்தும் உண்மை இது.

பாரதிக்குப் பராசக்தி உணர்த்திய பேருண்மைகளில் ஒன்று பெண்மையின் பெருமை. தம்முடைய 'புதுமைப் பெண்' பாட்டில் பராசக்தி அன்னையே அப்புதுமைக் கன்னிகையாக வந்து வையம் புதுமையுறப் பெண்மை பெற வேண்டும்' என்று கூறியதாகச் சொல்லியிருக்கிறார்.

இத்தகைய தாய்மைப் பண்புள்ள இறைவனைத் தலைவனாகக் கண்டு பக்தர்கள் தங்களைத் தலைவியாக நினைத்துக் கொள்ளும் போது, தாங்களும் தாய்க் குலத்தின் பண்பை மேற்கொள்கிறார்கள்.

பேரருளாளர்களும், ஆன்ம ஞானிகளும் ஆண்மையைக் காட்டிலும் பெண்மைத் தன்மை பூண்டு ஒழுகுவர்.

இளமை, அழகு முதலியவற்றோடுகூடிய பெண்மையின் முதற் பகுதியைத்தான் பொதுவாகப் பெண்மை என்கிறோம்.



பெண்மையைப் பேணும் போதுதான் அன்பு வாழும்; அப்போதுதான் துன்பம் தீரும். பெண் குலம் தாய்க்குலம் என்பதைப் பாரதி வற்புறுத்துகிறார். அதனால்தான் பெண்மையின் வெற்றி தாய்மையின் வெற்றியாகி உலகத்தை வாழ்விக்கும் என்று உறுதி கூறுகிறார்.

மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா!

என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையும் மகாகவி பாரதியைப் பின்பற்றிப் பெண்ணின் தவப் பெருமையைப் பேசுகிறார்.

தன்னலத்தைக் குடும்பத்திற்காக முற்றும் அழித்துக் கொண்டு வாழ்வது தாய்மையின் தனிச் சிறப்பு. பொதுவாகப் பெண்மையின் பெருமையும் இதுவே.

இதனால்தான் இறைவனைப் பெரியோர் உலகுக்குத் தாய் என்பர்.. மணிவாசகப் பெருமான் 'பால் நினைந்தூட்டும் தாய்' என்று ஆண்டவனைக் குறிப்பிடுகிறார்.

பெண்மையின் இரண்டாவது பகுதிதான் தாய்மை என்று சிறப்பாகக் கூறப்படுகிறது.

இவ்விரு நிலைகளையும் பெரியோர் மேற்கொண்டு ஒழுகுவதால், அவர்கள் ஆண்களாயினும், பெண்களாயினும் அதிக அளவில் பெண்மைத் தன்மை அல்லது தாய்மைத் தன்மையை அடைகிறார்கள்.

வினோபா அடிகள் 'ஆன்ம ஞானத்தின் அம்சம் பெண்கள்' என்கிறார்.

இப்போது வளர்ந்து கொண்டிருக்கும் விஞ்ஞானமும், ஆன்ம ஞானமும் இணைந்து அமைவதுதான் புதுயுகப்

பெண்மையாக இருக்க வேண்டும் என்றும், அதற்கு அவர்கள் தங்களை ஆயத்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார்.

ஆடவருக்கும், பெண்களுக்கும் இன்று விஞ்ஞானமும், ஆன்ம ஞானமும் ஒருங்கே தேவைப்படுகின்றன. இதில் பெண்கள் ஆன்ம ஞானத்தில் ஆடவரைவிட மிஞ்சி நிற்கக் கூடியவர்கள்.

விஞ்ஞானம் புறத்தே நோக்குகிறது. அகநோக்கைக் கொண்டது ஆன்ம ஞானம். பெண்மைக்கு அகநோக்கு ஆண்களைக் காட்டிலும் இயல்பாக அமைந்து உள்ளது. எனவே மெய்ஞானத் துறைக்கு ஆண்களைக் காட்டிலும் தாய்மை உரியதாகிறது என்கிறார் வினோபா. நம் நாட்டிற்கு மட்டுமே இது பொருந்தும் என்றும் வலியுறுத்திக் கூறுகிறார்.

அம்மாவைத் தெய்வமாக, சக்தியாக நினைப்பவன் மனிதன். பாரதியும் இயற்கைத் தாயைச் சக்தியாகவே பார்க்கிறார்.

வந்தே மாதரம் என்போம் - எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்

என்று பாடுகிறார். மாநிலத் தாய் தாய்நாட்டையும் குறிப்பிடுகிறாள், இயற்கைத் தாயையும் குறிப்பிடுகிறாள்.

தமிழர்களுக்குத் தமிழ்நாடும் தாய் நாடு, பாரத நாடு என்ற உபகண்டமும் தாய் நாடுதான். நிலநூல் ரீதியில் தமிழகத்தின் வட எல்லை வடவேங்கடந்தான். எனினும் தமிழகப் பண்பாட்டின் எல்லை வடக்கே உள்ள இமயமலையும், அதைச் சார்ந்த கயிலையங்கிரியுந்தான்.

பாரதியார் 'எங்கள் நாடு' என்றும், 'வெறி கொண்ட தாய்' என்றும், 'பாரத சக்தி' என்றும் பாரத அன்னையைப் பாடியிருக்கிறார்.

இந்த அன்னையைக் காளியாகவும், அன்னையாகவும் வழிபடுவது தமிழர்க்கு உரிய மரபு.

ஆசை மரகதமே! அன்னை திரு முன்றிலிடை
ஓசை வளர்முரசம் ஓதுவாய்! - பேசுகவோ
சத்தியமே, செய்க தருமமே என்றொலிசெய்
முத்தி தரும் வேத முரசு!

என்று தசாங்க வெண்பாவில் குறிக்கப்பட்டு இருக்கும் வேத முரசு தமிழகம் உள்ளிட்ட இந்தியாவுக்குப் பொதுவாக உரிய ஞான முரசுதான்.

வேதம் நிறைந்த தமிழ்நாடு என்று பாரதி தம் செந்தமிழ் நாட்டுப் பாட்டிலே பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்.

இயற்கை அமைப்பிலும் தென்னகம் பாரத அன்னையின் தெற்கு வீடாகவே மதிக்கத்தக்கது. வடக்கே காசி போல் தெற்கே காஞ்சியும் சமய உணர்ச்சிக்கும், இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சிக்கும் இணைப்புப் பாலமாக அமைந்திருப்பதை வரலாறு சுட்டிக்காட்டும்.

சக்தி வழிபாட்டின் ஒருமையுணர்வு தென்னகத்தையும், வட இந்தியாவையும் ஒருங்கே இணைத்துக் காட்டுவதையும் பார்க்கலாம். சக்திக்குரிய பெருவிழாவும் நவராத்திரி விழாவாக வளர்ந்து வட இமயம் முதல் தென் குமரி வரை பரவியிருக்கிறது.

பாரதியாரின் காளி பாடல்களில் தமிழகத்திற்கே உரிய முத்துமாரியின் பாட்டு குறிப்பிடத்தக்கது.

'உலகத்து நாயகியே! எங்கள் முத்து மாரியம்மா!' என்று பாடுகிறார் மகாகவி பாரதியார்.

பாரதியார் இந்த அன்னையின் கண்ணொளி மாட்சியைக் காலைக் கதிரழகில், பொதுவாக எல்லையில்லாத இயற்கை அழகுகளை எல்லாம் கண்டு காட்டுகிறார்.

சக்தி வழிபாட்டின் அத்வைதக் கொள்கையை உள்ளபடி விளக்குகிறது, பாரதியார் உலகத்தை நோக்கிப் பொய்யோ, மெய்யோ என்று வினவும் கவிதை.

நிற்பதுவோ நடப்பதுவோ பறப்பதுவோ நீங்களெல்லாம்
சொப்பனந்தானோ? பல தோற்ற மயக்கங்களோ?

என்று தொடங்குகிறது இக்கவிதை. கற்பதுவும், கேட்பதுவும், கருதுவதும் அற்ப மாயைகளோ? அவற்றுள் ஆழ்ந்த பொருள் இல்லையோ என்றும் கேட்கிறார்; வானகமும், இளவெயிலும் காட்சிப் பிழையோ? கானல் நீரோ? நானும் ஓர் கனவோ? இந்த ஞாலமும் பொய்தானோ என்று கேட்கிறார்.

கவிஞனாகிய நானும் பொய்தானோ என்ற கேள்வியில் வேத ரிஷிகளின் காலம்தொட்டுத் தம் காலம் வரையில் கவிதை வெளியிட்டிருப்பது சக்தியின் அத்வைத உண்மையைத்தான் என்பதை உய்த்துணர வைக்கிறார் பாரதியார்.

காலமும், காட்சி என்ற கோலமும், சீலமாகிய குணங்களும் பொய்களோ? சோலையிலே 'மரங்கள் எல்லாம் தோன்றுவது ஓர் விதையில் என்றால் சோலை பொய்யாமோ?' என்று ஆவேசத்துடன் கேட்கிறார்.

விளைவில் காண்பதெல்லாம் விதையில் அடங்கிக் கிடக்கும் தத்துவத்தை உணர்ந்து கொள்வோர் சக்தி தத்துவத்தில் உள்ள மாயை என்ற சக்தியையும் ஓரளவு உணர்ந்து கொள்வார்கள்.

இந்த வசன கவிதை சக்தி வழிபாட்டின் ஓர் அடிப்படைத் தத்துவத்தை அடிக்கோடிட்டு வற்புறுத்துகிறது.

காண்பதுவே உறுதி கண்டோம்
காண்பதல்லால் உறுதி இல்லை,
காண்பது சக்தியாம் இந்தக்
காட்சி நித்தியமாம்.

என்று எல்லாம் சக்தி மயம் என்பதைத் தெளிவாக விளக்குகிறது.

'வண்டிக்காரன் பாட்டு' என்ற பாட்டில் சக்தியைப் பற்றி அண்ணனுக்கும், தம்பிக்கும் உரையாடலாக அமைத்திருக்கிறார் பாரதியார்.

'காட்டு வழிதனிலே - அண்ணே!
கள்ளர் பயமிருந்தால்? - எங்கள்
வீட்டுக் குலதெய்வம் - தம்பி
வீரம்மை காக்குமடா!'

'நிறுத்து வண்டி யென்றே கள்ளர்
நெருங்கிக் கேட்கையிலே - எங்கள்
கறுத்த மாரியின் பேர் சொன்னால்
காலனும் அஞ்சுமடா'

நாடோடிப் பாடலின் மெட்டில் அமைந்திருக்கும் இவ் வண்டிக்காரன் பாட்டில் அறிவு வளர வளர, அதனோடு ஒட்டி வளரக்கூடிய நன்னம்பிக்கையும் இணைந்து வளர்வதைப் பார்க்கிறோம்.

உண்மையான சக்தி வழிபாட்டில் பண்டிதருக்கும் இடமுண்டு; பாமரர்க்கும் இடம் உண்டு; குழந்தைகளுக்கும் இடமுண்டு. ஞானக் குழந்தைகளான பக்தர்களுக்கும், சித்தர்களுக்கும் இடம் உண்டு.

அறிவும், அறிவு வளர்ச்சியும் அவசியமானவைதான். சக்தி வழிபாட்டிலே சுத்த அறிவே சக்தி என்பதையே சுத்த அறிவே சிவம் என்று பாரதி கூறுகிறார்.

சக்தி வழிபாட்டை இயற்கைப் பலகணியிலும் பார்க்கலாம், வேதாந்தப் பலகணி வழியாகவும் பார்க்கலாம்.

லக்ஷ்மி மில்ஸ்

கோயமுத்தூர்.

SASI

India's
No.1 Precured
(Cold Process)
Retreads
to Save You
Miles of Money!



ELGITREAD Features :

★ New Tyre Milage
★ Quicker Service ★ Longer Casing Life
★ Less Downtime ★ More Scientific Repair System
★ Wider Choice of Tread Designs
★ Tougher Treads ★ Fewer Punctures

ELGI TYRE & TREAD LIMITED
2000 Trichy Road Coimbatore 641 005
Phone : (0422) 74161 to 65
Grams : ELGITREAD Telex : 0855-475

கண்ணன் பாட்டிலே இயற்கைத் தாய், வான் என்னும் தன் கையில் உயிர்க் குலத்தை அணைத்துக் கொண்டு, உண்ண உண்ணத் தெவிட்டாத உணர்வு என்னும் பாலை வாயில் கொண்டு ஊட்டுவதாகப் பாரதியார் கூறுகிறார்.

இம்மண்ணுலகு தாயின் மடி. இம்மடியில் வைத்து அணைத்த வண்ணம் இன்பக் கதைகளும், துன்பக் கதை களும் அன்போடு சொல்லி வருகிறாளாம்.

கதை சொல்வதற்கு எத்தனையோ பொம்மைகளையும் விளையாடக் கொடுக்கிறாளாம். இயற்கைத் தாய் விதம் வித மான, விந்தையான பொம்மைகளை நமக்குக் காட்டுகிறாள்.

சந்திரனென் றொரு பொம்மை - அதில்
தண்ணமுதம் போல ஒளி பரந்தொழுகும் .

மந்தை மந்தையாகத் திரண்டு, விந்தை விந்தையாக உருக் கொள்ளும் கருமேகங்களை 'மழை பொழியும் பொம்மை யாக' இயற்கைத் தாய் நமக்கு அளித்து இருக்கிறாளாம்.

சூரியனும் முகத்தொளி மிக்க ஒரு பொம்மைதான். வான வீதியில் வாரி இறைத்திருக்கும் வைரச் சிறுமணிகள் போல் மின்னி மினுங்கும் விண்மீன்களும் பொம்மைத் திரள்களே.

இப்படி விண்ணகப் பொம்மைகளைச் சுட்டிக்காட்டுவ துடன் மண்ணகத்தில் உள்ள பொம்மைக் கொலுவையும்நமக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறாளாம் இயற்கைத் தாய்.

மலைகளையும், ஆறுகளையும், அவை போய் விழும் கடல்களையும் எவ்வளவு வசீகரமாய் அமைத்திருக்கிறாள் இயற்கை அன்னை!

கானத்து மலைகளுண்டு - எந்தக்
  காலமுமோரிடம் விட்டு நகர்வதில்லை,
மோனத்தி லேயிருக்கும் - ஒரு
  மொழியுரை யாதுவிளை யாடவுருங் காண்!
நல்ல நல்ல நதிகளுண்டு - அவை
  நாடெங்கும் ஓடிவிளை யாடி வருங்காண்!
மெல்ல மெல்லப் போயவை தாம் - விழும்
  விரிகடற் பொம்மையது மிகப் பெரிதாம்!
எல்லையதில் காணுவதில்லை - அலை
  எற்றிநுரை கக்கியொரு பாட்டிசைக்கும்!
ஓல்லெனுமப் பாட்டினிலே - அம்மை
  ஓமெனும் பெரென்றும் ஒலித்திடுங்காண்!

செம்மையாக உள்ளுருகி அநுபவிக்க வேண்டிய இயற்கை உண்மை இப்படியெல்லாம் உலகம் எங்கும் நிறைந்திருக்கும் பொம்மைக் கொலுவைக் 'கோடி பல கோடிகளாய்' நமக் காக இயற்கை அன்னை வைத்திருக்கிறாளாம்.

மனித இன வளர்ச்சிக்குக் காதலையும் வைத்திருக்கிறாள் இயற்கை அன்னை என்பதை எவ்வளவு நளினமாக வெளி யிடுகிறார் பா ரதியார்.

கொன்றிடு மென இனிதாய் - இன்பக்
  கொழுங்கனலாய், அனற் சுவைய முதாய்,
நன்றியல் காதலுக்கே - இந்த
  நாரியர் தமையெனைச் சூழ வைத்தாள்!

இக்கவிதைப் பகுதியில் பெண்களை ஆண்கள் கேவலம் தங்கள் சிற்றின்ப உணர்ச்சிக்கே பயன்படும் பொம்மை களாக்கி விடலாகாது என்று எச்சரிக்கிறார், மகாகவி சுப்ர மண்ய பாரதியார்.

○

திருநெல்வேலியில் சைவ வேளாளர் செந்திநாயகம் பிள்ளை என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் நெற்கட்டுச் செவ்வல் என்ற இடத்தில் சிற்றரசர் ஒருவரிடம் தானாபதி என்ற பதவி ஏற்று அலுவல் புரிந்து வந்தார்.

அவருக்கும் அவர் மனைவி பேச்சிமுத்து அம்மையாருக்கும் (1839) விகாரி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 16-ஆம் நாள் சனிக்கிழமை அந்த நட்சத்திரத்தில் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குத் தந்தையார் இட்ட பெயர் சங்கரலிங்கம். பிற்காலத்தில் இக்குழந்தையே ''வண்ணச்சரபம்'' என்றும், ''முருகதாச சுவாமிகள்'' என்றும், ''தண்டபாணி சுவாமிகள்'' என்றும், ''திருப்புகழ்ச் சுவாமிகள்'' என்றும் மிகுந்த சிறப்புடன் போற்றி அழைக்கப்படுகிறது.

குழந்தை வளர்ந்தது. ஐந்து வயது ஆனபோது பள்ளியில் சேர்த்துப் படிக்கவைத்தனர். பனையோலை ஏட்டில் எழுத்தாணி கொண்டு எழுதிப் படித்தார். ஆசிரியர் வியந்து போற்றுமளவுக்குக் கல்வியில் தேர்ச்சி பெற்றார். ஆறரை வயது ஆனபோது தந்தையார் செந்திநாயகம் பிள்ளை காலமானார்.

சீதாராமநாயுடு என்பவர் தந்தையாரின் மிகநெருங்கிய நண்பர். மந்திர சக்தியில் வல்லவர். ஆறரை வயதில் தந்தையை இழந்த தண்டபாணி சுவாமிகளுக்குக் குருவாக விளங்கி விநாயக மந்திரமும், இலக்குமியின் மந்திரமும் உபதேசித்துப் பூசிக்கும் முறையும் செபிக்கும் இயல்பும் கூறினார். சிறுவனாக இருந்த போதும் உறுதியுடன் ஆர்வத்தோடு பூசித்தார். மேலும் சீதாராமர் இவருக்கு முருகக் கடவுளுக்குரிய ஆறெழுத்து மந்திரத்தையும் உபதேசித்தார். அதனையும் சுவாமிகள் செபித்துவந்தார்.

அருணகிரியின் அவதாரம்

தென்காசி நகரை அடுத்த சுரண்டை என்னும் இடத்தில் இவரது பெரிய தாயாரின் வீடு இருந்தது. பெரிய தந்தையான சிதம்பரம் பிள்ளை சிறுவனைத் தம்மோடு அன்புடன் அழைத்துச் சென்றார். அவ்வூர்ப் பள்ளியில் சேர்த்துப் படிக்கவைத்தார்.

சுரண்டை என்னும் ஊரின் அண்மையில் உள்ள சித்திரா நதிக்கரையில் ஓர் அம்மன்கோயில் உள்ளது. அந்த அம்பிகைக்

குப் ''பூமி காத்தாள்'' என்று திருநாமம் வந்த காரணம் ஒருவருக்கும் அங்கே தெரியவில்லை. அப்போது எட்டரை வயதாக இருந்த சுவாமிகள் ஒரு வெண்பா பாடினார்.

> ''அமுதம் கடையும் நாள் ஆலம் வெடித்தும்
> திமுதிமெனத் தீயெரித்துச் சென்ற(து) - அமுதமெனத்
> தீக்கடவுள் உண்டார்! திருக்கண்டத் தைப்பிடித்துக்
> காத்ததனாற் பூமிகாத் தாள்!''

தேவரும் அசுரரும் கூடி அமுதம் கடைந்தபோது தோன்றிய விடத்தைச் சிவபிரான் எடுத்து உண்ணத் தொடங்கியபோது, அவருக்குப் பக்கம் இருந்த உமையவள் சிவபிரானது கழுத்தில் கை வைத்து விழுங்காதபடி தடுத்தாள். அதனால் அவனுடைய சொரூபமாக உள்ள உலகம் பிழைத்தது. எனவே அந்த அன்னைக்குப் பூமிகாத்தாள் என்ற பெயர் வந்தது என்று கூறிப் பலரது பாராட்டைப் பெற்றார்.

சில காலம் சுரண்டைப் பகுதியிலே வசித்துக் கல்வியிலே தேர்ச்சிபெற்ற பிறகு திருநெல்வேலி வந்தார் சுவாமிகள். பல பாடல்களை நினைத்த மாத்திரத்தில் விரைவாகப் பாடத் தொடங்கினார். இவரது குரு சீதாராம நாயுடு இவரைப் பாராட்டி 'ஓயாமாரி' என்று பெயரிட்டார்.

இவருக்கு வயது பதின்மூன்று ஆனபோது மிகுந்த இலக்கணக் கட்டுப்பாடுகள் உடைய வண்ணப்பாடல்களை மிக எளிதில் பாடும் தன்மையை அடைந்தார். பொதியைமலைச் சார்பான திருமலையில் முருகனுக்குத் திருப்புகழ் பாடி அரங்கேற்றினார்.

ஒருநாள், வள்ளியூர் மலைக்குச் சென்று முருகனை வணங்கித் துதித்து, கல்லாடை, லங்கோடு, கௌபீனம் இவற்றை முருகன் திருமுன் வைத்துப் பூசை செய்வித்து அணிந்துகொண்டார். திருச்செந்தூர், திருவுருமாமலை முதலிய பலதலங்களுக்கும் சென்று முருகனைத் துதித்து நூல்கள் பாடினார்.

சிறு தெய்வ வழிபாடு செய்தேனும் விரைவில் இறைவன் அருள்பெற விழைந்தார். அதனால் மாடன், சுடலை, அநுமார், வயிரவர் போன்ற இறையம்சங்களைத் தனித்தனியே உபாசித்தார். ஒவ்வொன்றும் இவருடைய நிட்டையில் தோன்றின. 'உண்மையான பிரம்ம சொரூபத்துக்கு நான் வேறல்லன்'

என்று கூறி மறைந்தன. அது கண்ட இவர், 'அதுவரை செய்த தவம் முருகனுக்கே உரித்தாகுக' என்று தத்தம் செய்தார். இதிலிருந்து முருக வழிபாட்டில் தீவிரமாக ஈடுபட்டார்.

முருகனை நேரில் காணவேண்டும் என்று தணியாத ஆவல் கொண்டார். முருகனை வேண்டினார். முருகன் காட்சி வழங்கவில்லை. அதனால் திருமலை என்னும் தலத்தில் மலை உச்சியில் இருந்து உருண்டு உயிர்விடத் துணிந்தார். அவ்வாறு உருண்டு வந்தபோது உடலில் ஓர் அங்கமும் பழுதுபடாமலும் உயிர் நீங்காமலும் சிறுகாயங்களோடு முருகன் அருளால் காக்கப்பெற்றார். உடன் வந்திருந்த சரவணதாசர் என்னும் அருணாசலத் தொண்டைமானாகிய' மாணவ அன்பர் கண்டு மனம் வருந்திய போது சுவாமிகள் அவரைத் தேற்றினார்.

இவர் மனவெளியில் காணும் அருட்காட்சிகள் பல. ஒரு நாள், தமது வழிபாட்டுக்குரிய சித்திரவடிவக் குமரக் கடவுள் முன்பு தலைவைத்து, இரவில் துயிலும்போது கனவில் ஒரு காட்சி கண்டார். நாரதமுனிவர் வீணையை ஏந்தி இவர் பக்கத்தில் வந்தமர்ந்தார். ''உமக்கு அளவுகடந்த தமிழ்ப்பாடல் கூறும் வாக்கு உண்டாகச் செய்தது யார்?'' என்று கேட்டார்.

அதற்கு மறுமொழி சுவாமிகள கூறும் முன்பே, ஓவிய வடிவில் உள்ள முருகன், தமது வலக்கரத்தால் மார்பில் தட்டி, குமர குருபரனாகிய அடியேன்தான் செய்தேன் என்று மும்முறை கூறினார். நாரதர் இசை எழுப்பினார். இதனை,

''என்பாட லேயென யான்பாடும் பாத்தொகை யாவையும் சேய்

தன்பாடலேயெனச் சாற்றுகின்றான்''

என்று பாடியுள்ளார்.

இவர் எழுதும் எழுத்தாணிக்கு முருகன 'சர்வசாதாரணி' என்று பெயர் வைத்ததாகவும் கூறுகிறார். எதையும் சர்வ சாதாரணமாக் எழுதும் ஆற்றல் பெற்றவராக விளங்கினார்.

சுவாமிகளுக்கு 22 வயது ஆனது. திருநெல்வேலியிலிருந்து சென்னை நோக்கித் தலயாத்திரை தொடங்கினார். வழியில் உள்ள தலங்களை எல்லாம் தரிசித்துக் கொண்டு இறுதியாக மயிலாப்பூர் வந்தடைந்தார். அங்கே இருந்த சிலர் இவர் இளமைத் தோற்றத்தைப் பார்த்து இகழ்ச்சியாகப் பேசினர். இவர் சந்தப் பாடல்கள் பலவற்றைப் பாடி அவர்களை வியப்படையச் செய்

தார். அங்கே திருச்சிற்றம்பல ஞானியார் என்பவர் நட்பு இவருக்குத் துணையாக இருந்தது.

அப்போது சென்னையில் இருந்த யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் இவரை மிகவும் போற்றி வரவேற்றரர். சென்னை கந்த கோட்டத்து முருகன்மீது பிள்ளைத் தமிழ் நூல் பாடி அங்கேயே அரங்கேற்றினார். பல புலவர்கள் நிரம்பிய அவையில் நூல் அரங்கேற்றம் நடந்தபோது, காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், சுவாமிகளிடம் சில ஐயங்களைக் கேட்டார். தகுந்த விடை கூறிப் பாராட்டப் பெற்றார்.

சில நாள் சென்னையில் தங்கி இருந்து பின்னர் திருநெல்வேலியை அடைந்தார். ஒரு நாள் முருகன் இவர் நிட்டையிற் காட்சி வழங்கினார். அப்போது சுவாமிகள், தாம் முற்பிறப்பில் யார் என்று வினவியபோது, ''நீ நமது அருணகிரியே'' என்று கூறினார். சுவாமிகளுக்கு நினைவு வந்ததும் ஒரு பாடல் எழுதினார்.

''வல்லைவந் தன்பரைக் காக்கும்செவ் வேற்கை வரதனைக்
கண்(டு)
எல்லையில் லாக்களிப் பாய்மடி மீதில் இருக்கு மென்னைத்
தொல்லை அருண கிரிதான்என் றன்னவன் சொன்ன
துண்மை
இல்லையென் றாற்குமுக் கென்றுவெங் கோடை
இடிவிழுமே!''

என்பது அப்பாடல்.

திருவண்ணாமலை சென்று தவம் செய்தல் நலமென்று எண்ணிய சுவாமிகள் திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டார். திருவண்ணாமலை சென்று ஈசானிய மடத்தில் தங்கினார். முருகன் இவரது மனவெளியில் தோன்றி 'நீ, நமது கோபுரத்துக்கு வருக' என்றான். அதன்படி அண்ணாமலையார் திருக்கோயில் முன் இரண்டாவதான வல்லாளன் கோபுரத்தினைச் சென்று பார்த்தார்.

அருணகிரிநாதருக்கு அருள் செய்த கோபுரத்து இளையனார் என்னும் பெயர் தாங்கிய முருகன் சந்நிதியில் நேர் வாயில் சுவர் வைத்து மறைக்கப்பட்டு இருந்தது. பூசனை செய்வதும் இல்லாமல் துரிஞ்சல் நிறைந்தும் பாழ்பட்ட நிலையில் இருந்தது கண்டார்.

மனம் வருந்தினார். அன்பர்கள் உதவிகொண்டு சுவரை அகற்றிப் புனிதப்படுத்தினார். வழிபாடுகள் செய்து தனது வேலாயுதத்தைச் சாத்திப் பதிகம் பாடினார். 'சகத்திர தீபம்' என்ற ஆயிரம் பாடல்கள் உள்ள நூலைப் படைத்தார். இவர் அணிவித்த வேலாயுதம் இன்றும் கோபுரத்து முருகன் அணிந்து விளங்குகிறான்.

கழுகுமலை முருகனை வணங்கச் சென்றபோது முருகன் அருளால், உடல் சூடு தணியும்படி தவசி ஒருவர் மூலம் பனங்கற்கண்டு கிடைக்கிறது. அவ்வூரில் பேய்பிடித்த பெண் ஒருத்தி இருந்தாள். அவள் மீதுள்ள பேயை விரட்ட முயன்றபோது முழு வெற்றி கிடைக்க முருகன் அருள் புரியவில்லை. அதனால் சுவாமிகள் மனம் வருந்திக் கழுகுமலை பற்றிப் பாடிய பாடலுள்ள ஏட்டுச் சுவடியைக்கிழித்துக் குளத்தில் போட்டார். தம் எண்ணம் நிறைவேறாதபோது, எழுதிய ஏட்டுச் சுவடிகளைக் கிழித்துக் குளத்திலும் கிணற்றிலும் கடலிலும் போட்டு அழிப்பது இவர் இயல்பு.

திருமலை மீது ஏறி உயிரை வெறுத்து உருண்டபோதும் முருகன் தோன்றவில்லை; மீண்டும் மலையில் ஏறி உருண்டு உயிரைவிடுவோம் என்று எண்ணியபோது முருகன் தோன்றி அருள் செய்கிறான். இந்நிகழ்ச்சியை இவர்தம் சுயசரிதமான 'குருபர தத்துவம்' என்னும் நூலில் கூறியிருக்கிறார்.

சமயத்துக்கும் தமிழுக்கும் இவர் ஆற்றிய தொண்டுகள் அளவற்றவை. 'அறுவகை இலக்கணம்' என்ற இலக்கண நூலைத் திருவுருமாமலைக் கோயில் முகப்பு மண்டபத்தில் அரங்கேற்றினார். நூலின் நயத்தைப் பல புலவர்கள் பாராட்டினர்.

சந்த யாப்புக்காக இதுவரை தனி இலக்கண நூல் இல்லாமல் இருந்தது. அந்தக் குறையைப் போக்குவதற்காக 'வண்ணத்தியல்பு' என்னும் நூலை அமைத்துத் திருப்பரங்குன்றம் முருகன் முன்னிலையில் அரங்கேற்றினார். அப்போது சோழ வந்தான் கந்தசாமி சுவாமிகள் அங்கே வந்து இவரது நட்பைப் பெற்றார்.

அறுவகைச் சயமமும் ஒரே தன்மையுடையது என்ற உண்மை உணர்ந்தவர். அதனால் அறுசமயக் கடவுளரையும் ஒன்றாக வழிபடுபவர். அறுசமயக் கோலமும் தமது மேனியில் அணிந்தார். உடல் முற்றும் திருநீறு பூசி, இரு தோள்களிலும் இரண்டு கலை நாமங்களையும் அணிந்தார். துளசி, அக்கமணிமாலை புனைந்திருப்பார்.



திரு அயிந்திரபுரம் என்னும் திருமால் தலத்திற்கு இவர் சென்றபோது இருவர் வந்து வலிய வாதிட்டனர். தமிழ், வட மொழி இரண்டில் எது உயர்வு என்று கேட்டனர். தமிழே உயர்வு என்று சுவாமிகள் கூறினர். பகலும் இரவும் வாதம் நடந்தது. பின் திருவுளச் சீட்டுப் போட இருதரப்பினரும் இசைந்தனர். திருவுள்ச் சீட்டில், 'தமிழே உயர்ச்சி' என்ற முடிவு கிடைத்தது. நீங்கள் வணங்கும் தெய்வம் உங்களுக்கு இசைந்த முடிவைக் கொடுத்தது என்றனர். ''தமிழே உயர்ச்சியென்று சீட்டுக் கொடுத்த பெருமானே'' என்று ஒரு திருப்புகழ் பாடினார். 'தமிழலங்காரம்'' என்னும் நூல் பாடித் தமிழின் சிறப்புக்களை எடுத்துரைத்தார்.

சுவாமிகள் புதுவைக்குச் சென்றார். அங்கே பல அன்பர்கள் இவரை வரவேற்றனர். அங்கே விளங்கும் வேத புரீசர் கோயிலில் உள்ள முருகனுக்கு முப்பத்தாறு திருப்புகழ் கொண்ட ஓர் நூலியற்றினார். அன்றிரவு இவர் நிட்டையில் முருகன் தோன்றி, என் முகங்களில் ஒன்றே மகிழ்ந்தது. மற்றவையும் மகிழும்படி ஐந்து நூல்கள் இயற்றுக என்றான். அவ்வாறே சுவாமிகள் ஐந்து நூல்கள் இயற்றி மேலும் ஒரு நூல் படைத்து முருகனை மகிழ்வித்தார்.

புதுவையிலிருந்து புறப்பட்டுப் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருநெல்வேலி சேர்ந்தார். கடன் வாங்கி முருகனுக்கு வேற்பூசை செய்தார். அந்தக் கடனை அடைப்பதற்காகத் கேரள நாடு புறப்பட்டார். கேரளநாட்டு மன்னன் இவரை ஆதரிக்கவில்லை. அங்கிருந்து கொச்சி வந்தார். அந்நாட்டு மன்னனும் ஆதரிக்கவில்லை.

மனம் வருந்தி ஒரு நாள் இரவு சிறுதோணியில் ஏறி வடதிசை நோக்கி சென்றார். அப்போது இருள் நிறைந்த இரவு நேரம். மேலும் தோணி செலுத்தவோர் மதுவைக் குடித்த வெறியுடைய இளைஞர். புதிதாகத் தோணி விடுபவர்கள், வழியறியாமல் சமுத்திரம் நோக்கி விட்டனர். அந்நிலையில் தோணியில் ஓர் ஓட்டை விழுந்து நீர் உள்ளே ஏறியது. ஒருவன் துணை கொண்டு நீரை வெளியேற்றினார். அப்போது அசரீரியாக ஆட்களை அதட்டி நேர் வழியில் செலுத்தும்படி முருகன் கூறினான்.

சுவாமிகள் பசியோடு இருந்தபோது மாயவன் வைணவப் பெரியார் வேடம் கொண்டு வந்து இரவு நேரத்தில் உணவு வழங்கியதும் கேரளத்தில் நடந்த நிகழ்ச்சிகளுள் ஒன்று.

இராமலிங்க வள்ளலாரை மூன்று முறை சந்தித்துப் பேசியிருக்கிறார். பழனியில் சிறந்த புலவராக விளங்கிய மாம்பழக் கவிச்சிங்க நாவலரைப் பார்த்துப் பழகி இருக்கிறார். ஆறுமுக நாவலரோடு நட்பு கொண்டார். இவர்களின் பழம்பிறப்பை முருகன் அருளால் உணர்ந்து விளக்கினார். புலவர்கள் வரலாற்றினைப் **புலவர் புராணம்** என்னும் பெயரில் எழுதினார்.

இராமநாதபுரம் சேதுபதி சமஸ்தானத்துக்குச் சென்றார். அங்கே மன்னர் இவரைக் காணவில்லை. சிறிது காலம் பொறுத்திருக்கச் சொன்னார். இவர் பொறுத்திருந்து மன்னரைக் காண விரும்பவில்லை. அங்கிருந்து புலவர்களிடம் இவர் தம் புலமையைக் காட்டிப் பாடிவிட்டுப் புறப்பட்டார்.

வேம்பத்தூரில் 'பிச்சுவையர்'' ஆசு கவிபாட வல்லவர். இவரும் சுவாமிகளும் வெண்பாவால் பேசிக்கொண்டதாக வரலாறு உள்ளது.

வேலாயுதம் பிள்ளை, திருமலையம்மை என்பவரது புதல்வியாகத் தோன்றிய சுந்தரம் அம்மையை இவருக்குத் திருமணம் செய்ய முருகன் அருள் கிட்டியது. மயிலம் முருகன் சந்நிதியில் திருநீற்றுக் காப்பிட்டு ஆறுமுக உருத்திராக்கத்தை மங்கலமாக அணிந்து மனைவியாக ஏற்றார்.

இவர் இல்லறம் நடத்திக் கொண்டே முருகனுக்குச் சிறந்த அடியாராக விளங்கிவந்தார். பல்லாயிரம் பாடல்களை பாடித் தமிழையும் சமயத்தையும் வளர்த்தார்.

ஒரு நாள், சின்னக் குழந்தைகளாக இருந்த இரண்டு அணிற குஞ்சுகள் பெற்றோரைப் பிரிந்து வருந்துவதைப் பார்த்தார். எந்த நேரத்திலும் காக்கைகளால் கொத்திச் செல்லும் நிலையையும் உணர்ந்தார். 'பெரியோர்கள் திருநீற்றால் முத்தியடைந்தது உண்மையானால் இவை பிழைக்கட்டும்' என்று கூறிப் பாடல் பாடினார். சிறிது நேரத்தில் பெரிய அணில்கள் வந்து தம் குஞ்சுகளை எடுத்துச் சென்றன.

சுவாமிகள் கப்பல் ஏறிக் கொழும்புக்குச் சென்றார். முருகன் கட்டளைப்படி அங்கே இவருக்குச் சில உதவிகள் கிடைத்தன. அந்த உதவிகளைப் பெற்றுத் திருநெல்வேலி திரும்பினார்.

அங்கே தவச் சாலை அமைக்க முயன்றார். கிணறு வெட்டத் தொடங்கிய போது கடினமான கருங்கற்பாறை குறுக்கிட்டது. நீரூற்று காணமுடியவில்லை. சுவாமிகள் பொதியை மலைச் சென்று அகத்திய முனிவர் ஆலயத்தில் தங்கி நீரூற்று வருவதற்குக் கடினமான தவம் புரிந்தார்.

கோயமுத்தூருக்கு அருகில் உள்ள சரவணபுரம் என்னும் இடத்தில் இராமானந்தர் என்பர் பக்திமானாக இருந்தார். அவர் சுவாமிகளைப் பழனியில் சந்தித்து நட்பு கொண்டார். சுவாமிகள் அவருக்கு ஆறெழுத்து மந்திரத்தை உபதேசித்துத் தம் சீடராக ஏற்றுக் கொண்டார்.

திருவல்லிக்கேணியில் பார்த்த சாரதிப் பெருமாள் சந்நிதியில் எழுகூற்றிருக்கைப் பாடல் பாடி அரங்கேற்றினார். அன்று ஒரு பாகவதர் வடிவில் பெருமாள் எழுந்தருளினார். ஒரு சீட்டை இவரிடம் பெருமாள் உதவியதாகத் தந்தனர். அதில் எழு கூற்றிருக்கைப் பாட்டுக்காக எழுநூறு பொன் கொடுக்கக் கடன் பட்டுள்ளேன் என்று கடன் சீட்டெழுதிப் பத்தாழ்வாரது சான்றுகளுடன் கைமொப்பம் இட்டிருந்ததைக் கண்டனர்.

1888-ஆம் ஆண்டு, பசுக்களுக்கும் முக்தியளித்த தலமான திருவாமூத்தூர் சென்று மடம் அமைத்துத் தங்கினார். எல்லை தாண்டா விருதம் மேற்கொண்டார். திருநெல்வேலியில் கிணறு பாறையானது கண்டு, அதில் நீறெடுக்காமல் சோறு உண்பதில்லை என்று கடும் விரதம் பூண்டார். அரிசி சம்பந்தப்பட்ட எதுவும் உண்ணுவதில்லை. சுமார் பத்து ஆண்டுகள் இப்படி கடும் விரதம் காத்தார். உடல் மெலிந்து வந்தது; ஆனால் மன உறுதி வலுத்து வந்தது.
அருணகிரியின் அவதாரமாக விளங்கி லட்சம் பாடல்களுக்கு. மேல் பாடித் தமிழுக்கும் சமயத்திற்கும் அளவற்ற நற்பணிகள் புரிந்தார். அத்தகைய சுவாமிகள் 1898 விளம்பி வருடம் ஆனி மாதம் 23-ஆம் தேதி தம் ஐம்பத்தொன்பதாவது வயதில் முருகனுடன் கலந்தார்.

எளிமையான ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து இறையருளால் பல அருளாடல்கள் புரிந்த சுவாமிகள் அருள் ஞானிகள் வரிசையில் வைத்து மதிக்கத் தக்கவர் ஆவார்.

- ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

அமுதத்தில் விஷம்

அவசரமாய்ச்
சுவாசிக்க வேண்டும்

காரோட்டி!
ஊருக்கு வெளியே போ!

இமைகளை இதமாய் மூடிப்
புருவமத்தி குறுகுறுக்க
நுரையீரல் விரிய விரிய
ஆழமாய்
அவசரமாய்
ஆனால் சுதந்திரமாய்ச்
சுவாசிக்க வேண்டும்

ஊருக்கு வெளியே போ!

•

இந்த
நகரத்துக் காற்றில் எனக்கு
நம்பிக்கை இல்லை

காற்றின் நிறம்
கறுப்பு இல்லை

இதில்
பிராணவாயு பிரித்தெடுக்க
நாசிக்குச் சக்தியில்லை

சுற்றியுள்ளது காற்றல்ல

இது
பெட்ரோல் டீசலின்
வளி வடிவம்

இதைச்
சுவாசிப்பதெனில்
எந்திர மூக்கு
வேண்டும் எனக்கு

•

பாவிகளே!

மரணப் படுக்கையில்
காற்றைத் தள்ளிய
மாபாவிகளே!

புகை பிடித்தீர்கள்
காற்று ரணமானது

புழுதி பறந்தது
காற்று கனமானது

எந்திரப்புகை எழுந்தது
காற்று இறுகியது
குப்பைகள் வானளாவின
காற்று கெட்டிப்பட்டது

எப்படிச் சுவாசிப்பது?

நுரையீரல் இப்போது
எஃகினால் வேண்டும் எனக்கு.

•

அவசரமாய்ச்
சுவாசிக்க வேண்டும்

காரோட்டி!
ஊருக்கு வெளியே போ!

•

உணவு திரிந்தால்

இரைப்பையைப்
பட்டினி போடுவேன்

காற்று திரிந்தால்

சுவாசப் பையும்
பட்டினி கிடக்குமா?
அணு உலைகளின் பெருமூச்சு
ஆலைகளின் கருமூச்சு
தொழிற்சாலைச் சுடுமூச்சு
எல்லாம் கலந்தால்
அடுத்த நூற்றாண்டில்
மனிதன் இருப்பானோ?

இல்லை

அடுத்த நூற்றாண்டில்
காற்று இருக்குமோ?

•

பற்று நோய் அறுத்த
துறவியர்க்கும்
புற்றுநோய் வருவதேன்?

அது
நஞ்சூட்டிய காற்றின்
நன்கொடையப்பா!

பத்தினிப் பெண்கள் சொல்லியும்
பருவமழை பொய்த்ததேன்?

மேகத்தில் பால்கறக்கும்
சுத்தக்காற்று செத்துவிட்டதப்பா!

அணுக்குண்டுத் துகள்களினால்
காற்று எப்போதோ
கற்பிழந்து போனதப்பா!

காற்றே உயிர் குடித்தால்
இனி
தொட்டிலே கல்லறையாகும்

•

பாவிகளே!
காற்றுக்கு உயிர் கொடுங்கள்

மனிதனைக் கொன்றுதான்
விஞ்ஞானம் வெல்ல வேண்டுமா?

இல்லை
சுவாசப்பை இல்லாத
மனிதனைப் படைக்குமா?

•

அவசரமாய்ச்
சுவாசிக்க வேண்டும்

காரோட்டி!
ஊருக்கு வெளியே போ!

•

அங்கே...

எனக்கும் முன்னால்
ஏராளக் கார்கள்

தேனடையின் தேனீக்களாய்
மனிதர்கள்

கேட்டேன்

சுவாசிக்க வந்தவர்களாம்

மூர்ச்சையானேன்.

கவியரசு வைரமுத்து

லண்டன் ஹீத்ரூ விமான நிலையத்தில் வழக்கத்தை விட கூட்டம் நிரம்பி வழிந்தது.

பம்பாயிலிருந்து லண்டன் சென்ற 'பிரபு விமானம் மாற்றிச் சிகாகோவுக்குப் பறக்க வேண்டும்.

ஏர் இந்தியாவின் இருபத்து மூன்றாவது கேட்டிலிருந்து வேக வேகமாகச் சென்ட்ரல் ஹாலுக்கு நடந்தான்.

பல தடவைகளுக்கு மேல் இப்படிப் போய் வந்ததால் பிரபுவுக்கு இதெல்லாம் ரொம்ப சர்வ சாதாரணமாகி விட்டது.

வியாபார விஷயமாகப் பறப்பதால் கையில் ஒரு சூட்கேஸ்தான் இருக்கும். விமானப் பயணத்தை மிகவும் ரசிக்கும் சுபாவம் உள்ளவன் பிரபு.

சரக், சரக்கென்று பூட்ஸ் ஒலி தேய கூடவே பலர் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

கூடவே கன்வேயர் பாசேஜ் மூலம் சிலர் நின்று கொண்டே நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

பிரபுவுக்கு அது பிடிக்காது. எட்டு மணி நேரப் பயணத்திற்குப் பிறகு கொஞ்சம் காலாற நடக்க வேண்டும்.

பிரபுவுக்கு இருபத்தேழு வயதாகிறது. ஆனால் அவனைப் பார்ப்பவர்கள் இருபத்திரண்டு வயதுக்கு மேல் சத்தியமாக மதிப்பிடமாட்டார்கள்.

பிரபுவுக்கு இன்னும் திருமணமாகவில்லை. அப்பா காலமாகி ரொம்ப நாளாகிறது. ஒரே வாரிசு அம்மா வற்புறுத்தாத நாள் கிடையாது.

''இப்போ என்னம்மா அவசரம்?'' என்று வாய் நிறையச் சிரித்துக் கொண்டே நழுவி விடுவான்.

''இப்போ என்ன அவசரமா? எனக்கு வயதாகிறது. உனக்கும் வயசு ஆயிக்கிட்டே போகுது. காலாகாலத்தில் திருமணம் நடந்து நானும் பேரன் பேத்திகளைக் கொஞ்ச வேண்டாமா?''

பதில் சொல்லுவதற்குப் பிரபு அந்த இடத்தில் இருந்தால்தானே!

நடக்கும் போதே ஏனோ அம்மாவை நினைத்துக் கொண்டான். அம்மாவுக்குத்தான் அவன் மீது எத்தனை அன்பு.

சின்ன வயசிலேயே கணவனை இழந்து, உறவினர்களின் ஆதரவும் இல்லாமல் தன்னந்தனியாக நின்று, அவனைப் பொறியியலுக்குப் படிக்க வைத்து, அவன் திறமையால், ஆற்றலால் இன்று வானத்தையே வில்லாக வளைக்கிறான்.

'பான்ஆம்' கவுண்டர் முன் போய் நின்றான்.

இரண்டு நிமிடத்தில் வேலை முடிந்தது.

டிக்கெட் தாளைக் கிழித்துக் கொண்டு போர்டிங் கார்டைக் கொடுத்தார்கள். பெற்றுக் கொண்டு, விமானம் புறப்பட எவ்வளவு நேரம் இருக்கிறது என்று கணக்குப் பார்த்துக் கொண்டே சற்று ஒதுங்கி நின்றான்.

வேடிக்கை பார்க்கத் துவங்கினான். எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காத லண்டன் விமான நிலையம். கிழக்கு மேற்குத் துருவங்களை இணைக்கும் பாலம்.

சின்னக் குழந்தைகள் இரண்டு மிகவும் குஷியாகக் கோக்கோ கோலா குடிப்பதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். கைக்கெடிகாரத்தைப் பார்த்தான். இன்னும் இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டுமா?

பொறுமையில்லாமல் இருந்தான் பிரபு.

''எக்ஸ்க்யூஸ் மி.'' பின்னால் இருந்து குரல் கேட்டது.

சடக்கென்று திரும்பிப் பார்த்தான்.

மின்னலடித்தாற் போல் இருந்தது.

ஒரு பெண், அழகான பெண் நின்று கொண்டிருந்தாள்.

ஒரே பார்வையில் அவள் பூரணமாக அவன் மனத்தில் பதிந்து விட்டாள்.

பலாச்சுளை நிறம்- ஐந்தடிக்கு மேல் நிகு நிகுவென்று வளர்ந்திருந்தாள். தாமரைப்பூ இதழ் விரிக்கிற மாதிரி அழகான முகம்.

காதோர முடிக்கற்றைகள் சிலும்பியிருந்தாலும் அதுவும் ஒரு பொலிவைக் கொடுத்தது.

திரண்டிருந்த இளமைப் பூரிப்புகள் அடக்கமாய் ஆடைக்குள்ளிருந்த போதும் அமர்க்களமாகத் தோன்றின.

அவள் மீண்டும், ''எக்ஸ்கியூஸ் மி சார்'' என்றாள்.

''என்ன கேட்டீங்க?'' சுதாரித்துக் கொண்டான் பிரபு...

''எனக்கு இது முதல் பயணம்.''

''ஒகே...''

''பம்பாயிலிருந்து வந்தேன்...''

''சரி.''

''சிக்காக்கோவுக்கு விமானம் மாற்ற வேண்டும். சற்று உதவி செய்வீர்களா? உங்களைப் பார்த்தால் நம்ம ஊர்க் காரர் மாதிரி இருந்தது. அதனால்தான் உங்களைத் தொந்தரவு செய்கிறேன்.''

''ஓ! நம்ம ஊர்க்காரர் என்று என் நெற்றியில் எழுதியிருக்கிறதா?''

சிரிப்பதா கூடாதா என்ற சந்தேகத் தில் நெளிந்தாள் அவள்.

''டிக்கெட்டைக் கொடுங்கள்.'' கொடுத்தாள்.

பெற்றுக் கொண்டு, புரட்டிப் பார்த் தான்.

மிஸ் சந்தியா என்று போட் டிருந்தது.

''பெயரும் அழகாய்த்தான் இருக்கு' மனத்துக்குள் நினைத்துக் கொண்டான்.

''வாங்க'' என்றான்.

கூடவே பின் தொடர்ந்தாள்.

கவுண்டருக்குப் போனான். டிக்கெட் பாஸ்போர்ட் இத்தியாதியை ஒரு கணம் பார்த்துவிட்டு, கம்ப்யூட்ட ரில் ஒரு தட்டுத் தட்டினான் பணியாள்.

போர்டிங் கார்டு மேஜை முன் வந்து விழுந்தது.

அதைப் பெற்றுக் கொண்டு ஓரக் கண்ணால் இருக்கை எண்ணைப் பார்த்தான்.

இனம் தெரியாத மகிழ்ச்சி அவனைத் திணற அடித்தது.

அவனுக்கு அடுத்த சீட் அவளுக்கு.

பவ்யமாக அவளிடம் டிக்கெட்டை நீட்டினான்.

''ரொம்ப நன்றிங்க...''

உதட்டில் இருந்து வரவில்லை. உள்ளத்திலிருந்து வந்தது என்பதை உணர்ந்தான்.

எந்தக் கேட்டில் போக வேண்டும் என்பதற்காக விளம்பர போர்டை அண்ணாந்து பார்த்தாள்.

''கவலைப்படாதீங்க... நானும் அதே விமானத்தில்தான் சிக்காகோ போறேன். இன்னும் இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டும்.''

''அப்படியா...'' மகிழ்ந்தாள்.

''காபி குடிக்கிற பழக்கம் உண்டா?''

சிரித்துக் கொண்டே தலை யாட்டினாள்.

''வாங்க, ரெஸ்டாரண்டுக்குப் போகலாம்...''

அவனைத் தொடர்ந்தாள்.

அவனுக்கு ரொம்பவும் மகிழ்ச்சி யாய் இருந்தது.

மூலையில் உள்ள மேஜையைத் தேர்ந்தெடுத்து உட்கார்ந்தார்கள்.

''இங்கேயெல்லாம் சர்வ் செய்ய மாட்டார்கள்... நாமதான் போய் வாங்கி வரணும்'' என்று சொல்லி விட்டு எழுந்தான்.

''நானும் வரவா?''

''வேண்டாம்! நீங்கள் உட்கார்ந் திருங்கள்...''

பிரபு உள்ளே சென்று இனிப்பு ரொட்டிகளும், காபிக்குவளைகளும் எடுத்து வந்தான்.



''சார், உங்களுக்குத் தொந்திரவு''. என்று உபசார வார்த்தை சொன்னாள்.

''இதில் என்ன தொந்தரவு?'' ரொட்டியை அவள் கடித்துச் சாப்பிடும் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அழகான கன்னக் கதப்பு இரண்டும் லேசாய் உப்பி மினுமினுக்க சிவப்பான சின்ன உதடுகளில் ரொட்டி கடிக்க பார்த்தான்.

வெளிர் மஞ்சளில் நீலப் பூக்கள் இறைத்த சேலையும், நீல நிறப்ள வுஸ¬ம் அணிந்து தாழம்பூ மடல் மாதிரி ஜொலித்தாள்.

தன்னை அவன் ஆராய்கிறான் என்பதை அவள் உணரவே செய்தாள்.

''என் பெயர் சந்தியா...''

''பிரபு...''

அவனே காபி கலந்து கொடுத்தான்... பெற்றுக் கொண்டாள்..

அவனுக்கே சந்தேகமாக இருந்தது.

அவனா...? ஒரு பெண்ணுக்கு விழுந்து விழுந்து உபசாரம் செய்கிறான்.

இதுவரை எந்தப் பெண்ணையும் அவன் ஏறெடுத்துக் கூடப்பார்த்தது இல்லை.

அவனுக்குத் தெரிந்ததெல்லாம நேரம், உழைப்பு, முன்னேற்றம் இவ்வளவுதான்.

சரளமாகப் பேசிக்கொண்டிருந்த போது தெரிந்தது...

சந்தியா. ஓர் இளம் பாடகி. அமெரிக்காவிற்குக் கச்சேரிக்குச் செல்கிறாள். பக்கவாத்தியக் கலைஞர்கள் வேறு விமானத்தில் சென்று விட்டார்கள். எனவே இவள் தனியாகப் பயணம் செய்ய வேண்டியதாகி விட்டது.

''நீங்கள் நன்றாகப் பாடுவீர்களா சந்தியா?''

''அதை மற்றவர்கள் சொல்ல வேண்டும். வானொலி, தொலைக் காட்சியில் என் பேட்டியைக் கூடப் படித்ததில்லையா?''

மூளையைக் கசக்கிப் பார்த்தான். இந்த மாதிரி பக்கங்களை ஒதுக்கித் தள்ளியது எவ்வளவு தவறு என்று இப்போது யோசித்தான்.

விமானம் புறப்படும் அறிவிப்பு ஒலித்தது.

''போகலாமா?''

''ஓகே...''

அவனை அடியொற்றி நடந்தாள். மறுபடியும் டிக்கெட்டுகள் போர்டிங் கார்டுகள் பரிசோதனை முடிந்து இடத்தைத் தேடிப் பிடித்து உட்கார்ந்தான் பிரபு.

அருகில் உட்கார வந்த சந்தியாவைப் பார்த்து, ''ஓ, உங்க சீட் இங்கே தானா?'' என்று தெரியாதவன் போலப் பாவலா செய்தான்.

புன்முறுவலோடு அருகே உட்கார்ந்தாள்.

விமானத்தில் பயணம் செய்த சில தமிழர்கள் சந்தியாவிடம் வந்து, ''வணக்கம்மா... எங்கே கச்சேரி?'' என்று விசாரித்தார்கள்...

சில பெண்கள், ''உங்க பாட்டுன்னா எனக்கு உயிர்'' என்று சொன்னார்கள்...

பவ்யமாக அவர்கள் பாராட்டுகளை ஏற்றுக்கொண்டாள் சந்தியா.

பிரபுவுக்கு வெட்கமாக இருந்தது. இவ்வளவு பிரபலமான பாடகியைப் பற்றி ஒன்றும் தெரியாத தன் அறியாமையை எண்ணி வருந்தினான்.

அதே சமயம் அவளோடு பயணம் செய்யும் வாய்ப்பு கிடைத்ததற்காக அமோக மகிழ்ச்சி அடைந்தான்.

அறிவிப்புகளுக்குப் பிறகு விமானம் மேலேறிப் பறக்கத் துவங்கியது.

''இங்கிருந்து எவ்வளவு நேரப் பயணம்?''

''எட்டு மணி நேரம்'' என்று சொன்ன பிரபுவுக்கு இந்தப் பயணம் முடிவில்லாமல் நீண்டு கொண்டே போனால் எப்படி மகிழ்ச்சியாய் இருக்கும் என்று எண்ணினான்.

சாக்லெட்டுகள், குளிர் நீர், யூடிகோலன் மணத்தோடு இளம் கதகதப்புடன் தேங்காய்ப் பூத்துண்டு வரிசையாக வந்து கொண்டேயிருந்தது.

அவர்கள் அருகே வந்த ஒரு ஹோஸ்டஸ், ''நல்வரவு! இனிய இந்திய இளம் தம்பதிகளே'' என்று வாழ்த்திவிட்டு சடுதியில் அந்த இடத்தைவிட்டு அகன்றாள்.

பதறிப்போனான் பிரபு. அந்த ஹோஸ்டஸைக் கூப்பிட யத்தனித்தான்!

சந்தியா அதைக் கண்டுகொள்ளவேயில்லை.

சந்தியா அதை அங்கீகரிக்கிறாளா?

நினைக்கவே இனித்தது அவனுக்கு. அந்த ஹோஸ்டஸ் மறுமுறையும் அந்தப் பக்கம் வரவேயில்லை.

சந்தியாவுக்குச் சின்னச் சின்ன உதவிகள் செய்தான்.

கலகலவென்ற சிரிப்பொலியுடன் கள்ளமில்லாத வகையில் அவள் பழகியது அவனை வெகுவாக ஈர்த்து விட்டது.

உணவு பரிமாறி முடிந்ததும் ஒரு ஆங்கிலப் படம் திரையிடப்பட்டது.

விளக்கெல்லாம் அணைக்கப் பட்டது.

உரையாடல்களைக் கேட்கக் கருவிகள் கொடுத்தார்கள்.

அதைப் பொருத்திக் கொள்ள சந்தியாவுக்கு உதவினான்.

அவ்வளவு அருகில் அழகிய அந்த காது மடல்களைப் பார்த்ததும் கிறங்கிப் போனான். அதை ஆசை தீரத் தொட வேண்டும், வருடிக் கொடுக்க வேண்டும், செல்லமாகக் கிள்ள வேண்டும். அவன் மனசு துடியாய்த் துடித்தது.

திரையில் படம் ஓடிக் கொண்டிருந்தது.

அது ஒரு இளம் காதலர்களைப் பற்றிய கதை.

சந்தியா ஒன்றிப் போய் விட்டாள்.

படம் முடிந்ததும் எல்லாரும் சற்றே கண் அயரத் தொடங்கி விட்டார்கள்.

சந்தியா கண்களை மூடியவாறு இருப்பதைப் பக்கவாட்டில் பார்த்தான்.

பிரபுவுக்குத் தூக்கம் வரவில்லை. ஒரு கணம் - ஒரே ஒரு கணம் அசந்தர்ப்பமாகத் தூக்கத்தில் அவன் மீது சாய மாட்டாளா என்று ஏங்கத் தொடங்கினான்.

அவனுக்கே வியப்பாக இருந்தது.

பிரபுவா?

இதுவரை எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பார்க்காத பிரபுவா இப்படி ஏங்குகிறான்.

எதற்கும் நேரம் வரவேண்டும் என்பது இதுதானா?

அம்மா நச்சரித்துக் கொண்டிருந்தார்களே அந்த நேரம் நெருங்கி விட்டதா?

யோசித்தவாறே இருந்த பிரபு கண் அயரத் தொடங்கி விட்டான்.

திடீரென்று விமானத்தில் பரபரப்பு.

''விமானம் சிகாகோவை நெருங்கிக் கொண்டிருக்கிறது'' என்ற அறிவிப்பு ஒலித்தது.

அவசர அவசரமாகக் கண்ணைத் தேய்த்துக் கொண்டு பக்கத்துச் சீட்டைப் பார்த்தான்.

சந்தியா புத்தம் புது மலராக இருந்தாள்.

முகம் கழுவி, தலை வாரிப் பவுடர் பூசி, மையிட்டு ஒயிலாக உட்கார்ந்திருந்தாள்.

அவரைகள் நிறைந்தது!

வளரும் குழந்தைகள் ஆடியோடி நீண்ட நேரம் விளையாட சக்தி பெற்றிருக்கின்றன. அந்தச் சக்தி சேமிப்பின் ரகசியம் என்ன?

உடல் ஆரோக்கியத்தை வளர்க்கிறது ஆல்போ-ஸாங்க் என்ற சத்து மிகுந்த டானிக். எல்லா வயதினருக்கும் ஏற்றது. அதிலுள்ள மூலிகை சத்தும், தாதுப் பொருள்களும் உணவுக்கு உதவுகின்றவை.



இப்போது
தகர டப்பாக்களில்
200 கி. & 400 கி.
அளவில்
கிடைக்கிறது.

J.& J. DeChane
Laboratories Private Limited
4-1-324 Residency Road
Hyderabad - 500 001 India

''காலை வணக்கம்...''

மெலிதாகச் சிரித்தாள். ஆரோக்கியமான ஈறுகள் தெரிந்தன.

விமான நிலையத்தில் தேவைப்பட்டால் உதவி செய்வதாகத் தானே உறுதி அளித்தான்.

''நன்றி'' என்று சொல்லிச் சிரித்தாள்.

''நாளை அவசியம் என் கச்சேரிக்கு வாங்க...'' அன்போடு அழைத்தாள். இடத்தின் பெயரையும் சொன்னாள்.

''அவசியம் வருகிறேன்'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னான்.

சிகாகோ விமான நிலைய வாசலில் எப்போதும் போல் பரபரப்பு.

சந்தியாவை வரவேற்க ஒரு சிறு கும்பல் வந்திருந்தது.

பிரபு தயக்கத்துடன் விடை பெற்றுக் கொண்டான்.

வந்த அன்றே பிரபுவின் வேலை முடிந்துவிட்டது.

மறுநாள் எப்போது வரும் சந்தியாவைப் பார்க்கலாம் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தான்.

இடையில் ஒரு முறை சென்னையில் அம்மாவோடு பேசும் போது, ''உன் மருமகளைத் தேர்ந்தெடுத்துவிட்டேன்'' என்று சொல்லலாமா என்று நினைத்து ஆசையை அடக்கிக் கொண்டான்.

கச்சேரி முடிந்ததும் ஒரு நல்ல பரிசாக அவளுக்குத் தருவதற்காக கடை வீதியெல்லாம் அலைந்து ஒரு அழகிய வைர மோதிரத்தை வாங்கினான்.

தானே அதை அவள் கையில் அணிவிக்கும் பாக்கியம் கிடைத்தால் எப்படி இருக்கும்' என்று கற்பனை செய்து பார்த்தான்.

அரங்கம் நிரம்பி வழிந்தது. நல்ல வேளையாக முதல் வரிசையில் உட்கார அவனுக்கு டிக்கெட் கிடைத்தது.

இசை மழையில் அவன் நனைந்தான்.

இசைக்கு இவ்வளவு சகதி இருக்கிறதா?

அவனுக்கே வியப்பாக இருந்தது. தான் இத்தனை நாள் எவ்வளவு விஷயங்களை இழந்திருக்கிறோம்.

தோடி, ரஞ்சனி, கல்யாணி, ஹேமவதி என்று ராகங்கள் வந்து கொண்டேயிருந்தன.

ஒவ்வொன்றும் ஒரு அழகு தேவதையாக அந்த அரங்கையே அலங்கரித்தன.

சந்தியாவை விட்டுப் பார்வையை விலக்கவில்லை பிரபு.

மூன்று மணி நேர கச்சேரி அமுத மழையாக இருந்தது.

கச்சேரி முடிந்ததும் மேடை முன் கூட்டம் முண்டியடித்தது.

பிரபு காத்திருந்தான்.

கூட்டம் குறைந்த பின் மேடை ஏறி, ''வாழ்த்துக்கள். கச்சேரி பிரமாதம்'' என்று சொல்லி தன் அன்பளிப்பை வழங்கினான்.

தயக்கத்தோடு பெற்றுக் கொண்டாள். மறுநாள் மாலை அவள் தங்கியிருந்த இடத்தில் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு விடைபெற்றான்.

அடுத்த நாள் மாலை, சந்தியா தங்கியிருந்த விடுதிக்குச் சென்றான்.

''வாங்க! வாங்க!'' என்று வரவேற்றாள் சந்தியா.

கருநீல நிறக் கிரீம் சேலையில் அமோக அழகோடு அமர்ந்திருந்தாள்.

பார்வையில் பனித் துண்டுகளின் குளுமை.

''உங்களை நான் கச்சேரியில் நேற்று எதிர்பார்க்கவேயில்லை.''

''வராமலிருந்திருந்தால்... என்னால் அதைக் கற்பனை செய்யவே இயலவில்லை.''

''கச்சேரி எப்படியிருந்தது?''

''எப்படிச் சொல்லுவது என்று தெரியவில்லை... இந்த விஷயத்தில் நான் அரிச்சுவடி... ஆனால் அப்படியே மெய்மறந்து போனேன்...''

சூடான காபி, பிஸ்கட்... சந்தியா பரிமாறினாள்...

''உங்கள் பரிசைப் பிரித்துப் பார்த்தேன்... அப்படியே அசந்து போயிட்டேன்... எவ்வளவு உயர்ந்த பரிசு...''

''உங்கள் திறமைக்கு முன் இது சாதாரணம் மிஸ் சந்தியா...''

உரையாடல் மிகவும் சரளமாக இருந்தது.

இசையின் மேல் அவளுக்கு உள்ள பற்று, ஒரு எம்.எஸ். போலவோ, எம்.எல்.வி. போலவோ உயர வேண்டும் என்ற ஆர்வம் அவள் பேச்சிலே தென்பட்டது.

அவள் பேசப் பேச அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தொட்டால் உடைந்து போகக்கூடிய கண்ணாடி தேவதை போல் இருந்தாள்.

ஆனால் முந்தின நாட்களில் இருந்த மனநிலையிலிருந்து வேறுபட்டவனாய் இருந்தான் பிரபு.

''உங்களுக்குத் திருமணமாகி விட்டதா மிஸ்டர் பிரபு?''

எதற்காகக் கேட்கிறாள்? ஒரு கணம் அவளையே பார்த்தான். அவள் மலங்க மலங்க விழித்தாள்.

''மிஸ் சந்தியா... ஒரு உண்மையைப் பேச என் மனசு துடிக்கிறது...''

''சொல்லுங்க.''

''என்னைப் பத்தி என்ன நினைக்கறீங்க?''

''ரொம்ப உயர்வா நினைக்கறேன்.''

''உங்களை லண்டன் விமான நிலையத்தில் பார்த்ததிலிருந்து படிப்படியா கொஞ்சம் கொஞ்சமா... நீங்க என்னைக் கவர்ந்திட்டீங்க..''

மெலிதாகச் சிரித்தாள்...

''இத்தனை நாள் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்தது உங்களை அடைவதற்குத்தானோ... என்றுகூட நினைத்தேன். இன்றைக்கு உங்களைப் பார்த்து என் காதலை உங்களிடம் தெரிவிக்க எண்ணினேன்... ஆனால்...''

''ஆனால்...'' வியப்புடன் அவனைப் பார்த்தாள் சந்தியா.

''நேற்று உங்க கச்சேரியைக் கேட்டதற்குப் பிறகு என் மனசை மாற்றிக் கொண்டேன்...''

''என்ன சொல்றீங்க பிரபு?'' பதறினாள் சந்தியா.

''ஆமாங்க சந்தியா... உங்க முன்னாடி நான் தூசுக்குச் சமானம்.''

''அப்படிச் சொல்லாதீங்க பிரபு.''

''நீங்க ஒரு இசை தேவதை! உலகமே உங்களை ஆராதிக்க இருக்கிறது... இந்தச் சூழ்நிலையில், திருமண பந்தத்தில் ஆழ்த்தி உங்களைச் சிறைப் பறவையாக்க என் மனசு இடம் கொடுக்கவில்லை.''

சந்தியா பதில் பேசவில்லை.

''ஆனாலும் உங்கள் மீது என்னுள் மூண்ட தகிப்பு இன்னும் குறையவில்லை... உங்கள் இசையைப் பொருள் தெரிந்து ரசிக்கக்கூடிய பக்குவமாவது பெற்ற பிறகு உங்களை வந்து சந்தித்து காதலுக்காக யாசிப்பேன்... அதுவரை விடைபெறுகிறேன் சந்தியா!''

எழுந்து கொண்டான்.

பதில் பேசாமல் அந்த விசித்திரமான விசிறியை அனுப்பி வைத்தாள் சந்தியா.

DEEPAVALI GREETINGS

ANAND CINE SERVICE

Specialists in Cine Out-Door Equipments

No.2, SARANGAPANI STREET,

T.NAGAR :: MADRAS - 600 017.

Phone : 866912 & 864114



நாட்டிலே உங்க வீட்டிலே - உயர் தரத்திலே இன் சுவையிலே
முந்தி தருவதிலே நிகரிலே அகர்வால் பவன்
இனிப்புக்கு வேறு நிகரில்லே!

அகர்வால் பவன்

128, கோவிந்தப்ப நாயக்கன் தெரு
சென்னை-600 001, போன்: 569219, 569349

ELEGANT

சுத்தம் சே(ா)று போடும்!

தெருவைச் சுத்தமாக வைத்திருங்-கள்
தெருவைச் சுத்தமாக வைத்திருங்-கள்
சே! ரோட்ல விக்கறதை வாங்கிச் சாப்பிடாதேடி! சுத்தம் தெரியலயே! இந்தா, பாதி கமர்கட்....
மனசு சுத்தமா இருந்தா போதா துங்க... எல்லாத்தையும் நம்மதா பாவிக்கணும். அதான் நம்ம பிரின்-ஸிபிள்!
எப்பவும் நான் ஒயிட் டிரஸ்தான் போடுவேன்.... எதுவும் சுத்தமா இருக்கணும் எனக்கு!
சத்துணவு மட்டும் போட்டா போதாது.... அது சுத்தமாவும் இருக்கணும்....
நம்மால சுத்துச் சூழல் கெட்டுப் போறதுன்னு பேசிக்-கறாங்களே!

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்''

என்று பெண்கள் விடுதலைக் கும்மி இசைத்தான் மகாகவி பாரதி! ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்த விந்தை மனிதர்களால் - ''கல்வியில்லை; உரிமையில்லை; பெண்களுக்குக் கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்'' என்று ஆதங்கப்பட்டான் அவனது தாசனார் கனக சுப்புரத்தினம்! எனினும்

''பெண்களால் முன்னேறக் கூடும் - நம்
வண்டமிழ் நாடும்எந் நாடும்!''

என்ற ஆதர்சம் அவன் உள்ளத்தில் சுடர்விட்டது!

''அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பா?'' என்று
அரைமூளை மனிதரின்று கேட்பார்! ஏட்டுத்
துடுப்பாலே இலக்கியத்துப் படகை அன்று
தொலைதூரம் செலுத்தியவள் பெண்தான்''

விண்வெளியின் எடையற்ற நிலையில் குதூகலிக்கும் ரீ ஸெட்டான்

விண்வெளி வீராங்கனையர்

நெல்லை. சு. முத்து

என்று ஒரு கவிஞர் பெருமை பாடுகிறார்! ஆனால் இன்றோ

''வாணிகம் செய்யலாம் பெண்கள் - நல்
வானவூர்தி ஓட்டலாம் பெண்கள்''

என்ற பாவேந்தனார் பரிந்துரைக்கு இணங்க - ஆகாய விமானம், மற்றும் ஏவூர்தி (ராக்கெட்) முதலான வான், விண்ணூர்திகளை ஓட்டி உலக வரலாற்றில் அழியாச் சிறப்பிடம் வகிக்கின்றனர் பெண்கள்!

நம் தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்தால் - வானவூர்தி ஓட்டின முதல் பெண்மணி - சீவக சிந்தாமணியில் வரும் ஏமாங்கத நாட்டு அரசாணி விசயை என்று சொல்லத் தோன்றும்! மயிற்பொறியினை இயக்கி வான்வழி பறந்து சென்ற வீராங்கனை அல்லவா? திருத்தக்கத் தேவர் பாடுவது கற்பனைக் காவியமோ, சிந்தனைச் சொல்லோவியமோ? இலக்கியத்தில் வரும் பாநயம் நன்றாகவே இருக்கிறது.

உலக வரலாற்றினைப் புரட்டிப் பார்த்தால் புரியும்! புதிய கண்டுபிடிப்புகள், புதுப்புனைவுகளில் விஞ்ஞானிகளுக்கு இணைக்கரம் கொடுத்து - ஆராச்சியில் உதவியவர்கள் அவர்தம் மனைவி அல்லது சகோதரிமாராகத் தானிருக்கும்! 1781-ஆம் ஆண்டு மார்ச் 13-ஆம் நாள் யுரேனஸ் எனும் ஏழாவது கிரகத்தைக் கண்டு அறிவித்த வில்லியம் ஹெர்ஷெல் எனும் ஜெர்மானிய வானவியலறிஞர் வரலாற்றைக் குறிப்பிடும் போதெல்லாம் - அவரது ஆராய்ச்சிப் பணியில் உதவியாளராகவே கடமைபுரிந்த அவர் சகோதரி கரோலின் பற்றி எழுதாதவர் இல்லை! 1877-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் செவ்வாய்க் கிரகத்தின் ஃபோபோஸ் (Phobos) என்ற துணைக்கோள் கண்டுபிடிப்பில் அசாஃப் ஹாலுக்கு (Asaph Hall) முழு உற்சாகமும் ஊக்கமும் வழங்கி ஒத்துழைத்த அவர் தம் மனைவி ஏஞ்சலின் ஸ்டிக்னி (Angeline Stickney)யை மறக்க முடியுமா? இன்றும் மாரீனர்-9 எனும் அமெரிக்க விண்கலம், ஃபோபோஸில் கண்டறிவித்த பெரும் பள்ளத்திற்கு 'ஸ்டிக்னி' என்றல்லவா பெயர் சூட்டப் பெற்றுள்ளது!

அவ்வளவு ஏன்? இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆகாய விமானத்தை வடிவமைக்கும் ஆய்வில் முனைப்பாக ஈடுபட்டிருந்த வேளை - ரைட் சகோதரர்களுக்கு ஏந்தலாக உதவிய அவர் தம் தங்கை காதரினைக் குறிப்பிடாமல் எப்படி?

உலகின் முதல் பெண் விமானி: ஆகாய விமானம் முழு வடிவுபெற்று வானில் பறக்கத் தொடங்கிய ஏழாண்டுகளுக்குள் - 1910-இல் தமது 'கர்டிஸ்' (Curtiss) விமானத்தில் பறந்த உலகின் முதல் வீராங்கனை பிளாஞ்செ ஸ்காட் (Blanche Scott) ஆவர்!

1903-ஆம் ஆண்டு ரைட் சகோதரர்கள் முதல் முதலில் விமானத்தை ஓட்டிய காலத்தில் கைக்குழந்தையாக இருந்த அமெலியா ஏர்ஹார்ட் (Amelia Earhart) அமெரிக்காவில் கான்

முதல் அமெரிக்க விண்வெளி
வீரப் பெண்மணி சாலி ஏ. ரைடு.

சாஸ் மாநிலத்தைச் சார்ந்தவர்! அம்மங்கையே 1920-இல் தைரியமாக வானிற் பறந்து திரும்பினார்! 1932-ஆம் ஆண்டு தனியாகவே அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து பறந்த தோடல்லாமல், 1935-இல் ஹவாயிலிருந்து கலிஃபோர்னியா வரை பசிபிக் சமுத்திரத்தின் மேலாகத் தனிமையில் பயணம் புரிந்து சாதனை நிகழ்த்தினார்.

லாக்ஹீட் எலக்ட்ரா (Lockheed Electra) கம்பெனி தயாரித்த இரட்டைப் பொறி விமானத்தில் ஏறி நி லநடுக்கோட்டின் மேலாக உலகு சுற்றிய ஏர்ஹார்ட் ஏறத்தாழ 35000 கிலோ மீட்டர்கள் பறந்திருப்பார். பசிபிக் கடலின் மேல் வைத்து எதிர்பாரா விதத்தில் காணாமலே போய் விட்டார்! அவரே இன்றும் அமெரிக்க வானூர்திப் பெண்மணிகளுள் தலை சிறந்த வீராங்கனையாக மதிக்கப்பட்டு வருகிறார்.

விண்வெளி உடையில்
ஜீடித் ஏ. ரங்கின்

ஏர்ஹார்ட் நெடுந்தொலைவுப் பயணங்கள் ஆற்றிச் சாதனை புரிந்தார் என்றால் அவருக்குப்பின் அதிவேக விமானங்களை ஓட்டிச் சாகசம் புரிந்தவர் - ஜாக்குலின் கோச்ரான் (Jacqueline Cochran) எனும் வர்த்தகப் பிரமுகி! சொந்தமாக நடத்திவந்த அலங்காரப் பொருள் உற்பத்திச் சாலையின் அலுவல்பேரில் உலகம் முழுதும் சுற்றியவர் இப் பெண்மணி! இரண்டாம் உலகப் பெரும் போரின்போது இங்கிலாந்தின் மேலாகக் குண்டுவீசி விமானம் ஓட்டிச் சென்ற விமானியும் இவரே! மே, 1953-இல் சக் யீகர் (Chuck Yeager) என்ற விமானியுடன் காற்றினும் அதிவேகத்தில் அதாவது மணிக்கு 1000 கிலோமீட்டர் விரைவில் பறந்து சென்று புகழ் பெற்றார்!

இப்படியாகத் தொடங்கிய விண்வெளி வீராங்கனையர் வரலாற்றில் - 1960 களில் ஜெர்ரி கோப் (Jerry Cobb) எனும் பெண்மணியே அமெரிக்காவின் மெர்க்குரி (Mercury) விண்வெளித் திட்டப் பயணியர் பயிற்சிக்கு முதல் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்திட்டத்தின் கீழ் பயிற்சிபெற விரும்புவோர் குறைந்த பட்சம் பட்டதாரியாக இருக்கவேண்டும். கணிதம், உயிரியல், உடலியல் அறிவும், தொழில் நுட்ப அல்லது பொறியியல் துறையில் ஆராய்ச்சி அநுபவமும், காற்றூர்தி, நீர்மூழ்கிக் கப்பல் போன்றன இயக்கும் திறமும் பெற்றிருத்தல் அவசியம்! கெடுபிடியான இத்தனைத் தகுதிகளுடன் விண்ணப்பிக்கப் பலராலும் இயலாது போகவே - அத்திட்டமும் அரைகுறையில் நின்று போனது! இப்பயிற்சியில் நுழைந்த 20 பெண்களும் அனுபவித்த அறிவியல் சோதனைகள் கொஞ்சநஞ்சமல்ல!

விண்வெளிப் பயணத் தேர்வின்போது - பயிற்சியாளர் தம் காதுகள் இரண்டிலும் பனிஉருகிய குளிர்நீரைச் செலுத்துவார்கள்! மூன்றடி நீள ரப்பர் குழாயைக்கூட உணவுக் குழல் வழி இறக்குவார்களாம்!

உலகின் முதல் விண்வெளி வீராங்கனை!: அமெரிக்கத் திட்டங்கள் பலவும் கடினத் தடைகளை எதிர்த்து வளர்ந்து வந்த நிலை இவ்வாறாக - 1963-ஆம் ஆண்டு ஜூன் 16-ஆம் நாள் வாலெண்டினா வி. தெரஸ்கோவா (Valentina v. Tereshkova) எனும் ரஷிய வீராங்கனை வாஸ்டாக்-6 (Vostok-6) மூலம் விண்வெளிப் பயணம் புரிந்து - உலகின் முதல் விண்வெளிப் பெண்மணி எனும் சிறப்புப் பெயரைத் தட்டிச் சென்றார். இத்தனைக்கும் அவர் ஒரு சாதாரணப் பஞ்சாலை ஊழியர்தாம்! தொழில் நுட்பப் பின்னணியும் பெரிதாக இல்லை! ஆயினும் சாதனை புரியவேண்டும் என்ற ஆர்வம், ''தோன்றிற் புகழொடு தோன்றுக'' எனும் உத்வேகம் வாலெண்டினாவிடம் நிறையவே இருந்தது! ''இதோ பாருங்கள்; நிலத்திலும், கடலிலும், ஆகாயத்திலும் சோவியத் பெண்கள் ஆண்களுக்குச் சரிநிகர் சமானமானவர்'' என்று உற்சாக மேலீட்டால் அறிவித்தார் அவர்!

ஏறத்தாழ 20 ஆண்டுகள் கழித்து உலகின் இரண்டாவது விண்வெளிப் பெண்மணி எனும் பெயரைத் தக்க வைத்துக் கொண்டவரும், இன்னொரு ரஷிய மங்கையே! 'ஸ்வெத்லேனா, ஒய். சவித்ஸ்கயா (Svetlana Y. Savitskaya) என்ற அப் பெண் ஆகஸ்டு 19, 1982-இல் லியோனிட் பாபொவ் மற்றும் அலெக்சாண்டர் செரிப்ரொவ் ஆகிய இரண்டு வீரருடன் சோயுஸ்-டி.7 (Soyuz-T-7) எனும் விண்கலத்தில் புவிசுற்றித் திரும்பினார்! இரண்டுமுறை விண்வெளி சென்ற முதல் பெண்மணியும் இவர்தான்! ஜூலை 17, 1984-இல் மீண்டும் விண்வெளி சென்றதோடல்லாமல் - விண்கலத்திற்கு வெளியே இறங்கி வெற்றிடத்தில் மிதந்து சோதனைகள் புரிந்த உலகின் முதல் பெணி எனும் உபரிச் சிறப்பும் இவரையே சாரும்!

அமெரிக்க விண்வெளிப் பெண்டிர் அறுவர்: முதலிரண்டு ரஷியப் பெண் பயணியரைத் தொடர்ந்து அமெரிக்க வீராங்கனையர் பலர் விண் பயணத்திற்குத் தயாராயினர். அமெரிக்கா விண்வெளி ஓடங்களில் பயணிக்கப் புதிய வீரர்கள் தேர்வு நடத்தியது! 5680 விண்ணப்பதாரரில் 1251 பெண்டிரும் அடங்குவர். எனினும் தேர்ச்சி பெற்ற 35 விண்வெளி வீரர்களுள் 6 பேர் மகளிராவர்!

சாலி. ஏ. ரைடு (Sally. A. Ride), ஜூடித். ஏ. ரஸ்னிக் (Judith A. Resnik), காதரின். டி. சல்லிவான் (Kathryn D. Sullivan), அன்னா. எல். ஃபிஷர் (Anna L. Fisher), எம்.ரீ. செட்டான் (M. Rhea Seddon), ஷானன் டபிள்யூ. லூசிட் (Shannon. W. Lucid) ஆகிய ஆறு வீர மங்கையரும் முறையே விண்வெளி ஓடப் பயண எண்:7 (ஜூன் 18, 1983), 12 (ஆகஸ்டு 30, 1984), 13 (அக்டோபர் 5, 1984), 14 (நவம்பர் 8, 1984), 16 (ஏப்ரல் 12, 1985), 18 (ஜூன் 17, 1985)-ஆகியவற்றின் போது தத்தம் முதற் பயணத்தை மேற்கொண்டனர். முதலாவது அமெரிக்க விண்வெளி வீராங்கனை எனும் சிறப்புக்குரியர் சாலி. ஏ. ரைடு ஆவார்.

இவரே விண்வெளி ஓடத்தின் 13-ஆம் பயணத்தில் காதரின் சல்லிவானுடன் தமது இரண்டாம் பயணத்தையும் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இருமுறை விண் பயணம் புரிந்த முதல் அமெரிக்க நங்கையும் இவர்தான்! அப் பயணத்தின்போது காதரின் சல்லிவான் விண்கலம் விட்டு வெளியில் இறங்கி 3½ மணிநேரம் விண்வெளியில் அந்தரத்தில் பரிசோதனைகள் புரிந்தார்! ''விண்கலப் புறச் செயல்பாடு'' (Extra- Vehicular activity) ஆற்றிய முதல் அமெரிக்க வீராங்கனை காதரின். டி. சல்லிவான் ஆவார்.

இந்த ஆறு மங்கையரைத் தொடர்ந்து அக்டோபர் 30 1985- இல் 'சாலஞ்சர்' (Challenger) விண்வெளி ஓடத்தில் உலகு சுற்றிய 7-வது அமெரிக்கப் பெண்மணி போன்னி. ஜே. டன்பர் (Bonnic. J. Dunbar)! நவம்பர் 26, 1985-இல் ''அட்லாண்டி'' (Atlantis) மூலம் விண்வெளியில் பயணித்த எட்டாவது அமெரிக்கப் பெண், மேரி. எல். க்ளீவ் (Mary. L. Cleave)! (சமீபத்தில் வெள்ளிக்கோள் ஆய்வுக்கு 'மெகல்லன்' (Megallan) எனும் விண்கலத்தைச் சுமந்து சென்ற விண்வெளி ஓடத்தின் 30-ஆம் பயணத்தில் பங்கு பெற்றவரும் இவரே.)

இத்தனைக்கும் பிறகு தான் அந்த அகோர சம்பவம் நிகழ்ந்தது - 'சாலஞ்சர்' விபத்து, ஜனவரி 28, 1986 எனும் கறுப்பு நாளில்! அதில் முதற் பயணம் புரிந்த ஒன்பதாம் அமெரிக்கப் பெண்மணி ஷாரன். சி. மக் அலீஃப் (Sharon. C. Mc Auliffe) எனும் பள்ளி ஆசிரியை மற்றும் தமது இரண்டாம் பயணம் மேற்கொண்ட ஜூடித் ஏ. ரஸ்னிக் ஆகிய இரண்டு வீராங்கனையர் உட்பட ஏழு வீரர்களைச் சுமந்து சென்ற விண்வெளி ஓடம் - கிளம்பிய ஒருசில விநாடிகளுக்குள் நடுவானில் வெடித்துச் சிதறிற்று! தாய் நாட்டு வளர்ச்சிக்குத் தம் உயிரை அர்ப்பணம் செய்த வீரத் தியாகிகள் பலருள் - விஞ்ஞான வேள்வியில் வீரமரணம் எய்திய அந்த இரு பெண்மணிகள் எட்டாப் புகழொடு மானிட நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கின்றனர்! விண்வெளி வரலாறு வாழுமட்டும் அவர்கள் தம் ஆராய்ச்சி வேட்கையும் அழியாது வாழும்!

விண் பயணப் பயிற்சி: விண்வெளிப் பயணம் என்பது எல்லாருக்கும் வாய்க்காது! அதற்குரிய தேர்வுப் பரிசோதனைகள் மிகக் கடுமையானவை!

ஏவூர்தி மூலம் விண்ணிற் கிளம்பும்போது அதன் விரைவு முடுக்கத்தினால் உச்சந்தலையில் இரத்த ஓட்டம் உள்ளங்கால் நோக்கிப் புடைத்துக்கொண்டு இறங்கிப் பாயும்! உடல் தளர்ச்சி, தலைக்கிறக்கம், குமட்டல் போன்ற எத்தனையோ உபாதைகள் தோன்றும்! இத்தகைய அதீத நிலைகளைத் தாங்கிக் கொள்ள பழகவேண்டும். இதற்குரிய பயற்சியின் போது ஒரு பெரிய குடை ராட்டினத்தில் நிறுத்தி மின்விசிறி வேகத்தில் பயிற்சியாளரைச் சுழற்றுவார்கள்! மைய விலக்கு விசை (Centrifugal force) ஊட்டும் அழுத்தத்தைச் சகித்துக் கொள்ளவேண்டும்!

மிதி எந்திரங்கள் (treadmills), மற்றும் சைக்கிள்களை நிலைத்த இடத்திலேயே மணிக்கணக்கில் இடையறாது ஓட்டிப் பழகவேண்டும்! கால்தசைகளுக்கு வலுவூட்டும் பயிற்சி இது!

''பொறுமைக்கு நிலமகள்'' என்று பெண் தெய்வங்களையே குறிப்பிடுகிறோம்! விண்வெளி வீராங்கனைகளும் பொறுமையி ல் பூமாதேவியாக, சகிப்புத் திறனில் சீதாதேவியாக இருக்கவேண்டுவது அவசியம்! ஏனெனில் வெறுமையான விண்வெளியில் பயணம் செய்யும்போது 'போர்' அடிக்கும்! சக வீரர்கள் முகத்தையே எத்தனை நாழிதான்

(இ.வ) மார்கரெட் ரீ செட்டான், அன்னா எல். ஃபிஷர், ஜீடித் ஏ. ரஸ்னிக், ஷானான் லூசிட், சாலி ஏ. ரைடு, காதரின் டி. சல்லிவான்

பார்த்துக் கொண்டிருப்பது! குளிக்க, படுக்க, உண்ண மற்றும் நித்திய உடன் கழிக்க - எதிலும் அசௌகரியங்கள், அதுவும் பெண்களுக்கு சலிப்பாகவோ, ஏன் வெறுப்பாகக் கூட இருக்கும். இத்தகைய மனநிலைப் பரிசோதனைக்கென விண்வெளி வீரர்களை காற்றும் வெளிச்சமுமில்லாத இருட்டுப் பெட்டகத்தினுள் உணவுப் பொட்டணங்களுடன் போட்டு அடைத்துவிடுவார்கள்! ஒரு மாதம் காலம் அந்த ''தாழிப் பைக்குள்'' தனியாக வாழ்ந்து காட்டவேண்டும்!

தவிர படுத்த படுக்கையாகப் பத்து நாட்களேனும் கிடந்து பழகவேண்டும்! ஏனெனில் யதார்த்த விண்வெளி ஓடத்தினுள் பயணிக்கும்பொழுது எழுந்து உட்காரவோ, முழங்காலில் மண்டியிடவோ கூடாது! தலையைத் தூக்கக் கூடாது! குளிப்பது கூடக் கிடையாகக் கிடந்தவாறு தான்!

அமெரிக்க வீராங்கனை 'சாலஞ்சர்' பயணத்தில் ஜீடித் ரஸ்னிக் எடையற்ற நிலைப் பயிற்சியின் போது - கேசம் பறந்து விரிந்திருக்கும் நிலை.

பயணத்திற்கு முன்பிருநத உணவுப் பழக்கங்களைக் கட்டுப்படுத்தவேண்டும்! வயிற்றில் கிருமிகள், புழுக்கள் இல்லாதபடி காத்துக்கொள்ளவேண்டும்!

பொதுவாகவே விண்வெளிப் பயணத்தின்போது - உடலில் கால்சியம் சத்து அதிகமாகச் செலவாகும்! கால்சியம் குறைவால் - நரம்புகள் தளரும்; தசைகள் சுருங்கும்; இதயத் துடிப்பு லயம் மாறும்; குருதி உறையும் - இப்படி எத்தனையோ உடல்நலப் பிரச்சனைகள் எழும்! அதிலும் பெண்களின் உடல்வாகு மிகுதியாகப் பாதிக்கப்படும்! மாதவிடாய் கூட விலகிப் போகும்! ஆயினும் கர்ப்பிணித் தாய்மார்கள் விண் வெளியில் செல்வதால் கருவிலுள்ள குழந்தைக்குச் சேதமிராது என்று ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன. ஏனெனில் விண்வெளியின் புவி ஈர்ப்பு விசை குறைந்த சூழ்நிலையே அன்னைமணிவயிற்றிலும் நிலவுகிறதாம். ஆயினும் மகப்பேறு கழிந்த பெண்கள் விண்பயணம் மேற்கொண்டதாக வரலாறு இல்லை.

விண்வெளித் தம்பதியர்: இன்னொரு சுவையான செய்தி - அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாஸா (NASA) தேர்ந்தெடுத்த முதல் ஆறு மங்கையருள் மூவர், தம்முடன் பயின்ற சக வீரர்களையே திருமணம் புரிந்து கொண்டுள்ளனர். ரீ ஷெட்டான் - ராபர்ட் கிப்சன் ஆகியோரே முதல் விண் வெளித் தம்பதியர்! முதலில் குழந்தையும் பெற்றுக் கொண் வர்கள்! அன்னா ஃபிஷர், வில்லியம் ஃபிஷர் எனும் விண் வெளி வீரரை மணந்து இல்லறத்தில் மழலைச் செல்வமும் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் திகழ்கின்றனர். 1984-இல் ஜூடித் ரஸ்னிக்குடன் முதன்முறை பயணம் புரிந்த ஸ்டீவன் வராவ்லி எனும் விண்வெளி வீரரே, பின்னாளில் சாலி ரைடினை மனைவியாக ஏற்றுக்கொண்டவர் எனினும் சாலி ரைடு, கணவருக்கு முன்னமேயே விண்சுற்றி வந்தது குறித்து ஸ்டீவன் ஹாவ்லியிடமே வினவியபோது அவர் கூறினார்: ''அவளை மட்டும் விண் பயணத்திற்குத் தெரிவு செய்திராவிட்டால் எனக்குப் பைத்தியமே பிடித்திருக்கும்'' என்று!

1977-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் கலிஃபோர்னியாவிலுள்ள ஸ்டான்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் இயற்பியல் பயின்று வந்த சாலிரைடு, தமது 'டாக்டர்' பட்டப்பிடிப்பை முடித்ததுமே - ஆராய்ச்சித் துறையிலோ ஆசிரியப் பணியிலோ எதிர்காலத்தை அமைத்துக்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். எனினும் பத்திரிகை விளம்பரத்தின்பேரில் விண் பயணப் பயிற்சிக்கு விண்ணப்பித்ததும் நல்லதாகப் போயிற்று!

1986-இல் சாலஞ்சர் விபத்து பற்றி ஆராய அந்நாளையமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரீகன் நிறுவிய புலனாய்வு விசாரணைக் குழுவில் சாலி ரைடு உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்! அதன் பின் - நாஸா தலைமையகத்தில் வருங்காலத் திட்டங்கள், செயல்பாட்டு வழிமுறைகள் பற்றி விரிவான ஆய்வுகள் நடத்தும் பணி அவரை ஆட்கொண்டது! தமது மதியூகக் குறிப்புரைகளைத் தொகுத்து, ''நாசா தலைமையும் விண்வெளியில் அமெரிக்க எதிர்காலமும்'' (NASA Leadership and America's Future in space) எனும் அறிக்கையினைச் சமர்ப்பித்தார் - ஆகஸ்டு 1987-இல்! தற்போது மீண்டும் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக் கழகத்தின் ''பன்னாட்டுப் பாதுகாவல் மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு மைய''த்தில் (Centre for International Security and Arms Control) சேர்ந்து பணியாற்றி வருகிறார்!

பெண் பெருமை பற்றியும் பெண் கல்வி பற்றியும் பேசினால் மட்டும் போதாது! அவர்க்குள் அடங்கிக் கிடக்கும் யதார்த்த அறிவாண்மையினை, விஞ்ஞான மனப்பான்மையினை வெளிக்கொணர்ந்து பாராட்டுதல் வேண்டும்! ''ஒரு நாட்டின் வளர்ச்சியினை அறிய அதன் பெண்ணுயர்ச்சியே சிறந்த உரைகல்'' (Respect for women is the national test for progress) என்று ஓர் அறிஞர் தம் கூற்று வைரம் பாய்ந்த மொழியாகும்! ○

With Best
Compliments from :

INDIA PISTONS LIMITED
SEMBIAM : MADRAS 600 011.

Manufacturers of :

PISTONS
PISTON RINGS
CYLINDER LINERS
GUDGEON PINS AND
CIRCLIPE


கலை பெட்டகம்
தொகுப்பு-3
மேலே: 10ம் நூற்றாண்டு ஆரம்ப சோழர் காலத்திய சிலை
நகையலங்காரம்: லலிதாஸ், சென்னை
கலை பெட்டகம் தொகுப்பு 2
பண்டை காலத்து கற்காவியம்
இன்றைய லலிதாவின்
பொற்காவியம்
...என்றென்றும் ரம்மியமான
கலைப்படைப்புகள்
Lalitha
லலிதா ஜுவல்லரி மார்ட் பி. லிட்.,
பனகல் பார்க், தி.நகர், சென்னை-17.
தொலைபேசி : 445939 / 444413
Vividze 441


இப்போது இந்தியாவில் இப்போது இந்தியாவில் இப்போது இந்தியாவில் இப்போது இந்தியாவில்
International
Lux
"உலகிலேயே பெரிதும் விரும்பப்படும் மேனியெழில் பராமரிப்பு சோப்புதான் எனக்கு ஏற்றது" ஜெயப்ரதா
செழுமையான, செறிவான நுரைதரும் மேனியெழில் பராமரிப்பு, நிகரற்ற நறுமணம். இரண்டும் ஒருங்கே அமைந்த ஒரே சோப். இன்டர்நேஷனல் லக்ஸ். உலகிலே 70 நாடுகளில் சினிமா நட்சத்திரங்கள் இதையே பெரிதும் விரும்புவதில் வியப்பென்ன! இப்போது, இந்த சர்வதேச விருப்பத்தை நீங்களும் முயன்று பார்க்கலாம். இதோ, இந்தியாவிலேயே.
Lux
BEAUTY SOAP
LUX
HTA 2881
உலகெங்கும் சினிமா நட்சத்திரங்களின் அழகு சோப்.
இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமான தயாரிப்பு.

பொற்காசுத் தோட்டம்

இந்திரா செளந்தர்ராஜன்

“ராச மாணிக்கம் எங்க புள்ள?”

“டவுனுப் பக்கம் போயிருக்கு......”

“தோட்டத்துக்குப் போய்த் தண்ணி பாச்சிட்டு வாடான்னேன். அதுங் காட்டி டவுனுப் பக்கம் என்னா சோலி இவனுக்கு?”

“நான்தான் அனுப்பிச்சேன். ஒங்க வேட்டி முச்சூடும் கிழிஞ்சு இத்துப் போச்சு. புதுசு ஒண்ணை வாங்கியாரச் சொன்னேன். அப்படியே அவனுக்கும் ஒரு கால்சராயி எடுத்துக்கிடச் சொன்னேன்...”

“துட்டு ஏது பிள்ள?”

— பாவாயி மூளிக்காதை பதிலுக்குக் காட்டியபோது குஞ்சாக் கவுண்டருக்கு மனசு துண்டுபட்டது.

“வானம் பொழிஞ்சா ஒரு துயரமும் இல்லை. வருவேனாங்குது மழை..... எல்லாம் நம்ப பொல்லாத நேரம்.”

முனங்கியவாறு மம்பட்டியை எடுத்துத் தோளுக்கு வைத்தார் குஞ்சாக் கவுண்டர்.

“நானாச்சும் போய்த் தண்ணி பாய்ச்சுட்டு வரேன்...” - பேசிக்கொண்டே நகர்ந்தார்.

நீண்ட சேர்வராயன் தென்மேற்காகச் சரிந்து முடிந்த இடத்தில் ஓர் ஏக்கருக்குள் மருக் கொழுந்து மணமணக்கக் கிடந்தது குஞ்சாக்கவுண்டரின் தோட்டம்.

பத்தாள் ஆழத்திற்குப் படு பதவிசாக கிடக்கும் கிணறு அது. நீரின்மை என்பது குஞ்சாக்கவுண்டரின் தலைமுறையில் ஒரு அதிசயச் சம்பவமே! இப்பொழுது ஊறியிருக்கும் நீரோ மருக்கொழுந்துகளின் அன்றாட பசிக்கு அரை உணவு போல..... இதையாவது அதுகளுக்குக் கொடுப்போம் என்பது போல வேகமானார் கவுண்டர்.

பெத்த நாயக்கன் பாளையத்து எருமைத் தோல் கமலையின் ராட்டினம் எலி மாதிரி காச்சு மூச்சு என்று கத்த, தத்தி தத்திக் கிணற்றுக்குள் பிரவேசித்தது கமலை. மனுஷன் இளநீரை வாய்க்கு முன்னால் கவிழ்ப்பது மாதிரி நீருக்கு முன்னால் கமலை மளாரென்று கவிழ்ந்தது. நீரும் கமலைக்குள் ஏறியது. துளிநீரும் மண் குழம்பாட்டம் கமலைக்குள் பிரவேசிக்கையில் ஒரு வித்யாசமான சப்தம்.

“ணணங்... ணணங்....” -எட்டிப் பார்த்தார் கவுண்டர். கமலையைத் தவிர ஏதும் தெரியவில்லை. திரும்பவும் கயிற்றை இழுத்து விட ‘ணணங்...... ணணங்.....!’

- கமலையை வேகமாக மேலுக்கு இழுத்தார்.

நீர்க் குழம்பு வாய்க்கால் வெளியில் சரிந்து பாய்ந்த போது அடித்த சூரிய வெளிச்சத்தில் மஞ்சளாய் நாலு பெரிய புள்ளிகள் மின்னியது. நீர்க்குழம்பின் ஊடே அதிசயமாய்க் கண்ணடிக்கும் அதனை கையால் தொட்ட கவுண்டரைப் பார்த்து ‘நான்தான் கவுண்டரே அதியமான் ராஜா காலத்துப் பொற்காசு!’ - என்றது அவை.

கவுண்டர் வேகமாய்க் கிழிந்த வேட்டியில் போட்டுத் துடைத்து விட்டுப் பார்த்தார். ஏதோ முத்திரை! ஆனால் பிசகாதப் பளபளப்பு.

கவுண்டரின் ரத்தத்தில் சூடு வந்து ஏறியது. மயக்கம் பாதத்துக்குக் கீழ் வந்து தயாராய் நின்றது. திரும்பவும் கிணற்றுப்புறம் ஓடி எட்டிப் பார்த்தார். திகைப்பில் ராட்டின வளைவை அப்படியே பிடித்துக் கொண்டார். ஆவென்று திறந்த வாயோடு புதையல் பாத்திரம்!

ராசமாணிக்கம் நாலு முழ நூல் வேட்டியோடும், தனக்குத் தேவையான நீலக் கால்சராயோடும் வந்திருந்தான். அவன் தலைமுழுக்க பாவாயி தடவியிருந்த விளக்கெண்ணெய் வெயிற் கொதிப்பில் காதோரம் பாதை போட்டுச் சரிந்திருந்தது.

“எங்க ஆத்தா அப்பு?”

“தோட்டம் வரை போயிருக்குது.”

“ஆசாரி நோட்டுக்கு எம்புட்டுக் கொடுத்தான்?”

“அம்பது ரூபாதான் கொடுத்தான். வெறும் பய....”

“வெய்யாதே........ இதையாச்சும் கொடுத்தானே! உங்க அப்பு தோட்டை அடகு வெச்சது கேட்டு எகிறிக் குதிக்கும்னு நினைச்சேன். மூச்சு உடலை...”

“இந்தா சொச்சம். நான் ஒத்த ரூவா எடுத்துக்கிட்டேன். ஓலைக் கொட்டாயில படம் மாத்தியிருக்குறாங்க. பொறைக்குப் போவணும்.”

“உன் அப்பனுக்குத் தெரிஞ்சா உன்னிய துவைச்சிப்பிடும். ரெண்டாவது ஆட்டத்துக்குப் போ. நானும் போவேன்...”.

- பாவாயி நானும் போவேனுக்கு முற்றுபுள்ளியிட்ட ஸ்ததியில் கவுண்டர் பேயறைந்தவராட்டம் வீட்டுக்குள்

நுழைந்திருந்தார். அவருடைய மிரட்சி, பாவாயிருக்குள் வேறு விதமாக அர்த்த மாகியது. தான் சினிமா போகப் போவது கவலையைத் தந்து விட்டது என்று கருதிப் பேசினாள்.

''நானு போவலைங்க... சும்மா பேச்சுக்குச் சொன்னேன். நீ போடா...'' - மகனை ஒதுக்கிவிட்டுக் கவுண்டர் பக்கம் வந்தாள். கவுண்டருக்குப் பார்க்கும் இடமெல்லாம் பொற்காசாகவே தெரிந்தது.

- அதனூடே மூளையில் மின்னும் எச்சரிக்கை சிவப்பு ஒளி!

'புதையலைப் பூதம்தான் காவ காக்கும். அதை எடுத்தவனை அன்னிக்கு ராத்திரியே அது வந்து அடிச்சிப் பிடும்..... அடிச்சிப்பிடும்.... அடிச்சுப் பிடும்....'

- மண்டையைப் பலிக் கோழி யாட்டம் உசுப்பிக் கொண்டார் கவுண்டர்.

தளர்ந்த இடுப்பு வேட்டியை இறுக்கிக் கட்ட முனைந்த போது முதலாகச் சேற்றில் கண்டெடுத்த அந்த நாலு தங்க நாணயங்களும் நூறு கிராம் எடையாய் 'ணனங்' கென்று கனத்தது.

''என்னா சத்தம்?'' - பாவாயி கேட்டாள்.

''ஒண்ணுமில்லே பாத்திரம் தான்.'' - பயத்தோடு சமாளித்தார் கவுண்டர்.

சோறு உள்ளிறங்கும் பொழுதும் தங்கப் பாத்திரம் சுற்றி வந்து கும்மி கொட்டியது. அதைக் கமலைக்குள் தூக்கி வைத்து இழுக்கப் பட்ட பாடும்... பதுக்கப்பட்ட பாடும்... நல்ல நாலு வாளி தண்ணீர் கொள்ளும் வெண்கல அண்டா. அது நிறைய சொக்கத் தங்கத்துக்கும் மேலான சுத்தத்தில் இனம் புரியாத முத்திரையோடு..... சாப்பிடும் போதும் மூச்சிரைத்தது கவுண்டருக்கு.

பாவாயி முதல் தடவையாகச் சந்தேகத்துக்கு வந்து கவலைக்குள் நுழைந்தாள்.

''என்னாச்சு உங்களுக்கு? ஏதும் மேலுக்கு முடியலையா?''

- கவுண்டரிடம் பதிலில்லை.

''பாவாயிகிட்ட சொல்லிடலாமா? புள்ளே நம்ம தரித்திரம் தூக்கு மாட்டிகிச்சு... மகாலட்சுமி ஊட்டுக்குள்ள பரிவாரத்தோட நுழைஞ்சிட்டான்னு சொல்லிடுவோமா? சொல்லிடுவோமா?' -கேள்விக்குள் மனசு நெளிந்தது.

'எதுக்கு உன்னிய அடிக்கப் போற பூதம் பாவாயியையும் சேர்த்து அடிக்கவா? மொத எதாச்சும் பலி கொடு..... பிறகு யோசி...'

சட்டென்று எழுந்து கையைக் கழுவிக் கொண்டார் கவுண்டர். வாசற் புரத்து அகத்தி மரத்தின் கீழ்க் கவிழ்ந்த கடைக்குள் கொக்கல் முனங்கலிடும் கோழிகளில் ஒன்றை நறுக்கென்று பிடித்தார்.

''புள்ள நான் சந்தைவரப் போயாறேன்....'' - என்றபடி வேகமானார். பாவாயிக்கு ஒன்றும் புரியவில்லை. பலமிழந்துவளாட்டம் சாணி மெழுகிய திண்ணையில் சரீரத்தை அமர்த்திக் கொண்டு, ''முனுசாமியே..... இவரு ஏன் இப்படி அழும்பு பண்ணுறாரு. ஒண்ணும் புரியலையே....'' - என்று வாய்விட்டுப் புலம்பினாள்.

சூரியனை மேறகு திருடிக் கொண்டு பதிலுக்கு நிலாவைக் கொடுத்திருந்தது. பகல் முழுக்க கண்டெடுத்த தங்கக் காசுகளுக்குள் கைகளை அளம்பவிட்டு அளம்பவிட்டு உணர்ச்சி வசப்பட்டிருந்தார் கவுண்டர். பிடித்து வந்திருந்த கோழியின் கழுத்தை கூட திருகி பலி போட்டாயிற்று. இரவில் அதனருகில் இருக்க பயமாக இருக்கவே பழையபடி புதையலைப் பதவிசாகப் பதுக்கி விட்டுக் கை நிறைய நாணயங்களை மட்டும் எடுத்து இடுப்பில் முடிந்து கொண்டு வீடு திரும்பிய வேளையில் பாவாயி அமர்ந்த திண்ணையை விட்டு அசைந்திருக்கவில்லை.

கவுண்டரைப் பார்த்து மின்சாரம் வந்த விளக்கு மாதிரி நிமிர்ந்தாள்.

''சந்தைக்கு எதுக்குப் போனீங்க? எங்க எங்கப்பன் வாங்கித் தந்த சாவல்?'' - கவுண்டருக்குக் கோபம் விழியை பொறித்துக் கொண்டு வந்தது.

''சாவலை நான் விழுங்கிப்புட்டேன். போ புள்ள அப்பால.....''

- அந்தக் கத்தலில் அதிர்ந்து பக்கத்து அகத்தி மரம் கூடத் தனது பூ ஒன்றை இழந்தது. பாவாயி பச்சென்று அழுகையை பிடித்துக் கொண்டாள். ''ஹைய்யோ.... முனுதேவரே..... என் புருஷனுக்கு என்னவோ ஆகிப்போச்சு. நீர்தானய்யா தேத்தணும்....''

- கவுண்டருக்குத் துவட்டியது. அவசரப்பட்டுப் பேசிய தவறு புரிந்து வேகவேகமாகச் சமாதானப் பள்ளத்திற்கு வந்தார்.

''ஏ பாவாயி..... அழுவாத புள்ள. எனக்கு ஒண்ணும் ஆவருலை. சாவலை வித்து போட்டு உனக்குப் புடவை எடுக்கலாமுன்னு பாத்தேன்... அதான்!'' - பாவாயின் விழிகளில் அதீதப் பரவசம்

''நெசமாவா........ எங்க சீலை?''

''துட்டு பத்தலை புள்ள....''

- பாவாயி இமயமலையை பார்த்த தில்லை. இப்பொழுது கவுண்டர் அவள் கணணுக்கு இமயமாய்த் தெரிந்தார்.

''என்னா ஆளு தலை கீழ மாறிட்டீங்க. திடீர் ஞானோதயம் எப்படி வந்துச்சு?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல புள்ள. இவ்ளோ நாளுதான் துயரப் பட்டோம் இனியுமா படணும்? இனி நல்ல கா லம்தான்....''

- அதிகம் பேசிவிட்டதாகக் கருதி நாக்கைக் கடித்தார் கவுண்டர்.

- பாவாயி பாகாய் உருகியிருந்தாள். அந்த உருகல் கலையாடில் நெகிழ்ச்சியோடு வீட்டை நீர்த்தாள். கவுண்டர் திண்ணையில் விழுந்தார்.

'பூதம் வருமோ?'

பூதம் வருமோ?' - கேள்வியால் அரண்டே விட்டார் கவுண்டர்.

தொலைவில்.... வெகு தொலைவில்.... வீட்டு முன்னால் உள்ள கப்பி மண் பாதையின் ஆரம்பத்தில் ஒருவன் ஊருக்குள் நுழைந்து கொண்டிருந்தான்!

குடிசை வாசலுக்கு வந்த போது தான் அவன் பாம்புப் பிடாரன் பச்சைமுத்து என்பது தெரியவந்தது.

கைவசம் மூங்கில் கூடைக்குள் புதிதாகப் பிடித்த கோதுமை நாகம் சரிதம் கவுண்டரின். குடிசையை தாண்டினவனைக் கவுண்டரின் குரல் பிடித்து இழுத்தது.

''முனுதேவரே....... எம் புதையலைக் காப்பாத்தி தாரும்...... கிணத்து மேட்டுல துவரை மிளார் போட்டு மூடி வெச்சுருக்கற அந்தப் பெருஞ் செல்வத்தைக் காப்பாத்தித் தாருமய்யா..... காப்பாத்தி தாரும். பூதம் வந்துரக்கூடாது. எனக்கு எதுவும் ஆகிடக் கூடாது.''

- தூக்கத்திலும் தீர்க்கமான உளறல் கவுண்டரிடம். அதைக் கேட்ட பச்சைமுத்து முகமோ பரம சந்தோஷத்தில் விழுந்து அதே சமயம் புருவம் நெளிய யோசிக்கவும் செய்தது.

''கவுண்டரே..... கவுண்டரே......'' - அழைத்துப் பார்த்தான் பச்சமுத்து.

கவுண்டர் தூக்கம் கலையவில்லை! உழறலும் நிற்கவில்லை. 'கவுண்டரு எதாவது கனாக்கண்டுட்டு உளற்றாரா.... இல்ல நிசமா?' - கேள்விக்குள் நெளிந்த பச்சமுத்து ஒரு முடிவுக்கு வந்தவனாய்க் கவுண்டரின் தோட்டத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான்!

விடிந்து விட்டது!

'குஞ்சாக் கவுண்டன் தோட்டத்துல பிடாரன் பச்சமுத்து சாகக் கிடக்கறான்......! அவனைச் சுத்தி தங்கக் காசா கிடக்குது!! புதையல் எடுத்த அவனைப் பூதம் தான் அடிச்சிருக்கணும்! வாயில நுரை ததும்பப் படுத்துக் கிடக்கறான்.'

'ஆமாமா........ பூதம் அடிச்சி பிடிச்சு! புதையல் எடுத்திருக்கான் பச்ச முத்து....'

- மேல் மாதிரி செய்திகள் ஊருக்குள் காட்டுத் தீயாய்ப் பரவக் கவுண்டர் தோட்டத்தைச் சுற்றி ஊரே கூடியிருந்தது.

மருகுகொழுந்து வயலில் தங்கப் பாத்திரம் கவிழ்ந்து கிடக்க சுற்றிலும் சொற்ப அளவில் தங்க நாணயங்கள்! அந்த நாணயங்களைத் தொட்டுத் தீண்டவே பயப்படும் தினுசில் எல்லோரும் வேடிக்கை பார்த்து கொண்டிருக்க கவுண்டரின் காதில் விஷயம் ஒரு வழியாய் அப்பொழுது தான் போய்ச் சேர்ந்தது.

கவுண்டருக்குக் கணுக்கால் நரம்பு அறுந்த மாதிரி ஒரு வேதனை. திருடனுக்குத் தேள் கொட்டிய மாதிரி ஒரு திகைப்பும் கூட....... அவரை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பாவாயி, ''ஏனுங்க என்னங்க திருதிருன்னு முழிக்கிறீங்க?'' என்று நிமிண்டலாகக் கேட்டாள்.

கவுண்டர் சுதாரிக்கப் பார்த்து முடியாமல் விம்மினார். ''பாவாயி..... நேத்து நான் கண்டெடுத்த புதையல் புள்ள அது. ஒரு பயலுக்கும் தெரியாம துவரை மிளாரைப் போட்டு மறைச்சு வெச்சிருந்தேன். எப்படி அந்தப் பிடாரனுக்கு தெரிய வந்துச்சுன்னு தெரியலையே..... என்னைதான் பூதம் அடிக்கும்னு நினைச்சிருந்தேன் அவனை அடிச்சிப் பிடிச்சே..... ஐய்யோ இப்ப நான் என்ன பண்ணுவேன்...?'' - புலம்பினார் குஞ்சாக் கவுண்டர்.

''சங்கடம் தீர்ந்துச்சுன்னு சந்தோஷப்பட்றத விட்டுட்டுப் புலம்பறிங்களே.......?'' -பாவாயி எதிர் கேள்வி கேட்டாள்.

''நான் செத்தாலும் பரவாயில்ல பாவாயி. நீங்க நல்ல இருந்திருப்பீங்களே... இந்தப் பயலுக்கு எப்படி விஷயம் தெரிஞ்சு.... இவன் எப்படிப் புதையலைத் தேடிவந்து பூதத்துக்கிட்ட அடி வாங்கிச் செத்தான்....?'' மருகிப் புலம்பும் அவரை ஏனோ விஷமமாகப் பார்த்தாள் பாவாயி.

''அப்புறம் பாக்கலாம். முதல்ல தோட்டத்துக்குப் போவோம். கிளம்புங்க. விஷயம் பஞ்சாயத்து போர்டு வரை போயிருச்சு. ஊர் பெரிசுகளும் தாசில்தாரும் வந்துகிட்டுருப்பாங்க. வாங்க போகலாம்.......'' என்றபடி கையை பிடித்து தரதரவென்று இழுத்துச் செல்ல தொடங்கினாள். ஏனோ அவள் செயலில் துளிகூடப் பட்டபிடிப்போ கவலையோ தென்படவில்லை.

கவுண்டரும் புலம்பியபடியே அவளுடன் தோட்டத்துக்குச் செல்ல கவுண்டரைப் பார்த்து விட்டு ஏதோ கூறவந்து உடம்பு வெட்டி வெட்டி இழுக்க முடியாது போய்ப் பொத்தென்று சரிந்து இறுதி மூச்சை விட்டு விட்டுச் சவமானான் பச்ச முத்து.

அவனைச் சுற்றிலும் தங்க நாணயங்கள். ஊர் அதனை வெளித்துக் கொண்டிருந்தது.

''புதையலுக்கு ஆசைப்பட்டு உசிரை விட்டுட்டியேடா பாவி. பூதம் காக்கற பொல்லாத தங்கம் நமக்கெதுக்குடா? ஒழுங்கா சம்பாதிக்கறதே ஒட்டாத இந்த நாள்ள....'' - கூட்டத்தில் ஒருவர் சலித்துக் கொள்ள கவுண்டர் தங்க நாணயங்களைப் பார்த்தார்.

தூக்கி வாரிப் போட்டது அவருக்கு...

'தான் நேற்றுக் கண்டெடுத்த தங்கத்துல கால் பங்கு காசுகள் கூட அங்கு இல்லை. சொச்சம் எங்கு போயிற்று?'

மனசுக்குள் குறுகுறுப்பு வலைச் சிலந்தியாய் எட்டுக்காலிலும் பிராண்டியது. ஆனால் வாயைத் திறக்க தைரியம் இல்லை.

''நல்லவேளை குஞ்சாக் கவுண்டன் புதையலை எடுக்கலை. இல்லாட்டி அவன் தான் போயிருந்திருப்பான். கவுண்டரே உமக்கு ஆயுசு கெட்டிய்யா.....'' யாரோ கருத்துச் சொல்ல கஷ்டப்பட்டு எஞ்சிப் விழுங்கி அதை ஒப்புக் கொண்டார் கவுண்டர்.

தான் புதையலைப் பதுக்கி விட்டு வீட்டுக்கு வந்த பிறகு மர்மமாய் பல செயல்கள் நடைபெற்று விட்டதாக அவர் மனசுக்குள் எண்ணம் தூறல் போட்டது.



பாவாயி ஏனோ மிக சகஜமாகத் தென்பட்டாள். கவுண்டர் அவள் காதோரம் குசுகுசுத்தார். ''அடியே.... ஐஸ்வர்யம் கிடைச்சிருக்குதுன்னு உச்சி குளிர்ந்து போயிருந்தேன். வந்த ஐஸ் வர்யம் இப்படி ஊரறிய இறைஞ்சு கிடைக்குதேடி. அதிலையும் முக்கால் பங்கைக் காணோம். நான் மோசம் போயிட்டேன் பாவாயி.....'' என்று முனங்கினார்.

''செத்த கம்முன்னு இருங்க..... தாசில்தார் ஐய்யா வந்துட்டாரு...'' என்றாள் பாவாயி. வந்த தாசில்தாரைச் சுற்றி ஒரு குட்டி அரசாங்கப் பட்டாளம். அதில் ஒரு போட்டோகிராபர். குடை நிழலுக்குள் தொளதொளவென்ற அரைக்கை சட்டையும் பேண்ட்டுமாய்த் தென்பட்ட தாசில்தார் செத்துக் கிடக் கும் பச்சைமுத்துவைப் பார்த்தார்.

தங்க நாணயங்களை விழி விரிய பார்த்தார். ''இந்தத் தோட்டம் யாரோடது?'' அதிகாரத்துடன் கேட்டார். குஞ்சாக் கவுண்டர் பயத் துடன் முன் செல்ல அவரை தோரணை யுடன் பார்த்த தாசில்தார், ''என்னய்யா நடந்துச்சு இங்க?'' என்று கேட்க கவுண் டருக்குள் பதற்றம் பல்லாங்குழி ஆடத் தொடங்கியது.

''ஐயா.... எனக்கு எதுவும் தெரி யாது. என் தோட்டத்துல நடந்த இது விஷயமா எனக்கு எதுவும் தெரியா துங்க....'' என்று குரல் நடுங்க பேசின வரைப் பிடித்து பின்னுக்குத் தள்ளி விட்டுப் பாவாயி முன்னுக்கு வந்தாள்.

'ஐயா நான் சொல்றேங்க'' என்று ஆரம்பித்தாள்.

''இந்தப் பச்சமுத்து எப்பவும் எங்க தோட்டத்துல தான் படுத்துப்பான். காவக்காரன் மாதிரிங்க! நேத்துப் படுக்கப் போனது தான் எங்களுக்குத் தெரியும். விடிஞ்சு பார்த்தா செத்து கிடக்கான். பக்கத்துல....... தோ தங்கக் காசுங்க.... எங்க தோட்டத்துல புதை யல் இருக்கறதா ஜோசியக்காரங்க சொல்லியிருக்காங்க. எங்களுக்கு அதுல நம்பிக்கை இல்ல. ஆனா பச்சமுத்து வுக்கு அபார நம்பிக்கை. அந்த நம் பிக்கை வீண் போகலை. ஆனா பாவம் அநியாயமா பூதம் அடிச்சுச் செத்துட் டான்.'' - என்று சுருக்கமாகச் சொன் னாள்.

தாசில்தாருடன் வந்தவர்கள் பச்சை முத்துவை அருவெறுப்போடு தொட்டுப் பார்த்து விட்டு உடம்பில் நீலம் பாரித் துக் கிடப்பதைக் கண்டு ''சார் பாம்போ தேளோ கடிச்சிருக்கணும்'' என்றனர்.

இதற்குள் தாசில்ரே தங்கக் காசு களைப் பொறுக்கிப் பாத்திரத்தில் போட்டுவிட்டு நிமிர, போட்டோகிரா பர் ஏகமாய்க் கிளிக்கினார்.

''பாத்திரம் பெரிசா இருக்கு.... ஆனா காசுங்க குறைவா இருக்கே...... நாம வந்து சேருமுன்னே யாராவது அடிச்சிட்டாங்களா?'' - மிரட்டலாகக் குரல் எடுத்துக் கூட்டத்தைப் பார்க்கக் கூட்டம் மிரண்டது.

''ஒத்த காசை யாரும் தொடலீங்க. அதைத் தொட்ட ஒருத்தனைப் பூதம் அடிச்சிருக்கச்சே யாருக்குத் தைரியம் வரும்?'' என்று பாமரத்தனமாய் எதிர் கேள்வி கேட்டது.

தாசில்தார் அரை மனசோடு அங் கிருந்து கிளம்பினார். ''யோவ்... ஆபீசுக்கு வா! உனக்கு ஆறுதலா கவர் மெண்டுல் கொஞ்சம் பணம் தந்தாலும் தருவாங்க. அதோட சில பாரத்துல கையெழுத்து போடணும்'' என்றபடி அங்கிருந்து கிளம்ப ஆரம்பித்தார்.

பச்சமுத்து உடலும் கூட ஒரு ஸ்ட் ரெச்சரில் ஏறிப் பக்கத்து ஜி.எச்சின் மார்ச்சுவரிக்கு குறி வைத்தது.

பரிதாபமாக உட்கார்ந்திருந்தார் கவுண்டர். ''ஏனுங்க...... ஏன் இப்படிக் கப்பல் கவுந்த மாதிரி உக்கார்ந்துட் டீங்க...?'' - பாவாயி சிணுங்கலுடன் கேட்டுக் கொண்டு பக்கமாய் வந்து அமர்ந்தாள்.

'ஹீம்...! என்று கவுண்டர் விட்ட பெரு மூச்சில் அனல் ஊதுலைக் காற்றாகச் சுட்டது.

''எல்லாம் போச்சே பிள்ள... ஒரு காசா... இரண்டு காசா? எவ்வளவோ தங்கம்....... குபேரன் ஆயிட்டேன்னு நெனைச்சு குஷிப்பட்டுப் போனேன். எப்படியோ எல்லாம் கைவிட்டு அர சாங்கத்துக்குப் போயிருச்சே.... அதுல யும் முக்கா பங்கு யார்கிட்ட இருக்குன்னு தெரியலையே. நான் புதையல் எடுத் ததை ஒரு பய பார்க்கலையே... அப்ப எப்படி அந்தப் பிடாரனுக்குத் தெரிய வந்துச்சு?''

-கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டு மார்பை ஊஞ்சலாக்கினார் கவுண்டர்.

''எங்கியும் போயிடலை அந்தத் தங்கம். பத்ரமா நம்பகிட்டதான் இருக்கு!'' என்று பீடிகையுடன் பேச் சைத் துவக்கினாள் பாவாயி.

கவுண்டருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''புள்ள... நீ என்னா சொல்றே?'' வேகமாக கேட்டார்.

''புதையல் எடுத்த நீங்க மிரளாம இருந்துருந்தா ஒரு சிக்கலும் இல்லை. எடுத்துப்போட்டு வந்து தூக்கத்துல புலம்பிக்கிட்டிருந்தீங்க. நேத்து ரவை சினிமாக்குப் போன நான் தலைவலிக் குன்னு பாதியிலேயே திரும்பிட்டேன்.

''அப்பதான் ஊட்டுத் திண்ணையில புலம்பிக்கிட்டு படுத்துக்கிடந்த உங்க குரலைக் கேட்டேன். அதே சமயம் உங்க புலம்பலை அந்த பிடாரன் பச்சை முத்து கேட்டுப்புட்டு நம்ப தோட்டம் பக்கம் போறதையும் பார்த்தேன். போனவன் துவரை மிலாரை விலக்கிட்டுப் புதையல் பாத்திரத்தை வெளியே எடுத்தப்போ எனக்கு மூச்சே நின்னு போச்சு.

''எவ்வளவு பெரிய ஐஸ்வர்யம்! வாய்விட்டு கத்தலாமான்னு ஆயிடிச்சு. பச்சை முத்துவும் புதையலைப் பார்த் துட்டு அப்படியே ஆடிப்போய் நின்னுட்டான். அவன் கை வசம் மூங்கிப் பெட்டியில ஒரு பாம்பும் இருந்துச்சு. பெட்டியைக் கீழ வெச் சுட்டுப் புதையல் பாத்திரத்தை தன் னோட வேட்டியில சுத்திக் கட்டினான். எனக்குப் பதற்றிச்சு மனசு. பல்லகடிச்சு கிட்டு வேடிக்கை பார்த்தேன். புதையல் பாத்திரத்தைக் கட்டி வளைச்சு தோளுக் குத் தூக்குளவன் அப்படியே குனிஞ்சு மூங்கில் பெட்டிய எடுக்கப் பார்த்தான்.

''முனுதேவரே'ன்னு நான் வாய் விட்டுப் புலம்பன சமயம் பச்சமுத்து தொட்டுத் தூக்க பார்த்த மூங்கிப் பெட்டி கை நழுவி கீழே விழ, மூடித் திறந்து கிட்டு அதுல கிடந்த பாம்பு வெளிய நழுவி விழுந்திச்சு.

''உஸ் உஸ் சுன்னு' ஒரே சீற்றம். புதுப்பாம்பு. பல்லைக்கூடப் பிடுங் கலைன்னு நினைக்கிறேன். சீறின வேகத்துல பட்டுப் பட்டுன்னு பச்சமுத்து கால்ல கொத்திட்டு விறுவிறுன்னு தோட்டத்துக்குள்ற ஓடி மறைஞ்சிடுச்சு. பச்சமுத்து சுருண்டு விழுந்திட்டான். நான் இதுதான் சாக்குன்னு கிட்டப் போய்ப் புதையல் பாத்திரத்தை என் வசப்படுத்துகிட்டேன். கூடவே சட்டுன்னு ஒரு எண்ணம் தோணுனிச்சு. பின்னால பிரச்சினை வரக்கூடாதுன்னு கொஞ்சம்போலக் காசையும் பாத் திரத்தையும் அங்கேயே போட்டுட்டு சொச்சத்தை எடுத்துக்கிட்டு வந்துட் டேன்.

''இல்லாட்டி பச்சமுத்து சாவுக்கு என்ன பதிலை சொல்ல? அவன் எதுக் குத் தோட்டத்துக்கு வந்தான்? ஏன் வந் தான்னு? ஊர் ஆயிரம் கேள்வி கேக் குமே..... இப்ப கேக்காதே.... புதையல் எடுத்தான்! செத்தான்கற மட்டோடு பிரச்சினை முடிஞ்சு போச்சு. நமக்கும் புதையல் கிடைச்ச சந்தோஷம்...''

விலாவரியாக பாவாயி பேசியதைக் கேட்டு கவுண்டர் சிலிர்த்துப் போயிருந் தார்.

''புள்ள உனக்கு எவ்வளவு அறிவு புள்ள....'' - என்று பாவாயியைக் கட்டித் தழுவி உச்சி மோந்தார்.

''ஆமா, இனி பூதம் நம்பளை ஒண்ணும் பண்ணாதே?'' - பரிதாப மாகக் கேட்டார்.

''அதுக்குத்தான் பச்சமுத்து ஆவி கிடைச்சிடுச்சே. எல்லாம் என் முனு சாமி கருணை!'' என்றபடி வீட்டுக்குள் அரிசிப்பானையில் பதுக்கியிருக்கும் தங்கத்தை வெளியே எடுக்க, பளீரிட்ட அந்தப் பெரும் செல்வத்தைப் பார்த்து பரவசப்பட்டு, மயங்கிச் சரிந்தார் கவுண்டர். ○



நாங்கள் சுதந்தர மன்னர்கள்!



எவ்வளவுதான் அதிகாரம் நிறைந்த வசதிகள், வாய்ப்புகள் மிகுந்த பதவியாக இருந்தாலும் ஒருவருக்குப் பதில் சொல்லும் கட்டாயம் ஏற்படும். சொந்தமாகத் தொழில் செய்து வாழ்வதில் இந்த நெருக்கடிக்கு இடமே இல்லை. லாபமோ, நஷ்டமோ அக்கறையையும், ஈடுபாட்டையும் கொண்டு அமையும். நேரமும், காலமும் தடைக்கல்லாக அமையா.

சொந்தத் தொழிலில்தான் எத்தனை வகைகள் இருக்கின்றன. அவை தரும் திருப்தியும், சுகமும் தனி அநுபவங்கள். இதோ, இந்தப் பக்கங்களைப் பாருங்கள். கருமமே கண்ணாகவாத்தியம் தயாரிக்கிறார். சுநாதத்துடன் ரீங்கரிக்கும் வாத்தியத்தை இசைக் கலைஞர் பெருமிதத்துடன் வாங்கிச் செல்கிறார். புத்தக பைண்டிங், திருமணம் போன்ற வைபவங்களுக்குச் சீர் முறுக்கு, வெயிலுக்குக் குளுமையும், இனிமையும் மிகுந்த கருப்பஞ்சாறு, வண்ணச் சேலைகளின் தகதகப்பு, ஆண்ட









வனுக்கும், ஆள்பவனுக்கும் ஆளுயர மாலைகள், தெருவோரத்துக் காரப் பட்சணங்கள், கிரைண்டர் மிக்ஸி வந்தாலும் ஆட்டுக்கல், அம்மியின் அவசியம், வண்ண வண்ணக் கூடைகள், மங்கையர் மனம் கவரும் ஆபரணங்கள்... இப்படி எத்தனை எத்தனை! உலகமே பாராட்டும் தஞ்சாவூர்த் தட்டுக்கள் - கண்ணைக் கவரும் வண்ண வண்ணப் பண்ருட்டி பொம்மைகள்... அடேயப்பா! கற்பனையும், கை வண்ணமும் சேர்ந்து பார்ப்பவர்களைப் பிரமிக்க வைக்கின்றன!






GOODS HYPOTHECATED TO
UNION BANK OF INDIA
CHAMIERS ROAD, MADRAS





இப்படி எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன. அழகழகான மேசை நாற்காலிகள் செய்வோர், மணமிக்க ஊதுவத்திகள் தயாரிப்போர், கண்கவர் கண்ணாடி 'டோம்' விளக்குகள், ஏன், குழந்தைகளைக் கவரும் பஞ்சு மிட்டாய், மணி அடித்துக் கொண்டு தெருவில் போகும் ஐஸ் வண்டிக்காரர் - இப்படிப் பல - சொந்தத் தொழில் செய்கிற அதிர்ஷ்டசாலிகள் இருக்கிறார்கள். அவர்களில் சிலரை இங்கே வெளியிட்டிருக்கிறோம்.

இடைத் தரகர்கள் இல்லாத சொந்தத் தொழில்கள்! பெருமிதம் பொங்கும் வாய்ப்புக்கள்! 'நாங்கள் சுதந்தர மன்னர்கள்' என்ற பூரிப்பு. தேவையான வருவாயுடன் இந்தப் பெருமையும் பெற்ற புண்ணியசாலிகள் இவர்கள்!

வண்ண போட்டோ : ஓம். சுப்பிரமணியம்

க - வெ. போட்டோ : ஜனார்த்தனன்







விரல்களின் நுனிகளில் ஒரு விசித்திரக் கலை

பெட்டி நிறைய ராஜா ராணிகள், அமைச்சர்கள், சிப்பாய்கள், பாட்டாளிகள், பாம்பாட்டிகள், நடன மாதர்கள், குதிரை வீரர்கள், ஒட்டகச் சவார்கள், உழவர்கள், உழைப்பாளிகள்......... இவர்கள் பிரயாணம் எங்கே போனாலும் சேர்ந்தே துவங்கி, தொடர்ந்து முடிகிறது. ஜாதிப்பூசல்களும், அந்தஸ்து வேறுபாடுகளும் இவர்களைப் பாதிப்பதில்லை. அதனால் இவர்கள் உறவில் பிளவு ஏற்படுவதும் இல்லை. நிகழ்ச்சிகள் நடக்கும் அந்த ஒரு சில மணி நேரத்திற்கு மட்டுமே உயிர்பெற்று நடமாடும் பொம்மைகள் இவை.

பொம்மலாட்டக் கலையைப் பற்றி நம் இதிகாசங்களும், சரித்திரமும் குறிப்பிடுகின்றன. ஹர்ஷ சரித்திரத்திலும், புத்த ஜைன இலக்கியங்களிலும் கூட இக்கலையைப் பற்றியும், பொம்மைகளை இயக்கும் முறை பற்றியும் விஸ்தாரமான குறிப்புகள் காணப்படுகின்றன.

'சூத்திரதாரி' என்கிற பதத்துக்கு 'கயிறுகளைப் பிடித்திருப்பவர்' என்று பொருள். வட மொழி நாடகங்களில் மேடையில் முதலில் தோன்றி முன்னுரை வழங்கும் நபர் இவர்தான். எனவே பொம்மலாட்டம் நாடகக் கலைக்கு முன்னோடியாக இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

காச்மீரைச் சேர்ந்த சோமதேவரால் எழுதப்பட்ட 'கதா சரித் சாகரத்தில்' அசுரமாயா என்பவரின் மகள் சோமப்ரபா, அரச குமாரி கலிங்கசேனாவுக்குத் தன் தந்தை செய்த பொம்மைகளைக் கூடை நிறையக் கொண்டு வந்து கொடுத்தாளாம். அவற்றில் அமைந்திருந்த நீண்ட மர அமைப்பை இயக்கினால் ஒன்று பறக்கும் என்றும், இன்னொன்று நடனமாடும் என்றும் கூறினாளாம். அதைக் கண்ட கலிங்கசேனா உணவு அருந்தக் கூட மறந்து போய் நாள் முழுவதும் அந்தப் பொம்மைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள் என்றும் குறிப்பிடப்படுகிறது.

இன்னொரு வழக்காற்றுக் கதையில் பின்வருமாறு காணப்படுகிறது.

புத்திசாலியான தச்சன் ஒருவன் இரு அழகிய பொம்மைகளைத் தயார் செய்தானாம். அவற்றைக் கண்டு ஆனந்தம் கொண்ட பரமசிவனும் பார்வதி தேவியும் அவற்றுக்குள் புகுந்து கொண்டு ஆனந்தக் கூத்திட்டுத் திரும்பியதும் இயக்கம் நின்று விழுந்து போன பொம்மைகளைக் கண்டு விசனப்பட்டு மனமொடிந்த தச்சன், தேவியிடம் அவற்றை மீண்டும் உயிர்ப்பிக்குமாறு வேண்டிக் கொண்டான். அதற்குத் தேவி, அவனே தன் புத்தி கூர்மையால் அதற்கான வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று பணித்தாளாம். அதன்படி தச்சனும் பொம்மைகளின் இடுப்பிலும் கை கால்களிலும் நூல் கட்டி இயங்க வைக்க, பொம்மலாட்டம் பிறந்ததாம். இக்கதையிலுள்ள இதிகாசச் சுவையை நீக்கி விட்டுப் பார்த்தால் மனிதர்களது நடை உடை, பாவனைகளை நகல் செய்ய இப்பொம்மைகள் பயன்பட்டிருக்கலாம் என்பது புலப்படுகிறது.

பொம்மலாட்டப் பொம்மைகளை ஆங்கிலத்தில் 'Puppets' என்கிறார்கள். 'Pupa' என்னும் இத்தாலியச் சொல்லிருந்து வந்த இவ்வார்த்தையின் பொருள் 'பொம்மை' என்பதாகும். வட மொழியில் 'கட் புத்தலி' என்றும் இதைக் குறிப்பிடுகிறார்கள்.

கிழக்கு நாடுகளான இந்தியா, சீனா, பர்மா, தாய்லாந்து, இந்தோனேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் கயிற்றினால் இயக்கும் பொம்மலாட்டக் கலை சிறப்புற்று விளங்குகிறது. பொம்மைகளுக்குள் கைகளைப் புகுத்தி விரல்களால் இயக்கும் 'பஞ்ச்' மற்றும் 'ஜுடி' முறைப் பொம்மலாட்டம் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ஹாலந்து, அமெரிக்க ஆகிய நாடுகளில் அதிகப் பிரபலமாக உள்ளது.

தமிழகத்தில் 'பாவைக் கூத்து' என்று பொம்மலாட்டத்தைக் குறிப்பிட்டனர்.

வங்காளத்திலும் பீகாரிலும் 'Rod Puppets' எனப்படும் வகைப் பொம்மைகள் இயக்கப்படுகின்றன. இதில் பொம்மைகளின் இடுப்பு, கை கால்கள் தலை எல்லாமே தனித்தனியாக இயங்கும் வகையில் அமைக்கப்படுவதால் இவற்றை உடன் இணைக்கப்பட்ட குச்சி மூலம் அசைய வைப்பது சுலபமாகிறது.

ஒரிஸ்ஸா, கேரளம் ஆகிய மாநிலங்களில் மேற்சொன்ன வித பொம்மலாட்டத்தையே மெல்லிய திரைக்குப் பின்னால் நடத்தி நிழலாட்டம் போல் காண்பிக்கிறார்கள்.

'டோலு பிம்பலாட்ட' என்று ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் காட்டப்படும் இதே நிழல் பொம்மலாட்டத்தில் ஒரு சின்ன வித்தியாசம். இந்தப் பொம்மைகளின் கண்கள் பெரியதாகவும் இதன் உடல் அமைப்பு தகடு போலவும் இருக்கும். இவற்றின் மீது பூசப்படும் வண்ணப்பூச்சு 'Vegetable dye' பளிச் என்று திரையில் தெரியும்.

முன் நாட்களில் பொம்மலாட்டக் கலை கிராம மக்களுக்கு மட்டுமே பார்க்கக் கிடைத்த கலை நிகழ்ச்சியாக விளங்கியது.



கிராமங்களில் பிழைப்பு மங்கிப் போனதால் இக்கலைஞர்கள் முதலில் அக்கம் பக்கத்துக் கிராமங்களுக்கும், போக்குவரத்து வசதிகள் வந்த பிறகு அண்டை மாநிலங்களுக்கும் குடிபெயரத் துவங்கினார்கள்.

இராஜஸ்தானைப் பொறுத்தவரை 'நாகூர்' இந்தக் கலையின் பிறப்பிடமாகக் கருதப்படுகிறது. முதலில் ஜோத்புரி அரசின் ஒரு பகுதியாகவும் பின்னர் சுயேச்சைச் சிற்றரசாகவும் திகழ்ந்த இவ்வூரின் அரசர் அமர்சிங் ராத்தோர் காலத்தில் பொம்மலாட்டத்தின் மூலம் அரசரின் திக்விஜயங்களையும் வீர தீரப் பிரதாபங்களையும் பிரசாரம் செய்வது எளிதாக இருந்தது.

அமர்சிங் ராத்தோர் முகலாய மன்னர் ஷாஜஹானின் தர்பாரில் பிரதான் இடம் வகித்தவர். இது மற்றப் பிரபுக்களின் பொறுமையையும் மனக்குமைச்சலையும் அதிகமாக்கியிருந்தது. அனைவருமே ராத்தோரை வீழ்த்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். இந்நிலையில் பிகானிர் அரசர் கரன்சிங் நாகூரைத் தாக்கினார். அமர்சிங் உடனே தர்பாரை விட்டுச் சென்று தம் நாட்டைக் காக்கப் போக அனுமதி கோரினார். மன்னரின் பிரதான ஆலோசகரான சலாவத் கான் குறுக்கிட்டு அனுமதி தர மறுக்க, வார்த்தைப் பரிமாறல்கள் அதிகமாகிச் சண்டையாகி விபரீதத்தில் முடிந்தது. சலாவத்கானைக் கொன்று போட்டுவிட்டு ராத்தோர் வெளியேற, ஷாஜஹானின் கட்டளைப்படி இன்னொரு பிரபுவான அர்ஜுன் கோர் அமர்சிங்கைத் தாக்கிக் கொன்றான். இக்கதை இன்றும் பொம்மலாட்டக் காட்சிகளில் இங்கு முக்கியத்துவம் வகிக்கிறது. அது மட்டுமல்ல. இக்கலை இந்த மாநிலத்துச் சமூக, சரித்திர, வீர பாரம்பரியங்களைப் பரப்புவதில் பிரதான அங்கம் வகித்து வந்திருக்கிறது. அதனால் மாநில அரசு இக்கலையை உயிர்ப்பித்து வைத்துக் கலைஞர்களை உற்சாகப்படுத்துவதில் தீவிரம் காட்டுகிறது.



சுவர் நிறையப் பொம்மைகள்

உதய்ப்புரியிலுள்ள 'லோக் கலா மண்டல்' -ஐச் சேர்ந்த பொம்மலாட்டக் கலைஞர்கள் தங்கள் திறமையை உலக அரங்கில் வெளிப்படுத்திப் பல பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்கள்.

ஜெய்ப்பூரிலுள்ள 'பீராசீன் கட்புத்லி சன்ஸ்தான்' -ஐ (புராதன பொம்மலாட்ட நிறுவனம்) மாநில அரசின் உதவி

பாடம் நடக்கிறது





திரு. பாபுராம் திரு ராஜேந்தர்

யுடன் திரு. பாபுராம் என்பவர் நடத்துகிறார். இவர் தம் மாணவர்களுடன் 'அப்னா உத்சவ்' மற்றும் பல பிரதான நகரங்களில் நடத்தப்பட்ட கலாச்சார விழாக்களில் பங்கேற்றிருக்கிறார். இவ்வாண்டு ஜுன் மாதம் சென்னையில், ராஜஸ் தலியினர் பூம்புகாரில் நடத்திய கலைக் கண்காட்சியில் இவர் கலந்து கொண்டு இருபதுக்கும் மேற்பட்ட பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். விரைவில் தம் திறமையை வெளிப்படுத்த வெளி நாடு செல்லவிருக்கும் திரு. பாபுராமும் அவரது உதவியாளர் திரு. ராஜேந்தரும் பல சுவையான தகவல்களைச் சொன்னார்கள்.

மற்ற மாநிலத்திலுள்ள பொம்மலாட்டக் கலைஞர்களைப் போல் இங்குள்ளவர்களும் நாடோடிகளாக வாழ்க்கை நடத்துகிறார்கள். இன்று இங்கு, நாளை எங்கு என்கிற நிலையற்ற தன்மை இவர்கள் வாழ்க்கையைக் கடினமானதாக்குகிறது. ஒருவனின் குடும்பம் முழுவதுமே இந்தத் தொழிலில் ஏதாவது ஒரு விதத்தில் ஈடுபட்டிருக்கிறது. பொம்மலாட்டத்துக்குத் தேவையான பொம்மைகளைச் செய்வதிலும், அவற்றுக்கு வண்ணம் பூசிக் கண்களைப் பறிக்கும் வண்ண உடைகளைத் தைத்து அலங்கரித்து, நிகழ்ச்சிகளை நடத்துவதில் பல விதங்களில் உதவியாக இருக்கிறார்கள். சிலர் நாட்டுப் பாடல்களைச் சந்தர்ப்பங்களுக்கேற்ப பாடியும் டோலக் என்னும் வாத்தியத்தை வாசித்தும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்கள். இவ்விதம் ஒரு குடும்பத் தலைவனுக்கு அவன் மனைவி, பெண், பிள்ளைகள் அனைவருமே உதவுகிறார்கள். இவர்களில் அநேகமாக யாருக்குமே எழுதப் படிக்கத் தெரியாது. ஊர் ஊராகப் பிழைப்பைத் தேடிச் சுற்றி அலையும் நாடோடி வாழ்க்கையே இதன் முக்கிய காரணம். ஆனால் நிகழ்ச்சிகளில் இவர்கள் கதாபாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுத்தும் பல அரிய கருத்துக்களும் சிந்தனைகளும் நம்மை அயர வைக்கும்.

பொம்மலாட்டத்திற்கென்று கதை தேர்வானதும் அதற்கான வசனங்களையும், சில பாட்டுக்களையும் வேறு யாராவது எழுதப் படிக்கத் தெரிந்தவரிடம் கொடுத்து எழுதிக் கொடுக்கச் சொல்லுவார்கள். அதை அவர்களைவிட்டே பல முறை படிக்கச் சொல்லிக் கேட்டு வசனங்களை மனனம் செய்து விடுவார்கள். நிகழ்ச்சியில் அங்கங்கே செருகப்படும் நாட்டுப் பாடல்களுக்கும், பாடல்களுக்கும் மெட்டு அமைக்க அதிக அலட்டல் அவசியமில்லை. அவ்வப்போது பிரபலமாக இருக்கும் 'ஹிந்தி திரைப்பட பாடல்களின் 'ஹிட்டான' மெட்டுகள் உதவி வருகின்றன. காட்சி துவங்கும் முன் கூட்டம் சேர்க்க காஸ்ஸெட்டைப் பொருத்திச் சினிமாப் பாட்டுகளைச் சிறிது நேரம் இசைப்பார்கள். ஆனால் இது எல்லாராலும் சாத்தியப் படாது. காஸ்ஸெட் ரிகார்டர்களை வாங்கும் பண வசதி எல்லாருக்கும் இருப்பதில்லை.

இன்றையத் தேதியில், இம்மாநிலத்தில் சுமார் இருபத்தையாயிரம் பேர்கள் பொம்மலாட்டக் கலையைத் தங்கள் தொழிலாக........ அன்றாட ஜுவனவாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பொம்மலாட்டக் காட்சியை நடத்தக் குறைந்தது மூன்று நபர்களாவது தேவைப்படுவார்கள். இதை எட்டு வரை பெருக்கிக் கொள்ளலாம். இந்நிகழ்ச்சிக்கான மேடை அமைப்பது வெகு சுலபம். இரண்டு கயிற்றுக் கட்டில்களை நீட்ட வாக்கில் சாய்வாக நிறுத்தி அதன் முன் பகுதியைக் கறுப்புத் துணியால் மூடி விட்டால் அரங்கு தயார். கட்டிலுக்குப் பின்னால் மறைவாக நின்று கொண்டு பொம்மைகளை இயக்கலாம். பொம்மைகளை இயக்கும் கயிறுகள் கறுப்பு நிறத்தில் இருப்பதால் கறுப்புத் துணியின் பின்னணியில் கயிறு தெரியாது. தேவை என்றால் அட்டையில் அரண்மனை போலவும் தர்பார் போலவும் சந்தர்ப்பங்களுக்கேற்ப 'கட் அவுட்' செட்களைப் பின்னணியில் பொருத்திக் கொள்ளலாம்.

அமர்சிங்ராத்தோர், அனார்க்கலி, வீர சிவாஜி, பிருத்விராஜ், ஜெய்சந்த், ஜான்சிராணி, ராணா பிரதாப்பின் வரலாறு, ராம்தேவ்ரா கதை இவையே நிகழ்ச்சிகளில் அதிகமாக இடம் பெறும் கதைகள். ஒவ்வொரு கதைக்கும் தனிச் செட் பொம்மைகள் தேவைப்படுகின்றன. பொம்மைகளின் முகமும் கழுத்துப் பகுதியுமே மரத்திலானவை. கைகால் உடம்புப் பகுதிகளில் துணியை அடைத்துத் தைத்து விடுகிறார்கள். மாமரத்தின் மரம்தான் இதற்குப் பயன்படுகிறது. சுமார் ஒன்பது அங்குல நீள மரத்தை நான்கு அங்குல அகலம் வைத்து வெட்டி எடுத்துக் கொண்டு முதலில் தலை கண், காது, மூக்கு, வாய், முகம் பகுதிகளைச் செதுக்கிக் கொள்ளுவார்கள். பின் இதற்கு வர்ணம் பூசப்படுகிறது. இது உலர்ந்த பிறகு துணி அடைக்கப்பட்ட மற்ற அங்கங்கள் சேர்க்கப்பட்டு, உடைகளை அணிவிக்கிறார்கள்.

பொம்மைகளைச் செய்வது என்பது தனியான கலை. இவர்களால் பொம்மலாட்ட நிகழ்ச்சியை நடத்த முடியாது. இவற்றுக்கெல்லாம் 'பிராசீன் கட்புதலி சன்ஸ்தானத்தில் பிரத்யேகப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஆறுமாதப் பயிற்சிக்குப் பிறகு விரல் இயக்கங்களாலேயே பொம்மை



அமர்சிங் ராத்தோர்

இயக்குநரும் நடிகர்களும்

அனார்க்கலி நடனம்

களின் நளின அசைவுகளையும் அதற்கேற்ற வசனங்களால் உணர்ச்சிகளையும் தந்து, இந்நிகழ்ச்சிகளில் ஜுவனூட்டி சுவாரசியமும் ததும்பச் செய்ய முடியும். பயிற்சியின் முடிவில் மாணவ மாணவிகளுக்கு 'டிப்ளமா' சான்றிதழ் வழங்கப் படுகிறது. இதைப் பயிலுவதற்கு வெளியூர் மாணவர் களானால் ரூ. 250/-ம் உள்ளூர் மாணவருக்கு ரூ. 150/-ம் சலுகைப் பண உதவியாகக் கிடைக்கிறது.

பல குடும்பங்கள் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளால் வருவாயை இழந்த நிலையில் பொம்மைகளைத் தயார் செய்து விற்கிறார்கள். வெளிநாட்டு டூரிஸ்டுகள் இவற்றை அதிக அளவில் வாங்கிப் போகிறார்கள். பொம்மை ஒன்றுக்கு முப்பது ரூபாய் கூடக் கிடைக்கும். ஆனால் நிகழ்ச்சிகளில் பயன்படுத்தும் பொம்மைகளை இவர்கள் விற்பதில்லை.

பெரிய திருமணங்களில் நிகழ்ச்சிகள் நடத்த இவர்களை சிலர் அழைக்கிறார்கள். இன்றும் கிராமங்களில் குடும்பக் கட்டுப்பாடு, முதியோர் கல்வி, இருபது அம்சத் திட்டம், பசுமைப் புரட்சி ஆகிய முன்னேற்றத் திட்டங்களைப் பரப்ப அரசு இக்கலைஞர்களைப் பயன்படுத்திக் கொள்ளுகிறது. இந்தத் திட்டங்களை விளக்கி அனுகூலங்களைப் புரியவைக்கும் வகையில், கதாபாத்திரங்களின் வாயிலாக எடுத்துச் சொல்ல முயற்சி செய்கிறார்கள். பெண்கள் முன்னேற்றமும், கல்வியின் அவசியமும் இதில் அடக்கம்.

இப்படி நிகழ்ச்சிகளை அடிக்கடி நடத்துவதால் ஒரு பொம்மலாட்டக் கலைஞரின் மன நிலையில் ஏதாவது பாதிப்பு ஏற்படுகிறதா என்று கேட்ட போது திரு. பாபுராம் சொன்னார். ''நிச்சயம் ஏற்படுகிறது. கதைகளில் வரும் ஒரு சில கதாபாத்திரங்கள் நமக்கு மிகவும் நெருங்கியவர்களாகி விடுகிறார்கள். நம்மிடமிருந்து பிரிக்கமுடியாதவர்களாக ஒன்றிப் போகிறார்கள். உதாரணமாக நான் அனார்கலி பாத்திரத்தை இயக்குவேன். என் குரலை மாற்றிக் கொண்டு பெண் குரலில் பேசுவேன். அதன் விளைவாக அந்தக் கதா பாத்திரம் என்னோடு ஒன்றிவிட்டது. அனார்க்கலி பொம்மையை நானேதான் இயக்குவேன், வேறு யாரிடமும் இதை விடுவதில்லை. 'எத்தனை ஆயிரம் கிடைத்தாலும் இந்தப் பொம்மையை விற்கவும் மாட்டேன்.''

திரு. பாபுராம் இளமையில் இருட்டான நாட்களைப் பார்த்தவர். இவர் மூதாதையர்கள் தாத்தா, அப்பா எல்லோருமே இக்கலையைத் தொழிலாக மேற்கொண்டவர்கள். அன்றாடப் பிரச்சினைகளின் அலைகளில் சிக்கிக் கொண்டு திணறியும் இதை உயிர்ப்பித்து வைக்கக் கஷ்டப்பட்டவர்கள். இன்று பாபுராம் கரையில் நின்று காலூன்றிக் கொண்டு விட்டார். ஆனால் இதுதான் இத்தொழிலை மேற்கொண்டவர்களின் அனைவரின் நிலையும் என்று சொல்லிவிட முடியாது.

பொம்மலாட்டக் கலைஞர்கள் அநேகரது வாழ்க்கையின் தரம் இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது. அன்று முதல் இன்று வரையில் இவர்களின் அந்தஸ்த்தில் மாற்றமோ, பொருளாதார நிலையில் முன்னேற்றமோ, வாழ்க்கையின் தரத்தில் ஏற்றமோ ஏற்படவில்லை.

டி.வியும், வீடியோவும் ஆக்கிரமிப்புச் செய்த இசை, நாடகம் எல்லாவற்றையுமே பின்னணிக்குத் தள்ளிவிட்ட நிலையில் இந்தக் கலையை இவர்களால் நீண்ட நாள் ஜுவித்து வைத்திருக்க முடியுமா?

''ஏன் முடியாது? என்னைப் பொறுத்தவரையில் நான் அதற்காக முழு மனதுடன் பாடுபடுவேன். பணம் எனக்குப் பெரிதில்லை. இந்தக் கலையைப் பலர் கற்றுக் கொண்டு பரப்ப வேண்டும். இதை அழிந்து போக நான் விட மாட்டேன். அதுதான் ''என் வாழ்க்கையின் லட்சியம்'' என்று திரு. பாபுராம் நம்பிக்கையோடு சொல்லுகிறார். ○

ஆய கலைகள் அறுபத்தி நான்கு என்கின்றனர். அந்தக் கலைகளின் கை வண்ணங்கள் காட்சிப் பொருளாக விற்பனைக்கு வருகின்றன. ஆனால் விற்பனையும் ஒரு கலைதான் என்று சொன்னால் பலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் இதுதான் உண்மை. நான் பலமுறை வெளிநாடு சென்று வந்ததால் பெற்ற அனுபவம் இது என்றுகூடச் சொல்லலாம்.

செட்டியார் முறுக்கா, சரக்கு முறுக்கா என்பது நம்மூரில் சாதாரண மாகச் சொல்லப்படும் ஒரு பழமொழி! செட்டியாரும் முறுக்காய், சரக்கும் முறுக்காய் இருக்க வேண்டியது அவசியம்.

அமெரிக்காவில் ஒரு துணிக்கடைக் காரர் ''உங்களுடன் உங்கள் மனைவி யையும் அழைத்து வாருங்கள்'' என்று

ஆய கலைகளில் ஒன்று!

நல்லி குப்புசாமி

விளம்பரம் செய்தார். இதில் எவ் வளவு பெரிய வியாபாரத் தந்திரம் - யுக்தி அடங்கியிருக்கிறது என்பது அநு பவித்தவர்களுக்குத்தான் தெரியும். இருவருமாகக் கடைக்கு வருவதால் வியாபாரம் விரைவாக முடிகிறது. இரண்டு பங்காகவும் நடக்கிறது.

நாம் எடுக்கும் துணி மனைவிக்குப் பிடித்திருக்க வேண்டுமே என்ற மனக் குறையால் பிறகு வருகிறேன் என்று கணவன் வாங்காமல் திரும்பிப் போவது தவிர்க்கப்படுகிறது. கணவன் வருமுன் வீடு போய்ச் சேர வேண் டுமே என்ற ஆதங்கத்தில் பெண்கள் அரைகுறையாக வியாபாரத்தை முடிப்பதும் தவிர்க்கப்படுகிறது.

பொதுவாகப் பொருட்களை வாங் குவதிலும், தேர்ந்தெடுப்பதிலும்கூட ஆணுக்கும், பெண்ணுக்கும் நிறைய வேறுபாடு உள்ளது.

ஆண்கள் வாங்குபவை பயனுள் ளவையாக இருக்கும். பெண்கள் வாங்குபவை அலங்காரமும், அழகும் நிறைந்ததாக இருக்கும். ஆண்களுக்கு நயமான விலை முக்கியம். பெண் களுக்கு நாகரீகமும், அழகும் முக்கியம். நாம் வாங்கும் பொருள் பிறர் பாராட் டும்படியாக இருக்க வேண்டும் என்ற நோக்கிலே பெண்ணின் தேர்வு இருக் கும். ஒரு செருப்பு வாங்குவது என் றால்கூட ஆண் அது உழைக்குமா என்றுதான் பார்ப்பான். ஆனால் பெண் அது காலுக்கு அழகாக இருக் குமா என்று ஆராய்வாள்.

எனவேதான் ஒரு ஆண் ஒரு துணிக் கடைக்குள் நுழைந்தால் தனக்குத் தேவையான பேண்ட் அல்லது வேஷ்டி, சட்டைத் துணியோடு பத்து நிமிடத்தில் வெளியே வந்து விடுவான். ஆனால் ஒரு பெண்ணுக்குப் பத்து மணி நேரம்கூடப் போதாது பார்த்து முடிக்க. காரணம் எடுத்துப் போட்ட இருபது ரகங்களும் அவளுக்குத் திருப்தி தருவதாக இல்லை. கரை பிடித்திருந்தால் கலர் பிடிப்பதில்லை. இரண்டும் பிடித்திருந்தால் டிசைன் புதிதாக இல்லை - பழசாக இருக்கிறது என்ற குறை. கலரும் அமைந்து, கரை யும் பிடித்து, டிசைனும் லேட்டஸ்ட் டாக இருந்துவிட்டால்கூடத் துணிந்து எடுத்துவிட மாட்டார்கள். காரணம் இந்த கலரில், இதே ஷேடில் ஏற் கனவே ஒரு புடவை இருப்பது போன்ற ஞாபகம் அல்லது அடுத்து நின்று கொண்டிருக்கும் ஒரு பெண்மணி கையில் எடுத்து வைத்துக் கொண்டிருக்கும் புடவை ரொம்பவும் நன்றாயிருப்பது போன்ற ஒரு பிரமை. எனவே அந்த அம்மாள் அதை எப் போது கீழே போடுவாள் என்று காத் திருக்கிற கட்டாயம்.

இப்படியாகப் பெண்கள் தேர்வு முடிவில்லாத் தொடர்கதையாகப் போய்க் கொண்டே இருக்கும்.

இன்னும் சில பயந்த பெண்கள் இருப்பார்கள். இதன் விலை 'அவருக்கு' சம்மதமாகுமோ என் னவோ? எடுத்துக்கொண்டு போய் விட்டால் பிறகு யார் திட்டு வாங்கிக் கட்டிக் கொள்வது என்ற பயத்தில் வேறு வியாபாரத்தைப் பாதியில் விட்டு விட்டுப் போய் விடுவார்கள். இதையெல்லாம் தவிர்க்கத்தான் அந்தப் புத்திசாலி அமெரிக்க வியாபாரி உங்க ளுடன் உங்கள் மனைவியையும் அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று விளம்பரம் செய்தார். கண வனையும் அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று அவர் ஏனோ விளம் பரம் செய்யவில்லை. வியாபாரத்தை நிச்சயிக்க வேண்டியவர்கள் மனைவி களே என்பதனால் போலும் மனை வியை அழைத்துக்கொண்டுவர மனுச் செய்துள்ளார். மங்கலம் என்ப மனை மாட்சி அல்லவா?

இப்படி இருவருமாகச் செல்வதால் வியாபாரம் சீக்கிரம் முடிகிறது என்ப துடன் இருவருக்கும் சேர்ந்து துணி எடுக்கப்படுவதால் இரண்டு பங்கு வியாபாரம் நடக்கவும் வாய்ப்பாகிற தல்லவா?

சரக்கு முறுக்காக இருப்பதுடன் செட்டியாரும் முறுக்காக இருந்ததால் தான் இப்படி நுணுக்கமாக விளம்பரம் செய்யத் தோன்றியிருக்கிறது. இல்லா விட்டால் கடையைத் திறப்பது, வந்து கேட்டவர்களுக்கு இருப்பதைக் கொடுப்பது, பிறகு கடை சாத்துவது என்று ஆகிவிட்டால் விற்பனைக் கூடம் யந்திர கதியில் இயங்கும் ஒரு அரசாங்க அலுவலகம் போல் ஆகி விடும். அங்கு விற்பனை கலையாக இருக்காது - கடனே என்று இருக்கும். இது நல்லதல்ல. எனவே விற்பனை ஒரு கலையாக அமைய செட்டியாரும் முறுக்காகச், சரக்கும் முறுக்காக இருக் கப் பார்ப்போம். தொழில் சிறக்க - நாடு முன்னேறத் தொடர்ந்து உழைப் போம்.

உல்லாசம் பொங்கும் தீபாவளி
பள்ளியெங்கும் விடுமுறை தந்திடும் தீபாவளி
ஆடிடுவோம், கூடிடுவோம்
ஆனந்தமாய் பாடிடுவோம்.



Pratibha/LIC/156/89 TM

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

கனம்பாடிக் கனம் பெற்றவர்

கலைத் துறையில் தாமே முயன்று கற்று முதன்மை பெற்ற வித்துவான்கள், கலையன்பர்கள் பலர் உண்டு. அப்படிச் சங்கீதத்தில் தேர்ச்சியடைந்த, சங்கீத மார்க்கங்களில் ஒன்றான கன மார்க்கத்தில் தலை சிறந்து விளங்கியவர் கனம் கிருஷ்ணையர் என்ற இசையறிஞர். திருச்சியிலுள்ள உடையார்பாளையம் தாலுக்காவில் உள்ள திருக்குன்றத்தில் பிறந்தார். தந்தையார் பெயர் இராமசாமி ஐயர். சங்கீதத்திலும், தமிழிலும் சிறந்த பயிற்சி பெற்றவர். ஐந்து சகோதரர்கள் - ஒரு சகோதரி. தந்தையிடத்திலேயே இளமைப் பயிற்சி பெற்றார். பிறகு தஞ்சையில் போய்ப் பயிற்சியைத் தொடர்ந்தார். அப்போதைய தஞ்சை மன்னர் சரபோஜி சிறந்த கலை ரசிகர். பல வித்துவான்களை ஆதரித்தவர்.

பொப்பிலி சமஸ்தானத்தில் அரசவை வித்துவானாக விளங்கிய கேசவையா கனம் பாடுவதில் தேர்ந்தவர். அவர் தஞ்சை மன்னர் சபையில் வந்து பாடினார். அவருடைய சாரீரம் சிமம கர்ஜனை போலிருந்தது. அந்தச் சங்கீதத்தில் மயங்கிய மன்னர், 'இந்தச் சபையில் கன மார்க்கத்தில் இவரைப் போல் பாடக்கூடியவர் உண்டா?' என்று வினவினார். எந்த வித்துவானும் பதில் அளிக்கவில்லை.

இயல்பாகவே தைரியமும், முருக பக்தியும் கொண்ட இளைஞர் கிருஷ்ணையர், 'தாம் கற்றுப் பாடுவதாக' உறுதி மொழிந்தார். கேசவையாவும் கற்றுக் கொடுக்க ஒப்புக் கொண்டார். ஒருசில மாதங்களிலேயே கன மார்க்கத்தின் சிறப்பியல்புகளையும், அதில் தானம் பாடும் முறையையும், சக்கரதானம் பாடும் அமைப்பையும் கற்றறிந்தார். மேலும் பயிற்சி செய்ய வசதியாக, கபிஸ்தலம் இராமபத்திர மூப்பனார் அவர்களின் உதவியுடன், கபிஸ்தலத்திலுள்ள ஆற்றங்கரை நாணற் காட்டில் தனிக் குடில் அமைத்துப் பயிற்சியைத் தொடங்கினார். மூப்பனாருடைய பணியாளர்கள் சுத்தமான பசும் வெண்ணெயை அவ்வப்போது கொடுப்பார்களாம்.

மிகவும் அருமையான, மற்றவர்களால் பாட முடியாத கன மார்க்கத்தில் தேர்ந்த கிருஷ்ணையர், தஞ்சை மன்னர் அவையில் அரங்கேற்றம் செய்தார். புன்னாகவராளியில் அமைந்த, 'ஏற்றசைக்கெல் லாங் கொடுக்கும், எல்லாக் கிழத்தையனை' என்ற கண்ணியைப் பாடினார். கன மார்க்கத்தில் நுண்ணிய இடங்களை எல்லாம் பளிச் பளிச்சென்று பாடிய கிருஷ்ணையரை, பொப்பிலி கேசவையா, 'குருவை விஞ்சிய சிஷ்யன் - தஞ்சை மண்ணின் பெருமை இது' என்று பாராட்டினார். மன்னர் மகிழ்ந்து பொன்னும், மணியும் பரிசளித்தார். அதுமுதல் கனம் கிருஷ்ணையர் என்ற பெயர் உண்டாயிற்று.

கிருஷ்ணையர் தமிழில் கீர்த்தனைகள் பல இயற்றியிருக்கிறார். தாம் பிறந்து வளர்ந்த திருக்குன்றத்து சௌந்தரராஜப் பெருமாள் மீது கீர்த்தனங்கள் இயற்றினார். திருவிடைமருதூரில் வாழ்ந்த அமரசிம்மர் என்ற ஹிந்துஸ்தானி வித்துவானுக்கு இவரிடம் மிகுந்த ஈடுபாடு. அமரசிம்மர் மீதும் பல கீர்த்தனைகள் பாடினார். ஒரு சமயம் உடையாளூர் சென்றிருந்த போது, அந்த ஊர் கிராம தேவதை செல்லமாகாளி வீதியுலா வந்தபோது, கல்யாணி ராகத்தில் 'வல்லமையுள் வல்லமையே' என்று ஒரு கீர்த்தனை பாடிப் பரவினார். பல தலங்களைத் தரிசித்து, அந்த அந்தத் தல இறைவன் மீது பல பாடல்களைப் பாடினார். ஸ்ரீரங்கம் சென்றிருந்த போது, 'ரங்க மயமான எங்கள் ஸ்ரீரங்க ராஜருடன்' என்ற கீர்த்தனம் பாடி வணங்கினார். தாம் வழிபடு கடவுளாகிய முருகன் மேல் நூற்றுக்கணக்கான பாடல்கள் புனைந்திருக்கிறார். அதில் 'வேலவரே யுமைத் தேடி' என்ற பைரவி ராகக் கீர்த்தனை பிரபலமானது.

திருவையாறு சென்றிருந்த போது தியாகையரவர்களைத் தரிசித்தார். அப்போது தியாகையர் சிஷ்யர்கள் அடாணாவில், 'ஏபாபமு' பாடிக் கொண்டிருந்தார்கள்; உடனே கவனம் பண்ணி, அடாணாவில் 'சும்மா சும்மா வருகுமா சுகம்' என்று பாடத் தொடங்கினார் கிருஷ்ணையர். தியாகையர் மகிழ்ந்து பாராட்டி, சால்வையைப் போர்த்தினார்.

நண்பர்களின் அழைப்புக்கிணங்கி, கிருஷ்ணையர் சென்னை சென்றார். அங்கே சில செல்வர்கள், அப்போதைய கவர்னர் ஸர் தாமஸ் மன்றோவுக்கு விருந்து வைத்தார்கள். அந்த விருந்தில் பாடிய கிருஷ்ணையரை, ஆங்கிலக் கவர்னரே பாராட்டி வெகுமதி அளித்தார்.

கபிஸ்தலம் மூப்பனாரைப் போல, இந்த வித்துவானை ஆதரித்தவர் உடையார்பாளையம் ஜமீன் கச்சிரங்கர். இவரைப் போலவே இந்த ஜமீன்தார் குமாரர்களும் ஆதரித்தார்கள். இவர்களைப் பற்றிப் பல கீர்த்தனங்கள் இயற்றியிருக்கிறார் கிருஷ்ணையர். ஒரு நாள் ஜமீனுக்குச் சொந்தமான தத்தனூர்க் கரும்புத் தோட்டத்தில் உரையாடிக் கொண்டிருந்த போது, கிருஷ்ணையர், 'கச்சிரங்க ராஜனடி உச்சிநற் போஜனடி' என்று பாட, ஜமீன்தார் ஐந்து காணி நிலத்தையும், அழகிய பல்லக்கையும் அளித்தார். கிருஷ்ணையர் குதிரைச் சவாரியில் தேர்ந்தவர். கச்சிரங்கரின் பிள்ளை கல்யாண ரங்கர் உதவியுடன், தம் சொந்த ஊர் பெருமாள் கோயிலைப் புனருத்தாரணம் செய்தார்.

வயது தளர்ந்த நிலையில், தம் சொந்த ஊரில் சென்று வசிக்கப் புறப்பட்ட போது, ஜமீன்தாரும், பிற ரசிகர்களும் வருந்தினர். 'கொடுத்து வைத்தது வரும் ஏறாசையால் மிகக் குறைப்பட்டால் வருகுமோ பேய் மனதே' என்று பைரவியில் பாடி, பிறரைத் தேற்றி, தம் ஊர்திரும்பினார்.

தில்லை நடராஜரைக் கனவில் தரிசித்தார். 'தில்லையப்பா உனது பஞ்சாட்சரப் படியில் சின்மயமாய்த் தினந்தினமும் வந்து தரிசிப்பேன்' என்று பாடியபடியே அமரரானார். அப்போது இந்தச் சங்கீத சிகாமணிக்கு அறுபது பிராயம் இருக்கும். இவர் இயற்றிய உருப்படிகள் சுமார் எண்பத்தைந்து என்று தெரிகிறது. இசைக்காகவே வாழ்ந்த இந்த இசை மேதையின் வாழ்க்கை ஏட்டின் சில பகுதிகளை வண்ணத்தில் அடுத்துக் காண்கிறீர்கள்.









பாஞ்ச ஜன்யம்

டாக்டர் நீரா. ஸ்ரீநிவாஸன்



தொல்பெருமை: பதினெண் நாள் பாரதப்போர தொடங்கவிருக்கிறது! ''ஞாலத்தையெல்லாம் நடுங்கமுறல் வன பாலன்ன வண்ணத்துன் பாஞ்சஜன்யமே,'' என்று சொல்லும்படியான, தனது வெள்ளை விளிசங்கைக் கையி லெடுத்து; வாயில் வைத்து ஊதுகிறார் கிருஷ்ண பரமாத்மா! சங்ககோஷம் வானைப் பிளந்து, உலகத்தையே நடுங்கவைக் கிறது. போர் நிகழ்ந்து, நூற்றுவரை வீழ்த்தி ஐவரை வாழ வைக்கிறான் மாயக் கண்ணன்!

போருக்குக் கொடிகாட்டியது பாஞ்சஜன்யத்தின் பேரொலி; வலம்புரியின் வலிமை! பாஞ்சஜன்யம் ஒரு சங்கு. இயற்கையில் கடலன்னை தரும் மகத்தான விளைவு. சங்கு மிகவும் தொன்மையும் பெருமையும் வாய்ந்தது. நம் நாட்டி லல்லாது உலகில் ஒரு பழைய கலாச்சாரம் என்று கருதப்படும் கிரேக்க நாட்டிலும் சங்குக்கு முக்கியத்துவம் இருந்திருக்கிறது. இது ஏன் என்று பார்க்கலாம்!

சங்கும் கிளிஞ்சலும்: நமது மாபெரும் உலகில், சமுத் திரமே பெருவாரியான நிலப்பரப்பை மூடிக்கொண்டிருக் கிறது. பஞ்சமகா சமுத்திரங்கள் என்று சொல்லப்படும் இந் திய, அட்லாண்டிக், பசிபிக், ஆர்க்டிக் மற்றும் அண்டார்க்டிக் எனும் ஆழ் கடல்கள் பூமியின் சுமார் முக்கால் பாகத்தை நீரால் நிரப்புகின்றன. கடலிலே பல்லாயிரக்கணக்கான உயிரினங் கள் வாழ்கின்றன. கண்ணுக்குத் தெரியாத சிறு ஜந்துவி லிருந்து, வண்ண வண்ண மீன்கள், நண்டு, நத்தைகள், கடலாமைகள், சுறா என, பிரும்மாண்டமான திமிங்கலம் வரை கடல் நீரிலே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வருவன. இம்மாதிரியான கடல் வாழ் உயிரினங்கள்தாம் சங்கு; கிளிஞ் சல், மேலும் முத்துச்சிப்பியும். ஆழியிலே விளைகின்றன சங்கும், மணிகளும், முத்துக்களும். ஸம்ஸ்கிருதத்தில் ''சங்கின்'' என்ற சொல் சமுத்திரத்தைக் குறிக்கும். சங்கைத் தோற்றுவிப்பதாலேயே கடலுக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள் ளது என்பது எளிதில் தெரிய வரும்.

மென்மையும் கெட்டியும்: சங்கு, கிளிஞ்சல், நத்தை, முத்துச்சிப்பி ஆகியவை ஒரு வகையான உயிரினங்கள். இவற்றின் உடல் மிகவும் மென்மையானது. வழுவழுப் பானது. மென்மையான உடலுக்குமேலே கெட்டியான ஓர் ஓடு இருக்கும். இம்மாதிரியான மென்மையான சதைப் பிண்ட உடலும் கெட்டியான மேலோடும் கூடிய உயிரின வகைக்கு ''மொல்லஸ்க்'' என்று பெயர். லத்தீன் மொழியில் இதற்கு மென்மையானது என்று அர்த்தம்.

மென்மையான ஜந்துக்களில் ஒரு வகையானது தனது வயிற்றுப் பாகத்தை அடியில் கொண்டு, அதன்மூலம் ஊர்ந்து செல்லும் தன்மையது. இவ்வகைக்கு ''காஸ்ட்ரோ போடா'' எனப்பெயர்; அதாவது வயிற்றால் ஊர்ந்து செல்லும் பிராணி என்று பொருள். நத்தையைப் பார்த்திருப்பீர்கள்! அடியில் வழவழப்பான சதைப் பிண்டம்; மேலே கடினமான ஓடு. ஆபத்து நேரும் என்று அதற்கு அறிகுறி இருந்தால் டக்கென்று தனது தலை, அடிவயிறு ஆகிய பாகத்தை, கூட்டுக்குள்ளே இழுத்துக்கொள்ளும். இது போன்ற ஒரு பிராணிதான் சங்கும். சங்கிலும் எண்ணற்ற வகைகள் உண்டு. மேலோடு கெட்டியாக இருப்பதோடல்லாது, வளைந்து வளைந்து காணப்படும். வரி வரியாகக் கோடுகளும் சிறு பள்ளங்களும் காணப்படும். சங்கு வளைந்திருப்பதே அதன் தனித்தன்மை!

வலஞ்சுழிமர்மம்: சங்கு சிறு முட்டையிலிருந்து தோன்று கிறது. வளரும்பொழுது அதன் உடலமைப்பில் மாற்றம் ஏற் படுகிறது. எப்படியெனில், முதலில் சங்கின் சிறு ஓடு தோன் றும்பொழுது, உள்ளிருக்கும் ஜந்துவானது தலைகீழாகத் தொங்கும்! கால் பக்கம் கீழேயும், தலைப்பக்கம் உள்ளே மேலேயும் இருக்கும். வளரும்போது, உள்ளிருக்கும் பூச்சி யானது கொஞ்சம் கொஞ்சமாக ஒரு பல்டி அடிக்கிறது. இதனால் கால்பக்கம் மேலே போய்த் தலைப்பக்கம் கீழே வருகிறது. வெளியே தெரியும் பாகத்தில்தான் தலையும் வயிறும் இருக்கின்றன. வயிற்றால் ஊர்ந்து செல்லுகிறது. மேலும் வளரும்பொழுது சங்கின் உடல் முழுவதும் சுற்றிச் சுற்றி வளைந்து கொண்டே போகிறது. இதனால்தான் சங்கின் ஓட்டில் உள்ளே வளைவுகளும் வெளியே வரம்புகளும் தெரி கின்றன. எவ்வளவு வரம்பு இருக்கிறதோ அவ்வளவு உடல் வளைந்து கொடுத்திருக்கிறது என்று தெரியவரும்.

இம்மாதிரி வளைவு இருப்பதால் சங்கு தன்னுடலை உள்ளே இழுத்துக்கொள்ள, சாதகமாக இருக்கிறது. இவ் வளைவுகளுக்குச் சுழிகள் என்று பெயர். இத்தன்மைக்கு ஆங்கிலத்தில் ''கன்வல்யூஷன்'' என்றும் ஸம்ஸ்கிருதத்தில் ''சங்காவர்த்த:'' என்றும் பெயர். இதனின்று நம் முன் னோர்களுக்குச் சங்கில் சுழி ஏற்படும் தன்மை புரிந்தே இருக்க வேண்டுமென்று நாம் ஊகிக்கலாம்!

ஆனால், இன்று விஞ்ஞானம் வளர்ந்துள்ள நிலையில், சங்கின் சுழியை எக்ஸ்-ரேக் கதிர் மூலம் படம் பிடித்துள்ள னர். எப்படி நமது உடலில் உள்ள எலும்பு மாத்திரம், எக்ஸ்-ரே படத்தில் நன்றாகத் தெரிகிறதோ, அதுபோலவே, சங்கின் எக்ஸ்-ரே படத்தில், அதன் ஓட்டிலுள்ள வளைவுகள் துல்லிய மாகத் தெரிகின்றன. ஒருவிதச் சங்கின் எக்ஸ்-ரேயைப் படத் தில் காண்க. சங்கின் உடல் வளரும்போது, சுழி பெரும் பாலும் இடப்பக்கம் வளைந்து செல்லும் தன்மையுடையது. சில சமயங்களில் மட்டுமே, மாறுதலாக வலப்பக்கம் சுழித்துக் காணப்படும். இதுதான் வலம்புரிச் சங்கு. கிடைத்தல் அரிது; எனவே விசேஷமானதும் கூட. பாஞ்சஜன்யமும் இம்மாதிரி இயற்கையில் தோன்றும் விசேஷ வலம்புரிச் சங்கே!

சங்கு காலம்: சங்கு, கிளிஞ்சல் ஆகியவை பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக உயிர் வாழ்ந்து வந்து கொண்டிருக்கின்றன. உயிர் நீத்தபின் இவற்றின் மேலோடுகள் சமுத்திரத்தின் அடிமட்டத்தில் அமிழ்கின்றன. காலக் கிரமத்தில், நீரின் அடியிலுள்ள மண், மணல் இவற்றில் சிக்கி அமுக்கம் பெருகின்றன. மண் இறுகிப் பாறையாகிறது. அப்போது பாறையின் நடுவில் சங்கு சிக்குகிறது; பத்திரப்படுத்தப்படுகிறது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இம்மாதிரி பாறைகளைத் தோண்டி எடுத்து, மேல் கொணர்ந்து ஆராய்கின்றனர். இதனின்றும் பாறைக்குள் மாட்டிக்கொண்டு சங்கு எவ்வளவு காலம் இருந்திருக்கிறது என்று கண்டுபிடிக்கின்றனர். இப்படி ஆராய்ச்சி செய்ததன் மூலம் சங்கு சுமார் ஆறு கோடி வருஷம் முன்பே, வாழ்ந்திருக்கின்றது என்ற உண்மை தெரிய வருகிறது. சங்கும் கிளிஞ்சலும் அவ்வளவு பழமை வாய்ந்தன. மனித இனம் தோன்றுவதற்கு முன்னமேயே சங்கு தோன்றியிருந்தது என்பது அதிசயமாகத் தோன்றலாம்! ஆனால் அதுவே உண்மை!

சங்கோதரா: கண்ணன் வாழ்ந்த இடம் துவாரகை என்று மகாபாரதம் கூறுகிறது. அங்கே கடலோரத்தில் மிக அழகான தீவு இருந்ததாகவும் அதற்குச் **சங்கோதரா** என்று பெயர் என்றும் தெரிகிறது. சமுத்திரத்துக்கு ''சங்கின்'' என்ற பெயருண்டு என்று மேலே சொல்லியபடி, சங்கோதரா என்ற பெயருக்குச் சங்கைத் தன் வயிற்றில் அதாவது தன்னிடத்தில் கொண்டது என்ற விளக்கம் தொனிக்கிறது. இன்று ஆழ்கடல் அகழாராய்ச்சி செய்து வரும் விஞ்ஞானிகள், துவாரகைக்கு அடுத்து மூன்று கிலோமீட்டர் தூரத்திலுள்ள, பெட் துவாரகா எனும் தீவுப்பகுதியே சங்கோதராவாக இருந்திருக்கவேண்டும் என்று கருதுகின்றனர். மேலும், ஆழ்கடல் ஆராய்ச்சியின் விளைவாக இங்கிருந்து பற்பல சங்குகள், வளையல்கள் ஆகியவற்றைக் கண்டெடுத்துள்ளனர். பெயரிலேயே பொதிந்து கிடக்கும் உண்மை இன்று விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது!

வெண்மையும் தன்மையும்: சங்கின் தோற்றம் பொதுவாக வெண்மையாக இருக்கும். சில சமயங்களில் பழுப்பு நிறமாயும், மஞ்சள் நிறமாயும் இருக்கும். வெளித்தோற்றம் எப்படி இருந்தபொழுதிலும், உள்ளே எப்பொழுதும் வெள்ளை வெளேர் என்றிருக்கும். பளபளப்பாகவும் இருக்கும். சங்கின் மேல் பக்கம் சொரசொரப்பாகவோ, அல்லது மேடு பள்ளமானதாகவோ, சிறு, பெரு, முள் கூடியதாகவோ இருக்கலாம்; ஆனால் உள்ளே வழவழப்பாகவே இருக்கும். மிகச்சிறிய சங்கானது உருவத்தில் சுமார் அரைக்கால் அங்குல அளவு நீளமே இருக்கும். பெரிய சங்கு நீளத்தில் ஒரு சாணுக்கு மேலேயே இருக்கும்; அகலத்தில் ஆறு அங்குலமும் மேலேயும் இருப்பதுண்டு. சங்கின் வகைகள் சொல்லிலடங்கா! ஆனால், ஒரு முக்கிய விஷயம் என்னவெனில் எல்லாச் சங்கும் சுண்ணாம்புக் கல்லாலானது. இது ரசாயனப்படி 'கால்ஷியம் கார்பனேட்' எனப்படும் பொருள். சாதாரணமாகச் சுண்ணாம்புக் காளவாயில் போகும் கல், குண்டும் குழியுமாயும் இருக்கும் எனினும் இயற்கையின் இந்திரஜாலத்தால், அதே ரசாயனப் பொருள்தான் சங்காகவும் முத்தாகவும் மாறுகிறது!

ஊது கோல்: கடல் வாழ் சங்கு உயிர் நீத்தபின் அதன் சடலமாகிய கூடு அலைகளால் அடித்துத் தள்ளப்பட்டுக் கரையில் வந்து ஒதுங்குகிறது. இம்மாதிரி ஒதுங்கிய சங்கை எடுத்தே, மனிதன் பல வேலைகளுக்குப் பயன்படுத்துகிறான். நன்கு விளைந்து முதிர்ந்த பெரிய வெண் சங்கின் தலையில் ஒரு துவாரம் செய்து, அதனை ஓர் ஊது குழலாகப் பயன்படுத்தியுள்ளனர். நம் நாடல்லாது தொல் பெருமை வாய்ந்த கிரேக்க சாம்ராஜ்ய காலத்திலும் சங்கநாதம் ஒலித்திருக்கிறது!

கிரேக்க ஐதிகத்தின் படி, அம்மக்கள் ''போஸிடான்'' என்பவரைக் கடல் தெய்வமாகக் கருதினர். அவருக்கு, 'ஆம்பிட்ரைட்' எனும் கடல் கன்னியிடமிருந்து பிறந்தது 'ட்ரிடான்' எனும் ஆணுருவம். இவன் இடுப்புக்கு மேலே மனித உருவுடனும், கீழே மீனுருவுடனும் காணப்பட்டான். இந்த ட்ரிடானின் தனிச் சின்னமாகி விளங்கியது சங்கு! இவன் கடலிலேயே வாழ்ந்ததாகவும், அவ்வப்பொழுது சங்கூதிக் கொண்டிருந்தான் எனவும் சொல்லப்படுகிறது.

சங்கை அறுத்து அதனின்றும் கைவளை செய்வது ஒரு தனிக்கலை. இதனை வங்காளத்தில் வெகுவாகக் காணலாம். நம் வழக்கப்படி, சுமங்கலிகளுக்குத் தாலி எனும் திருமாங்கல்யம் எவ்வளவு மங்களமானதும், அவசியமானதுமாகுமோ, அப்படியேதான் வங்காளிப்பெண்களுக்குச் சங்குவளையல்! சங்கு வளையல் கையில் கண்டால் அப்பெண் சுமங்கலி என்று அறியலாம்! மேலும், சங்கினால் செய்த கொலுசு போன்ற காலணிகளும், மோதிரம், மெட்டுக்களும் உண்டு. வங்காளி விவாகத்தில், நாம் மாங்கல்யதாரணம் எனும் சொல்லும் சடங்குக்குச் சமமாக, வங்காளி சுமங்களிகள் மும்முறை சங்கூதி முகூர்த்தத்தை நிறைவேற்றுகின்றனர். ''சங்க நூபுரிணி'' என்றால், சங்கு வளையல், காலணி அணிந்த மங்கலச் சின்னமுடைய பெண் என்று பொருள்.

''முத்துக்குளிப்பதோர் தென் கடலிலே'', என்று பாடினார் பாரதியார். முத்துக்குளிப்பது தமிழரின் ஒருதொன்று தொட்ட தொழில். இன்று தென்னகத்தில், சங்கு எடுப்பதில் ஏறத்தாழ ஆயிரம் மீனவர்களுக்கும், சங்கு கைவினைப் பொருள்கள் செய்வதில் சுமார் ஐயாயிரம் பேர்களுக்கும் வேலைவாய்ப்பு கிட்டியுள்ளது. சங்கு கைவினைப் பொருள்களை வெளிநாட்டுப் பயணிகள் விரும்பி, வாங்கி எடுத்துச் செல்லுகின்றனர்.

சங்குப் பால்: சங்குக்குப் பல உபயோகங்கள் உண்டு. 'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'. சங்கைச் சுட்டு அதனின்று கிடைக்கும் சாம்பல் போன்ற பொடி ஆயுர்வேத மருந்தாக இருக்கிறது. இதற்கு 'சங்கபஸ்மம்' என்று பெயர். இதைப் போலவே முத்துபஸ்மமும் செய்வதுண்டு; மிகவும் விலையுயர்ந்தது. ஆனால் சாதாரணமாகக் கிடைக்கும் கிளிஞ்சல்களிலிருந்து சுண்ணாம்பு செய்யப்படுவதை, இன்றும் காணலாம். கிளிஞ்சல் சுண்ணாம்பு மிகவும் மென்மையாக இருக்கும்; நல்ல காரம் தோய்ந்தது. கிளிஞ்சல்களில் ஒருவகைதான் தங்கக்கௌரி என்பது. பார்ப்பதற்கு மிகவும் பளபளப்பாக இருக்கும். ஒரு காலத்தில், தங்கக்கௌரி பிஜித்தீவின் அரசச் சின்னமாக விளங்கியிருக்கிறது. மேலும், தங்கக் கௌரிக் கிளிஞ்சல்கள் நாணயமாகவும் உபயோகப்பட்டிருக்கின்றன. மேற்கு ஆப்பிரிக்காவின் பழங்குடி மக்களின், வழக்கப்படி மணப்பெண்ணுக்கு ஆண்மகன் ஒரு லக்ஷம் தங்கக்கௌரிக் கிளிஞ்சல்களைப் பரிசமாகப் போடவேண்டும். அதுதான் அக்கால ஆப்பிரிக்க கன்னியின் உயர் மதிப்பு!

'சங்கக்ஷீர' என்றோர் சம்ஸ்கிருதச் சொல் இருக்கிறது. இதற்குச் சங்குப்பால் என்று பொருள்! புலிப்பால் ஒருக்கால் கிடைத்தாலும் கிடைக்கலாம்! ஆனால், சங்கிலிருந்து பால் எடுப்பது எப்படி? மணலைக் கயிறாகத் திரிப்பது எப்படி? எனவேதான், முடியாத ஒரு காரியத்துக்குச் சங்குப்பால் என்ற பெயர் வந்துள்ளது! பெண்களை வருணிக்கப் புகுந்த சம்ஸ்கிருதக் கவிகள் அவர்களை நான்கு வகைகளாகப் பிரித்துள்ளனர்! அதில் ஒருவகைக்குச் சங்கினி எனப்பெயர்! சங்கை எடுத்துக்காட்டாகக் கொண்டு, அதன் தோற்றம், வெண்மை, மென்மை, தூய்மை இவைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த பாகுபாடே இது. இதே போல், மற்ற மூவகைப் பெண் திலகங்கள் சித்ரிணி, பத்மினி, ஹஸ்தினி ஆவர்!

சங்க இலக்கியம்: சங்கின் பெருமை, தமிழ்மொழியின் தொன்மை வாய்ந்த சங்ககால இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. புறநானூற்றில் வரும் ஒரு பாடல் குறிப்பிடத்தக்கது. தமிழ்ப்புலவர் பெருமான் நக்கீரருக்கும் சிவபெருமானுக்கும் ஒரு சமயம் வாக்குவாதம் நடப்பதான காட்சி! இதில் இடம் பெறும் கருத்து வேற்றுமை யாதெனில், பொன்னார் மேனியனின் பத்தினியான மலையான் மகளுடைய கருங்கூந்தலுக்கு இயற்கையாகவே நறுமணம் உண்டா இல்லையா என்பது தான். புலவர் தம் கருத்தை வலியுறுத்தியதைக்கண்டு கொதித்தெழுந்த மகேசன் தன் நெற்றிக்கண்ணைத் திறந்து நக்கீரரை எரிதழல் தீயால் வாட்டுகிறான். வாதமின்றிக் கோபமே தலை தூக்குகிறது! அஞ்சாநெஞ்சம் படைத்த புலவர், சிறிதும்

தளராது, மார் நிமிர்ந்து, ஆடலரசனைப் பார்த்துச் சொல்லுகிறார். இதோ பாடல்:

> சங்கறுப்பதெங்கள் குலம்
> சங்கரனார்க்கேது குலம்,
> சங்கை அறுத்துண்டு வாழ்வோம் அரனே
> நின்போல் இரந்துண்டு வாழ்வதில்லை காண்.

ஆதி அந்தமில்லாப் பழம் பொருளுக்குக் குலமே இல்லையென்றும், மண்டை ஓட்டைக் கையிலேந்திப் போவதே பிக்ஷாடனன் தொழிலென்றும், எள்ளி நகையாடுகிறார் நக்கீரர்! ஆனால், தங்களுக்குச் சங்கறுக்கும் குலமென்றும், அதனாலேயே கௌரவமாகப் பிறரிடம் கை தாழாமல் வாழ்வதாகவும் மார் தட்டுகிறார்! என்ன துணிச்சல்!

பின்னர் கதை நீண்டு சிவன் சினம் நீங்கிச் சமாதானமாகி, புலவர் பெருமைக்குடையவர் ஆகிறார்! இதிலிருந்து நமக்குத் தெரிவது யாதெனில், தமிழகத்தில் சங்க காலத்தில், கடல் தரும் செல்வமாகிய சங்கை எடுத்து, அறுத்து, அதனின்றும் ஆபரணம் செய்யும் தொழில் செழித்தோங்கி இருந்திருக்கிறது என்பதாகும்.

நாலாயிரம்: சங்கைப் பற்றிய குறிப்புக்கள் தமிழிலக்கியத்தில், சங்க காலத்துக்குப் பின் பல நூல்களில் இடம் பெற்றுள்ளன. தமிழ்க் கவிதையில் சங்குக்கோர் தனியிடமுண்டு. சங்கின் அழகிய தோற்றம், வெண்மை, உபயோகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, எழுந்த கவிதைகள். நமது சமய நூல்களை இயற்றியவர்கள் சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களுமாவர். எனினும், வெண்சங்கானது திருமாலின் இடக்கையை அலங்கரிப்பதால், வைணவ சமயக்குறவர்கள், சங்கைப் பற்றி நிரம்பப் பேசியிருக்கின்றனர். இவை நாலாயிரம் எனும் நூலில் காணக்கிடக்கின்றன. மேலும் விஷ்ணுவின் கையிலும் கிருஷ்ணன் கையிலுமிருந்தவை'' சங்கின் வலம்புரி'', என்றும் கூறுகின்றனர். பன்னிரு ஆழ்வார்களில் விஷ்ணு சித்தர் என்பாரொருவர். அல்லும் பகலும் அனவரதமும், சதா சர்வ காலமும் இவர் விஷ்ணுவைத் தன் சித்தத்தில் நிலை நிறுத்தி வைத்திருந்தமையாலேயே இப்பெயரைப் பெற்றார். தம் :;த்திரியான கோதையை அழகிய மணவாளனுக்கே தாரை வார்த்துக் கொடுத்தமையால், இவர் பெரியாழ்வாரானார்!

பெரியாழ்வார் கண்ணனின் திரு அவதாரத்தில் விசேஷ ஈடுபாடுடையவர். குழந்தைக் கண்ணனின் பாதாரவிந்தத்தில் மெய் மறக்கிறார்! அவ்வளவு பக்திப்ரேமை!

> ''ஒரு காலில் சங்கு ஒரு காலில் சக்கரம் உள்ளடி பொறித்தமைந்த,
> இருகாலுங்கொண்டங் கெழுதினாற் போல் இலச்சினை படநடந்து........''
> (பெரியாழ்வார் திருமொழி 1-7-6)

கொச்சு கிருஷ்ணன் எனும் சொலும்படியான சின்னக் கண்ணனின் சிறு கால்களிலே, கைரேகை போலவே, கடவுள் சின்னமான சங்கும் சக்கரமும் காணப்படுகின்றனவாம்.

வரக்கூவு!: பெரியாழ்வாரின் அயோநிஜை எனும் பிறவா மகளாகிய சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் ஆண்டாள். ''வாழையடி வாழை'' யெனத் தந்தையைப் போலவே பரமாத்மாவிடத்தில் மனத்தைப் பறிகொடுத்த தூய நங்கை நல்லாள். கோதை காத்யாயனி விரதம் எனும் நோன்பு நோர்த்து, கண்ணனையே கணவனாக அடையவேண்டுமென்று விழைகிறாள். அதிகாலையில் துயிலெழுந்து கன்னியர்களை அழைத்துக் கொண்டு மார்கழி நீராடப் போகிறாள். இதனை விளக்குகிறது திருப்பாவை! உறங்கும் தோழி ஒருத்தியை எழுப்ப முனைந்து ஆண்டாள் சொல்லுகிறாள்; ''வெள்ளை விளி சங்கின் பேரரவம் கேட்டிலையோ?'', என்று. ''சங்க நர்தம் கோவிலிலிருந்து வெளிக்கிளம்பி, திக்கெட்டும் எட்டுகிறது. இது உன் காதில் விழவில்லையா? நீ என்ன செவிடா?'', என்று கேட்டு,'' இன்னும் உறங்குதியோ?'', 'எழுந்து வா, போகலாம்' என்கிறாள். ஆற்றுக்கு நீராடப்போகும் பொழுது, தோழியர் வம்பு பேசாமல், கடைத்தேறும் வழிகாட்டும்,

> ''சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன்
> பங்கயக்கண்ணனைப் பாடலோரெம் பாவாய்!'',

என்று சங்குக்கு முதலிடம் கொடுத்துப் பேசுவது குறிப்பிடத்தக்கது.

காத்தியானி விரதத்தால் ஆண்டாளுக்குப் பயனொன்றும் காணவில்லை! எனவே காமவேளை நோக்கி அனங்கனுக்குப் பூசை செய்கிறாள். கண்ணன் வரக்காணோம்! உடல் மெலிந்து, கை வளை கழன்று கண்ணீரும் கம்பலையுமாகக் கதறுகிறாள் ஆண்டாள். அப்பொழுது கண்ணனுக்கு ஒரு தூது விடுகிறாள். குயிலைப் பார்த்துச் சொல்லுகிறாள். ''சங்கொடு சக்கரத்தான் வரக்கூவு!'', என்று. விரகதாபத்திலும் பத்மநாபன் பெயரை நேரே சொல்லாமல், சங்கையே முன் கொண்டு விளிக்கிறாள்! இது சங்குக்குக் கோதை அளித்தபெருமை!

கருப்பூரம் நாறுமோ?: சங்குக்கு முதலிடம் கொடுத்த ஆண்டாளுக்கு, சங்கின் பெரும் பாக்கியத்தை நினைக்கும் போது, பக்தி வெள்ளத்தோடு, கவி வெள்ளமும் சேர்ந்து பெருகிப்



பாய்ந்து வருகிறது. 'நாச்சியார் திருமொழி' எனும் நூலில், ஒரு பத்துப் பாட்டு முழுவதும் சங்கைப் பற்றியதே! கற்பனை தடம் புரண்டு ஓடுகிறது; சந்தமும் கூடவே அழகாக வருகிறது. ''வாசுதேவன் கையில் குடியேறி வீற்றிருந்தாய் கோலப் பெருஞ்சங்கே'', என்று புகழுகிறாள். இப்பத்தில் முதல் பாட்டுகள் பனைக்கோர் எல்லை; கவித்திறனுக்கோர் எடுத்துக் காட்டு! வாருங்கள்! அநுபவிக்கலாம்!

> ''கருப்பூரம் நாறுமோ கமலப் பூ நாறுமோ
> திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ,
> மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்,
> விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.''
> (நாச்சியார் திருமொழி -7-1)

மிகவும் அநுபவித்து, ரசித்துப் பேசுகிறாள் கோதை. ''ஏ! பாஞ்சஜன்யமே! என்னே உன் பாக்கியம்! கர்ப்பூரம் நல்ல கந்தமுடையது; தாமரைப் பூ நறுமணமுடையது. இது எனக்குத் தெரியும். ஆனால், செங்கனிவாய் கண்ணனின் அதரம் எப்படி இருக்கும்? என்ன சுவையும் வாசனையும் உடையதாயிருக்கும்? பேதை, யான் அறியேனே! ஏ! வெண் சங்கே! மாதவன் வாயில் நீ இருந்திருக்கிறாய். அதர ரஸத்தைப் பருகி

யிருக்கிறாய்! அநுபவிக்கும் பாக்கியம் உனக்குக் கிட்டியிருக்கிறது! எனவே, நான் உன்னை வேண்டிக் கேட்கிறேன்? கண்ணனின் வாயமுதமும் சுவையும் எப்படி இருக்குமென்று கொஞ்சம் சொல்லேன். நேராக அநுபவிக்கும் பாக்கியம் கிடைக்காவிட்டாலும், உன்னிடமிருந்தாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறேன்! அந்த இன்பமே எனக்குப் போதும்'' என்கிறாள்.

தாமரை மலர்மேல் தேன் பருகும் அன்னம் போல் வாசுதேவன் வாயமுதத்தைப் பருகும் சங்கைக் கண்டு, பக்திக்கு மேலே ஒரு மரியாதையும் பிறக்கிறது! உடனே, ''சங்கரையா, உன் செல்வம் சாலவழகியதே!'' என்கிறாள். ''ஏ! வெள்ளாழியே! என்னே உன் பாக்கியம்! யாருக்கும் கிடைக்காத ஒரு செல்வம் உனக்குக் கிடைத்திருக்கிறதே!'' ஆகையால் மரியாதையுடன்'' சங்கரையா'', என்று நயம்படச் சொல்கிறாள். ஆண்டாள், சங்கைப் பற்றி மற்றுமொரு மிகவழகிய சித்திரம் தீட்டுகிறாள். அதாவது கோபகன்னிகைகள் பாஞ்சஜன்யத்தின் பேரில் பொறாமையும், கோபமும் கொண்டிருக்கிறார்களாம்! ஏன் தெரியுமா?

மதுவாயில் :''உலகளந்தான் வாயமுதம் உண்பது'', நீ! ஆனால், ''பெண்படையாருன் மேல் பெரும் பூசல் சாற்றுகின்றனர்''. இதற்கு என்ன காரணம் என்று ஆண்டாளே பதில் சொல்லுகிறாள். மிகவும் ரஸமான பாடல்; மேலும் மனோதத்துவ உண்மை பொதிந்து காணும் இடம்; மென்மையான அநுபவத்தைப் பற்றி நயமாகச் சொல்லுகிறாள். இதோ!

''பதினாறாமாயிரவர் தேவிமார்பார்த்திருப்ப,
மதுவாயில் கொண்டாற்போல் மாதவன்றன் வாயமுதம்,
பொதுவாக வுண்பதனைப்புக்கு நீயுண்டக்கால்,
சிதையாரோவுன்னோடு செல்வப்பெருஞ்சங்கே''.

(நா. திருமொழி -7-9)

பெரியாழ்வார் திருக்குமரி பேசுவதாவது: ''ஏ! மகாபுண்ணியம் செய்த பாக்யவதியான, வெண்சங்கே! நீ மிகவும் கொடுத்து வைத்தவள்! மாதவனின் அதர ரஸமாகிய வாயமுதம் சுவைக்கின்றாய்! அது சரி! உன் மணாளனுடைய வாயை நீ முத்தம் கொடுப்பதைக் கொஞ்சம் ரகசியமாக வைத்துக் கொள்ளக் கூடாதா? இப்படித்தான் மிக கர்வமாக, எனக்கே கண்ணன் உரியவன் என்று காண்பிக்கும் தோரணையில், பதினாராயிரம் கோப கன்னிகைகள் பார்த்துக் கொண்டிருக்கும் போது, அதுவும் பட்டப்பகலில் இப்படித் தான் செய்வதா? கொஞ்சம் கூட உனக்கு லஜ்ஜை வெட்கம் இருப்பது போல் தெரியவில்லையே! பங்கயக் கண்ணன் அதரபானம் அமிர்தம்தான்! நீ, அதை ஒரேயடியாகக் குடித்து விட்டாய். மதுவுண்ட மயக்கம் வராமல் என்ன செய்யும்? இந்த போதையில் நீ ஒன்றை மறந்து விட்டாய்! கண்ணன் வாயமுதம் என்பது எல்லோருக்கும் பொதுச் சொத்து. அதை எல்லாரும் பகிர்ந்துண்ண வேண்டும். அப்படி இல்லாமல், ஒருவருக்கும் ஒரு துளிக்கூடக் கொடுக்காமல், நீயே, பேராசை மிகுதியில் அள்ளிப் பருகி ஆனந்திக்கிறாய்! இதனால்தான் கோபிமார் உன்னிடம் பொறாமையும் பெருங்கோபமும் கொண்டுள்ளனர்! ஜாக்கிரதை! தனியாக நீ அவர்களிடம் மாட்டிக் கொண்டால் உன் கதி என்னவாகும்?'' என்றெல்லாம் சிந்தித்துச் சொல்லுகிறாள் கோதை.

கண்ணன் பாஞ்சஜன்யத்தை ஊதுவதுதான் காட்சி! ஆனால், ஆண்டாளின் மனக்கண் காணும் கோலம் கவிதை நயமாக வெளிவருகிறது! கோதையின் கவி நயத்தை நாம் பருக ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

அருமருந்து: கடைசியாக, நாலாயிரத்திலிருந்து சங்கு இடம் பெறும் ஒரு காட்சியைக் காண்போம்! நம்மாழ்வாரின் திருவாய்மொழி என்பது சாமவேதசாரம் என்று ஆன்றோர் கணிப்பு. இதிலே நம்மாழ்வார், உலகிலே பரமாத்மாவாகிற பகவான் ஒருவனே புருஷன் என்றும், மனித இனமாகிற ஜீவாத்மாக்களெல்லாம் ஸ்திரீ அல்லது பெண் ஸ்வரூபம் என்ற தத்துவக் கொள்கையைப் பின்பற்றி, பெண்ணாக நினைத்து, நாயகி பாவத்தில் பேசும் இடம் மிகவும் சுவையுடையது. பரந்தாமனை நினைந்துருகும் பெண் எப்படி இருக்கிறாள்? சங்கை முதலாகக் கொண்டு பாடல் வெளி வருகிறது:

''சங்கென்னும் சக்கரமென்னும் துழாயென்னும்,
இங்ஙனே சொல்லும் இராப்பகலென் செய்கேன்''

(திருவாய்மொழி, 4-2-9)

பகவத் ப்ரேமைக்கு உருகும் பேதையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் இங்கே! அது சரி! நோயை கண்டுபிடித்தாகி விட்டது; மருந்து கொடுத்தால்தானே குணமாகும்! மருந்தும் தயார்! இதோ, என்று சொல்லுகிறார்.'' மதுவார் துழாய்முடி மாயப்பிரான் கழல்வாழ்த்தினால், அதுவே இவளுற்ற நோய்க்கும் அருமருந்தாகுமே'' கண்ணன் கழலருளே, தீரா நோயாம் வல்வினையைத் தீர்க்கும் அருமருந்து!

சங்கபாணி: சங்கின் அவதாரத்தையும், விசேஷத்தையும் பார்க்கும் போது, இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் இருக்கும் ஓர் அம்சத்தையும் கவனிக்க வேண்டும். ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமமானது, **'சங்கபாணி:''** என்று திருமாலை, சங்கை அழகிய கையிலேந்தியவன் என்று சொல்லுகிறது. மேலும் ''சங்கபிருத்'' எனும் சொல் விஷ்ணுவையே குறிக்கும்.

பஞ்சாயுத ஸ்தோத்திரம், திருமாலின் ஆயுதங்களான சங்கு, சக்கரம், கதை, வாள், வில் இவைகளின் பெருமையைப் பேசி, இவைகளைத் துதிப்பவர்கள், பாவம் நீங்கி, சகல கஷ்டங்களும் விலகி, சுகம் பெறுவர் என்று சொல்லுகிறது. இதில் வருவதான சங்கைப் பற்றிய சுலோகம் வருமாறு:

விஷ்ணோர்முகோத்தானில பூரிதஸ்ய
யஸ்யத்வனிர்தானவதர் பஹ்ந்தா!
தம்பாஞ்சஜன்யம் சசிகோடிசுப்ரம்
சங்கம் சாதஹோம் சரணம் பிரபத்யே

அதாவது விஷ்ணுவின் வாயில் வைத்துக் கிளம்பும் எந்தப் பேரொலியானது அசுரக் கூட்டங்களுக்குக் காலனோ, அதைத் தோற்றுவிக்கும், ஆயிரம் கோடி சந்திரப் பிரபையுடன் விளங்கும், அந்த பாஞ்சஜன்யத்தை நான் எப்பொழுதும் சரணமடைகிறேன், என்பதாகும். மேலும் கவிச் சிங்கம் என்று புகழ் பெற்ற ஸ்ரீவேதாந்த தேசிகன், ஸ்ரீ ஷோடசாயுதஸ்தோத்திரத்தில், ஆயுத புருஷனான சுதர்சனத்தின் பதினாறு ஆயுதங்களை வருணிக்கிறார். அதில் சங்கைப் பற்றி,

தாரத்வம் யஸ்யஸம்ஸ்தானே சம்தேச பரிதிருச்யதே!
ப்ரபோ: ப்ரஹரணேந்த்ரஸ்ஸ பாஞ்சஜன்ய: ஸபாதுவ:

என்று சொல்லுகிறார். அதாவது, எந்தச் சங்கின் உருவத்திலும், ஒலியிலும், ப்ரணவத்தின் வடிவும் தன்மையும் காணப்படுகிறதோ, அந்த, ஆயுத ராஜனான பிரபு ஸ்ரீ சுதர்சன புருஷனுடைய, பாஞ்சஜன்யம் உங்களைக் காத்தருள்க, என்று பொருள்படும். இதில் ஸ்ரீதேசிகன் மிக அழகான ஒரு கருத்தை வெளியிடுகிறார். பாஞ்சஜன்யமெனும் சங்கானது தோற்றத்தில் ''ஓம்'', எனும் பிரணவ மந்திரத்தை ஒத்திருக்கிறது. நாதமே பிரணவத்தின் அடிப்படை; ஓங்காரத்திலிருந்தே உலகம் எழுந்துள்ளது. எனவே, பிரணவஸ்வ ரூபமும் தன்மையும் பெற்று விளங்குவதே, பாஞ்சஜன்யத்தின் பெருமைக்குக் காரணம் என்று சொல்லுகிறார். தத்துவம் பொதிந்த, ஆழ்ந்த கருத்து.

விமலன்: அமலன், விமலன், நின்மலன் என்று ஆதி பிரானாகிய பரம்பொருளைப் போற்றுகின்றார் திருப்பாணாழ்வார். கீழ் குடியில் பிறந்த பாணர் பகவத் பிரேமை தடம் புரண்டு, சங்குசக்கார மேந்திய திருமாலின் திருவடியிலே நேராகக் கலந்த பெருமை பெற்ற தொண்டர் திலகம்.

'சங்கு சக்கரத்தனென் கோ,
சாதிமாணிக்கத்தையே.'' என்று நம்மாழ்வார் சொல்லியதில், சங்கெனும் பாஞ்சஜன்ய தாரியான பத்மநாபன் பெருமை பேசப்படுகிறது. திருநாரணனுக்கு வாழ்த்து எனும் மங்களா சாஸனம் செய்த பெருமை, சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாம் ஆண்டாளின் தந்தையாம் பெரியாழ்வார் ஒருவருக்கு மட்டுமே உரியது! இவர் தமது வாழ்த்துப் பாவில் குறிப்பாக, 'படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்ஜன்யமும் பல்லாண்டே', என்று சங்கையும் தனியாக வாழ்த்துகிறார்! எனவே, ''வெள்ளை விளிசங்கு இடங்கையிற் கொண்ட விமலனை'',ப் போற்றிப் பணிந்து, நல்வாழ்வு பெறலாம்!


மகிழ்ச்சி பொங்கும் இந்நன்னாளில்
மனமுவந்த வாழ்த்துக்கள்!
டி.வி. சுந்தரம் அய்யங்கார்
& சன்ஸ் லிமிடெட்
மதுரை மற்றும் கிளைகள்
சுந்தரம் மோட்டார்ஸ்
சென்னை மற்றும் கிளைகள்
TVS
TVS

சிறுவர் பகுதி

விருந்து வைக்கிறோம், விருப்பமா வாங்க!

— சங்கர்

ஏலமலைப் பிராந்தியம் அடர்ந்த காட்டுப் பிரதேசம். நூற்றுக் கணக்கான மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. பெரிய பெரிய ஆலமரங்கள் விழுதுவிட்டுப் பரந்திருந்தன. மலையருவியிலிருந்து வெண் பளிங்கு போன்ற நீர் அந்தக் காட்டை வளப்படுத்தியது. அந்தக் காட்டில் சிங்கம், புலி, சிறுத்தை, யானை முதல் சுண்டெலி வரையில் வாழ்ந்து வந்தன. விதவிதமான வண்ணக் கிளிகள், மருண்டு ஓடும் மான் இனங்கள், பொதி சுமக்கும் கழுதைகள், அழகாய்ப் பாடும் மைனாக்கள் எல்லாம் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன.

அந்த வனத்தில் வாழ்ந்து வந்த கரடி ஒன்றுக்கு ஓர் ஆசை, தன் குட்டிக்கும் மனிதர்களைப் போல் திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்று. தன் மகளுக்கு ஏற்றாற் போல் ஓர் ஆண் கரடிக் குட்டியைத் தேடிப் பார்த்தது. காட்டின் இன்னொரு மூலையில் வாழ்ந்து வந்த கரடிக்கு ஒரு ஆண் குட்டி இருப்பதாகக் குயில் ஒன்று கூறியது.

மறுநாளே அந்தக் கரடியைப் போய்ப் பார்த்தது. தன் ஆசையை வெளியிட்டு, 'என் பெண் மிகவும் அழகாக இருப்பாள். உங்கள் பிள்ளைக்குக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்' என்று கேட்டுக் கொண்டது.

''என் பையனை நீ பார்த்திருக்கிறாயா?'' என்று கேட்டது புதுக்கரடி.

''இல்லையே'' என்றதும், தூக்கத்திலிருந்த தன் பிள்ளையை எழுப்பி வந்து காட்டியது.

வாளிப்பாக, கொழு கொழுவென்றிருந்த குட்டிக்கரடியைப் பார்த்ததும் பிடித்துவிட்டது.

''உங்கள் பிள்ளையை எனக்குப் பிடித்துவிட்டது. என் பெண்ணைப் பார்க்க வருகிறீர்களா?'' என்று கேட்டது தாய்க்கரடி.

''வேண்டாம். உன்னைப் பார்தாலே, உன் குட்டியும் நன்றாக இருக்கும் என்று புரிகிறது. திருமணத்தைச் சிறப்பாக நடத்த முடியுமா? எனக்கு இருப்பது இந்த ஆண் குட்டி ஒன்றுதான்'' என்று கேட்டது புதுக்கரடி.

''தாராளமாகச் செய்கிறேன். எனக்கும் ஒரே பெண் தான். விலையுயர்ந்த உடுப்புக்கும், உணவு வகைக்கும் ஏற்பாடு செய்கிறேன். காட்டில் வாழும் சகோதரர்களுக்கெல்லாம் விருந்து வைக்கப் போகிறேன் ஆனால்....?'' என்றது பெண் குட்டியின் தாய்.

''என்ன 'ஆனால்...' என்று இழுக்கிறாய்!'' என்று கேட்டது சம்பந்திக்கரடி.

''ஒன்றுமில்லை, நீங்களும் வரதட்சிணை என்று நிறைய எதிர்பார்ப்பீர்களோ... என்றுதான் பயமாயிருக்கு...''

'அஹ்ஹா... அஹ்ஹா' என்று சிரித்தது சம்பந்திக்கரடி.

''நன்னா சொன்னே போ! பண்பாட்ல நாம எல்லாரும் முன்னேறிட்டோம். வரதட்சணையாவது வராத தட்சிணையாவது! முட்டாப் பசங்க, அந்த மனுசங்க பழக்கமில்லே... இம்... புரியுதா? பயப்படாதே!'' என்றது சம்பந்திக்கரடி.

தாய்க்கரடியின் முகத்தில் ஒளி படர்ந்தது.

''நல்ல நாள் பார்த்துக் கல்யாணத்தை ஜாம் ஜாம்னு முடிச்சிடலாம்'' என்றது மேலும்.

அப்போது கையில் புத்தகத்துடன் வந்தது ஒரு குரங்கு.

''எங்கே போகிறாய்? கையில் என்ன புத்தகம்?'' என்று கேட்டது தந்தைக்கரடி.

''புத்தகமா இது? பஞ்சாங்கம். நேற்று இரவு சிங்கம் வந்து, தன் மகனுக்குக் கல்யாணம் செய்ய நல்ல நாள் பார்த்துச் சொல்லும்படி கேட்டது. இரவில் பார்க்கக் கூடாது போ என்று அனுப்பிவிட்டேன். அதற்காகத்தான் போகிறேன். என்ன இருந்தாலும் சிம்மராஜா இல்லையா?'' என்றது குரங்கு.

''அப்படியா, ரொம்ப நல்லதாப் போச்சு. என் பிள்ளைக்கும் திருமணம் செய்ய வேண்டும். எனக்கு ஒரு நல்ல நாள் பார்த்துச் செல்லிவிட்டுப் போ'' என்று கேட்டது ஆண் குட்டியின் தந்தை.

''உனக்கா? நாள் கிழமை எல்லாம் உனக்கு எதற்குப் பார்க்க வேண்டும்? அற்பப் பிராணி நீ. சிம்மராஜா, யானை அண்ணன், வீரம் செறிந்த புலி அண்ணன், இவர்களுக்குத்தான் நல்ல நாள் பார்த்து சொல்வேன். நான் அரசாங்க ஜோதிடக்காரனாக்கும், தெருவில் அலைபவனல்ல'' என்றது குரங்கு.

''காட்டில் வாழும் நமக்குள் உயர்வு, தாழ்வு ஏது? தயவு செய்து பார்த்து சொல்லிவிட்டுப் போ'' என்றது பெண் குட்டியின் .தாய்.

''முடியாது. முடியாது. உங்களோட பேசிக் கொண்டிருப்பதே எனக்குக் கௌரவ குறைவு, வருகிறேன்'' என்று கூறிப் போய்விட்டது குரங்கு.

''இப்படி உயர்வு தாழ்வு பாராட்டுகிறதே! பல சாத்திரங்களைக் கற்றும் என்ன பிரயோசனம்? பணமும், அதிகாரமும், பெரிய உருவமும் இருந்தால்தான் மதிப்பா? என்றது தாய்க்கரடி.

''சரி போகட்டும். கவலைப்படாதே. எல்லா நாளும் நல்ல நாள்தான். அடுத்த வாரம் ஞாயிற்றுக் கிழமை கல்யாணத்தை நடத்தி விடலாம்'' என்றது தந்தைக்கரடி.

என்று அலட்சியமாக இருந்து விடக்கூடாது'' என்று கேட்டுக் கொண்டது.

''சேசே! இந்தக் காட்டில் வாழும் நமக்குள் உயர்வு தாழ்வு ஏது? எல்லாரும் சமந்தான். பிறப்பினாலோ உடல் பலத்தினாலோ உயர்வு தாழ்வு கற்பிப்பது முட்டாள்தனம் நிச்சயம் வருகிறோம்'' என்றது சிங்கராஜா.

''நான் வந்து தண்ணீர் பரிமாறுகிறேன் சாப்பாட்டுப் பந்திக்கு'' என்றது யானை அண்ணன்.

''நான் உணவு பரிமாறுகிறேன்'' என்றது புலி.

''நான் பாயாசம் போடுகிறேன்'' என்றது சிறுத்தை.

''நான் பாடுகிறேன்'' என்றது குயில்.

கரடிக்குத் தாங்க முடியாத சந்தோஷம். தன்னை அவமதித்த குரங்குக்கும் கரடி பத்திரிகை கொடுத்தது. ''பார்க்கலாம், பார்க்கலாம். நிறைய வேலை இருக்கிறது; முடிந்தால் சாயந்திரம் தலையைக் காட்டுகிறேன்'' என்றது குரங்கு.

கரடிக்குட்டிக்கு ஜாம் ஜாம் என்று திருமணம் நடந்தது. சிங்கமும், யானையும், புலியும், சிறுத்தையும் வந்திருந்தன. முன்பே கூறியபடி சாப்பாட்டுப் பந்தியிலும் பரிமாறின.

''அப்படியே செய்வோம்'' என்று ஆமோதித்தது பெண் குட்டியின் தாய்.

திருமணம் நிச்சயமானதில் சந்தோஷம் இருந்தாலும், குரங்கு பேசியது மனத்தில் உறுத்தியது. பெண் குட்டியின் தாய், தன் குடிசைக்கு வந்து, தன் மகளிடம் கூறியது. திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்தது. பக்கத்துக் குடிசைக் கரடியிடம், இரண்டு நாளைக்கு அதன் குடிசையை, மாப்பிள்ளை வீட்டினர் தங்கச் செய்ய வாங்கிக் கொண்டது. புதிய துணிமணிகள், மேளம், பூ, சமையலுக்கு ஆள் எல்லாம் தயார் செய்தது.

திருமணப் பத்திரிகை அடித்து எல்லாருக்கும் கொடுத்தது. அந்தக் காட்டில் வாழ்ந்த சிங்கராஜா, யானை அண்ணன், புலி, சிறுத்தை போன்றவற்றுக்கும் கொடுத்தது. சிங்கராஜாவிடம், யானை அண்ணனிடமும் மட்டும், ''நீங்க ரெண்டு பேரும் அவசியம் திருமணத்துக்கு வரவேண்டும். கரடிக் குட்டிக் கல்யாணத்துக்கு எதற்குப் போக வேண்டும்

இந்தச் சமயத்தில் குரங்கு ஓடி வந்தது, ''கல்யாணம் நன்றாக நடந்ததா?'' என்று கேட்டுக் கொண்டே. அதுவும் சாம்பார் பக்கெட்டைத் தூக்கியது.

''வேண்டாம், வேண்டாம். எங்கள் வீட்டுக் கல்யாணத்துக்கு நல்ல நாள் குறித்துக் கொடுத்தாலே உனக்கு அவமானம். திருமணத்துக்கு வந்தால் அதைவிட அவமானம். ஏதோ திருமண வீடு தேடி வந்துவிட்டாய். சாப்பிட்டு விட்டுப் போய்ச் சேர்'' என்று சம்பந்திக்கரடிகள் இரண்டும் குரங்கு கையில் இருந்த பக்கெட்டைப் பிடுங்கின.

இதைப் பார்த்த சிங்கராஜா, ''என்ன விஷயம்?'' என்று கேட்டுக் கொண்டு அருகில் வந்தது.

கரடிகள் இரண்டும் நடந்த விஷயத்தைக் கூறின.

''அட முட்டாள்! சிங்கமும் சரி, சுண்டெலியும் சரி ஒன்றுதான். இது கூடத் தெரியாதா? ஒரு சமயம் என்னையே காப்பாற்றிய சுண்டெலி கதை தெரியாதா?



இறைவன் படைப்புக்குள் உயர்வு தாழ்வு காண்பது முட்டாள்தனம். சாஸ்திரம் கற்ற நீயே இப்படி நடந்து கொள்ளலாமா?'' என்று கூறிக் கர்ஜித்தது சிங்கராஜா.

தும்பிக்கையைத் தூக்கிப் பிளிறிக் கொண்டு ஓடி வந்தது யானை அண்ணன்.

குரங்கு, பாவம், மிகவும் பயந்துவிட்டது.

''தப்புதான். மன்னித்து விடுங்கள். நீங்கள் எல்லாம் கரடிக்குட்டி கல்யாணத்துக்கு வரமாட்டீர்கள் என்று எண்ணினேன். ஆனால் விருந்து சாப்பிட்டு விட்டு வந்த கழுதை நீங்கள் எல்லாம் வந்து சிறப்பித்ததாகக் கூறியதைக் கேட்டு ஓடோடியும் வந்தேன். குரங்கு புத்தி, மன்னித்து விடுங்கள்'' என்று கரடிகள் கால்களில் விழுந்தது குரங்கு.

''சாப்பிட்ட இலையை எடுத்துச் சுத்தம் செய், அதுதான் தண்டனை'' என்று கட்டளையிட்டது சிங்கராஜா.

''பாவம், சாப்பிட்டு விட்டுச் செய்யட்டும்'' என்றது யானை.

திருமண விருந்தை ஒரு கை பார்த்து விட்டு, குரங்கு தன் வேலையைத் தொடங்கியது. ○

எம். ராமரத்தினம், சென்னை - 61

ஆனைக்குக் கரும்பு தின்ன ஆசை. வழி காட்டக் கூலி கேட்காதீர்கள்! ஆனைக்கு உதவுங்கள்!

விடுமுறை நாள்

விடுமுறை நாள் வந்து விட்டால்
வேலை நிறையக் குவியுதே!

சின்னச் சைக்கிள் ஏறி எங்கள்
தெருவைச் சுற்றி ஓட்ட'ணும்!

தொலைந்து போன பந்தைத் தேட(த்)
தோட்ட மூலை கிளற'ணும்!

தோட்டக் குழாய் நீரில் ஆடித்
தொப்ப மாக நனைய'ணும்!

ஓர மாகப் பள்ளம் வெட்டி
உடைந்த பல்லைப் புதைக்க'ணும்!

மாடிப் பூனைக் குட்டி யாவும்
மறைந் திருந்து பார்க்க'ணும்!

பம்ப ரத்தைத் தந்து மோகன்
பட்டம் மாற்றாய் வாங்க'ணும்!

கடலின் ஓரம் எடுத்த கிளிஞ்சல்
கவன மாகப் பிரிக்க'ணும்!

கத்த ரித்த படங்கள் தேடிக்
கண்ண னுக்குக் காட்ட'ணும்!

காலை நேரம் மாலை நேரம்
காத்தி ருக்கு வேலையே!

விடுமுறை நாள் வந்து விட்டால்
வேலை நிறையக் குவியுதே!

தம்பி சீனிவாசன்



விடுகதைப் புதிர்

சில விடுகதைகள் இங்கே உள்ளன. இவற்றுக்குத் தகுந்த பதில் தெரிகிறதா என்று பாருங்கள். இல்லையேல் 216 - **ஆம் பக்கத்தைப் புரட்டுங்கள்.**

1. கட்டைக் காளை குட்டைக் கொம்பு; கிட்டப் போனால் முட்ட வருகிறது.
2. ஏரி தண்ணீர் வற்றவற்ற; எருமைக் கடா உப்பஉப்ப.
3. மூன்று காசுக் குதிரைக்குப் பின்னால் கடிவாளம்.
4. மாரி இல்லாமல் ஆமை கெட்டது; ஆமை இல்லாமல் சீமை கெட்டது.
5. பட்ட மரத்தில் பச்சை, அதிலும் சிவப்பு.
6. மடக்காமல் பறக்குதே அதென்ன மந்திரி; சிமிட்டாமல் விழிக்குதே அதான் அரசே.
7. காட்டில் ஒரு தூக்கு வெல்லம் வைத்தேன்; ஈயும் தொட வில்லை, எறும்பும் தொடவில்லை.
8. உள்ளங்கைச் சர்க்கரை, ஊருக்கெல்லாம் அக்கறை
9. அக்கினிப் பழத்தைக் கக்கிவிழுங்குதே அது என்ன மந்திரி? வாலைப் பிடித்தால் வாயைப் பிளக்குதே அதுதான் அரசே!
10. கோணக் கோணக் கோட்டைகளாம்; கோட்டைக் குள்ளே கோடிமுத்தாம்; முத்துக்குள்ளே ராஜாத்தி முணு முணுத்து அழுவாளாம்.
11. வேலியைத் தாண்டி வெள்ளைக் குதிரை போய்விட்டது.
12. இண்டம் புதரிலே இடி விழுந்த இடத்திலே நான் வைத்த பணியாரம் காயவே இல்லை.

நாய்க் குடை!

லெமன்

சொந்தக் குடை பிடித்தபடி
சொகுசாய்ப் போவோரே - என்
சோகம் தீர ஒரு வார்த்தை
சொல்லிப் போவீரே!

அந்தக் குடை இந்தக் குடை
அரசர் வெண்குடை - என
அழகழகாய்ப் பல குடைகள்
அவனியில் உண்டு!

பட்டுக் குடை பர்மாக் குடை
பாரிஸ் குடை என்றும் - பற
பலவிதமாம் குடைகள் இந்தப்
பாரிலே உண்டு.

தட்டுக் குடை தளுக்குக் குடை
தாழங்குடை என்றே - சில
தனிரகத்துக் குடைகளும் நம்
தரணியில் உண்டு.

முந்தி பெய்த சிறுமழையில்
முளைத்த காளான் நான் - ஒரு
மருந்துக்காவேன் - விருந்துக்காவேன்;
மகிமைக் காளான் நான்

எந்த ஊரில் எந்த நாய்க்குக்
குடை பிடித்தேனோ - எனக்கு
இட்ட பெயர் நாய்க்குடையாம்;
என்ன செய்வேன் நான்?

கேட்காத

மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், கலகலப்பிலிருந்து திடீரென்று நிசப்தத்தில் உறைந்தது. கட்டிட வாயிலின் முன் அறுபதுக்கும் மேற்பட்ட சிப்பந்திகள், அவரவர் பதவி மற்றும் அந்தஸ்துக்கு ஏற்றவாறு இரு வரிசைகளாக ரோஜா, மல்லிகை, கதம்ப மாலைகளுடன் சற்றுத் தள்ளியிருந்த காம்பவுண்டு கேட்டையே பார்த்துக் காத்திருந்தார்கள். ஒரு சில சிப்பந்திகள் கைகளில் இரண்டு எலுமிச்சம் பழங்களை ஏந்தியும் உருட்டியும் பொழுதைப் போக்கினார்கள்.

ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாக நகர்ந்தது. உதவிக் கலக்டர் கடிகாரத்தைப் பார்த்தார். பத்து அடிக்க மூன்று நிமிடங்கள்.

இன்னும் மூன்று நிமிடங்கள். அவர் எதிர் வரிசையைப் பார்த்தார். ஏழெட்டுப் பெண்கள் முகமெல்லாம் வியர்வை முத்துக்கள் வெயிலில் பளிச்சிட நின்று கொண்டிருந்தார்கள்.

எங்கே சுமதி?

கலக்டருடைய காரியதரிசி எங்கே?

நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு, ''ஸ்டெனோ சுமதி ஆபீசுக்கு வரலையா?'' என்று எதிர்ப்பக்கம் பார்த்துக் கேட்டார்.

''அவ ஆபீசுக்குள்ளே இருக்கா, சார்!'' என்ற பதில் வந்தது.

அவர் பேசி முடிக்கவும், சைக்கிளில் ஓர் ஆள் காம்பவுண்டு கேட்டைத் தாண்டி விரைவாக வருவதும் சரியாக இருந்தது.

''யார் அவன்?'' - உதவிக் கலக்டர்.

''தெரியாது சார்''.

''அவனை எங்கேயாவது தள்ளி நிற்கச் சொல்லு.''

சாதாரண பாண்ட்டும் முழுக்கை ஷர்ட்டுமாய் முன்னேறி வந்த சைக்கிள் காரனைத் தலைமைக் குமாஸ்தா நிறுத்தினார்.

''ஆபீசுக்குள்ளே இப்பப் போக வேண்டாம்ப்பா. கொஞ்சம் தள்ளி வரப்போற கலக்டர்" கண்லே படாம நில்லு. இல்லாமப் போனா, ஆபீசுக்குப் பின்புறமாப் போ....... அவர் வந்து சேர்ந்தப்புறம் உள்ளே வரலாம்.''

அவன் பதில் பேசவில்லை. கட்டிடத்துக்குப் பின்புறமாகச் சைக்கிளைச் செலுத்தினான்.

கலக்டருடைய அறைக்குப் பக்கத்து அறையில் தன்முன் உறங்கிக் கிடக்கும் டைப்ரைட்டரையே பார்த்தவளாய்ச் சுமதி உட்கார்ந்திருந்தாள். ஆபீஸ் முழுதும் வாசலில் நின்று வழிமேல் விழி வைத்து நிற்கிறது. இந்தப் பொய்மையான மரியாதையிலும் வரவேற்பிலும் அவளுக்கு உடன்பாடில்லை. இதற்கு முன் பணி ஆற்றிய கலக்டரையும் இப்படித்தான் வரவேற்றார்கள். அவர் இருக்கும் போது தங்களுக்குள் அவரை விமர்சித்தார்கள். அவர் மாற்றலாகிச் சென்றபோது, தேனீர் விருந்து கொடுத்து, அவருடன் போட்டோவும் எடுத்துக் கொண்டு, அதன் பின்னர் போட்டோவைக் கையில் வைத்துக் கொண்டே வசை பாடினார்கள், ஏளனம் செய்தார்கள். அவள் யாரையும் வரவேற்கவும் மாட்டாள், பிரிவு உபசாரத்திலும் கலந்து கொள்ளமாட்டாள். அரசு நியமிக்கும் அதிகாரிகளில் கலக்டர் ஓர் அதிகாரி. அவள் கீழ்மட்டத்தில் இருக்கும் ஒரு சாதாரண சிப்பந்தி. அவருடைய வேலையும் பொறுப்பும் மாவட்டத்தை ஆட்சி செய்வது. அவளுடைய வேலை, அதிகாரி சொல்லுவதைக் குறுக்கெழுத்தில் எழுதி, டைப் அடித்துச் சமர்ப்பிப்பது. இப்படிக் கடமைகளை வரையறுத்து வைத்திருக்கும் போது, ஏன் இந்த ஏமாற்று வரவேற்பும் பிரிவு உபசாரமும்?

திடீரென்று பத்து அடித்தது.

ஒரு விநாடியில் சுமதி தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாள். கலக்டர், வாசலுக்கு வந்திருப்பார். மாலைகளின் கனத்தில் அவர் கூனிக்குறுகிப் போயிருப்பார்.

திடீரென அவளுடைய அறையில் அழைப்பு மணி ஒலித்தது.

கலக்டருடைய அறையிலும், நாற்காலியை இழுக்கும் சத்தம்? யார்?

நிச்சயமாகப் பியூனாக இருக்க முடியாது?

ஒரு வேளை உதவிக் கலக்டர் அழைக்கிறாரோ?

எப்போதும் தவறாமல் எடுத்துக் கொள்ளும் குறுக்கெழுத்துப் புத்தகம், பென்சில் மற்றும் டயரியை எடுத்துக் கொண்டு கலக்டருடைய அறைக்குள் பிரவேசித்தாள்.

ஒரு கண நேரம் அவள் வியப்பும் திகைப்பும் அடைந்தாள்.

கலக்டருடைய இருக்கையில் ஒரு ஒல்லியான, மாநிறமான ஆள், தலையைச் சரியாகக் கூட வாரிக் கொள்ளாமல், புன்னகை இல்லாமலே சிரித்த முகமாய் உட்கார்ந்திருந்தான்.

''குட் மார்னிங் சார்....... நான் சுமதி, உங்க ஸ்டெனோ.''

''உட்காருங்க!''

''தாங்க்ஸ்.''

''நான்தான் கலக்டர்னு உங்களுக்கு எப்படித் தெரியும்? கலக்டருடைய வருகையை எதிர் பார்த்து ஒரு கூட்டம் இன்னும் வாசல்லே காத்திருக்கே........!''

''இந்த ஸீட்லே ஒருத்தர் வந்து உரிமையோட உட்காரணும்னா ஒன்னு அவர் கலக்டரா இருக்கணும்...... அல்லது.......''

''அல்லது..........?''

''புத்தி சுவாதீனம் இல்லாதவனா இருக்கணும்......''

''என்னைப் பார்த்தா அப்படிப்பட்டவன் இல்லேன்னு நீங்க நினைச்சதுக்கு ரொம்ப தாங்க்ஸ்...... அது சரி, நீங்க ஏன் அவங்களோட நிக்கலே.''

''எனக்குப் பிடிக்கலே.''

''ஏன்னு தெரிஞ்சுக்கலாமா!''

''ஓ, தெரிஞ்சுக்கலாம். அவங்க கலக்டரைத்தான் வரவேற்கத் துடிக்கறாங்க. ஒரு மனுஷனை அல்ல சார்.... என்னைப் பொறுத்த வரை இந்த ஆபீஸ்லே உள்ள எல்லாரும் சமம். ஒரு உடம்போட பல அங்கங்கள். கால் சுண்டு விரலுக்கும் முக்கியத்துவம் இருக்கு.''

''ஓ, க்ரேட்...... உங்க பெயர்?''

''சுமதி.''

''தெரியும். இருந்தாலும் உறுதிப் படுத்திக் கொள்ளக் கேட்டேன். உன் பெரிய அக்கா சரோஜா இப்ப எங்கே இருக்கா? சின்ன அக்கா வித்யாவுக்குக் கல்யாணமாயிடுத்தா?''

''சார்...... நீங்க....... நீங்க.......''

''உன் அப்பாவைப் பொறுத்தவரை நான் ராமு. அம்மாவும் அப்பாவும் எப்படி இருக்காங்க?''

''சௌக்கியம் சார்.... நீங்க நீங்க..''

''எல்லாம் சொல்றேன்........ சாவகாசமாச் சொல்றேன். இன்னிக்கோ நாளைக்கோ நான் உன் அப்பாவைப் பார்க்க வருவேன். அப்ப எல்லாம் தெரியும்....''

''சார்........''

''என்ன?''

''ஒரு சின்னச் சந்தேகம். கேட்கலாமா?''

''ஷியூர்.''

''அவ்வளவு பேர் வாசல்லே நிக்கறப்ப, நீங்க எப்படி உள்ளே வந்தீங்க?.....''

''சைக்கிள்ளே வந்தேன். ஒரு ஓரமாகவோ, கட்டடத்துக்குப் பின்புறமாகவோ போய் நிக்கச் சொன்னாங்க.... நான் பின்புறக் கதவு வழியா உள்ளே வந்தேன். முதல் நாள் அன்றே, பேக் டோர் என்ட்ரி.''

சுமதியால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

''நான் போய் டெப்டி கலக்டரை வரச்சொல்றேன் சார்.''

''அதைச் செய்.... பாவம். எவ்வளவு நேரம்தான் வெயல்ல நிப்பாங்க!''

சுமதிக்கு எல்லாம் ஆச்சரியமாக இருந்தது. சரோஜா, வித்யா இருவரையும் தெரியும். அப்பாவுக்கு ராமு...... அவள் கடைசிப் பெண். எப்படி அவருக்கு இந்த ராம்ஜியைத் தெரியாமல் போயிற்று?

'நிச்சயமாக அப்பாவிடம் இந்தக் கலக்டர் ஒரு காலத்தில் மாணவனாக இருந்திருக்க வேண்டும். அல்லது அவள் கூட அறியாத தூரத்து உறவினர் குடும்பத்தை சார்ந்தவனாக இருக்க வேண்டும். சாயங்காலம் வீட்டுக்குப் போய் அப்பாவை விசாரித்தால் எல்லாம் தெரிந்து விடும்'.

ஆனால் ஒன்று மட்டும் அவளுக்குப் புரியவில்லை?

ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி ஏன் அரசு விருந்தினர் மாளிகையில் தங்கவில்லை? அரசு அளித்திருக்கும் காரில் வரவில்லை? ஏன், கீழ் அதிகாரிகளின் வரவேற்பு உபசாரங்களைப் புறக்கணிக்கிறார்?

சரியாக பன்னிரண்டரை மணிக்கு கலக்டர் சுமதியை அழைத்தார்.

அவள் உள்ளே சென்றாள்.

''ஸிட் டௌன்.''

ராம்ஜியின் குரலில் அவள் அதிகாரத்தைத்தான் உணர்ந்தாள். இது பற்றி அவள் கவலைப்படவில்லை என்றாலும், காலையில் நெகிழ்ச்சியுடன் பேசியவனால் எப்படி, இப்படிக் குரலைக் கடுமையாக வைத்துக் கொள்ள முடிகிறது?

முப்பது நிமிடங்கள் விடாமல் அவன் சரளமாக ஆங்கிலத்தில் சொல்லிக் கொண்டே வர, சுமதி, இதுவுரையில் எழுதியிராத வேகத்தில் தாள் தாளாக எழுதிக் கொண்டே வந்தாள்.

''டைப் அடிச்சு மூணு மணிக்குள்ளே என் கையெழுத்துக்கு அனுப்பணும்...!''

''யெஸ் சார்.'' சுமதி எழுந்தாள்.

''ஒண் மினிட்.''

அவள் காத்திருந்தாள்.

பியூன் சிவலிங்கம் ஒரு சிறு பையுடன் வந்தான்.

''என்ன வாங்கிட்டு வந்திருக்கே?''

''கலக்டர் ஐயா சொன்னபடி ஒரு எலுமிச்சம் பழ சாதப் பொட்டலம், ஒரு தயிர் சாதப் பொட்டலம், ஒரு பச்சை வாழப் பழம், சார்.''

''சாப்பாட்டு மேஜை மேலே பையோட வை.''

''சரி. ஐயா.''

''ஒரு மணிக்கு லஞ்ச டயம் ஆரம்பமாகிறது, இல்லே?''

''ஆபீஸைப் பொறுத்த வரை அப்படித்தான் சார்!'' கலக்டருடைய குரல் ராம்ஜியின் குரலாக மாறிவிட்டதை சுமதி உணர்ந்தாள்.

''அப்படீன்னா?''

''பாதி சாப்பிடும் போது கலக்டர் மணி அடிச்சா என்ன செய்கிறது.......

அதனாலே எனக்குன்னு லஞ்ச் டயம் ஒதுக்க முடியறதில்லே....."

"இது பழைய அநுபவம்?"

"ஆமாம்."

"ஒரு மணியிலிருந்து அரை மணி நேரத்துக்கு நான் உன்னை அழைக்க மாட்டேன். நீ போய்ச் சாப்பிடலாம்."

"சரி சார்."

"உன் அம்மா சமையலுக்கே தனி ருசி. எத்தனை நாள் நான் சாப்பிட்டிருக்கேன் தெரியுமா? சரோஜா, வித்யா நான் மூன்று பேரும் சேர்ந்து உட்காருவோம். உன் அம்மா ஒரு பெரிய கல் சட்டியில் மோர்ச் சாதம் பிசைஞ்சு வைப்பா. வடு மாங்காயும் இருக்கும். ஆளுக்கு ஒரு வாயா கையிலே போடுவா. அந்தக் கல் சட்டி பத்து நிமிஷத்திலே காலியாயிருக்கும். அப்ப நீ தூங்கிட்டிருப்பே......"

சுமதி எழுந்தாள்.

"இப்ப என் மோர்ச் சாதமும் வடு மாங்காயும் எவர்சில்வர் டிபன் பாக்ஸ்லே காத்திட்டிருக்குநான் வறேன் சார். சாப்பிட்டதும் டைப் அடிக்க ஆரம்பிக்கணும்!"

ராம்ஜி பதில் சொல்லவில்லை.

அவள் வெளியேறுவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

213-ஆம் விடுகதைகளின் விடைகள்: 1. முள்; 2. பணியாரம்; 3. ஊசி; 4. வேளாண்மை; 5. கிளி; 6. தட்டாம்பூச்சி; 7. நெருப்பு; 8. உப்பு; 9. குறடு; 10. ஆரஞ்சுப்பழம்; 11. பருத்தி; 12. தேன்கூடு.

பழைய நாட்கள் அவனையும் மீறிக் கண் முன் நின்றன.

அவன் ஆறு மைல் தொலைவிலுள்ள கிராமத்திலிருந்து - அங்கே தான் மாமா கிராம முன்சீபாக இருந்தார். தினசரி நடந்து வருவான். நடந்தே திரும்பிச் செல்வான். முப்பது பைசா கொடுத்தால் போதும். ஒரு வேளையாவது பஸ்ஸில் செல்லலாம். ஆனால் அதற்குக் கூட வழியில்லை. அம்மா கண்ணை மூடும் முன், அவனை மாமாவிடம் ஒப்படைத்தாள். அப்பா ஏற்கனவே போய்ச் சேர்ந்தாகி விட்டது. இந்த நிலையில் மாமியின் அதிகாரக் குடையில் அவன் ஒடுங்கி வாழ வேண்டிய நிர்ப்பந்தம். மாமா பெயருக்குத் தான் கிராம முன்சீபே ஒழிய, பகல் நேரமெல்லாம் சீட்டாட்டத்தில் கரைந்தது. அவருக்கு ஒரு குழந்தை கூட பிறக்காத காரணத்தினாலேயே ராம்ஜியைப் பாசத்துடன் வளர்த்திருக்க வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட பாசம் ஒன்றும் அவரைத் தீண்டி வதைக்கவில்லை. மாமி ஒரு தனி ரகம். அவனுக்கு வேளா வேளைக்குச் சோறு போட்டு, ஏதோ துணிகளும் வாங்கிக் கொடுத்தாளே தவிர, வேறு எப்படிப்பட்ட அன்பையு மழையாகக் கொட்டவில்லை.

மூன்றே மூன்று ஆண்டுகள்தான் அவன் கிராமத்தில் இருந்தான். எஸ்.எஸ்.எல்.சி வரைதான் தன்னால் படிக்க வைக்க முடியும் என்றும், அதன் பிறகு ராம்ஜி தன் காலால்தான் நிற்கவேண்டும் என்றும் மாமா நோட்டீஸ் கொடுத்திருந்தார்.

இரண்டு வருடங்கள் ராம்ஜி நரசிம்மனுடைய வகுப்பில் மாணவன். நரசிம்மன், இந்தக் காலத்து கமலஹாசன், சகலகலாவல்லவன்.

ஆங்கிலப் பாடம்தான் அவருடைய தொழில் என்றாலும், சரித்திரம் மற்றும் பூகோளம் இரண்டையும் அநாயாசமாகச் சொல்லிக் கொடுப்பார்.

ராம்ஜி அவருடைய கவனத்தைப் பிரத்யேகமாக ஈர்த்தான். காரணம், எல்லா மாணவர்களிடையேயும் முதல்வனாகத் திகழ்ந்ததுதான். பதினைந்து வயது பையனுக்கு இப்படிப்பட்ட புத்தி கூர்மையை தெய்வத்தால்தான் வரமாக அளிக்க முடியும் என்று அவர் எண்ணினார்.

பலப் பல சம்பவங்கள் அந்த இரண்டு வருடங்களில் நிகழ்ந்தன.

ஒரு நாள்.

வானம் சீறி எழுந்து தன் எரிச்சலை எல்லாம் கொட்டித் தீர்த்தது. மாணவர்களால் பள்ளிக் கட்டிடத்தை விட்டு வெளியே கூட வரமுடியவில்லை. குடைத் துணியையும் கிழித்து விரட்டும் அளவுக்குக் கனமான மழை.

"டேய் ராமு!"

நரசிம்மன் அழைத்தார்.

"இதோ சார்."

"நீ எப்படி வீட்டுக்குப் போகப் போறே?"

"மழை நின்னப்புறம், சார்."

"...... மழை கொஞ்சம் தளரட்டும். காத்தும் குறையட்டும்... நீ என்னோட என் வீட்டுக்கு வந்துடு."

"சார்... சார்..."

"நான் உன் டீச்சர்! நான் சொன்னதைத்தான் நீ கேட்கணும்."

முதன் முறையாக ராம்ஜி நரசிம்மன் வீட்டுக்குச் சென்றான்.

சொட்டச் சொட்ட வந்த பிள்ளைக்கு, தலையைத் துடைக்க துண்டும், உடம்பை மறைக்க வேட்டியும் கொடுத்தாள் மோகா. அவனைவிட ஒரு வயது பெரியவளான சரோஜா மற்றும் ஒரு வயது சிறியவள் வித்யா இருவரும் மௌனமாக வேடிக்கை பார்த்து நின்றனர். ஆறு வயது சுமதி எதையும் லட்சியம் செய்யாமல் ஜன்னல் வழியாக மழையைப் பார்த்து வியந்து நின்றாள்.

அன்றுதான் அவனுடைய கதை முழுதும் அந்தக் குடும்பத்துக்குத் தெரிய வந்தது.

இன்னொரு நாள்.

"ராமு!"

"சார்."

"உன் கிராமத்திலே காலரா நாளுக்கு நாள் அதிகமாகிட்டு வர்றது, தெரியுமா?"

"தெரியும் சார். மாமியை இந்த ஊர் ஆஸ்பத்திரியிலே தான் அட்மிட் பண்ணியிருக்காங்க."

"நீ என்ன செய்யப் போறே?"

"தண்ணியைக் கொதிக்க வைச்சு சாப்பிடுவேன்."

"யார் சமைச்சுப் போடுவா?"

"எனக்கு சமைக்கத் தெரியும், சார்."

"மாமா?"

"அவர் மாமியை ஆஸ்பத்திரியிலே சேர்த்துட்டு ஓட்டல்லே தங்கிட்டிருக்கார்."

"உன் கிராமத்திலே இந்தக் காலரா சூறாவளி முழுக்க அடங்கினப்புறம், உன் மாமி குணமாகி ஊர் திரும்பினப்புறம், உன் மாமா ஓட்டலைக் காலி செய்து போனப்புறம்தான், நீ இந்த வீட்டை விட்டுப் போவே. நான் ஒண்ணும் பணக்கார வாத்தியார் இல்லே... ஆனா மூணு பெண்களோட உனக்கும் சாப்பாடு போட முடியாத அளவுக்கு ஏழையும் அல்ல."

ராம்ஜி பதில் பேசவில்லை. அவனுடைய கண்கள் மட்டும் கனத்தன.

நாட்கள் சென்றன.

கிராமத்திலே காலரா ஒழிந்தது.

ராஜாமணி மாமா ஓட்டலைக் காலி செய்து ஊருக்குத் திரும்பினார்.

மாமி திரும்பவில்லை.

ஓரிரு மாதங்கள் ஓடின.

"சார், நீங்க எனக்கு எத்தனையோ உதவிகள் நான் கேட்காமலே செஞ்சிருக்கீங்க... இப்ப நான் உங்க உதவியைக் கேக்கறேன். அதை நான் கேக்கிற பிச்சையா நினைச்சு நீங்க தானமா வழங்கணும்!"

"மாமா வீட்டையும் நிலத்தையும் வித்துட்டார். இன்னும் அஞ்சாறு நாளிலே பாம்பே போறார். அங்கே என் பெரியம்மா இருக்கா. அவளோட இருந்துடறதுன்னு முடிவு பண்ணிட்டார்."

"அதுக்கு என்ன?"

"என்னையும் கூட வரச்சொல்றார். நான் படிச்சது போதும்ங்கறார். எஸ்.எஸ்.எல்.சி முடியட்டும்னு நான் கெஞ்சிப் பார்த்தேன். அவர் ரொம்பப் பிடிவாதமா இருக்கார். எனக்கு ஒரே ஒரு

வழிதான் தெரிஞ்சுது சார்... அது உங்க வீடு. எஸ்.எஸ்.எல்.ஸி.பரிட்சை எழுதி முடிக்கிற வரைக்கும் எனக்கு புகலிடம் உங்க வீடுதான் சார்!''

''நீ சரியான மண்டுடா! இனிமே என்னன்னிக்கும் என் வீடுதாண்டா உன் வீடு.''

இரண்டு மாதங்கள் விரைந்தோடின.

சரோஜா மகளிர் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி படித்து வந்தாள். அவனைப் போலவே அவளும் இறுதிப் பரீட்சை எழுதவேண்டும். இது ராம்ஜிக்குப் பெரிதும் அனுகூலமாக இருந்தது. இருவரும் சேர்ந்து கண்களைத் தூக்கம் தாக்கும் வரைப் படித்தார்கள்.

பரிட்சைக்குப் பிறகுதான் ராம்ஜியின் சரித்திரம் மாறியது.

லீவு நாட்களில் என்ன செய்வது என்று தெரியாமல் கலங்கிக் கிடக்கும் போது நரசிம்மனுடைய சிபாரிசால் உள்ளூர் மளிகைக் கடை ஒன்றில் கணக்கு எழுதும் வேலை கிடைத்தது.

ஒரு நாள், ''சார், நான் இந்த மளிகைக் கடையிலேயே என்னன்னிக்கும் புளி, மிளகாய் மாதிரி கிடந்துடக் கூடாது, சார்!'' என்றான்.

''நீ என்ன செய்யணும்னு ஆசைப் படறே, ராமு?''

''மேலே மேலே படிக்கணும் சார். நான் பி.ஏ. பாஸ் பண்ணணும்னு அம்மா கண்ணை மூடற அன்னிக்குக் கூட ஆசைப்பட்டா. ஆனா நான் அதுக்கும் மேலே படிக்கப் பிரியப்படறேன், சார்!''

நரசிம்மன் சிரித்தார்.

''கவலைப் படாதேடா... என்னாலான பிர யத்தனங்களைச் செய்யறேன்.''

சில வாரங்களிலேயே அவருடைய பிரயத்தனங்களுக்கு அவசியமில்லாமற் போய் விட்டது.

பரீட்சை முடிவுகள் வெளியாகின.

மாநிலத்திலேயே முதலாவதாக ராம்ஜி திகழ, ஒரு சில பத்திரிகைகளும் ரோடரி, லயன்ஸ் போன்ற நிறுவனங்களும் பண முடிப்புகளை அள்ளிக் கொடுத்தன. சென்னை விவேகானந்தா கல்லூரி இரு கைகளாலும் வரவேற்றது.

''சார், நீங்களும் மாமியும் சேர்ந்து நில்லுங்கோ!''

''எதுக்குடா? நமஸ்காரமா?'' நரசிம்மன் சிரித்தார். மனைவி மோகாவையும் அழைத்தார்.

''இதை என் காணிக்கையாக வாங்கிக்கணும் சார்.''

''என்னடா இது இந்தப் பையிலே?''

'மொத்தமா எனக்கு பதினெட்டாயிரம் ரூபா கிடைச்சிருக்கு சார். என் தேவை ஆயிரம் ரூபாதான். பாக்கி என்னைப் பெறாத அப்பா அம்மாவுக்கு.'' அவன் நமஸ்கரித்தான்.

''எழுந்திருடா மடையா... இந்தப் பணமும் பரிசும் பாராட்டும் உன் முயற்சியாலே கிடைச்சுது...''

''சார்!''

''நான் பைசா வாங்கிக்கமாட்டேன். எல்லாத்தையும் பாங்க்லே போடு. ஒரு நாள் உனக்கு தேவைப்படும்.''

''சார் என் அன்பையும் மரியாதையையும்...''

ராம்ஜிக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை.

''கடவுள் புண்ணியத்திலே, ஏதோ வசதியுடன் இருக்கோம் ராமு... நீ அவரைத் தப்பா எடுத்துக்காதே... முடிஞ்ச போதெல்லாம் இங்கே வந்து எங்களோடு கொஞ்ச நாள் தங்கிட்டுப் போ...'' என்றாள் மோகா.

''இன்னொண்ணையும் நினைவிலே வைச்சுக்கடா ராமு... நீ உன்னதமான நிலைக்கு நிச்சயம் வருவே. என்ன கஷ்ட நஷ்டம் வந்தாலும் யார்ட்டேந்தும் எதையும் எதிர்பார்க்காதே... ஏழை எளியவன்னு யார் கையேந்தி வந்தாலும் கையிலிருக்கிறதைக் கொடுக்கத் தயங்காதே... கைநீட்டி வாங்கறப்ப நம்ப

BRIGHTEN YOUR KITCHEN WITH

Anantha

PRODUCTS

MANUFACTURED & MARKETED BY :

KASIYANANTHA METALS

Factory :
L-2, Sidco Industrial Estate,
KODUNGAIYUR,
MADRAS - 600 051.

Office :
72, Nyniappa Naicken St.,
MADRAS - 600 003.

உடம்பு கூனிக் குறுகாமல் இருக்க லாம்... ஆனா மனசு என்னன்னிக்கும் கூனிக் குறுகிப் போயிடும்.''

நரசிம்மனுடைய இந்த வார்த்தைகள் ராம்ஜியின் மனத்தில் ஆழமாய்ப் பதிந் தன.

பி.ஏ. பரீட்சையிலும் மாநிலத்தில் முதன்மையாகத் திகழ்ந்த ான். இதை அவரிடம் கூற வந்தபோது, குடும்பம் வடக்கே போயிருப்பதாகத் தெரிய வந் தது. சரோஜா கான்பூரில் இருப்பதை அவன் அறிவான். பெண் வீட்டுக்குச் சென்றிருக்கக் கூடும் என்று நினைத்துத் திரும்பினான்.

இதன் பின்னர் ஆறுமாதங்களுக்கு அவன் உலகையே மறந்து ஐ.ஏ.எஸ். பரீட்சைக்குப் படித்தான். முடிவுகள் வெளியாயின.

பதினெட்டாவது இடத்தில் அவ னுடைய பெயர் பளிச்சென்று இருந்தது. அன்றைய இரவு ரெயிலைப் பிடித்து தஞ்சைக்கு ஓடினான்.

அவனுடைய துரதிர்ஷ்டம் நரசிம் மன் மட்டுமே வீட்டில் இருந்தார். மோகா வித்யா மற்றும் சுமதி மூவரும் மதுரைக்குச் சென்றிருந்தார்கள்.

அவருடைய ஆசிகளைப் பெற்று விட்டு சென்னை திரும்பிய அவன் ஓரிரு மாதங்களுக்குப் பிறகு பயிற்சிக்காக முசூரி சென்றான்.

அவன் பதவி ஏற்றது மத்தியப் பிர தேசத்தில். சாதாரணமாக, ஒரு மாநி லத்துக்கு நியமனம் செய்து விட்டால் இன்னொரு மாநிலத்துக்கு எளிதாக மாற்றல் கிடைக்காது. ஆனால் தமிழ் நாட்டில் இருந்த ஒரு போபால் வாசி மேலிடத்து சிபாரிசால் சொந்த மாநி லத்துக்குச் செல்ல, காலியான அந்த இடத்துக்கு ராம்ஜியை அனுப்பினார் கள்.

அவன் தான் படித்த ஊருக்கே வந் தான் மாவட்ட ஆட்சியாளராக.

சரியாக, பிற்பகல் இரண்டு ஐம் பதுக்கு சுமதி அவனுடைய அனுமதி யைப் பெற்று உள்ளே பிரவேசித்தாள். ஒரு கோப்பையை மேஜை மீது வைத் தாள்.

பிறகு திரும்பினாள்.

''மிஸ். சுமதி!''

''யெஸ் சார்.''

''என்னைப் பார்க்க மூன்று பேர் அடங்கிய குழு மூன்றரை மணிக்கு வரப் போகிறது. எதற்கு வருகிறதுன்னு உனக்குத் தெரியும் இல்லியா?''

''தெரியும்.''

''உன் அப்பா ரிடையர் ஆகிவிட் டாராம். ஒரு சிறந்த ஆசிரியர், பெருந் தன்மையுள்ள மனிதர், பிறருக்கு உதவி செய்வதையே லட்சியமாகக் கொண்ட வர் என்றெல்லாம் இந்தக் குழு தனது அறிக்கையில் எழுதியிருக்கிறது. அவ ருக்கு லட்சம் ரூபாய் நிதியும் திரட்டி இருக்கிறது. இந்த நிதியை, அவரைப் பாராட்டும் விழாவின் போது நான் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறது!''

''இதையெல்லாம் என்னிடம் சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்று எனக்குப் புரியலே.''

''நீ அவருடைய மகள்!''

''மூன்றரை மணிக்கு அவர்கள் வரும் போது நீயும் இருக்க வேண்டும். நான் கூறுவதை குறுக்கெழுத்தில் எழுதி டைப் அடிக்க வேண்டும். ஐந்து நிமிடங் களுக்கு மேல் ஆகாது!''

''யெஸ் சார்.''

''இன்னொரு விஷயம். நான் என் குருவையும் என் குரு பத்னியையும் காலையில் தரிசனம் செய்தேன். மூத்த பெண் இன்னும் கான்பூரில் இருப்பதா யும், இரண்டாமவள் பம்பாயில் இருப் பதாகவும்...''

''மூன்றாமவள் உள்ளூர் கலக்டர் ஆபீசில் குப்பை கொட்டுவதாகவும் கேள்விப்பட்டீர்கள்! அதானே.''

''ஒரு சந்தேகம்.''

''நான் உன் வீட்டுக்கு வந்த போது சரியா ஒன்பது மணி. பெட்டி படுக்கை யுடன் அங்கேதான் இறங்கினேன். உன் அப்பாவின் சைக்கிளில்தான் ஆபீசுக் கும் வந்தேன்...''

''சந்தேகம் என்னன்னு நீங்க இன் னும் சொல்லலே!''

''பதினஞ்சு வருஷத்துக்கு முன் னாடி நான் பார்த்த ஆறுவயசுப் பெண் ஏன் வீட்டில் இல்லைன்னு தெரியலே. சதா ஜன்னல் வழியா வேடிக்கை பார்த் துக் கொண்டும், தொட்டதுக்கெல்லாம் பிடிவாதம் பிடித்துக் கொண்டும் சீறி அழும் பெண்ணை என்னால் பார்க்க முடியாமற் போயிற்று.''

''இப்ப அவ வயசு ஆறு இல்லே, இருபத்தொண்ணு!''

மூன்றரை மணிக்கு அந்தப் பிரத் யேகக் குழு வந்தது. மூன்றுபேர் கலக்ட ருக்கு எதிராக அமர்ந்து கொள்ள, சுமதி பக்கவாட்டில் உட்கார்ந்து கொண் டாள்.

வந்தவர்களை அதிகம் பேசவிடாத ராம்ஜி, மூன்று நிமிடங்களுக்குள் பேசி முடித்து அவர்களை வெளியேற்றி னான்.

''இந்த டீச்சர் நரசிம்மனிடம் படிச்ச ஆயிரக்கணக்கான மாணவர்களில் நானும் ஒருவன். நீங்க சொல்லியிருக்கிற விஷயத்தையும் புரிஞ்சுக்கிட்டேன். ஆனா இந்த உள்ளூர்லேயே இருந்து கிட்டு அவரைச் சரியாப் புரிஞ்சுக்காம நீங்க இந்த ஏற்பாட்டைச் செய்திருக் கீங்க..... கைநீட்டி வாங்கிக்கிற அரசியல் ஆசாமிகளுக்கு நம்ப தமிழ் நாட்டில் பஞ்சமில்லே. அப்படிப் பட்ட ஒருத்தனைத் தேடிப்பிடிங்க, வேறு எவ னையாவது கூப்பிட்டு நிதி மூட்டையை அவன் தலைமேலே போடுங்க... இந்த டீச்சர் நரசிம்மன் கையை நீட்டறார்னா, அது கொடுக்கத்தான், வாங்க அல்ல. அவருடைய நிமிர்ந்த தலை நீங்க போடற மாலைகளுக்காகக் குனியாது. அவரைப் புகழணும்னா என்னைக் கேளுங்க. இகழ்றதுக்கு இப்படி ஒரு வைபவத்தை ஏற்பாடு செய்யாதீங்க. அவர் வரமாட்டார்.''

மூன்று பேரும் கற்சிலைகளாக உட் கார்ந்திருக்க, தன் கன்னங்களில் வழிந் தோடும் கண்ணீரையும் உணராமல் சுமதி நீர்த்திவலைகளினூடே ராம்ஜி யைப் பார்க்க-

''தட் இஸ் ஆல். நீங்க போகலாம்!'' என்றார் கலக்டர்.

மூவரும் சென்றபிறகு, ராம்ஜி சினத்துடன் பொரிந்து தள்ளினான்.

''என் குருவையா அவமதிக்கிறார் கள். ராஸ்கல்ஸ். என்ன கஷ்ட நஷ்டம் வந்தாலும் கை நீட்டக் கூடாதுன்னு எனக்கு போதித்தவரா கைநீட்டுவார்?''

சுமதி எழுந்தாள்.

''உன் அப்பா கை கொடுக்கிற கை. வாங்குகிற கை இல்லே... அதனாலே இன்னிக்கு நான் வாய்திறந்து ஒண்ணு கேட்கப் போறேன். என் நெடுநாளைய ஆசை இன்னிக்கு வார்த்தைகளாக வெடிக்கப்போறது. ஆனா அதுக்கு உன் அனுமதி தேவை!''

''என்ன, என் அனுமதியா?''

''ஆமாம், ஏன்னா அதிலே நீ சம்பந் தப் பட்டிருக்கே!''

''புரிகிறது கலக்டர் சார்! அப்புறம் என்னுடைய இந்த ஸ்டெனோ வேலை என்னாறது?''

''நான் மாவட்டத்தை ஆட்சி செய்ய றேன்... நீ அதைவிடப் பெரிசான குடும்பத்தை ஆட்சிசெய்யலாம். அங்கே உனக்கு நான் ஸ்டெனோவா இருக் கேன்!''

''அப்பா சொல்றபடி கேட்கிற பெண் நான்!''

''நிச்சயமா?''

''சத்தியமா!''

''போனமாசம் நான் எழுதின கடி தம் ரகசியமா இருக்கணும்னு சொல்லி யிருந்தேன். அவரும் ரகசியமாகவே தான் வைச்சிருக்கார். ஆனா அவர் ஒரு நிபந்தனை போட்டிருந்தார். 'என் பெண்ணோடு பூரண சம்மதமும் இருக் கணும்'னு. இப்ப நான் கேட்கலாம்!''

''யார்ட்டே?''

''கேள்வி அவர்ட்டே... அனுமதி உங்கிட்டே!''

''நான் சாங்க்ஷன் பண்ணியாச்சு... இப்ப நீங்க போகலாம்!'' ○

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

அனைத்து விவசாயிகளும் விரும்பி
வாங்குவது அயல் நாடுகளிலும்
விற்பனையாவது - உறுதிக்கும்,
உழைப்பிற்கும் பெயர் பெற்றது

Arasan Company Firm
51, High Road,
Tirunelveli - 627 001.

Phone : 24684/24754
Grams : 'SERVICE'

மகாபாரதப் போர் முடிந்தது. வாய்மை வென்றது. சூதும் வாதும் தோற்றன. கண்ணபிரான் முன்னிலையில் யுதிஷ்டிரருக்கு முடிசூட்டு விழாவும் சிறப்பாக நடந்தது. அறத்தை நிலை நாட்டிய மன நிறைவுடன் கண்ணன், தம் தங்கை சுபத்திரையுடன் துவாரகைக்குப் புறப்பட்டான்.

போகும் வழியில் மேவார் என்ற ராஜபுத்திர நாடு இருந்தது. அங்கே தவச்சித்தி பெற்ற உத்தங்க முனிவர் வசித்து வந்தார். தம் தங்கையுடன் கண்ணன் முனிவரைக் கண்டு வணங்கினான். தக்க மரியாதைகளுடன் துவாரகா நாதனை வரவேற்று உபசரித்தார் முனிவர். கௌரவர்களை அழித்து, தர்ம புத்திரர் ஆட்சியில் அமர்ந்ததைச் சொன்னான் கண்ணன். 'கௌரவர்களும் உன் உறவினர்கள்தானே! அவர்களைக் காப்பாற்றாமல் அழித்து விட்டாயே! குரு வம்சத்து வீரர்கள் எல்லாம் அழிந்து விட்டார்களே! உன் செயல் என் கோபத்தைப் பெருக்குகிறது. சாபம் அளிக்கப் போகிறேன்' என்று உத்தங்க முனிவர் கோபாவேசத்துடன் கூறினார்.

கண்ணபிரான் முறுவல் பூக்கப் பேசினார் : 'பிருகு குமாரரே, உங்கள் பிரம்மசரிய விருதத்தையும், தவ வலிமையையும் அறிவேன். அவற்றால் என்னைச் சபிக்க முடியாது. மகரிஷியே! தாங்கள் ஒன்றை அறிந்து கொள்ள வேண்டும். ருத்திரன், வசு, யக்ஷர், கந்தர்வர், அப்ஸரஸ் எல்லாரும், இந்தப் பூவுலகுமே என்னிடமிருந்து தோன்றியவை. அதர்மத்தை அழித்துத் தர்மத்தைக் காக்க அவ்வப்போது பல அவதாரம் எடுக்கிறேன். எந்தப் பிறவியில், எந்த ஜீவன் உருவில் அவதாரம் எடுக்கிறேனோ அவர்களைப் போலவே செயல்படுகிறேன். இப்போது நான் மனித உருவில் அவதாரம் எடுத்திருக்கிறேன். கௌரவர்களிடம் எவ்வளவு தர்மத்தை உபதேசித்தும் பலன் ஏற்படவில்லை. அதனால் அவர்களை அழிக்க நேர்ந்தது. ஆனால் அவர்கள் எல்லாரும் இப்போது சொர்க்கவாசிகள்.'

இந்த உபதேசத்தைக் கேட்டதும் உத்தங்கர் கோபம் தணிந்தது. சர்வோத்தமனாகிய கண்ணபிரானிடம், விசுவரூபத்தைக் காட்டியருளுமாறு வேண்டினார். அண்ட சராசரங்களையும் அடக்கிய தன் விசுவரூபத்தைக் காட்டி, அந்தப் பாலைவனப் பிரதேசத்தில் தேவைப்படும்போதெல்லாம் தண்ணீர் பெறும் வரத்தையும் நல்கினான் கண்ணபிரான்.

உத்தங்க மேகம் பொழியும் மழை

ஒரு நாள் உத்தங்க முனிவருக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது. பல திசைகளிலும் அலைந்து கால்கள் கடுத்தன. உடனே கண்ணன் அருளிய வரம் நினைவுக்கு வந்தது. அவனை வேண்டினார். சில நாய்களுடன் ஒரு சண்டாளன் எதிர்ப்பட்டான். 'தங்கள் தாகத்தைத் தீர்க்க நான் நீர் அளிக்கிறேன்' என்று கூறி, அவன் தன் சிறுநீரை வெளியிட்டான். அதைக் கண்டதும் முனிவருக்குத் தாங்க முடியாத கோபம் வந்தது. உடல் பட படத்தது. 'கிருஷ்ணன் வேண்டுமென்று வரம் கொடுத்து அவமானப்படுத்தி விட்டான்' என்று எண்ணித் துடித்தார். 'போடா, கண் முன் நிற்காதே!' என்று அந்தச் சண்டாளனைத் திட்டியதும், நாய்களுடன் அவன் மறைந்து விட்டான்.

அந்த ஆள் திடுமென்று மறைந்ததை அறிந்த பிறகே, கண்ணபிரானின் மாயை என்பது புரிந்தது. அதே சமயத்தில் சங்கு, சக்கரம், கதை ஆகியவற்றைத் தாங்கியபடி, முனிவர் எதிரில் காட்சியளித்தான் கிருஷ்ணன். 'கேசவா, தாகத்தால் தவிக்கும் மனிதனுக்கு, வேறொரு மனிதனின் சிறுநீரைக் குடிக்க வகை செய்வது தர்மம் அல்ல. உங்கள் இறைத் தன்மைக்கு ஏற்றதல்ல' என்று மனம் வருந்தக் கூறினார்.

மாயக் கண்ணனோ மந்தகாசம் செய்தான். 'உங்கள் பிரம்மசரிய விருதக் காத்தலுக்காக - தவ வலிமைக்காக அமுதம் அளிக்க விரும்பினேன். மனிதப் பிறவி எடுத்த உங்களுக்கு அமிர்தத்தை நேரிடையாகக் கொடுக்க முடியாது. அதனால் இந்திரன் மூலம் உங்களுக்கு அமிர்தம் கொடுக்க வகை செய்தேன். இந்திரனும் தங்கள் முன் உண்மை உருவில் வெளிப்பட இயலாதாகையால், சண்டாள உருவெடுத்து வந்தான். அந்த உருவத்துக்கு ஏற்பச் சில நாய்களுடன் வந்து தங்களை எதிர்ப்பட்டான். ஆனால் தாங்கள்தான் சற்றும் யோசிக்காமல் நிராகரித்து விட்டீர்கள்.'

''சரி, கேசவா! உண்மையைச் சிறிது உணர்த்தியிருந்தாலும் தவறிழைத்திருக்க மாட்டேன். உன் மாயை என்பது இப்போதுதானே புரிகிறது'' என்று கூறி வருந்தினார் முனிவர்.

''கோபம் பொல்லாதது; சிந்தனையைக் கெடுத்து அறிவையும் மயக்கும் என்பது புரிகிறது அல்லவா? சாதாரண மனிதனாக இருந்தாலும், தவ சிரேஷ்டர்களாக இருந்தாலும் கோபத்தை அடக்க வேண்டும். அப்போதுதான் எதிர்ப்படும் நன்மைகளை உணர்ந்து, பெற்று அநுபவிக்க முடியும். திடீரென்று உங்கள் முன் தோன்றி ஒருவன் தன் சிறுநீரை அருந்தித் தாக சாந்தி செய்து கொள்ளுங்கள் என்று சொல்வானா? சற்றுப் பொறுமையுடன் யோசித்திருக்க வேண்டும்!''

நந்தகோபனின் சொற்கள், முனிவரின் மனத்தை வருத்தியது. அரிய அமுதம் கிடைக்க இருந்ததைப் பறி கொடுத்து விட்டோமே' என்று வருந்தினார்.

'கண்ணா, தவறுதான் செய்து விட்டேன். மன்னித்து விடு. இனிமேல் இந்தப் பாலைவனப் பிரதேசத்தில் தண்ணீர் இன்றி, நா வறண்டு தவிக்க வேண்டியதுதானா? விடிவு காலமே இல்லையா?' என்று கேட்டார்.

'தவறை உணர்ந்து திருந்தியவன் மாமனிதன். அதனால் தங்களுக்கு மீண்டும் ஒரு வரம் அளிக்கிறேன். தாங்கள் இந்தப் பகுதியில் எங்கே தங்கியிருக்கிறீர்களோ, அந்தப் பகுதியில் மழை பெய்யும். தேவையான நீர் கிடைக்கும். அப்படி மழை பொழியும் மேகங்களுக்கு உத்தங்க மேகம் என்று பெயர்.'

கண்ணனின் உபசார வார்த்தைகளைக் கேட்டதும் உத்தங்க முனிவர் மனம் மகிழ்ந்தார். இப்போதும் மார்வார் நாட்டிலுள்ள பாலைவனப் பகுதிகளில் உத்தங்க மேகத்தால் அவ்வப்போது மழை பொழிவதுண்டாம். இந்த வரலாற்றைத்தான் அடுத்து வரும் பக்கங்களில் வண்ணத்தில் கண்டு களிக்கிறீர்கள்.

R.Sivakolundu


R. Sivakolundu,

Sivakolundu

புகழ் பூத்த புள்ளமங்கை

டாக்டர் இரா. கலைக்கோவன்

குஞ்சரமல்லன், வீர நாராயணன், பண்டித வற்சலன், சங்கிராம ராகவன், வீரசோழன் என்ற பல சிறப்புப் பெயர்களுடன் ஏறத்தாழ நாற்பத்தேழு ஆண்டுகள் தமிழகத்தையாண்ட சோழப் பெருவேந்தனான முதலாம் பராந்தகனின் ஆட்சிக் காலத்தில் வடிவமைக்கப்பட்ட கலைக்கோயில்கள் பலவாகும். அவற்றுள் சிற்பப் பொலிவாலும், கட்டடக் கலையமைப்பாலும், கல்வெட்டுச் சிறப்பாலும் இமயமாய் எழுந்து நிற்கும் திருக்கோயில்களின் வரிசையில் முதலிடம் பெறுகிறது, புள்ளமங்கையில் புகழ் பொலியக் காட்சி தரும் திருஆலந்துறைத் திருக்கோயில்.

தஞ்சை - குடந்தைச் சாலையில் தஞ்சையிலிருந்து ஏறத்தாழப் பன்னிரண்டு கிலோமீட்டர் தொலைவில் பசுபதி கோயில் என்றொரு சிற்றூர். பரபரப்பான வாழ்க்கை வேகங்களுக்குப் பயந்து ஒடுங்கினாற் போல், வயல் வெளிகளின் பின்னால் முடங்கிக் கிடக்கும் இந்தச் சின்னஞ்சிறு ஊரில்தான், ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்னால், ஆயிரமாய்க் கனவுகளைச் சுமந்து, அற்புதக் கலைவல்லார் பலர், தம் திறத்தையெல்லாம் காட்டிக் கட்டி முடித்த ஒரு கற்றளிக் கோயில், கவனிப்பாரற்ற கொடுமையால் இன்று காற்றில் கரைந்து கொண்டிருக்கிறது.

'அத்தன், நமையாள்வான் இடம் ஆலந்துறை; அதுவே' என்று சம்பந்தரின் தேவாரத் திருவரிகள் தொட்டுக் காட்டிய் இப்புள்ளமங்கை ஆலந்துறையார் திருக்கோயிலைக் கற்றளியாய்க், கலைத்தளியாய்க் கண்ட பெருமகன் முதலாம் பராந்தகன். காலக் கனவுகளைக் கலைஞர்தம் உளிகளால் கனியக் கனியச் செதுக்கி வைத்திருக்கும் கலைப்பேழையாம் இத்திருக்கோயிலின் நுழைவாயில் கோபுரம் மூன்று நிலை மாடங்களுடன், 'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து' என்னும் வள்ளுவரின் குறளுக்கு வாய்த்ததோர் சான்றே போல், எளிய தோற்றத்துடன் நம்மை இருகை நீட்டி வரவேற்கிறது. மனிதர்களை அதிகம் பார்த்திராத காரணத்தால், கோயில் வாசலில் கால்களைப் பதிக்கும் போது கோபுரமே சிலிர்த்துக் கொள்கிறது.

வெறிச்சோடிப் போயிருக்கும் முன் மண் டபத்துக்கு வடபுறத்தில் அம்மன் திருமுன் தெற்குப் பார்த்த தேவியுடன் திகழ்கிறது. நாற்கர நாயகியாய் அருள் பொழியும் இறைவியின் தலையைச் சடாமகுடம் அழகு செய்கிறது. வல முன்கை காக்கும் குறிப்பிலும், இட முன்கை அருட் குறிப்பிலும் இலங்கப் பின் கைகளில் அக்க மாலையும், மலர் மொட்டும் கொண்டுள்ள இத்தேவியின் திருப்பெயர் அல்லியங்கோதை.

உள் மண்டபத்துக்குள் நான்கு பெரிய தூண்களும், நான்கு அரைத் தூண்களும் காணப்படுகின்றன. கருவறை வாயிலையொட்டி ஓர் அரைத்தூண் உள்ளது. இவற்றுள் நான்கு தூண்களில் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. கருவறையை ஒட்டியுள்ள அரைத் தூணின் முகப்புச் செவ்வகத்தை இரண்டு பகுதிகளாய்ப் பிரித்து, இரண்டிலும் ஆடற் சிற்பங்களைச் செதுக்கியுள்ளனர். மேற்பகுதியில் இரண்டு அழகரசியர் ஆடுகின்றனர். முதலாமவர் சூசிவித்தா கரணத்திலும், இரண்டாமவர் அர்த்த மண்டலக் கோலத்திலும் காட்சிதர, மூன்றாவது பெண் இந்த ஆடலுக்கு மத்தளம் முழக்கி இசை கூட்டுகிறார். நான்காவதாய் நிற்கும் ஆடவர் தாளமிசைக்கிறார். இந்த ஆடற் குழுவிற்குக் கீழே உள்ள பகுதியில் இரண்டு ஆடலரசியர் ஸ்வஸ்திகக் கரணங்களில் ஒல்காப் பேரெழிலுடன் காட்சியளிக்கின்றனர். வலப்புறம் இருப்பவரின் இடக்கையும், இடப்புறம் இருப்பவரின் வலக்கையும் கொடி முத்திரையில் அமைய, இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி, தலைகளை இலேசாய்ச் சாய்த்து மெய்ப்பாடு காட்டுகின்றனர். குறிப்பாக இடப்புறம் இருப்பவரின் முகப் பொலிவும், உடல் வளைவுகளின் நளினமும் சொல்லுந்தரமன்று!

வடக்குச் சுவரிலுள்ள அரைத் தூணின் மேற்பகுதியில் ஐந்து சிறு வடிவங்கள் மிகுந்த கவனத்துடன் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்று, ஆடும் பெண்களாய் அமைந்துள்ளன. ஒருவர் வலக்கையைக் கொடி முத்திரையிலும், இடக்கையை வேழ முத்திரையிலும் அமைத்துக் கால்களை ஸ்வஸ்திகமாய்ப் பின்னி ஆடிக் காட்ட, மற்றொருவர் வலப் பாதத்தை சூசியிலும், இடப்பாதத்தைப் பார்சுவத்திலும் வைத்து, வலக்கையில் கொடி முத்திரை காட்டி, இடக்கையைத் தொங்கும் கரமாய் அமைத்து சூசிவித்தா கரணத்திற்கு இலக்கணம் வகுக்கிறார். மூன்றாமவரும் ஸ்வஸ்திக

அழகிதான். இந்த ஆடல் நாயகியர்க்கு, இரண்டு ஆடவ அழகர்கள் தாளமும், மேளமும் இசைத்து உதவும் அழகையும் இந்தத் தூணில் கண்டின்புறலாம்.

இன்னொரு தூணிலும், சூசிவித்தா கரணத்திலொரு பெண்ணும், ஸ்வஸ்திகத்திலொரு பெண்ணுமாய்க் காட்சியளிக்கின்றனர். இரண்டு சிற்பங்களும் மிக மிக அழகுடன், கலைநயம் ததும்ப வடிக்கப்பட்டுள்ளன. சூசிவித்தா நடனப் பெண்ணின் வலக்கை கொடி முத்திரையில் அமைய, இடக்கை வேழ முத்திரையில் மார்பகங்களுக்கு மேலாக வலப்புறமாய் வீசப்பட்டுள்ளது. கொடி முத்திரைக்கை, வீசப்பட்ட இந்த வேழக் கையின் கீழே அழகுபடக் காட்டப்பட்டிருக்கும் அற்புதம் நம்மைப் பெருமைப்பட வைக்கும் சிற்பச் சிறப்பாகும். இடப்புறம் சாய்ந்த உடலும், வலப்புறம் உயர்ந்த காலும், நிமிர்ந்து இடப்புறம் திரும்பிய முகமும், தலையலங்காரமும் இந்தச் சிற்பத்தின் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. இவரையடுத்து ஸ்வஸ்திக அழகி. வலக்கை கொடி முத்திரை காட்ட, இடக்கை அர்த்தரேசிதமாய் அமைய உடலை வலப்புறம் வளைத்து, முகத்தை வலப்புறம் சாய்த்து, இடப்புறம் திருப்பி இயல்பாய்க் கரணம் காட்டுகிறார் இந்த இனியவர். இந்த இரண்டு அழகியருமே ஆடற் கலையில் தேர்ந்தவர்கள் என்பது அவர்தம் அபிநயப்பாடுகளால் மிகத் தெளிவாய்ப் புலப்படுகிறது.

இன்னொரு தூணில் ஆடவர் ஒருவர் தண்டபட்சக் கரணத்தில் ஆடுகிறார். வலக்கால் ஊர்த்வ ஜாநுவாய் மார்பளவு உயர்த்தப்பட்டிருக்கிறது. இடக்கை தொங்கும் கரமாய்

இருக்க, வலக்கையை மடித்து மார்பருகே வைத்துள்ளார். இவருக்குப் பக்கத்தில் இரண்டு கைகளையும் தொங்கும் கைகளாய்க் கொண்டு ஆரணங்கு ஒருவர் அர்த்த மண்டலக் கோலத்தில் காட்சி தருகிறார்.

உள் மண்டபத்துத் தூண்களில் இத்தனை கலைத் தெளிவுடைய கரணச் சிற்பங்களைத் தமிழகத்தில் வேறெந்தத் திருக்கோயிலிலும் காண முடியுமா என்பது ஐயத்திற்கிடமானதே. அழகும், நளினமும், இயல்பான தோற்றமும், கண்ணில் நிற்கும் மெய்ப்பாடுகளும் நிறைந்த இந்த ஆடற் குழுச் சிற்பங்களைத் தமிழகத்தின் பார்வைக்கு முதன் முதலில் கொணர்ந்த பெருமை டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வுப் பேரவையையே சார்ந்தது.

கருவறையில் இறைவன் லிங்கத் திருமேனியராய், ஆலந்துறையார் என்ற அழகுப் பெயர் இருக்க, பிரம்மபுரீசுவரர் என்ற புரியாத பெயரால் அழைக்கப்படுவதற்கு வருந்தியவராய்த், தனிமைச் சூழலில், நல்லதொரு விடியலை நோக்கி நாளும் பொழுதுமாய்க் காத்திருக்கிறார்.

கண்டியூர் வீரட்டானேசுவரர் கோயில், குடந்தை நாகேசுவரர் திருக்கோயில் போன்ற கோயில்களிலும் இதுபோல் சிற்றுருவச் சிற்பத் தொகுதிகளைப் பார்க்கலாம் என்றாலும், புள்ளமங்கை சிற்பத் தொகுதிகளின் அழகும், நளினமும், எடுப்பும், வடிப்புக் கூர்மையும் தனிச் சிறப்புதான். சிவபெருமானின் பல்வேறு வடிவங்களான பிட்சாடனர், அம்மையப்பர், நிலவைக் கொண்டவர், கங்கையை ஏற்றவர், கைலாய மூர்த்தி, காளை ஊர்தியர், உமாவுடன் அமர்ந்தவர், சண்டேசுவரக் கருணையர் முதலிய எழிலார்ந்த தெய்வத் தோற்றங்களை இங்கு பார்க்க முடிகிறது. இத்தோற்றங்கள் ஒவ்வொன்றும் எழிலார்ந்தவை என்றாலும் இவற்றின் சிகரமாக விளங்குவது சண்டேசுவரக் கருணையாளராய்ச் சிவபெருமான் சண்டீசப்பதம் வழங்கும் சீரிய காட்சிதான். சடாமகுடராய் மகிழ்விருப்பில் அமர்ந்திருக்கும் சிவபெருமானின் திருமுன் சண்டேசுவரர் முழங்கால்கள் தரையில் பட, குனிந்த தலையும், அமைதி தவழும் முகமுமாய் அமர்ந்திருக்கிறார். இறைவனின் முன்னிரண்டு கைகளும் கொன்றை மாலையைச் சண்டேசுவரரின் தலையைச் சுற்றி அணிவித்துக் கொண்டிருக்கும் அழகுக் காட்சி;

சீதை அசோகவனத்தில் இருந்தது, வாலி வதைப்படலம், இராமன் போருக்குப் போவது போன்ற இராமாயணக் காட்சிகளுடன், திருமாலின் கிருஷ்ணாவதாரக் காட்சிகளும், திரிவிக்கிரமர் கோலமும் இங்கே இடம் பெற்றுள்ளன. போருக்குச் செல்லும் வீரர்கள் யானைகளின் மீதமர்ந்தும், குதிரைகளின் மீதமர்ந்தும் சின வெறியுடனும், வீராவேசத்துடனும் விரைந்து செல்வதைச் சிற்பிகள் சிறப்பாக வடித்திருக்கிறார்கள்.

மகிடாசுரமர்த்தனியின் போர்க் கோலம் காணக் கண்கோடி வேண்டும். எட்டுத் திருக்கைகளுடன் தேவி சினம் கொப்பளிக்கக் காட்சியளிக்கிறார். வலப்புறக் கைகளில் முத்தலை ஈட்டி, சக்தி, தலையோடு, பாசம் இருக்க, இடப்புறக் கைகளில் மணி, கேடயம் உள்ளன. இட முன்கை உடைந்துள்ளது. பின் கை வியப்பு முத்திரையில் விரிந்துள்ளது. தேவியின் வலக்கால் மகிடாசுரனின் மார்பை உதைத்த வண்ணமிருக்க, கையிலுள்ள முத்தலை ஈட்டி மகிடாசுரனின் மார்பில் செலுத்தப்பட்டுள்ளது. தேவியின் இப்போர்க்கோலம் கண்டு இன்புறும் பக்த கோடிகளுள் இடப்புறம் இருக்கும் பேய் வடிவம் குறிப்பிடத்தக்கது. அதுவும் தன் வலக்கையை வியப்பு முத்திரையில் விரித்துள்ளது.

இந்தச் சிற்பத்துக்குப் பக்கத்திலுள்ள யானையை அழித்த மூர்த்தியின் அற்புதக் கோலம் பத்துத் திருக்கைகளுடன் வடிக்கப்பட்டுள்ளது. இக்கைகளுள் பெரும்பான்மையான இறைவன் அழித்துக் கிழித்த யானையின் தோலைப் பற்றியிருக்கப் பிற கைகளில் முத்தலை ஈட்டி, மணி, கேடயம் முதலியன காட்சி தருகின்றன. ஒரு கை வியப்பு முத்திரையில் உள்ளது. வலக்கால் ஊர்த்வ ஜாநுவாய் உயர்த்தப்பட்டுள்ளது. உடல் மிகுந்த வேகத்துடன் திரும்பிய நிலையில் அழகுறக் காட்டப்பட்டுள்ளது. இறைவனின் வலப்புறத்தில் பூத கணமொன்று அஞ்சிய நிலையில் ஓடுகிறது. இடப்புறத்தில் உமையும் முருகனும். முருகன் உமையிடமிருந்து தோழியிடம் தாவுகிறார். உமை வியப்பும், பெருமிதமுமாய் இறைவனை நோக்குகிறார். இருபது சென்டிமீட்டர் சதுரக்கில் சிற்பிகள் சிறைப்படுத்தியிருக்கும் இந்த

ஆடற்போட்டியில் அழகியர் இருவர்

மகர தோரண ஆடல் வல்லான்

பின் கைகளில் பாம்பும் பரசுவும். சிவபெருமானின் திருமுகத்தில் எல்லையில்லாக் கருணையும், அன்பும் பொங்க, சண்டேசுவரரின் திருமுகத்தில் நிறைவும், அருளும் நீக்கமறக் காட்சியளிக்கின்றன.

கஜசம்கார மூர்த்தி, பராந்தகன் காலத்து கை வண்ணத்திற்கோர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தென்புறக் கண்டப் பகுதியில் சிவபெருமானின் தண்டபட்சக் கரணம் காணப்படுகிறது. வலக்கால் ஊர்த்துவ ஜாநு

ஸ்வஸ்திக நங்கையும் மத்தள மங்கையும்

பிருஷ்ட ஸ்வஸ்திகப் பேரழகி

வாய் உதரபந்த அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இடக்கால் பக்கவாட்டில் திருப்பப்பட்டுள்ளது. திருக்கைகளில் பாம்பு, முத்தலை ஈட்டி, தீயகல், பரசு, உடுக்கை. முன் கைகள் காப்பு முத்திரையிலும், வேழ முத்திரையிலும். இறைவனின் ஆடற் கோலத்தைக் கண்டுகளித்தபடி வலப்புறம் ஒரு குள்ள பூதமும், இடப்புறம் ஒரு பூதமும் அமர்ந்துள்ளன. வலப்புற பூதம் கையில் வீணையேந்தி, வலக்கையால் அதை மீட்ட, இடப்புறப் பூதம் இறைவனுக்கு முதுகைக் காட்டிய நிலையில் குத்துக்காலிட்டு அமர்ந்து, கால்களுக்கிடையில் குடமுழவை வைத்தபடி இசைக்கிறது. முகமோ இறைவனின் ஆடலை வியந்து போற்றி மெய்ம்மறந்த நிலையில் மெய்ப்பாடுகளின் முத்தாய்ப்பாய்த் திரும்பியுள்ளது.

நான்முகனுக்குக் கீழேயுள்ள கண்டப் பகுதியில் சிவபெருமானின் சூசிவித்தா கரணக் கோலமும், விஷிவிருத்தக் கரணக் கோலமும் காணப்படுகின்றன. சூசிவித்தாவில் சுந்தரப் பேரழகராய் விளங்கும் இறைவனுக்கு எட்டுத் திருக்கைகள். வல முன்கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன் கை அர்த்தரேசிதம் காட்டுகிறது. பின் கைகளில் முத்தலை ஈட்டி, தலையோடு, உடுக்கை, தீயகல், பாம்பு, மணி முதலியன காட்டப்பட்டுள்ளன. வலப்பாதம் சூசியாய் இருக்க, இடப்பாதம் பார்சுவமாய்த் திருப்பப்பட்டுள்ளது. இறைவனின் இந்த அழகுக் கரணத்திற்கு ஒரு கணம் தாளம் தட்டுகிறது. இன்னொரு கணம் குடமுழா வாசிக்கிறது. சிவபெருமானின் இந்தக் கரணத் தோற்றம் மிக மிக அரிதாகவே காணக் கிடைக்கிறது.

தேவகோட்டங்களின் கீழ் வரிசையில் நடுவில் யாளி வரிமானமும், அதன் இரு கோடிகளிலும் திறந்த வாயினிடை நிற்கும் மனித வடிவங்களைக் கொண்ட மகர மீன்களும் காணப்படுகின்றன. தேவகோட்டத்தின் இருமருங்கிலும் அரைத் தூண்களும், அவற்றின் மேல் மகர தோரணங்களும் அமைந்துள்ளன. அரைத் தூண்களையடுத்துத் தேவ கோட்டத் தேவதையின் துணைவர்களும், ஊர்திகளும் காட்சியளிக்கின்றன.

மேற்குப் புறத்தில் லிங்கோத்பவருக்கு மேலே உள்ள ஆடலரசியின் வலக் கையும் கடக முத்திரையில்தான் உள்ளது. இடக்கை தொங்கும் கையாக இருக்க, தலையில் சடாமகுடம். அர்த்த மண்டலக் கோலத்தில் காட்சியளிக்கும் இப்பெண்ணின் பாதங்கள் திரஸ்ரயத்தில் உள்ளன. இவரது ஆடலுக்கு, அருகிலுள்ள மத்தளமேந்திய இன்னோர் இளம் பேரழகி தன் பூ விரல்களால் மத்தளத்தை முழக்கி மயக்கும் இனசயை இனிமையாய்க் கூட்டுகிறார். என்ன லாகவமாய் ஒரு கையால் பிடித்தபடி மற்றொரு கையால் எத்தனை எளிமையாய் இவர் மத்தளத்தை இயக்குகிறார் என்பது பார்த்தால்தான் புரியும்.

அரைத் தூண்களுக்கு மேலுள்ள மாடங்களில் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆடவர், மகளிர் வடிவங்கள் மிக நேர்த்தியுடன், அழகுபடச் செதுக்கப்பட்டுப் பொருத்தப் பட்டுள்ளன.

இனி அரைத் தூண்களின் முகப்புகளிலுள்ள ஆடற் கரணங்களைப் பார்ப்போம். ஆண்களும், பெண்களும் இணைந்து ஆடும் குழு ஆடல்கள், பெண்கள் மட்டும் கலந்தாடும் கரணக் கோலங்கள், ஆடவர் மட்டும் தனித்தாடும் ஆடல் காட்சிகள் என்று பல்வகை நிலைகளில் இங்கு ஆடல் விளக்கங்கள் அழகுறக் காட்டப்பட்டுள்ளன.

ஒரு தூணின் முகப்பில் பெண்ணொருவர் ஸ்வஸ்திகக் கரணத்தில், வலக்கையைக் கொடி முத்திரையில் அமைத்து, இடக்கையை அர்த்தரேசிதத்தில் உயர்த்தி, அதில் பாம் பொன்றைப் பற்றியபடி ஆடுகிறார். அவர் அருகே உள்ள இசைக் கலைஞர் நீளமான மத்தளத்தை இடக்கையால் தொடையில் அழுத்தித் தாங்கியபடி வலக்கையால் முழக்கி மகிழ்கிறார். இந்தத் தூணுக்கு அருகாமையில் உள்ள இன்னொரு தூணில் மேலே அன்னப் பறவைகள். கீழே ஸ்வஸ்திகத்தில் அழகரசி ஒருவரின் ஆடல். இடப்புறம் இருப்பவர் மத்தளமிசைக்கிறார்.

இன்னொரு தூணில் இரண்டு பெண்களின் ஆடல் தோற்றங்கள். இருவருமே இணையற்ற ஆடலரசியர் என்பதை அவர்தம் ஆடல் தோற்றங்களே காட்டுகின்றன. ஒருவர் வலக்காலால் ஸ்வஸ்திகம் அமைக்க, இன்னொருவர் இடக்காலால் ஸ்வஸ்திகம் காட்டுகிறார். ஒருவரையொருவர் பார்த்து ஆடுவது போல் அமைக்கப்பட்டிருப்பதால் முதலாமவரின் வலக்கை, இரண்டாமவரின் இடக்கை இரண்டும் தொங்கும் கரங்களாய் அமைய, அவர்தம் இடக்கையும், வலக்கையும் அரை நிலா முத்திரையில் கவிதை வாசிக்கின்றன. எந்தப் பாடலுக்கு இவர்கள் ஆடுகிறார்கள் என்பது நமக்குத் தெரியாவிட்டாலும், அந்தப் பாடலின் ராக நயத்தையும், பொருட்சிறப்பையும் இவர்களின் முகப்

மூல நோயை
முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹெடன்ஸா
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்:
-ரண சிகிச்சையையும்
தடுங்கள்

பித்த வெடிப்பின் வேதனையா?



இதம் தரும் லிச்சென்ஸா சருமக்களிம்பு தீங்கற்ற துரித நிவாரணம் அளிக்கிறது.

காலில் தோன்றும் சேற்றுப்புண்ணுக்கும மிகவும் பயனுள்ள மருந்து. மேலும் வெட்டுக் காயம், ஊமைக்காயம் மற்றும் சிராய்ப்பு போன்றவைகளுக்கும் லிச்சென்ஸா ஒரு கைகண்ட மருந்து.

லிச்சேன்ஸா
சருமக்களிம்பு



90 TM

பாடுகளே அழகுறக் காட்டுவதால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

அடுத்திருக்கும் தூணொன்றில் வலக்கையை கொடி முத்திரையில் நெஞ்சருகே இருத்தி, இடக்கையை அர்த்தரேசி தத்தில் வீசி, ஸ்வஸ்திகக் கரணத்தில் அழகியொருவர் நிருத்தம் நிகழ்த்துகிறார். வலப்புறம் சாய்ந்த முகமும், சற்றே சரிந்த மார்பகங்களும், ஒசிந்த இடையுமாய் ஒல்காப் பேரெழிலுடன் திகழும் இந்த அழகியின் மயக்கும் தோற்றத் துக்கு எதை ஈடாய்ச் சொல்வது! அருகே, இன்னொரு பெண் தோளிலிருந்து தொங்கும் மத்தளத்தை முழக்கியபடி ஆடலுக்கேற்ற அடவுகளைக் காட்டுகிறார்.

இவற்றையெல்லாம் மிஞ்சும் எழிற்கோலத்தில், தஞ்சை ஓவிய அழகிக்கு முன்னோடியாய், சின்னஞ்சிறு பூஞ்செவ் வகத்தில் சித்திரமாய்க் காட்சி தருகிறார், சிந்தையைக் கொள்ளை கொள்ளும் சிங்கார ஆடலழகி ஒருவர். பிருஷ்ட ஸ்வஸ்திகம் என்னும் கரணத்தின் வளர்ச்சி நிலையாய் இவரது ஆடற் கோலத்தைக் கொள்ளலாம். இடப்பாதம் பார்சுவத்தில் அமைய வலப்பாதம் அதன் முன் அக்ரதலசஞ் சாரத்தில் ஸ்வஸ்திகமாக வைக்கப்பட்டுள்ளது. வலக் கையின் அர்த்தரேசித வீச்சுக்குப் பொருந்த இடக்கை அலபத்மமாய் அழகுற விரிந்துள்ளது. ஆட்ட சுழற்சியின் விரைவையும், அதே சமயம் அதில் காட்டப்பட்டிருக்கும் நளினத்தையும், இயல்பான உடல் வளைவுகளின் மூலம் சிற்பி மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். உடுக்கை யிடையின் ஒழுங்கும், வல மார்பகத்தின் நிமிர்வும், இடை யாடைகளின் பரவலும், அந்த ஆடை முடிச்சுகள் வலப் புறமும், இடப்புறமும் அலைபாயும் அழகும் மிக நுட்பமான கவனத்துடன் இச்சிற்பத்தில் செதுக்கப்பட்டிருப்பதால், இதைக் காணும்போது அழகியொருவரின் ஆடலைக் காணும் நினைவுதான் வருகிறதே தவிர, ஆடல் சிற்பம் இது வென்ற உணர்வே தோன்றுவதில்லை. இந்த அதிசய ஆடல் தோற்றம் முதலாம் இராசராசனை மெய்மறக்கச் செய்திருக்க வேண்டும். அதனால்தான் தஞ்சையில் தான் எடுப்பித்த, தேவாலயங்களின் சக்கரவர்த்தியென புகழப்படும் பெரிய கோயிலில் இந்தக் கோலத்தை ஓவியத் தீட்டலாய்க் காட்டி யிருக்கிறார். இரண்டிற்கும் மிகச் சிறிய வேறுபாடுகளே உள்ளன.

புள்ளமங்கைக் கோயிலில் எந்தத் தூணை நோக்கினாலும் ஆடல்தான். தலையை நிமிர்த்தினாலும், குனிந்தாலும் அங்கும் ஆடல்தான். பார்வைகள் பதியும் எந்த இடத்திலும் இத்திருக்கோயிலில் ஆடல் நிகழ்வுகளையே கண்டு மகிழ முடியும். கரணக் காட்சிகளைத் தேடி எங்கெங்கோ போகும் ஆய்வறிஞர்கள் இனி புள்ளமங்கையை முற்றுகையிடலாம். பத்தாம் நூற்றாண்டு ஸ்வஸ்திகக் கரணங்கள் பற்றி ஓர் ஆய் வேடே எழுதுமளவு இங்குச் சிற்பக் காட்சிகள் சிறக்க வடிக்கப்பட்டுள்ளன. இச்சிற்ப லாவண்யங்களை முதல் முதலில் வெளிப்படுத்தி, இக்கோயிலின் ஆடற்கலைப் பெருமைகளைத் தமிழகக் கோயிற்கலை வரலாற்றிற்குத் தந்த வர்கள் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வுப் பேரவையினர். தஞ்சைப் பெரிய கோயில் ஓவிய ஆடலரசி யர்க்கும் இந்தப் புள்ளமங்கைப் பேரழகியரே முன் னோடிகள் என்ற அரிய உண்மையையும் முதன் முதலாகத் தெளிவுபடுத்திய பெருமை இந்தப் பேரவையையே சாரும்.

தாளமும் மேளமும் முழுங்க, காளமும் குழலும் இயங்க, ஆடலும் பாடலும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்த இடம் புள்ளமங்கை. அந்தக் காவியக் காட்சிகளைப் பின் வரும் தலைமுறையினரின் கருத்தான ஆய்வுகளுக்கென்றே அந்நாளைய சிற்பிகள் அற்புதக் கோலங்களில் படம் பிடித்து வைத்தனர் போலும். புள்ளமங்கை ஆடற் கலைக் கோர் அற்புதக் களம். அங்கு அசைவுகளால் நிகழ்த்தப்படும் கலைநயமோ புதிய புலம். அதை அறியவும், தெரியவும் புள்ளமங்கைக்கு ஒரு முறை வாருங்கள். ○

டாக்டர் பையின் கடைசி பேஷண்ட்

வி.ராமமூர்த்தி (இ.ஆ.ப)



திங்கட் கிழமைகளில் மட்டும் டாக்டர் பைய் தம் மந்தைவெளி கிளினிக்கை இரவு ஏழரை மணிக்கே மூடி விடுவார். மற்ற நாட்களில் எட்டு, எட்டேகால், எட்டரை வரைக்கும் கூட நோயாளிகளைப் பார்ப்பார்.

எனக்கு ஆறு மாதமாக இருக்கிறது, எங்கிருந்தோ வந்து ஒட்டிக் கொண்ட, இரத்தக் கொதிப்புத் தொந்தரவு. அதனால் வாரம் இரு முறைகள் - திங்களும் வியாழனும் - தவறாமல் டாக்டரைப் பார்க்கிறேன்.

டாக்டர் ராம்நாத் பைய் இங்கிலீஷ் வைத்தியத்தில் நிறையப் படித்தவர். அரசில் பல ஆண்டுகள் பணியாற்றியவர். இரண்டுமே அவருக்கு முழு நியாயமாகப் படாததால், ஹோமியோபதியும், ஆயுர்வேதமும் பயின்று தேர்ந்தார். அரசில் இருபத்தைந்து ஆண்டுகள் உழன்றது போதும் என்று தாமாகவே ஓய்வைப் பெற்றுக் கொண்டார்.

இப்போது இரண்டரை வருஷம் போல வசதியாகச் சொந்தமாகப் ப்ராக்டிஸ் பண்ணுகிறார். மந்தைவெளி தவிர, திருவல்லிக்கேணியில் விவேகானந்தா சாலையிலும் ஒரு மருத்துவமனை (செவ்வாய், புதன், வெள்ளி) அவருக்கு உண்டு. மற்றப்படிக்கு ரொம்ப நிர்ப்பந்தமான சந்தர்ப்பங்களில் மட்டும் அவருடைய விக்டோரியா கிரெஸண்ட் சாலைப் பங்களாவில். சில நோயாளிகளை டாக்டர் பார்ப்பதும் உண்டு.

"டாக்டர்ன்னாலும் நானும் மனிதன்தானே! எனக்கும் எல்லாரையும் போலே கொஞ்சம் ஓய்வும் தனிமையும் வேணும் இல்லீங்களா?" என்பார் நல்லதனமாக.

டாக்டர் பைய் இப்போது தனிக்கட்டை தான். அவருடைய மனைவி இறந்து போய்ப் பதினேழு வருஷங்கள் ஆகிவிட்டன. ஒரே மகள், ரதி, திருமணம் ஆகி அமெரிக்காவில் ப்ரூக்லினில் நிரந்தரப் பிரஜையாகக் குடியேறி விட்டாள். அமெரிக்க மாப்பிள்ளை ஆர்க்கிடெக்ட், ரதி டாக்டர், அப்பாவைப் போலவே.

டாக்டர் நிறையச் சிரிப்பார். நகைச்சுவைக்கு வாழ்க்கையில் நிறைய இடமுண்டு என்று நினைக்கிறவர். அப்படியே பேசியும் நடத்தியும் காட்டுகிறவர்.

ஓயாமல் பேசுவார் டாக்டர் பைய். யதார்த்தமாக, கல்மிஷம் இல்லாமல், நோகாது நட்பாக இருக்கும் வகைப் பேச்சு அவருடையது.

என்னை என்னவோ அவருக்கு முதலிலிருந்தே நன்றாய்ப் பிடித்துப் போயிற்று. என்னை ஒரு உற்ற நண்பனாக நடத்தினார், வீட்டுக்கு அழைத்தார், பல முறைகள் இசை, நாடக நிகழ்ச்சிகளுக்குத் தம்முடன் அழைத்துச் சென்றார். தியான வகுப்பிலும் என்னைச் சேர்த்து விட்டார்.

இந்த விதங்களில் நான் அவருடன் கொஞ்சம் நெருங்கிப் பழகியதால் அவரைப் பற்றித் தெரிந்து கொண்டிருந்தேன் ஓரளவுக்கு.

திங்கட்கிழமை க்ளினிக் வேலைகள் முடிந்து வீட்டுக்குத் திரும்பு முன் கடைசி அலுவலாக டாக்டர் பைய் திருவல்லிக்கேணி கெல்லெட் ஹை ஸ்கூல் அருகில் இருக்கும் ஓர் அனுமார் உபாஸகர் வீட்டுப் பூஜைக்குச் சென்று வருவதைப் பல ஆண்டுகளின் பழக்கமாகக் கொண்டிருந்தார்.

"நம்முடைய செயலில் ஒன்றுமே இல்லை, யோகநாதன்!" என்று டாக்டர் அடிக்கடி வெற்றிலைக் காவி ஏறிய பல்வரிசை தெரியும் சிரிப்போடு சொல்லக் கேட்டிருக்கிறேன். வலக்கை அப்போது உயரும், டாக்டரின் ஆள் காட்டி விரல் கூரையை, வானை, எல்லாம் கடந்த ஒரு பிரதேசத்தைக் காண்பிக்கும். "அங்கிருந்து கொண்டு ஒரு பெரிய்ய சக்தி நம்மையெல்லாம் ஆட்டுவிக்கிறதுங்க. அது ஒரு ஸுப்பர் பவர் ஸ்டேஷன். அத்துடன் நாம் தொடர்பு கொள்ள வேணுமில்லியா? அதற்காகத் தான் இங்கே கோயில், சர்ச், மசூதி, மஹான்கள், உபந்யாசகர்கள், உபாஸகர்கள் எல்லாம் இருக்கறாங்க" என்று தம் நம்பிக்கையை விளக்குவார் டாக்டர்.

அந்தத் திங்கட்கிழமையன்று வழக்கமாகப் போவதை விடச் சற்றே கால தாமதமாகி விட்டது நான் டாக்டர் பையின் கிளினிக்கை எட்டும்போது.

டாக்டரிடம் ஒரு வழக்கம். எத்தனை நிறையப் பேர்கள் வந்தாலும் சரி, விரல்விட்டு எண்ணும் கொஞ்சப் பேர்கள் என்றாலும் சரி, நோயாளிகளை அவர்கள் வந்த வரிசையின் பிரகாரம் தான் கவனிப்பார்.

உடம்பு மிகவும் முடியாத அர்ஜெண்ட் கேஸ்களுக்கு மட்டும் டாக்டரின் வரிசையில் சலுகை உண்டு. அவர்கள் 'அர்ஜெண்ட்'' என்று தம் பெயரை எழுதும்போதே அவசரத்தைக் குறிப்பிடலாம். ஆனால் உண்மையாக அப்படி எழுதினால் தான் சரி, தவறாக எழுதி க்யூவில் முந்தும் வகையால் கங்காருத் தாண்டல் செய்ய முயன்றால், அவர்கள் கூட்டக் கடைசிக்குத் தாட்சண்யம் இல்லாமல் தள்ளப்படுவார்கள். ஒரு முறை செயலான ஓர் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. - க்கே அப்படி கதி நேர்ந்திருக்கிறது.

"ஐ ஆம் ஸாரி, மிஸ்டர் தமிழ்க்கோ! ஒங்க கட்சியிலே தொகுதிலே நீங்க யாரைன்னாலும் எப்படி வேணும்னாக் கஷ்டப்படுத்திக்குங்க! ஆனா இது என்னோட க்ளினிக் - இது என்னோட தொகுதி. இங்கே எல்லாமே, கரெக்டா இருக்கணும்னு நான் விரும்பறது புரியுதுங்களா!" என்று நறுக்காகச் சொல்லி அவரை அனுப்பிவிட்டார்.

'ஜிவு ஜிவு' என்று முகம் சிவந்து, கழுத்து நரம்புகள் புடைக்க, அரையடி உயரப் புது ஜோடுகள் தரையில் சரசரக்க, அந்த மக்களின் பிரதிநிதி அடிபட்ட பொல்லாத வேங்கயையாக அன்று வெளியேற்றம் நிகழ்த்தினாலும், அடுத்த நாள் போலீஸ் கமிஷனர், டாக்டர் பையை ஏதோ 'காரியமாய்' ஃபோனில் கூப்பிட்டாலும், நல்ல வேளையாக வேறொன்றும் அசம்பாவிதம் நிகழாமல், மறு வாரமே தமிழ்கோ நேரத்தோடே வந்து பெயர் எழுதி டாக்டர் பையை வரிசைப் பிரகாரம் சந்தித்து, மாத்திரையும் மருந்தும் வாங்கிக் கொண்டுதான் போனார்.

அந்தத் திறமையும் நேர்மையும் இருக்கப் போய்த்தான் அவருக்கு, முண்டியடித்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் அவ்வளவு கூட்டமும் தவறாமல் அவரிடம் வந்து, அவர் கண்டிஷன்களுக்குக் கட்டுப்பட்டு, காத்திருந்து, ஆலோசனையும் மருந்துகளும் பெற்றுச் செல்கிறது!

அன்று திங்கட்கிழமையாதலால் கூட்டம் கொஞ்சம் குறைவு என்று பெயர். ஆனாலும் கூட நான் என் பெயரை எழுதும் போது வரிசை எண்

நாற்பத்து இரண்டு! பட்டியலில் 'டிக்' அடித்த பெயர்களிலிருந்து ஏற்கெனவே இருபத்தியேழு பேர்கள் டாக்டரைப் பார்த்து விட்டுப் போயுள்ளது தெரிந்தது. உள்ளே ஒருவர் இருக்கிறார். அவரையும் சேர்த்தால் இருபத்தியெட்டு.

இப்படி நான் கணக்குப் போட்டு எண்ணுகையில் - ஆச்சரியம்! - 6.55-க்கு எனக்கும் கீழே பட்டியலில் 43-ஆவது நபராகப் பெயரெழுதிய ஒருவரும் காத்திருக்க, திடீரென்று புது ஆள் ஒருவர் க்ளினிக்குக்கு வந்து சேர்ந்தார். எனக்கு அடுத்துத் தம் பெயரை எழுதினார்.

வந்த இந்த மனிதருக்கு நாற்பது வயது போல இருந்தது. நல்ல உயரம், ஆனால் ஒல்லியாக, ஒட்டினமாதிரி உடம்பு. தலையைச் சுற்றி முண்டாசு. முகத்தில் ஏதோ தீவிரம் - இல்லாவிட்டால் அவரை வாட்டிய நோயின் கடுமை போலும் அது! மடியில் ஒரு பையை வைத்திருந்தார் வந்தவர். என்ன பொருள்கள் அதில் இருந்தனவோ! அவை பையைக் கணிசமாகப் பருக்க வைத்திருந்தன.

7.10 மணி அளவில் டாக்டர் தம் முப்பத்து மூன்றாவது பேஷண்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். ''சரி இன்று பார்க்க இயலாது,'' என்று முடிவு பண்ணி நான் கிளம்பியே இருப்பேன். ஆனால் டாக்டர் எனக்குத் தந்திருந்த மாத்திரைகள் தீர்ந்திருந்தன. அன்று காலையில் தலைச் சுற்றல் வேறு வந்திருந்தது. எனவே இருந்து, மாத்திரைகளை மட்டும் ஒரே நிமிஷத்தில் வாங்கிக் கொண்டு போவது நல்லது என்று எனக்குத் தோன்றிற்று. இருந்தேன்.

நங்கநல்லூரிலிருந்து வந்திருந்த ஒரு ரிடையர்ட் தாசில்தார் உள்ளே போனார். அப்புறம் பேரப்பிள்ளையுடன் வந்திருந்த ஒரு ஐம்பது வயது அம்மாள், அப்புறம் - நான், பின் கடைசியாக அந்த முண்டாசும் பையுமாகத் தீவிரமாகக் காத்திருந்த நபர்.

7.23-க்கு என் முறை வந்தது.

''வாங்க யோகநாதன் எப்படி இருக்கு?''

காலையில் தோன்றிய தலைச் சுற்றலைப் பற்றிச் சொன்னேன். டாக்டர் என் புஜத்தில் பட்டை சுற்றிக் காற்றடித்து, ப்ரெஷர் பார்த்தார். ''கொஞ்சம்தான் கூட'' என்றார். இந்தக் கோடை வெயில் கடுமைக்குக் கொஞ்சம் அப்படித்தான் இருக்குமென்றார். ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொன்னார். மாத்திரைகள் தந்தார். நான் கடியாரத்தைப் பார்த்தேன். மணி 7.28.

''இன்னும் ஒரு பேஷண்ட் இருக்கிறார், டாக்டர்! நான் அடுத்த வாரம் வருகிறேன்!'' என்று எழுந்தேன்.

டாக்டர் ஏதோ சொல்ல வாயெடுக்க, 'படார்' என்று கதவு அப்போது திறந்தது. அந்த உயர்ந்த முண்டாசு கட்டிய ஆள் திடும் பிரவேசமாக உள்ளே நுழைந்தார்.

டாக்டர் பையின் முன்னாலே சென்று இடது கையால் தன் முண்டாசை உரித்து எறிந்தார். வலது கையில் பெரிய கைத் துப்பாக்கி. அதன் முனை டாக்டரின் நெஞ்சை நோக்கி பிடிக்கப் பட்டிருந்தது.

''என்னைத் தெரிகிறதா, பைய்?''

''நன்றாய்த் தெரிகிறது, டாக்டர் துரை, உங்களை நான் மறக்க முடியுமா? உட்காருங்கள்! நீங்கதான் இன்னிக்கு என் கடைசி பேஷண்ட்!''

''யெஸ்! எப்போதைக்குமே கடைசிப் பேஷண்ட்! இனிமே நீ எந்தப் பேஷண்ட்டையும் பார்க்கப் போவதில்லை, பைய் உன் சாவாக வந்திருக்கேன் நான்!''

எனக்குச் சப்த நாடியும் ஒடுங்கி உடம்பு உதறியது. டாக்டர் பையோ நிதானமே இழக்கவில்லை. ''அப்படியே ஆகட்டும். ஆனால் இந்தக் கொலைக்குச் சாட்சி வேறு எதற்கு? மிஸ்டர் யோகநாதன் வெளியே போகட்டும்... நீங்கள் போங்கள், யோகநாதன்!'' என்றார். என்னைப் பார்த்து.

அந்த ஆள், - டாக்டர் துரை - சடேலென்று நகர்ந்து கதவு பக்கம் முதுகாக வழியை மறித்து நின்றான்.

''நோ, டாக்டர் பைய் என்னிடம் விளையாடாதே. இந்த ஆள் வெளியே போய் உனக்கு உதவி கொண்டு வரவா? நத்திங் டூயிங்! உட்கார் அப்படியே, உட்கார்ந்து உன் இஷ்ட தெய்வம் ஹநுமாரை வேண்டிக் கொள். இவனுக்கும் சேர்த்து வேண்டிக்கொள்!''

''எத்தனை ஆண்டுகள், இதற்காகக் காத்திருந்து வந்திருக்கேன் தெரியுமில்லையா, பைய்? - ஏழரை வருஷம்! சிறையிலே கடுங்காவல் தண்டனை - ஸர்ஜனின் இந்தக் கைகள் தச்சு வேலை செய்தன! எல்லாம் உன்னால் வந்த வினை! வேலையில் அக்கறையின்மை என்று ரிப்போர்ட் கொடுத்தியே. அந்தப் பாழாய்ப் போன அல்ஸர் கேஸ் பரிமளா வயிற்றில் பஞ்சை நானா வைத்தேன்? அதை எடுக்க வேண்டிய நர்ஸ் எடுக்கவில்லை! நான் தையல் போடும் முன் அவள் எடுத்திருக்க வேண்டும். அது என் தப்பா? அதற்காக என் வாழ்க்கையை அல்லவா நாசமாக்கினாய்! நீயும் ஸீனியர் ஸர்ஜன்! ஹெட் ஆஃப் டிபார்ட்மென்ட்! நீயெல்லாம் ஒரு என்கொய்ரி ஆஃபீஸர், சீ!''

பைய் அவனையே பார்த்தார், அமைதியாகச் சொன்னார்; ''அந்தப் பரிமளா - ஷீ டைட், டாக்டர் துரை! ஷீ டைட். அவள் இறந்தே போனாள். குடும்பத்தில் சம்பாதிக்கற ஒரே நபர் அவள்தான். அவளைச் சார்ந்து விதவை அம்மா, ரெண்டு தங்கை, ரெண்டு தம்பி இருந்தாங்க...'' ஒருத்தரும் இல்லாமலே போகட்டும்! அவள் அநாதைப் பெண்ணாகவே இருந்திருக்கட்டும்! நீங்க அன்னிக்கு அஜாக்கிரதையா இருந்து அவ உயிரைப் பறிச்சீங்களே அது நியாயமா சொல்லுங்க, டாக்டர் துரை!''

துரை ஆங்காரக் குரலில் சீறினான். இடக் கையால் மேஜையில் குத்தினான். அவன் குத்திய அதிர்ச்சியில் மேஜையில் இருந்த கண்ணாடி டம்ளர் சரிந்து தண்ணீர் கொட்டிற்று. அதை, அதிலிருந்து விழுந்த தர்மாமீட்டர், தண்ணீர் எல்லாவற்றையும் சேர்த்து துரை இடது கையால் தள்ளினான். தர்மாமீட்டரும், க்ளாஸும் கீழே விழுந்து உடைந்து சிதறின.

துரை சிரித்தான். அவன் நன்றாகக் குடித்து விட்டு வந்திருக்க வேண்டும்.

''பெரிய்ய ஜீவகாருண்யப் ப்ரபு இவரு! உயிராம் உயிர்! நீ தப்பே பண்ணினதில்லையா, பைய், உன் ப்ராக்டீஸிலே?''

''ஏன் இல்லை பண்ணியிருக்கிறேன். நானும் மனிதன் தான், டாக்டர் துரை. ஆனால் அஜாக்கிரதையாய், பொறுப்பில்லாமல் பண்ணினது இல்லை. குடித்துவிட்டுப் போதையில் பண்ணினது இல்லை. யோசித்துப் பாருங்க - பரிமளா கேஸ் உங்க முதல் தப்பு இல்லே - அதுக்கு முன்னாலே அந்த அபார்ஷன் கேஸ், அதுக்கும் முன்னாலே பண்ணின அவசியமில்லாத அப்பெண்டிக்ஸ் ரிமூவல்!''

துரை மௌனமாக அவரை முறைத்தான்.

அவர் தொடர்ந்தார்: ''டாக்டர் துரை! அதெல்லாம் ஆனதுக்கப்புறம், எல்லாம் தெரிஞ்சுக்கிட்டு நான் உங்களைத் தப்புவிச்சிருந்தா, அதுக்கேத் தாப்புலே ரிப்போர்ட் கொடுத்திருந்தா, உங்களோட நானும் சேர்ந்து கொலைகாரப் பாவி ஆயிருப்பேன்! இன்னும் எத்தனை பேரை நீங்க அதே மாதிரி கவனம் இல்லாம, குடிச்சுட்டும், தூக்கம் இல்லாமச் சுத்தியும் - கொன்னுருப்பீங்களோ? ஒங்க உதாரணத்தைப் பார்த்து ஒதறல் விட்டுப் போய், எத்தனை ஜூனியர்கள் அங்கபின்னம், அக்கிரமம் கொலைல்லாம் எவ்வளவு பண்ணியிருப்பாங்களோ, ஸர்ஜன் மொகமூடியைப் போட்டுக்கிட்டு, பொது ஜனத் துரோகம் பண்ணிக்கிட்டு!''

துரையின் முகத்தில் இப்போது கொஞ்சம் கலவரமும் நிச்சயமின்மையும் தெரிந்தன.

''உட்காருங்கள் டாக்டர் துரை!'' என்றார் பைய்

அவன் படிந்து உட்கார்ந்தான்.

''நீங்க என்னிக்கு வேணும்னாலும் என்னைச் சுடலாம் துரை! நான் எங்கேயும் ஓடிப்போகப் போறதில்லை - என் பேஷண்ட்ஸை விட்டுட்டு என் உயிருக்காக நான் ஓடிப்போகவும் மாட்டேன்



அது என்னாலே முடியாது! அப்படிப் பயப்படற ஆளு நான்னா அன்னிக்கே விசாரணை ரிப்போர்ட்டை வேறே விதமா எழுதியிருப்பேனே!''

துரையின் தோள்கள் சரிந்து, இரண்டு கைகளையும் இப்போது அவன் மேஜையின் மேல் படுக்க வைத்திருந் தான். அவன் ரிவால்வர் வலது கையில் பட்டவாறு மேஜை மீது கிடந்தது.

டாக்டர் பைய் அதை எளிதில் கவர்ந்து தன் வசப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவர் அதற்கு முயலக்கூட இல்லை! எனக்கோ மிகவும் பயமாய் இருந்தது.

மெல்ல, அவசரமே இல்லாமல் டாக்டர் பைய் மீண்டும் பேசலானார். மேலே டியூப் விளக்கை 'விர்'ரென்ற சப்தத்துடன் ஒரு பெரிய வண்டு முற்று கையிட்டுக் கொண்டிருந்தது.

ஆமாம், டாகடர் துரை! என்னிக்கு வேணும்னாலும் வாங்க, என்னைச் சுடுங்க, சுட்டுட்டுச் சுதந்திரமாப் போங்க. நான் ரெடி! ஆனா வரும் போது, குடிக்காமே, முழுசா சுய புத்தி யோட மட்டும் வாங்க. ஏன்னா மறுபடி யும் கேர்லெஸ்ஸாகவே இந்தக் கொலையையும் நீங்க செஞ்சிங்கன்னு ஆகக்கூடாது பாருங்க!''

டாக்டர் பைய் ரிவால்வரை இப் போது எடுத்தார். பீதியுடன் அவரைப் பார்த்த துரையிடமே அதைக் கொடுத் தார்! அவனும், ஏதோ யந்திரம் போல இயங்கி, அதை வாங்கிக் கொண்டான்.

''இன்னிக்குத் திங்கட்கிழமை - நான் ஹனுமார் பூஜைக்கு போகணும். ஏற் கெனவே லேட் ஆயிடுச்சு. அதனாலே இன்னொரு நாள் வாங்க - ஒங்க சௌக ரியம் போல வாங்க - நான் இங்கேயே தான் இருப்பேன்!''

எழுந்தர்ர் டாக்டர் ராம்நாத் பைய். மேஜையைச் சுற்றி வந்தார். மெள்ளத் துரையை, இதமாகத் தொட்டு எழுப்பி னார். தரையில் கிடந்த அவனுடைய முண்டாசுத் துணியைச் சரி செய்து மடித்து அவன் பாண்ட் பையினுள் திணித்தார்.

அவனைக் கதவருகே அழைத்துச் சென்று, தாளிட்ட கதவைத் திறந்து, ''குட் நைட், கடவுள் காப்பாற்றட்டும், டாக்டர் துரை! டோண்ட் வொர்ரி, நான் எப்போதும் காத்திருப்பேன்!'' என்று யதார்த்தமாக அவனை வழி யனுப்பிவைத்தார்.

விறைத்துச் சிலையாகிப் போயிருந்த நான் உணர்வு பெற்றேன், - கெட்ட கனவிலிருந்து விழிப்பது போல.

''இந்த மாதிரி நடப்புல்லாம் ஒங்க இரத்த அழுத்தத்துக்கு ஆகவே செய் யாது - ஆதுக்குத்தான் ஒங்களை அனுப் பிடலாம்னு பார்த்தேன், யோகநாதன்! ஆனா அந்த முரடன் கேக்கல்லை,''

டாக்டர், நீங்க போலீசுக்குச் சொல் லப்போறதில்லையா இதை? என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

டாக்டர் சிரித்துக் கொண்டே, விளக்குகளை அணைத்துக் கதவை மூடிப் பூட்டை மாட்டி, சாவியை மாட் டிப் பூட்டினார். பூட்டு சரியாக பிடித்துக் கொண்டதா என்று இழுத்துப் பார்த் தார். தம் காரை நோக்கி நடந்தார்.

''யோகநாதன்! இதெல்லாம் நம்ம கையிலேயா இருக்கு? போலீஸ் வந்து என்ன பண்ண முடியும்? எல்லா ஒலகக் காரியமும் மேலே இருக்கற ஸூப்பர் ஸ்டேஷன்லன்னா முடிவாகறது! வாங்க இன்னிக்கு என் கூட, ஹனுமார் தரி சனம் ஒங்களுக்கும் நல்லதுதான்,'' என்று என்னையும் தம்முடன் அழைத் துச் சென்றார்.

''போலீஸ் ஸ்டேஷன் வேண்டாம். பவர் ஸப்-ஸ்டேஷனுக்குப் போகலாம், 'என்றார் மெல்ல முறுவலித்தவாறு.

நானும் அவருடன் காரில் ஏறி னேன். ○

நிஜாம் பாக்கு
நிஜாம் தர்பார்
நிஜாம்
NIZAM DARBAR
தர்பார்
சுகந்த வாசனை பாக்குதூள்
NIZAM SUPARI
P B 14 PUDUKOTTAI
Prop. S.A. SAFIULLAH & CO.
TRADE MARK REGD. NO 123483
निज़ाम सुपारी
నిజాం సుపారి
S.A. SAFIULLAH & CO,
PUDUKOTTAI - 622001.

மாடர்ன் மயில் ராவணன்

முகுந்தன்



காட்சி - 1

(நண்பர்களால் 'எம்டன்', 'கிங்கரன்', 'ராவணன்' என்று புனைபெயரிட்டு அழைக்கப்படும் ரகுபதியின் வீடு. ஹாலில் ஏகப்பட்ட கும்பல். குழப்பமான பேச்சுக் குரல்கள். ரகுபதியின் மகள் அபீதாவைப் பெண்பார்க்கும் படலம் நடந்து கொண்டிருக்கிறது. அபீதா பட்டுப் புடைவை சரசரக்க, இட்ட அடியிலும் எடுத்த அடியிலும் கொலுசு சப்திக்க நடந்து வந்து, எல்லாரையும் வணங்கி உட்காருகிறாள்.

மாப்பிள்ளைப் பையன் சாரங்கன் அபீதாவைப் பார்த்து அசட்டுப் புன்னகை புரிந்துவிட்டு, அம்மாவின் கண்ணிலிருந்து புறப்படும் அக்னி ஜ்வாலையின் காரணமாகத் தலையைத் தாழ்த்திக் கொள்கிறான். அவனது தந்தை ஆதிசேஷன் தமது கழுத்தில் சாரைப் பாம்பு போல ஏக நீளத்துக்குத் தொங்கும் அங்கவஸ்திரத்தினால் முகத்தைத் துடைத்துக் கொள்கிறார்.)

ஆதி (அபீதாவிடம்): ஏம்மா, உனக்குப் பாடத் தெரியுமா?

அபீ: ஏதோ கொஞ்சம் தெரியும்...

ரகு: ஒருதடவை பார்த்துட்டாப் போதும்... அதை அப்படியே பாடுவா..

ஆதி: அடடா! கன்னாபின்னா சினிமாப் பாட்டா!

ரகு: உங்களுக்கு என்ன தெரியும் சினிமாப் பாட்டின் அருமை! போன வருஷம் டிசம்பர் சீஸன்லே நம்ப கம்பங்குடி கச்சேரி கேட்கப் போயிருந்தேன். மோகனத்தை ஆலாபனை பண்ணிட்டு 'நின்னுகோரி வரணும்'னு அக்னி நட்சத்திரம் பாட்டை அவர் பாடினப்போ ஒரு கிளாப்ஸ் கிடைச்சுது பாருங்க! கம்பங்குடியே அசந்து போயிட்டார்... 'பதினாறு வயசிலேர்ந்து தியாகராஜர் கீர்த்தனையைப் பாடித் தொண்டை வறண்டதுதான் மிச்சம்... இப்படி ஒரு அப்ளாஸ் கிடைச்சதில்லையே'ன்னு மேடையிலேயே பகிரங்கமாகச் சொன்னார் கம்பங்குடி...

ஆதி: என் பையன் சாரங்கன் கூட 'ராஜா கையை வச்சா'வை ரொம்ப நன்னா பாடுவான்!

ரகு: அப்படியா! வெரிகுட்!

ஆதி: அவன் சமையல் பண்றதிலே கூட எக்ஸ்பர்ட்... வெஜிடபிள் பிரியாணி செய்தான்னா, வீடே மணக்கும்... கேடரிங் டெக்னாலஜி படிச்சவனாச்சே!

ரகு: அபி குருமா பண்றதிலே ஸ்பெஷலைஸ் செய்திருக்கா... அவள் பி.எஸ்ஸி ஹோம் சயின்ஸ்... பர்ஸ்ட் கிளாஸ்!

ஆதி: சாரங்கனுக்கு மோட்டார் சைக்கிள்னா தனி ஆர்வம்... அதை அக்கு அக்கா பிரிச்சுப் பூட்டக் கூடத் தெரியும்...

ரகு: அபீயும் அப்படித்தான்... டிவி, டூ - இன் - ஒன், மிக்ஸி, கிரைண்டர் எதுவாக இருந்தாலும் ரிப்பேர் பண்ணத் தெரியும்...

ஆதி: ஜோடிப் பொருத்தம் பிரமாதமாகத்தான் இருக்கு ஒரே ஒரு விஷயத்திலே தவிர...

ரகு: என்ன சொல்ல வரீங்க?

ஆதி: உங்க பெண் வேலை பார்க்கிறாள் இல்லையா?

ரகு: ஆமாம்... ஹோட்டல் பிரம்மாவிலே கிச்சன் சூப்பர்வைசராக இருக்கா...

ஆதி: சாரங்கனுக்கு வேலை இல்லை! அதான் விஷயம்!

ரகு: பூ! இதென்ன பிரமாதம்! அந்த ஹோட்டல்லேயே உங்க பையனுக்கு வேலை வாங்கித் தர அவளாலே முடியும்... கவலையை விடுங்க!

அபி (கோபமாக): அப்பா! இவங்க என்னைப் பெண் பார்க்க வந்திருக்காங்க... அதை மறந்துட்டு எதையெதையோ பேசிட்டிருக்கீங்களே!

ரகு: அது மறந்தே போயிட்டுதும்மா... என்ன சார், லௌகீகம் பேச ஆரம் பிக்கலாமா? என்னாலே என்ன சீர் வரிசை செய்ய முடியும்னு இந்த லிஸ்ட்லே எழுதி வச்சிருக்கேன்... அதைப் பாருங்க முதல்லே!

ஆதி: அதெல்லாம் உங்க இஷ்டப்படிச் செய்யுங்க... முக்கியமா நான் ஒண்ணு சொல்வேன்... அதற்கு மட்டும் நீங்க ஒப்புக் கொண்டு விட் டால், முகூர்த்தத்துக்கு நாள் பார்க்க வேண்டியதுதான்!

ரகு: சொல்லுங்க! என்ன செய்யணும்?

(ஆதிசேஷன் சொல்லச் சொல்ல, ரகு பதி திகைத்துத் தடுமாறிப் போகிறார்.)

காட்சி - 2

(அற்புதா அண்ட் கம்பெனி அலுவல கம், 'மானேஜிங் டைரக்டர்' என்ற பித் தளைப் பலகையைத் தாங்கியிருக்கும் அறையின் வாசலில் ரகுபதியும் மற் றொரு ஊழியர் வைத்தியும் தலையைப் பிய்த்துக் கொண்டு நிற்கிறார்கள்.)

ரகு: ஏன்யா வைத்தி! நான் லேட்டா வருவேன்னு நேத்து சாயந்தரமே உம்மகிட்டே சொல்லிட்டுப் போனேனே - அதை நம்ம மானே ஜர்கிட்ட சொல்லித் தொலைப்பதற் கென்ன கேடு? அவர் அட்டெண்டன் ஸிலே 'பர்மிஷன்'னு மார்க் பண் ணிவிட்டிருப்பார்; நான் எம்.டி. யைப் பார்க்காமல் தப்பிச்சிருப் பேனே!

வை: நீர் என்கிட்டே சொன்னபோது நான் கொஞ்சம் பிஸியா இருந் தேன்... நீர் கவனிக்கல்லே போலி ருக்கு!

ரகு: போஃபர்ஸ் புளுகாப் புளுகறிரே!.. நீர் என்னவோ நாவல்னா படிச்சுண் டிருந்தீர்?

வை: ஆமாம்யா! 'முண்டம் செய்த முப் பத்தாறாவது கொலை'ங்கற மாச நாவல் படிச்சிண்டிருந்தேன்... அந்த சுவாரஸ்யத்திலே நீர் சொன்னது மனசிலே பதியல்லே!... அதனாலே என்ன? எம்.டி. கிட்ட எருக்கம்பட்டி ஜமீந்தார் வீட்டு சிம்ப்பன்ஸி இன் னிக்குக் காலம்பற குட்டி போட்டி ருக்கு... அதுக்குப் பிரவசம் பார்த்து மருந்து கொடுக்கப் போயிருந். தேன்னு ரீல் விட வேண்டியது தானே? நீர்தான் அமெச்சூர் வைத்தி யராச்சே! அதோட, ஜோசியர் கூட!

ரகு: இதோ பாரும்! என்னைப் பத்தி எது வேணுமானாலும் சொல்லும்... ஆனா என் ஜோசியத்தை மட்டும் பழிக்காதீர்... ஆமாம், இப்ப எம்.டி. நல்ல மூட்லேதானே இருப்பார்? தைரியமா உள்ளே போகலாமா?

வை: உம்ம ஜோசியத்திலே அந்த விஷயத்தையும் கண்டு பிடிச்சுண்டு உள்ளே நுழையுமேன்! குலுக்கிப் போடறதுக்குச் சோழி வச்சிருக்கீரா பாக்கெட்டிலே?

ரகு: சோழியும் வேணாம், கோழியும் வேணாம்... பகவான் பேர்லே பாரத்தைப் போட்டுட்டு உள்ளே போறேன்!

(கதவைத் திறந்து கொண்டு உள்ளே செல்கிறார். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு புன்னகையுடன் வெளியே வருகிறார்.)

வை: ரகுபதி! வாரும் இப்படி! பத்துக் கிலோ சர்க்கரையைக் கண்டரோல் விலைக்கே வாங்கின சம்சாரி போல உம்ம முகமெல்லாம் சிரிப்பு மலர்ந்து கிடக்கே - என்ன விஷயம்?

ரகு: நிறைய இருக்கு... நான் எம்.டி. ரூமுக்குள்ளே போனபோது மணி என்னன்னு பார்த்தீரா?... அப்ப டயம் 11.11!

வை: இருக்கட்டுமே! அதுக்கென்ன இப்ப?

ரகு: அந்த நிமிஷத்திலேருந்து நல்ல நேரம் ஆரம்பிச்சுட்டுதுய்யா எனக்கு!

வை: புரியல்லியே!

ரகு: முதலாளி அறையிலே நடந்ததைச் சொல்றேன், கேளும்!

(காட்சி மாற்றம்)

காட்சி - 3

(எம்.டி. தீர்த்தகிரி தபாலில் வந்த கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருக் கிறார். அப்போது மெதுவாக உள்ளே நுழையும் ரகுபதி, 'குட்மார்னிங்' சொல்லி விட்டுத் தயங்கி நிற்கிறார். தீர்த்தகிரி லட் சியமே செய்யாமல் கடிதங்களைப் படிக் கிறார். திடீரென அவரது முகத்தில் கோபம் படருகிறது. பத்து நாள் பட்டினி கிடந்தவன் பசியின் தீவிரத்துடன் கை முறுக்குகளைக் கடிப்பது போலப் பற்களை 'நறநற'க்கிறார். அழைப்பு மணியை அழுத்தப்போனவர், அறை மூலையில் நிற்கும் ரகுபதியைப் பார்த்து விடுகிறார். டி.வியில் பஞ்சாயக்க ராஜ் பிரசாரக்கைப் பாா்க்க நேர்ந்தால் ஏற்படும் வெறுப்பும் ஆத்திரமும் அவருக்குள் பீரிடுகின்றன.)

தீர்: என்னய்யா! என்ன விஷயம்?

ரகு (தடுமாற்றத்துடன்): வந்து... ஒண்ணுமில்லே... கொஞ்சம் லேட் ஆயிட்டுது...

தீர்: பத்து மணி ஆபீசுக்குப் பதினோரு மணிக்கு வரீர்... இதுக்குப் பேரு 'கொஞ்சம் லேட்'டா?... ஒண்ணாம் தேதி கொடுக்க வேண்டிய சம்பளத் தைப் பதினெட்டாம் தேதி நான் கொடுத்தால் 'கொஞ்சம் லேட் ஆயிட்டுது'ன்னு நீர் சும்மா இருப் பீரா?

ரகு: அதெப்படி சார்? நான் குடும்பஸ்தன்...

தீர்: அப்படீன்னா நான் என்ன சாமியாரா - இல்லே, ஆண்டிப் பண்டாரமா?

(ரகுபதி பேசாமல் நிற்க, தீர்த்தகிரி தொடர்கிறார்.)

தீர்: இப்பத்தான் தபால்லே வந்த லெட்டர்ஸ் பார்த்தேன்... நம்ம ஆபீஸ்லே எதுவுமே சரியில்லே...

ரகு: என்ன சார் ஆச்சு?

தீர்: என்னவா? ஒருத்தன் என்ன-டான்னா காலிகட்டுக்கு அனுப்ப வேண்டிய சரக்கை, கல்கத்தாவுக்கு அனுப்பறான்... இன்னொருத்தன் பதினேழாயிரத்துக்குச் செக் எழுதச் சொன்னால் எழுபத்தோராயிரத்துக்கு எழுதிண்டு வந்து, நான் பிஸியாக இருக்கிற நேரத்திலே நீட்டி என் கையெழுத்தையும் வாங்கிண்டு போயிடறான்... அநியாயமா இருக்கே!

ரகு: நான் அப்படியெல்லாம் இல்லே சார்... என் வேலையிலே யாரும் தப்பே கண்டு பிடிக்க முடியாது...

தீர்: வாஸ்தவம்தான... வேலை செய்தால்தானே தப்புவரும்? நீர்தான் வேலையே செய்யறதில்லையே!... வெற்றிலை பாக்கு போடவும், வெட்டிப் பேச்சு பேசவும், தரகு வேலை, ஜோசியம்னு உம்ம சொந்தக் காரியங்களைக் கவனிக்கவும்தானே ஆபீசுக்கே வரீர்!

ரகு: சார்! சார்! இதெல்லாம் அபாண்டம்!

தீர்: உங்களையெல்லாம் வச்சுண்டு ஆபீஸ் நடத்தறதை விட, கழுத்திலே பத்து டன் பாறாங்கல்லைக் கட்டிண்டு அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலே போய் விழுந்துடலாம் போலிருக்கு!

ரகு: அட்லாண்டிக்கிலேயா?... அவ்வளவு தூரமா?

தீர்: ஆமாய்யா... மண்டையைப் போடறதுக்கு முன்னாலே அமெரிக்காவை ஒரு பார்வை பார்த்துடலாமேன்னுதான்!

ரகு: சார்! நான் ஒண்ணு கேட்கலாமா?

தீர்: கேட்டுத் தொலையும்!

ரகு: உங்க நட்சத்திரம் என்ன சார்?

தீர்: அவிட்டம்!... அதுக்கென்ன வந்தது இப்ப?

ரகு: நான் நெனச்சது சரியாப் போச்சு... உங்களுக்கு இப்ப செவ்வாய் தசை நடந்துண்டிருக்கு... அதனாலேதான் நிறையப் பிரச்சனைகள்... இதிலேந்து தப்பிக்க ஒரு வழி இருக்கு... செவ்வாய்க்கு அதிபதி முருகன். அதனாலே பழனி, திருத்தணி, திருச்செந்தூர்...

தீர்: அங்கேயெல்லாம் போய் மொட்டை போட்டுண்டு வரணுமாக்கும்?... ஆபீஸ்லேதான் நீங்க எல்லாருமா சேர்ந்து என்னை மொட்டையடிச்சுட்டீங்களே... மொட்டை போட முடி எங்கேய்யா இருக்கு என் தலையிலே?

ரகு: அவசரப்படாமல் கேளுங்க சார்... நான் சொல்ல வந்த விஷயமே வேறே... ஏழெட்டு முருகன் ஸ்தலங்களுக்கு உங்க உபயமாக மயில்களை வாங்கிக் கொடுத்திட்டீங்கன்னா, பிரச்னைகளெல்லாம் பறந்தே போயிடும்!

தீர்: பிரச்னையே அங்கேதான் ஆரம்பமாகுதுன்னு நான் சொல்றேன்... மயில்களுக்கு எங்கேய்யா போவேன்? மூர்மார்க்கெட் கூட இல்லையே இப்ப?

ரகு: அந்த கவலை உங்களுக்கு வேண்டாம்... அதை நான் பார்த்துக்கறேன்!

தீர்: ஏன்யா... நிஜமாத்தான் சொல்றீரா? மயிலை உபயமாகக் கொடுத்தால் என் பிராப்ளமெல்லாம் தீர்ந்துடுமா?

ரகு: என் அநுபவத்திலே சொல்றேன் சார்... முன்னே இப்படித்தான் ஒருத்தருக்குச் சனிக் கோளாறுன்னு ஒரு டஜன் காக்கா வாங்கி திருநள்ளாறிலே கொண்டு போய் விடச் சொன்னேன்... காக்கா கரையும் இல்லையா?... அது மாதிரி பிராப்ளங்களும் கரைஞ்சே போயிட்டுது!

தீர்: கேட்கறதுக்கு நல்லாத்தான் இருக்கு... சரி, நீர் போய் மயில் வேட்டை ஆடும்... நான் பிரச்னைகளை வேட்டையாடறேன்! என்னதான் ஆறதுன்னு பார்த்துடுவோம்!

காட்சி - 4

(குக்கிராமம், சிற்றூர், பேரூர் என்று மயிலைத் தேடியலைந்து திரிந்துவிட்டு, கடைசியாக மயிலாடுதுறை வீதிகளில் அல்லாடிக் கொண்டிருக்கிறார் ரகுபதி. ஒரு தெரு வழியாக அவர் செல்லும்போது எங்கிருந்தோ பாய்ந்து வரும் குரங்கு ஒன்று ரகுபதியின் கைப்பையை லபக் கென்று பறித்துக் கொண்டு தாவி ஓடுகிறது.

குரங்கைத் துரத்திக் கொண்டு ரகுபதி ஓடுகிறார். சந்து பொந்துகளையெல்லாம் தாண்டி, வயல் காட்டுப் பக்கமாகக் குரங்கு விரைகிறது. விடாமுயற்சியுடன் குரங்கை விரட்டிக் கொண்டு செல்லும் ரகுபதி ஓர் இடத்தில் வரப்பு தடுக்கி, அறுவடை செய்யப்பட்ட வயலில் விழுகிறார். சிரமப்பட்டு எழுந்திருக்க அவர் முயலும்போது, அதட்டலாக ஒரு குரல் கேட்கிறது... 'யாருய்யா அது! எட்டு மணிக்கே குடிச்சுட்டு விழுந்து கிடக்கிறது! எழுந்திரு, சொல்றேன்!'')

ரகு: அறிவுகெட்டதனமாகப் பேசாதேய்யா! என்னைப் பார்த்தால் குடிகாரன் மாதிரியா இருக்கு?... (எழுந்து உட்கார்ந்து) அட, ஆதிசேஷனா!... உம்ம ஜூலை வலி எப்படி இருக்கு சுவாமி?

ஆதி: என்னய்யா ரகுபதி! எதுக்காக இப்படி என் வயல்லே வந்து படுத்துக் கிடக்கிறீர்... ஏதாவது பிரார்த்தனையா?

ரகு (எழுந்தபடியே): ஒரு வகையிலே அப்படித்தான்... வீட்டுக்குப் போனபிறகு எல்லாம் விவரமா சொல்றேன்... உடம்பெல்லாம் புழுதியும் தூசியுமா ஆயிட்டுது... முதல்லே காவேரியிலே முங்கிக் குளிச்சாகணும்... பாலம் ஏதாவது இருக்கா இந்த ஊர்லே? அதிலேருந்து 'டைவ்' அடிக்கணும் போலிருக்கு!

ஆதி: பாலத்திலிருந்து குதிச்சால் உம்ம மண்டைதான் உடையும் ஓய்! ஆறு



வறண்டு கிடக்கு!... வீட்டிலே போர்வெல் தண்ணி நிறைய இருக்கு... அங்கே போய்க் குளிக்கலாம், வாரும்!

காட்சி - 5

(மயிலாடுதுறையில் ஆதிசேஷன் வீடு. ரகுபதி குளித்து விட்டு, விச்ராந்தியாக உட்கார்ந்து டிகிரி காபி பருகிக் கொண்டிருக்கிறார்.)

ஆதி: என்னய்யா! உம்ம பொண்ணு கல்யாண விஷயம் என்ன ஆச்சு?

ரகு: நீர் எந்த வேலையிலே அப்படியொரு நிபந்தனை போட்டீரோ - அவளுக்கு வரன் எதுவும் குதிரவே இல்லை!

ஆதி: அப்படி என்ன நான் பெரீசாக் கேட்டுட்டேன்?... எங்க மனுஷர்கள் ஒரு முப்பது பேர் தினமும் இரண்டு வேளை குளிச்சுப் பழகினவங்க... அதனாலே அவங்க குளிக்கிறதுக்கு நீர் ஏற்பாடு பண்ணித் தரணும்னுதானே கேட்டேன்...? முடியாதுன்னிட்டீரே!

ரகு: சுவாமி! நீர் குதிரைக் கொம்பும், புலிப்பாலும் கேட்டிருந்தாலும் எப்படியோ ஏற்பாடு செய்து தருவிச்சுக் கொடுத்திருப்பேன்... ஆனா மெட்ராஸ்லே எந்தக் கொம்பனாலும் செய்ய முடியாத ஒரு சமாசாரத்தை நீர் நிபந்தனையா போட்டுட்டீர்... 'இதற்கு ஒத்துக் கொள்ளாவிட்டால் உம்ம சம்பந்தமே வேண்டாம்'னு வேறே அடிச்சுன்னா சொல்லிட்டீர்!

ஆதி: அதையெல்லாம் மறந்துடும்... என் பிள்ளை என்னடான்னா உம்ம பெண் நினைவாகவே இருக்கான்...

ரகு: அபி மேலே அவ்வளவு பிரியமா?

ஆதி: அதைப் பத்தி எனக்குத் தெரியாது... உம் அபியே அவனுக்கு வேலை வாங்கித் தருவான்னு சொன்னீர் இல்லையா? அதைப் பிடிச்சுண்டுட்டான்... 'உங்களாலேதான் எனக்கு வேலை கிடைக்கிற சான்ஸ் போயிட்டுது'ன்னு என்னைத்

☎ 77956
K. A. S. & BROS.
Manufacturers of: BRINDA WET & DRY GRINDERS
Cauvery Road • ERODE-638003.
K.A.S

தினமும் கரிச்சு கொட்டறான்! அறுபது நாழிகையும் அபி ஜபம்தான் அவனுக்கு!

ரகு: சரி... அப்படீன்னா முடிவா நீர் என்ன சொல்றீர்?

(அதிசேஷன் பதில் சொல்வதற்குள் வீட்டுக் கொல்லைப்புறத்திலிருந்து பேரோசை ஒன்னு எழுகிறது. ஆதிசேஷன் ஆத்திரத்துடன் துள்ளிக் குதித்து, ஓசை வந்த திக்கு நோக்கி, பாமாயில் 'க்யூ'வில் இடம் பிடிக்க விரையும் வேகத்துடன் ஓடுகிறார். ரகுபதியும் அவரைப் பின் தொடர்கிறார்.)

காட்சி - 6

(அற்புதா அண்ட் கம்பெனி, வழக்கம் போல ஆபீசுக்கு லேட்டாக வரும் ரகுபதியும் வைத்தியும் மானேஜிங் டைரக்டரின் அறை வாசலில் நின்று கொண்டிருக்கிறார்கள்.)

ரகு: ஏன்மா வைத்தி இப்படிப் பயந்து நடுங்கறீர்! எம்.டி.யும் நம்மைப் போல மனுஷர்தான்... கடிச்சுத் தின்னுட மாட்டார்... பயப்படாமல் ரூமுக்குள்ளே போகலாம் வாரும்!

வை: உமக்கென்னய்யா!.... நீர் எத்தனை மணி நேரம் லேட்டாக வந்தாலும் எம்.டி. சிரிச்சுக்கிட்டே, 'இந்தாங்க பேனா.... அட்டெண்டன்ஸ்லே கையெழுத்துப் போடு'ன்னு பவ்வியமா பார்க்கர் பேனாவை நீட்டுவார்.... என் நிலைமை அப்படி இல்லையே! அதிருக்கட்டும், எப்படிய்யா முதலாளியை நீர் வளைச்சுப் போட்டீர்? சொல்லு மேன்!

ரகு: ரெண்டு மாசம் முன்னாலே மயில் சமாசாரம் சொன்னேனே - ஞாபகமிருக்கா?

அத்தனையும் ஐ.எஸ்.ஐ. முத்திரை போடாத அசல் மயில்கள்!

வை : ஆச்சர்யமா இருக்கே!

ரகு : இன்னும் கேளும்: சம்பந்தியை நைஸாக விசாரிச்சேன்... அவர் வண்டலூர் ஜூவிலே உத்தியோகம் பார்த்தவராம்... அவர் ரிடையர் ஆகிறபோது ஞாபகார்த்தமாக இருக்கட்டும்னு மற்ற ஊழியர்கள் எல்லாரும் சேர்ந்து ஒரு ஜோடி மயில்கலை அன்பளிப்பா கொடுத்தாங்களாம்... அதுகள்தான் நாமிருவர், நமக்கிருவர்னு கணக்கு வச்சுக்காமல் கணிசமாகப் பெருகியிருக்கு!

வை : பேஷ்! பேஷ்!

பேராலே கோயில்களுக்குச் கொடுத்துட்டீராக்கும்!

ரகு : முதலாளிக்கு ஏகப்பட்ட சந்தோஷம்... பிரமாத வேலை செஞ்சிருக்கீர்... உமக்கு என்ன வேணும் சொல்லும்'னு என்னைக் கேட்டார்....

வை: உம்ம பொண்ணு கல்யாணத்துக்குப் பணம் கேட்டீராக்கும்!

ரகு : அப்படிக் கேட்க நான் உம்மைப் போல அல்பனா?..... எனக்கு எதுவும் வேண்டாம்... என் பொண்ணுக்கு அருமையான வரன் பார்த்திருக்கேன்... சம்பந்தியினுடைய நிபந்தனையை



வை: முருகன் கோயில்களுக்கு எம்.டி.யின் உபயமாக மயில்களைக் கொடுக்கப் போறதாகச் சொல்லி, ஊர் ஊராகப் போய்ட்டு வந்தீர்... அப்புறம் திடீர்னு ஒரு நாள் 'விஷயம் சக்ஸஸ்ஃபுல்லா முடிஞ்சுட்டுது'ன்னு சொல்லிட்டு, உம்ம பெண் கல்யாணத்துக்காக லீவ் போட்டுட்டுப் போயிட்டீரே! எங்கிட்டே எதுவுமே சொல்லலியே!

ரகு: இப்ப சொல்றேன்... மயிலாடுதுறைக்குப் போய் மயில் வேட்டை ஆடிக்கிட்டிருந்த போது தற்செயலாக என் சம்பந்தி வீட்டுக்குப் போகும்படி நேர்ந்தது... அங்கே அவரோடு பேசிக்கிட்டிருந்தேனா, திடீர்னு பெரிய சப்தம் கேட்டது... போய்ப் பார்த்தால் அவர் வீட்டுப் புழக்கடையிலே ஏழெட்டு மயில்கள் சண்டை போட்டுக்கிட்டும், சண்டையிலே ஜெயிச்ச மயில்கள் ஜம்முன்னு தோகையை விரிச்சு ஆடிக்கிட்டும் இருந்ததுய்யா!

ரகு : சம்பந்தி கால்லே தடால்னு விழுந்தேன்... நம்ம முதலாளிக்காக அரை டஜன் மயில்களைப் பெரிய மனசு பண்ணி, கொடுத்து உதவனும்ம்னு கேட்டேன்...! இந்தச் சனியன்கள் இங்கே பண்ணுகிற லூட்டி பொறுக்க முடியாமல்லே... 'அரிசி, பருப்பு மிளகாய் இப்படி எதையுமே காய வைக்க முடியறதில்லே... வற்றல், வடாம் போடக் கூட முடியறதில்லே... எல்லாத்தையும் இந்தச் சனியன்கள் முழுங்கித் தொலைச்சுட்டு ஆடி அட்டகாசம் பண்றது... கொஞ்ச நேரம் கூட நிம்மதியாகத் தூங்க விடறதில்லை.... ராப்பகலாக்ச் சண்டை போட்டு, கர்ண கடூரமாகக் கத்தி, எங்க பிராணனை வாங்கறதுகள்..... தாராளமா எல்லாச் சனியன்களையும் எடுத்துட்டுப் போங்க'ன்னு சொல்லிட்டார். அப்படியே அள்ளிண்டு வந்துட்டேன்!

வை: உமக்கு ஓசியிலே கிடைச்ச மயில்களை நம்ம முதலாளி

நிறைவேற்ற ரெண்டு லாரி பாலவாக்கம் தண்ணீர் எற்பாடு செஞ்சு கொடுங்க... அது போதும்'னு சொன்னேன்... அப்படியே செய்து கொடுத்துட்டார்... கல்யாணத்தையும் ஜாம்ஜாம்னு முடிச்சுட்டேன்!

வை: ஓய் ரகுபதி! உம்ம மகிமை தெரியாமல் இத்தனை நாளும் உம்மை 'ராவணன்'னு நான் கூப்பிட்டது ரொம்பத் தப்புத்தான்யா.... இனிமே அப்படிக் கூப்பிட மாட்டேன்!

ரகு : பரவாயில்லை... பெரிய மனசு பண்ணி உம்மை மன்னிச்சுட்டேன் பிழைச்சுப்போம்!

வை : முழுக்கக் கேளும்மா... இன்னிலேருந்து நான் உம்மை 'மயில்ராவணன்'னுதான் கூப்பிடப் போறேன்! திருப்திதானே?

(ரகுபதி திகைத்து நிற்க, வைத்தி எம்.டி.யின் அறைக்குள் செல்கிறார்.) ◯

சேதுபதி பெற்ற தெய்வச் சிலை

குன்றக்குடி பெரிய பெருமாள்

1

(அழகொளிரும் அந்தப்புர மண்டபத்துள், சுட ரொளிரும் குத்து விளக்கருகே எழிலொளிரும் அரசி இரா ஜேசுவரி நாச்சியார் அமர்ந்திருக்கிறாள். அழகிய சிற்றம் பலக் கவிராயரின் 'தளசிங்க மாலை'யைக் கரங்களில் பற்றிக் கவனத்தோடு படித்துக் கொண்டிருக்கிறாள். அமர்ந் திருக்கும் அரசியின் அருகிருக்கும் கட்டிலுக்குப் பக்கத்தே தொங்கும் தொட்டிலில், குழந்தை செல்ல ரங்காயி நாச்சி யார் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறாள். வேகமாக மண்டபத்துள் நுழைகிற மன்னர் ரகுநாத சேதுபதி, நேராகக் கட்டிலில் சென்று அமருகிறார்.)

ரகுநாத சேதுபதி : (சற்றே நகைப்புடன்) கவிராயரின் காவியத்தில் மகாராணி ராஜேசுவரி நாச்சியார், கரைந்தே போய் விட்டது போல் தோன்றுகிறதே!

இராஜேசுவரி : (வியப்போடு நிமிர்ந்து நோக்கி) ஆங்...! வந்து விட்டீர்களா?

ரகு.சேது : வராமலே இருந்துவிட முடியுமா என்ன?

இரா : வேறென்னவாம்! 'காலையில் அரும்பாகிப் பக லெல்லாம் மொட்டாகி, மாலை நேரத்தில் மலரும் நோய்' என்பார்களே... அந்த நோய் உங்கள் அருகில்கூட வருவ தற்கு அஞ்சுகிறதே! அதனால்தான் நீங்கள் இங்கு வருவீர் களோ, வாராது போவீர்களோ என ஒவ்வொரு இரவும் நள்ளிரவு வரை நான் காத்துக் கிடக்கிறேன்...

ரகு : அடடே! திருக்குறள் வேறு இங்கே விளையாடத் தொடங்கி விட்டதா! (அமர்ந்திருக்கும் நாச்சியாரின் வலக் கரத்தைப் பிடித்து இழுத்து, கட்டிலுக்குச் சென்றவாறே) ராணி! அந்த நோய், என்னைப் பற்றிப் பாடாய்ப் படுத்திய தால் அல்லவா, இரு சேய்களுக்கு, இந்த ராணி, 'தாய்' எனும் தகுதி பெற்றுள்ளார்!

இரா : அதெல்லாம் அந்தக் காலம். அண்மைக் கால மாகச் சேது மன்னரை அந்த 'நோய்' பற்றுவதுமில்லை! பாடாய்ப் படுத்துவதுமில்லை! அதனால் தாய் தவித்துப் போகிறாள். சேய்களோ, 'அப்பா அப்பா' என அழுது, அரற்றி, அயர்ந்து போகிறார்கள். உங்கள் மூத்த மகள் கங்கை நாச்சியார்...

ரகு : (கட்டிலினின்றும் எழுந்து) எங்கே, கங்கையைக் காணவில்லை? இதோ... தொட்டிலில் செல்ல ரங்காய் மட்டும்தானே தூங்கிக் கொண்டிருக்கிறாள்?

இரா : அமருங்கள். 'அப்பா அப்பா' எனக் கங்கை கேட்டுக் கேட்டு அயர்ந்து போனாள். உள்ளே கண்ணாடி அறையில் அவளைக் கண்ணுறங்கச் செய்வதற்குள், போதும் போதுமென்றாகி விட்டது எனக்கு! (சற்றே சினத்துடன்) ஆமாம், நான்தான் கேட்கிறேன்... இராமநாத சகாயமாகிய சேது நாட்டு ஆட்சிக்குத் தாங்கள் மன்னர் மட்டும்தானா...? மனைவி, குழந்தைகள், குடும்பம்... இவையெல்லாம்கூட உங்களுக்கு உண்டென்பதை நினைவில் கொண்டுள்ளீர் களா?

ரகு : நிறுத்து ராஜேசுவரி, நிறுத்து! பாசமும், நேசமும் என்னிடம் இல்லையென உன்னால் எப்படிப் பேச முடி கிறது? இன்று சற்றே தாமதமாக வந்ததால்...

இரா : இன்று மட்டுமா தாமதமாக வருகிறீர்கள்! கடந்த ஒரு வார காலமாகவே...

ரகு : ஆமாம், கடந்த சில நாட்களாக நான் எதனால் இங்கே தாமதமாக வந்து கொண்டிருக்கிறேன்? உனக்குத் தான் தெளிவாகத் தெரியுமே! தெரிந்திருந்தும் புரியாமல் பேசிக் கொண்டிருக்கிறாயே...? 'மதுரை மாமன்னர் திருமலை நாயக்கர் உடல் நலிவுற்றுப் படுத்த படுக்கையாய் இருக்கிறாரென்பதை அறிந்து கொண்ட கர்நாடக மன்னன் காந்திரவன், தனது பெரும் படையொன்றை அனுப்பி, நாயக்கர் படையைத் தோல்வியுறச் செய்து, நாளும் நாயக் கருக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறான். கர் நாடகப் படையை எதிர்த்துப் போரிட்டு, ஜெயக்கொடி நாட்ட சேதுபதியின் மறவர் படையே தகுதியுடையதென நாயக்கர் எவ்வளவு நம்பிக்கையோடு நமக்குத் 'திருமுகம்' அனுப்பியிருக்கிறார்? அவரது நம்பிக்கையை நாம் மெய்ப் பிக்க வேண்டாமா?

இரா : ஏற்கனவேதான் ஒரு முறை மெய்ப்பித்து விட் டீர்களே?

ரகு : பாளையக்காரன் எட்டப்பனின் கொட்டத்தை அடக்கியதைச் சொல்கிறாயா? ஆமாம். அப்போதும் திருமலை நாயக்கர் என்னை நம்பிக்கையோடு அழைத்து, அவரது ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்து குழப்பமூட்டும் பாளையக்காரர்களை அடக்குமாறு வேண்டிக் கொண்டார். எட்டப்பனோடு இணைந்து எதிர்த்து நின்ற பதினைந்து பாளையப்பட்டுக்களைச் சேது நாட்டுப் படைகள் சிதறி ஓடச் செய்தன...

இரா : அதைக் கதை கதையாக, மிதிலைப்பட்டியார்... ஆம், அழகிய சிற்றம்பலக் கவிராயர் 'தளசிங்கமாலை'யில் எழுதியுள்ளதை இப்போதுதான் படித்துக் கொண் டிருந்தேன்.

ரகு : அப்படியா? கவிராயர் அந்த வெற்றிச் செய்தி களையும் அரிய தமிழோவியமாக ஆக்கிப் படைத்துள்ளார். படிக்கப் படிக்க, சுவைக்கச் சுவைக்க இன்பம் பெருக்கும் தமிழ் ஊற்றல்லவா கவிராயரின் தளசிங்கமாலை? பரவா யில்லை. எனது தாமதமான வருகை, உனக்குத் தேமதுரத் தமிழைச் சுவைக்கும் வாய்ப்பை அளித்துள்ளது. சில வேளைகளில் தாமதம்கூடத் தனிப்பயனை அளித்து விடும்! ஆமாம், அளித்திருக்கிறது!

இரா : அப்படி என்ன தனிப்பயனை அளித்து விட்டதாம்? நான் கவிராயரின் தளசிங்கமாலையைப் படித்துக் கொண்டிருந்ததைச் சொல்கிறீர்களா?

ரகு : இல்லை! இல்லை...! நமது குல மூர்த்தியாகிய இராமபிரானின் பட்டாபிஷேகம் பதினான்கு ஆண்டுகள் தாமதமாக நடந்தது. அந்தத் தாமதம்தான் - பட்டாபிஷேகத்தில் பங்கேற்கக்கூடிய பாக்கியத்தை அனுமன், சுக்கிரீவன், வீடணன் ஆகியோர்க்கு அளித்தது. தாமதம் அளித்த தனிப்பயன் அது! இல்லையா? குறிப்பிட்டபடி இராமபிரானின் பட்டாபிஷேகத்தைத் தசரதச் சக்கரவர்த்தி நடத்தி இருப்பாரேயானால், அந்தப் பட்டாபிஷேகத்தில் அனுமனோ, சுக்கிரீவனோ, வீடணனோ பங்கேற்றிருக்க முடியுமா என்ன?

இரா : சரிதான்! தாங்கள் தாமதமாக வந்து கொண்டிருப்பதை நியாயப்படுத்த இப்படியொரு நிகழ்ச்சியை... ம். பேசத் தெரிந்தவர்கள் நீங்கள்!

ரகு : பேச மட்டுமா? (அரசியை அருகிழுத்து, அணைத்து, முத்தமிட முயல்கிறார்.)

இரா : (சற்றே மன்னரை இரு கரங்களாலும் விலக்கி) கொஞ்சம் பொறுங்கள்! மண்டபக் கதவுகள் தாழிடப்பட இல்லை. ஆமாம்... மதுரைக்குச் செல்லும் மறவர் படை போதுமான அளவு தயாராகி விட்டதா?

ரகு : ஆமாம், நாச்சியார்; ஏறத்தாழ எனது எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் படை திரண்டுள்ளது. ஒவ்வொரு நாளும் சேது நாட்டுப் பாளையப்பட்டுகளுக்குச் சென்று, படை திரட்டும் முயற்சியில் நானும், தளபதி ஆதித் தேவரும் ஈடுபட்டு வருகிறோம். இன்னும் சில நாட்களில் மறவர் படை மதுரைக்குப் புறப்பட்டுச் செல்லத் தயாராகி விடும்.

இரா : எட்டப்பன் உள்ளிட்ட பாளையக்காரர்களை அழித்தொழிக்கப் படை நடத்திச் சென்ற போது, ஒரு வாரத்தில் திரும்பி விடுவதாகச் சொல்லிச் சென்றீர்கள். ஆனால் ஒன்றரை மாதங்கள் சென்ற பிறகே வெற்றியோடு திரும்பி வந்தீர்கள். இப்போது மதுரை செல்லப் போகிறீர்கள். (வருத்தத்துடன் கண் கலங்கி) எப்போது திரும்புவீர்கள்?

ரகு : சேது நாட்டின் மன்னன் ரகுநாத சேதுபதியின் பட்டத்தரசி இராஜேசுவரி நாச்சியார் இப்படிக் கண் கலங்கலாமா? போர் முகம் செல்லும் மன்னனைப் புன்னகையோடு, வெற்றித் திலகமிட்டு, ''போய் வருக! போரில் வெற்றி பெற்றுப் புறப்பட்டு வருக'' என வாழ்த்தியல்லவா வழியனுப்ப வேண்டும்?

2

(கலைச் செறிவுடைய தந்தக் கட்டிலில் மாமன்னர் திருமலை நாயக்கர் கவலை தோய்ந்த முகத்துடன், கால்களை நீட்டியவாறே, பஞ்சணையில் சரிந்து, சாய்ந்து அமர்ந்திருக்கிறார். கட்டிலின் ஓர் ஓரத்தில் அரசமாதேவி அமர்ந்தும் அமராதவராகக் கண் கலங்க, மன்னர்பிரானின் திருமேனியில் மெல்லிய காற்று தவழ, மெல்ல மெல்ல விசிறிக் கொண்டிருக்கிறாள். காவலன் ஒருவன் பணிவோடு அங்கே வந்து நின்று, கனிவோடு 'பல்லாண்டு' கூறுகிறான்.)

காவலன் : பல்லாண்டு, பல்லாண்டு, பாராளும் எங்கள் மாமன்னர் பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு வாழியவே! மன்னர் பெருமானே! தங்களைச் சந்தித்துத் தரிசிக்க, செந்தமிழ் வேந்தர் சேதுபதி மன்னர் வந்து காத்திருக்கிறார்!

திருமலை நாயக்கர் : (கால்களை மடக்கி, நிமிர்ந்து அமர்ந்து, மிகுந்த உற்சாகத்துடன்) மன்னர் சேதுபதி வந்து விட்டாரா? மகிழ்ச்சிக்குரிய செய்தி சொன்னாய்! சரி உடனே அவரை அழைத்து வா!

(எழிலார்ந்த இருக்கை ஒன்றைக் காவலன் எடுத்து வந்து கட்டிலின் அருகே வைக்கிறான்.)

திருமலை : சேது மன்னரே! ரகுநாதரே! ஆசனத்தில் அமருங்கள். இன்னும் என்ன நின்று கொண்டிருக்கிறீர்கள்? உடல் தளர்வாலும், மனச் சோர்வாலும் படுத்த படுக்கையாய்க் கிடக்கும் என்னை எழுந்து நிற்குமாறு செய்து விடாதீர்கள். நீங்கள் நின்று கொண்டே இருக்கிறபோது, நான் மட்டும் அமர்ந்து கொண்டு பேசுவது நாகரிகமாகாது. இது அரசவை அல்ல! நீங்கள் இப்போது என் விருந்தினர்!

ரகு : (இருக்கையில் அமர்ந்து) மாமன்னரே, நன்றி! தங்களது அன்புள்ளம் என்னைத் திகைப்படையச் செய்கிறது! ஆமாம், மன்னர்பிரானே! தங்கள் உடல் மிகவும் மெலிந்து காணப்படுகிறதே! மருத்துவர்கள் என்ன சொல்கிறார்கள்? தங்களைப் பீடித்துள்ள வியாதி எதுவாயினும்.

அதனை விரைவாக நீக்கிவிடுகிற கைராசியும், மருத்துவத் திறமும் கொண்ட வைத்தியர் ஒருவரை இராமநாதபுரத்தி லிருந்து கையோடு அழைத்து வந்திருக்கிறேன்.

திருமலை : அப்படியா? அவரைப் பயன்படுத்திக் கொள்கிறேன்... இந்த உடலும் ஓர் இயந்திரந்தானே...? மனித இயந்திரம்! இயந்திரம் பழுதடைவது இயல்புதானே! ஆண்டொன்று போக ஆயுள் ஒன்று கூடிக்கொண்டே போகுமல்லவா? எத்தனை பெரிய மாமன்னராயினும் மூப்பு, முதுமை, தளர்வு, உயிர்ப் பிரிவு இவைகளைச் சந் தித்துத்தானே ஆக வேண்டும்! இல்லையா சேது நாட்டு மன்னரே?

ரகு : ஆமாம்! ஆமாம்!

திருமலை : வயது காரணமாக வந்த முதுமையால் உடல் வாட்டமுற்றுள்ளது. அவ்வளவே! யுத்த களத்திற்கு நான் செல்வதில்லை என்பதை அறிந்து கொண்ட கர்நாடக மன்னன் காந்திரவன், கடந்த ஆறு மாதங்களாகத் தொடர்ந்து தொல்லைப்படுத்தி வருகிறான். மதுரை மாநக ருக்குள் புகுந்து கொள்ளையிடும் அளவுக்கு அவனது படை களுக்குத் துணிவு ஏற்பட்டு விட்டது!

ரகு : மாமன்னரே! இந்த ரகுநாத சேதுபதியின் மூச் சுள்ளவரை தாங்கள் எதற்கும் கலங்கத் தேவை இல்லை! தங்கள் 'திருமுகம்' கண்டதுமே, சரியான தயாரிப்போடு மதுரை வரவேண்டுமென்ற திட்டத்தில், பல்லாயிரக் கணக்கில் மறவர் படையைத் திரட்டி விட்டேன். ஒரு பாதி மதுரையை அடைந்து விட்டது; மறு பாதி நாளை வந்து சேரும். கர்நாடகப் படையைப் பூண்டோடு அழித்து, ஒரு புதிய சரித்திரத்தைத் தங்கள் திருமுன் வைப்பேன்!

திருமலை : தாங்கள் நாயக்கர் பேரரசுக்கு நல்ல நண்பர்! தோள் கொடுத்துத் துயரம் போக்கும் துணிவுடைய தோழர்! இந்த நம்பிக்கையால்தான் எட்டப்பன் உள்ளிட்ட பாளையக்காரர்கள் நமது ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்தபோது உங்கள் உதவியை நாடினேன். எட்டப்பனை யும், அவனோடு இணைந்து நின்ற பாளையக்காரர்களையும் அடக்கி, அழித்து என் நம்பிக்கையை நனவாக்கினீர்கள். அதனால்தான் நல்ல நம்பிக்கையோடு இப்போதும் உங்கள் உதவியை நாடினேன்.

ரகு : வெல்லவும், அதனை மக்கள் பாராட்டிச் சொல்ல வும் உங்கள் நல்ல நம்பிக்கை எனக்கு உற்ற துணையாக அமையும். மாமன்னரே! தங்கள் மனக் கவலையை நீக்கக் கூடிய மாபெரும் வெற்றியை மதுரைப் பேராட்சிக்கு மறவர் படை அளிக்கும்.

திருமலை : ரகுநாத சேதுபதி மன்னரே! தங்களின் உணர்ச்சிமிக்க சத்திய உரை என்னை நெகிழ்ச்சியடையச் செய்து விட்டது.

3

(மாமன்னர் திருமலை நாயக்கரின் அரசவை. அமைச் சர்கள், தளபதிகள், அரசியல் அலுவல்களில் தலைமை வகிப்பவர்கள் அவரவர் இருக்கைகளில் அமர்ந்துள்ளனர். அரியணைக்கு அருகே அமைந்துள்ள ஆசனத்தில் சேது மன்னர் ரகுநாத சேதுபதி அமர்ந்துள்ளார். மாமன்னர் அர சவைக்கு வருகை தருவதைக் கட்டியக்காரன் கம்பீரமாகக் கூறுகிறான். எல்லோரும் எழுந்து நிற்கின்றனர். திருமலை நாயக்கர், காவலர் இருவரின் தோள்களில் கரங்களைப் பதித்து, மெல்ல நடந்து வந்து, மிகுந்த சிரமத்தோடு அரி யணையில் அமர்கிறார்.)

பிரதம அமைச்சர் : பல்லாண்டு பல்லாண்டு பாராளும் எங்கள் மாமன்னர் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழி யவே!

(எல்லோரும் இருக்கையில் அமர்கின்றனர்.)

திருமலை : நல்லன்பு கொண்ட செந்தமிழ் நாட்டுச் சேது மன்னரே! அமைச்சர்களே! தளபதிகளே! அரசியல் அலுவலர்களே! எனது உடல் நலிந்து போன நிலையில், பல நாட்களாகக் கூட்டப் பெறாத இந்த அரசவை - நமது நண்பர் சேது மன்னர் ரகுநாத சேதுபதியின் வருகையைக் காரணமாகக் கொண்டும், அவருக்கு வழங்க இருக்கும் புதிய பொறுப்பை முறையாகச் செய்ய வேண்டுமெனும் கருத்தைக் கொண்டும் அவசியமாகவும், அவசரமாகவும் இன்று கூட்டப் பெற்றுள்ளது. சமீப காலமாகப் போர்க்களத்திற்கு நான் புறப்பட்டுப் போவதில்லை. உடல் நலிவு காரண மாகப் படுக்கையிலேயே எனது நேரங்களின் பெரும் பகுதி யைக் கழித்து வருகிறேன். இந்த நிலைகளை அறிந்து கொண்ட கர்நாடக மன்னன் காந்திரவன், நம்மைக் கடந்த ஆறு மாத காலமாக எதிர்த்துப் போர் தொடுத்து வரு கிறான். உண்மையாகச் சொல்வதெனில் நாம் ஒவ்வொரு நாளும் தோற்றுக் கொண்டே இருக்கிறோம். நமது வீர மிக்கத் தளபதிகளையும், தீரமிக்கப் படை வீரர்களையும் இழந்து கொண்டே இருக்கிறோம். இந்நிலையில் நாயக்கர் பேரரசின் நல்ல நண்பரும், நம்மை எதிர்த்துக் குழப்பம் விளைவித்த எட்டப்பன் உட்பட்ட பல்வேறு பாளையக் காரர்களை ஏற்கனவே நமது வேண்டுகோளுக்குச் செவி மடுத்துப் பூண்டோடு அழித்துப் புகழ் பெற்ற சேது நாட்டு மன்னருமாகிய ரகுநாத சேதுபதி நமது அழைப்பிற்கு இசைந்து, பெரும் படையுடன் வருகை தந்து, இங்கே வந்து அமர்ந்திருக்கிறார். சேது நாட்டு மன்னரை எனது பிரதிநிதி யாகவே யுத்த களத்திற்கு அனுப்புகிறேன். மதுரைப் பேர ரசின் ராஜப் பிரதிநிதியாகவும், பிரதம தளபதியாகவும் பொறுப்பேற்கும்படி அவரை நான் வேண்டிக்கொள்கிறேன். பொறுப்பை அளிக்கும் குறிப்பை அறிவிக்க, எனது உடை வாள் ஒன்றை இந்தப் பேரரசு அவருக்கு வழங்கி மகிழ்கிறது.

(காவலன் ஒருவன் தாங்கி நிற்கும் வட்ட வடிவத் தட்டில், பட்டுத் துணியின் மேல் வைக்கப்பட்டுள்ள உடை வாளைப் பாங்குடன் எடுத்து ரகுநாத சேதுபதியிடம் அளிக் கிறார் பிரதம அமைச்சர்.)

பிர. அமை : (உடைவாளை வழங்கி) மாமன்னர் திரு மலை நாயக்க பூபதி!

அவையோர் : வாழ்க! வாழ்க!

பிர. அமை : சேது நாட்டு மன்னர் ரகுநாத சேதுபதி!

அவையோர் : வாழ்க! வாழ்க!

ரகு : (உடைவாளை உறையிலிருந்து உருவி, தலைக்கு மேல் உயரப் பிடித்து) மரியாதைக்குரிய மாமன்னர் திரு மலை நாயக்க பூபதி அவர்களே! மதிப்பிற்குரிய அரசவை நாயகர்களே! இந்த மாபெரும் ராஜ சபையில் எனக்களித்த மகத்தான பொறுப்பை, மிகுந்த பெருமிதத்துடன் ஏற்றுக் கொள்கிறேன். இட்ட பணியை எத்தகைய இக்கட்டு எதிர் வரினும் கட்டாயமாக நிறைவேற்றுவேன். இப்போதே மறவர் பெரும் படையுடன் போர்க்களம் செல்வேன். உங்கள் எல்லோருடைய நம்பிக்கையையும் நனவாக்குவேன். இது உறுதி! இது சத்தியம்! (வாளை உறையுள் செலுத்தி, இடையில் அணிந்து கொண்டு இருக்கையில் அமர்கிறார் சேதுபதி.)

(அரசவைக்குள் நுழைந்த காவலன் ஒருவன் மாமன்னருக் குப் பல்லாண்டு கூறுகிறான்.)

திருமலை : காவல! என்ன செய்தி?

காவலன் : மன்னர்பிரானே! சேது நாட்டு அமைச்சர் ஒருவர் வந்திருக்கிறார். அரசவைக்குள் உடனே வரவேண்டு மெனத் துடித்துக் கொண்டிருக்கிறார்!

ரகு : (திகைப்புடன் எழுந்து) என்ன? சேது நாட்டு அமைச்சரா?

திருமலை : பிரதம தளபதி ரகுநாத சேதுபதியாரே! நீங்கள் அமருங்கள். காவல, வந்திருக்கும் அமைச்சரை உடனே இங்கு அனுப்பி வை.

(அரசவையுள் அமர்ந்திருக்கும அனைவருமே வியப் போடும், திகைப்போடும் வாயிலை நோக்கியவாறே உள் ளனர்.)

சேது அமைச்சர் : (வந்து கொண்டே) மதுரை சாம் ராஜ்யப் பூபதியே! வணக்கம்; வாழிய! சேதுபதிப் பிரபோ! செவிக்குள் விஷம் இறக்க இங்கே செந்தேளாய் நுழை கின்றேன்!

ரகு : அமைச்சரே! என்ன சொல்கிறீர்கள்?

சேது அமை : வெல்வதற்குப் படை திரட்டி வந்த உங் களிடம் பேரிழப்பைச் சொல்வதற்கு இந்தப் பாவி வந்திருக் கிறேன்!

ரகு : துயரச் செய்தியா? கபட நாடகமா: என்ன சொல் கிறீர்கள்?

சேது அமை : ஆம் பிரபோ! பெரும் படையுடன் மதுரை நோக்கி வந்த தங்களை, கர்நாடகப் படை திருப்பூ வனத்தில் எதிர்த்துப் போரிட்டதாகவும், அந்தப் போரில்... அந்தப் போரில் தாங்கள் 'வீர சொர்க்கம்' அடைந்து விட்ட தாகவும் வேண்டுமென்றே அவர்கள் பரப்பிய செய்தி, நாடு முழுவதும் பரவி விட்டது பிரபோ! இந்தச் செய்தியைச் செவிப்படுத்திய தங்கள் தேவியார் அரசி இராஜேசுவரி நாச்சியார்... தீக்குளித்து விட்டார்கள்...!

திருமலை : (அதிர்ச்சியுடன்) என்ன? அரசி தீக்குளித்து விட்டாரா? இதென்ன கொடுமை! எத்தகைய கொடுமை! எவராலும் தாங்கிக் கொள்ள இயலாத கொடுமை! மது சூதனா! இதென்ன சோதனை! மாணிக்கவல்லி, மீனாட்சி தாயே! இகென்ன கொடுமை!

ரகு சேது : (உறையுள் வாளைப் போட்டவாறே) குழந்தை அழுதாலும், என் குலமே அழிந்தாலும்... மாமன்னரே! வாக்குத் தவறேன்! வாய்மை குன்றேன்! இதோ தங்கள் பிரதம தளபதியாகப் போர்க்களம் புறப் பட்டு விட்டேன். சேது நாட்டு அமைச்சரே! போர்க்களத்தி லிருந்து வெற்றியுடன் நான் திரும்புகிறபோது, தளபதி ஆதித் தேவரும், தாங்களும் சேது நாட்டைப் பாதுகாத்துத் தருவதோடு, என் குழந்தைகள் இருவரையும் பேணிக் காத் துத் தருவீர்களென்ற பெரு நம்பிக்கையோடு போர்முகம் செல்கிறேன்! இதோ... தெய்வமாகிவிட்ட என் தேவி, என் நெஞ்சுள் வீர சக்தியாக வீற்றிருக்கிறாள்! வீரவேல்! வெற்றி வேல்!

(மாமன்னர் திருமலை நாயக்கரை வணங்கி மிடுக் கோடும், துடிப்போடும் அரசவையிலிருந்து வெளியேறு கிறார் ரகுநாத சேதுபதி. அவரைப் பின்தொடர்ந்து ஓடு கிறார் சேது நாட்டு அமைச்சர்.)

4

(மாமன்னர் திருமலை நாயக்கரின் அரசவையில் அமர்ந் திருக்கும் அனைவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர். அரியணையில் வீற்றிருக்கும் திருமலை மாமன்னர் மிகுத்த உற்சாகத்துடன் இருக்கிறார். அரியணையின் வலப்புறத்தில் அமைக்கப் பெற்றுள்ள மேடையின்மீது பட்டாடையால் மூடப்பெற்ற சிலை ஒன்று நடுநாயகமாகத் திகழ்கிறது. சிலையைச் சுற்றிலும் பல்வேறு பரிசுப் பொருள்கள் மேடை யில் குவிக்கப் பெற்றுள்ளன.)

திருமலை : பிரதம அமைச்சரே! எல்லா ஏற்பாடுகளை யும் தக்க முறையில் செய்திருப்பீர்களென நம்புகிறேன்.

பிர.அமை : (எழுந்து) ஆமாம் மாமன்னரே! நேற்று நாம் முடிவு செய்தபடி, இன்றைய விடியலிலேயே எல்லா வற்றையும் சரி செய்து விட்டேன்; சரி பார்த்து விட்டேன்! பரவையூரில் முகாமிட்டிருக்கும் சேது மன்னர் மதுரையை நோக்கி ஒரு நாழிகைக்கு முன் புறப்பட்டு விட்டாராம். இன்னும் சற்று நேரத்தில் அவரை நாம் இங்கு எதிர்பார்க்க

தீபாவளி வாழ்த்துக்கள்



நாதேள்ள சம்பத்து செட்டி டிரஸ்ட்
123, என்.எஸ்.சி. போஸ் ரோடு,
சென்னை 600 079

ல்லாம்... ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து வரவழைக்கப் பெற்ற பட்டர் பெருமக்களும், மீனாட்சி சுந்தரேசுவரர் திருக் கோயிலிலிருந்து வந்துள்ள சிவாசாரியர்களும் பூரண கும் பங்களை ஏந்தியபடி, நமது அரண்மனையின் தோரண வாயிலில் காத்திருக்கின்றனர். மங்கல வாத்தியங்கள் இசைக்க, முரசுகள் முழுங்க, கொம்புகள் ஒலிக்க வாயிலில் வரவேற்கப்பெறும் சேது மன்னர், அரசவையை அடையும் வரை, வழியெல்லாம் மலர் தூவி வாழ்த்துக் கூற, பூக்கூடை களைத் தாங்கிய மங்கையர் வரிசை, வரிசையாக இருபுறமும் நின்று கொண்டுள்ளனர்...

திருமலை : அப்படியா? மகிழ்ச்சி! மகிழ்ச்சி! கர்நாட்கப் படைகளை அழித்து ஒழித்து, காந்திரவனின் கயமைப் பெரு மிதத்தை அடக்கி ஒடுக்கி, மதுரை மண்ணுக்கும், நாயக்க ஆட்சிக்கும் நேரவிருந்த மாபெரும் பழியைப் போக்கி, இரண்டே மாதங்களில் வெற்றிச் செல்வியைக் கைப்பிடித்த வீர புருஷராய் அரசவைக்கு வருகை தரும் சேது மன்ன ருக்கு என்றென்றும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்...

(மங்கல வாத்தியங்களின் ஒலியும், முரசங்களின் முழக் கமும், மக்களின் வாழ்த்துக் குரலும் தோரண வாயிலுக்குச் சேது மன்னர் வந்து விட்டதை அறிவுறுத்துகின்றன.)

பிர.அமை : மன்னர்பிரானே! வந்து விட்டார் செந் தமிழ் நாட்டுச் சேதுபதி! (அரசவையின் வாயிலை நோக்கி விரைவாக எழுந்து செல்கிறார்.)

(மங்கையர் வாழ்த்தொலியோடு மலர் சொரிய, அர சவைக்குள் வருகை தரும் சேதுபதியை, மாமன்னர் திரு மலை நாயக்கர் அரியணையிலிருந்து எழுந்து, எதிர் சென்று கட்டித் தழுவுகிறார். சேதுபதியின் இரு கரங்களையும் பற்றிக் கண்களில் ஒற்றிக் களிப்படைகிறார். ஆசனத்தில் சேதுபதியை அமரச் செய்தபின், அரியணைக்குச் சென்று அமர்கிறார் நாயக்கர் பூபதி.)

திருமலை : வெற்றிச் செல்வரே! சேது நாட்டு வேந் தரே! ரகுநாத சேதுபதித் தேவரே! நமது பேரரசைப் பீடித் திருந்த பெரும் பழியைப் போக்கிய நல்ல நண்பரே! தங் களுக்கு ஏற்பட்ட பேரிழப்பையும் கருதாது, 'வாக்குத் தவ றேன்! வாய்மை குன்றேன்!' எனச் சூளுரைத்து, போர்முகம் சென்று, புகழார்ந்த வெற்றியை ஈட்டி வந்துள்ளீர்கள்...

ரகு : (எழுந்து) அதிருக்கட்டும் மாமன்னரே! தங்கள் உடல் நலம் எப்படி உள்ளது?

திருமலை : அன்று உங்களை வாழ்த்தி வழியனுப்பிய போது ஆள் துணையுடன் அரியணை ஏறிய திருமலை மன்னன், இன்று உங்களைக் கண்டதும், ஓடோடி வந்து, எதிர்கொண்ட போதே... என் உடல் நலம் பற்றி ஒருவாறு நீங்கள் உணர்ந்திருக்கலாமே! நாளொரு வெற்றியும், பொழுதொரு மகிழ்வுச் செய்தியும், தாங்கள் நின்ற போர்க் களத்திலிருந்து வந்து கொண்டே இருந்தன. அவை எனக்கு ஜீவிய மருந்துகளாயின! ஏறத்தாழ பூரண நலம் பெற்று - உங்களைப் போல இப்போது நானொரு இளைஞனாகவே ஆகி விட்டேன்!

ரகு : மகிழ்ச்சி! மாமன்னரே, மெத்த மகிழ்ச்சி!

திருமலை : என் நலம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பது போல, உங்கள் பலம் எனக்கு மகிழ்ச்சியை ஊட்டும். ஊட்டும் மகிழ்ச்சிக்கு உரிய ஆணையை இப் போது பிரதம அமைச்சர் அறிவிப்பார்.

பிர.அமை : சேது நாட்டு மன்னர் ரகுநாத சேதுபதியின் உள்ளார்ந்த அன்பையும், காலத்தால் செய்த உதவியையும் மதுரை நாயக்கப் பேரரசின் இப்பேரவை பாராட்டிப் போற்றுவதுடன் கௌரவிக்கவும் முன்வந்துள்ளது. கௌர விக்கும் வகையில் இன்று முதல் சேது நாட்டை ரகுநாத சேதுபதி மன்னர் தனியரசாக★ ஆட்சி செய்து கொள்ள இப்பேரரசு அனுமதிக்கிறது. இனி சேது நாடு இந்தப் பேரர சுக்குக் கப்பம் கட்டி ஒப்பம் செய்யத் தேவையில்லை.

ரகு : சரித்திர வெற்றிக்குச் சரித்திரச் செய்தியைப் பரிசாக வழங்கிச் சாதனை புரியும் சரித்திர நாயகரே! மாமன்னரே! சேது நாடு இன்று முதல் தனியரசுச் சிறப்புப் பெறினும், அதனை ரகுநாத சேதுபதி மட்டும் ஆளப் போவ தில்லை! சேதுபதியும், திருமலை மாமன்னரும் இணைந்தே ஆளப் போகின்றனர். 'அதெப்படி?' என்கிறீர்களா?

திருமலை : ஆமாம்!

ரகு : என் பெயருடன் 'திருமலை' என்னும் தங்கள் திரு நாமத்தையும் இணைத்துக் கொள்ளப் போகிறேன். இணைத் துக் கொள்ளத் தங்கள் அன்பான ஒப்புதலை உவந்தளிக்கப் பணிவோடு வேண்டுகிறேன்.

திருமலை : ஓகோ, அப்படியா? சேது நாட்டை இனித் தனியரசாக ஆளப் போகிறவர் ரகுநாத சேதுபதி என்பவர் அல்ல... ரகுநாத திருமலைச் சேதுபதி என்பவர்! அப்படித் தானே?

ரகு : ஆமாம், ஆமாம்! மாமன்னரே!

திருமலை : ரகுநாத திருமலைச் சேதுபதி மன்னரே! தங்கள் பேரன்பு என்னைப் பெரிதும் நெகிழ்ச்சி அடையச் செய்கிறது! உருக்கமும், நெருக்கமும் கொண்ட உங்கள் உறவினை எனக்களித்த மதுரை மீனாட்சியின் திருவருளை நினைந்து போற்றுகிறேன்; நெகிழ்ந்து வணங்குகிறேன்! அன்று போர்க்களம் செல்லவிருந்த நோக்கில் உங்கள் அமைச்சர் கொண்டு வந்த செய்தி எவரையும் கதிகலங்கச் செய்துவிடும்! ஆனால் நீங்களோ, வாழ்க்கைத் துணையின் மறைவைவிட, வாக்கைப் பெரிதாக எண்ணிச் செயல்பட் டீர்கள். 'வாய்மை குன்றேன்' எனச் சூளுரைத்தீர்கள்! புறப் பட்டு வருகிறபோது புன்னகையுடன் வழியனுப்பி வைத்த அந்தப் புனிதவதியின் புண்ணிய ஆத்மாவை, வெற்றியைக் கூட்டுவிக்கும் வீர சக்தியாக வழிபட்டுச் சென்றீர்கள்! ஆம், கணவன் மறைந்த செய்தியைக் கேட்ட கணமே தீக்குளித்த அந்த உத்தமி இன்று தெய்வமாகி விட்டாள்! அந்தத் தெய் வத்தின் திருவருளே நமக்கு வெற்றியை வெகு விரைவில் ஈட்டித் தந்துள்ளதாக நான் நம்புகிறேன்...

ரகு : ஆம், மாமன்னரே! நானும் அப்படித்தான் உண்மையாகவும், சத்தியமாகவும் நம்புகிறேன்!

திருமலை : நமது நம்பிக்கையை நனவாக்கித் தந்த அந்தத் தெய்வத் திருவுருவை... இதோ... இங்கே ஒரு பொற் சிலையாக்கி★ வைத்துள்ளேன். வெற்றியைத் தேடித் தந்த வீர சக்தியாக விளங்கும் இந்தப் பொற்சிலையை எனது அன்பின் நினைவாகவும், நினைவின் அன்பாகவும் தாங்கள் ஏற்றுச் செல்ல வேண்டுகிறேன். இந்தச் சிலை - காட்சிப் பொருளுமல்ல! கவின் பொருளுமல்ல! கால காலங்களுக் கும் மதித்துத் துதித்து வழிபடத்தக்க திருவுரு! (மேடையின் அருகே சென்று) இதோ... சிலையை மூடியிருக்கும் திரைச் சீலையை நீக்குகிறேன்...! வாருங்கள் இங்கே சேது மன்னரே, வாருங்கள்! பாருங்கள் இந்தத் தெய்வச் சிலையை, வீர சக்தியை, ராஜ ராஜேசுவரியை...!

(மேடையின் அருகே சென்று, சிலையைப் பார்த்த சேதுபதி மன்னர் கண்ணீர் உகுத்துக் கரம் கூப்பி வணங்கு கிறார்.)

○

★ திருமலை நாயக்கர் வழங்கிய 'தனியரசு'த் தகுதியைச் சேது நாடு முதல் முதலாகப் பெற்றது. ரகுநாத சேதுபதியைத் தொடர்ந்து பன்னிரண்டு சேதுபதிகள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகத் தனியரசாக ஆண்டு வந்ததை வரலாறு கூறுகிறது.

★ திருமலை நாயக்கர் ரகுநாத சேதுபதிக்கு வழங்கிய பொற்சிலை ராஜ ராஜேஸ்வரி எனும் திருப் பெயருடன் சேதுபதிகளின் குல தெய்வமாக இன்றும் வணங்கப்பெற்று வருகிறது. இராமநாதபுரம் கோட்டை வாயிலுக்குள் நுழைந்ததுமே, கண்களில் தெரிவது கொற்றவை ராஜ ராஜேசுவரி திருக்கோயிலே!

With best compliments from :

HAUERS LINES PRIVATE LIMITED

Owners and Charterers of Ocean going vessels serving the Andaman & Nicobar Islands

* mv. ISLAND GLORY
* mv. VISALAKSHI
* mv. ISLAND PRINCESS
* mv. ISLAND QUEEN
* mv. ISLAND PRIDE
* mv. ISLAND GRACE

SVN House
90, C.P. Ramaswamy Aiyar Road
Alwarpet, Madras 600 018

Grams : POTENTIAL - Phones : 72081/82 - Telex : 041-7385
Other Offices : Calcutta/Bombay/Port Blair (Andamans)

DIANA

ROLLING SHUTTERS & GRILLS
for
Safety and Security

* Over 30 years of unparalleled engineering excellence
* First in India to obtain ISI certification
* Push – Pull, gear operated and electrically operated shutters for both conventional and specialised requirements
* Dependable after-sales service
* No shutter too small or too big

Elegant flat lath section shutters now available

For free illustrated brochure/further details, please contact :

DIANA SHUTTERS PRIVATE LIMITED
SVN House
90, C.P. Ramaswamy Aiyar Road, Alwarpet, Madras – 600 018
Tel : 74987/88 Telex : 041-7385 Grams : DIANADOORS

Edited and Published by R. Narayanaswamy for and on behalf of the Kalaimagal Office
No.1 Sanskrit College Street (Royapettah High Road 1st lane) Madras - 600 004 and printed
at Rajam Offset Printers, 1, Portugese Church Street 9th lane, Madras 600 001.
Managing Editor : S.V. Ramani

21851

விண்ணிலிருந்து வீழ்ந்த முழு நிலவோ
மண்ணிலிருந்து எழுந்த பூந்தளிரோ
MEDIMIX
AYURVEDIC TOILET SOAP
சரும எழிலுக்கு உயர்ந்த
மூலிகை பாதுகாப்பு
மெடிமிக்ஸ்
ஆயுர்வேத டாய்லட் சோப்
• முகப்பரு
• வேர்க்குரு
• கரும்புள்ளி
• படை
• தேமல்
• பொடுகு
• சொறி
• சிரங்கு